சுவிஷேச வேதாகமக் கல்லூரி மேற்கு ஆஸ்திரேலியா

EVANGELICAL BIBLE COLLEGE OF WESTERN AUSTRALIA

"கடைசி காலத்தில் மனிதரின் சரீரம் எழுப்பப்பட்டு, அவர்களது கவனங்கள் தீர்க்கதரிசனங்களுக்கு நேராக திருப்பப்படும், சந்தடிகளின் நடுவே மற்றும் எதிர்ப்புகள் மத்தியில் எழுத்தின்படியான வியாக்கியானம் வலியுறுத்தப்படும்." -- சர் ஐசக் நியூட்டன்.

“About the time of the end a body of men will be raised up who will turn their attentions to the Prophecies and insist upon their literal interpretation in the midst of much clamour and opposition” – Sir Isaac Newton

COMMENTARY
விளக்கவுரை

DANIEL.
தானியேல்

by

ஆசிரியர்

DR. PETER MOSES
டாக்டர். பீட்டர் மோசஸ்

(டாக்டர் ஜான் சி மெக் இவான் அவர்களால் திருப்பப்பட்டது)

(Revised Dr John C McEwan)

[BOOK 57-A]

[புத்தக எண் 57-A]

Revised Pentecost Sunday 2015

2015ல் பெந்தெகொஸ்தே ஞாயிரன்று திருப்பட்டது

And again 11 January 2016

மறுபடியும் 2016 ஜனுவரி 11ல் திருப்பப்பட்டது.

இயேசுக்கிறிஸ்து யார்?

பேராசிரியர் சைமன் கிரீன்லீஃப் எல்லா காலங்களுக்கும் தலைசிறந்த வழக்கறிஞராய் விளங்கிவருகிறார். அவரது "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” அநேக ஆண்டு காலங்களாய் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையான ஒழுங்குமுறை பரிசீலனைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள ஒரு பல்கலைக் கலகத்தில் அவர் சட்டம் குறித்த பாடங்களைப் போதித்துக் கொண்டு இருந்த சமயத்தில், அங்குள்ள மாணவர்களில் ஒருவன் சரித்திரப் பூர்வமான ஒருவரை "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” மூலம் விவரிக்க முடியுமா என வினவினான். கிரீன்லீஃப் அம்மாணவனை நோக்கி விவரிக்க முடியும் என ஒத்துக்கொண்டவராய், அச்சரித்திரப் பூர்வமான நபர் யார் என அவனை நோக்கி வினவினார். அதற்கு அம்மாணவன் மறுமொழியாக, பரிசீலனைக்குரிய அந்நபர் இயேசுக்கிறிஸ்து என்றான். பேராசிரியர் கிரீன்லீஃப் ஒத்துக்கொண்டவராய் பரிசீலனைக்காக இயேசுக்கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள முன்வந்தார், அவர் தனது பரிசீலனையை முடித்துக்கொண்ட போது, அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் பேராசிரியர் கிரீன்லீஃப் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள எல்லா நீதி சார்ந்த அலுவலர் அனைவருக்கும் வெளிப்படையான ஒரு கடிதத்தை எழுதி அதில் தான் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவை கண்டுகொண்ட விதத்தை விவரித்து இருந்தார். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த விஷயங்கள் சரித்திரப்பூர்வமாய் மிகத் துள்ளியமானவை என முழு நிச்சயத்துடன் ஆதாரங்களுடன் எழுதி அனுப்பினார். மட்டுமல்லாது இயேசுக்கிறிஸ்து மனிதரைவிட மேம்பட்டவர் என்றும், அவர் கடவுளோ அல்லது இல்லையோ என்பதை பரிசீலித்த போது, அவர் கடவுளைத் தவிர வேறு எவருமல்லர், என்பதை மிக உறுதியாய் ஆராய்ந்து கண்டுகொண்டேன். அவரைக் கடவுளாய் கண்டுகொண்ட மாத்திரத்தில் அவரை எனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டேன்

என எழுதினார். ஆகவே நீதித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு நபரும் "ஆதாரங்களின் பிரமாணங்கள்" “Laws of Evidence” ஐ பயன்படுத்தும் பொழுது, அவரைக்குறித்து தவறாய் புரிந்துகொள்வதைத் தவிர்த்து, ஒருவேளை அவரை உங்களது சொந்த இரட்சகராய், ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் மேற்கூறிய பிரமாணத்தின் மூலம், அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்றும், சரித்திரப் பூர்வமாய் அவரைக் குறித்த விஷயங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதையும், கண்டுகொள்ளுங்கள் என எழுதி முடித்தார்.

<u>நான் எவ்வாறு இரட்சிப்படைய முடியும்?</u>

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருக்கும் இரட்சிப்பு என்பது கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

இரட்சிப்பு என்பது, மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், தேவனது அண்டசராசரத்தில், அனைவராலும் எடுத்துக்கொள்ளப் படக்கூடியதாயும் இருக்கிறது. பாவிகளின் இரட்சிப்பு என்பது, தேவன் பாவத்தை கண்டும் காணாமல், கடந்து செல்லும் காரியமாகாது. தேவன் பாவிகளை முற்றிலும், தமது நீதியின் அடிப்படையில், தனது தெய்வீக பரிசுத்த குணாதிசயத்தின் அடிப்படையில், இரட்சிக்கிறவராய் இருக்கிறார். இது ’கிருபை’ என அழைக்கப்படுகிறது. இது தேவனை மட்டும் சார்ந்ததாய் இருக்கிறது, இதற்கென மனிதன் எவ்வித கிரியையும் [புண்ணியக்கிரியைகள், தவக்கிரியைகள் போன்ற எதையும்] நடப்பிக்க அவசியமில்லை. அளவிட முடியாத, பிரமாண்டமான, இவ்வண்ட சராசரத்தின் சிருஷ்டிப்பின் கிரியைவிட, தேவன் பாவிகளை இரட்சிக்கும் திட்டமானது, மிகவும் குறைவாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. என்பதை நாம் உணரவேண்டிய வர்களாய் இருக்கிறோம். .

எப்படியிருப்பினும், தேவனுடைய இரட்சிப்பை ஒரு பாவி ஏற்றுக்கொள்வது என்பது வாழ்வில் மிக எளிதான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஐசுவரியவானாய் இருத்தல் அவசியமற்றது,

ஞானமுள்ளவராகவோ, மற்றும் படிப்பறிவுள்ளவராகவோ இருத்தல் அவசியமற்றது. வயதோ அல்லது தோலின் நிறமோ இதற்கு எவ்விதமான தடையையும் கொண்டுவருவது இல்லை. தேவனுடைய மீட்பில் இருக்கும், எண்ணிமுடியாத நன்மைகளானது, மிக எளிதாய் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் அமைந்து இருக்கிறது, இப்பரந்த அண்டசராசரத்தில், ஒவ்வொருவரும் இதை அடைந்து கொள்வதற்கு விதிவிலக்கின்றி காணப்படுகின்றனர்.

நான் ஒரு கிறிஸ்துவை உடையவனாவது எவ்வாறு?

ஒரு எளிய படி எடுத்து வைப்பதை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம். முதலாவது, நான் ஒரு பாவியாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 3:23; 6:23; எசேக்கியேல் 18:4; யோவான் 5:24).

இரண்டாவதாக, பூரணமாய் இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுடன் உறவுகொள்ளும் விருப்பத்தை உணருதல் வேண்டும், மற்றும் அவ்வாறு உறவுகொள்ள நான் பூரணமற்றவனாய் இருக்கிறேன் என்பதை உணருதல் வேண்டும், நான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஒருவரே இரட்சகர் என்று கண்டுகொள்ள அவசியமாய் இருக்கிறது. (1 கொரி. 15:3; 1 பேதுரு 2:24; ஏசாயா 53:6; யோவான். 3:16).

மூன்றாவதாக, எனது சொந்த சுயசித்தத்தை பயன்படுத்தி, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எனது இரட்சகராய் ஏற்றுக்கொண்டு, அவரை தனிப்பட்ட விதத்தில் அவர் எனக்காய் மரித்தார் என்று நான் விசுவாசித்து, எனது தனிப்பட்ட வாழ்வின் மூலமாய், அவரை, என் வாழ்விற்கு அவசியமான, தனிப்பட்ட ஒரு நபராக ஏற்றுக்கொள்ளுதல், அவசியமான ஒன்றாய் இருக்கிறது. (யோவான் 1:12; 3:36; அப். 16:31; 4:12).

இரட்சிப்பின் விளைவுகள்:

இதன் விளைவுகள் என்பது நம்புவதற்கறிய அற்புதமானதாய் இருக்கிறது:

எனது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, அகற்றப்பட்டன. (யோவான் 1:29),
நான் தற்போது, நித்திய ஜீவனைப் பெற்று இருக்கிறேன் (1 யோவான் 5:11,12),
நான் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாய் மாறி இருக்கிறேன் (2 கொரி. 5:17),
பரிசுத்த ஆவியானவர், எனது சரீரத்தை தமது வாசஸ்தலமாய் அமைத்துக் கொண்டுள்ளார் (1 கொரி. 6:19),
நான் ஒருபோதும் அழிந்து போவதில்லை (யோவான் 10:28-30).

இவ்வுண்மைகள் வாழ்வின் மிகப்பெரிய பரிமாற்றங்களாய் இருக்கின்றன. இதுவே எல்லா மக்களுக்குரிய இலக்காய் இருக்கிறது; இதுவே நமது வாழ்வின் மேலான நோக்கமாய் இருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றச் செய்யும் இவ்வெளிய போதனைகளால் உற்சாகப்படுத்தி, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் மறுபடி பிறந்து, நித்திய வாழ்வையடைய உற்சாகப்படுத்துங்கள். (மத். 11:28; யோவான் 1:12; அப். 4:12; 16:31).

© **Evangelical Bible College of Western Australia 2004** - PO Box 163 Armadale Western Australia 6992

Many other Christian resources are available freely from our internet web site: www.ebcwa.org.au and http://ebcwa.free.org.nz for weekly messages.

For further information contact Dr Peter Moses at PO Box 163 Armadale WA 6992 or email Brian Huggett brianhuggett@bigpond.com.au

We encourage you to freely copy and distribute these materials to your Pastor and friends. You only, need written permission from EBCWA if you intend using the materials in publications for resale. We encourage wide distribution freely!

CONTENTS பொருளடக்கம்

ITEM அம்சம்	PAGE பக்கம்
INTRODUCTION முன்னுரை	3
CHAPTER 1 அதிகாரம் 1.	8
CHAPTER 2 அதுகாரம் 2	19
CHAPTER 3 அதிகாரம் 3	34
CHAPTER 4 அதிகாரம் 4	46
CHAPTER 5 அதிகாரம் 5	53
CHAPTER 6 அதிகாரம் 6	62
CHAPTER 7 அதிகாரம் 7	71
CHAPTER 8 அதிகாரம் 8	83
CHAPTER 9 அதிகாரம் 9	90
CHAPTER 10 அதிகாரம் 10	101
CHAPTER 11 அதிகாரம் 11	108
CHAPTER 12 அதிகாரம் 12	119

எசேக்கியேல் அதிகாரங்கள் 38-39. **Ezekiel Chapters 38-39**	**123**

INTRODUCTION முன்னுரை:

தானியேல் வேதாகமத்தில் அதிகமாய் தாக்குதலுக்கு உள்ள புத்தகங்களில் ஒன்றாய் விளங்குகிறது. மாற்றங்களை விரும்பாதோர் [conservatives] தானியேலை ஒரு தீர்க்கதரிசியாகக் காண்கின்றனர். தாராளவாதிகள் [liberals] இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளை நம்பாதவர்களானதால், தீர்க்கதரிசியை ஒரு சரித்திரக்காரனாக காண்கின்றனர். இதினிமித்தம் அவர்கள் எழுதும் விளக்கவுரைகள் சரித்திர அடிப்படையில் அமைந்துள்ளன. தாராளவாதிகள் தானியேல் புத்தக நிகழ்வுகள் மிகவும் துள்ளியமாக முன்கூட்டியே எழுதப்பட்ட படியால், அவர்கள் இப்படிப்பட்ட ஸ்தானத்தை எடுக்க நேர்ந்தது. தொடர்ந்து அவர்கள் கூறுவது என்னவென்றால், தானியேல் சரித்திரத்தை, தீர்க்கதரிசன வடிவில் எழுதி, தனது செயல்பாடுகளை வியாபாரம் செய்ய முனைந்தார் எனக்கூறுகிறார்கள்.

இதினிமித்தம் இந்த புத்தகத்தை குறித்து நாம் என்ன எண்ணுகிறோம் எனபது நாம் தெரிந்துகொள்ளும் ஒன்றாய் இருக்கிறது. நாம் இதை எழுத்தின்படியான அணுகுமுறையில் எடுத்துக்கொள்கிறோமா அல்லது உருவக அணுகுமுறையில் வியாக்கியானம் செய்கிறோமா என்பது குறிப்பிடத்தக்கது. நீங்கள் எழுத்தின்படியே எடுத்துக்கொள்கிறவர்களானால், மகா உபத்திரவம், ஆயிரவருட ஆளுகை மற்றும் அந்திக்கிறிஸ்து போன்றவற்றை முக முகமாய் சந்திக்க நேரிடுகிறதாய் இருக்கிறது. இவற்றையெல்லாம் மறுமலர்ச்சி இறை இயல் வல்லுனர்கள் எழுத்தின்படி நிறைவேற அனுமதியானது மறுக்கப்படுகிறதாய் இருக்கிறது. இதினிமித்தம் நாம் தானியேல் புத்தக விளக்கவுரை எழுத்தாளர் குறித்து நிச்சயமுடையவர்களாக இருக்கவேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. அவர்கள் கண்ணோட்டம் சீர்தூக்கிப்பார்க்க வேண்டிய ஒன்றாய் இருக்கிறது. நாம் வேதவசனங்கள் நம்முடன் பேச அனுமதி அளித்தல் வேண்டும், அவசியமேற்பட்டால், இறையியல் அமைப்பை மாற்றி

அமைத்துக்கொள்ள விழைதல் வேண்டும், நாம் முன்னதாகவே பெற்றிருக்கும் கருத்துக்களைக் கொண்டு வேதாகமத்தை மாற்றி அமைப்பதைவிட இது மேலானதாய் இருக்கிறது. தீர்க்கதரிசனம் ஒரு பகுதியாய் இருந்து, குறிப்பாக முக்கியம் வாய்ந்ததாய் விளங்குகிறது.

தாரளவாதிகளும், அவிசுவாசிகளும் இப்புத்தகத்தை அறிந்து கொள்ள விரும்பாது பரிகாசம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். தானியேல் புத்தகம் ஒரு எதிர்ப்புக்குள்ளான புத்தகமாய் இருக்கலாம் தாராள இறையியலின் போக்கில் இது செல்லாதவாறு காட்டப்படுகிறதாய் இருக்கிறது. பெரும்பாலானோர் இப்புத்தகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த இது ஒரு ஒப்பற்ற 12 அதிகாரங்களையுடைய தீர்க்கதரிசன புத்தகமாய் விளங்கி வருகிறது. வேறெந்த புத்தகத்திலும் தீர்க்கதரிசனமாய் இவ்வளவு தெளிவாகவும், விவரமாகவும் அறிவிக்கப்படவில்லை. இதில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்கள் மிகவும் தெளிவுடன் நிறைவேறியுள்ளது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

ஆகையால் இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவன் தன்னை மனிதனுக்கு வெளிப்படுத்துவதை இங்கு காண்கிறோம். தானியேல் புத்தகத்தில் நிறைவேறித்தீர்ந்த தீர்க்கதரிசனங்களும் இன்னும் நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தைத் தாக்குகிறகிறவர்கள், எல்லாவற்றையும் அறிந்த முடிவில்லாத தேவனை வெறுக்கிறவர்களாய் காணப்படுகின்றனர். வேதாகமத்தில் தானியேல் புத்தகம் மற்றபுத்தகங்களைப்போன்று அதிகாரமுள்ளதாய் கருதப்படாததற்கான காரணம் இருப்பதாய் தெரியவில்லை. இரட்சிக்கப்படாதவர்கள் எதையும் கூறுவதை விரும்பாதவர்களாய் இருக்கின்றனர். மனுக்குலத்திற்கு எதிராளியானவன் தனிப்பட்ட பெருமையுடன் தங்களை உண்டாக்கினவரையும், இரட்சகரையும் மாயையான தாழ்மையுடன் ஆராதித்து வருகின்றனர்.

தாராளவாதிகளின் முக்கியமான அறிவு சார்ந்த பிரச்சனை என்னவெனில், வேதவாக்கியங்கள் பிழையின்றி மற்றும் ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதபட்டதை மறுதளிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

தானியேல் வெளிப்படுத்தல் இவ்விரு புத்தகங்களில், தானியேல் புத்தகமானது முதலாவது கற்றுக்கொள்ள வேண்டிய புத்தகமாய் திகழ்கிறது. இது யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளை அறிந்து கொள்ள வழிதிறக்கிறதாய் இருக்கிறது. இப்புத்தகமானது மக்கள்மீது பெரிய அளவில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இது மத்திய கிழக்கு நாடுகளில் பலதெய்வ வழிப்பாட்டினை வெகுவாய் குறைக்க வழி வகை செய்துள்ளது, மற்றும் மக்கபேயர்களின் பிந்தின நாட்களிலும், பெர்சிய

சாம்ராஜ்ஜிய ஆளுகையின் போதும் சம்பவித்ததாய் காணப்படுகிறது தானியேலி நாட்களில் ஏறாளமான காரியங்கள் இவ்வுலகில் நிகழ்ந்துள்ளன, கிரேக்க சாம்ராஜ்ஜியம், புத்தமார்க்கம், சீக்கிய மதம், கன்பூஸியஸ் மதம் போன்றவைகளின் எழுச்சி நிகழ்ந்துள்ளன. இப்படிப்பட்ட மூன்று மதங்களுக்கு அடிப்படையாக பகுத்தறிவுவாதம் [Rationalism] அமையப்பெற்றுள்ளது. தானியேல் கடைசி காலத்தில் வஞ்சிக்கப்பட்ட மற்ற மதத்தினரைக் குறித்து தீர்க்கதரிசன விவரங்களை அளிக்கிறதாய் இருக்கிறது, மற்றும் உபத்திரவ காலத்தில் அந்திக்கிறிஸ்துவால் ஒவ்வொரு மதமும் அங்கீகாரம் பெறுகிறதாய் இருக்கிறது.

மோசே காலம் துவக்கி தானியேல் காலம் வரைக்கும் தேசிய அளவில் யூதர்கள் வேதாகமத்தின் தேவனுக்கு உத்திரவாதம் அளிக்கிறவர்களாய் இருந்தனர். தானியேல் வாழ்நாள் காலத்தில் அவர்கள் சிறைபிடிக்கப்பட்டு அடிமைகளாயினர், இது தானியேலால் "புறஜாதியாரின் காலம்" எனக் காட்டப்படுகிறது. இக்காலப்பகுதி கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை தொடருகிறதாய் இருக்கிறது. அவர் வரும்போது தனது ஜனங்கள் ஒடுக்கியிருக்கும் இறுதி புறஜாதிய இராஜ்ஜியத்தை அழிப்பார்.

தானியேல் புஸ்தகத்தின் அடிப்படையிலான நான்கு இராஜ்ஜியங்களைக் குறித்த கருத்தானது, பத்தொன்பதாம் நூற்றாண்டில் தத்துவஞானியான ஹேகல் என்பவரால் ஜெர்மானிய தேசத்தில் பயன்படுத்தப்பட்டது, இப்படிப்பட்ட இராஜ்ஜியங்கள் கிழக்கத்திய இராஜ்ஜியங்களாயிருந்து, அவைகள் கிரேக்க சாம்ராஜ்ஜியம், ரோமசாம்ராஜ்ஜியம், ஜெர்மானிய சாம்ராஜ்ஜியம் என அறியப்பட்டது. இக்கருத்து மார்க்ஸ் என்பவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது கம்யூனிச அடிப்படையில் அமையப்பெற்றது. இதை அவர் "சுதந்தரிக்கும்’ பெரிய இராஜ்ஜியமாய்க் கடந்த காலத்தில் கண்டார். இது மற்ற இராஜ்ஜியங்களின் வரிசையில் ஏற்படுத்தப்பட்டதாய் அவர் கண்டார். நாசிக்களும், கம்யூனிசவாதிகளும் சாத்தானின் தவறான போதனைகளில் விழுந்து போனவர்களாய் காணப்படுகின்றனர். இருப்பினும் சாத்தானின் இறுதித் தவறான பெரிய கொள்கையானது வரவிருக்கிறதாய் இருக்கிறது.

"திறனாய்வு சார்ந்த பிரச்சனைகள்" எனத் தானியேல் புத்தகத்தில் பல அழைக்கப்படுகிறதாய் இருக்கிறது. இது புறஜாதியாரைக் குறித்த சகல விபரங்களும் அடங்கிய புத்தகமாயும், இப்புத்தகத்தில் இது குறித்து எழுதப்பட்ட வேதபகுதி யாவும் கடைசி நாட்களில் நிகழவிருப்பதையும் அறிகிறவர்களாய் இருக்கின்றனர்.

வேதாகமத்தில் தானியேல் புத்தகம் எழுதப்பட்ட இடம்:

தானியேல் புத்தகத்தின் முதல் பிரச்சனை இப்புத்தகம் எழுதப்பட்ட இடம் குறித்ததாய் இருக்கிறது. எபிரெய பகுக்கப்பட்ட வேதாகமம் மூன்று பிரிவுகளை உடையதாய் இருக்கிறது. முதற்பகுப்பு டோரா அல்லது பஞ்சாகமம் [the Torah or Pentateuch,] மோசே எழுதின முதல் ஐந்து புத்தகம், இரண்டாவது நபீம் அல்லது தீர்க்கதரிசிகள், [Nabiim or Prophets] மூன்றாவது கேத்துபீம் அல்லது எழுதப்பட்டவைகள் [the Kethubim or the writings] என அறியப்படுகிறது.

மேலை நாடுகளில் உள்ளவர்கள் எண்ணுகிறது போல, தானியேல் புத்தகம் போதிய அளவு தீர்க்கதரிசனங்கள் அடங்கியிருந்தபோதும், அதாவது இப்புத்தகம் இரண்டாவது பகுப்பாகிய நபீம் என்ற பகுப்பில் இருக்க வேண்டியதாய் இருந்தும் மூன்றாவது பகுப்பில் இருப்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இதினிமித்தம் குற்றம் காண்போர் இப்புத்தகத்தை "ஞானப் புத்தகமாய்" காண்கிறார்களேயன்றி தீர்க்கதரிசனப் புத்தகமாய் காணவில்லை. இது தாராளவாதிகளுக்கும்/ அவிசுவாசிகளான குற்றம் காண்போருக்கும் தானியேல் புத்தகமானது "உவமேயங்களாய்" தத்துவ ஞானங்களைப் போதிக்கும் புத்தகமாய் அமைந்து, இதில் எழுதப்பட்ட குறிப்பிட்ட காரியங்களின் நிறைவேறுதலை கூறத்தவறுகிறவர்களாய் விளங்கி வருகின்றனர்

தாராளவாதிகள் தானியேல் புத்தகம் தீர்க்கதரிசன ஆகமம் அல்ல, அவர்கள் கூறுவது மூன்றாவது பகுப்பாகிய எழுதப்பட்டவைகளுக்கு முன்னதாய் இப்புத்தகம் எழுதப்பட்டது என்கின்றனர். இது தாமதமாய் எழுதப்பட்டது மற்றும் தீர்க்கதரிசன விபரங்கள் அனைத்தும் நிறைவேறி தீர்ந்து இருப்பது, சரித்திர உண்மையான எழுதப்பட்டுள்ளது என்கின்றனர். அது தீர்க்கதரிசன ஆகமம் போல இருக்கின்றது என்றும் கூறுகின்றனர் அவர்கள் இது ஏறத்தாள 150 கி.மு வில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்கின்றனர். எப்படியிருப்பினும் அவர்கள் பெரிய பிரச்சனை ஒன்றை இங்கு சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர், சவக்கடல் சுருளிகளில் இப்புத்தகத்தின் பிரதியும் கண்டுபிடிக்கப்பட்டு அதின் காலம் பிரகாரம் தானியேல் புத்தகமானது பழமை வாய்ந்தது என்றும், தெளிவாய் இது மூல புத்தகத்திலிருந்து எழுதப்பட்ட பிரதி என்றும் தெளிவுபட கூறுகிறதாய் இருக்கிறது.

சரித்திர உண்மைகளைப் அறியாது தாராளவாதிகள் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் உண்மையல்ல என முன்னுரைக்கிறார்கள், இதினிமித்தம் இப்புத்தகத்தின் துள்ளியத்தன்மையானது சரித்திர நிகழ்வுகளுக்கு முந்தைய காலகட்டத்தில் நிகழ்ந்தனவாய் இருக்கிறது என்கின்றனர்.

கி.மு 400 ல் மல்கிய புத்தக நிகழ்வுடன் பழைய ஏற்பாட்டு சரித்திர நிகழ்வுகள் முடிவுக்கு வந்துள்ளன எனவும் கூறுகின்றனர். எப்படியிருப்பினும், சவக்கடல் சுருளிகள் ஒன்றில், இது மக்கபேய யுத்தத்திற்கு முன்னதாகவே எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக்கூறி இக்கண்ணோட்டத்தினை முறியடிக்கிறதாய் இருக்கிறது.

விசுவாசிப்பதற்கும்/விவாதிப்பதற்கும் மற்றொரு அம்சம் என்னவெனில், பஞ்சாகமம், தீர்க்கதரிசன ஆகமம், சரித்திர ஆகமம் போன்றவற்றின் பழைய ஏற்பாட்டின் கால அமைவு. வேதவசனங்கள் பண்டைய இஸ்ரவேலின் ஆவிக்குரிய தலைவர்களது தலைப்பின் அமைப்பில் அமையப்பெறவில்லை. அதன் பகுதிகள் ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள், ஞானவான்கள் போன்றோரால் அமைவைப் பெற்றது

ஆசாரியர்கள் லேவியராய் இருந்தனர் அவர்கள் பிரமாணங்களை போதிப்பதற்கும், ஆராதனை நடத்துவதற்கும் ஏற்படுத்தப்பட்டனர். அவர்கள் போதனைக்குரிய முக்கிய பகுதி டோராவாக இருந்தது. இது வேதாகமத்தின் பழமை வாய்ந்த பகுதியாய் இருந்தது. (மிகவும் பழமை வாய்ந்த புத்தகமான யோபு -- 2500 கி.மு விற்கு முன்னதாய் எழுதப்பட்டிருந்தபோதும்) தீர்க்கதரிசன ஆகமங்கள் டோராவுடன் சேர்க்கப்பட்டது. இஸ்ரவேலிலே டோரா தீர்க்கதரிகளின் வேலையாய் இருந்து அதை விரிவுபடுத்தி, விளக்கங்களைக் கூறி அதை சரித்திர காலத்தில் இஸ்ரவேலில் கைக்கொள்ளச் செய்வதில் தீர்க்கதரிசிகளின் பங்கு பெரிதாய் இருந்தது.

"ஞானவான்கள்" தேவனது வார்த்தைகளை தேசத்தின் மத வாழ்வுக்கு பொருந்துமாறு செய்பவர்களாய் இருந்தனர். சங்கீதம், நீதிமொழிகள், உன்னதபாட்டு போன்றவைகள் வாழ்வின் உண்மைச் சூழ்லில் கைக்கொள்ளக்கூடிய வேதாகமாய் இருந்தது. கைக்கொள்ளக்கூடியவைகள் தீர்க்கதரிசன வார்த்தைகளை உள்ளடக்கியதாய் இருந்தது, இஸ்ரவேலில் ஞான ஆகமங்கள் குறிப்பிடத்த்க்க தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியதாய் இருந்தது.

சங்கீதம் தேசிய பாடல்களாய் இருந்தது, நீதிமொழிகள் வாழ்க்கை முறைக்கான விபரங்களை வடிவமைத்து அளிப்பதாய் இருந்தது, உன்னதப்பாட்டு பாலியல் மற்றும் திருமணம் போன்றவற்றைக் குறித்ததாய் இருந்தது. பழைய ஏற்பாட்டு ஆகமங்களை தொகுப்பு செய்தவர்கள் தானியேல் புத்தகத்தை அதிக தீர்க்கதரிசன செய்திகள் அடங்கியிருந்தும் அதை தீர்க்கதரிசன ஆகம பகுப்பில் சேர்க்கவில்லை. அதன் தீர்க்கதரிசன வார்த்தைகளை கைக்கொள்வது இப்புத்தகத்தின் மைய நோக்கமாய் இருந்தது அவைகளை சங்கீதம், நீதிமொழி போன்ற

புத்தகங்களை கைக்கொள்வதைப் போன்று கைக்கொள்ளுதல் வேண்டும் எனக் கண்டனர். அவர்கள் தானியேல் புத்தகத்தை ஞானத்தை கூறும் நடைமுறை புத்தகமாய் கண்டனர், இதில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கைக்கொள்வதன் மூலம், எந்தஒரு விசுவாசியும் மனித இராஜ்ஜியத்தில் பயமின்றி வாசம் செய்து சரித்திரத்தில் முடிவாக இடம் பெற முடியும் எனக் கண்டனர். தாவீது பரிசுத்தமாக்கப்படுதலுக்கு நமக்கு ஒரு முன்மாதிரியாய் அமைந்துள்ளதைப் போன்று, தானியேல் மனித இராஜ்ஜியத்தில் வெற்றிகரமான அரசியல்வாதியாய் மாதிரி வாழ்வு செய்தார். அவரது கண்கள் கர்த்தர் மீது பதிக்கப்பட்டு, அவர் மனித இராஜ்ஜியத்திற்கான முடிவை கொண்டு வருகிறவராய் இருக்கிறார் என்பதை தெரியப்படுத்துகிறார்.

தானியேலில் நாம் தீர்க்கதரிசன வெளிப்பாடுகளடங்கிய இலக்கியத்தை நாம் பெற்றுள்ளோம். இதைப் போன்றே நாம் ஏசாயா 24-27 இவ்வேதபகுதி வெளிப்பாடுகளடங்கிய இலக்கியமாய் எசேக்கியேலைப் போன்று இருக்கிறது, தானியேல் [அதிகாரம் 2,7,8,10-12], சகரியா 1-6 மற்றும் வெளிப்படுத்தின விஷேசம் போன்ற புத்தகங்கள் வெளிப்படுத்தப்பட்ட பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.வெளிப்படுத்தின விஷேசத்தை நீங்கள் எவ்வாறு வியாக்கியானிப்பது என்பது, இப்படிப்பட்ட பழைய ஏற்பாட்டு வெளிப்பாடுகளைக் கொண்டே என்பது தீர்க்கமானிக்க ஒன்றாய் இருக்கிறது. இவ்வெளிப்பாட்டின் கால அளவு 700 கி மு விலிருந்து (ஏசாயாவின் காலந்தொட்டு) கி பி 96 வரை (யோவான் காலம் வரைக்கும்) பரந்து விரிந்து கிடக்கிறதாய் இருக்கிறது, இது நமது காலகட்டத்தில் குறுகிய கால சில நூற்றாண்டுகளில் நிகழ்ந்த சம்பவம் அல்ல.

பழைய ஏற்பாட்டின் கால முடிவை நோக்கி வெளிப்படுத்தல் இலக்கியம் இடம்பெறுகிறதாய் இருக்கிறது. ஜனங்கள் அதிக அதிகமாய் உபத்திரவப்படுத்தப்பட்டு தீமை செய்யும் இராஜாக்களின் கீழ் கொடுமையாய் தாக்கப்பட்டனர் (அசீரியர்கள் குறிப்பாக ஏசாயா காலத்தில் தாக்குதல் செய்தனர்) இது பேரழிவிற்கான காலமாய் இருந்தது, இஸ்ரவேலின் எதிரிகளால் இன அழிவுக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நீங்கள் பேரழிவைக் காணும் முன்னரே, அவைகளை முன்னறிவித்து இப்படிப்பட்ட இலக்கியங்கள் எழுந்தன மனுக்குலத்திற்கு இப்படிப்பட்ட அழிவு கெட்டதாய் இருந்தது. தேவனின் இறுதி நோக்கம் நிச்சயமுள்ளதாய் இருப்பதால் ஜனங்கள் விடப்பிடியாய் விடுவிக்கப்படுதலுக்காய் காத்திருப்பது அவர்களை உற்சாகப்படுத்துவதாய் இருந்தது. கொடிய காரியங்கள் சம்பவிக்கும் என எதிர்பார்க்கும் குறுகிய கால கண்ணோட்டமாய் அமையப் பெற்றிருந்தது, மற்றும் கொடூரமான இயற்கை உபத்திரவங்களை

சந்திக்கும் காலகட்டமாய் இருந்தது, ஆனால் எதிலும் நலமே காண்கிற நீண்ட கால கண்ணோட்டப்படி, தேவனது திட்டம் வெளிப்பட்டு அதன் கண்ணோட்டத்தின் மீது, சாத்தானின் மக்கள் மீது கொடுக்கப்படும் தண்டனையாய் கருதப்படுகிறது.

இப்படிப்பட்ட புத்தகங்கள் தேவதூதர்கள் மூலம் கொடுக்கப்பட்டது, மட்டுமின்றி நியாயப்பிரமாணமும் தேவ தூதர்கள் மூலம் கொடுக்கப்பட்டது என்பதை நினைவுகூறுதல் வேண்டும். எழுதியவர் மற்றும் தேவதூதரிடையே சில கருத்துக்களை அல்லது சொற்றொடர்குறித்த அர்த்தம் அறிய பேச்சு வார்த்தை நிகழ்ந்தது. வெளிப்படுத்தப்பட்ட இலக்கியம் குறித்து மற்றொரு குணாதிசயம் என்னவெனில், அதன் மொழியானது அடையாள மொழியாய் இருப்பது. அதை நடைமுறைப்படுத்தும்போது எழுத்தின்படியே நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஆகையால் அடையாள மொழியில் கூறப்பட்டுள்ளவைகளின் அர்த்தத்தை சரியான நிலையில் அர்த்தம் விளக்குவது அவசியமாய் இருக்கிறது இப்படிப்பட்ட புத்தகத்தில் கூறப்பட்டுள்ள அடையாள மொழியானது வெளிப்படுத்தின விஷேசத்தில் திரும்ப் திரும்ப கூறப்பட்டு வெளிப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. .

தானியேலும் தாவீதும்

யூத வேதாகம பகுப்பில் தானியேல் தீர்க்கதரிசன ஆகம வரிசையில் இடம் பெறவில்லை, அவை சரித்திர ஆகமங்களில் பகுக்கப்பட்டுள்ளது. தானியேல் தாவீதைப் போன்று தீர்க்கதரிசியின் அலுவலைப் பெற்றவராக கருதப்படவில்லை. சங்கீதங்கள் குறிப்பிட்ட முக்கியம் வாய்ந்த தீர்க்கதரிசன காரியங்களைப் பெற்றிருந்தும், தீர்க்கதரிசனப் பகுதியில் இடம்பெறவில்லை,

தானியேலும் எசேக்கியேலும்

தானியேல் பாபிலோனியரின் அரண்மனை அவையில் அலுவலராய் பணியாற்றினார், பின்னர் பெர்சிய அவைக்கு அவர் அலுவலராய் மாற்றப்பட்டார். இவரது சமகாலத்தவராகிய எசேக்கியேல் இருவிதமான வரங்களை உடையவராய் தீர்க்கதரிசியின் அலுவலை உடையவராய் இருந்தார். தானியேல் வெளிப்படுத்தப்பட்ட தீர்க்கதரிசனத்தை எழுதுகிறவராய் இருந்தார் அல்லது நடைமுறை வெளிப்பாடு போன்றவற்றை எழுதுகிறவராய் இருந்தார். வெளிப்பாடு என்பது இருளின் குழப்பம் என்பது பொருள்படாது, மாறாக அதன் பொருள் வெளிச்சத்தில் திரை நீக்கம் செய்து காட்டுவது எனப்பொருள்படும்.

ஜனங்களது அனுதின நடைமுறை வாழ்வில் தீர்க்கதரிசன தெளிவை அளித்து, தனது ஜனங்களுக்கும், அவர்களது காலத்தில் வாழும் மற்ற எல்லாஜனங்களுக்கும் வெளிப்பாட்டினை அளிப்பதாகும்.

இந்த விஷயத்தில் எசேக்கியேலுடன் ஒத்துபோகிறவராய், இருவரும் பழைய தீர்க்கதரிசியாகிய எரேமியாவினால் உற்சாகப்படுத்தப்படுகின்றனர். தானியேல் தான் எழுதிய அநேக காரியங்களின் நிறைவேறுதலை காண உயிருடன் இல்லை, ஆனால் அவர் உயிருடன் இருந்த காலத்தில் எழும்பிய இராஜ்ஜியங்களை கண்டவராய் இருந்தார். சுமார் 600 ஆண்டு காலங்களுக்குள், அவர் எழுதிய அநேக காரியங்கள் நிறைவேறித்தீர்ந்தன. அவைகளில் இன்னும் சில எதிர்காலத்திற்குரியவைகளாக நிறைவேற வேண்டியவைகளாய் இருக்கின்றன.

புறஜாதியாரின் காலங்கள்

புறஜாதியாரின் காலம் கி மு 606/605 ல் துவங்கியுள்ளது எனத் தெளிவுபடுத்தியுள்ளார் மற்றும் அக்காலமானது மேசியா இராஜாவாக வேற்றியுடன் திரும்பவரும் வரை நீடிப்பதாய் இருக்கும். எருசலேம் நகரம் புறஜாதியாரால் மிதிக்கப்படும். ஒன்றன் பின் ஒன்றாக பெர்சியர்கள், கிரேக்கர்கள், ரோமர்கள் என் தொடர்ச்சியாக இப்படிப்பட்ட ஜனங்களால் எருசலேம் மிதிக்கப்படும். இஸ்ரவேலரோடு கனிசமான அளவில் துருக்கியர்கள் இன்னும் எருசலேமில் வாசம் செய்து வருகின்றனர், இது இன்னும் புறஜாதியர் அவர்களுடன் வாசம் செய்துவருவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இவர்கள் உரிமை பாராட்டி கட்டாயமாய் அங்கு வாசம் செய்துவருகின்றனர். எப்படியிருப்பினும் தானியேல் "புறஜாதியாரின் காலம்" என்பது நிரந்தரமானது அல்ல என தெளிவாகக் கூறியுள்ளார். இருப்பினும் இஸ்ரவேல் தனது அதிகாரத்திற்கு திரும்பவந்து, ஆவிக்குரிய நிலையில் எல்லா தேச்ங்களையும் ஆளுகை செய்யும், இது மேசியாவின் இராஜாங்கத்தில் மட்டுமே ஆளுகிறவர்களாய் இருப்பர்.

தானியேல் 9ம் அதிகாரத்தில் அவர் கூறும்போது, ஆரம்பத்தில் மேசியா வரும் போது அவர் புறக்கணிக்கப்பட்டு சங்கரிக்கப்படுவார். தேவனது திட்டத்தில் இஸ்ரவேல் பெரும் பங்கு வகிக்கிறதாய் இருக்கிறது. தானியேல் தொடர்ந்து கூறும்போது, மகா உபத்திரவ காலத்திற்குப் பின்னர் இஸ்ரவேலில் திரும்ப வருவார், அதன் பின்னர் புறஜாதியாருக்கு ஒரு முடிவு உண்டாகும். தானியேலால் உரைக்கப்பட்ட சரித்திர தீர்க்கதரிசனம் எழுத்தின் படியே நிறைவேறித் தீர்ந்திருக்கிறது, ஆனால்

நாம் இன்னும் 2015 வரை புறஜாதியாரின் காலத்தில் தான் இருந்து வருகிறோம்.

நாம் வேதபாடத்தை ஆயிரவருட அரசாளுகைக்கு முன் என்ற கண்ணோட்டத்தில் அணுகி கற்று வருகிறோம், இவ்வகையான கண்ணோட்டம் மிகவும் அர்த்தமிக்கதாய் இருக்கிறது. தானியேல் எழுத்தின்படியே ஆயிரவருட அரசாட்சி அமையும் என விசுவாசிக்கிறார். அதோடு கூட யோவான் அப்போஸ்தலரும், பவுல் மற்றும் ஆரம்பகால சபைப் பிதாக்களும் எழுத்தின்படியே ஆயிரவருட அரசாட்சி அமையும் என விசுவாசிக்கிறவர்களாய் இருந்தனர். அவர்களுடன் விசுவாசத்தில் நாமும் நிற்போமாக. யூதா 3. நீங்கள் வித்தியாசமான கருத்துடையவராய் இருப்பீர்களானால் உங்களுடன் நாங்களும் விழுந்து போகிறவர்களாகமாட்டோம். ஆகையால் இதுவே நமது ஸ்தானமாய் இருக்கிறதென்பதை புரிந்து கொள்ளுங்கள்.

தானியேலும் மகா அலெக்ஸாண்டரும்:

எழுதப்பட்ட தானியேல் புத்தகமானது கி.மு. நான்காம் நூற்றாண்டில் பொதுவான உபயோகத்தில் இருந்து வந்தது, இதை இஸ்ரவேலின் பிரதாண ஆசாரியராய் கி பி 331ல் இருந்த ஜோஸிபஸ் என்பவரால் மகா அலெக்ஸாண்டருக்கு காண்பிக்கப்பட்டது. இப்புத்தகத்தை அவிசுவாசிப்பதன் மூலம், மதீயீனராகாது இருப்பீர்களாக, காரணம், மகா அலெக்ஸாண்டர் படையெடுப்பின் போது எருசலேம் தப்புவிக்கப்பட்டு, யூதர்கள் அவரால் கனப்படுத்தப்பட்டது ஜோஸிபஸ் என்பவரால் விளக்கிக் காட்டப்பட்ட வேதத்தினால் என்றால் மிகையாகாது.

அலெக்ஸாண்டர் பெர்சிய சாம்ராஜ்ஜியத்தின் மீது படையெடுத்து முன்னேறிக்கொண்டிருக்கும் கிரேக்கனாய், மக்கதோனியாவை விட்டு முன்னதாகவே எருசலேமில் வந்து வாசம் செய்து வருகையில் அவர் ஒரு தரிசனங்கண்டார், ஒரு மலையிலிருந்து திராளான வெண்ணுடை தரித்தவர்கள் இறங்கி வந்து அவரை வாழ்த்துகிறதாய் கண்டார். இக்குழுவினரை ஒரு நபர் வழி நடத்திச் சென்று இஸ்ரவேலின் பிரதாண ஆசாரியரை முடிசூட்டுவதாக அலெக்ஸாண்டர் கண்டாராம், இத்தரிசனத்தை அலெக்ஸாண்டர் கண்டபோது அதைக் குறித்து எவ்வித அறிவுமற்றவராய் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கிரேக்கர்கள் தீரு மற்றும் அதை சூழ உள்ள ப்பட்டணங்களை கைப்பற்றி எருசலேம் நோக்கி அவர்கள் வந்து கொண்டிருப்பதை அறிந்த பிரதாண ஆசாரியர் என்ன செய்வது என அறியும்படி மிகவும் கவனமாய் ஜெபித்தார். தேவன் அவருக்கு ஒரு தரிசனம் மூலம் தன்னை

வெளிப்படுத்தினார், மற்றும் தானியேல் தீர்க்கதரிசன புத்தகத்தை அவர் வாசிக்க அவரை வழி நடத்தினாராம். அவர் அலெக்ஸாண்டர் தானியேல் புத்தகத்தில் வருணிக்கப்பட்டதை தெளிவாய்க் கண்டு கொண்டாராம், கிரேக்கர்கள் கடந்து வந்து பெரிசிய சாம்ராஜ்ஜியத்தை மேற்கொள்ளுவதைக் குறித்த தீர்க்கதரிசன வார்த்தைகளை தானியேல் புத்தகத்தில் பல இடங்களில் எழுதப்பட்டிருப்பதை இனங்கண்டு கொண்டார். தரிசனத்தில் கர்த்தர் பிரதாண ஆசாரியர் எப்படிப்பட்ட ஆடையணிந்து பட்டணத்தில் உள்ள அனைத்து ஜனங்களும் எப்படிப்பட்ட ஆடை அணிந்து பட்டணத்துக்கு வெளியே செல்ல வேண்டும் எனக் காட்டினார். அவர்கள் அனைவரும் வெண்ணிற ஆடையணிந்து, அலெக்ஸாண்டரையும் அவரது இராணுவத்தையும் வரவேற்க பட்டணத்திற்கு வெளியே சென்று, அவரது வெற்றிக்காக பலியிட்டு, அவர் தொடர்ந்து வெற்றி பெற முன்னேறும்படி வாழ்த்தினார்கள். எருசலேமை அழித்து அதைக் கைப்பற்ற அலெக்ஸாண்டரும் அவரது இராணுவமும் ஆயத்தமாய் இருந்தது, ஆனால் பிரதாண ஆசாரியரும், எருசலேம் நகரத்தார் அனைவரும் பட்டணத்திற்கு வெளியே வந்து அவரை வரவேற்றபோது, அலெக்ஸாண்டர் தனது குதிரையைவிட்டு இறங்கி ஆசாரியருக்கு முன்னதாய் பணிந்து தலைவணங்கினார். இதைக் கண்ட சக மக்கதோனியர்கள் நடுங்கி திகப்படைந்தனர். பிரதாண ஆசாரியர் தானியேல் புத்தகத்தில் தெரிவு செய்யப்பட்ட வேதபகுதிகளை அலெக்ஸாண்டருக்கும் அவரது தளபதிகளுக்கும் வாசித்துக் காட்டினார்.

இவ்வாறு அலெக்ஸாண்டர் வாசிக்கக்கேட்டதை அறிந்து தன்னைக் குறித்து தானியேல் 200 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தெளிவுடன் கூறியிருப்பது குறித்து மிகவும் ஆச்சரியத்துக்குள்ளானார். இப்படிப்பட்ட சந்திப்பு எருசலேம் பட்டணத்துக்கு வெளியே நிகழ்ந்தது பிரதாண ஆசாரியர் முடிசூடப்பட்டு எல்லா மக்களும் வெண்ணுடை தரித்து காணப்பட்டனர். அலெக்ஸாண்டருக்காய் பலிசெலுத்தப்பட்டது, அநேகம் யூதர்கள் கிரேக்க இராணுவத்தில் சேர்ந்து கொண்டனர், மற்றும் கிரேக்க இராணுவத்துடன் பின்தொடர்ந்து சென்றனர். அவ்வாறு சென்றபோது ஜெப ஆலயங்களை கிரேக்க உலகெங்கும் ஸ்தாபித்தனர். இப்படிப்பட்ட ஜெப ஆலயங்கள் 360 ஆண்டுகளுக்குப் பின்னர் அப்போஸ்தலரால் சுவிஷேசம் அறிவிப்பதற்கு முன்னேற்பாடாய் அமைந்தது. இப்படிப்பட்ட நிகழ்வானது தானியேலில் இடம்பெற்று கி மு 200 ஆண்டுகளுக்கு முன்னதாகவே எழுதப்பட்டதைக் காட்டுகிறதாய் இருக்கிறது (அங்கிருந்தே இப்பொழுது பிரதிகளைப் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்) கி பி 331 ல் தானியேல் புத்தகமானது எபிரெய வேதமாய் இருந்தது, அது ஒரு தீர்க்கதரிசன புத்தகமாய் இருந்தது அது ஒரு சரித்திர ஆகமமாய் அல்ல.

சிறையிருப்பில் தானியேல்:

கி மு 605 ல் முதன் முறையாக எருசலேம் தாக்கப்பட்ட போது, தானியேலும் அவரது சகாக்களும் சிறைபிடிக்கப்பட்டுச் சென்றனர். இவர் ஒரு அன்னகனாய் சாத்ராக், மேஷாக், ஆபெத்நேக்கோ என்பவர்களுடன் அரண்மனையில் சேவகம் செய்தார். தானியேல் நெபுகாத்நேச்சாரை கர்த்தரின் இரட்சிப்பின் அறிவிற்குள்ளாகவும், விசுவாசத்திற்குள் கொண்டு வருகிறர்களாகவும் திகழ்ந்தனர். தானியேல் 4.

கி மு 538ல் பெல்ஸாத்சார் ஆளுகையில் பாபிலோன் வீழ்ச்சியின் போது தானியேல் இருந்தார். தானியேல் தொடர்ந்து கோரேஸ்/தரியூ ஆளுகையின் போது அரச அவையில் இருந்தார் (கோரேஸ் என்பது பெரிசிய மற்றும் மேதிய பெயராய் இருந்தது) இவர்களது ஆட்சி காலத்தில் தானியேல் தனது 80 வயது காலங்களில் சிங்க கெபியில் போடப்பட்டார். பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தில் தானியேல் ஒரு தலைவராகவும் மேலான அந்தஸ்தை வகிப்பராகவும், விசுவாசத்திலும், ஜெபத்திலும் தேறினவராக விளங்கினார். தானியேல் மற்றவர்களின் தரிசனத்தை வியாக்கியானிப்பவர் என்ற பெயரைப் பெற்றவராய் இருந்தார். மற்றும் எதிர்காலத்தில் ஆளப்போகிற இராஜ்ஜியங்களை முன்னறிவிக்கிறவராயும் திகழ்ந்தார். இவரது ஞானத்தால் இவர் அறியப்பட்டவராய் இருந்தார், இதனால் இவர் நெபுகாத்நேச்சார், பெல்ஷாத்சார், தரியூ/ கோரேஸ் போன்ற மன்னர்கள் காலத்தில் இவர் அரசாங்க பணியாற்றினார்.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினால் தானியேல், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் "பாழாக்கும் அருவருப்பு" ஸ்தாபிக்கப்படுவது மேற்கோள் காட்டப்பட்டுள்ளார். ஆகையால் தானியேல் தீர்க்கதரிசன சப்தத்தைத் தொனித்துள்ளார் என கர்த்தரால் நற்சான்று பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. தானியேல் சூசான் என்ற இடத்திலே மரித்து அடக்கம் செய்யப்பட்டதாய் கூறப்படுகிறது. அநேகம் பெரிய விசுவாசிகள் உழைத்து பெர்சிய மண்ணில் புதைக்கப்பட்டார்கள், தானியேல், அவரது மூன்று சிநேகிதர்கள், நெகேமியா, எஸ்தர், மொர்தொகாய் மற்றும் இன்னும் அநேகர் அவ்வாறு புதைக்கப்பட்டிருக்கின்றனர். தானியேல் குறைந்தபட்சம் 73 ஆண்டுகாலம் சிறையிருப்பில் வாழ்ந்தார் என அறியப்படுகிறது, இவ்வாறு அவர் தனது 90 வயது காலம் சென்று முதிர்வயதுள்ளவராய் மரித்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

பாழாக்கப்படுதல்.

தேசிய அளவில் செய்த பாவத்தினால், யூதா கி மு 606/605 முதல் 70 ஆண்டு காலங்கள் பாபிலோன் ஆதிக்கத்தின் கீழ் யோயாக்கீம் இராஜாவுடன் கொண்டுவரப்பட்டது. இப்படிப்பட்ட அடிமைத்தன ஆதிக்கம் முடிசூட்டப்பட்ட இளவரசர் நெபுகாத்நேச்சார் காலம் முதற்கொண்டு துவங்கியது. தானியேலும், இராஜ குடும்ப அங்கத்தினரும் இக்கால கட்டத்தில் எருசலேமிலிருந்து பாபிலோனில் அடிமை ஆதிக்கத்திற்குள் கடந்து சென்றனர். தானியேல் 1:1-2.

கி மு 536 ல் பெரிசியனாகிய கோரேஸ் யூதர்களை விடுதலை செய்து எருசலேம் திரும்பும்படி செய்த தாக்கீதுடன் இக்காலம் நிறைவு பெறுகிறதாய் இருக்கிறது. கி மு 535ல் யூத ஜனங்கள் அழிக்கப்பட்ட எருசலேமிற்கு நாடுதிரும்பினர். இது அவர்களது சிறையிருப்பின் 70 ஆண்டுகாலம் நீடித்தது. (முதலாம் சிறையிருப்பு கி மு 605ல் துவங்கி -- திரும்ப தாயகம் திரும்புதல் கி மு 535ல் நிகழ்ந்தது) இரண்டாவது கால கட்டமாகிய 70 ஆண்டுகாலம் எருசலேம் தேவாலயம் கி மு 536ல் இடிக்கப்பட்டது முதற்கொண்டு கி மு 516 ல் திரும்பகட்ட சகரியா மற்றும் ஆகாய் போன்ற தீர்க்கதரிசிகள் உற்சாகப்படுத்தப்பட்டு ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது வரை கணக்கிடப்படுகிறதாய் இருக்கிறது.

தானியேல் புத்தகம் எழுதப்பட்ட மொழி:

இப்புத்தகம இரு மொழிகளில் எழுதப்பட்டது. எபிரெய மொழியிலும், அரமேயு மொழியிலும் எழுதப்பட்டது, அரமேயு மொழியானது பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தில் பேசப்பட்ட மொழியாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் இப்புத்தகம் மட்டுமே கலப்பு மொழியில் எழுதப்பட்டது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது மற்றும் இஸ்ரவேலின் சரித்திரம் இடம் பெயர்ந்து மேசியா அரசாள திரும்ப வரும்வரை புறஜாதியாரின் ஆளுகை வரை நீடிப்பதைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. அரமேயு மொழியானது பாபிலோனிய காலம் தொட்டு மத்திய கிழக்கு நாடுகளில் கி பி இரண்டாம் நூற்றாண்டு வரை அரேபிய மற்றும் கிரேக்க மொழிக்கு பதிலாக இம்மொழ்யானது பொதுவான மொழியாக [lingua franca] பேசப்பட்டு வந்தது. அரமேயு மொழியில் தானியேல் புத்தகம் 2:4 முதல் 7:28 வரை எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

தானியேல் தீர்க்கதரிசன நிறைவேறுதல்:

ஆயிரவருட அரசாட்சியில் இருக்கிறோம் என்கிற மறுமலர்ச்சி இறையியல்வாதிகள் [reformed theologians] கிறிஸ்து இவ்வுலகில் வந்தபோது தானியேல் தீர்க்கதரிசனம் நிறைவேறியாயிற்று என விசுவாசிக்கின்றனர். அவர் சபையுகத்தில் / கிருபையின் காலத்தில் நாம் ஆயிர வருட ஆளுகையில் இருப்பதாய் விசுவாசித்து வியாயானிக்கின்றனர். நாம் ஆயிர வருட ஆளுகை எதிர்காலத்தில் சம்பவிக்க வேண்டியதாய் இருக்கிறது என விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறோம். இது மாம்சீக பிரகாரமாய் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, திரும்ப இப்பூமிக்கு கடந்து வந்து, உபத்திரகாலத்தின் இறுதிப் பகுதியில் இப்பூமியில் ஆயிரம் வருடம் இராஜாவாய் அரசாள இருக்கிறார். எழுத்தின்படியான ஹெர்மனியூட்டிகல் கண்ணோட்டமானது மற்றும் வாசிக்கும் வேத வாக்கியங்கள் இரண்டாவது கண்ணோட்டத்தை உறுதி செய்து இரண்டாவது கண்ணோடத்தை விசுவாசிக்கச் செய்கிறதாய் இருக்கிறது.

இரண்டாவது கண்ணோட்டத்தை வலுப்படுத்த, தானியேல் 2 மற்றும் 7 அதிகாரத்தில் உள்ள சாம்ராஜ்ஜியங்கள் எழுத்தின்படியே நிறைவேறித்தீர்ந்திருக்கின்றன. பாபிலோனிய சாம்ராஜ்ஜியம் எழுத்தின்படியானது, மேதிய பெர்சிய சாம்ராஜ்ஜியம், கிரேக்க மற்றும் ரோம சாம்ராஜ்ஜியம் எழுத்தின்படியானதாய் இருந்தது. இப்பொழுது நாம் வாழும் உலகமும் இன்னமும் கலப்பின வல்லமை தேசங்களாய் ஆளுகை செய்து வருகின்றன. மேற்கத்திய கூட்டுறவு நாடுகளாகிய EU-NATO-USA போன்ற ஐக்கிய நாடுகள் ஆண்டு வருகின்றன, இதைக்குறித்து தானியேல் மிகத்தெளிவுடன் கூறியுள்ளார், இவ்வாளுகையானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, இப்படிப்பட்ட தீமைசெய்யும் சாம்ராஜ்ஜியங்களை மோதி தூளாக்க இருக்கிறது. தானியேல் இஸ்லாமிய நாடுகள் ஆளுகை செய்யும் அது தீமை எனப்போதிக்கவில்லை, ஆனால் மேற்கத்திய நாடுகள் சாத்தானால் ஆளுகை செய்யப்பட்டு தீமைக்கு மையமாய் விளங்கும் எனக்கூறுகிறார், இது இயேசுக் கிறிஸ்துவின் வருகையின் போது முறியடிக்கப்பட்டு, மேற்கத்திய சாம்ராஜ்ஜியங்கள் மேற்கொள்ளப்பட்டு, -- அந்திக் கிறிஸ்து எருசலேமிற்கு புறம்பாக்கப் படுவான்.

இதினிமித்தம் இப்படிப்பட்ட நம்பிக்கையானது, பொருந்தத்தக்கதாகவும், விசுவாசிக்க ஏற்றதாயும் இருக்கிறது. இப்படிப்பட்ட அடிப்படையில் இந்நாள்வரையிலும் எழுத்தின்படி நிறைவேறி வருகிறதாய் இருக்கின்றன. எல்லா காரியங்களும் எழுத்தின்படியே நிறைவேறித் தீர்ந்து இருக்கின்றன. நாம் நமது ஹெர்மனியூட்டிக்ஸ் (வியாக்கியானப்படி) தெளிவடைவோமாக, அதன் அர்த்தப்படி நமது வியாக்கியானத்தை ஒரு அதிகாரத்தின் பாதியை மட்டும்

வியாக்கியானித்து மீது விட்டு விடாது முழுமை செய்வோமாக, தானியேல் 2:44 ல் கூறப்பட்டுள்ள சத்தியம் எழுத்தின்படியான வியாக்கியானமாய் இருக்கிறது, 2 ம் அதிகாரத்தின் மற்றபகுதிகள் எழுத்தின்படியே நிறைவேறியுள்ளன. இந்த அடிப்படைக் கருத்தையே நாம் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம்.

ஒன்றோடொன்று பின்னி பிணைக்கப்பட்ட தானியேலின் தலைப்புகள்

இரு பெரும் தலைப்புகளுடன் தானியேல் புத்தகமானது ஐம்பத்து மூன்று பகுதிகளாய் பிரிக்கப்பட்டுள்ளன.

[அ] விசுவாசிகள் மீது அவிசுவாசிகளின் தாக்குதல், மற்றும் விசுவாசிகளின் பிரதிச் செயல்பாடுகளும், தேவனின் பராமரிப்பும்.

[ஆ] வரவிருக்கும் நிகழ்வுகள் குறித்த தீர்க்கதரிசனம், இதினிமித்தம் விசுவாசிகள் தேவனது பாராமரிப்பில் தணிவுறச் செய்தல்.

தானியேலின் அதிகாரங்கள் பொருளடக்கம்:

அதி. 1. தானியேல், மற்றும் அவரது கூட்டளிகளின் உண்மைத்துவம் வாய்ந்த மன உறுதி.

அதி. 2. நான்கு வித்தியாசமான உலோகத்தால், செய்யப்பட்ட சிலை குறித்த நெபுகாத்நேச்சாரின் தரிசனம்.

அதி. 3. நெபுகாத்நேச்சாரின் பொற்சிலையும், அக்கினிச் சூலையும்.

அதி. 4. வெட்டப்பட்ட மரத்தைக் குறித்த நெபுகாத்நேச்சாரின் சொப்பனமும், அதன் அர்த்தமும்.

அதி. 5. சுவற்றில் எழுதிய கையுறுப்பு, பெல்ஷாத்சாரின் அழிவை முன்னறிவித்தல்.

ஆதி. 6. தரியு இராஜாவின் கட்டளையும், சிங்கக் கெபியும்.

அதி. 7. நான்கு சாம்ராஜ்ஜியங்களை பிரதிபலிக்கக்கூடிய, நான்குவித மிருகங்களைப் பற்றிய தானியேலின் சொப்பனம்.

அதி. 8. ஆட்டுக்கடா, மற்றும் வெள்ளாட்டுகடா இராஜ்ஜியங்கள் குறித்து தானியேலின் தரிசனம்.

அதி. 9. புறஜாதிய ஆதிக்கம் பற்றிய, 70 வாரங்களைக் குறித்த தானியேலின் தரிசனம்.

அதி.10. நிகழவிருக்கும் சம்பவங்கள் குறித்து, தேவனது மகிமை மூலம் தரிசனங்கள் தானியேலுக்கு அறிமுகப்படுத்தப்படுதல்.

அதி.11. மத்தியக் கிழக்கு இராஜ்ஜியம் குறித்த எதிர்கால தீர்க்கதரிசனம். அந்திக்கிறிஸ்துவின் காலத்திலும் அதன் பின்னரும்.

அதி.12. இறுதிகாலத் தீர்க்கதரிசனங்கள். மற்றும் அது சம்பந்த அடிப்படைக்கருத்துக்களும்.

தானியேலின் பிரிவுகள்

இப்புத்தகத்தின் கீழ்க்காணும் பிரிவுகள், வேதாகமத்தை துண்டு துண்டாகப்பகுத்து வகைப்படுத்தி பொருளடக்கமாய் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தானியேல் தீர்க்கதரிசன ஆகமம்:

01. யூத இராஜ்ஜியத்தின் சரிவும், எருசலேமின் வீழ்ச்சியும். 1:1-1:5

02. தானியேல் தேவனுக்கு உண்மையாய் இருக்கத் தீர்மானித்தல். 1:6-1:14.

03. நான்கு எபிரெய வாலிபரின் முன்னேற்றம் குறித்து நெபுகாத்நேச்சார் மகிழ்வுறல். 1:15-1:21.

04. நெபுகாத்நேச்சாரின் சொப்பனமும், அவனது ஞானிகளும். 2:1-2:9.

05. ஞானிகளின் இயலாமை காரணமாய், அவர்களைக் கொலை செய்யக்கட்டளை பிறப்பிக்கப்படுதல். 2:10-2:13.

06. சொப்பனம் குறித்த வெளிப்பாடு கிடைக்க தானியேல் தேவனை நோக்கி ஜெபித்தல். 2:14-2:18.

07. பல தரப்பட்ட உலோகத்தால் செய்யப்பட்ட சிலையைக் குறித்து, தானியேல் விவரித்தல். 2:19-2:35.

08. நான்கு உலக சாம்ராஜ்ஜியங்கள் குறித்த விளக்கமும், அவற்றின் முடிவும். 2:36-2:43.

09. எல்லா சாம்ராஜ்ஜியங்களின் அழிவும், புதிய இராஜ்ஜியம் அமைக்கப்படுதலும். 2:44-49.

10. பொற்சிலை உருவாக்கப்படுதல். 3:1-2.

11. பொற்சிலையை பிரதிஷ்டை செய்தல். 3:3-7.

12. மூன்று எபிரெய புருஷர்கள் பொற்சிலையை வணங்க மறுத்தல். 3:8-12.

13. மூன்று எபிரெய புருஷர்கள் தேவனது வல்லமையை அறிவித்தல். 3:13-3:18e

14. மூன்று எபிரெய புருஷர்களும் அக்கினி சூலையின் நடுவே பாதுக்காப்படுதல். 3:19-3:27.

15. தேவனைக் குறித்த, நெபுகாத்நேச்சாரின் கட்டளை. 3:28-30.

16. நெபுகாத்நேச்சாரின் சாட்சி. 4:1-4:3.

17. நெபுகாத்நேச்சாரின் சொப்பனம். 4:4-4:18.

18. சொப்பனம் தானியேலால் வியாக்கியானம் செய்யப்படுதல். 4:19-4:27.

19. நெபுகாத்நேச்சார் மனோரீதியான பாதிப்பு அடைதல். 4:28-4:33.

20. சொப்பனத்தின் நிறைவேறுதலும், நெபுகாத்நேச்சார் மீண்டும் சுய நினைவுக்குத் திரும்புதலும். 4:34-4:37.

21. பெல்ஷாத்சாரின் விருந்து உபசரிப்பு. 5:1-5:4.

22. சுவற்றில் எழுதிய கையுறுப்பு. 5:5-5:7.

23. கையுறுப்பு சுவற்றில் எழுதியதை, ஞானிகளால் விவரிக்க இயலாது தடுமாறுதல். 5:8-5:12.

24. தானியேல் இராஜாவின் வெகுமதிகளைப் புறக்கணித்தல். 5:13-24.

25. சுவற்றில் கையுறுப்பு எழுதியதை, தானியேல் வியாக்கியானித்தல். 5:25-5:29.

26. பாபிலோனின் வீழ்ச்சி. 5:30-5:31.

27. மேதியனாகிய தரியுவின் கீழ் தானியேலின் அந்தஸ்து. 6:1-6:3.

28. தானியேலை ஒழித்துக்கட்ட சதி ஆலோசனை. 6:4 - 6:9.

29. தானியேலின் ஜெபம். 6:10-6:15.

30. சிங்கக்கெபியில் தானியேல். 6:16-6:17.

31. தானியேல் விடுவிக்கப்படுதல். 6:18-6:24.

32. தானியேல் செழிப்படைதலும், தரியுவின் கட்டளையும். 6:25-6:28.

33. நான்கு மிருகங்களைக் குறித்த தானியேலின் தரிசனம். 7:1-7:8.

34. மேகத்தில் வருகின்ற மனுஷகுமாரனைக் குறித்த தானியேலின் தரிசனம். 7:9-7:14.

35. நான்கு மிருகங்களைக் குறித்த பொருள் விளக்கம். 7:19-7:28.

36. நான்கு மிருகங்களைக் குறித்து, விளக்கம் அளிக்கப்படுதல். 7:15-7:18.

37. ஆட்டுக்கடா, வெள்ளாட்டுக்கடா குறித்த தரிசனம். 8:1-8:14.

38. தரிசனத்தைக் குறித்த அர்த்தம். 8:15-8:27.

39. தானியேலின் ஜெபம். 9:1-9:21.

40. 70 வாரங்களைக் குறித்தத் தீர்க்கதரிசனம். 9:22-9:27.

41, தரிசனத்திற்காய் தானியேல் ஆயத்தப்படுதல். 10:1-10:3.

42. கிறிஸ்து மகிமை அடைதல் குறித்தத் தரிசனம். 10:5-10:6.

43. தானியேல் மறுரூபமடைதலால் தாக்கத்திற்கு உள்ளாதல். 10:7-10:9.

44. பரலோக செய்தியாளரிடமிருந்து அளிக்கப்படும் செய்தி. 10:10-10:14.

45. தானியேல் பெலப்படுதலும், நிச்சயத்துக் கொள்ளுதலும். 10:15-10:21.

46. தரிசத்தின் தொடர்ச்சி. 11:1-11:20.

47. அந்தியோகஸ் எப்பிப்பேனஸ் இனங்கண்டுகொள்ளப்படல். 11:21-11:35.

48. பாவ மனிதனின் செயல்பாடு. 11:36-11:39.

49. இராஜாவின் தற்காலிக ஜெயம். 11:40-45.

50. ஆபத்துக் காலம். 12:1.

51. பழை ஏற்பாட்டு பரிசுத்தரின் உயிர்த்தெழுதல். 12:2-12:3.

52. முடிவுபரியந்தம் வரை தீர்க்கதரிசனமானது முத்திரையிடப்படுதல். 12:4-12:9.

53. பாழாக்கும் அருவருப்பும் மற்றும் முடிவுரையும். 12:10-12:13.

பாடச்சுருக்கம்:

தானியேல் அதிகாரம் 1 ல் தானியேல் புறஜாதிய அரசியலில் உட்புகுதல். அதிகாரம் 2-6ல் தானியேல் அரசியலில் வெற்றிகரமாய் முன்னேறுவ்வதைக் காட்டுகிறது. அதிகாரம் 7-12ல் முக்கியமாய் தரிசனங்கள் அடங்கியுள்ளன. இப்புத்தகத்தின் இறுதிப்பகுதியில் பாதி சரித்திரத்தை குறித்தும் மற்றும் யூதர்களோடும் இஸ்ரவேலை சுற்றிலும் உள்ள நாடுகள் சம்பந்தப்பட்ட சரித்திரமும் குறித்து பொருளடக்கம் கற்றுத்தரப்படுகிறது.

<u>அதிகாரம் -1.</u>

அதிகாரம் 1 ன் பிரிவுகள்:

தானியேல் 1 ம் அதிகாரத்தை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம்.

01. யூத இராஜ்ஜியத்தின் சரிவும், எருசலேமின் வீழ்ச்சியும். 1:1-1:5

02. தானியேல் தேவனுக்கு உண்மையாய் இருக்கத் தீர்மானித்தல். 1:6-1:14.

03. நான்கு எபிரெய வாலிபரின் முன்னேற்றம் குறித்து நெபுகாத்நேச்சாரின் மகிழ்வுறல். 1:15-1:21.

முகவுரை

நெபுகாத்நேச்சாரின் ஸ்தம்பிக்கவைக்கும் வெற்றியை கார்க்கமீஸில் யுத்தத்தில் எகிப்தின் மீது பெற்ற பின்னர், இவர் எருசலேமை முதன்முறையாய் முற்றுகையிட்டு அது ஆயத்தமாய் இராத வேளையில், எவ்வித எதிர்ப்புமின்றி பட்டணத்தைக் கைப்பற்றினான். அத்தருணத்தில் தானியேல் சிறைபிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டார். யூதாவின் அரசனான யோயாக்கீமை அரியணையில் ஆளுகை செய்யும்படி விட்டுச் சென்றனர். பாபிலோனிய கலாச்சாரம் என்னவெனில், யூதா ராஜாவின் சொத்தில் ஒருபகுதியும், இராஜ குல ஆண்மக்கள் அனைவரையும் சிறைக்கைதிகளாய் கொண்டு செல்லப்பட்டு, அவர்களுக்கு கல்தேய வழிமுறையில் பாடங்கள் கற்றுத்தரப்பட்டது, இதனிமித்தம் அவர்கள் கல்தேய ஆளுகைமுறைமையைக் கற்றுக்கொண்டு, பின்னாட்களில் அதிகமாய் வன்முறையிலும், கலகத்திலும் ஈடுபடா வண்ணம் தடை செய்வதாய் இருந்தது.

பிளாட்டோ வின் கூற்று மூலம் நாம் அறிந்து கொள்வது என்னவெனில், பெர்சியர்கள் இராஜகுல ஆண்மக்களுக்கு பதினான்கு வயது நிரம்பியோருக்கு கல்வி கற்றுக்கொடுத்து கல்தேய பழக்கவழக்கங்களை கைக்கொள்ளச்செய்வர், கிரேக்க சரித்திராசிரியர் க்ஸெனோபோன் நமக்குக் கூறுவது என்னவெனில், இவர்கள் 17 வயது வரை கல்வி கற்று கொடுக்கப்படுவர். இத்தகவல்கள் மூலம், தானியேல் மற்றும் அவரது நண்பர்கள் வயது குறித்து கணக்கிடப்பட்டு, அவர்கள் கி மு 605 ல் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டு போகப்பட்டனர் எனக்கணக்கிடப்படுகிறது. இஸ்ரவேலில் இராஜகுல பிள்ளைகள் சிறைபிடிக்கப்படுவர் என்பது 100 ஆண்டுகளுக்கு முன்னர் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனமாய் இருக்கிறது. ஏசாயா 39:5-7.

சில முக்கியமான கதாபாத்திரங்கள்:

நெபொபோலேசர்:

நெபொபோலேசர் என்பவர் புதிய பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தவர். கல்தேய சாம்ராஜ்ஜியம் ஐந்து முக்கிய பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டு, அவைகள் இவ்வாறு அழைக்கப்பட்டது. Bit Dakkuri, Bit Sa'alli, Bit Shilani, Bit Amukkani and Bit Yakin. அவைகளில் ஒன்றான Bit Yakin என்ற பிரிவானது, மிகவும் பிரபலம் வாய்ந்ததாய் விளங்கியது. அது அநேக அரசர்களையும், ஆளுநர்களையும் தேசத்திற்கு அளிப்பதாய் இருந்தது. அவர்களில் ஒருவன் பெரொதாக் - பலதான் (2 இராஜாக்கள் 20:12, மற்றும் ஏசாயா 39:1 வசனங்களில் குறிப்பிடப்படுவன்) இவன் அசீரிய சாம்ராஜ்ஜியம் கொடிகட்டி பிரபலமாய் இருந்த காலத்தில் அதற்கு எதிரியாய் செயலாற்றினான்.

நெபொபோலேசர் எந்தப்பிரிவை சேர்ந்தவன் என நாமறியோம், ஆனால் எல்லாக் கல்தேயப் பிரிவுகளையும் ஒன்று திரட்டி, கி.மு. 625 ல், அசீரிய சாம்ராஜ்ஜியத்துக்கு எதிராக கலகம் செய்தான். அவன் முதலாம் அரசனாய் பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தை ஆண்டான். இவன் கோரேஸ் [Cyaxares,] என்ற மேதிய, ஸ்கைத்திய [the Scythians] அரசனை இணத்துக்கொண்டு, கி.மு. 612 ல் நினிவேயை இறுதியாய் அசீரியரிடமிருந்து கைப்பற்றினான். இவ்வாறு அசீரிய சாம்ராஜ்ஜியம் அழிக்கப்பட்டு, சரித்திரத்தில் கல்தேய சாம்ராஜ்ஜியம் அதே பூகோள எல்லையில் ஸ்தாபிக்கப்பட்டது.

நெபுகாத்நேச்சார்.

நெபொபோலேசரின் மகன் நெபுகாத்நேச்சார், இவன் தனது தந்தைக்கு பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, கல்தேய சாம்ராஜ்ஜியத்திற்கு கி.மு.605ல் அரசனான். கேம்பிரிட் பல்கலை கலகத்தின் பண்டைய சரித்திரக்குறிப்புப்படி, Vol. III, p. 212, "நெபுகாத்நேச்சார் திடகாத்திரமான, புத்திக்கூர்மை மிக்க போர்த்தலைவனாய் விளங்கினான் மட்டுமின்றி சரீரப்பிரகாரமாகவும், மற்றும் மனோரீதியாகவும் மிகவும் பலசாலியாகவும் விளங்கினான். இவன் தனது தந்தை நெபொபோலேசருக்குப் பின் தகுதிவாய்ந்த அரசனாய் விளங்கினான். இவன் கிழக்கத்திய தேசத்தின் பிரசித்திப்பெற்ற இராணுவத் தலைவனாயும், தேசீயபற்றுடையவனாயும், கட்டிடக்கலைஞனாகவும் விளங்கினான்." விளங்கினான் எனக்கூறுகிறது.

இவன் உலக அளவில், பாபிலோனை மகிமைப் படுத்துபடி, கட்டுவதிலும், திரும்பக் கட்டுவதிலும், மிகவும் கரிசனை உள்ளவனாய் இருந்தான். இவன் மேதிய இளவரசியான, கேரேஸின் மகளாகிய அமிஹியாவை [Amyhia, daughter of Cyaxares,] மணந்து கொண்டான். இது வட இராஜ்ஜியத்தினிடமிருந்து தனக்கு மிகுந்த பாதுகாப்பைத் தேடிதருவதாய் இருந்தது. இவளுக்காய் உலகப்பிரசித்திப்பெற்ற (கிரேக்கர்களால் உலக அதிசயங்களில் ஏழாவதாய் கனிக்கப்பட்ட) தொங்கும் தோட்டத்தை நிர்மாணம் செய்தான். பாபிலோன் சரித்திரத்தில், சுமார் நாற்பத்து மூன்று ஆண்டு காலங்கள் ஆளுகை செய்து, மகிமையான பேரரசனாய் விளங்கினான். புதைபொருள் ஆராய்ச்சியும், கல்வெட்டுக்களும் புரதான இராஜாக்களில் இவன் பிரசித்திப் பெற்றவனாய் விளங்கினான் என்பதை உறுதி செய்கிறதாய் இருக்கிறது.

யோயாக்கீம்.

யூதேயாவின் மகத்தான அரசனான, யோசியாவின் இரண்டாம் மகன் யோயாக்கீம் ஆகும். நெபொபோலேசரின் காலத்தில் இவன் அசீரியர்களுடன் யுத்தம் செய்துவந்தான், பாலஸ்தீனத்தில் எகிப்தானது தனது முழு ஆதிக்கத்தையும் செலுத்த முயற்சித்து வந்தது. மெகிதோ யுத்தத்தில், எகிப்தின் இராஜாவாகிய, பார்வோன் நெகோவின் முன்னேற்றத்தை எதிர்த்த யோசியா,

வெட்டப்பட்டு மரித்த பின்னர், யோசியாவின் மற்ற குமாரனாகிய, யோவகாஸ் பட்டத்திற்கு வந்தான். (2 நாளாகமம் 35:20-25) பார்வோன் நெகோவிற்கு விரோதமாய் யோவகாஸ் கலகம் செய்தபோது, அவன் திரும்ப எருசலேமிற்கு வந்து, யோவகாஸை சிறைபிடித்து எகிப்திற்கு கொண்டு சென்று, யோயாக்கீமை அரியனையில் வைத்து தனக்குக் கப்பம் கட்டும்படி விட்டுச்சென்றான்.

தனது சகோதரனின் முடிவை அறிந்த யோயாகீம், [யோவகாஸ் சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்டு எகிப்தில் மரித்துப்போனான்] எகிப்தியருக்கு உண்மையுள்ளவனாய், எகிப்து இராஜாவை சேவித்து அவனுக்குக் கப்பம் கட்டிவந்தான், கி.மு. 606 ல் எருசலேமை நெபுகாத்நேச்சார் முற்றுகையிட்டபோது, யோயாக்கீம் எகிப்தின் பார்வோன் நெகோவை சேவித்து, கப்பம் கட்டிவந்தான். தானியேல் மற்றும் சில வாலிபரை நெபுகாத் நேச்சார் சிறைப்பிடித்து பாபிலோனுக்கு கொண்டு சென்றான். கி.மு. 598 வரை, யோயாக்கீன், எகிப்திற்குப் பதிலாக, கல்தேய சாம்ராஜ்ஜியத்திற்கு கப்பம் கட்டிவந்தான்.

ஏற்கனவே, யோயாக்கீம் எகிப்திற்குக் கப்பம் கட்டி வந்தபடியால், எகிப்து இராஜாவின் தூண்டுதலால், நெபுகாத்நேச்சாருக்கு விரோதமாய் கலகம் செய்தான். கி.மு. 598 ல் நெபுகாத்நேச்சார் எருசலேமுக்கு திரும்பி வந்து, யுத்தம் செய்து யோயாக்கீமைக் கொன்று போட்டான். எரேமியா தீர்க்கதரிசனம் சொன்னது போல, [எரேமியா 22:18-19.] எருசலேமை வெற்றிகண்டபின்னர், நெபுகாத்நேச்சார் புதைக்கப்பட்ட யோயாக்கீமை, தோண்டி எடுத்து, அவனது சரீரத்தை, தனது இராணுவ இரதத்தில் கட்டி இழுத்துச் சென்றானாம், அவனது சரீரம் சிதைந்து பாபிலோனுக்கு செல்லும் வழியில் இறைந்து கிடந்ததாம்.

கோனியா.

யோயாக்கீன் (இவன் எரேமியா 22:24ல் கோனியா என்றும், மத்தேயு 1:12ல் எக்கோனியா என்றும் அழைக்கப்படுகிறான்.). கி.மு. 598ல் யோயாக்கீம் பாபிலோனிய முற்றுகையின் போது, கொலை செய்யப்பட்ட பின்னர், அவனது குமாரன் யோயாக்கீன் 19 வது யூத இராஜாவாக, 100 நாட்கள் எருசலேமில் ஆளுகை செய்தான். இவன் இளம் வயதுள்ளவனாயும், மதியீனனுமாய் இருந்தான், எதிராளிகள் எருசலேமை முற்றுகையிட்டு யுத்தத்திற்கு வந்திருந்த போது, இவன் அந்தப்புரத்தில், உல்லாசத்தில் மகிழ்ந்து கொண்டிருந்தான். அவனது தாயார் அவனை பாபிலோனியருக்கு அடிபணிந்து ஒப்புக்கொடுக்குமாறு கெஞ்சிப்பார்த்தும், பலன் இல்லாமல் போயிற்று, இறுதியாக அவன் சிறைபிடிக்கப்பட்டு, அடிமைத்தனத்திற்கூடாக செல்ல நேரிட்டது.

நெபுகாத்நேச்சார் பட்டணத்தைக் கைப்பற்றிபோது, யெகோயாகீனை அரியனையிலிருந்து அகற்றி, மத்தனியாவை அவன் ஸ்தானத்தில் வைத்தான், இவன் யோசியாவின் மற்றொரு குமாரனாய் இருந்தான். இவனது பெயரை, சிதேக்கியா என்று மாற்றப்பட்டது. கோனியா தனது தாயாருடனும், தன்து

மனைவிமார்களுடனும், தன் வேலைக்காரருடனும், இளவரசியுடனும், பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்டான். அவன் முப்பத்தாறு ஆண்டுகள் சிறைவாசம் செய்தான். நெபுகாத்நேச்சாரின் மரணம் வரை இவன் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தான்.

எரேமியா 22:30 கோனியாவின் சாபமானது பதிவு செய்யப்பட்டுள்ளது. 2 இராஜாக்களின் புஸ்தகம் 24:9 அவன் செய்த தீமையானது பதிவு செய்யப்பட்டுள்ளது. அவன் வித்தானது யூதாவின் சிங்காசனத்தில் அரசாளப்போவதில்லை என தேவன் அவனோடு வாக்கு பண்ணியிருந்தார். இதினிமித்தம், இயேசுக்கிறிஸ்துவின் இயல்பான தகப்பன் யோசேப்பு, கோனியாவின் சந்ததியாய் இருந்தபடியால், அவன் இயேசுக்கு சட்டப்பிரகாரமான தகப்பனாய் இருக்கவில்லை. இதினிமித்தமே கிறிஸ்து கன்னிகைபிறப்பினால், இதை நிறைவேற்றினார்.

<u>பகுதி 1 - யூதேயாவின் சரிவும் எருசலேமின் வீழ்ச்சியும் 1:1-5.</u>

1 யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பாபிலோன் ராஜாவாகிய் நெபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து அதை முற்றிகை போட்டான். 2 அப்பொழுது ஆண்டவர் யூதாவின் இராஜாவாகிய யோயாக்கீமையும், தேவனுடைய ஆலயத்தின் பாத்திரங்களில் சிலவற்றையும் அவன் கையில் ஒப்புக்கொடுத்தார். அவன் அந்தப்பாத்திரங்களைச் சினேயார் தேசத்திலுள்ள தன் தவனுடைய கோவிலுக்குக் கொண்டுபோய் அவைகளைத் தன் தேவனுடைய பண்டசாலைக்குள் வைத்தான். 3 அப்பொழுது இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே ராஜகுலத்தாரிலும், துரைமக்களிலும் யாதொரு மாசும் இல்லாதவர்களும் அழகானவர்களும், சகல ஞானத்திலும் தேறினவர்களும், அறிவில் சிறந்தவர்களும், கல்வியில் நிபுணரும், இராஜாவின் அரண்மனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்களுமாகிய சில வாலிபரைக் கொண்டு வரவும், 4 அவர்களுக்கு கல்தேயரின் எழுத்தையும், பாஷையையும் கற்றுக்கொடுக்கவும் இராஜா தன் பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குக் கற்பித்தான். 5 இராஜா தான் உண்ணும் போஜனத்திலேயும் தான் குடிக்கும் திராட்சைஇரசத்திலும் தினம் ஒரு பங்கை அவர்களுக்கு நியமித்து, அவர்களை மூன்று வருஷம் வளர்க்கவும், அதின் முடிவிலே அவர்கள் இராஜாவுக்கு முன்பாக நிற்கும்படி செய்யவும் கட்டளையிட்டான்.

பிண்ணனியமும் பகுப்பாய்வும்

நெபுகாத்நேச்சார் எருசலேமுக்குள் நுழைதல்:

இந்த சரித்திர காலக்கட்டத்தில் மூன்று முறை எருசலேமிலிருந்து நாடுகடத்தப்பட்ட செயல் நிகழ்ந்தது. முதலாவது நாடுகடத்தல் கி மு 605ல் ராஜகுலத்தவர் நாடுகடத்தப்பட்டதை இங்கு நாம் காண்கிறோம். இரண்டாவது கி மு 506ல் நிகழ்ந்தது, இதில் எசேக்கியேலும் மற்ற ஆசாரியர்களும், இராணுவ அலுவலர்களும், கைவினைஞர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சிறைக்கைதிகளாய் நாடு கடத்தப்பட்டனர். இறுதி நாடுகடத்தலின் போது, எருசலேமானது முற்றுகையிடப்பட்டு சிலரை மாத்திரம் எருசலேமில் வைத்துவிட்டு 586 கி முவில் எருசலேம் முழுமையாக காலிசெய்யப்பட்டது. இரண்டாவது நாடுகடத்தலின் போது சங்கீதம் 119 உடன் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது, கி மு 586 ல் மீந்திருந்தவர்கள் இந்த சங்கீதத்தை எழுதவில்லை.

கர்கெமிஸ் யுத்தத்தில் நெபுகாத்நேச்சார் பார்வோன் நெகோவை திரும்ப எகிப்திற்கு துரத்திவிட்டு அவர் யுத்தத்திலிருந்து திரும்புகையில், மலையின் மீது அமையப்பெற்ற அழகிய பட்டணமாகிய எருசலேமைக் கண்டார். அவ்ரும் அவரது இராணுவமும் எருசலேமை சூழ்ந்து கொண்டு எருசலேமில் உள்ளவர்களை சரணடைய கேட்டுக்கொண்டனர். எருசலேமின் வாசல் அவருக்கு அடைபட்டிருந்த போது, குறுகிய யுத்தத்திற்கு பின்னர், நெபுகாத்நேச்சார் எருசலேமிற்குள் புகுந்து யோயாக்கீமை கைது செய்து, கிருபையாக அவனை இராஜாவாக அரியனையில் அமர்த்தினார்.

தானியேல் எரேமியா இவர்களின் கருத்து வேறுபாடும் மற்றும் கர்கெமிஸ் யுத்த காலமும்:

இப்புத்தகத்தின் முதல் அதிகாரம் முதல் வசனமானது இப்புத்தகத்திற்கு தாக்குதலை கொண்டுவருகிறதாய் இருக்கிறது. இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள சொற்றொடரே அதற்கு காரணமாய் இருக்கிறது, அது இவ்வாறு கூறுகிறது "யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருடத்திலே"

இதே கருத்தை எரேமியா கூறும் போதுள்ளகருத்து வேறுபாட்டை நாம் எரேமியா 46:2ல் காண்கிறோம். "எகிபதைக் குறித்தும், ஐபிராத்து நதியண்டையில் கார்கேமிசிலே இருந்தது பாபிலோ ராஜாவாகிய நெபுகாத்நேச்சார் யோசியாவின் குமாரனாகிய யோயாக்கீம் என்னும் யூதா ராஜாவின் நாலாம் வருஷத்திலே முறியடித்ததுமான பார்வோன்

நெகோ என்னப்பட்ட எகிப்து ராஜாவின் இராணுவத்தைக் குறித்தும் அவர் சொல்லுகிறது என்னவென்றால்.."

எரேமியாவில் யோயாக்கீமின் நான்காம் வருடத்தில் என்றும் தானியேல் 1:1ல் மூன்றாம் வருடத்தில் என இடம் பெறுவதைக் காண்கிறோம். இவைகளில் கருத்து வேறுபாடுண்டா? இது ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட இயல்புடைய வேதத்தில் கேள்வியை எழுப்புகிறதாய் இருக்கிறது.

இதற்கு அளிக்கப்படும் பதிலானது உண்மையிலே எளிதான ஒன்றாய் இருக்கிறது, யூதேயா தேசத்தில் இராஜாக்களின் ஆளுகையைக் கொண்டே வருடங்கள் கணக்கிடப்பட்டு வந்தது, பாபிலோனிய வழக்கப்படி அவ்வாறு கணக்கிடப்படாது இருந்தது. எரேமியா யூதா கண்ணோட்டத்தின்படி கண்ணோக்குகிறவராய் இருக்கிறார். அதே சமயம் தானியேலோ நெபுகாத்நேச்சார் தனது சூழலில், கல்தேய முறைமையின்படி கண்ணோக்குகிறவராய் இருக்கிறார். இதனிமித்தம் முறண்பாடு என்பது இதில் இல்லாதிருக்கிறது. தானியேல் "புறஜாதியாரின் காலம்" ஆரம்பமாவதை மனதில் கொண்டவராய் இதைக் குறிப்பிடுகிறார் என்பதை மனதில் கொள்ளுதல் வேண்டும்.

நெபொபோலேசரின் மரணம்:

நெபுகாத்நேச்சார் எருசலேமிலிருக்கும்போது, அவரது தந்தையாகிய நெபொபோலேசர் மரணமடைந்துவிட்டார் என்கிற செய்தியை பெற்றுக்கொண்டார். இதினிமித்தம் அவர் உடனடியாக பாபிலோன் திரும்ப அவருக்கு அவசியம் உண்டானது. அவர் எருசலேமை பிடித்தும் அதின்மீது தனது ஆதிக்கத்தை நியமிக்க இயலாதவாறு அது தடையாக அமைந்தது. இதினிமித்தம் பெயரளவுக்கு ஒரு இராஜா அவருக்கு அவசியமானது. இவ்வாறு பெயரளவுக்கு இராஜாவாய் இருக்கு அந்தஸ்தை யோயாகீம் விரும்பாமல் அவர் கலகம் செய்தார். இதனால் இவர் அரச பதவியை இழக்க நேரிட்டு, கோனியாவுக்கு மாற்றி கொடுக்கப்பட்டது, கோனியாவின் சாபமானது அவனது வீட்டாரின் மீது நியாயத்தீர்ப்பாய் அமைந்தது, அவனது தகப்பனாகிய சாலமோனின் பெலவீனமானது அவகளை மேற்கொள்ள தாவீதின் பெலத்தில் அவர்கள் மேற்கொள்ள இயலாது போனது.

யோயாக்கீம் எகிப்திய பார்வோன் மீது வைத்த நம்பிக்கையானது நெபுகாத்நேச்சாரை வியக்க வைத்தது. இதினிமித்தம் நெபுகாத்நேச்சார், யோயாக்கீமை யூத சிம்மாசனத்திலிருந்து அகற்ற தீர்மானித்தார். எப்படியிருப்பினும் நெபுகாத்நேச்சார் யோயாக்கீம் கல்தேய

சாம்ராஜ்ஜியத்திற்கு உண்மையாய் இருக்க ஞானமாய் முயன்று பார்த்தார். யூதர்கள் தான் சென்றுபொனபின்பு திரும்ப கலகம் செய்யாதிருக்க பார்த்துக் கொண்டார். நெபுகாத்நேச்சார், அஸ்பனேசுக்கு கட்டளைக் கொடுத்து, அரச குடும்பத்திலும், ஆசாரியர்களிலும் சிறைக் கைதிகளாக சிறையாக்கிக் கொண்டுவர கட்டளையிட்டார். இது யோயாக்கீமை இரட்சிப்பதாய் இல்லை, இது தானியேலையும் அவரது நண்பர்களையும் இரட்சிப்பதாய் அமைந்தது, மற்றும் கல்தேய சாம்ராஜ்ஜியத்தை இரட்சிப்பதாய் அமைந்தது. ம்திில்களால் சூழப்பட்ட அழகிய பட்டணத்தை நெபுகாத்நேச்சார் க்வர்ச்சி மட்டும் அடையவில்லை. அதைக் குறித்து செல்வ கொழிப்பைக் கூறித்தும் நினைவு கூறுகிறவனாய் காணப்பட்டான். எசேக்கியா இராஜா மிகவும் துடுக்காக எருசலேமின் அனைத்து செல்வங்களையும் பரோதாக் பலதானுக்கு திறந்து காட்டினான் என்பதை 2 இராஜாக்கள் 20:12-15ல் காண்கிறோம். முதன் முறையாக எருசலேம் பட்டணம் கி மு 605ல் தனக்கு அடிபணிந்த போது அவன் இச்செல்வங்கள் அனைத்தையும் கைப்பற்றினான். அவன் மதியீன அரசனை சோதிக்கும்படி கொஞ்சம் செல்வத்தை விட்டுச் சென்றான், இச்செல்வத்தை எகிப்திய இராஜாவுக்கு இலஞ்சமாய் அளித்து தன்னுடன் பாபிலோனுக்கு எதிராய் கலகம் செய்ய அவனது ஒத்தாசையை நாடினான்.

தெய்வீக தேசங்களுக்கான முறட்டாட்டத்திற்கு, தெய்வீக சிட்சையின் ஐந்து படிகள்:

இஸ்ரவேல் தேசத்திற்கான சிட்சையின் ஐந்து படிகளான சிட்சையை லேவியராகமம் 26ல் காணமுடியும். லேவியராகமம் 26 ம் அதிகாரம் வசனங்கள் 14-17ல் முதல் கட்டமான சிட்சை விவரிக்கப்பட்டுள்ளது. வசனங்கள் 18-20 ல் இரண்டாம் கட்ட சிட்சை விவரிக்கப்படுகிறது. வசனம் 21-22ல் மூன்றாம் கட்ட தேவனது சிட்சையானது விவரிக்கப்படுகிறது. இது இதைத் தொடர்ந்து மும்முரமாய் வரும் ஒவ்வொரு சிட்சைகளையும் காட்டுகிறதாய் இருக்கிறது. ஒவ்வொரு கட்ட சிட்சையும் கிருபை பொருந்தினதாய் இருக்கிறது, ஒவ்வொரு படியும் எடுத்து வைக்கும்போது நுண்கூறுகளாய் விளங்குகிறது. எந்த கட்டத்திலும் ஜனங்கள் மனந்திரும்புவதற்கான தருணமானது எதிர்பார்க்கப்படுவதாய் இருந்தது. கொடிய வருத்தத்தை அளிப்பது என்னவென்றால், யூதா தேசத்தினர் மனந்திருந்தாது இருந்ததாகும், இது இஸ்ரவேல் கி மு 721ல் மனந்திரும்பாது இருந்ததைப் போல இருந்தது.

நான்காவது கட்ட சிட்சையின் போது (வசனங்கள் 23-26) தேசமானது அந்நியரின் ஆதிக்கத்திற்குள்ளாய் விழுந்து போனது, ஐந்தாவதாய்

(வசனங்கள் 27-39) தேசமானது சிதறடிப்பிற்குள்ளாய் சென்றது. வட இராஜ்ஜியமான சமாரியா, ஏற்கனவே இறுதி கட்ட சிட்சையில் அசீரியர்களால் கி மு 721ல் கடந்து சென்றதாய் காணப்படுகிறது.

இங்கு தெற்கு இரஜ்ஜியமாகிய யூதேயா கல்தேயர்களுக்குள் சிதறடிக்கப்படுகிறதாயும், அந்நியரின் ஆதிக்கத்திற்குக் கீழ் கி மு 586ல் கடந்து ஐந்தாவது சிட்சைக்குள்ளாகிறதாகிறது.

தெற்கு இராஜ்ஜியத்தின் சிதறிக்கப்படுதல்:

இஸ்ரவேல் சிதறடிக்கப்பட்டதற்கான முக்கிய காரணம் என்னவென்றால், கி மு 687 ற்கும் 642ற்கு இடையே அரசாண்ட மனாசே அரசனால் அனுசரிக்கப்பட்ட தீமையான மரபுரிமையை பின்பற்றினதாகும். அவன் கொடுங்கோள் அரசனாய் அரசாண்டான், அவன் ஏசாயா தீர்க்கதரிசியை வாளால் இரு துண்டாய் அறுத்து கொலை செய்தான் எனக்கூறப்படுகிறது. இதன் விளைவாக சிதறடிக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது. நல்ல பக்தியுள்ள இராஜாவாகிய யோசியாவால், கொஞ்சகாலம், இது கால தாமதமானது, யுத்தத்தில் இவரது மரணத்திற்குப் பின்பு அவரது பின்னடியார்கள் முற்றிலுமாய் சுயத்தை மையமாய் கொண்டு/ தீமை செய்கிறவர்களானார்கள். 2 நாளாகமம் 36:11-16.

உண்மை என்னவெனில், தேவன் இந்தப்பிரகாரமாய் யூதாவிற்கு சிட்சை அளிக்கிறவராய் இருக்கிறார். **2 இராஜாக்கள் 21:1016. "***ஆகையால் கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு உரைத்தது: 11 யூதாவின் இராஜாவாகிய மனாசே தனக்கு முன்னிருந்த எமோரியர் செய்த எல்லாவற்றைப் பார்க்கிலும் கேடாக இந்த ஆருவருப்புகளைச் செய்து தன் நரகலான விக்கிரகங்களால் யூதாவையும் பாவஞ்செய்யப்பண்ணினபடியிலனால், 12 இஸ்ர்வேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இதோ கேட்கப்போகிற யாவருடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக் கொண்டிருக்கும்படியான பொல்லாப்பை நான் எருசலேமின் மேலும் யூதாவின் மேலும் வரப்பண்ணி, 13 எருசலேமின்மேல் சமாரியாவின் மட்டநூலையும், ஆகாப் வீட்டின் தூக்கு நூலையும் பிடிப்பேன், ஒருவன் ஒரு தாலத்தைத் துடைத்துப் பின்பு அதைக் கவிழ்த்துவைக்கிறது போல எருசலேமைத் துடைத்துவிடுவேன். 14 அவர்கள் தங்கள் பிதாக்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து எனக்குக் கோபம் மூட்டிவந்தபடியால், என் சுதந்தர்த்தில் மீதியானதைக் கைவிட்டு, அவர்கள் பகைஞரின் கையில் அவர்களை ஒப்புக்கொடுப்பேன்.15 தங்கள்*

பகைஞருக்கெல்லாம் கொள்ளையும் சூறையுமாய்ப் போனார்கள் என்றார். 16 கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யும்படியாக, மனாசே யூதாவைப் பாவஞ்செய்யப்பண்ணின அந்தப் பாவமும் தவிர, அவன் எருசலேமை நாலு மூலைவரைக்கும் இரத்தப்பழிகளால் நிரப்பத்தக்கதாய் குற்றமில்லாத இரத்தத்தையும் மிகுதியாகச் சிந்தினான்."

எரேமியா கி மு 627ல் பிரசங்கிக்கத் தொடங்கினார் மற்றும் அவர் நாற்பது ஆண்டுகாலம் பிரசங்கித்தார், தேவனின் கிருபை பொருந்தின எச்சரிப்பை அறிவிக்கிறவராய் இருந்தார். யூதர்கள் சிதறிக்கப்படுகிறவரை இதை அவர் செய்தார். இவர் கல்தேய மன்னனான நெபோபொலேசர், நெபுகாத்நேச்சாரின் தந்தை, நிர்மூலமாக்குகிற இராணுவத்தை ஏற்படுத்தி வடகிழக்கில் உள்ள் அசீரீயருக்கு விரோதமாய் அனுப்பி கி மு 612ல் அவர்களை முற்றிலும் அழித்து வெற்றிகண்ட போது இவர் பிரச்ங்கம் செய்கிறவராய் விளங்கினார். அசீரியருக்கு, தேவனின் அழிவின் கருவியாக பயன்படுத்தப்பட்ட வல்லமை நிறைவுக்கு வந்தபோதும், அதே புறஜாதிய ஆதிக்கம் யூதாவின் அழிவுக்கும் காரணமாய் அமைந்தது.

பாபிலோனியருக்கும் மற்றும் அசீரிய - எகிப்திய சாம்ராஜ்ஜியங்களுக்கிடையே நடந்த யுத்தத்தில், யூதேயாவின் இராஜாவாகிய யோசியா தவறான முயற்சியில் அவர்களை அச்சுருத்த முயன்றபோது, இவர் மெகிதோவில் கொலை செய்யப்பட்டார். **2 இராஜாக்கள் 23:29.** "அவன் நாட்களில் எகிப்தின் இராஜாவாகிய பார்வோன்நேகோ அவனை மெகிதோவிலே கண்டபோது அவனைக் கொன்று போட்டான்." யோசியாவின் குமாரர்களில் ஒருவனான யோவகாஸ் அவனக்கு பதிலாய் அரியணையில் அமர்த்தப்பட்டான் இருப்பினும் பெலவீனத்தாலும்/வழிவிலகிச்செல்லும் குணத்தாலும் பார்வோன் நெகோ, இவனுக்குப்பதிலாய் யோயாக்கீமை இராஜாவாய் ஏற்படுத்தினான்.

அதைத்தொடர்ந்து, பார்வோன் நெகோ கார்கெமிஸ் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட பின்னர், வியாபார மார்க்கத்தில் மையமாய் அமையப்பெற்றிருந்த எருசலேமிற்கு கி மு 606/605ல் நெபுகாத்நேச்சார் வந்து, சாலமோன் ஆலயத்திலும் அரண்மனையிலும் இருந்த விலையேறப்பட்டவைகளை எடுத்துக் கொண்டு பாபிலோன் சென்றான். இதில் தேவாலயத்தில் இருந்த பானபாத்திரங்களும் உள்ளடங்கும், இவைகள் பெல்ஷாத்சாரின் விருந்தின் போது பயன்படுத்தப்பட்டது, அச்சமயம் தானியேல் 5 ம் அதிகாரத்தில் இடம் பெற்ற கையுறுப்பு சுவற்றில் எழுதியது நிகழ்ந்தது.

வசனம் 2ல் நெபுகாத்நேச்சார் தேவாலய பானபாத்திரம் அனைத்தையும் அகற்றவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எரேமியா 27:19-20 ல் உறுதி செய்யப்பட்டுள்ளது, அதில் கூறப்படுவது அவன் தேவாலயத்தின் பாத்திரங்கள் ஒரு பகுதியை மட்டும் எடுத்துச் சென்று, தனது கல்தேயரின் கடவுள்கலில் பிரதான கடவுளாகிய மர்துக் என்னும் கடவுளின் ஆலயத்தில் வைத்தான் மற்றும் தேவாலயத்தில் கொள்ளையிட்ட வெள்ளியையும் பொன்னையும் அவன் தனது புறஜாதிய ஆலயத்தில் கொண்டு சென்று வைத்தான்.

சிநெயார் ;என்கிற இடத்திலே பாபிலோன் கோபுரமானது கட்டப்பட்டது மற்றும் மனித இராஜ்ஜியமானது முதலாவது உருவெடுத்த இடமாய் விளங்குகிறது. இந்த கலாச்சாரத்திலிருந்தே ஆபிரகாம் ஆவிக்குரிய கலாச்சாரத்திற்கு அழைக்கப்பட்டார். தற்போது அவர் வெளிவந்து 1400 ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது ஆவிக்குரிய கலாச்சாரமும், வேதவசனமும் முதன்முறையாக பாபிலோனுக்குள் கொண்டு செல்லப்பட்டது குறிப்பிடத் தக்கதாய் இருக்கிறது.

வசனம் 3ல் குறிப்பிட்ட பிள்ளைகள் குறிப்பிடப்படுகின்றனர். இது ஏசாயா 39:6-7 ன் தீர்க்கதரிசன நிறைவேறுதலாய் இருக்கிறது "6 இதோ, நாட்கள் வரும். அப்பொழுது உன் வீட்டில் உள்ளதிலும், உன் பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல், எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டுபோகப்படும். 7 நீ பெறப்போகிற உன் சந்ததியாகிய உன் குமாரரிலும் சிலர் பாபிலோன் இராஜாவின் அரமனையிலே அரமனை வேலைக்காரராய் இருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்."

இவ்வாறு நெபுகாத்நேச்சார் இராஜ குலமக்களில் சிலரை தன்னுடன் எடுத்துச் சென்றான், இதினிமித்தம் யூதாயாவின் இராஜா தன் ஆணையை மீறாவண்ணம் இருக்க வகை செய்தான், இருப்பினும் யூதேயா இராஜா இவ்வுண்மையை காணமறுத்தவனாய் புத்தியீனமாய் நடந்து கொண்டு கலகம் செய்தான். தானியேல் பாபிலோன் எடுத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவனாய் இருந்தார். கி.மு 598/7ல் பாபிலோனியர்கள் எருசலேமிற்கு வெளியே திரும்ப வந்து, யோயாக்கீம் நெபுக்காத்நேச்சாரின் ஆணைய மீறிநடந்ததைக் கண்டனர். அந்த சந்தர்ப்பத்தில் எடுத்துச் செல்லப்பட்டவர்களில் எசேக்கியேலும் ஒருவர் அவருடன் அலுவலரும், கலைஞர்களும் அவர்கள் குடும்ப சகிதம் கொண்டு செல்லப்பட்டனர். பாபிலோனியர் இறுதியாய் கி மு 586ல் திரும்ப வந்து, எருசலேமில் மீந்திருந்த அனைவரையும் சிறைப்பிடித்து, பட்டணத்தை முற்றிலுமாய் இடித்து அழித்து சின்னாபின்னமாக்கினர்.

தானியேல் 1:4ல் பிரதானிகளின் தலைவன் என்பதன் பொருள், பெரிய அல்லது வல்லமை பொருந்திய என்பது பொருள்படும், அஸ்பனோசு பாபிலோனிய அரசு அந்தஸ்தில் மிகவும் உன்னத பதவி வகிப்பவனாய் இருந்தான். சிறைக் கைதிகளில் தெரிவு செய்து பயிற்சி கொடுக்கும் உத்தியோகம் அவனுக்களிக்கப்பட்டது. சரித்திரம் சுட்டிக்காட்டுவது என்னவெனில், தானியேல் மற்றும் அவனது பெயரிடப்பட்ட மற்ற மூன்று சிநேகிதர்கள் மட்டுமின்றி, முதலாவது நாடுகடத்தலின் போது 100க்கும் அதிகமான வாலிபர் நாடுகடத்தப்பட்டனர் எனக்கூறுகிறது.

இப்படிப்பட்ட வாலிபரை கொண்டு செல்வதற்கான அடிப்படைக் கருத்து என்னவெனில், கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் தலைசிறந்த த்லைவர்களாய் இவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காகும். ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, பிளாட்டோ நமக்கு கூறுவது என்னவெனில், கல்தேயர்களை தொடர்ந்து வந்த பெரிசியர்கள், சிறைபிடிக்கப்பட்ட இராஜகுலத்தவர்களுக்கு பயிற்சி அளிக்கத் துவங்கினர், 14 வயது முதற்கொண்டு 17 வயது இப்பயிற்சியை தொடந்தனர். தானியேலும் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டுபோகப்பட்டபோது 13 லிருந்து 19 வயதுக்குட்பட்ட வாலிபராய் இருந்திருக்க வேண்டும் என கருதப்படுகிறது.

வசனம் 4ல் இராஜாவின் அடிமைகளில் தெரிவு செய்தலைக் காண்கிறோம். சிறைக்கைதிகளில் சில தகுதிகளை அவர்களைச் சந்திக்கும் போது விதிக்கப்பட்டது.

1. **யாதொரு மாசும் இல்லாதவர்கள்:** இதன் பொருள் என்னவெனில், சிறைபிடிக்கப்பட்டவர்களில், வெளிப்பிரகாரமான சரீரத் தோற்றத்தில் எவ்வித குறைபாடும் இல்லாதவர்களாய் இருத்தல் வேண்டும்.

2. **அழகானவர்கள்:** அவர்கள் சரீரப்பிரகாரமாய் அழகுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

3. **சகல ஞானத்திலும் தேறினவர்கள்:** இது சிறையாக பிடிக்கப்பட்டவர்கள், மிகவும் புத்திக்கூர்மையுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

4. **அறிவில் சிறந்தவர்கள், கல்வியில் நிபுணர்:** பெரிசியர்களைப் போன்றே கல்தேயர்களும் வானசாஸ்திரம், விஞ்ஞானம் போன்றவற்றில் மிகவும் முன்னேறியிருந்தனர். சிறைக் கைதிகளான வாலிபரும் விஞ்ஞான ரீதியாய் அறிவில் தேறினவர்களும், அதில் ஆர்வமுள்ளவர்களாய் இருக்க எதிர்பார்க்கப்பட்டனர்.

5. **இராஜாவின் அரண்மனையிலே சேவிக்கத் திறமையுள்ளவர்கள்:** சிறைபிடிக்கப்பட்ட வாலிப கைதிகள் இராஜ மரியாதையுடன் நடந்து கொண்டு, சமநிலையிலிருக்கவும், நல்லொழுக்கப்பண்பாட்டுடன் நெபுகாத்நேச்சாரின் அவையில் நடந்து கொள்ள தகுதியுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட வாலிபருக்கு கல்தேய மொழியானது (அரமேயு பாஷை) கற்றுக்கொடுக்கப்பட்டது, மற்றும் அவர்களது கலாச்சாரம் மற்றும் அவர்களது மொழி போன்றவைகள் அவர்களுக்கு கற்றுத்தரப்பட்டது.

அவர்களது போதனாமுறைமை அப்போஸ்தலர் 7:22க்கு இணையாய் இருந்தது, புறஜாதிய அரச அவையில் மோசே நுழைந்தபோது, அவனது கற்றுகொண்டதன் தனித்தன்மையானது விளங்குவதாய் இருந்தது.

அவர்களுக்களிக்கப்பட்ட போதனையானது வெற்றிகரமாய் அமைந்தது, இது அக்காலத்தில் கிடைக்கப்பெற்ற களிமண் கற்பலகை மூலம் தெரியவருகிறதாய் இருக்கிறது, 50 ஆண்டுகாலங்களுக்குள் வியாபார செயல்பாடுகள் விருத்தியடைந்ததோடு, வங்கியானது யூதரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அவர்கள் எல்லாவற்றிலும் வெற்றிகரமான வாழ்வு செய்தனர். இது ஒரு விசுவாசி எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும் அவர்கள் கர்த்தரின் வழிகளைத் தேடி அதன்படிநடப்பது அவர் எல்லாவற்றிலும் வெற்றிவாகை சூட வழிவகுக்கிறதாய் அமையும்.

இப்படிப்பட்ட வாலிப கைதிகள் குறித்த கருத்து என்னவெனில், அவர்கள் இராஜாவிற்கு முன் அறிவுரை வழங்குகிறவர்களாய் நின்றனர். தானியேல் 1:19. மிக ஆழமான நிலையில் பாபிலோனியர்கள் அவர்களது யூததன்மையை அகற்றிவிட முயன்றனர். இதை அவர்கள் நான்கு நண்பர்களிடம் செயல்படுத்த முயன்றபோது அவர்கள் தோல்வியை தழுவினர்,

கைக்கொள்ளுதல்

தேவன் இரு தேசத்தாரையும் மற்றும் தனிநபரையும் சிட்சித்தார். ஓசியா 4:6. "என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள், நீ அறிவை வெறுத்தாய் ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன், நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்."

ஒரு தேசம் மிகவும் மோசமான நிலையில் உபத்திரவப்படும்போது, தேவன் இன்னும் இரக்கத்தையும், பராமறிப்பையும், கரிசனையையும் அவரோடு ஐக்கியப்படுகிறவர்களுக்குக் காட்டுகிறவராய் இருக்கிறார்.

அவர்கள் சிறைவாசத்திலிருந்து விடுதலை பெற்றபின்னர், இஸ்ரவேலர் ஆசீர்வதிக்கப்பட்டனர், பகைமைக்குள் ஜனங்கள் இருந்தபோதும் தங்களை தேவனது வார்த்தைக்கிசைய சரிசெய்து கொண்டனர். அவர்கள் பகைமை நிறைந்த சூழலில், தேவன் மீது மறு கண்ணோட்டம் செய்கிறவர்களாய் இருந்தனர், யோனாவின் காலத்தில் அசீரியர் மீது அவர்கள் கண்ணோட்டம் இருந்தது.

தேவன் புறஜாதிய வல்லமைகளை தமக்கு சொந்தமானவர்களை சிட்சிக்கப்பயன்படுத்தினார், தமக்குரியவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவதை அறியாதிருந்தபோது அவ்வாறு செய்தார்.

தேவன் தமது ஜனங்கள் தம்மிடம் திரும்பாதபட்சத்தில், புறஜாதிய தேசங்களைக் கொண்டு தமது ஜனத்தை ஒடுக்கினார் cf அசீரியா கி மு 612ல்.

தேவன் இரு தரப்பில் உள்ள தனிநபர்களையும் மற்றும் தேசத்தினரையும் காலா காலங்களில் சிட்சிக்கிறவராய் இருந்தார். - ஓசெயா 4:6, தானியேல் 1:2.

உபதேசங்கள்

NEBUCHADNEZZAR - PRIDE நெபுகாத்நேச்சாரின் - பெருமை

JERUSALEM எருசலேம்

EDUCATION AND LEARNING கல்வியும் மற்றும் கற்றுக்கொள்ளுதலும்

தானியேல் 1 :6-14

<u>பகுதி 2 - தானியேல் தேவனுக்கு உண்மையாய் இருக்கத் தீர்மானித்தல் 1:6-14.</u>

"6 அவர்களுக்குள் யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் இருந்தார்கள். 7 பிரதானிகளின் தலைவன், தானியேலுக்கு பெல்தெஷாத்சார் என்றும், அனனியாவுக்கு சாத்ராக் என்றும், மீஷாவேலுக்கு மேஷாக் என்றும், அசரியாவுக்கு ஆபேத்நேகோ என்றும் மறு பெயரிட்டான். 8 தானியேல் இராஜாவின் போஜனத்தாலும், அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டி கொண்டான். 9 தேவன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனிடத்தில் தயவும் இரக்கமும் கிடைக்கும்படி செய்தார். 10 பிரதானிகளின் தலைவன் தானியேலை நோக்கி: உங்களுக்குப் போஜ்னத்தையும் பானத்தையும் குறித்திருக்கிற இராஜாவாகிய என் ஆண்டவனுக்கு நான் பயப்படுகிறேன். அவர் உங்களோடொத்த வாலிபரின் முகங்களைப் பார்க்கிலும் உங்கள் முகங்கள் வாடிப்போனவைகளாகக் காணவேண்டியதென்ன? அதினால் இராஜா என்னைச் சிரச்சேதம் பண்ணுவாரே என்றான். 11 அப்பொழுது பிராதானிகளின் தலைவனாலே, தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்கள் மேல் விசாரிப்புக்காரனாக மேல்ஷார் என்பவனைத் தானியேல் நோக்கி: 12 பத்து நாள் வரைக்கும் உமது அடியாரை சோதித்துப் பாரும். எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, 13 எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும். பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான். 14 அவன் இந்தக் காரியத்திலே அவர்களுக்குச் செவி கொடுத்து, பத்து நாளளவும் அவர்களைச் சோதித்துப்பார்த்தான்."

பிண்ணனியமும் மற்றும் பகுப்பாய்வும்:

வலுகட்டாய உபதேசமளித்தல்:

வலுக்கட்டாய உபதேசமளித்தல் என்பது நவீன கால இயல்பு காரியமாயிருக்கிறது என எண்ணுகிறவர்களாயிருக்கிறோம், இத்தகைய காரியங்கள் 20 ம் நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தும், இது 2600 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஒன்றாய் இருக்கிறது. இங்கு அவர்களது தேசிய பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டு, பாபிலோனிய பெயர்கள்

அவர்களுக்குச் சூட்டப்படுவதைக் காண்டிறோம். மறுபெயர் சூட்டப்பட்ட இந்நான்கு அடிமை வாலிபரின் பெயர்கள் வெகு வலுவான உபதேச அர்த்தமுடையதாய் இருக்கின்றன. இந்நான்கு வாலிபரின் மறுபெயர்கள் யுகங்களாய் சாத்தானின் கொள்கைகளை விவரிக்கின்றனவாய் இருக்கின்றன.

தானியேல் என்பதன் பொருள் "தேவன் நியாதிபதியாய் இருக்கிறார்" இது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நமது பாவங்களுக்காக நியாயந்தீர்க்கப்பட்டதை சுட்டிக்காட்டுகிறது. மற்றும் தம்முடையதல்லோரை அவர் நியாந்தீர்க்கப்போவதை நினைவுபடுத்துகிறதாய் இருக்கிறது. வெளிப்படுத்தல் 20:11-15.

தானியேல் சிறைக்கைதிகளில் பெரியவனாய் இருந்தான். இவன் நோவாவுடனும், யோபுடனும் ஒப்பிடப்படுகிறான். எசேக்கியேல் 14:14. இதினிமித்தம் இவன் பெல்ஷாத்சார் என மறு பெயரிடப்படுகிறான் இதன் பொருள் பெல் என்ற தேவனின் இளவரசன் ஆகும், பெல்லு என்ற அக்காடிய தெய்வம் பெல் ஆக இருந்தது. இது பலதெய்வங்களில் முதன்மையான தெய்வமாய் ஜீயஸுக்கு சரிசமமாய் கருதப்படுகிறது. புறஜாதிய தேவர்களுள் இது கோபப்படுகிற வல்லமை மிக்க தலைமை தெய்வமாய் கருதப்படுகிறது. இரண்டாவது வாலிபன் அனனியா என்பதன் பொருள், "கர்த்தர் கிருபையுள்ளவர்" இவரது பெயரானாது தேவனின் குணாதிசயத்தை வலியுறுத்துகிறதாய் இருக்கிறது. இவனுக்கு சாத்ராக் என்ற பெயர் சூட்டப்பட்டது - சூரியக்கடவுளால் உண்டாகும் பிரகாசம் என்பது இதன் பொருள்.

மீஷாவேல் என்பதன் பொருள், "கர்த்தர் யார்? கர்த்தர் என்றால் என்ன?" எந்த ஒரு கிருபையின் திட்டமும், பூரணமான திட்டமானது, பூரணமான அன்பில் உருவாக்கப்பட அவசியமானதாய் இருக்கிறது. மீஷாவேல் மேஷாக் என மறுபெயர் சூட்டப்பட்டான் இதன் பொருள் "இஸ்டார் அல்லது வீணஸ் என்றால் என்ன அவர்கள் யார்?" இவர்கள் பெண்தேவதைகளாய் இருந்து பாலியலை சுட்டிக்காட்டும் தெய்வங்களாய் இருக்கின்றனர், சிருஷ்டிகரைச் சுட்டிக்காட்டுவதற்குப் பதிலாக இன்பம் நுகர்கதல் மற்றும் இச்சைகளை வெளிப்படுத்தல் போன்ற கண்ணோட்டமுடையவர்களாய் இருக்கின்றனர்.

இறுதியாக அசரியா இதன் பொருள், "கர்த்தர் என் துணையாளர்" இதன்படி எப்பொழுதும் நமக்கு கர்த்தரின் உதவியும் மற்றும் பெலனும் அவசியமாய் இருக்கிறது என்பதை உணருகிறவர்களாய் இருக்கிறோம். இவன் ஆபெத்நேக்கோ என மறுபெயரிடப்பட்டான். - கல்வி தெய்வத்தின் சேவகன் என்பது இதன் பொருள். இது கல்வியே உதவியின் ஆதாரமாய் இருக்கிறது எனச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட

பெயர்கள் தானியேலில் தொடர்ந்து கொடுக்கப்படுவதைப் பார்க்கிறோம். தானியேல் 2:26, 4:8, 5:12.

இப்பெயர்களை ஒன்று சேர்த்து பார்க்கும்போது நான்கு அடிப்படைக் கருத்துக்கள் அடங்கிய சாத்தானின் கொள்கையாய் விளங்குகிறது. அவர்களது நான்கு பெயர்களும் நமக்கு கூறுவது. இராஜா வல்லமையுடனிருக்கிறார் எனக்கூறுகிறது. அண்டசராரம் (சூரியன்) இருப்பது உங்களது உள்ளான ஒளியை அதிலிருந்து எடுத்துக் கொள்வதற்காகவே. உங்கள் இருதயத்தை பாலியல் சிற்றின்பங்களினால் நிரப்புங்கள். கல்வி என்பது மற்றும் திறமையை கட்டியெழுப்புவது என்பது உலகில் உங்கள் இடத்தை கண்டு கொள்ள வகை செய்கிறதாய் இருக்கிறது. இந்த வாலிபரின் இயல்பான பெயர்கள் இப்படிப்பட்ட மாற்றங்களுடன் பிரதிபளிப்பதாய் இருக்கிறது.

உபதேசங்களைக் கைக்கொள்ளுதல்:

தானியேல் தங்களுக்களிக்கப்பட்ட உணவுபதார்த்தங்களைப் பார்த்தபோது, அவைகள் மோசேயின் நியாப்பிரமாணத்தை உறுதி செய்வதாய் இல்லை. அவைகள் தங்கள் புதிய பெயருக்கேற்றவாறு தொழுது கொள்ளுதலை உள்ளடக்கியதாய் இருந்தது இதினிமித்தம் தானியேல் மரக்கறிகளை மட்டும் உட்கொள்ளும்படிக்கு கேட்டுக்கொண்டான். அவ்வாறு கேட்டுக்கொண்டது பிரதாணிக்கு பெரிய இடர்பாடாய் இருந்தது, காரணம் அது நெபுகாத்நேச்சாரின் கட்டளைக்கு விரோதமாய் இருந்தது, பிரதாணியானவன் பத்து நாள் சோதனை செய்து பார்ப்பதற்கு சம்மதித்தான், அது தேவனது வார்த்தையைக் கனப்படுத்துவதாய் இருந்தது, விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட அசைவ உணவை மறுப்புதாய் இருந்தது. 1 கொரிந்தியர் 10:19-23.

மூன்று வருடங்கள் இறுதியில் அந்த நான்கு வாலிபரும் பயிற்சியை வெற்றிகரமாய் முடித்து தேர்வு பெற்றனர் அவர்கள் கல்தேய அரசாங்கத்தில் உயர் பதிவி வகிக்க தெரிவு செய்யப்பட்டனர். இது கி மு 602 ல் நிகழ்ந்தது, இவ்வதிகாரத்தின் கடை சி வசனத்தை பார்க்கும் போது, பெரிசிய சாம்ராஜ்ஜியத்தின் ஆரம்பம் வரை கி மு 538 அல்லது 535 கி மு வரை அவர்களது பதவி தொடர்கிறதாய் காணப்படுகிறது. தானியேலின் பதவி உயர்வடையவிருப்பதையும் காண்கிறோம்.

ஞான ஆகமாகிய தானியேல் புத்தகம்:

தானியேல் புத்தகமானது வேதாகமத்தில் தீர்க்கதரிசன ஆகமங்களின் தொகுப்பில் இடம்பெறாமல், சரித்திர ஆகமங்கள் தொகுப்பில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. தீர்க்கதரிசன வழியில் தானியேலில் அதிகம் அடங்கியிருந்த போதும், இதன் அடிப்படை நோக்கம் மனித இராஜ்ஜியத்தில்/ சாத்தானின் இராஜ்ஜியத்தில் ஞானத்தை அதிகரிப்பதாய் இருக்கிறது. தானியேல் 1 ம் அதிகாரத்தில் வாலிபர்கள் புறஜாதிய அரசியலில் நுழைவதப் பார்க்கிறோம். இந்த தொகுப்பில் தானியேல் புத்தகமானது ஞான ஆகமமாய் காட்சி அளிக்கிறது. இக்கால கட்டத்தில் நாம் தேவனது இராஜ்ஜியத்தில் வாழாதபடிக்கு, மனித இராஜ்ஜியத்தில் வாழுகிறவர்களாய் இருக்கிறோம். ஆகையால் நாம் பிரச்சனைகளை சந்திக்கிறவர்களாய் இருக்கிறோம், இக்காலக் கட்டத்தில் சாத்தான் இவ்வுலகத்தின் அதிபதியாய் இருக்கிறான். இப்படிப்பட்ட வாலிபர் புறஜாதிய பெயர் களை பெற்றுக்கொள்ள வற்புறுத்தப்படுகின்றனர், ஆனால் அவர்கள் புறஜாதிய கண்ணோட்டத்தை அல்லது அவர்கள் பழக்கவழக்கங்களை கைக்கொள்ள அவசியமற்றிருந்தது. அவர்கள் அவர்களது தத்துவஞானத்தை எதிர்த்து நின்றனர், இது அவர்களை சூழ இருந்தும் அவர்களை சிறைபிடித்தவர்களை நிந்தியாவண்ணம் நடந்து கொண்டனர்.

புறஜாதியாரின் காலம்:

இக்காலக் கட்டத்தில் ஷெக்கினா மகிமையானது தேவலயத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தது மற்றும் புறஜாதியாரின் காலம் ஆரம்பமாகி இருந்தது, இந்த வாலிபரை நாம் காணும்போது, ஆவிக்குரிய உண்மையானது அரசியல் சூழலில் மாற்றப்பட்டிருந்தது. எசேக்கியேல் 10:4-19. இக்கால கட்டம் வரை இஸ்ரவேல் உலக சரித்திரத்தின் ஆளுகைக்குட்பட்டு இருந்தது. ஆனால் இதன் பிறகு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை புறஜாதியர் சரித்திரத்தை ஆளுகை செய்தனர். நவீன கால நிலையில் இஸ்ரவேல் வியாபித்து இருந்த போதிலும் புறஜாதிய வல்லமையானது பிண்ணனியத்தில் இருந்து வருகிறதாய் இருக்கிறது, பெலவீன காலங்களில் எடுக்கும் தீர்மானங்கள் ஐக்கிய நாடுகளுக்குரியதாய் இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது மட்டுமே இது எடுத்துப்போடப்படுகிறதாய் இருக்கும், அதன் பின்னர் தேசிய அளவில் கிறிஸ்துவைக் கேட்டுக்கொள்வதாய் இருக்கும். சகரியா 12:10ff.

Attempted Assimilation ஒன்றுபட முயற்சித்தல்:

வசனம் 3 முதல் 7 வரை நெபுகாத்நேச்சார் தானியேல் மற்றும் அவரது சிநேகிதர் அனைவரையும் பாபிலோனிய கலாச்சாரத்தை முற்றிலும் கைக்கொண்டு நடக்க வலுக்கட்டாய உபதேசமளித்து முயற்சிப்பதை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். இங்கு இந்த வாலிபர்கள் தங்களால் நேசிக்கப்படுகிறவர்களின் ஆதரவின்றி, எல்லோரும் எருசலேமில் விடப்பட்டவர்களாய் இவர்கள் மட்டும் தனித்து அவர்களது ஆத்துமா எவ்வித ஆதரவின்றி தவிக்கிறதை இங்கு நாம் காண்கிறோம். தானியேல் ஒரு சாட்சியாய் இருந்து, பெற்றோர்கள் பிள்ளைகளுடன் எதைச் செய்வார்களோ அதை செய்கிறவராய் இருந்தார். அவர்கள் அவருக்கு வேதாகம அடிப்படைக்கருத்துக்களையும் மற்றும் உபதேசங்களையும் போதிக்கிறவர்களாய் இருந்து அவைகளை அவரது சூழலில் எவ்வாறு கைக்கொள்வது என்றும் எப்படி ஜெபிப்பது என்றும் கற்றுத்தருகிறவர்களாய் இருந்தனர். தானியேல் அரசியலில் முன்மாதிரியான ஒரு ஞானவானாக மாறினான். ஆனால் இத்தருணத்தில் அவனும் அவனது நண்பர்களும் 14 வயது மட்டுமே நிரம்பியவர்களாய் இருந்தனர் என்பது நினைவில் கொள்ள வேண்டியது. வெளிப்பிரகாரமான கல்வியானது சவாலாய் அமைந்து அவர்கள் ஆத்துமத்தின் உள்ளான நிலையில் செயல்படுவதை அழித்துக் கொண்டிருந்தது. இங்கு பாபிலோனியர்கள் ஜனங்களை தங்களோடு இணைத்துக்கொண்டிருந்தனர். எப்படியிருப்பினும் அவர்களால் தானியேல் மற்றும் அவனது சிநேகிதர்களின் ஆத்துமாக்களை தங்களோடு இணைத்துக் கொள்ள இயலாது இருந்தது காரணம் அவர்கள் காண்கிறவர்களும் மற்றும் எதிர்க்கிறவர்களுமாய் இருந்தன்ர்.

வேதாகம வேறுபடல்:

வசனம் 8 முதல் 16ல் வேதாகம வேறுபடல் குறித்து சில ஞான அடிப்படைக் கருத்துக்களை பெற்றவர்களாய் இருக்கிறோம். இது மனிதக் கண்ணோட்ட கலாச்சாரத்தில் எவ்வாறு வாழ்வது என்பதைக் குறித்து காட்டுகிறதாய் இருக்கிறது. "தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொள்ளுதல்" என்ற சொற்றொடர் தானியேல் தன் ஆத்துமத்தில் தனக்குத்தானே தீர்மானித்து கொள்ளுதல் என்பதை காட்டுகிறதாய் இருக்கிறது. தானியேலுக்கு நெருக்கத்தால் செய்ய இயலாது இருந்தபோதிலும், வேதாகமத்தின் தேவனுக்கு உண்மையாய் இருக்க தீர்மானித்து இருந்தார். அப்படிப்பட்ட அமைப்புகளுக்கு ஒரு சவலாய் இருக்க தீர்மானித்திருந்தார். அவர் சந்தித்த அனைவருடனும் மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டார்.

வசனம் 4 அல்லது 7ல் அவர் சவாலுடன் நடந்து கொள்ள காரணமாய் அமைந்தது ஏன்? அவர் அவருக்களிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சியை

நிராகரிக்காமல் ஏற்றுக் கொண்டதற்கான காரணம் என்ன? அப்பட்டியலில் இருந்து தனது பெயரை வேற்படுத்திக்காட்ட முயற்சி செய்யாதிருந்ததற்கான காரணம் என்ன? தானியேல் அவர்கள் அளித்த கல்விமுறையை சகித்துக் கொண்டிருந்தார், அவர் தன்னை இனங்காணுவதை எடுத்துவிட முயற்சித்து கொண்டிருந்தார் காரணம் தான் தேவனுக்கும் அவரது ஜனங்களுக்கும் பயன்படுமாறு ஒரு ஸ்தானத்தில் தான் அமையவிருப்பதை அவர் கண்டார். அவருக்கு உணவும் உறைவிடமும் கிடைத்தபோது அதை சகிக்க இயலாது தடை செய்தது என்ன? அது மோசேயின் நியாயப்பிரமாணத்தின் படி அமையவில்லை. அவ்வகையான உணவு பழக்கம் அவருக்கில்லாது இருந்ததினால் அல்ல.

ஒன்று கொரிந்தியரில் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவுபதார்த்தம்: (விசுவாசிகளுக்கு எல்லா காலங்களுக்குமான அடிப்படைக் கருத்து)

1 கொரிந்தியர் 8:7ல் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிப்பது குறித்த பிரச்சனை விவாதிக்கப்படுகிறது. . இங்கு 1 கொரிந்தியரில் இது பெலவீனமான விசுவாசிக்கு ஒரு பிரச்சனையாய அமைந்துள்ளதைக் காண்கிறோம். எப்படியிருப்பினும் தானியேலோ அவரது சிநேகிதரோ பெலவீன விசுவாசிகள் அல்ல என்பதை நிரூபணம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். மாமிசமும், திராட்சைஇரசமும் விக்கிரகங்களுக்குப் படைக்கப்படுவது சாதாரண ஒன்றாய் இருந்தது. தானியேல் விக்கிரகங்கள் தேவனுக்கு நிகரானவைகள் அல்ல என அறிந்திருந்தார். அவர் உணவைமறுத்ததற்கான காரணம் அது காரணமாய் அமையவில்லை, அவர்களுக்கிடப்பட்ட புதுப்பெயர்களின் அர்த்தமே அவற்றை மறுப்பதற்குக் காரணமாய் அமைந்தது.

தானியேல் மனநிலையானது 1 கொரிந்தியர் 10:14 ff. ல் விவரிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இங்கு பவுல் எல்லாக் காலங்களிலும் எல்லா விசுவாசிகளும் விக்கிரகங்களுக்கு விலகியோடும்படி கூறுகிறவராய் இருக்கிறார். அவர்களது சிலைகளுக்கும் மற்றும் விழாக்களுக்கும் விலகியிருக்க கூறுகிறார்.

1 கொரிந்தியர் 8ம் அதிகாரத்தில் உணவானது கலப்பற்ற உணவாய் இருக்கிறது, எப்படியிருப்பினும் அதிகாரம் 10ல் உணவு உட்கொள்வது மதசம்பந்த செயல்பாடாய் இருக்கிறது அது உண்மையாகவே தெய்வம்/பிசாசுகளை வழிபடும் செயலாய் இருக்கிறது. விசுவாசிகளில் ஒருவரும் இதில் பங்கெடுக்கக் கூடாது. அதிகாரம் 8ல் இறைச்சி கடைக்குச் சென்று நல்ல இறைச்சி வாங்கச் செல்லும்போது, அவைகள்

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டிருந்தாலும் அது 10ம் அதிகாரத்தில் வேறுவிதமான நிலையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பவுல் குறிப்பிட விரும்புவது மற்றும் சுட்டிக்காட்டுவது விசுவாசிகள் எவ்வித புறஜாதிய விழாக்களில் பங்கேற்கக் கூடாது மற்றும் அவர்களது விக்கிரகங்களை வழிபடாது மற்றும் விக்கிரகங்களுக்கு பின்னால் இருக்கும் பிசாசுகளை வழிபடாது இருத்தல் வேண்டும் என வற்புறுத்திக் கூறுகிறவராய் இருக்கிறார். அவ்வாறு வழிபடுவது தேவனை நிந்திப்பதாய் இருக்கிறது அவ்வாறு ஒரு விசுவாசியும் செய்தல் கூடாது அவ்வாறு செய்து நியாயந்தீர்க்கப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

புதிய பெயர்களோ மற்றும் விக்கிரகமோ ஒன்றுமில்லை என்ற போதிலும், புறஜாதிய மக்கள் உண்மையாகவே பலி செலுத்தும்போது அவைகளைத் தேவனுக்கு செலுத்தாமல் பிசாசுகளுக்கே செலுத்துகிறார்கள். நாம் பிசாசுகளுடன் ஐக்கியம் கொள்ளுதல், அவைகளை ஆராதித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். தவறான புறஜாதிய மதமானது, அடிப்படையாக பிசாசுகளின் கிரியைகளாய் இருக்கின்றன. நாம் கர்த்தரை ஆராதிக்க கடந்து வரும்போது நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம் அல்லது சிட்சிக்கப்படுகிறோம், விசுவாசிகள் பிசாசுகளின் வல்லமைகளோடு ஆராதனையை கலக்கும்போது நியாத்தீர்ப்பு மட்டுமே எஞ்சியிருக்கிறதாய் இருக்கிறது. யாத்திராகமம் 20:1ff, லேவியராகமம் 17:7, உபாகமம் 32:17.

இது இன்றைய அளவில் கர்த்தருடைய மேஜைக்கு வரும்பொழுது விக்கிரகங்களோடு இணைந்து இருப்பது குறித்து விசுவாசிகள் எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். 1 கொரி. 11. ஐக்கிய விருந்தில் பங்கு பெறும்போது ஐக்கியத்திற்கு புறம்பே இருப்பது பாவமாய் கருதப்பட்டு வலியுறுத்தப்படுகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட பாவம் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள மற்ற பாவங்களைப் போல கருதப்படுகிறதாய் இருக்கிறது. நீங்கள் பிசாசுகளையும் மற்றும் தேவனையும் ஒரே சமயத்தில் ஆராதிக்க முடியாது இதை 1 கொரி 10:21ம் வசனத்தில் காண்கிறோம்.

வசனம் 25ல் கொரிந்தியர்கள் கடைகளில் விற்கப்படும் மாமிசம் குறித்து, மனசாட்சியினிமித்தம் எவ்வித கேள்வியும் கேட்காமல் அவைகளை வாங்கி புசிக்க உற்சாகப்படுத்தப்படுகின்றனர். காரணம் பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது, சிருஷ்டிகரை ஸ்தோத்திரத்து பெற்றுக்கொள்ளும் போது, எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம். வசனம் 27ல் பவுல் ஒரு புறஜாதியானின் வீட்டிற்கு ஒருவன் உன்னை விருந்துக்கு அழைக்கும்போது, எவ்வித கேள்வியும் கேட்காமல் விருந்துண்ணு. எப்படி இருப்பினும், நீ உண்ணும் பதார்த்தங்கள்

விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டது என்று சொல்லக்கேட்டால், புறஜாதியான் அதை ஒரு பொருட்டாக எண்ணும் போது, நீ அதை மறுக்க வேண்டும் காரணம் நீ புறாதிய மத சம்பந்த விசுவாசத்தில் பங்கு பெறுகிறவனாய் ஆகிறாய். நாம் அறிவிக்கிற சத்தியத்திற்கு சாட்சியை வேறுபடுத்திக்காட்ட வேண்டும், நமது விசுவாசம் கலந்து போக இடமளிக்கக்கூடாது.

மேஜையின் மீது பரிமாறப்படும் மாமிசமானது வித்தியாசமானதாய் வேறுபடுகிறது. ஒருவர் சாதாரண உணவை பரிமாறும்போது, அது திருப்தியை அளிக்கிறதாய் இருக்கிறது, அந்த உணவானது எங்கிருந்து வந்தது என்பது ஒரு பொருட்டல்ல. மற்றவர்கள் மதசம்பந்தமான விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உணவை பரிமாறும் போது அவைகள் புறக்கணிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. இக்காரணத்தால் தானியேல் பாபிலோனியர் பரிமாறிய உணவினால் தன்னைத் தீட்டுப்படுத்திக்கொள்ளாவண்ணம் தன்னைக் காத்துக்கொண்டார். மர்துக் என்னும் பாபிலோனிய தெய்வத்துக்கு ஆராதனை செய்யாவண்ணம் தன்னை காத்துக்கொண்டார். அவரது நண்பர்களும் சடங்காச்சார நிலையில் ஆயத்தமாக்கப்பட்ட மதசம்பந்தமான உணவிற்கு தங்களை விலக்கிக் காத்துக்கொண்டனர். அவர் இத்தகைய மத சம்பந்த உணவை புறக்கனித்து, மரக்கறிகள், பருப்பு, கனி வர்க்கங்கள் போன்றவற்றை உணவாய் உட்கொண்டு தங்களை தீட்டுப்படுத்தா வண்ணம் காத்துக்கொண்டனர்.

இது கிறிஸ்தவர்களாய் வேறுபிரிந்து வாழ்வதற்கு ஒரு முதல்தர அடிப்படைக் கருத்தாய் இருக்கிறது, நாம் புரட்சி செய்வதற்கான இலக்கைக் கவனமாய் தெரிவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். தானியேல் கல்வி பயின்ற வேளையில் நன்மை தீமை இவைகளை வேறுபிரிக்க இயன்றபோதும் அதை அளித்தவர்களை பாரபட்சமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. அவரது ஆத்துமத்தில் இருந்த வேதாகம உபதேசங்களால் அவரால் தெளிவாய் எது சரி எது தவறு என்பதை தெளிவாய் உணர்ந்து கொள்ள முடிந்தது. இன்றைய அளவில் விஞ்ஞான பாடத்தை நாம் பரிணாம வளர்ச்சியை நம்புகிறவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம், அவர்கள் "சிருஷ்டிப்பு விஞ்ஞானத்தை" நிந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர். மருத்துவர்களாய் பின்னர் பயன்படுத்துவதற்கான உபகரணங்களை அளிக்கிறவர்களாய் இருக்கின்றனர். தானியேலைப் போன்று பரீட்சையில் தேறுவதற்கான உபகரணங்களை உருவாக்கிக் கொண்டு, அவைகளை வாழ்விற்கு விசுவாசியாது, அவரது ஆத்துமாவை அக்கல்வியானது பாதிப்பை ஏற்படுத்தா வண்ணம் காத்துக்கொண்டார்.

புறஜாதிய சூழலில் தங்களது பெயர்கள் மாற்றப்பட்டது குறித்து அவர்கள் எவ்வித புரட்சியும் செய்யாதிருக்க தீர்மானித்திருந்தனர். ஒருவரும் தங்களது பெயர்கள் மாற்றப்படுவதன் மூலம் உண்மையான அவர்களது குணங்கள் மாற்றப்பட்டதாய் இல்லை. அவர்களது புதுப்பெயர்கள் அவர்களது நல்ல குணங்களை அழித்துவிடவில்லை. தானியேல் ஒரு குறிப்பிட்ட பகுதியில் போட்டியிட இருந்தார், அவரது முயற்சியெல்லாம் உலக அமைப்பை எதிர்த்து நிற்பதாய் இருந்தது. எதிர்ப்புகள் நிறைந்த சூழலில் நீங்கள் எதிரிகளால் ஒரு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாதவர்களாய் இருக்கக்கூடும். நீங்கள் ஒவொன்றிற்கும் தாக்குதல் நடத்த இயலாது மற்றும் தானியேல் தனது இலக்கை தெரிந்தெடுத்துக்கொள்பவராய் இருந்தார்.

தானியேல் இப்பொழுது பிரதாணிகளின் தலைவனிடத்தில் உட்கொள்ளும் உணவை குறித்து தனது விருப்பத்தை தெரிவித்தார். வசனங்கள் 8 மற்றும் 9ல் ஒன்றன் பின் ஒன்றாய் நிகழ்ந்தது அது ஒரேநேரத்தில் நிகழ்ந்தவை அல்ல. தானியேல் வேறுபட்டு இருப்பதை மிகவும் சமாதான வழியில் அடைய முயன்றார், அம்முயற்சியை தேவன் ஆசீர்வத்தார். அதை மிகவும் புரட்சிகரமான நிலையில் செய்ய துணியவில்லை. தானியேல் பிரதாணிகளின் தலைவனின் அதிகாரத்தை புரிந்து வைத்து இருந்தார் அதனால் மிகவும் மரியாதையுடனும், சிந்தனையுடனும் தனது கோரிக்கைகளை விவரித்து அஸ்போனேஸ் அதை அங்கிகரிக்குமாறு நயம்பட கூறினார்.

தானியேலுக்கு அலுவலக ரீதியில் வாசல்கள் திறக்கலாயின அவர் அவைகளைப் பயன்படுத்திக் கொண்டார். அரசனுக்கு கீழ்ப்படிய மறுத்தல் மரணத்திற்கு சமமானது என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும், அஸ்போனேஸ் மிகவும் விபரீதமான முயற்சியை எடுப்பதைக் காண்கிறோம், தானியேல் தனது கோரிக்கையில் பாராட்டைப் பெறுகிறார், தேவனும் இதைப்பாராட்டி அவனை ஆசீர்வதிப்பதைக் காண்கிறோம். பிரதாணிகளின் தலைவன் தானியேலால் கேட்டுக்கொள்ளப்பட்டதை இனம் புரிந்து கொண்டு, அவர் கேட்டுக்கொள்வதன் தனிச்சிறப்பைப் புரிந்து கொண்டான். நெபுகாத்நேச்சார் நூற்றுக்கணக்கான சிறைக்கைதிகளை பாபிலோனில் பெற்று இருந்தான், இருப்பினும் யூதேயாவிலிருந்து சிறைக்கைதிகளாய் கொண்டு வரப்பட்ட இந்நான்கு வாலிபரும் தனித்தன்மை வாய்ந்தவர்களாய் இருந்தனர். அலுவலர் தானியேலை அதிகம் பாராட்டினான் ஆனால் அவன் ஒரு விசுவாசியாய் மாறினானா என்பது அறியப்படவில்லை.

ஓசெயா 9:1-4ல் உள்ள தீர்க்கதரிசனமானது, தானியேல் தன்னை தீட்டுப்படுத்திக்கொள்ளக்கூடாது என்கிற ஆர்வத்திற்கு முறண்பாடாய் இருக்கிறது. வடக்கு இராஜ்ஜியம் அசீரியரால் சிறையாக்கப்பட்ட போது அவர்களால் இஸ்ரவேலர் தீட்டுப்பட்டவர்களாய் விளங்கினர்.

வசனம் 9ல் அஸ்போனெஸ் தானியேலுக்கு பிரதியுத்தரமாய் தேவனது ஊழியத்தில் தயவு செய்கிறவனாய் விளங்குகிறான். இது யோசேப்புக்கு சிறைச்சாலைக் காரன் கண்களில் தயவு கிடைத்ததற்கு ஒப்பனையாய் இருக்கிறது. ஆதியாகமம் 39:21-23. இது நமக்கு ஒரு சவாலாய் அமைந்து சட்டத்துடன் போராட வகை செய்கிறதாய் இருக்கிறது.

பிரதாணிகளின் தலைவனுக்கு ஒரு பிரச்சனையிருந்தது, நெபுகாத்நேச்சார் கட்டளையை மீறி நடப்பதனால், ஏதாகிலும் பிரச்சனை ஏற்பட்டால், அவன் மரண தண்டனை அடைய நேரிடும். உலகப்பிரகாரமாய் தங்களது தலைவன் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதில் மிகவும் கரிசனையுள்ளவராய் இருந்து அதைக் குறித்து கவலை கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். அவன் தொடர்ந்து நெபுகாத்நேச்சாருக்கு பயப்படுகிறவனாய் இருந்தான். அவனது பயபக்தியானது அவன் பணி செய்ய அவனை வழிநடத்தாது, வியப்பினாலும், பயத்தினாலும் கொள்ளும் உறவானதி அவனை வழிநடத்துகிறதாய் இருந்தது மற்றும் நல்ல காரணங்களுக்காய் செயலாற்றுபவனாய் இருந்தான். இப்படிப்பட்ட காலகட்டங்களில் நமது இறையியல் நம்மை மேற்செல்ல அனுமதியாயிருப்போமாக, எந்த ஒரு செயலையும் பயமானது நடத்திச் செல்லா வண்ணம் பார்த்துக்கொள்வோமாக.

வசனங்கள் 10 மற்றும் 11-14 இடையே கால வித்தியாசம் இருந்தது. அஸ்பேனேஸுக்கு கீழாக மேல்ஷார் என்பவன் தலைமை பிரதாணியாய் அனுதின பராமறிப்பை சிறைபிடிக்கப்பட்டவர்களுக்கு செய்து வந்தான். அவர்கள் மேல்ஷாரிடத்தில் மரக்கறி, பருப்பு, தண்ணீர் இவைகளால் பத்து நாளளவும் தங்களை பரிசோதித்துப்பார்க்கும் படி கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்வு மூலம் ஒரு அடிப்படைக் கருத்தானது எடுத்துக்கொள்ளப்படுகிறது, உங்களது கோரிக்கை நேரடியாய் நிராகரிக்கப்படுமேயானால், பரிசோதனை மூலம் உங்கள் விருப்பமானது ஏற்கப்படும். அவ்வாறு ஏற்கப்படாமல் போகக்கூடுமானால், வேறு மார்க்கம் அதற்கு இருக்கும். இப்படிப்பட்ட பரீட்சையானது ஒரு வாலிபருக்கு இயற்கைக்கு முறணானதாய் இருக்கிறது. இவ்வாலிபர்கள் 14 முதல் 16 வயது நிரம்பியவர்களாய் இப்படிப்பட்ட ஆவிக்குரிய முதிர்ச்சியுடன் காணப்பட்டதை நினைவில்

கொள்ளுதல் வேண்டும். இந்த பொல்லாத உலகில் இப்படிப்பட்ட முதிர்ச்சியுடனுள்ள வாலிப பிள்ளைகளை எதிர்பார்ப்பது இயலாது. இதைப்போன்ற காரியங்களை நமது வாலிபப்பிள்ளைகளிடம் நாமும் எதிர்பார்ப்போமாக.

நீங்கள் அரசியல் உலகில் பிடிவாதமான அடிப்படையில், கலந்து பேசி ஓர்முடிவுக்கு வருவது அவசியமான ஒன்றாய் இருக்கிறது. தானியேல் கீழ்மட்ட அதிகாரியுடன் பேசி தங்களை மற்ற கைதிகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க கேட்டுக்கொள்கிறார். மேல்ஷார் அக்கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறவனாய் காணப்படுகிறார், அவன் இப்படிப்பட்ட பரீட்சையில் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதை உணர்ந்தான். இது தானியேல் பட்சத்தில் கலந்து பேசி முடிவெடுக்க ஒரு நல்ல அம்சமாய் அமைந்தது.

கைக்கொள்ளுதல்

மதமானது பெயர் மாற்றம் செய்வதில் புதிரான உபதேசங்களை காண விழைகிறதாய் இருக்கிறது. தானியேல் 1:7.

ஒரு நபரின் பெயரையோ அல்லது தோற்றத்தையோ மாற்ற இயலும், ஆனால் ஒரு நபரின் ஆத்துமத்தை அவர்களது விசுவாசம் மற்றும் நடத்தை இவற்றில் மாற்றம் உருவாகாமல் ஒன்றும் செய்ய இயலாது.

அதிகமாய் தேவனது வார்த்தையைக் குறித்த அறிவானது, தவறான போதகத்தையும், தவறான பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அதிகம் எதிர்க்கக்கூடியவைகளாய் இருக்கிறது.

அநேக மக்கள் கல்வியானது எல்லா உதவிகளுக்கும் ஆதாரமாய் விளங்குகிறது எனக்காண்கின்றனர். சாலோமோன் கல்வியைக் குறித்து ஒன்று திரட்டி கூறுகிறவராய் இருக்கிறார். பிரசங்கி 1:17-18. கல்வி ஒரு முக்கியமான ஒன்றாய் இருந்தபோதிலும், மிகமுக்கியமாக மேல்நிலை பட்டம் பயில் வைகை செய்கிறதாய் இருக்கிறது, இது மனித பிரச்சனைகளுக்கு தீர்வு காணக்கூடியதாய் இல்லை, இரட்சிப்பும் கிறிஸ்தவ வாழ்க்கையுமே தீர்வாய் விளங்குகிறது.

தவறான கல்வி அமைப்பானது ஒரு நபரின் உபதேச நம்பிக்கையை அழிக்கக்கூடியதாய் இருக்கிறது, அந்த நபர் பகுத்தறிவு மற்றும் கேள்விகளை எழுப்பும் சிந்தனையாளராய் இல்லாத பட்சத்தில் இது சாத்தியமாகிறது. இன்பம் நுகர்தல் மற்றும் அதன் வெறுமையில்

ஈடுபடுவோரை குறித்து மறுபடியும் பிரசங்கி புத்தகத்தில் காண்கிறோம், முடிவாய் சாலோமோன் அவர்கள் கூறுவது, "தேவனுக்கு பயந்து அவரது கட்டளைகளை கைக்கொள், இது மனிதர் மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது." பிரசங்கி 12:13.

நாம் தீர்மானங்கள் எடுக்கும்போது, அவைகள் மனிதர்கள் அளிக்கும் நெருக்கத்தின் விளைவாய் அமைகிறதாய் இருக்கிறது. நாம் தீர்மானங்கள் எடுக்கும்போது, அவைகள் மனிதக் கண்ணோட்டத்தின்படி இல்லாது தெய்வீமானதாய் இருத்தல் வேண்டும்.

தெய்வீக கண்ணோட்டத்தின் ஆதாரம் வேதாகமத்தில் மட்டுமே இருக்கிறது. நமது சிந்தனைகள் தேவனது சிந்தனைகளைவிட தாழ்வானதாய் இருக்கிறது. அதை தேவனது வசனத்தின் அடிப்படையில் நாம் புரிந்து கொள்ளலாம். தெய்வீகக் கண்ணோட்டத்தின் விளைவு சரியான தீர்மானமாகவும், சரியான ஜீவனமாயும் இருக்கிறது. தானியேல் 1:8.

ஒரு விசுவாசிக்கு தேவன் தயை பொருந்தின உறவை தங்களை சிறைப்படுத்தினவரிகளிடத்தில் ஏற்படுத்திக் கொடுக்க இயலும், மற்றும் அவர்களுடன் இணைந்து செயலாற்ற எளிதான வழிமுறைகளையும், எதிர்காலத்தில் அவர்களைக் கனமடையச் செய்யவும் இயலும்.

ஜனங்கள் மிக உயர்ந்த அதிகாரத்திலும் மற்றும் உயர்ந்த ஸ்தானத்திலும் உள்ளோர் பாதுகாப்பற்றவர்களும் மற்றும் வசனம் 10 ல் காண்கிறபடி பயமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். நாம் நமது வெற்றிகரமான வியாபார ஏணியை உயர்த்தும் போது, நமது அழுத்தங்களின் அளவும் அதிகரிக்கிறதாய் இருக்கிறது மற்றும் ஆற்றலின் அளவைக் குறித்த எதிர்பார்த்தலும் அதிகரிக்கிறதாய் இருக்கிறது.

அதிகாரத்தில் உள்ள தேசங்களும் மற்றும் ஜனங்களும் வழக்கமாய் தவறான தீர்மானங்களை எடுக்கிறவர்களாய் இருக்கின்றனர் காரணம் அது ஒரு சூழ்நிலைக்கிசைந்த காரியமாய் அமைந்து, அவர்கள் பயத்தின் விளைவால் எடுக்கப்படுகிறதாய் அமைகின்றன.

நாம் ஜெபத்துடனும் மற்றும் கவனத்துடன் சிந்தித்து, நமது கிறிஸ்தவ வாழ்வின் முறைகளுக்கேற்றவாறு நடந்துகொள்ள அவசியமாய் உள்ளது. ஒரு விவாதம் மற்றொன்றை புறக்கணிக்கும் போது, பரிசீலனை செய்வதை அமைத்துக்கொண்டு, ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான பரீட்சையை சரியான வழியில் முன்னோக்கி செல்ல அமைத்துக்கொள்வது ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு வழிவகுக்கிறதாய் அமையும்.

DOCTRINES உபதேசங்கள்

DANIEL - DEDICATION தானியேலும் அற்பணிப்பும்.

NOT OF THIS WORLD இவ்வுலகிற்கு உரியவர் அல்லர்.

பகுதி 3 - நான்கு நபரின் முன்னேற்றம் குறித்து நெபுகாத்நேச்சாரின் மகிழ்ச்சி. தானியேல் அதி 1:15-21.

15. பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. 16 ஆகையால் மேல்ஷார் அவர்கள் புசிக்கக் கட்டளையான போஜனத்தையும், அவர்கள் குடிக்கக் கட்டளையான திராட்சை இரசத்தையும் நீக்கி வைத்து, அவர்களுக்கு பருப்பு முதலானவைகளைக் கொடுத்தான். 17 இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமார்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலைச் சகல தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். 18 அவர்களை இராஜாவினிடத்தில் கொண்டுவருகிறதற்குக் குறித்த நாட்கள் நிறைவேறின போது, பிரதானிகளின் தலைவன் அவர்களை நேபுகாத்நேச்சாருக்கு முன்பாக கொண்டு வந்துவிட்டான். 19 இராஜா அவர்களோடே பேசினான். அவர்கள் எல்லாருக்குள்ளும் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களைப் போல வேறொருவரும் காணப்படவில்லை. ஆகையால் இவர்கள் இராஜசமூகத்தில் நின்றார்கள். 20 ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் இராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே சகல சாஸ்திரிகளிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான். 21 கோரேஸ் ராஜ்யபாரம் பண்ணும் முதலாம் வருஷமட்டும் தானியேல் அங்கே இருந்தான்.

பிண்ணனியமும் மற்றும் பகுப்பாய்வும்:

ஏற்றுக்கொள்ளப்பட்ட பரீட்சையானது ஜெயமாய் அமைந்தது, பத்துநாள் சென்ற பின்னர் இராஜபொஜனத்தை புசித்த வாலிபரைப் பார்க்கிலும்,

அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. இது தேவனது திட்டமானது மனித இராஜ்ஜியத்தின் திட்டத்தை விட சிறப்பானது எனக் காட்டுகிறதாய் இருக்கிறது. இந்நான்கு இஸ்ரவேல் வாலிபரும் அவர்கள் உணவு பதார்த்தங்களைக் குறித்து அதன் பின்னர் விவாதிக்கவே இல்லை.

தானியேல் தனது கருத்துக்களை மிகவும் கீழ்ப்படிதலோடும் மற்றும் பிடிவாதமான முறையில் சொல்லுகிறவராய் இருந்தார். ரோமர் 12:18ல் புதிய ஏற்பாட்டில் இதற்கு சமமான கருத்தானது அளிக்கப்பட்டுள்ளது, அது போதிப்பது என்னவென்றால் அவிசுவாசியுடன் கூடுமானவரை சமாதானமாய் இருக்கக்கூறுகிறதாய் இருக்கிறது. மிகவும் மோசமான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மற்றவர்களுடன் சரிசமமாய் நிற்றல் வேண்டும்.

மனித இராஜ்ஜியத்தில் மனித முயற்சியின் அடிப்படையில் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுகின்றன, சிருஷ்டிப்பின் ஆளுகை மீது தேவனது செயலால் அல்ல என்கின்றனர். இது ஏதேன் தோட்டத்தில் அத்தி இலைகளால் தங்களை மறைத்து கொள்ளும் முயற்சி மூலமாய் வெளிப்பட்டு வருகிறதாய் இருக்கிறது.

தனிநபர் சுதந்திரமானது மனித இராஜ்ஜியத்தில் அழிவை கண்டு வருவது இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாய் இருந்து வருகிறது, நாஸிஸம் மற்றும் கம்யூனிஸம் போன்ற கடந்த கால மனித அமைப்புகள் நலிவிற்று வருவதை நாம் கண்டு வருகிறோம். இதனால் நாம் எதுவும் முழுமையானதல்ல என நிதானிக்கிறோம். இவைகள் அதிகாரத்தில் உள்ளவர்களின் நடப்பாளுகையாய் இருக்கிறது. இது பொதுவான அபிப்பிராயமாயும் மற்றும் சமுதாய பேதமுமாய் இருக்கிறது மற்றும் இவைகள் தவறானதாகவும் இருக்கக்கூடும்.

இது ஆயிரவருட ஆளுகையில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நியாதிபதியாய் ஆளுகை செய்யும் போது முறண்படுகிறதாய் இருக்கும்.

ஒரு மனிதனுடைய ஆவியுடன் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யும் போது, அம்மனிதர் சத்தியத்தினை அறிந்த அடிப்படையில் சிந்தித்து செயல்பட அருள் செய்கிறவராய் இருக்கிறார். ஞானத்தையும், புரிந்துகொள்ளும் தன்மையையும் தேவன் அளித்து, இந்த வாலிபரை மற்ற அடிமைகளான சகோதரரை விட வித்தியாசமானவர்களாய் நடந்து கொள்ள செய்கிறவராய் இருந்தார்.

அவர்கள் செயல்படுவதற்கு அதிகமான மனித கண்ணோட்டமானது கற்றுக்கொடுக்கப்பட்டபோதிலும், அவர்கள் அனுதினமும் தேவனது வார்த்தையில் தரித்திருக்கிறவர்களாய் இருந்தனர். இக்கால கட்டத்தில் அவர்கள் படித்த வேதாகம புத்தகங்கள் சங்கீதங்கள் மற்றும் ஏசாயா, பின்னர் எரேமியா தீர்க்கதரிசன ஆகமமானது பாரூக் என்பவரால் ஒரு பிரதியானது தானியேலுக்கு அளிக்கப்பட்டது. இது தானியேல் வாழ்வில் பெருமாற்றங்களை கொண்டுவருகிறதாய் இருந்தது. அவர்கள் பஞ்ச ஆகமங்களையும் படித்திருக்க வேண்டும்.

அனுதினமும் வேத வசனங்களை படிப்பதற்கு நிகரான காரியம் வேறே எதுவும் இருக்க வாய்ப்பில்லை. உங்கள் வாழ்வில் பிரச்சனைகள் குவிந்து இருக்கும் போது, எதையும் கற்றுக்கொள்ளுதல் என்பது இயலாத காரியமாய் இருக்கிறது, இருப்பினும் நெருக்கங்கள் நடுவே நீங்கள் கற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறீர்கள். இவ்வாலிபர்கள் அனுதினமும் ஜெபிக்கிறவர்களாய் இருந்தனர், மற்றும் தேவனுடன் அமைதியான நேரத்தை செலவிட அறிந்திருந்தனர், ஒவ்வொரு நாளும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்குரிய தீர்வை இச்சமயத்தில் அவர்கள் கண்டுகொள்கிறவர்களாய் காணப்பட்டனர்.

ஒரு காலகட்டத்தில் அவர்கள் புறஜாதிய வகுப்பறை சூழலில் இருந்து அவர்கள் ஜெபிப்பதற்கு மிகவும் கால தாமதமானது. அவர்கள் கல்வி பயிலும் காலத்தில் அவர்கள் பாடத்திட்டம் மிகவும் பளுவானதாய் இருந்தது. தானியேல் 1 கொரி 10:13க்கு சமமாய் இருந்தார் அவர் கர்த்தரைச் சார்ந்து, அவரையே தனது நம்பிக்கையாய் கொண்டிருந்தார். அவருக்கு கடினமான சூழல் ஒரு பொருட்டாக இல்லை, அவரது பிரச்சனைகளில் எப்பொழுதும் ஏதோ ஒன்று அவருக்கு உதவி செய்கிறதாய் இருந்தது.

வசனம் 17ல் தேவன் அவர்களுக்கு அறிவை தந்தருளினார், அது அவர்களுக்கு பாபிலோனிய ஆசான்கள் அளித்ததாய் இல்லாதிருந்தது. தேவன் தாமே அவர்களுக்கு ஞானத்தை அளித்தவராய் இருந்தார். இந்த வாலிபரைக் காணும்போது, அவர்கள் புறஜாதிய நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் மேன்மையாய் திகழ்ந்தனர்.

கற்றுக்கொள்ளுதல் என்பதற்கு “saphar” என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் பொருள் இலக்கியங்கள் அல்லது சுருள்கள் மூலம் கற்றுக்கொள்ளுதல் எனப் பொருள்படும். இவர்கள் அக்காடிய மொழி மற்றும் அரமேயு மொழி மூலம் கல்வி பயின்றனர். மற்றும் ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்த எபிரெய மொழி மூலமாகவும் கல்வி பயின்றனர். தானியேல் ஞானத்தை பகுத்தறிதல் மூலம்

பெற்றுக்கொண்டார், மற்றும் கல்வி மூலம் பெற்றுக்கொண்டார், இவ்வாறு அவர் முழுமையான கல்வியைப் பெற்றுக்கொண்டார்.

இதோடு தேவனால் அருளப்பட்ட தரிசனங்களுக்கும் மற்றும் சொப்பனங்களுக்கு அர்த்தம் கூறி வியாக்கியானிக்கும் வரத்தினையும் பெற்றுக்கொண்டவராய் விளங்கினார். வசனம் 17 இப்புத்தகத்தின் மற்ற பகுதிகளை அமைக்கிறதாய் இருக்கிறது. தானியேல், யோசேப்புக்கு இணையாக காணப்படுகிறவராய் இருக்கிறார், இவரும் இளவயதுள்ள வாலிபராய் புறஜாதிய சமுதாயத்தில் வளர்ந்து சொப்பனங்களை வியாக்கியானிப்பவராய் திகழ்ந்தனர். பாபிலோனிய மந்திரவாதிகள் மற்றும் மாகி என்ற அந்தஸ்தில் இருந்தவர்களும் விடுவிக்க இயலாத, சொப்பனத்திற்கு அர்த்தம் கூறும் வரத்தினை தானியேல் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டவராய் விளங்கினார்.

2 நாளாகமம் 26:5ல் உசியா தீர்க்கதரிசி கர்த்தரை தேடின போது அவர் தரிசனத்தின் உண்மையான அர்த்தத்தை புரிந்துகொள்கிறவராய் இருந்தார் மற்றும் கர்த்தர் அவருக்கு செழிப்பையும் தந்தருளினார்.

சொப்பனங்கள் பல வழிகளில் தோன்றுகிறவைகளாய் இருக்கின்றன. Sigmund Freud என்பவர் சொப்பனங்கள் குறித்த ஆராய்ச்சியில் பிரபலமானவர், இவரது கண்ணோட்டமானது புறஜாதிய கண்ணோட்டமாகவும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முறணானதாகவும் இருக்கிறது. இவரது பரிந்துரையின்படி நெருக்கப்படுகிற முரண்பாடானது சொப்பனத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது மற்றும் வெளிப்பிரகாரமான ஊக்கமும் மற்ற காரணமாய் விளங்குகிறது. மற்றும் பாலியல் செயல்பாடுகள் திறவுகோலாய் விளங்குகிறது என்பது Freud அவர்களின் புரிந்து கொள்ளுதலாய் இருக்கிறது. சொப்பனங்களை புரிந்து கொள்வதற்கான உண்மையான திறவு கோல் நமக்குள் உள்ள காரியமாய் இருக்கிறது, அதன் அடிப்படையான காரியம் நமது DNA ல் ஏற்கனவே பெற்றவர்களாய் இருக்கிறோம். குறிப்பிட்ட சொப்பனங்களுக்கு வியாக்கியானம் அளிக்கும்போது, எப்பொழுதும் பாரம்பரிய ரீதியான காரியங்கள் உள்ளடக்கி, "முதன்மையான" விளக்கங்கங்கள் சொப்பனத்தில் தோன்றிய அடையாளங்களைக்கொண்டு விளக்கப்படும், மட்டுமன்றி அந்த சொப்பனத்தில் தோன்றிய அடையாளங்கள் அந்த குறிப்பிட்ட நபரின் சூழலை எந்த விதத்தில் உள்ளடக்கியதாய் இருக்கிறது என்பதும் கேட்டறியப்படும்.

வேதவசனங்கள் கூறுகிற படி சொப்பனங்களில் மூன்றாவது பரிமாணம் உண்டு, அது ஒரு நபரின் வெளியே இருக்கும் ஆவிக்குரிய வல்லமைகளைப் பொருத்ததாய் இருக்கிறது. வேத வசனங்களில் 22 சொப்பனங்கள் இடம்பெற்றுள்ளன அவைகளில் 16 பழைய ஏற்பாட்டில் இடம்பெற்றுள்ளன, 6 சொப்பனங்கள் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றுள்ளன. பழைய ஏற்பாட்டு 16 சொப்பனங்களில் 11 சொப்பனங்கள் பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் எழுதப்படாததற்கு முன்னரே அளிக்கப்பட்டவைகள் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இதைப்போன்ற சம்பவம் புதிய ஏற்பாட்டிலும் நிகழ்ந்துள்ளன. முக்கியம் வாய்ந்த ஆவிக்குரிய சொப்பனங்கள் எப்பொழுதும் தேவனது உபதேசங்களுடன் தொடர்புள்ளதாய் வேதாகமம் பகுக்கப்படுவதற்கு முன்னதாகவே இடம்பெற்றதாய் இருக்கிறது.

ஆதியாகமம் 20ல் அவிசுவாசியான அபிமெலேக்கின் சொப்பனம், உண்மையைக் கண்டறிய அவனுக்கு கூறப்பட்ட பொய்யின் விளைவால் அவன் எச்சரிக்கப்படும் வகையில் அளிக்கப்பட்டதாய் இருக்கிறது. அது தேவனது திட்டமானது இடையூறின்றி செயல்பட அளிக்கப்பட்டதாய் இருக்கிறது. வேதாகமத்தில் உள்ள சொப்பனங்கள் இரட்சிப்படைந்தோர் மற்றும் இரட்சிப்படையாதோர் இருபாலருக்கும் அளிக்கப்பட்டதாய் இருக்கிறது. சொப்பனங்கள் யூதருக்கும் மற்றும் புறஜாதியாருக்கும் அளிக்கப்பட்டதாய் இருக்கிறது. சொப்பனங்கள் எப்பொழுதும் தனிப்பட்ட சொப்பனங்களாய் இராதவாறு, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் தேவனது திட்டத்தை உள்ளடக்கிக் காட்டுகிறதாய் இருந்தது.

உதாரணமாய் ஆதியாகமம் 28:12ல் உள்ள யூதரின் சொப்பனமானது யாக்கோபுக்கு கொடுக்கப்பட்ட சொப்பனமாய் இருக்கிறது. ஆதியாகமம் 31:2ல் யாக்கோபு மறும்படியும் சொப்பனம் காண்கிறவனாய் இருக்கிறான். இப்படிப்பட்ட சொப்பனங்கள் சுயத்தை மையமாய் கொண்ட சொப்பனங்கள் அல்ல, மாறாக ஆபிரகாமின் உடன்படிக்கையை உள்ளடக்கிய அநேக காரியங்கள் கொண்டதாய் இருந்தது.

அடையாளங்களை கொண்ட சொப்பனங்கள் உதாரணமாய் உள்ளது. யோசேப்பு கண்ட சொப்பனத்தில் சூரியன் யாக்கோபை பிரதிபலிப்பதாய் உள்ளது, சந்திரன் ரெபேக்காளை பிரதிபலிக்கிறது, மற்றும் நட்சத்திரங்கள் அவரது சகோதரர்களை பிரதிபலிக்கிறது. இப்படிப்பட்ட அடையாள காரியங்கள் வேதாகமத்தில் மட்டுமல்லாது மற்ற இலக்கியங்களிலும் காணப்படுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்டவைகள் "முதன்மையான" அடையாளங்களாய் இருந்து,

எப்படியோ நமது DNA ல் விநோதமான நிலையில் தோன்றுகிறதாய் இருக்கிறது. இன்றைய அளவில் ஜனங்கள் சொப்பனங்களைக் காணும்போது, அதே முதன்மையான உருவங்களை அவர்களில் கொண்டவராய் இருக்கின்றனர்.

நியாதிபதிகள் 7:13ல் கிதியோன் மற்றும் மீதியானியர்களைக் குறித்து பார்க்கிறோம். இதில் நாம் காண்கிற சொப்பனமானது பரிசுத்த யுத்தத்தைக்குறித்ததாயும், இஸ்ரவேல் தேசத்தின் அந்தியத்தை குறித்ததாயும் இருக்கிறது. 1 இராஜாக்கள் 3:5ல் சொப்பனத்தில் ஒரு தனி நபர் தோன்றுவதைப் பார்க்கிறோம், இந்ததனிநபர் சாலமோன் என அறிகிறோம்.

தானியேல் புத்தகத்தில் மூன்று சொப்பனங்களைப் பார்க்கிறோம். அவைகளில் இரண்டு சொப்பனங்கள் நெபுகாத்நேச்சார் கண்டதாகவும் ஒரு சொப்பனம் தானியேல் கண்டதாகவும் பார்க்கிறோம். புறஜாதிய சொப்பனங்கள் தானியேல் 2 ம் அதிகாரத்திலும் 4ம் அதிகாரத்திலும் இடம்பெற்றுள்ளன, இதில் புறஜாதிய சரித்திரமானது தெளிவாய் கூறப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் அந்த சொப்பனங்கள் மிகவும் பயங்கரமாய் விளங்கின, அவைகள் பார்வோனுக்கும் மற்றும் நெபுகாத்நேச்சாருக்கும் அவ்வாறு தோன்றின.

தானியேல் 2 ம் அதிகாரத்தில் சொப்பனத்திற்கான ஆதாரத்தையும் மற்றும் தேவனால் அதற்களிக்கப்பட்ட வியாக்கியானத்தையும் காண்கிறோம். தானியேல் தனது அறிவாற்றலால் மற்றும் திறமையால் புறஜாதிய இராஜ்ஜியத்தில் மேன்மைபடுத்தப்பட இருக்கிறார், இது சொப்பனத்தை அவர் வியாக்கியானம் செய்த அறிவாற்றலால் சாத்தியமாயிற்று.

தேவன் சர்வ ஞானமுள்ளவராகையால், அவரால் தனது தீர்க்கதரிசிக்கு சொப்பனத்திற்கான சரியான வியாக்கியானத்தை அளிக்க முடிந்தது. அவர் உலக சரித்திரத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை அறிந்தவராய் இருக்கிறார். ஆகையால் சொப்பனங்கள் மூலம் என்ன நிகழவிருக்கிறது என்பதை அறிவிக்க கூடியவராய் இருந்தார். தானியேல் உலக சரித்திரத்தின் தனித்தன்மை வாய்ந்த காலத்தில் வாழ்கிறவராய் இருந்தார் மட்டுமின்றி அவர் தனித்தன்மை வாய்ந்த வரத்தினைப் பெற்றவராய் இருந்தார். தானியேலுக்கு அளிக்கப்பட்ட சொப்பனங்கள்/தரிசனங்கள் மற்றும் அவரிடம் வியாக்கியானத்திற்காய் அளிக்கப்பட்டவைகள் தனித்தன்மை வாய்ந்தவைகளாய் இருந்தன, அவைகள் தீர்க்கதரிசன அமைவைப் பெற்று பிந்தின காலத்தில்

வேதாகம எழுத்தாளருக்கு அவசியமான கருத்தை தெரிவிக்கிறதாய் இருந்தது.

இதினிமித்தம் தானியேல் கூறும்போது, சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்வது தேவனுக்குரியது என்கிறார். தானியேல் ஒருபோதும் தனது அனுபவங்களை நெபுகாத்நேச்சாரிடம் கூறவில்லை. மாறாக தனக்கருளியவற்றை மட்டும் அவனிடம் கூறினார். தானியேல் தேவனானவர் ஆதிமுதல் தனது நோக்கங்களுக்கிசைய என்ன செய்து வருகிறார் என்பதைக் காண்கிறவராய் இருந்து ஒன்றையும் கூட்டாமலும் ஒன்றையும் குறைக்காமல் தான் செய்ய வேண்டியவற்றை மட்டும் செய்கிறவராய் இருந்தார். அனுபவ ரீதியாய் நெபுகாத்நேச்சார் பெற்றவைகளை தானியேல் விவரிக்கிறவராய் இருக்கிறார், மற்றும் அந்த சாம்ராஜ்யத்தில் அது யூதருக்கு துணை நிற்பதாய் இருந்தது. தீர்க்கதரிசன நிறைவேறுதல் அனைத்தும் தேவனை மகிமை படுத்துவதாய் இருந்தது, அதற்கு உடன்பட்ட மனிதரை அது மகிமை படுத்துவதாய் இல்லை.

தானியேல் 18-19 வசனங்களில் தானியேலும் அவரது நண்பர்களும் பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தின் அரசியல் செயலாட்சிக்குரிய பணிக்கு இறுதித் தேர்வில் வெற்றி பெறுகிறவர்களாகின்றனர். யூதச் சிறைக்கைதிகள் மேல்மட்ட அதிகாரிகளானார்கள். இந்த வேதபகுதியில் அவர்களுக்குரிய யூதப்பெயர்கள் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இதன் பின்னரே அவர்களது பாபிலோனிய பெயர்கள் குறிப்பிடப்படுகிறதாய் இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் பதவியை வகித்து சிறைப்பட்ட யூத ஜனங்களை பாதுகாக்கிறவர்களாகிறார்கள்.

இங்கு நான்கு யூத வாலிபர்களும், மிகவும் வாலிபராயும் 18 வயது நிரம்பியவர்களாய் காணப்படுகின்றனர். இவர்கள் நெபுகாத்நேச்சாருக்கு முன் நின்றபோது, எகிப்தில் யோசேப்பு இதற்கு சுமார் 1000 ஆண்டுகளுக்குமுன்னர் பார்வோனுக்கு முன்னிலையில் நிறுத்தப்பட்டதற்கு ஒப்பாக இருந்தது. ஆதியாகமம் 41:46. முன்பாக நிறுத்தப்பட்டனர் என்ற சொற்றொடரின் பொருள் அவர்கள் அரசாங்க பணிநியமணம் செய்வதற்கு நிறுத்தப்பட்டனர் என்பது பொருளாகும், தானியேலைப் பொருத்தமட்டில் கல்தேய சாம்ராஜ்ஜியத்தையும் தாண்டி நியமிக்கப்படுகிறதாய் இருந்தது.

வசனம் 21ல் தானியேலின் சகிப்புத்தன்மையானது சாட்சியாய் இருப்பதைப் பார்க்கிறோம். இங்கு ஒரு வாலிபனின் தேவனது குணாதிசயமானது உயர்த்தப்படுகிறதாய் இருக்கிறது. இந்த நான்கு வாலிபரின் நிலையானது பாபிலோனிய மண்ணில் பிறந்தவர்களின்

நிலையை விட பரந்த நிலையில் மேம்பட்டதாய் இருந்தது. இது தேவனது கனிமிக்க பிரதிபலனை குறிப்பிடுகிறதாய் இருந்தது மற்றும் அவரது திட்டத்தில் ஆயத்தமாக்கப்பட்ட அனைவருக்கும் மற்றும் பிரதிஷ்டிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் பயன்தரக்கூடிய வகையில் அமைந்தது.

கைக்கொள்ளுதல்

வேதாகம சத்தியத்தை புரிந்து கொள்வது கல்வி சார்ந்த பிரச்சனைகளையும் மற்றும் விஞ்ஞான தோற்றத்தினையும் எளிதாக்குகிறதாய் இருக்கிறது - தானியேல் 1:17-19.

மனித இராஜ்ஜியத்தின் விரிவடைதல் எப்பொழுதும் வல்லமை மற்றும் சிறைப்பிடித்தல் இவைகளால் சாத்தியமாகிறது. மகா அலெக்ஸாண்டர், நெபுகாத்நேச்சார், ஹிட்லர், நெப்போலியன் போன்றோர் சம்பூரணமான சமுதாயம் குறித்து சிந்திக்கிறவர்களாய் இருந்தனர். ஆனால் அவர்கள் கருத்தானது அவர்களது சுயசித்தத்தை மட்டுமே சார்ந்ததாய் இருந்தது. பெரிய புறஜாதிய சாம்ராஜ்ஜியங்கள் அனைத்தும் தனித்தன்மை கொண்ட சுயமுக்கியத்துவத்தை மையமாய் கொண்டதாய் இருந்தது. அவைகளின் பெரியதலைவர்களும் இத்தகைய குணம்படைத்தவர்களாய் திகழ்ந்தனர். இது அந்திக்கிறிஸ்துவரை இது போன்ற மனநோய்கொண்ட சுயமுக்கியத்துவத்துவமானது ஆளுகையில் வெளிப்படுத்துகிறதாய் இருக்கும்.

கிறிஸ்தவரல்லாதோருக்கு தேவனது மதிப்பின்படி ஒழுக்கமுள்ள அல்லது ஒழுக்கமற்ற காரியங்கள் என எடுத்துரைக்க இயலாது. ஒரு பிரச்சனையை சரிசெய்ய நீங்கள் ஒழுக்க ரீதியில் செயல்பட்டு நிரூபணம் செய்ய வேண்டியதாய் இருக்கிறது. புறஜாதியாரின் மாமிசமும், திராட்சை இரசமும், ஊட்ட,மிக்க உணவாய் இருந்தபோதிலும், அவைகள் மதம் சார்ந்த சடங்குகளில் உட்படுத்தப்பட்டு விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளாய் இருந்தது, இதினிமித்தம் தானியேல் அவ்வுணவு வகைகளை மறுத்து அதற்கு எதிராய் செயல்பட வேண்டியதாய் இருந்தது.

தேவன் சர்வ வல்லவர் என்பதை அறிந்து அவருக்கு நாம் கீழ்ப்படிவதும், அவர் தாமே நமது சூழல் களை மாற்றக்கூடியவரென்றும் விசுவாசித்து அவரில் நம்பிக்கை வைக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் ஞானமாய் நடந்து கொண்டு செய்கிற காரியங்களை எப்பொழுது நிறுத்த வேண்டும் எனவும், மற்றும் தேவனது பராமரிப்பில் எப்பொழுது ஓய்வு பெற வேண்டும் எனவும் அறிந்தவர்களாய் இருத்தல் வேண்டும்.

யாக்கோபு 1:5-7ல் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாய் இருந்தால் அவன் தேவனிடத்தில் கேட்கக்கடவன், அவன் எவ்வளவேனும் சந்தேகப்படாமல் விசுவாசத்துடன் கேட்க வேண்டும்..

இஸ்ரவேலில் மோசே மற்றொரு கடினமான சூழலுக்குள் செல்லவேண்டியதாய் இருந்தது, அவன் எகிப்திலே ஆளுகை செய்ய, எகிப்தியரின் ஞானசாஸ்திரங்கள் யாவையும் கற்று தேறினவனான். அப். 7:22. நாம் புறஜாதிய அறிவில் கற்றுத்தேர்ந்து அவற்றை தேவனது நோக்கங்களுக்கு பயன்படுத்தலாம், அதை நமது மத சம்பந்தமான நம்பிக்கைக்கு கேடுவராதவரை பயன்படுத்தலாம்.

தமது வார்த்தைக்கு முதன்மையான இடத்தை கொடுப்பவர்களை தேவன் கனப்படுத்துகிறவராய் இருக்கிறார். தேவனது வழியில் காரியங்களை செய்கிற ஒருவரும் தடுமாற்றம் அடைவதில்லை. - ரோமர் 8:31, தானியேல் 1:19.

தேவன் ஆயத்தமுள்ள ஜனங்களை பயன்படுத்துகிறார் மற்றும் உண்மையுள்ளோரை அவர் கனப்படுத்துகிறார். சாட்சி ஏற்படுத்தாமல் அவர் அவர்களை விட்டு விலகுவது இல்லை. தானியேல் 1:20,21.

எந்தஒரு அவிசுவாசியானநபர் எதிர்த்து போட்டியிடும் காரியங்களை செய்ய மறுக்கும் ஒரு கிறிஸ்தவருக்கு எல்லாகாரியங்களும் சமமாய் இருக்கிறது.

.

DOCTRINES உபதேசங்கள்

SEPARATION வேறுபட்டு ஜீவித்தல்

VEGETARIANISM சைவம்.

<u>அதிகாரம் 2.</u>

2ம் அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேல் இரண்டாம் அதிகாராத்தை ஆறு பகுதிகளாய் பிரிக்கலாம்:

நெபுகாத்நேச்சாரின் சொப்பனமும், அவனது ஞானிகளுக்குண்டான சவாலும் வசனங்கள் 1 - 9

ஞானிகள் சொப்பனத்தை கூறி விளக்கமளிக்கத் தவறியமையால், அவர்களை அழிக்க வெளிப்பட்ட இராஜ கட்டளை. வசனங்கள் 10 - 13

சொப்பனத்தைக் குறித்து தானியேல் தேவனிடத்தில் ஜெபித்தல். வசனங்கள் 14 - 18

பலதரப்பட்ட உலோகத்தால் செய்யப்பட்ட உருவத்தைக் குறித்த சொப்பனத்தை தானியேல் விவரித்தல். வசனங்கள் 19 - 35

நான்கு உலக சாம்ராஜ்ஜியங்கள் குறித்த விளக்கமும் மற்றும் அவற்றின் முடிவும். வசனங்கள் 36 - 43

சாம்ராஜ்ஜியங்களின் அழிவும் மற்றும் புதிய இராஜ்ஜியம் அமைக்கப்படுதலும். வசனங்கள் 44 - 49

பகுதி 4 - SECTION 4 - நெபுகாத்நேச்சாரின் சொப்பனமும், அவனது ஞானிகளுக்குண்டான சவாலும் 2:1-9.

**1 நெபுகாத்நேச்சார் ராஜ்ஜியபாரம்பண்ணும் இரண்டாம் வருஷத்திலே நெபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான் அதினாலே அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது.
2 அப்பொழுது இராஜா தன் சொப்பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும்பொருட்டுச் சாஸ்திரிகளையும், ஜோசியரைர்யும், சூனியக்காரரையும், கல்தேயரையும், அழைக்கச் சொன்னான், அவர்கள் வந்து, இராஜ சமுகத்தில் நின்றார்கள்.
3 இராஜா அவர்களை நோக்கி: ஒரு சொப்பனங்கண்டேன், அந்த சொப்பனத்தை அறிய வேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது என்றான்.
4 அப்பொழுது கல்தேயர் இராஜாவை நோக்கி; இராஜாவே நீர் என்றும் வாழ்க சொப்பனத்தை உமது ஊழியருக்குச் சொல்லும், அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்று சீரிய பாஷையிலே சொன்னார்கள்.
5 இராஜா கல்தேயருக்குப் பிரதியுத்தரமாக: என்னிடத்திலிருந்து பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் துண்டித்துப்போடப்படுவீர்கள் உங்கள்**

வீடுகள் எருக்களங்களாக்கப்படும். 5 சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெரிவித்தீர்களேயாகில் என்னிடத்தில் வெகுமதிகளையும் பரிசுகளையும் மிகுந்த கனத்தையும் பெறுவீர்கள், ஆகையால் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்குத் தெரிவியுங்கள் என்றான். 7 அவர்கள் மறுபடியும் பிரதியுத்தரமாக: இராஜா அடியாருக்குச் சொப்பனத்தைச் சொல்வாராக; அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்றார்கள். 8 அதற்கு இராஜா பிரதியுத்தரமாக என்னிடத்திலிருந்து தீர்மானம் பிறந்தபடியினாலே நீங்கள் காலதாமதம் பண்ணப் பார்க்கிறீர்களென்று நிச்சயமாய் எனக்கு தெரிய வருகிறது. 9. காலம் மாறுமென்று நீங்கள் எனக்கு முன்பாகப் பொய்யும் புரட்டுமான விஷேசத்தைச் சொல்லும்படி எத்தனம் பண்ணி இருக்கிறீர்கள், நீங்கள் சொப்பனத்தை எனக்குத் தெரிவிக்காமற்போனால் உங்கள் எல்லாருக்கும் இந்த ஒரே தீர்ப்பு பிறந்திருக்கிறது. ஆகையால் சொப்பனத்தை எனக்குச் சொல்லுங்கள். அப்பொழுது அதின் அர்த்தத்தையும் உங்களால் காண்பிக்கக் கூடுமென்று அறிந்துகொள்வேன் என்றான்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்: , “As your king I have already made a decree, and now I want answers”.

தானியேல் 2 ம் அதிகாரம் அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வுண்டாக்கும் புத்தகமாய் இவ்வதிகாரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாத்திகவாதிகளும், தாராளவாதிகளும், அவிசுவாசிகளும் தானியேல் புத்தகத்தை அழிக்க முயற்சித்திருக்க காரணம் இதில் கூறப்பட்டுள்ள தீர்க்கதரிசனமானது மிகவும் துள்ளியமானதாய் கூறப்பட்டு இருக்கிறது.

2 ம் அதிகாரம் 1ம் வசனத்தில் மற்றொரு பிரச்சனை தோன்றுகிறதாய் இருக்கிறது. நெபுகாத்நேச்சார் அரசாண்ட இரண்டாம் வருடத்தில் எனக்கூறப்பட்டுள்ளது, இது தானியேல் நெபுகாத்நேச்சார் இராஜாவான பின்பு மூன்று ஆண்டுகாலம் பயிற்சி பெற்றது குறித்து கூறப்படுகிறது. இது தானியேலின் பயிற்சிகாலத்திற்கு முன்னதாகவே நடந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

பாபிலோனிய பழக்கவழக்கப்படி பகுப்பாய்வு செய்வோமெனில், நெபுகாத்நேச்சார் அரசாண்ட இரண்டாம் ஆண்டிலே என்பது, அவன் உண்மையிலே அரியணை ஏறிய வருடம் எனக்கணிக்கப்படுவதாய் இல்லை. நெபுகாத்நேச்சார் தானியேலின் பயிற்சிகால முதலாண்டிலே அரியணை ஏறி இருக்க வேண்டும், பயிற்சிகால மூன்றாமவது ஆண்டு நெபுகாத்நேச்சார் அரசாண்ட இரண்டாம் ஆண்டு எனக்குறிப்பிட்டுள்ளது.

கி மு 605ல் கார்கமிஸ் யுத்தம் நடைபெற்றது, இப்பட்டணம் இப்பொழுது அழைக்கப்படும் சிரியாவில் அமைந்திருந்தது. இது வனாந்திரமான பாலைவனப்பிரதேசமல்ல. இது ஆசியா மைனருக்கும், ஐரோப்பாவுக்கும் வணிக மார்க்கமாய் அமைந்திருந்தது, இவ்வணிக மார்க்கம் கார்கெமிஸ் வழியாய் செல்லுகிறதாய் இருந்தது, இந்த ஆண்டில் இங்கு 'நடந்த யுத்தம் பண்டைய உலகில் மகா பெரிய யுத்தமாய் கருதப்படுகிறது.

கி மு 612 வரை அசீரியர்கள் இங்கு ஆதிக்கம் செலுத்திவந்தனர். அவர்கள் 612ல் முற்றிலும் அழிக்கப்பட்டனர் இதில் ஒரு இராணுவ கூட்டத்தினர் தப்பி ஆரானுக்கு சென்று பின்னர் கார்கெமிஸுக்கு திரும்பினர், இவர்கள் எகிப்தியருடன் இணைந்து யுத்தம் செய்கிறவர்களாய் இருந்தனர், இவர்கள் யோசியாவை மெகிதோவில் தோற்கடித்தவர்களாய் இருக்கின்றனர். எகிப்தியரும் எஞ்சியுள்ள அசீரியர்கள் அனைவரும் பாபிலோனியரால் கார்கெமிஸ் பட்டணத்திற்கு வெளியே தோற்கடிக்கப்பட்டனர். நெபோபொலேசர் பார்வோன் நெகோவை முறியடித்த பின்னர், அந்த பிராந்தியம் முழுமையும் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தான், நெபோபொலேசர் செப்டம்பர் மாதம் கி மு 605 ம் ஆண்டில் மரணத்தைத் தழுவினான். இதன் பின்னரே நெபுகாத்நேச்சார் முடிசூடப்பட்டு, எருசலேமை பிடித்து தானியேல் மற்றும் அவனது மூன்று சிநேகிதர்களையும் சிறை பிடித்து மற்ற சிறைக்கைதிகளுடன் பாபிலோனுக்கு கொண்டு சென்றான்.

கி மு 604ல் அவன் திரும்பவும் எருசலேமுக்கு வந்து யூதாவை முற்றிலும் தனது ஆளுகை உட்படுத்தினான். 2 இராஜாக்கள் 24:1. இதிலிருந்து யூதரின் புறஜாதிய ஆதிக்கம் துங்கினதாய் கருதப்படுகிறது. இது கி மு 586ல் எருசலேமானது முழுவதும் அழிக்கப்பட்டு யூதர்கள் அனைவரும் பாபிலோனுக்கு சிறையாகக் கொண்டுபோகப்பட்டது மூலம் உறுதிப்படுகிறதாய் இருக்கிறது. அதைத் தொடர்ந்த வருடங்களில் அவன் பெலிஸ்தரை தோற்கடித்து, அவர்களை முழுவதுமாய் அழித்துப்போட்டான். அவன் அதன்பின்னர் மத்திய கிழக்கு தேசத்திற்கும், எகிப்திற்கும் அதிகாரியாக விளங்கினான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகை மட்டும், "புறஜாதியாரின் ஆளுகை" நீடிக்கும். புறாஜாதியாரின் காலம் கிட்டதட்ட 2600 ஆண்டுகள் நீடிக்கிறதாய் இருக்கும்.

அலெக்ஸாண்டர் போலவே நெபுகாத்நேச்சாரும் நினைவு கூறப்பட வேண்டிய இளம் வயதினராக காணப்படுகிறார். அவன் இளைஞனாகவும், வலிமை மிக்கவனாயும், புத்திசாலியாகவும், சுயநலம் கொண்டவனாயும் திகழ்ந்தான்.

வெளிப்படையாய் நெபுகாத்நேச்சார் சுய அடக்கமுள்ளவனாய் இருந்த போதிலும், மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை ஆண்டவனாய் இருந்தபோதிலும், உள்ளூர பாதுகாப்பவற்றவனாயும், மிகவும் கலக்கமுற்றவனாய் விளங்கினான். உங்கள் உள்ளத்தில் வெற்றிடம் காணப்படுமேயானால், எவ்வளவு மேலான அந்தஸ்தில் இருந்தாலும் அது உங்களை திருப்தி செய்யாது. வசனம் 29ல் அவனது மனதில் என்ன இருந்தது என்பதைக் காண்கிறோம், அவன் கண்ட சொப்பனங்கள் அவனை நிலையற்ற தன்மையை அவனில் உருவாக்கிற்று. எந்த ஒரு அவிசுவாசியும் தெய்வீகக் கண்ணோட்டமில்லாது இருந்து நெபுகாத்நேச்சாரைப்போன்று தனது பிரச்சனைகளை படுக்கை வரைக்கும் எடுத்துச் செல்கிறவர்களாய் இருக்கின்றனர். விசுவாசிகளும் கூட இதையே சில நேரங்களில் செய்கிறவர்களாய் காணப்படுகின்றனர். 1 பேதுரு 5:5-9.

நெபுகாத்நேச்சார் தனது சொப்பனங்களால் கலக்கமுற்று நித்திரையற்றவனாய் காணப்பட்டான். அந்த சொப்பனங்கள் தேவனால் அளிக்கப்பட்டு, அதை வியாக்கினிப்போர் தேவன் மீது தனது கண்ணோட்டத்தை அமையச்செய்கிறதாய் இருந்தது. இதுவே தானியேல் வாழ்விலும் நிகழ்ந்ததாய் காணப்பட்டது. தேவன் தானியேலுக்கு அனுகூலமான வாசலை திறந்தவராய் காணப்படுகிறார், அதைப்போன்றே இன்றைய அளவிலும், நமது சார்பில் தேவன் தமது திட்டத்தினை விளங்கப்பண்ணுகிறவராய் இருக்கிறார்.

ஆதியாகமம் 40:5-8ல் வியாக்கியானித்தவர் யோசேப்பாய் இருந்தார், தேவன்தாமே பானபாத்திரக்காரனுக்கு, பார்வோன் சொப்பனங்கண்டு கலங்கிப் போயிருந்த நிலையில் மறதியிலிருந்து நினைவாற்றலை அளிக்கிறவராய் இருந்தார். அதுவே தேவனது திட்டத்தில் சரியான நேரமாய் இருந்தது.

சொப்பனங்களுக்கான மூன்று காரணங்கள் இருக்கின்றன; மூலக்கூறு, மூலக்கூறல்லாத சரீரப்பிரகாரமான தூண்டுதல்களால் சொப்பனங்கள் தோன்றுகின்றன, அவைகள் ஆவிக்குரிய மற்றும் ஆன்மீக அர்த்தமிக்கதாய் இருக்கின்றன. அவைகள் நம்து உண்மையான ஆவிக்குரிய தன்மையைப் பொருத்ததாய் இருக்கிறது, நமது சொப்பனங்கள் தெய்வீக கண்ணோட்டத்தை மையமாய் கொண்டமைகிறது. இவைகள் எப்பொழுதாவது ஒரு முறை நிகழுகிறதாய் இருக்கிறது, ஆனால் அவைகள் நிகழ்வின்போது முக்கியம் வாய்ந்தவைகளாய் அமைகின்றன.

மூன்றாவது பகுப்பை இரு பிரிவுகளாய் பிரிக்கலாம், தேவன் அளிக்கும் சொப்பனங்கள், மற்றும் பழைய பாவ சுபாவம்/சாத்தான் அளிக்கும்

சொப்பனங்கள். வேதாகமத்தில் தேவன் சொப்பனங்களை யூதர்களுக்கும், புறஜாதியாருக்கும் அளிக்கிறவராய் விளங்குகிறார். உபாகமம் 13:1, எரேமியா 23:32. இந்த பெரிய இராஜா அநேக சொப்பனங்களைக் காண்கிறவராய் இருந்தார், அவைகளால் இவரது ஆவியானது கலக்கமடைகிறதாய் இருந்தது. நெபுகாத்நேச்சார் இதினிமித்தம் தனது சூழலில் குழப்பமடைகிறவனாய் இருந்தான்.

பிரசங்கி 3:11ல் முன்கூட்டியே சுவிஷேசமானது விவ்ரிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இங்கு தன்னாட்சி செய்யும் மனிதனுடன் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் படிப்படி படியாக மிகவும் பயனுள்ள வகையில் எவ்வாறு கிரியை செய்கிறார் எனக் காண்கிறோம். பிரசங்கி 3:11. இம்மானுவேல் காண்ட் என்பவர் இவ்வாறு கூறுகிறார், "எனக்கு மூலக்கூறுகளை அளியுங்கள் உலகத்தை உண்டாக்கி காட்டுவேன்." என்கிறார். Descartes என்பவர் கூறும்போது, "நான் நானாகவே இருக்கிறேன் என எண்ணுகிறேன்." இருவருமே தவறாய் கூறுகிறவர்களாய் இருக்கின்றனர். "மனிதனை புரிந்து கொள்ளும் ஒரு புழுவைக் கண்டுபிடியுங்கள், மற்றும் நான் உங்களுக்கு தேவனை புரிந்து கொள்ளும் மனிதனை ஒப்புவிப்பேன்." (J Wesley.).

நெபுகாத்நேச்சார் மீண்டும் மீண்டும் சொப்பனம் காண்கிறவனாய் இருந்தான். பிரசங்கி புத்தகம் இவனது ஆத்துமாவைப்படம்பிடித்துக் காட்டுகிறதாய் இருக்கிறது. எந்த ஒரு மனிதரும் தேவனுடன் அத்தியாவசியமான உறவு கொள்ளாது இருப்பார்களேயானால், அவர்களது வல்லமையும் ஐசுவரியமும் மிக பெலவீனமுள்ளதாய் இருக்கும். இந்த சொப்பனத்தில் பெரிதளவில் கட்டப்பட்டுள்ளதானது மோதி முற்றிலும் அழிக்கப்படுகிறதாய் இருக்கிறது. நெபுகாத்நேச்சார் தனது வல்லமை அர்த்தமற்றதாய் இருப்பதை உணர்ந்தான், தான் கண்ட சொப்பனத்தில் ஏதாகிலும் முக்கியான ஒன்று நிலைத்திருக்குமேயானால் அது தேவனால் வந்திருக்கும் எனவும் தேவனது திட்டத்தில் அதுவும் ஒன்று என எண்ணியிருப்பான். வல்லமை பொருந்தியவர்கள் கிறிஸ்தவர்களை தங்களது உன்னத ஸ்தானத்திலிருந்து கண்ணோக்கும்போது, காலா காலங்களில் அவர்களது வல்லமை எல்லைக்குட்பட்டது என உணர்ந்தனர். இன்று இரவு மரணம் உன்னைச் சந்திக்குமென்றால் என்ன செய்வாய்? மரணத்திற்குப் பின் உனக்கு என்ன சம்பவிக்கப்போகிறது? உண்மையாக உனது வாழ்வானது என்ன முக்கியத்தை அடையப் போகிறது? இக்கேள்விகளுக்கு உனக்கு பதில் அளிக்க இயலுமா? அல்லது இவைகள் குறித்து யூகம் செய்கிறாயா? இதைப்போன்ற கேள்விகள் அதிக கவனத்தை ஈர்க்கக்கூடியதாய் இருக்கிறது,, இப்படிப்பட்டவைகளே நெபுகாத்நேச்சாருக்கும் அவனது கூட்டாளிகளுக்கும் அந்த இரவில் பயத்தை அளிக்கக்கூடியவையாய் இருந்தது.

வசனம் 2ல் நெபுகாத்நேச்சார் இப்பொழுது தனக்கு அறிவுரை வழங்குகிறவர்களை அழைப்பித்து தனது பிரச்சனைக்கு பரிகாரம் தேட முயன்றான். இங்கு பலதரப்பட்ட மக்களின் பதவிகுறிப்படுகிறது. இம்மனிதர்கள் மிகவும் அறிவில் சிறந்தவர்களாகவும் மற்றும் மனித இராஜ்ஜியத்தில் "ஞானம்" இதனை அடிப்படையாய் கொண்டவர்களுமாய் இருந்தார்கள். மனித இராஜ்ஜியத்தில் இப்படிப்பட்ட ஞானிகள் தேவனது வார்த்தையை விட ஞானமுள்ளகாரியங்களை அறிகிறவர்களாய் எண்ணிக்கொண்டனர். இருப்பினும் அவர்கள் அனைவரும் நெபுகாத்நேச்சாரின் தவிப்பாலும், அறிவு மழுகத்தாலும் வாயடைக்கப்பட்டனர். எந்த ஒரு கலாச்சாரமும் சிறப்பானது எனக்கூறுவதற்கில்லை என்பதை நாம் அறிவோம். அவர்கள் கூறுகிறார்கள், எல்லா கலாச்சாரங்களையும் சீர்தூக்கிப்பார்ப்பது அவசியம் என்கின்றனர். அவர்கள் கூறுவது, "மலைக்கு ஏறிச்செல்வதற்கு அநேகப்பாதைகள் உண்டு" என்கின்றனர். பிரத்தியேகமான தெய்வீகக் கண்ணோட்டக்கருத்துக்கு இது எதிர்மாறானதாய் இருக்கிறது. மனிதன் யூகிக்கிறவனாய் இருக்கிறான் தேவனோ வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார். இந்த இராஜாவுக்கு அவசியமானது தேவனின் வெளிப்பாடாய் இருந்தது, மனிதனின் கற்பனையோ, அல்லது மாந்திரீக புத்தகங்களின் வரையறைக்குட்பட்ட கருத்துக்களையோ அல்ல.

ஹெரோடிட்டஸ் என்பவர் நமக்கு கூறும் கருத்து என்னவெனில், இப்படிப்பட்ட ஞானிகள் (Maji) எகிப்திய மற்றும் கிரேக்க கணிதவியல், வானசாஸ்திரம் மற்றும் வானவியல் போன்றவைகளில் பயிற்றுவிக்கப்பட்டவர்களாய் இருப்பர். இப்படிப்பட்ட மனிதரை பண்டைய உலகில் மக்கள் தேடுகிறவர்களாய் இருந்தனர், இவர்கள் ஞானிகள் என அறியப்பட்டனர். இப்படிப்பட்டவர்கள் மிகவும் இறுமாப்புள்ளவர்களும், இவ்ர்களது தேவைகளில் சிருஷ்டி கர்த்தரை புறக்கணிக்கிறவர்களுமாய் இருந்தனர். மக்கள் பாபிலோனுக்கு அனுப்பப்பட்டு இப்படிப்பட்ட ஞானிகளிடம் ஞானத்தைப் பயின்று வந்தனர். இங்கு நாம் மனித ஞானத்திற்கும் தேவ ஞானத்திற்கும் உள்ள முறண்பாட்டையும், வேறுபாட்டையும் காண்கிறவர்களாய் இருக்கிறோம். மனித இராஜ்ஜியத்தில் இறுதி பொறுப்பாளராய் தேவனால் விடுவிக்கப்பட்ட இளைஞராய் தானியேல் விளங்குகிறார். பாபிலோனின் ஞானிகள் முதிர்வயதுள்ளவர்களாய் இருந்தனர், இருப்பினும் அவர்களை சரிசெய்ய தேவனது வழிநடத்துதலை பெற்ற தானியேலால் மட்டுமே சாத்தியமானது.

ஆவிக்குரிய / தத்துவ ரீதியான உயர்மட்ட அதிகாரிகள் ஐந்து குழுக்களாய் இருந்தனர்:

[1] மந்திரவாதிகள் - பேனாவினால் எழுதுபவர்கள், வேதபாரகர்கள் அல்லது சட்ட ரீதியான பதவி வகிப்போர்.

[2] வானசாஸ்திரிகள் - முனுமுனுப்பவர்கள் அல்லது மந்திரம் உச்சரிப்பவர்கள். இப்படிப்பட்ட மக்கள் கணிதம், விஞ்ஞானம், வானசாஸ்திரம் போன்றவற்றில் திறமை மிக்கவர்கள். இப்படிப்பட்டவர்கள் ஆவிக்குரிய அறிவாற்றல் மிக்கவர்கள்.

[3] குறிசொல்பவர் - இப்படிப்பட்டவர்கள் ஜனங்களை கையாளுவதில் திறமைமிக்கவர்கள், இவர்கள் தற்போது பொது உறவுதுறைக் குழுவைச் சார்ந்தவர்கள் எனக் கூறலாம். குறிசொல்பவர்கள் மிக ஆழமான தவறான இயற்கைகு அப்பாற்பட்ட உபதேசம் அளிப்பதில் மூழ்கிப்போனவர்கள், மாயம் பண்ணுபவர்கள் அல்லது இக்கால மக்கள் voodoo போன்றவைகளில் ஈடுபட்டு சபிப்பவர்கள். உபாகமம் 18:10, 2 இராஜாக்கள் 19:22.

[4] கல்தேயர்கள் - இவர்கள் ஆசாரிய வகுப்பைச் சார்ந்தவர்கள், இவர்கள் பொதுவான கலாச்சாரத்தில் தலைமைத்துவம் வகிப்பவர்கள்.

[5] சன்னதம் சொல்பவர்கள் - இப்புறஜாதியார் வேதாகம தீர்க்கதரிசிகளுக்கு சமமானவர்கள் இவர்கள் முக்கியமாய் பிசாசு பிடித்தவர்களாய் இருப்பர். இக்குழுவினர் வசனம் 27ல் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நெபுகாத்நேச்சார் அதிகாரத்தின் உச்சியில் எல்லாவற்றையும் பெற்றவனாய் இருந்தான், இருப்பினும் அவனால் இத்துன்பம் தரும் பிரச்சனையிலிருந்து விடுபட இயலாமல் தவித்தான். தான் உண்மையிலேயே சுயேட்சையாய் இல்லாதிருப்பதை உணர்ந்து கொண்டான், அவன் தவறான போதனையாளர்களை சார்ந்து இருந்தான், அவன் உண்மையிலே சந்தேகப்படுகிறவனாயும் தனது சொப்பனத்தால் கண்ணியில் அகப்பட்டவனாயும் காணப்பட்டான்.

நெபுகாத்நேச்சாரின் நடவடிக்கை யாத்திராகமம் 7:11ல் பார்வோனுக்கு இணையாகக் காணப்பட்டது, பாபிலோனின் ஞானி குழுவினர் போன்றே எகிப்திலும் ஞானி குழுவினர் காணப்பட்டனர்.

வசனம் 3ல் தனக்கு அறிவுரை வழங்குபவர்களிடம் தனது தேவையை வெளிப்படுத்தினான். அவன் ஒரு இளம் வயதுள்ள இளவரசனாக, மற்றும் அவர்களிடமிருந்து அனைத்தையும் கற்றுக்கொண்டவனாய் சொன்னான்

ஆனால் அவர்கள் இப்பொழுதோ ஞானத்தில் குறைவுபட்டவர்களாய், அவன் கண்ட சொப்பனத்தைக் குறித்து அர்த்தம் சொல்ல தடுமாறுகிறவர்களாய் காணப்பட்டனர். இந்த பணிக்கு ஒவ்வாதவர்களாய் காணப்பட்டனர்.

அவன் குறிப்பிடும்போது அவன் கண்ட சொப்பனத்தை மறந்துவிட்டதாய் சொன்னான், அனால் உண்மையிலே அவனால் அதை மறக்க இயலாது இருந்தது. தனக்கு ஆலோசனை அளிப்பவர்களை அவன் பரீட்சை செய்பவனாய் இருந்தான். அவன் சொப்பனத்தை வெளிப்படுத்தாமல் மறைத்ததற்கு காரணம், அவர்கள் அந்த சொப்பனத்தை தங்கள் புத்தகங்கள் கூறும் காரியங்களால் விவரித்து உண்மையான அர்த்தத்தை வேறுவிதமாய் விமர்சித்திருப்பார்கள். அவனுக்கு உண்மையான அர்த்தம் அவசியப்படுகிறதாய் இருந்தது. சிருஷ்டிப்பின் தேவனிடமிருந்து அதற்கான அர்த்தத்தை அவன் நாடினான். அவன் இந்த சொப்பனமானது இதற்கு முன் கண்ட சொப்பனங்கள் போல் இல்லாதிருந்தது. எப்படியிருப்பினும் அவர்கள் அவன் கண்ட சொப்பனத்தைக் கூறுவார்களேயானால், அது அவனது நம்பிக்கையை அவர்கள் மேல் மிகவும் பெருகப்பண்ணுவதாய் இருந்தது.

தானியேல் 2:4 முதல் 7:28 வரையில் தானியேல் புத்தகத்தில் எபிரெய மொழிக்குப் பதிலாய் அரமேயு மொழியில் எழுதப்பட்டுள்ளது. இது புறஜாதியாரின் யுகம்/ஆழுகை ஆரம்பமானதை நினைவுபடுத்துகிறது, இந் த் பாஷை அவர்கள் பேசும் மொழியாய் இருந்தது மற்றும் தானியேல் வெளியரங்கமாய் அரசியல் காரியங்களில் நுழைவதை இப்புது யுகத்தில் காண்கிறோம். அவர்களது ஆதிக்கத்தின் கீழ் அவர்களது மொழிபேசுகிறவனாய் விளங்கினான். இன்றைய அளவில் இஸ்ரவேல் அரசியல்வாதிகள் மேற்கத்திய கலாச்சார ஆடை அணிந்து சர்வதேச உதவியை நாடி ஆங்கில மொழி பேசுவதைப் போன்று இருக்கிறது. புறஜாதியாரின் யுகமானது கர்த்தரின் இரண்டாம் வருகைவரை நீடிப்பதாய் இருக்கிறது. இதைக்குறித்து மழுங்கலான நிலையில் இதை தொடர்ந்துள்ள அதிகாரங்களில் கூறப்படுவதை நாம் காண்கிறோம்.

இந்த சவாலானது நெபுகாத்நேச்சார் தனது ஆலோசகர்களை எவ்விதம் அறிந்து இருந்தான் எனப்பார்க்கிறோம், அவனது ஆலோசகர்கள் அறிவில் தேறினவர்கள் இருப்பினும் அவன் அவர்கள் எல்லாரிலும் ஞானமுள்ளவனாய் காணப்படுகிறான். இங்கு அவர்களது குளறுபாடுகள், அவர்கள் சொப்பனத்தை முன்னதாகக் கூறும்படி கேட்டுக்கொள்வதில் விளங்குகிறதாய் இருக்கிறது மட்டுமின்றி அவர்கள் வியாக்கியானம் இயற்கைக்கு அப்பாற்பட்டதாய் இராமல், அவர்களது வியாக்கியானப்புத்தகங்களிலிருந்து அளிக்கப்படுவதாய் இருந்தது.

"இராஜாவே நீர் நீடூளி வாழ்க" என்னும் சொற்றொடர் பண்டைய உலகில் இராஜரீக நிலையில் குறிப்பிடப்படுகிற ஒன்றாய் இருந்தது. இது தானியேல் புத்தகத்தில் திரும்பத் திரும்ப கூறப்பட்டுள்ளது. தானியேல் 3:9, 5:10, 6:6, 21.

வசனம் 5ல் இராஜா சாஸ்திரிகளிடம் அப்பணியை நிறைவேற்ற என்ன தோல்வி உள்ளடங்கியுள்ளது எனக் கூறுகிறான். தோல்விக்கான தண்டனை ஞானிகளும் அவர்கள் குடும்பத்தினர் அனைவரும் தலை துண்டிக்கப்படுவார்கள், அவர்கள் வீடுகள் இடிக்கப்பட்டு எருக்களமாக்கப்படும். இன்றைய பொது சேவையில் இது கடினமான ஒன்றாய் தோன்றினாலும் சில வேலைகளில் ஒருவர் இப்படி சொன்னார், கேபினட் அமைச்சரின் மனதை கற்றறிதல் வேண்டும்.

இந்த வசனத்தை அநேக வியாக்கியானிகள் நம்புவது நெபுகாத்நேச்சார் தனது சொப்பனத்தை மறந்து விட்டதாய் கூறுகின்றனர், ஆனால் அவன் மிகுந்தபயத்துடனும் விளக்கமாய் நினைவு கூர்ந்தான் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. வசனம் 8ல் "என்னிடத்திலிருந்து தீர்மானம் பிறந்தபடியினால்.." என்னும் சொற்றொடர் ஒரு சட்டத்தை கொடுப்பதற்கு சமமாய் இருக்கிறது. என்ன நிகழப்போகிறது என்பதை அவன் சொன்னான் மற்றும் தனக்கு கற்று கொடுத்தவர்கள் அனைவருக்கும் முன் ஆணை இடுவித்தான். "அதற்கு இராஜா பிரதியுத்தரமாக என்னிடத்திலிருந்து தீர்மானம் பிறந்தபடியினாலே, இப்பொழுது சொப்பனத்திற்கான அர்த்தம் எனக்கு அவசியம் என்றான்."

சமுதாய சிப்பந்திகள் நெபுகாத்நேச்சாரின் சொப்பனத்தை அறிந்து கொள்ள முயன்று தோல்வியுற்றனர். இறுதியாக நெபுகாத்நேச்சார் தனது பொறுமையை இழந்தவனாய், ஞானிகள் அனைவரையும் மற்றும் தானியேல் மற்றும் அவனது நண்பர்கள் அனைவரையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான் என்பதை வசனம் 13ல் காண்கிறோம். இது அறியாமையுள்ளோர் பாடுஅனுபவித்து மரிப்பதற்கு பூரண முன்மாதிரியாய் இருந்தது. மட்டுமின்றி எல்லா காரியங்களுக்கும் சமயம் மற்றும் நமது வாழ்வின் விபரங்கள் அனைத்தும் தேவன் கரத்தில் இருக்கிறது என்பதை நினைப்பூட்டுகிறதாய் இருக்கிறது. தானியேலும் அவனது நண்பர்களும் இன்னும் "பட்டதரிகள்" ஆகாதிருந்தனர் அவர்களை தீர்த்துகட்டுவதற்கு. ஜெபத்திற்கும் தேவனது திட்டம் மற்றும் அவரது சமயம்/நோக்கம் இவற்றை அறிவதற்கு அவரில் முழுவிசுவாசம் வைப்பத் என்பது ஒரு பெரிய சவாலாய் இருந்தது. அவர்கள் மரிப்பதற்காகவா அவர்களது படிப்பை நிறைவு செய்தனர்? - இல்லை - அவர்கள் ஆபிரகாமின் விசுவாசத்தை இல்லாதவைகளை

இருக்கிறவைகளாய் அழைக்கிறவர்களாயிருந்தனர் (பிரச்சனைக்கு பதில் காண விழைந்தனர்)

இத்தகைய தண்டனையானது பெர்சிய சாம்ராஜ்ஜிய் ஆளுகை வரை நீடித்ததாய் இருந்தது எஸ்றா 6:11ல் காண்கிறபிரகாரம் தரியூ தனது சட்டத்தை மாற்றும் மக்களுக்கு இவ்விதமான தண்டனை அளிக்கப்பட்டது. இதைப்போன்ற அணுகுமுறையினை 2 இராஜாக்கள் 10:27ல் காட்டப்படுகிறது பாகாலின் ஆலயமானது தீட்டப்படுத்தப்பட்டு, அவமதிக்கப்பட்டு யெகூ ஆளுகை செய்தபோது பாகால் வணக்கத்தை முற்றிலும் இஸ்ரவேலில் ஒழியப்பண்ணினான்.

முற்றிலும் தோல்வியுற்ற மக்களுக்கு இது ஒரு அடையாளமாக அல்லது ஒரு அமைப்பாய் இருந்தது. அரசனின் இந்த மனநிலையானது ஆலோசகருக்கு சிறிது வியப்பை அளிப்பதாய் இருந்தது. இந்த தன்னாட்சி செய்யும் மனிதன் தனது இராஜ்ஜியத்தை கட்டத்துவங்கினான். பின்னர் ஏதோ ஒன்று கடந்து வந்து இவனது நம்பிக்கையை கலைக்கிறதாய் அமைந்தது, அதினிமித்தம் அவன் தனது முழு அமைப்பையும் அழிக்கத் துவங்கினான் அல்லது அழிக்கும்படி பயப்படுத்தினான். நெபுகாத்நேச்சார் பகுத்தறிவாதியாய் இருந்தானோ அல்லது பகுத்தறிவு அற்றவனாய் இருந்தானோ, இந்த காரியத்தில் அவன் தேவனுக்கு முன்பாக தனது முழங்காலை முடக்குகிறவனாய் இல்லை. ஆனால் தேவனோ இக்காரியங்களை அவன் தனது முழங்கால்களை தேவனுக்கு முன்பாய் முடக்குமாறு பயன்படுத்தினார் மற்றும் அவனது மனிதர்களும் இத்தகைய செயல்பாட்டில் உயிர் பிழைக்கும்படி செய்தார். தானியேல் 4.

கலை இலக்கியம் மற்றும் இசை இவைகளை கடந்த 50 ஆண்டுகளில் நோக்கும்பொழுது அவைகளில் உள்ள பெருங்குழப்பத்தைக் கண்டு கொள்ளலாம் மற்றும் தன்னாட்சி செய்த மனிதரின் அவல நிலையினையும், அவர்கள் தேவனைஎதிர்த்து போராடியதையும் காணக்கூடும். இதன் பொருள் தேவனை புறக்கணித்து, அழிக்க முயன்ற செயல்பாட்டை காணக்கூடும். ஆளுகை செய்யும் அரசன் கூறுவது நீங்கள் நல்லவர்கள் அல்ல, உங்கள் அமைப்பும் நல்லதாய் இல்லை. நீங்கள் முக்கியமற்ற பதில்களை கூறுகிறவர்களாயிருக்கிறீர்கள், கடினமான கேள்விகளுக்கு பதில் அளிக்க மறுக்கிறீர்கள், அவன் தான் நம்பும் சொந்த அமைப்பின் மீது கோபம் கொண்டவனாய் இருந்தான், காரணம் தனது தவிப்பின்போது சரியான பதிலை அளித்து அவனை விடுவிக்க தவறிய காரணத்தால்.

வசனம் 6ல் மறுமுயற்சி அளிக்கப்படுகிறது. ஞானிகள் சொப்பத்தைக் கூறி, அதன் அர்த்தத்தை விடுவித்தால் அவர்களுக்கு வெகுமதிகளும், பிரதிபலன்களும், கனமும் அளிக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஞானிகள்

மழுப்புவதை வசனம் 7ல் காண்கிறோம், தங்களது கோரிக்கையை மீண்டும் திரும்ப கேட்கிறார்கள், அதைத் தொடர்ந்த இரு வசனங்களில் நெபுகாத்நேச்சார் தான் கூறியதில் உறுதியாய் இருப்பதைக் காண்கிறோம், மற்றும் ஞானிகளை குற்றப்படுத்தி அவன் இவ்வாறு கூறினான், "நான் சொன்னது சொன்னதே" என்றான்.

கைக்கொள்ளுதல்:

சர்வதேச ஒருலக அரசாங்கம் அமைவது தேவனது சித்தமல்ல. புறஜாதியார் இக்காலத்தில் சக்கரவர்த்திமுறை ஆட்சி அமைப்பதே அவரது திட்டமாய் இருந்தது. இரு நல்ல உதாரணங்கள் சரித்திரத்திலிருந்து அளிக்கப்படுகிறது, கிறிஸ்துவின் காலத்திற்கு பின் Pax Romanus, மற்றும் 19ம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம். பின்னான காலங்களில் வெற்றிபெற்றவர்களுடன் மிஷனரிமார்கள் இணைந்து செயலாற்றினர். சமாதானம் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் போன்றவை மனிதக் கண்ணோட்டத்தில் 20 மற்றும் 21ம் நூற்றாண்டுகளில் சக்கரவர்த்தி ஆட்சிமுறைக்கு வலுவான முறண்பாடாய் அமைந்தது.

தன்னாட்சி செய்யும் மனிதனுக்கு தேவன் சுய அழிவு அமைப்பினை வைத்தார். தேவன் அவர்கள் இருதயத்தில் வெற்றிடத்தை அமைத்தார், இதினிமித்தம் மனிதன் தேவ சாயலில் உருவாக்கப்பட்டவன் அவன் மிருகத்திலிருந்து வித்தியாசமானவன் என அறியப்பட்டது. நீங்கள் மிருகங்களுடன் தொடர்புகொள்ளக்கூடும் ஆனால் பேச்சுவார்த்தை ஒரு மொழி மூலமாய் தொடர்பு கொள்ள இயலாது, அது வீழ்ந்து போனபோது அழிந்து விட்டது. தன்னாட்சி செய்யும் மனிதன் மூலம் உங்களால் அநேக காரியங்களை அடைய முடியும் ஆனால் உங்களால் நித்தியத்தைக் குறித்து கட்டியெழுப்பப்பட்ட அறிவை அழித்துவிடக்கூடாது மற்றும் இந்த வாழ்வானது எங்கு நிறைவடைகிறது என்பதையும் இதைக் குறித்த உறுதிப்பாட்டையும் அந்த பெரிதான வெறுமை மூலம் அடைகிறவனாய் இருக்கிறான்.

உபதேசம்

HEATHENISM AND GOD CONSCIOUSNESS புறஜாதியும் மற்றும் தேவன் தந்த மனசாட்சியும்.

தானியேல்

பகுதி 5 -ஞானிகள் வியாக்கியானிக்க தவறியதால் அவர்களை அழிக்கும்படியான கட்டளை 2:10-13.

10 கல்தேயர் ராஜசமூகத்தில் பிரதியுத்தரமாக: ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கதக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை, ஆகையால் மகத்துவமும் வல்லமையுமான எந்த இராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை ஒரு சாஸ்திரியினிடத்திலாவது, ஜோசியனிடத்திலாவது, கல்தேயனிடத்திலாவது கேட்டதில்லை 11 இராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது. மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம் பண்ணாத தேவர்களேயொழிய இராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள். 12 இதினிமித்தம் இராஜா மகா கோபமும் உக்கிரமும்கொண்டு பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான். 13 ஞானிகளைக் கொலைசெய்யவேண்டுமென்கிற கட்டளை வெளிபட்டபோது தானியேலையும் அவன் தோழரையும் கொலை செய்யத் தேடினார்கள்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 10ல் ஞானிகள் ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத் தக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை, அதை அவர்கள் சரியாய் சொன்னார்கள் தேவன் ஒருவரே அதைச் செய்ய இயலும். இப்புத்தகமானது மனித கண்ணோட்டம் குறித்து வலிமை மிக்க கேலித்தாக்குதல் உள்ளதாய் விளங்குகிறது சங்கீதம் 2:1-5. தேவன் ஒருவரே இதற்கு மறுமொழி கொடுக்க இயலும் என அவர்கள் கூறினர், மற்றும் அவர் மாமிசத்தில் வாசம் பண்ணாதவராய் இருத்தல் அவசியம் என்றனர். நெபுகாத்நேச்சார் அவர்களுடன் வருத்தத்தை அனுபவித்தார், அவர்கள் அவனை கீழே தாழ்த்துகிறவர்களாய் இருந்தனர், அவன் தனது சாம்ராஜ்ஜியத்தின் பொக்கிஷகங்களை அவர்களுக்காய் விரயம் செய்கிறதாய் எண்ணினான், ஒரு பிரச்சனையில் அவர்கள் தேவை பட்டபோது, அவர்கள் அத்தேவையை சந்திக்கத் தவறினவர்களாய் இருந்தனர்.

இவ்வடிப்படையான கேள்விக்கு பதில் சரியான பதில் கிடையாதபட்சத்தில், ஒரே நேரத்தில் அனைத்தையும் அழிக்க ஆயத்தமுள்ளவனான். இது தானியேலை இராஜாவிடம் சாட்சியாய்

இருப்பதற்கு அல்லது மரிப்பதற்கு வழிநடத்தியது. நாம் இன்றைய அளவில் கூறுகிறபடி "நெருக்கங்களே இல்லை" முழு உலகமுமே அர்த்தமற்றதாய் இருக்குமானால், எவ்வாறு தனிப்பட்ட நபர் அர்த்தத்தைக் காண இயலும்? வேதாகம ஸ்தானப் பிரகாரம் தேவனது வசனமே பிரச்சனைகளுக்கு பதில் அளிப்பதாய் இருக்கிறது, தேவன் சொல்லுவதை மனிதன் கேட்டே ஆக வேண்டும். தானியேல் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்ட போது அது சரியான சமயமாய் இருந்தது, கர்த்தர் அவர் ஊழியம் செய்வதற்கான வாசலை திறக்கலானார். அவ்வூழியம் கீழ்ப்படிதலின் ஊழியமாய் இருந்தது, பரிசுத்த ஆவியானவரின் நிறைவில் நடக்க வேண்டியதாய் இருந்தது. மற்றும் தேவனது நடத்துதலுக்காய் காத்திருக்க வேண்டியதாய் இருந்தது, பின்னர் ஏற்றநேரத்திற்காகவும் உடனடி கீழ்ப்படிதலுடன் ஜெபிப்பதற்கும் வழி நடத்துவதாய் இருந்தது.

நவீனகால கல்வியானது மனிதக் கண்ணோட்டமுடையதாய் இருந்தும் ஆழமான ஆவிக்குரிய பிரச்சனைகளுக்கு பதில் அளிக்க இயலாது இருக்கிறது. மற்ற ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் வேதாகமத்தில் அதைக் கைக்கொள்ளுவதை சார்ந்து இருக்கிறது தானியேல் 2. நீங்கள் தவறான பதில் களுடன் வருவீர்களானால், வேதாகம சத்தியத்திற்கு தவறான பதிலை அளிக்கிறவர்களாய் இருப்பீர்கள் மத்தேயு 24:25 மற்றும் வெளிப்படுத்தின விஷேசம் போன்றவற்றிற்கு தவறான பதில்களை அளிப்பவர்களாய் இருப்பீர்கள். நம்மை சரிசெய்து கொள்வோமாக, நம்முடைய நாட்களிலும் நாம் துள்ளியமாய் பதில் அளிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும் இல்லையேல் மரிக்க நேரிடும். உபத்திரவகாலத்தில் விசுவாசிகளுக்கு சத்தியம் அவசியமாய் இருக்கிறது இல்லையேல் அவர்கள் மரணத்தைக் கண்டுகொள்வதாய் இருக்கும்.

கடைசிகாலத்தைக்குறித்த வியாக்கியானம்:

சுவிஷேசகர்கள் தீர்க்கதரிசனத்தைக் குறித்து மூன்றுவித வியாக்கியானங்களைஅளிக்கிறவர்களாய் இருக்கின்றனர். அவையாவன ஆயிரவருட அரசாட்சியில் இருக்கிறோம், ஆயிரவருட அரசாட்சி வர இருக்கிறது, ஆயிரவருட அரசாட்சிக்குமுன். சபையானது இதுவரை சந்தித்திராத காரியங்களை இரட்சிப்பு, கிறிஸ்துவின் ஆளத்துவம் போன்ற வட்டாரங்களில் சந்தித்து வருகிறதாய் இருக்கிறது. நல்ல மனிதர்கள் இங்கு வேறுபட்டு காணப்படுகின்றனர், அவர்கள் கிருபையில் முன்னேறி, கவனமாய் கற்றுக்கொள்கிறவர்களாகி, தாழ்மையுடன் சரியான காரியங்களை ஏற்றுக்கொள்கிறவர்களாகின்றனர்.

சிறப்பான வழியில் இதை விளக்கும் போது சபைக்கும் தேவ இராஜ்ஜியத்திற்கும் உள்ள உறவானது, மேசியா எல்லா தேசங்கள் மீது ஆளுகை செய்வது குறித்து கண்டுகொள்ளப்படுகிறதாய் இருக்கிறது. சபையானது விசுவாசிகள் அனைவரையும் இந்த யுகத்தில் சூழ்ந்து கொள்வதாய் இருக்கிறது, தேவ இராஜ்ஜியம் என்பது ஆளத்துவத்துடன் இயேசு இப்பூமியில் ஆளப்போவதாய் இருக்கிறது.

இக்காலத்தில் பிரபலமான கண்ணோட்டமானது நாம் ஆயிர வருட அரசாட்சியில் இருக்கிறோம் என்பதாகும், இதுவே இன்றைய அளவில் பெரிய ஸ்தாபனங்களில் கைக்கொள்ளப்பட்ட வரும் ஒரே கண்ணோட்டமாய் இருக்கிறது. அது கூறுவது சபையே இராஜ்ஜியமாய் விளங்குகிறது இது பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை நிறைவேறுதலாய் இருந்து வருகிறது.

இவ்வகையான கண்ணோட்டமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சரீரப்பிரகாரமாய் 1000 வருடம் இப்பூமியில் ஆளுகை செய்யப்போவதை மறுதளிக்கிறதாய் இருக்கிறது. சபையானது ஆயிரவருட அரசாட்சியாய் கருதப்பட்டு வருகிறது, தேவனது ஆவிக்குரிய இராஜ்ஜியமாய் விளங்கிவருகிறது வேதவாக்கியங்களின் வாக்குத்தத்தங்களை சுதந்தரித்து வருகிறது.

இந்த வியாக்கியானப்படி சரித்திரத்தைக் கண்ணோக்கும்போது, சிலுவையைத் தொடர்ந்து சபையானது உருவானதாய் இருக்கிறது, சபையினால் இராஜ்ஜியமானது அளிக்கப்பட்டுள்ளது, இதைத் தொடர்ந்துள்ள கிறிஸ்துவின் இரண்டாம் வருகையானது நித்தியத்தின் ஆரம்பமாய் இருக்கிறது.

எதிர்கால ஆயிரவருட கண்ணோட்டம், நிகழ்கால ஆயிரவருட கண்ணோட்டத்திலிருந்து உருவானது, அது கூறுவது சபையானது இறுதியாய் உலகை வென்று இப்பூமியில் கிறிஸ்துவுக்காய் இராஜ்ஜியத்தை உருவாக்குகிறதாய் இருக்கிறது. இதுவே சமீக கால வளர்ச்சியாய் இருக்கிறது.

மூன்றாவது கண்ணோட்டம் ஆயிரவருட முன்னர் கண்ணோட்டம், இதன்படி சபையானது உபத்திரக்காலத்தில் அகற்றப்பட்டு ஆயிரவருட அரசாட்சியின் போது திரும்பும். இத்தகைய கண்ணோட்டமானது கிறிஸ்து திரும்ப வந்து ஆயிரவருடம் ஆளுகை செய்ய இப்பூமியில் இராஜ்ஜியத்தை அமைப்பார், இது மகா உபத்திரவ காலத்திற்கு பின் இருக்கும் இக்கால கட்டத்தில் யூதர்கள் இயேசுவை மேசியாவாக கண்டுகொள்வர் மற்றும் அரேபியர்களும் யூதர்களும் இணைக்கப்பட்டு அவருக்கு ஆராதனை செய்து அவரை சேவிப்பர் இது உலகம் கண்ட

சாத்தானின் மிகப்பெரிய வெளிப்பாட்டிற்கு எதிராக இருக்கும். (இது அந்திக்கிறிஸ்துவின் மேற்கத்திய சாம்ராஜ்ஜியத்தின் தீமையான அமைப்பிற்கு பின் உண்டாகும்)

<u>செயல் முறைக்கு ஒவ்வாதவற்றை மேற்கொள்வோர், பாடல்களை தொகுப்போர், ஆவிக்குரிய காரியங்களை மேற்கொள்வோர் அல்லது ஒப்புமை வியாக்கியானம் அளிப்போர் - ஆயிரவருட ஆளுகை:</u>

இவ்வகையான வியாக்கியானம் முடிவுகாலத்தைக் குறித்து (எதிர்காலத்தைக் குறித்து கற்றுக்கொள்வது) பெரிய அடிப்படைக்கருத்துக்களை சித்தரிக்கிறதாய் இருக்கிறது. இவைகள் முடிவு காலத்தைக்குறித்த வியாக்கியானம் குறித்ததாய் இருக்கிறது இது கிறிஸ்தவத்திற்கு மேலான வெற்றியை அளித்து ஆவிக்குரிய உற்சாகத்தை அளிக்கிறதாய் இருக்கிறது.

இவ்வகையில் வெளிப்படுத்தின விஷேசம் குறித்து Augustine of Hippo என்பவர் 5 ம் நூற்றாண்டில் தீமைக்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையே உள்ள முறண்பாட்டை அடையாள வழியில் சித்தரிக்கிறது எனக்கூறுகிறார் மற்றும் தேவனது பட்டணத்திற்கும் சாத்தானது பட்டணத்திற்கும் உள்ள வேறுபாட்டை சித்தரிக்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

இக்கருத்தைக்குறித்த கண்ணோட்டமானது அலெக்ஸாண்டிரியா இறையியல் பள்ளியில் அலெக்ஸாண்டிரியான் கிளமெந்து மற்றும் ஆரிகன் போன்றோரால் உருவானதாய் இருக்கிறது. வெளிப்படுத்தின விஷேசத்தின் தலைப்புக் கருத்தானது ஒரு பெரிய ஒப்புமையாய் இருக்கிறது, இது அதிகம் வேதக் கருத்துக்களை இம்மனிதருக்கு அளிப்பதாய் இருந்தது. இவ்வகை கண்ணோட்டத்தை உடையவர்கள் வெளிப்படுத்தல் 20 ல் குறிப்பிடப்பட்டுள்ள 1000 வருடம் குறித்து வாசிக்கும்போது எழுத்தின்படியே அது நிறைவேற வேண்டியது மற்றும் ஆயிரவருட ஆளுகை இவ்வகையில் கண்ணோக்குதல் வேண்டும் என்கின்றனர். இவர்களது கூட்டு சேர்வது குறித்து எச்சரிப்புடன் இருத்தல் வேண்டும், இவர்களது சபையானது வலுவிழந்து இவர்களது சுவிஷேசம் மற்றும் இறையியல் போன்றவை ஜெர்மானிய மற்றும் அரேபிய படையெடுப்பால் முற்றிலும் அகற்றப்பட்டுப் போனது.

THE HISTORICIST INTERPRETATION - POST MILLENNIAL சரித்திர ரீதியான வியாக்கியானம் - ஆயிர வருட ஆளுகையைத் தொடர்ந்த கண்ணோட்டம்.

இக்கண்ணோட்டமானது வெளிப்படுத்தின விஷேசம் வருணிக்கும் சபை சரித்திரத்தை விளக்குகிறதாய் இருக்கிறது, யோவான் கால முதல் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்குமுள்ள சரித்திரத்தை புரிந்து கொள்ளும்படி செய்கிறது. இது ஆரம்பகாலந்தொட்டே புதுகருத்துக்களைக் கூறியபோதும், Joachim of Fiore [1135-1202], இவர் ஒரு ரோமன் கத்தோலிக்க வல்லுனர், ஆயிரவருட ஆளுகையை தொடர்ந்த கண்ணோட்டத்திற்கு முதன் முதலில் வகை செய்தவர்.

இவ்வகையான வியாக்கியானம் மறுமலர்ச்சி காலங்களில் பிரசித்தமானது காரணம் போப் மற்றும் போப்பின் ஆளுகையானது மிருகத்தின் ஆளுகைக்கு ஒப்பாக கருதப்பட்டது வெளி. 13 ம் அதிகாரம். விக்கிளிஃப், லூத்தர், ஜோசப் ஆகியோர் இக்கண்ணோட்டதை ஆதரித்தவர்களாய் விளங்கினர்.

இக்கண்ணோட்டத்தின் ஒரு பிரச்சனை என்னவெனில், இரு வல்லுனர்கள் வெளிப்படுத்தின விஷேசத்தில் உள்ள சரித்திர நிகழ்வுகள் குறித்து சித்தரிக்கப்படுவதை ஒத்துக்கொள்ளாதவாறு இருந்தனர். சரித்திர பிரகாரமான வியாக்கியானங்கள் மிகவும் வித்தியாசப்பட்டு காணப்படுகின்றன. இது சரியான வியாக்கியான முறையாய் இருக்குமானால், அது மனிதனுக்கு தேவனது வெளிப்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டதாய் இருக்கும்.

One problem with this view is that no two scholars can agree in the identification of the personnel pictured in Revelation of the historic interpretation of the events. The very variety of historical interpretations is its own downfall. If this is the correct method of interpretation, then it is clear that no one has found the key or understood God's revelation to man.

THE FUTURIST OR LITERAL INTERPRETATION - PRE MILLENIAL எதிர்கால அல்லது எழுத்தின்படியான வியாக்கியானம் - PRE MILLENIAL

இறுதிகால கண்ணோட்டங்களைக் குறித்து வெளிப்படுத்தி விஷேசம் 4-22 அதிகாரங்களின் கால கிரமப்படியுள்ள சம்பவங்கள் இனி நிறைவேற வேண்டியுள்ளது. இதுவே ஆரம்ப சபையின் கண்ணோட்டமாய் இருந்தது, ஆவிக்குரிய வீழ்ச்சிகாரணமாய் இவ்வித உபதேசமானது சீரழிந்து போயிற்று. இப்படிப்பட்ட கண்ணோட்டத்தையே நாம் [EBCWAல்] கைக்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம். நாம் தீர்க்கதரிசனம்

முழுவதும் தெளிவுடன் நிறைவேறும் வரை காத்திருக்கிறவர்களாய் இருக்கிறோம்.

இதற்கு முன் கிறிஸ்து வாழ்ந்த காலத்தில், யூதர்களின் கருத்தானது மேசியாவின் இராஜ்ஜியம் இப்பூமியில் 1000 வருடம் அரசாள வேண்டியதாய் இருந்தது. ஆயிரவருட ஆளுகை என்பது ஆதியாகமம் 1,2 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ள சிருஷ்டிப்பின் வாரத்தினை வரிசைப்படுத்தி பார்க்கும் போது இது சரித்திரத்தின் இறுதியாய் இடம் பெறும் சாபத் வருடங்களாய் கணக்கில் கொள்ளப்படுகிறது. மனிதன் ஏதேன் தோட்டத்தில் இழந்த காரியங்கள் இந்த ஆயிரம் ஆண்டுகாலங்கள் மீட்டுத்தரப்பட உள்ளது, இது எருசலேமில் கர்த்தர் ஆளுகை செய்து பூரணமான சூழலில் தனிப்பட்ட நிலையில் ஆளுகை செய்வதைக் காட்டுவதாய் இருக்கிறது. இக்கருத்தையே நாம் விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறோம், இதையே யோவான் வெளிப்படுத்தின விஷேசத்தில் தெளிவுபட விளங்கக் கூறுகிறவராய் இருக்கிறார்.

கி மு 4ம் நூற்றாண்டு வரை சபையானது Pre Millennial கண்ணோட்டத்தையே ஆதரித்து வந்தது. இது மறைந்து போனதற்கான காரணம் கான்ஸ்டண்டைனால் உபத்திரவப்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டு, கிறிஸ்தவம் ரோம சாம்ராஜ்ஜியத்தின் அரசாங்க மதமாய் மாறிப்போனது. Pre-Millennialism கண்ணோட்டத்தை ஓரங்கட்டி அலுவலக ரீதியில் உள்ள இறையியலால் உருவகப்படுத்தும் இறையியல் துவங்கி இதுவே மறுமலர்ச்சி காலம் வரை ஆதிக்கம் செய்யும் இறையியலாய் திகழ்ந்து வந்தது.

எழுத்தின்படியான பிரசங்க இலக்கியமானது வேதத்தை முகத்தோற்றத்தின்படி ஏற்றுக்கொண்டு ஒரு வேதபகுதியானது அர்த்தம் தரும் வேதபகுதியாய் இருக்குமேயானால், அது அர்த்தமற்ற காரியங்களை உருவாக்காது அதை அப்படியே ஏற்றுக்கொண்டனர். எழுத்தின்படியான பிரசங்க இலக்கியத்தை நாமும் விசுவாசிக்கிறவர்களாய் இருக்கிறோம், இதையே சரி என்று கூறுகிறோம், இதுவே அர்த்தமற்ற காரியங்களைவிட அர்த்தம் மிகுந்தவைகளை ஏற்றுக்கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது.

THREE ISSUES AND THE THREE CONCEPTS மூன்று பிரச்சனைகளும் மூன்று கருத்துக்களும்:

[A] கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சரித்திர இறுதியில் நிகழுமா? Does the Return of Christ End History?

amillennialism and post millennialism இவ்விரண்டும் கிறிஸ்துவின் வ்ருகையில் சரித்திரம் நிறைவுக்கு வந்து, நித்தியமானது துவங்குகிறதாய் இருக்கிறது எனக் கூறுகிறது.

Premillennialism இதை மறுக்கிறதாய் இருக்கிறது, சரித்திரத்தின் இறுதி நிலையானது துவங்கி, அது 1000 வருட இயேசுக் கிறிஸ்துவின் ஆளுகையாய் இறுதி நியாயத்தீர்ப்புக்கு முன் நிகழ்வதாய் உள்ளது அதன் பின்னரே நித்தியம் துவங்குகிறதாய் உள்ளது.

[B] தேவனது இராஜ்ஜியம் எழுத்தின்படியே உலக கலாச்சாரத்தை ஆண்டுகொள்ளுமா?

pre and post millennialists இருபாலரும் மனித கலாச்சாரம் அடக்கியாளப்படும் என ஒத்துக்கொள்கின்றனர். . The pre millennial group சொல்வது என்னவெனில் இயேசு கிறிஸ்து தனது வருகையின் போது இதை நிறைவேற்றுவார், post millennial group கூறும்போது கிறிஸ்துவுக்காய் இதை சபை செய்து முடிக்கும் என்கின்றனர்.

இதை Amillennial group இறையியல் வல்லுனர்கள் மறுக்கின்றனர். அவர்கள் கூறும் பொழுது தேவனது இராஜ்ஜியம் ஒருபோதும் மனிதரின் கலாச்சாரத்தை ஆளுகை செய்யப்போவதில்லை என்கின்றனர்.

[C] இயேசு கிறிஸ்துவின் வருகை வரை தீமை ஒரு சக்தியாய் வியாபித்து இருக்குமா?

Pre and Amillennial இருபாலரும் தீமையானது இயேசுக் கிறிஸ்துவின் வருகை வரை நிலைத்திருக்கும் என ஒத்துக்கொள்கின்றனர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒழியப்பண்ணும் வரை பேரழிவின் குறுக்கீடுகள் இருந்து கொண்டே இருக்கும்.

The Postmillennialist கூறுவது என்னவெனில், இயேசு க்றிஸ்து ஒருபோதும் சபை மூலமாய் தீமையை மேற்கொள்வதில்லை என்கின்றனர். இதினிமித்தம் தீமையானது தீமையின் வல்லமைகள் பின்னிட்டு அகன்று போகிறதாய் இருக்கும். கீர்த்தனையான"Onward Christian Soldiers" post millennial hymn ஆக இக்கருத்தை மையமாய் கொண்டுள்ளது

ADOPTED INTERPRETATION சேர்த்துக் கொள்ளப்பட்ட வியாக்கியானம்:

சேர்த்துக்கொள்ளப்பட்ட வியாக்கியானம் எல்லா பிரசுரங்களிலும் எதிர்காலத்தில் இது நிகழும் அல்லது எழுத்தின்படியான வியாக்கியானத்தை ஆதரிப்பதாய் இருக்கின்றன - the pre millennial interpretation. இவ்வகை வியாக்கியானத்தை ஆதரிக்கின்றன.

வசனங்கள் 10-11ல் இந்நாள் வரை ஞானிகள் மனித ஞானத்தை பயன்படுத்தி, மனித அறிவினால் தங்களது திறமையை விளங்கப்பண்ணி வருகின்றனர். அவர்கள் நிகழ்ந்தவைக் கொண்டு சரியான விளக்கங்களை அளித்து வியப்பிற்குள்ளாகச் செய்யலாம்.

தேவன் சரியான சூழல்களைப் பயன்படுத்தி இப்படிப்பட்ட ஞானம் ஆழமில்லாதது மற்றும் யூகத்தன்மையுடையது என்பதை விளங்கச் செய்து, தாம் ஒருவரே ஞானமுள்ளவராய் விளங்கி வருகிறார்.

ஞானிகள் மனித ஞானத்தைச் சார்ந்து இருக்கின்றனர் அவர்கள் இப்பொழுது அவர்களது திறமை குறைவால் மூன்று வழிகளில் பிரச்சனைகளுக்கு தீர்வு காண விழைகிறார்கள்.

முதலாவதாக அவர்கள் கூறுவது மனிதரால் இது கூடாததுதான். - "பூமியில் உள்ள மனிதரால் இராஜாவின் காரியத்தை விடுவிக்கக் கூடாது" என்றனர்.

இரண்டாவதாய்: நெபுகாத்நேச்சார் காரணமற்ற முன்நிகழ்வுகளை உருவாக்குகிறவராய் இருக்கிறார் என்றனர் - "ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கதக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை, ஆகையால் மகத்துவமும் வல்லமையுமான எந்த இராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை ஒரு சாஸ்திரியினிடத்திலாவது, ஜோசியனிடத்திலாவது, கல்தேயனிடத்திலாவது கேட்டதில்லை" என்றனர்.

இறுதியாய் பாபிலோனிய தேவர்கள் இதை அறியக்கூடும் - "மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம் பண்ணாத தேவர்களேயொழிய இராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள்." அவர்கள் தங்கள் தேவர்கள் கூட இதை அறிவிப்பதற்கு இயலாது, இப்படிப்பட்ட மதியீனமான பிரதியுத்தரம், தேவனது சரியான நேரத்தையும், திட்டத்தையும் தெரிவித்து தானியேலுக்கு அனுகூலமான வாசலை திறப்பதற்கு வழிவகுத்தது.

இந்த சந்தர்ப்பத்தில் தானியேல் வியாக்கியானித்து மறுமொழி அளித்தமையால், அதை அநேக ஆண்டுகாலம் ஞானிகள் நினைவு கூற

நேர்ந்தது. 60 ஆண்டு காலம் கழித்து பெல்ஷாத்சாரின் விருந்தின் போது அந்த ஞானத்தை மறவாமல் நினைகூர்ந்தனர். தானியேல் 5:11.

இராஜாவை மாற்றி அமைத்து அவனை பதவி இழக்கச் செய்தபோது, நெபுகாத்நேச்சார் சொப்பனத்தால் அதிகம் பயந்து மிகவும் அதிகமாய் நெருக்கப்பட்டான் மற்றும் கோபப்பட்டான், அவன் சொப்பனத்தை அறிந்து புரிந்தவனாய் இருந்தான், அவனது எதிர்காலம் அதைப் புரிந்து கொண்டதை பொறுத்ததாய் இருந்தது. அவன் 100% சரியாய் நிதானித்தான், முழு மனுக்குலத்தின் சரித்திரமானது முன்கூட்டியே எழுதப்பட்டு இந்த சொப்பனத்தால் அதை மனிதர் முன்கூட்டியே அறிய நேரிட்டது.

வசனம் 12 மற்றும் 13ல் நெபுகாத்நேச்சார் தனது ஆலோசகரைக் குறித்த பொறுமையை இறுதியாய் இழந்து போனான். தனது காவலாலிகளிடம் தானியேல் உட்பட, அவனது நண்பர்கள் மற்றும் முழு ஞானிகளின் குழுவினரையும் அழிக்கும்படி உத்தரவிட்டான். இது ஒரு நல்ல உதாரணமாகி நீதிமான் மற்றவர்களோடு சம்மந்தப்பட்ட நிலையில், பிரச்சனைக்கு காரணமானவர்களோடு பாடுஅனுபவிப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

வசனம் 13ல் "qetal" என்கிற எபிரெய சொல் இருமுறைப் பயன்படுத்தப்பட்டுள்ளது,இதன் மொழியாக்கம் வெட்டுதல் என்பதாகும். ஞானிகளைப் பொறுத்த மட்டில் மூலச்சொல்லாகிய .qetal என்னும் சொல் niphal என்கிற செயப்பாட்டு வினைச்சொல்லாய் இருக்கிறது. இதன் பொருள் அவர்கள் கொலை செய்யப்படுவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. எப்படியிருப்பினும் ஞானிகளின் மனநிலையானது தானியேலும் அவனது நண்பர்களும் "qetal" செய்யப்படுவதை காட்டுகிறதாய் குறிப்பிடப்படுகிறது, ஞானிகள் விபரீதமான முறையில் அவர்களை கொலை செய்ய வாஞ்சித்தனர்.

இத்தருணத்தில் தானியேல் பிரச்சனையிலிருந்து எப்படியோ தப்பிக்கொள்கிறவராய் காணப்படுகிறார், இதற்கு முன்னுள்ள அதிகாரத்தில் வெற்றிகரமாய் மரக்கறி உணவிற்கு மாறியது போல இந்நிகழ்வும் அமைகிறதாய் இருக்கிறது. இப்பொழுது அவனுக்கு நேரிடும் மரண பிரச்சனையை தேவனது ஆதாரத்தாலும் கூட்டுறவு ஜெபத்தாலும் மேற்கொள்கிறவராய் இருக்கிறார்.

கைக்கொள்ளுதல்:

ஒரு விசுவாசி தனது சொந்த ஞானத்தை சார்ந்து பிரச்சனையை சரிசெய்தல் என்பது கூடாத காரியமாய் இருக்கிறது - நீதிமொழிகள் 3:5-6. ஜெபத்தில் தரித்திருப்பது இதற்கு வழி உண்டாக்குவதாய் இருக்கிறது.

தேவன் சூழ்நிலைகளை பயன்படுத்தி ஒரு அவிசுவாசியின் இயலாமையை காட்டுகிறவராய் இருக்கிறார் அதன் மூலம் அவனது பிரச்சனையை கணக்கிடச்செய்கிறார்.

அறியாமையுள்ள மக்கள் அடிக்கடி மற்றவர்களது பாவங்களால் பாதிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

பாடுகள் என்பது கிறிஸ்தவர்களின் வளர்ச்சியில் துணைபுரிகிறதாய் இருக்கிறது. ஒரு விசுவாசிக்கு தேவன் உதவி செய்கிறவராய் இருக்கிறார் மற்றும் அவர்களது பாடுகளில் அவர்களுக்கு துணை செய்கிறவராய் இருக்கிறார். 1 கொரி 10:13.

DOCTRINE உபதேசம்:

ANGER கோபம்

தானியேல்

பகுதி 6 - சொப்பனத்தைக் குறித்துத் தானியேல் தேவனிடம் ஜெபித்தல் 2:14-18.

14 Then Daniel answered with counsel and wisdom to Arioch the captain of the king's guard, which was gone forth to slay the wise men of Babylon: 15 He answered and said to Arioch the king's captain, Why is the decree so hasty from the king? Then Arioch made the thing known to Daniel. 16 Then Daniel went in, and desired of the king that he would give him time, and that he would shew the king the interpretation. 17 Then Daniel went to his house, and made the thing known to Hananiah, Mishael, and Azariah, his companions: 18 That they would desire mercies of the God of heaven concerning this secret; that Daniel and his fellows should not perish with the rest of the wise men of Babylon.

பிண்ணனியமும் பகுப்பாய்வும்:

வசனம் 16ல் தானியேல் பிரச்சனையை கேள்விப்பட்ட போது, எதைக் குறித்தும் பயப்படாமல், தனது ஜீவன் தேவனது கையில் இருப்பதை உறுதியாய் நம்பி தான் மரிப்பது அர்த்தமற்றது என்பதை உறுதியாய் நம்பினார். கர்த்தரிடத்தில் இப்பிரச்சனைக்கான தீர்வு உண்டென நம்பினார். இதினிமித்தம் தன்னை கொலைசெய்யும் படி வந்த

இராஜாவின் பிராதனியுடன் பேசினான். வசனம் 16 ல் தனக்கு சமயம் அவசியப்படுவதைக் கேட்டுக்கொண்டார். அவருக்கு பதில் ஒன்றும் தெரியாது இருப்பினும் தான் விசுவாசிக்கும் தேவனால் பதில் அளிக்க இயலும் என நம்பினார். மேல் நோக்கி செல்லும் கர்த்தரது வழியில் வாழ்வில் ஏதோ ஓரிடத்திற்கு வழிநடத்திச் செல்லும் என நம்பினார் - ஜெபமானது அவ்வழியை நமக்குக் காட்டுவதாய் இருக்கும்.

வசனம் 17 மற்றும் 18 ல் தானியேல் தனது வீட்டிற்கு திரும்புகிறார், தனது நண்பர்களுடன் பிரச்சனை குறித்து விவாதிக்கிறார் மற்றும் பிரச்சனைக்கான தீர்வு காண ஜெபிக்கத் துவங்குகிறார். அவருக்கு விசுவாசிகளான மூன்று சிநேகிதர் இருந்தனர் அவர்களுடன் இணைந்து ஜெபிக்கலானார் அவர்கள் சங்கீதம் 50:15 ஐ அடிப்படையாக கொண்டு ஜெபிக்கலானார்கள். "ஆபத்துகாலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்." மட்டுமின்றி சங்கீதம் 4:6, 62:5, நீதிமொழிகள் 3:5-6, ஏசாயா 30:18.

பிரச்சனைக்கு தீர்வுகாணும்படி செய்த தேவனுக்கு தானியேலின் பிரதியுத்தரம் நன்றி சொல்வதாய் இருந்தது, அவர் கர்த்தருக்கே மகிமை செலுத்துகிறவார்ய் இருந்தார், தனக்கு மகிமையைத் தேடவில்லை. இது நெபுகாத்நேச்சாருக்கு பெரிய சாட்சியை ஏற்படுத்துகிறதாய் இருந்தது. மனித சரித்திரத்தின் எதிர்காலத்தை புரிந்து கொண்டவராய் மட்டுமல்லாது, தனது பங்கு என்ன என்பதையும் புரிந்து கொண்டான் மற்றும் தன்னைவிட ஒரு பெரிய தேவன் இருக்கிறார் அவர் தன்னை சரித்திரத்தில் உட்படுத்துகிற தேவனாய் இருக்கிறார் என்பதையும் புரிந்து கொண்டான். 3 ம் அதிகாரத்தில் நாம் காண்கிற பிரகாரம் தெய்வீக திட்டத்தை அறிந்து செயலாற்றுவதைக் காண்கிறோம்.

மத்தேயு 18:19ல் கொடுக்கப்பட்டுள்ள கூட்டு ஜெபத்தின் அடிப்படையில் ஜெபிக்கிறவர்களாய் காணப்பட்டனர், கர்த்தர் சொல்கிறதாவது, "உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக்குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."

APPLICATION கைக்கொள்ளுதல்:

மனிதனின் பதில் காண இயலாத இறுதி எல்லையானது தேவனது தருணமாய் இருக்கிறது. நெபுகாத்நேச்சாரின் சொப்பனமானது தேவனுக்கு தன்னை நெபுகாத்நேச்சாருக்கு தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு, தானியேல் மூலம் அவனது ஜனங்களுக்கும்

அவனது இராஜ்ஜியத்திற்கும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும் திறந்த வாசலாய் அமைந்தது.

தேவன் இதை தானியேல் மூலம் நிறைவேற்றி முடிப்பதற்கு, அவன் ஒரு வாலிபனாய் இருந்த போதிலும் அவன் ஒரு ஆயத்தமாக்கப்பட்ட விசுவாசியாய் இருந்தான்.

மனித ஞானமானது அழிந்து போகும் தன்மையுள்ளது, எல்லா ஞானிகளும் நெபுகாத்நேச்சாருக்கு உதவிசெய்ய இயலாது போனது.

தெய்வீகக் கண்ணோட்டமானது எப்பொழுதும் உதவிஅளிக்கக்கூடியதாய் இருக்கிறது, அது மனிதக்கண்ணோட்டம் பயனற்றுப்போகும்போது அதை மேற்கொள்கிறதாய் இருக்கிறது.

தேசீய அளவிலான குறைவின்போது அதிகபட்ச அளவில் சாட்சிபகர வாய்ப்பளிக்கிறது. இது ஒரு விசுவாசியின் நிலையானத் தன்மையை நிலைநாட்டி, அவிசுவாசிகள் அதைக் குறித்து அறிந்துகொள்ளும்படி செய்கிறதாய் இருக்கிறது.

மற்ற விசுவாசிகளுடன் ஐக்கியமாய் இருப்பது மிகவும் அத்தியாசிமானது.

ஜெபம் என்பது எப்பொழுதும் ஒரு விசுவாசிக்கு கிடைக்கக்கூடிய ஒன்றாய் இருக்கிறது, ஜெபத்தின் வல்லமையானது அளவில் அடங்காததாய் இருக்கிறது.

எல்லாவற்றையும் அறிந்த சர்வ ஞானமுள்ள தேவன் கலங்கிப்போயிருந்த நெபுகாத்நேச்சாரின் சொப்பனத்தை வெளிப்படுத்துகிறவராய் இருந்தார். அது நெபுகாத்நேச்சார் முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையுள்ள மனித சரித்திரத்தின் முக்கிய கருத்துக்களை அளிப்பதாய் இருந்தது. மற்றும் நித்திய இராஜ்ஜியம் அமைக்கப்படுவதைக் குறித்ததாய் இருந்தது.

இந்த வகையான ஜெபகூடுகைகளுக்கு எத்துனை கிறிஸ்தவ நண்பர்கள் கூடிவருகிறவர்களாய் இருக்கிறோம்?

How many Christian friends do we have who could come together for a prayer meeting of this type?

DOCTRINE உபதேசம்

PRAYER ஜெபம்.

பகுதி - 7 - பலதரப்பட்ட உலோகத்தாலான சிலை குறித்த சொப்பனத்தைத் தானியேல் விவரித்தல்: தானியேல் 2:19-35.

19 பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது. அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தான். 20 பின்பு தானியேல் சொன்னது தேவனுடைய நாமத்துக்கு என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஞானமும், வல்லமையும் அவருக்கே உரியது. 21 அவர் காலங்களையும், சமயங்களையும் மாற்றுகிறவர். ஞானிகளுக்கு ஞானத்தையும் அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். 22 அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர். இருளில் இருக்கிறதை அவர் அறிவார். வெளிச்சம் அவரிடத்தில் தங்கும். 23 என் பிதாக்களின் தேவனே நீர் எனக்கு ஞானமும் வல்லமையும் கொடுத்து, நாங்கள் உம்மிடத்தில் வேண்டிக்கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து; இராஜாவின் காரியத்தை எங்களுக்குத் தெரிவித்தபடியினால் உம்மைத் துதித்துப் புகழுகிறேன். 24 பின்பு தானியேல் பாபிலோனின் ஞானிகளை அழிக்க இராஜா கட்டளையிட்ட ஆரியோகினிடத்தில் போய்: பாபிலோனின் ஞானிகளை அழிக்காதேயும். என்னை இராஜாவின் முன்பாக அழைத்துக் கொண்டு போம். இராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பேன் என்று சொன்னான். 25. அப்பொழுது ஆரியோகு தானியேலை இராஜாவின் முன்பாக தீவிரமாய் அழைத்துக்கொண்டுபோய், சிறைப்பட்டு வந்த யூதேயா தேசத்தாரில் ஒரு புருஷனைக் கண்டுபிடித்தேன், அவன் இராஜாவுக்கு அர்த்தத்தைத் தெரிவிப்பான் என்றான். 26 இராஜா பெல்ஷாத்சாரென்னும் நாமமுள்ள தானியேலை நோக்கி: நான் கண்ட சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிக்கக்கூடுமா என்று கேட்டான். 27 தானியேல் இராஜசமூகத்தில் பிரதியுத்தரமாக: இராஜா கேட்கிற மறைபொருளை இராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறிசொல்லுகிறவர்களாலும் கூடாது. 28 மறைபொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசிநாட்களில் சம்பவிப்பதை இராஜாவாகிய நெபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார். உம்முடைய சொப்பனமும் உமது படுக்கையின்மேல் உம்முடைய தலையில் உண்டான தரிசனங்களும் என்னவென்றால்: 29 இராஜாவே உம்முடைய படுக்கையின்மேல் நீர்

படுத்திருக்கையில், இனிமேல் சம்பவிக்கப்போகிறதென்ன என்கிற நினைவுகள் உமக்குள் எழும்பிற்று. அப்பொழுது மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப்போகிறதை உமக்குத் தெரிவித்தார். 30 உயிரோடிக்கிற எல்லாரைப்பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அல்ல, அர்த்தம் இராஜாவுக்குத் தெரிய வரவும், உம்முடைய இருதயத்தின் நினைவுகளை நீர் அறியவும், இந்த மறைபொருள் எனக்கு வெளியாக்கப்பட்டது. 31 இராஜாவே நீர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர். அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது, அது உமக்கு எதிரே நின்றது, அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது 32 அந்த சிலையின் தலை பசும்பொன்னும் அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், 33 அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. 24 நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கையால் பெயர்த்தெடுக்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்து அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது. 35 அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப் போலாயிற்று. அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று. சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

இங்கு சங்கீதம் 50:5ன் அடிப்படையில் சமயம் மற்றும் இடைவெளி போன்றவைகளைக் குறித்த கிரியைகளைப் பார்க்கிறோம். இந்த வேதபகுதி ஒரு விசுவாசிக்கு கூறுவது என்னவெனில் துன்பப்படுகிற காலத்தில் கர்த்தரை நோக்கி கூப்பிடு, அவர் உன்னை விடுவிப்பார் நீ அவரை மகிமைப் படுத்துவாய்.

தானியேல் மற்றும் அவனது நண்பர்கள் பதிலை எதிர்பார்த்து ஜெபித்தனர், தேவன் அவர்களது மனநிலையை கனப்படுத்தி சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் அவர்களுக்கு அளித்தார். எல்லாவற்றையும் தேவன் அறிந்தவராய் இருந்தபடியால், அவர் ஒருவரே இதைச் செய்ய இயன்றது.

தானியேல் இப்பொழுது கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறார் மற்றும் இராஜாவுக்கு வெளிப்படுத்தும் தீர்க்கதரிசன ஆதாரத்தை கண்டுகொள்கிறவராய் இருக்கிறார். இதைத் தொடர்ந்த பதினொன்று வசனங்களில் இதற்கான வெகுமதி பெறும் அடிப்படைக்கருத்துக்களை கண்டுகொள்கிறோம். தானியேல் தனது சொந்த முக்கியத்துவத்தை ஒருபோதும் கருதாதவராய், அவர் தேவனது குணாதிசயங்களான அவரது கிருபை மற்றும் இரக்கத்தை சார்ந்து தேவனுக்கு மகிமை செலுத்துகிறவராய் திகழ்கிறார்.

இது எரேமியா 32:19ஐ பிரதிபலித்து தேவன் எப்படிப்பட்டவர் என்பதை கூறுகிறதாய் இருக்கிறது. "யோசனையிலே பெரியவரும், செயலிலே வல்லவருமாயிருக்கிறீர், அவனவனுக்கு அவனனுடைய வழிக்குத்தக்கதாகவும் அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லா வழிகளின்மேலும் நோக்கமாயிருக்கின்றன."

இதன் விளைவாக தானியேலின் மனநிலையானது முழுவதும் சமாதானத்துடனும் மற்றும் மகிழ்ச்சியுடனும் தன்னை கொலை செய்யும்படி பயமுறுத்தினவனின் சமூகத்தில் காணப்பட்டது.

வசனம் 21ல் "காலங்கள் சமயங்கள்" என்கிற வார்த்தைகளை காண்கிறோம். காலம் என்பது கிரேக்கவார்த்தையான "chronos" என்னும் வார்த்தைக்கு சமமானதாய் இருக்கிறது, இதிலிருந்து chronology என்கிற வார்த்தையானது, சமயங்களின் நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாய் சுட்டிக்காட்டப்படுகிறது சமயங்கள் என்கிற கிரேக்க வார்த்தையானது "kairos" இது காலங்களைக் குறிக்கிற வார்த்தையாய் இருந்து வரலாற்று பிரிவுகளை வகையறுக்கிறதாயும் அல்லது யுகங்களுக்கு ஒரு வரைபடம் அளிக்கிறதுமாய் இருக்கிறது.

லேவியராகமம் 26ம் அதிகாரத்திலிருந்து தானியேல் விவரங்களை கற்று அறிந்தவராய் இருந்தார், வடக்கு இராஜ்ஜியமாகிய சமாரிய இராஜ்ஜியமானது தேவனை புறக்கணித்ததன் காரணமாய் தேவனின் சிட்சை வெளிப்பட்டு சிறடிக்கப்பட்டதை அவர் அறிந்திருந்தார். மற்றும் தெற்கு இராஜ்ஜியமான யூதேயாவும் புறஜாதிய ஆளுகைக்குள் கடந்து செல்லும் இறுதிக்கட்டத்தை நெருங்கிக்கொண்டிருப்பதையும் உணர்ந்து வந்தார் [லேவி 26:23-26] இவ்வாறு உணர்ந்து வந்த காரியமானது முழுமையான சிறைபிடித்தல் இன்னும் 30 ஆண்டுகளுக்குள் கிமு 586 ல் இடம்பெற்றதாய் விளங்கிற்று.

எரேமியா 25:11-12 வரையுள்ள வேதபகுதியை கற்றுக்கொள்ள தவறிய இஸ்ரவேலரைக்குறித்து அறிந்தவராய் இருந்தார். அது பாபிலோனிய

சிறையிருப்பானது சரியாக 70 ஆண்டுகாலம் என்பதையும் அறிய வழிநடத்தியது. அவருக்கு பாரூக் எரேமியா புத்தகத்தை எதிர்காலத்தில் பாபிலோனில் இருக்கும்போது அவருக்கு கொடுத்தபோது இதன் வெளிப்பாடானது அவருக்கு தெளிவாய் அருளப்பட்டது. தானியேல் 9:1,2.

அவர் தேவன் தலைவர்களை எழுப்புகிறவர் என்பதையும் அறிந்திருந்தார் மற்றும் தலைவர்களை அகற்றுகிறவர் என்பதையும் அறிந்திருந்தார், விசுவாசிகளாகிய நமது கடமை என்னவெனில், எவ்வித பேதமுமின்றி அரசியல் சூழ்நிலைக்குத் தக்கவாறு நாம் நடந்து கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

இதைக்குறித்து சங்கீதம் 75:6,7 ஆகிய வசனங்கள் ஆசாப் தெளிவுபடுத்தியுள்ளார், "கிழக்கிலும், மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. 7 தேவனே நியாதிபதி, ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்." 1 பேதுரு 5:5-10.

தேவன் அளித்த வாக்குறுதிகளில் தானியேல் நிலை கொண்டிருந்தார், "ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவுள்ளோருக்கு அறிவையும் அளிக்கிறவர்."

வெளிப்படையாக தானியேலின் பெற்றோர் தெய்வ பயமுள்ளவர்களாயிருந்து அவரை வேத வசன சத்தியங்களை தனது வாலிப நாட்களில் கைக்கொண்டு நடக்க போதித்து இருந்தனர். இது தீமோத்தேயுவை குறித்து பவுல் சொல்வதைப் போன்று இருக்கிறது 2 தீமோத்தேயு 2:15, "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்."

வசனம் 22-23ல் கர்த்தர் அதிகமான தகவல்களை விசுவாசிகளுக்கு அளிக்கிறவராய் இருப்பதைக் காண்கிறோம். இங்கு வாசிக்கிற இருள் என்பதை நாம் வாசிக்கும்போது, அவிசுவாசியான நெபுகாத்நேச்சார் தனது சொப்பனத்தை அறிந்தவராய் இருந்தான் இருந்த போதிலும் ஒரு தேவ மனிதன் அதற்கான வியாக்கியானம் அளிக்க வேண்டொயதாய் இருந்தது, அதை வியாக்கியானிப்பவர் தேவனிடமிருந்து வரவேண்டியதாய் இருந்தது. தேவன் இரகசியங்களை வெளிப்ப்டுத்துகிறவராய் இருக்கிறார். சங்கீதம் 25:14.

தரிசனமானது தானியேலுக்கு மட்டும் அளிக்கப்பட்டது என்றும் மற்ற வாலிபர் சொப்பனத்தைப் புரிந்துகொண்டார்கள் என்பது

இவ்வேதபகுதியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அவர்களது மனதானது இப்படிப்பட்ட அறிவால் நிரப்பப்பட்டது மற்றும் சொப்பனத்திற்கான வியாக்கியானம் தானியேலுக்கு உறுதிசெய்யப்பட்டு இப்பொழுது நெபுகாத்நேச்சாருக்கு முன் செல்ல ஆயத்தமாக்கப்பட்டார். ஏசாயா 35:3-4.

வசனம் 24 மற்றும் 25ல் தானியேல் ஆரியோகேலை அணுகி, இராஜாவினிடத்தில் செல்லும்படி கேட்டுக்கொள்கிறார். அவர் சொப்பனத்திற்கான வியாக்கியானத்தையும், அதின் அர்த்தத்தையும் சொல்ல மற்றும் மற்றெல்லா ஞானிகளின் ஜீவனைகாப்பாற்ற ஆயத்தமாவதைக் காண்கிறோம்.

தானியேல் தன்னைத்தானே அற்பணித்த போது, ஆரியோகு இந்த மனிதன் பிரச்சனையை தீர்த்துவிடுவான் என்பதைக் கண்டுகொண்டவனாய் இருந்தான். ஒருவரையும் மீதமாய் வைக்காதபடி எல்லோரையும் கொலை செய்ய நெபுகாத்நேச்சார் கட்டளையை நிறைவேற்ற அவன் ஆயத்தமுள்ளவனாய்க் காணப்பட்டான். இப்படிப்பட்ட காரியங்களில் உங்களை ஒரு பொருட்டாக கருதாமல், கர்த்தரின் வேலையை செய்து கொண்டிருங்கள், விளைவு/பிரதிவிளைகளை அவரிடம் விட்டுவிடுங்கள். எரேமியா 45:3-5.

ஆரியோகு ஒரு நபரை கண்டுகொண்டவுடன் நெபுகாத்நேச்சாரின் நன்மதிப்பைப் பெறும்படி, இப்பொழுது நன்மதிப்பை த்தானியேலுக்கு கொடுக்கிறவனாய் காணப்படுகிறான். வசனம் 26ல் தானியேல் பதிலை அளித்த தேவனுக்கே மகிமை செலுத்துகிறவனாய் காணப்பட்டார், மற்றும் நெபுகாத்நேச்சாரின் கவனத்தை எல்லா ஞானத்திற்கும் மற்றும் அறிவுக்கும் ஆதாரமாய் விளங்கும் தேவனிடம் திருப்புகிறவனாய் விளங்கினார்.

வசனம் 27 ஒரு கேள்விபோன்ற அமைப்பை பெற்றிருந்தும் தானியேல் ஞானிகளிடம் கூறியது அவர்களால் சொப்பனத்தையோ அதின் வியாக்கியானத்தையோ அளிக்க இயலாது என்கிறார். சிறப்பான நிலையில் தானியேல் இவ்வாறு கூறுகிறதாய் இருந்தது, "இராஜா கேட்கிற மறைபொருளை இராஜாவுக்குத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறிசொல்லுகிறவர்களாலும் கூடாது." என்றார்.

"ஞானிகளின் மாகி பாடசாலையில்" தானியேல் மற்றும் அவரது மூன்று சிநேகிதரும் பட்டதாரிகளாய் இருந்தனர், தானியேல் மூத்த ஞானிகள் முயன்று தனது ஆசிரியர்களான அவர்கள் தேவனது மகிமைய ஒருபக்கமாய் சாயப்பண்ணுவதை எதிர்நோக்கியிருந்தார். இவ்வாறு நடப்பதை தானியேல் எதிர்நோக்கியிருந்தார். இவ்வகையான

வேலைக்குரிய நன்மதிப்பை பாபிலொனிய தேவர்கள் பெற்றுக்கொள்வதை தானியேல் விரும்பாதவராய் காணப்பட்டார்.

ஞானிகளின் மகிமையை தானியேல் அகற்றிய நிலையில், அம்மகிமை தேவனுக்குரியது என்பதைப் புலப்படுத்துகிறவராய் காணப்பட்டார். அவர் சொப்பனத்தை தீர்க்கதரிசன அர்த்தமுடையதாய் சுட்டிக்காட்டினார், எதிர்காலத்தில் என்ன நடக்க இருக்கிறது என்பதைக் குறித்ததாய் இருந்தது, மற்றும் அவர் சொப்பனத்தைக் குறித்து பேசத்துவங்கினார். தானியேல் இத்தருணத்தில் இன்னும் வாலிபராய் இருந்தார் ஆனாலும் வேத ரீதியில் சிந்திக்கிறவராய் இருந்தார்.

"இனிமேல் சம்பவிக்கப்போகிறதென்ன" இச்சொற்றொடரை இதற்கு முன் முற்பிதாக்களைக் குறித்து யாக்கோபு ஆதியாகமம் 49:1ல் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அது யூதாவை சிறைபிடிப்பதையும், எருசலேமில் உள்ள சாலமோனின் ஆலயம் கி பி 586ல், அழிக்கப்படுவதையும் பின்னர் புறஜாதியாரின் காலம் முழுமையாய் துவங்குவதையும் குறித்ததாய் இருந்தது. (கி பி 606ல் இக்காலம் துவங்கியது என்னும் விவாதத்தை தவிர்த்து, இக்காலமானது எருசலேமின் ஆலயமானது தகர்க்கப்பட்டதிலிருந்து எனக்கொள்வது சிறப்பானதாய் இருக்கும்) புறஜாதியாரின் முதல் அரசன் நெபுகாத்நேச்சார் ஆகும். புறஜாதியாரின் காலம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் நிறைவுக்கு வரும். இது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பூமியின் மீது தமது இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து ஆளத்துவங்கும் வரைக்கும் இருக்கும்.

C I Scofield "புறஜாதியாரின் நிறைவு" என்பதைக் குறித்து பேசுமிடத்து "புறஜாதியாரின் காலம்" குறித்து முறண்படுகிறவராய் இருக்கிறார். நிறைவு என்பது சபையுகத்தில் தேவனது நோக்கம் நிறைவேறுவதை குறிக்கிறது, இது கிறிஸ்துவின் நாமத்திற்காய் புறஜாதியாரிலிருந்து வேறுபிரிக்கப்படுவோரை சம்பந்தப்படுத்தியுள்ளது, சபை என்பது கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கிறது", [ரோமர் 11:25, எபேசியர் 1:22-23 cf அப்போஸ்தலர் 15:14, எபேசியர் 4:11-13, 1 கொரி. 12:12-13], மற்றும் சபையுகத்தை மட்டும் சம்பந்தப்படுத்தியதாய் இருக்கிறது. புறஜாதியாரின் காலமானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் நிறைவுபெறுகிறதாய் இருக்கிறது. . [லூக்கா 21:24.]

இந்த சொப்பனத்தில் எதிர்கால நிகழ்வுகளை மட்டுமல்லாது, கிறிஸ்துவின் ஆளத்துவத்தில் அவர் எவ்வாறு உலக சரித்திரத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவருகிறார் என்பதைக் குறித்து கூறுகிறதாய்

இருக்கிறது. ஒருவேளை நெபுகாத்நேச்சாருக்கு தானியேல் மீது ஏதாவது சந்தேகமிருப்பின், தானியேல் வியாக்கியானிக்கும்போது 31 -35ல் வாழ்நாள் குறுகினது எனக்குறிப்பிடுகிறார், மற்றும் தானியேல் இராஜாவாகிய நெபுகாத்நேச்சார் தொடர்ச்சியாய் கண்ட சொப்பனத்தை குறித்து விவரித்து கூறுகிறவராய் இருந்தார்.

சொப்பனமானது சரித்திர சம்பந்தமானதாயும் தேவனது திட்டத்துடன் இணைக்கப்பட்டதாயும் இருந்தது. சொப்பனத்தில் கண்ட சிலையானது மனித தோற்றத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது, மற்றும் பூமியின் பரந்த நிலப்பரப்பானது மனிதனை மையமாய் கொண்ட சாம்ராஜ்ஜியத்தால் ஆளுகை செய்யப்படுவதாய் இருந்தது.

இது கர்த்தர் உரைத்த மாற்கு 8:36ல் உள்ள கருத்தை நமக்கு நினைவு படுத்துகிறதாய் இருக்கிறது. "மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டு தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அதினால் அவனுக்கு லாபம் என்ன."

நெபுகாத்நேச்சார் எதிர்கால சரித்திரத்தையும், தனது அழிந்து போகும் மனித முடிவையும், சிருஷ்டி கர்த்தரையும் சந்திக்கிறவராய்க் காணப்படுகிறான். இது மனிதன் எவ்வளவு வல்லமை பொருந்தியவனாய் இருந்தும் அது நித்திய ஜீவனுக்கு உத்திரவாதம் அளிப்பதில்லை என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

வசனம் 31ல் இரு முறண்பாடுகளைக் காண்கிறோம். சிலையானது பிரகாசமும், நேர்த்தியுமாய் இருந்தது இது உலக சாம்ராஜ்ஜியங்கள் மனதைக் கவரும் வண்ணம் இருந்ததைச் சுட்டிக்காட்டுகிறது. அது மட்டுமின்றி பயங்கரமான தோற்றமுள்ளதாயும் இருந்தது இது சாம்ராஜ்ஜியத்தின் பெலத்தை மட்டுமின்றி, அவர்கள் அடக்கியாளவும் மற்றும் சிறைப்படுத்தவும் இயலும் என்பதையும் காட்டுகிறதாய் இருக்கிறது.

வசனம் 32 - 35ல் பலதரப்பட்ட உலோகங்களாலான சிலையானது தலையிலுருந்து பாதம் வரைக்கும் அதன் உலோகங்கள் மதிப்பில் குறைந்த உலோகங்களாய் இருப்பது எதைக்காட்டுகிறது என்றால், சரித்திர காலத்தில் அவைகள் தரக்குறைவுப்பட்டுபோனதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. சரித்திரத்தில் அனைத்து உலோகங்களும் வணிகத்தில் பயன்பட்டுவந்தன என்பது கண்டு கொள்ளப்பட்டுள்ளது

இராணுவத்தின் தொகை பெருகினபோது, பணத்தின் மதிப்பு குறைந்தது, ரோம சாம்ராஜ்ஜியத்தின் முடிவின் போது, இராஜ்ஜியத்தின் திவால்

நிலைகுறித்து அதிகம் கிரியை செய்யவும் போராடும் திறமை குன்றிப்போகவும் நேரிட்டது.

சொப்பனத்தில் கண்டது போல, முழு தோற்றமும் கையால் பெயர்த்தெடுக்கப்படாத கல்லானது தகர்த்து நொறுக்கிப்போட்டது, பின்னர் அக்கல்லோவென்றால் பெரிய பர்வதமாய் மாறி பூமியை நிரப்பிற்று. இங்கு நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாய் திரும்ப வருவதை அறிமுகப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம்.

APPLICATION கைக்கொள்ளுதல்:

ஒரு நபர் விசுவாசியாகும்போது அவரது முதல் கேள்வி "தேவனால் எனக்கு என்ன செய்ய இயலும்?" என்பதாகும். அவர் கிறிஸ்தவராய் வளரும்போது அவரது மனப்பக்குவம் மாறுகிறதாய் இருக்கிறது அது "நான் கடவுளுக்காய் என்ன செய்ய இயலும்?" என்பதைச் சிந்திக்கிறது. இறுதியாய் கிறிஸ்தவன் சரியான மனநிலையில், "என்னைக் கொண்டும், என் மூலமாகவும் தேவனால் என்ன செய்ய இயலும்?" என்ற மன்பக்குவத்தை உணருகிறவனாகிறான். "நான் எங்கு இருக்கும்படி அவர் விரும்புகிறார் மற்றும் என்ன செய்ய அவர் விரும்புகிறார்?" என்கிற மனப்பக்குவத்தை அடைகிறான்.

நமது மனநிலையானது சங்கீதம் 113:2 ஐ அறிக்கை செய்கிறதாய் இருத்தல் வேண்டும். "இது முதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்தரிக்கப்படக்கடவது."

நாம் கர்த்தரை சார்ந்திருக்கும்போது, நாம் சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் மற்றும் அழிவு மற்றும் மரணம் நிச்சயிக்கப்பட்டாலும் மனரம்மியத்துடன் இருக்க இயலும்.

மனிதன் உருவக்கும் சாம்ரஜ்ஜியங்கள் மனிதன் தேவனுக்கு மகிமை செலுத்துவதற்கு பதிலாக சுயமகிமைக்கேதுவாய் அவனை உயர்த்துகிறதாய் இருக்கிறது.

இயேசு கிறிஸ்து சரித்திரத்தை அடக்கி ஆள்பவராய் இருக்கிறார். அவர் அதன் ஆரம்பம் முதல் முடிவு மட்டாக அறிந்தவராய் இருக்கிறார் மற்றும் தேவனது திட்டத்தின்படி நித்தியத்திற்கேதுவாய் எல்லாவற்றையும் அடக்கி ஆள்கிறவராய் இருக்கிறார்.

அவிசுவாசி எதிர்கால நிகழ்வுகளைக் குறித்து இருளில் இருக்கிறவனாய் இருக்கிறான் ஆனால் நாமோ என்ன நிகழவிருக்கிறது என்பதை அறிந்தவர்களாய் இருக்கிறோம் காரணம் தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறார்.

உயர்ந்த ஸ்தானத்தில் உள்ள மக்கள் தங்களையே உயர்த்திக்காட்டி எல்லா லாபகரமான காரியங்களுக்கும் தங்கள் கீழ் பணிபுரிவோர் அவர்களே எல்லாவற்றையும் செய்த போதும், தாங்களே ஆதாரம் என்கின்றனர்.

ஒரு மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டு தன் ஜீவனை நஷ்டப்பட்டுத்தினால் அதினால் அவனுக்கு ஆதாயம் என்ன?

தேவனே ஒரு தேசத்தையும் அதன் நியாயதிபதிகளையும் சர்வதேச அளவில் உயர்த்துகிறவராய் இருக்கிறார், ஆகையால் தீமையின் வல்லமையானது தேசத்தை வேறுபிரிக்க வரையறையுட்பட்டதாய் இருக்கிறது.

உலகமானது பரிணாமம் மூலம் காரியங்கள் எப்பொழுதும் உருப்பெறுகிறது என நம்புகிறது, அதே சமயம் வேதாகமமானது காரியங்கள் கால வளர்ச்சியினால், சீர்கேட்டிற்கு ஏதுவாய் சென்று கொண்டிருக்கிறது என்பதை தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறது.
.

DOCTRINES உபதேசங்கள்:

GOD: CHARACTER OF GOD தேவன்: தேவனின் குணாதிசயங்கள்.

MERCY இரக்கம்.

DANIEL தானியேல்

பகுதி 8 - நான்கு சாம்ராஜ்ஜியங்கள் மற்றும் அதன் வீழ்ச்சி குறித்த விளக்கங்கள் - 2:36-43.

36 சொப்பனம் இதுதான், அதின் அர்த்தத்தையும் இராஜ சமுகத்தில் தெரிவிப்போம். 37 இராஜாவே, நீர் இராஜாதி இராஜாவாஇருக்கிறீர்.

பரலோகத்தின் தேவன் உமக்கு இராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார். 38 சகல இட'ங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்த தலை நீரே. 39 உமக்குப்பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு இராஜ்ஜியம் தோன்றும். பின்பு பூமியெல்லாம் ஆண்டு கொள்ளும் வெண்கலமான மூன்றாம் இராஜ்ஜியம் ஒன்று எழும்பும். 40 நான்காவது இராஜ்ஜியம் இரும்பைப்போல உரமாயிருக்கும். இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்ன பின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைப்போல அவைகளையெல்லாம் நொறுக்கித் தகர்த்துப்போடும். 41 பாதங்களும் கால்விரல்களும் பாதி குயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த இராஜ்ஜியம் பிரிக்கப்படும்ம், ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். 42 கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால், அந்த இராஜ்ஜியம் ஒரு பங்கு உரமும் ஒரு பங்கு நெரிசலுமாயிருக்கும். 43 நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள். ஆகிலும் இதோ களிமண்ணோடே இரும்பு கலவாதது போல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

இந்த வசனங்களில் ஒன்றன் பின் ஒன்றாக எழும்பும் வரைபட அமைப்பைப்போன்ற சாம்ராஜ்ஜியங்கள் பாபிலோனின் சிறையிருப்பு முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைவரை நிகழுவதாய் உள்ளது.

வசனங்கள் 37 – 38

பொன்மயமான தலை கி பி 586 ல் தெற்கு இராஜ்ஜியமான யூதாவை பாபிலோனிய சிறையிருப்பில் கொண்டு சென்றது கல்தேய மன்னன் நெபுகாத்நேச்சார் ஆகும். பாபிலோனின் கடைசி இராஜா நெபோனிடஸ் ஆகும் இவனது குமாரன் பெல்ஷாத்சார் சுவற்றில் கையுறுப்பு எழுதியபோது கொலை செய்யப்பட்டான்.

கல்தேயர்கள் தெற்கு பெரிசிய மலைப்பகுதியில் (இன்றைய ஈரானில்) உருவானவர்கள் அங்கிருந்து பரவி அரேபியன் வளைகுடா வரை தாபரித்தனர். கிறிஸ்துவுக்கு முன் ஆறாம் நூற்றாண்டில் இவர்கள் அதிகரிக்க தொடங்கி உயர்ந்த மலை நாட்டிலும் பள்ளத்தாக்கிலும் பரவ ஆரம்பித்தனர். இவர்கள் மற்ற கோத்திரங்களை வெற்றி கண்டு மிகவும் சிறப்பாக ஆட்சிபுரிந்தனர். இவர்கள் அதிகம் நீர் வளம் நிறைந்த பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்து அங்கு குடியேறினர் யூப்ரடீஸ் டைகிரிஸ் பள்ளத்தாக்குகளில் இவர்கள் பயிர்செய்து வசித்தனர்.

காலா காலங்களில் இவர்கள் பாபிலோனிய அரசர்களாய் அரசாண்டு வந்தனர். இதற்கு ஒரு உதாரணம் ஏசாயா 39:1ல் காண்கிறோம். "அக்காலத்திலே பலதானின் குமாரனாகிய மெரோதாக்பலதான் என்னும் பாபிலோனின் இராஜா எசேக்கியா வியாதிப்பட்டிருந்து ஆரோக்கியமானதைக் கேள்விப்பட்டு அவனிடத்திற்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான்." இராஜாவுக்கு கல்தேயப்பெயர் இருந்தது, 100 ஆண்டுகளுக்குப் பிறகு வந்த நெபுகாத்நேச்சாருக்கு சம்பந்தப்பட்டதாய் இருந்திருக்கலாம் அவனது கடிதம் மற்றும் எசேக்கியாவின் தகவல்படி பட்டணத்தில் உள்ள பொன் நெபுகாத்நேச்சாரை பிற்காலத்தில் அவற்றைக் காணும்படி வழிநடத்தியிருக்கக்கூடும்.

வசனம் 37ல் தானியேல் நெபுகாத்நேச்சாருக்கு கூறியவற்றைக் காண்கிறோம், "பரலோத்தின் தேவன் உமக்கு இராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார். 38 சகல இட'ங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின் மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார்." இதினிமித்தம் நெபுகாத்நேச்சார் பெருமை கொண்டான் மற்றும் கவலை கொண்டான்.

நெபோபொலேசர் நெபுகாத்நேச்சாரின் தந்தை வல்லமை மிக்க அசீரியரால் "கடல் வாழ் மக்களால்" படையெடுக்கப்பட்டு தாக்கப்படாத வண்ணம் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவனாய் இருந்தான். அசீரியர்களின் பெயரால் அவன் பாபிலோனுக்குள் நுழைந்து, தன்னை பாபிலோனில் இராஜாவாய் அறிமுகம் செய்து கொண்டான். அப்பட்டணத்தைப்பாதுகாக்கும் பொருட்டு, பின்னர் அசீரியருக்கு விரோதமாய் கலகம் பண்ணினான். மட்டுமின்றி மேதியர்கள் மற்றும் ஸ்கைத்தியர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டான். இதைச் செய்தபோது அசீரியர்கள் அவனை அதிகம் நெருக்கவே அவன் அவர்களுக்கு முன் தோற்கடிக்கப்பட்டான். அப்பெரிய பட்டணம் டைகிரிஸ் நதியானது வெள்ளம் புரண்டபடியால் அதன் வீழ்ச்சி

சாத்தியமாயிற்று. அந்த நாளில் ஸ்கைத்தியர்கள் அங்கு தங்கி அதன் பலனாக அலங்கம் இடிந்து விழவே அவர்களை முறியடித்து அவர்கள் விருப்பப்படியே நிகழ்ந்தது.

இதைக் குறித்து இந்த நிகழ்வுகளுக்கு ஏசாயா அசீரியாவைக் குறித்து முன்னுரைத்தபடியே அதன் வீழ்ச்சியானது இடம்பெற்றது. அசீரியர்கள் அவர்கள் உள்ளுக்குள்ளே கெட்டுப்போனார்கள் என்றுக் கூறுவதிற்கில்லை, அவர்கள் அழிவை வேறு வகையில் பெறுகிறவர்களாய் இருந்தனர். இத்தகைய செயல்பாடானது தேவன் சரியான முறையில் தெளிபட முன்னதாகவே அறிந்திருக்கிறார் என்பது தெளிவாகிறது.

மேதியர்கள் பொன்னை எடுத்துக்கொண்டனர், மற்றும் அடக்குமுறையில் பின்னர் அவர்கள் பாபிலோனை சிறைபிடிக்கும்போது அவர்களுக்கு பொருளாதாரமாய் அமைந்தது. ஸ்கைத்தியர்கள் தங்களது கொள்ளையுடமைகளுடனும் ஸ்திரீகளுடனும் மரங்களற்ற ரஷ்யாவின் சமவெளிகளுக்கு திரும்பினர், மற்றும் நெபொபோலேசர் பாபிலோனைச் சுற்றியுள்ள தேசங்களுக்கு ஆளுநராய் இருந்தான், அவனது குமாரனான நெபுகாத்நேச்சார் எருசலேமிற்கு அருகாமையில் யுத்தம் செய்து பார்வோன் நெகோவை கார்கெமிஸ் யுத்தத்தில் முறிய அடித்த போது மீந்திருந்த அசீரியர்களையும் முற்றிலும் அழித்துப்போட்டான்.

அவன் தீவிரமாய் தனது இராணுவ வீரர்களுடன் பாபிலோன் திரும்ப நேரிட்டது காரணம் அவனது தந்தை மரித்ததை அவன் கேள்விபட்டான், அதன் பின்னர் அவன் அவனது யுகத்தில் தலைசிறந்த மன்னனாய், ஆளுகை புரிந்து தலை பொன்னாக செயல்பட்டான். அது நெபுகாத்நேச்சார் முடிவாய் எருசலேமுக்கு திரும்பியதாய் இருந்தது, அத்தருணத்தில் அவன் எருசலேமை முழுவதும் அழித்து, யூதர்கள் அனைவரையும் சிறை பிடித்து கொண்டு சென்றான் அது 70 ஆண்டுகள் யூதர்கள் பாபிலோனின் சிறையிருப்பின் ஆரம்பமாய் திகழ்ந்தது.

நெபுகாத்நேச்சாரின் மரணத்திற்குப் பின்நிலைவரமற்ற ஆட்சி நிலவியது. அவனுடைய குமாரன் ஏவில் மொரொதாக் படுமோசமான ஆளுநர் பதவிக்கு வந்தான். ஏவில் மொரேதேக்கை அவன் மைத்துனன் நெரிகிலேசர் அல்லது எரேமியாவின் 39:3ன் நெரிகிலேசரேசர் என்பவன் கொலைசெய்து நான்கு ஆண்டுகள் மட்டுமே அரசாண்டு மரித்துப்போனான், பின்னர் அவனது குமாரனாகிய லபசாகி - மர்துக் சில மாதகாலம் அரசாண்டு ஒரு கலகத்தின் போது கொலை செய்துகொண்டும் மரித்துப்போனான்.

கல்தேய சாம்ராஜ்ஜியம் இறுதிகட்டத்திற்குள் பிரவேசித்தது நெபோனிடஸ் அரியனைக்கு வந்த 556 கி மு வில் ஆரம்பமானது. இவனது அறுபது வயதில் இவன் புதைபொருள் ஆராய்சி மற்றும் மதம் சம்பந்தமான காரியங்களில் அதிக ஆர்வம் காட்டினான். ஆகையால் இவன் தனது குமாரனாகிய பெல்ஷாத்சாரை விட்டு பிரிந்து சென்றான், இவனை நாம் தானியேல் ஐந்தாம் அதிகாரத்தில் சந்திக்கிறவர்களாய் இருக்கிறோம், ஐந்தாம் அதிகாரத்தில் கல்தேயரின் இறுதி நாட்களை சுவற்றில் எழுதிய கையுறுப்பு மூலம் காண்கிறவர்களாய் இருக்கிறோம்.

வசனம் 39 a

அந்த சிலையின் புயம் வெள்ளியானது இரண்டாவது
சாம்ராஜ்ஜியமாகிய மேதிய - பெரிசிய சாம்ராஜ்ஜியத்தை அறிமுகம்
செய்கிறதாய் இருந்தது கோரேஸ் இராஜாவின் கீழ் பெரிசிய
சாம்ராஜ்ஜியம் இருந்தது (மற்றும் மேதியனனாகிய தரியூவும்
குறிப்பிடபடுகிறான், அவனுடைய தாயார் மேதிய இளவரசியாய்
இருந்தாள்) இவர்கள் கல்தேய சாம்ராஜ்ஜியத்தை கி பி 538ல்
வென்றார்கள், மட்டுமின்றி மத்திய கிழக்கு நாட்டையும் ஆளுகை செய்து
அடுத்த 200 ஆண்டு காலங்கள் கி பி 331 வரை ஆளுகை செய்தார்கள்.

சிலையின் பொன்மயமான தலையானது கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் மற்ற இரு ஜனக்குழுக்களினால் தோற்கடிக்கப்பட்டது. அவர்கள் மேதிய பெரிசியராய் இருந்தனர் இவர்கள் அந்த சிலையின் தோள்களை பிரதிபலிப்பவர்களாய் இருந்தனர்.

மேதிய பெரிசியர்கள் ஒருவரோடொருவர் சம்பந்த பட்டவர்களாய் இருந்தனர் மற்றும் அவர்கள் தங்களுக்குள் அடிக்கடி சண்டையிட்டு வந்தும் பொதுவான சத்துருக்கள் அவர்களுக்கு எதிர்படும்போது ஒருமித்து யுத்தம் செய்து போர்புரிபவர்களாய் செயல்பட்டனர். இப்படிப்பட்ட செயல்பாடுகள் இன்றைய அளவில் ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலும் நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

நெபோனிடஸ் ஆளுகையின்போது, பெரிசிய தலைவரான மகா கோரேஸ் மீதியானியரை தோற்கடித்து மேற்கொண்டான். கி மு 546ல் அவன் மிகவும் ஐசுவரியம் மிகுந்த லிதியாவின் அரசனான க்ரோஸியஸை தோற்கடித்தான் சில 7 ஆண்டுகளுக்குப் பினர் எவ்வித எதிர்ப்புமின்றி பாபிலோனைக் கைப்பற்றினான் இதை தானியேல் 5ம் அதிகாரத்தில் காண்கிறோம்.

கோரேஸின் கிரியைகள் ஏசாயா 45:1-5ல் தொடர்கிறது. கோரேஸ் தேவனது திட்டத்தில் மிக முக்கிய நபராய் விளங்கினான், இவன் எஸ்றா புத்தகத்திலும், 2 நாளாகம புத்தகத்திலும் குறிப்பிடப்படுகிறான் மற்றும் தானியேல் புத்தகத்திலும் குறிப்பிடப்படுகிறான், இவன் பெரிசிய சாம்ராஜ்ஜியத்தின் இராஜாவாகவும் பாபிலோனின் ஸாட்ராப் மாகாணத்தையும் ஆளுகை செய்தவனாய் விளங்குகிறான்.

கோரேஸ் தனது வாழ்வில் தேவனின் திட்டத்தை நிறைவேற்றினவனாய் விளங்கினான். கல்தேய சாம்ராஜ்ஜியம் இஸ்ரவேல் தேசத்தை அவர்கள் தேசத்திலிருந்து அகற்றப்பட்ட பயன்படுத்தப்பட்டது. இப்பொழுது கோரேஸின் மேதிய பெரிசிய சாம்ராஜ்ஜியமானது இஸ்ரவேலரை அவர்களது சொந்த தேசத்திற்கு திரும்ப பயன்படுத்தப்படுகிறது, இஸ்ரவேலர் திரும்பச் சென்று எருசலேமின் மதில்களையும் (கி மு 445ல்) எருசலேம் தேவாலயத்தையும் (516 கி முவில்) கட்டும்படி செய்தனர்.

மேதிய -- பெரிசிய இராஜாக்கள்:

கோரேஸ் [கி மு 538 - 530] இவன் மகா கேரேஸ் என அறியப்பட்டான், அன்ஷானின் இராஜா மற்றும் பெரிசியாவின் இராஜா மற்றும் மேதியனான தரியூ எனத் தானியேலிலும் அறியப்படுகிறான்.

காம்பைஸ் [கி மு 530 - 522] இவன் கோரேஸின் மகனாய் தனது தகப்பனை பின் தொடர்ந்து அரசாண்டான்.

சூடோ - ஸ்மெர்டிஸ் [கௌமாட்டா] இவன் ஒரு மாகியாய் இருந்து தகாத வழியில் அரசனாய் பொறுப்பேற்று கி மு 522 முதல் 521 வரை அரசாண்டான்.

தரியூ 1 [கி மு 521 - 486] இவன் தரியூ ஹைஸ்டாஸ்பெஸ் என அறியப்படுகிறான், அல்லது மகா தரியூ என அறியப்படுகிறான். எஸ்றா, நெகேமியா, தானியேல், ஆகாய், சகரியா போன்ற புத்தகங்களில் இவன் குறிப்பிடப்பட்டுள்ளான். இவனது அரசாட்சியின்போது 586ல் தொடங்கிய பாபிலோனிய 70 ஆண்டுகாலம் நிறைவுக்கு வந்தது. கி மு 605 முதல் 535வரை ஆண்ட கோரேஸின் தாக்கீதின்படி யூதர் தங்கள் நாட்டிற்குத் திரும்ப உத்திரவு பிறந்தது. இரண்டாம் கட்ட 70 ஆண்டு காலத்தில் 586 முதல் 516 வரை தேவாலயம் பாழாய்க் கிடந்தது, தரியூவின் தாக்கீதிற்கு பின்னர் தேவாலயம் திரும்ப கட்டி முடிக்க உத்திரவானது. செருபாபேல் மற்றும் யோசுவா காலத்து தேவாலயம் கி பி 516 ல் நிறைவடைந்தது, பின்னர் அது ஏரோதின் காலத்தில் திரும்பவும் கட்டப்பட்டு பழுது பார்க்கப்பட்டது, இவ்வாலயமே கர்த்தரின் முதல் வருகையில் எருசலேமில் இருந்த தேவாலமாய் இருந்தது.

Xerxes I [486-465] இவன் எஸ்தர் புத்தகத்தின் அகாஸ்வேரு இராஜாவாய் இருக்கிறான், இவன் கிரேக்கர் மீது பெரிய படையுடன் சென்று யுத்தம் புரிந்தான்.

அர்தெசெஸ்டா 1 [465 -424] இவன் அர்தெசெஸ்டா லாங்கிமெனஸ் என அறியப்படுகிறான் இவனே கி மு 445ல் எருசலேமின் அலங்கம் திரும்பக்கட்டப்பட ஆணை பிறப்பித்தவன், 490 ஆண்டுகால வாக்குத்தத்தமானது இதிலிருந்து துவங்குகிறதாய் இருக்கிறது தானியேல் 9:24-27. இவன் எஸ்றா 7:1-8லும் நெகேமியா 2:1லும் பேரிடப்பட்டிருக்கிறான்.

Xerxes II [424]

தரியூ II [423-404]

அகாஸ்வேரு II [404-359]

அகாவேரு III [350-338]

தரியூ III [338-331] இவன் பெரிசிய இராஜா மகா அலெக்ஸாண்டரால் கி மு 331ல் தோற்கடிக்கப்பட்ட இறுதி பெரிசிய அரசனாய் இருந்தான், இந்த நிகழ்ச்சியானது தானியேல் 11:2-3 கூறப்பட்டுள்ளது.

பெரிசிய ஜனங்கள் தூரத்திலிருந்து வந்த நாடோடிக் கூட்டமாய் இருந்தது, இவர்கள் பண்டைய உலகில் பெரிய விஞ்ஞானிகளாய் திகழ்ந்தனர். மகா அலெக்ஸாண்டர் இவர்களால் அதிகம் கவர்ந்திழுக்கப்பட்டான், இவன் தனது தளபதிகளிடம் கிரேக்க மனைவிகளை விவாகரத்து செய்துவிட்டு பெரிசிய இளவரசிகளை மறுமணம் செய்து கொள்ள கட்டளையிட்டான். அவன் தளபதிகள் அவன் கூறிய வண்ணமே செய்தார்கள் ஆனால் குறுகிய காலத்தில் அவனது ஆணைக்குப் பின் அவர்கள் அலெக்ஸாண்டருக்கு விஷம் வைத்து அவன் பாபிலோனிலே மரணமடைந்தான்.

வசனம் 39 b

சிலையின் வயிற்றுப்பகுதி வெண்கலமாய் இருந்தது இது கிரேக்க சாம்ராஜ்ஜியம் மகா அலெக்ஸாண்டரின் கீழ் 13 ஆண்டு காலங்களில் உலகத்தை போர் செய்து வென்றான்.

அலெக்ஸாண்டர் மது சம்பந்தமான வியாதியினால்/விஷமிடப்பட்டு மரித்தான் (வேதாகமம் அதைக் கொலை என அறிக்கை செய்கிறது) இவன் பாதி கிரேக்கம் பாதி பெரிசியர் ஆகிய இனத்தை அமைக்க முயன்றவன். இத்தகைய சாம்ராஜ்ஜியம் கி மு. முதல் நூற்றாண்டு வரை நீடிப்பதாய் இருந்தது, இவனது தளபதிகள் மூலமும், எகிப்தில் இறுதியாய் ஆண்ட கிளியோபாத்ராவுடனும் முடிவுக்கு வந்தது.

அலெக்ஸாண்டரின் வீழ்ச்சி தானியேல் 11:3-39 வசனங்களில் விபரமான தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது, இவனுக்குப் பின் நான்கு தளபதிகள் பொறுப்பேற்றனர் அவர்களில் இருவர், வட திசை இராஜா தமஸ்குவை மையமாய் கொண்டு அரசாண்டவனும், தென்திசை இராஜா எகிப்தை மையமாய் கொண்டு ஆண்டவனும் மகா பாம்பே மற்றும் ஜூலியஸ் சீசரின் காலத்து எடுத்துச் செல்கிறவர்களாய் இருக்கின்றனர்.

மகா அலெக்ஸாண்டர் புதிய ஏற்பாட்டின் கொய்னே கிரேக்கை அளித்தவராய் விளங்குகிறார், இதுவே எல்லா சமயத்திற்கும் துள்ளியமான மொழியாய் அமையப்பெற்று இருக்கிறது. இது உலக மொழியாய் கிறிஸ்துவின் காலத்தில் உலகமெங்கும் பரவியதாய் இருந்தது, இது புதிய ஏற்பாட்டின் மொழியாய் விளங்குகிறது. சுமார் கி மு 280ல் கிரேக்க மொழியானது எகிப்திலுள்ள யூதர்களால் பயன்படுத்தப்பட்டு முழு பழைய ஏற்பாட்டையும் கிரேக்க மொழியில் மொழிபெயர்ப்பு செய்து அதை செப்துவஜிந்த் (LXX) என அழைத்தனர். இதுவே ஆரம்பகால சபையின் வேதாகமாகவும் கிரேக்கம் பேசும் மக்களிடையே சுவிஷேசம் அறிவிக்கும் மொழியாகவும் விளங்கியது.

வசனம் 40 - 43

சிலையின் கால்கள் ரோம சாம்ராஜ்ஜியத்தை பிரதிபலிக்கிறது அது இரு பகுதிகளாய் பிரிந்து செயல்பட்டது. கிழக்கு இராஜ்ஜியம் அது கான்ஸ்டாண்டின் நோபுள் ஐ அடிப்படையாய் கொண்டும் மேற்கு இராஜ்ஜியம் ரோமை அடிப்படையாய் கொண்டும் செயல்பட்டது. மேற்கு சாம்ராஜ்ஜியம் ஐந்தாம் நூற்றாண்டில் கிழக்கு ஜெர்மானியர் கையில் வீழ்ச்சியுற்றது. கிழக்கு சாம்ராஜ்ஜியமானது பின்னரும் ஆயிரமாண்டு காலம் நீடித்ததாய் இருந்தது

திபேரிய கரையிலிருந்த மேய்ப்பர்கள் ரோமாபுரியில் நீருற்றுகளிடத்திற்கும் மலைப்பாங்கான தேசம் ஒன்றிற்கும் கடந்து வந்தனர். இறுதியாக ரோம் அகற்றப்பட்டு வட மற்றும் தென் இத்தாலியாவால் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் ரோம் சிசிலியையும் ஸ்பைனையும் முற்றுகையிட்டு யுத்தங்களால் அச்சுருத்தியது. அடுத்தபடியாக மாசிடோனியா வந்தது, அலெக்ஸாண்டரின் சொந்த

ஸ்தலமாய் இது விளங்கியது, ஆசியா மைனரும், எகிப்தும், காலும், வட ஆப்பிரிக்காவும், சிரியாவும், சொந்த ஸ்தலமாய் விளங்கியது. மத்தியத்தரைக்கடலானது ரோமின் ஏரியாய் மாறியது.

எப்படியிருப்பினும் உள்நாட்டு யுத்தங்களும், கலகங்களும் மற்றும் சீரழிவும் ரோம ஜனநாயகத்தை தனது வல்லமையிலிருந்து தளர்வுறச்செய்து அது நிலைகுலைய செய்கிறதாய் அமைந்தது. அதன் பிரஜைகள் அநேகர் நம்பிக்கையை கைவிடாது இருந்த போதிலும், அது நிலைநிற்பதாய் இல்லை, கர்த்தர் தனது நோக்கத்தை நிறைவேற்றி அதை நிலைகுலையச் செய்வதாய் இருந்தது. இதைப்போன்றே ஐரோப்பாவிலும் இறுதியாய் நிகழும், அநேகர் அது விழும் என உணருகிறவர்களாய் இருக்கின்றனர், ஆனால் அந்திக்கிறிஸ்து வருகிறவனாய் இருக்கிறான் அவன் ஐரோப்பாவையும், உலகின் பெரும்பகுதியை எடுத்துக் கொள்கிறவனாய் இருப்பான்.

நெருக்கடியான கால கட்டத்தில் சரியான மனிதன் குறுக்கிட்டு ஜனநாயகத்தை அசைத்து, சாம்ராஜ்ஜியத்தை தனது ஆதிக்கத்திற்கு கொண்டுவருகிறவனாய் இருந்தான். அந்த மனிதன் காயஸ் ஜீலிய சீசராய் இருந்தான் அவன் ரோமுக்குள் நுழைந்து அதன் மீது ஆதிக்கம் செலுத்துகிறவனாய் இருந்து அதன் அமைப்பு மற்றும் அதன்பிரமாணங்கள் மற்றும் அரசாங்கம் இவைகளை சீரமைத்து ஐநூறு ஆண்டு அதன் வாழ்வு நீடிக்கும்படி செய்தான். ஜூலிய சீசர் கி மு 44ல் கொலைசெய்யப்பட்டான் அதன் பின்னர் அவனது தத்துப்புத்திரனாகிய் ஆக்டேவியஸ்/அகஸ்டஸ் சக்ரவர்த்தியாக ஆளும் பொறுப்பை ஏற்றான், அவன் ஜூலிய சீசரின் நிர்வாகக்கொள்கையை பின்பற்றுகிறவனாய் இருந்து SPQR system அமைப்பை ஏற்படுத்தினான்.

இதன் விளைவாக தேசத்தில் சமாதானம் நிலவியது இவன் “Pax Romana”, என்றை அமைப்பை ஏற்படுத்தினான் அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்பூமியில் பிரவேசித்த காலத்தில் நிலவியதாய் இருந்தது மற்றும் சுவிஷேசமானது உலகெங்கும் பரவ வகை செய்கிறதாயும் அமைந்தது. இப்படிப்பட்ட பாதுகாப்பான சூழலில் கடற்கொள்ளையர் கடற்பகுதியில் கொள்ளையிட்டனர், இஸ்ரவேலில் இப்படிப்பட்ட திருடர் கூட்டம் ரோமர்களால் அகற்றப்பட்டு பாதுகாப்பளிக்கப்பட்டது. இது எப்படியிருப்பினும் ரோமர்களை எதிர்ப்பவர்களுக்கு மரணத்தின் சமாதானமாய் இருந்தது. இப்படிப்பட்ட புறஜாதிய சாம்ராஜ்ஜியங்களை மங்கலான கண் கொண்டு பார்க்கக் கூடாது, இவர்கள் பெரிதளவில் அட்டூளியங்களையும் வண்முறை காரியங்களையும் காலாகாலங்களில் செய்துள்ளனர்.

மட்டுமின்றி வீரியமிக்க சாம்ராஜ்ஜியமானது நலிவுற்று செல்வதற்கு வழி வகுத்துக் கொண்டது, அவர்கள் நித்திய உண்மைகளை காணத்தவறி யவர்களாய், அநித்தியமான பாவசந்தோஷங்களால் அழிவு பாதையில் செல்கிறவர்களாய் காணப்பட்டனர். கி பி 70ல் ரோமர்கள் தீத்துவின் கீழ் எருசலேமை அழித்தனர். சபையானது கர்த்தர் மத்தேயு 24-25 அதிகாரங்களில் கூறிய எச்சரிப்பை நினைவுப்படுத்திக் கொண்டது. பட்டணமானது முற்றிகையிட்டிருப்பதைக் காணும்போது பட்டணத்தை ஓடிவிட கேட்டுக்கொண்டார். அவர்கள் யோர்தான் நதி நோக்கி ஓடிப்போனார்கள் பின்னர் அங்கிருந்து சிதறி ஓடிப்போய் தங்கள் பணியைத் தொடர்ந்தனர். யோவான் எபேசுவுக்கு ஓடிச்சென்றார் அங்கு சென்று சபையை தீமோத்தேயுவின் மரணத்திற்கு பின் பொறுப்பெடுத்தார். யோவான் மாத்திரமே முதிர் வயதுள்ளவராய் மரணத்தைத் தழுவியவராய் இருந்தார். முதல் நூற்றாண்டின் முடிவின் போது, வெளிப்படுத்தின விஷேசத்துடன் அப்போஸ்தர் யோவான் மற்ற கிரியைகளையும் நிறைவு செய்கிறவராய் காணப்பட்டார், வேதாகமம் இத்துடன் நிறைவு பெற்றதாய் காணப்படுகிறது.

ஆண்டனின் சீசர் காலம் துவங்கி இரண்டாம் நூற்றாண்டு முடிவு வரை ரோமின் பொற்காலம் என அறியப்படுகிறது. தேசத்தில் சமாதானம் ஒரு புறம் இருந்தபோதிலும் விசுவாசிகள் வண்முறைக்கும் உபத்திரவங்களுக்கும் உள்ளானார்கள், புறாதிய சீசர்கள் [இராஜாக்கள்] கொடுமை படுத்துகிறவர்களாய் இருந்தனர். அவர்கள் அமைத்த சாலை அமைப்புகள் சுவிஷேசத்தை இராஜ்ஜிய முழுவதிலும் அறிவிப்பதற்கு பேருதவியாய் திகழ்ந்தன. வருத்தப்படக்கூடிய நிலையில் சிறப்பான் ஆட்சி செய்த சீசர்கள் கொடிய உபத்திரவத்தை அளிப்பவர்களாய், இரத்தசாட்சிகளின் இரத்தத்தை தாராளமாய் சிந்தினர் அதுவே சபையின் வித்தாக மாறியது, கிபி 312ல் கிறிஸ்தவம் வெற்றி கண்டது.

முடிவாக 466 கி பில் ஜெர்மானியனா ஒடோவாக்கர் இறுதியாய் எஞ்சியிருந்த மேற்கு ரோம சாம்ராஜ்ஜியத்தை வென்றான், ரோமுலஸ் அகஸ்டஸ், மற்றும் பழைய ரோம சாம்ராஜ்ஜியம் இறுதி நிலைக்கு கடந்து வந்து முடிவுற்றது. அதிலிருந்து ஐரோப்பிய ஆட்சிமுறை கடந்து வந்தது இம்முறையானது ரோம் சிலையின் இரும்பிலிருந்து கடந்து வந்து தொடர்கிறதாய் இருக்கிறது.

சிலையின் கால்கள் இரும்பாய் இருந்து அது கான்ஸ்டாண்டின்நோபுள் மையமாய் கொண்டு ஆட்சிசெய்த வல்லமையைப் பிரதிபலிப்பதாய் இருந்தது. அதிலிருந்து பாதங்களில் காணப்பட்ட பத்து விரல்கள் ஆளுகையானது உச்சநிலையை அடைந்தது. களிமண் என்ற சொல் பீங்கான் என்று மொழிபெயர்ப்பு செய்திருந்தால் சிறப்பாய்

இருந்திருக்கும். அது கடினத்தன்மை வாய்ந்ததாய் இருந்தது இருப்பினும் இரும்போடு அது எவ்வளவேனும் கலக்கவில்லை, சரித்திர அக்கினியால் அது இரும்போடு இணைத்து உருவாக்கப்பட்டிருந்தது. இது இன்றைய அளவில் பலதரப்பட்ட கலாச்சாரங்கள் ஒன்று சேர்ந்து இருக்கும் உலகைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. இதன் முடிவு கிட்டத்தட்ட உலகலாவிய சாம்ராஜ்ஜியமாய் காணப்பட்டு தானியேல் 7:23-24ன் வேதபகுதிக்கு இணையான வேதபகுதியாய் விளங்கும்.

41 ம் வசனத்தில் அவைகள் பிரிக்கப்பட்டுள்ளன. அரமேய வார்த்தை பிரிக்கப்படுதல் என்பதற்கு Pelag என்றிருக்கிறது. இவ்வார்த்தையானது எபிரெய வார்த்தைக்கு சமமானதாய் இருக்கிறது சேமின் பேரன் பேலேகு என்று பெயரிடப்பட்டு இருந்தான் ஆதியாகமம் 10:25, இதில் கூறப்பட்டுள்ளது என்னவெனில் "இவனது நாட்களில் பூமியானது பகுக்கப்பட்டது" இவ்வசனம் பூமி அதன் மொழிக்கு ஏற்ப பகுக்கக்ப்பட்டது இது பாபேல் கோபுரத்தில் நிகழ்ந்தது. நமது நவீன சமுதாயம் மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு பலதரப்பட்ட கலாச்சாரங்களுடன் வாழ்ந்து வருகின்றன.

கைக்கொள்ளுதல்:

தேவன் தேசத்தின் தலைவர்களை உயர்த்துகிறவரும் தாழ்த்துகிறவருமாய் இருக்கிறார். அவர்கள் தேவனால் அமர்த்தப்படுகிறார்கள் மற்றும் அவர் அவர்களை தமது மகிமைக்காய் பயன்படுத்துகிறார். இதை நெபுகாத்நேச்சாரின் வாழ்வில் மட்டுமல்லாது எகிப்தின் பார்வோன் வாழ்விலும் காண்கிறவர்களாய் இருக்கிறோம்.

தேவன் சரித்திரத்தை எல்லாம் முற்றிலுமாய்/மிகத்துள்ளியமாய் அறிந்துள்ளார். இதினிமித்தம் நாம் வேதாகமம் எதிர்காலத்தை குறித்து கூறுவதன் நிச்சயத்தை அடைய முடியும் பெரிய சரித்திரவல்லுனாகிய லூக்கா செய்தது போலவும் அல்லது எதிர்கால நிகழ்வுகளைக் குறித்து ஏசாயா முன்னுரைத்து தீர்க்கதரிசனம் உரைத்தது மிகவும் துள்ளியமாய் அமைந்தது போலவும் இருக்கும்.

கர்த்தர் திரும்பவும் வர இருக்கிறார், அவர் திரும்ப வரும்போது உலகை நியாயந்தீர்க்க இருக்கிறார், மனிதனால் உருவாக்கப்பட்ட சாம்ராஜ்ஜியங்களை அவர் முழுவது அழித்துப்போட இருக்கிறார் அது அந்திக்கிறிஸ்துவின் உலகலாவிய சாம்ராஜ்ஜியமாய் இருக்கும். இப்பொழுது நாம் இவ்வுலக காரியங்களுடன் ஒட்டி வாழாதிருப்போமாக!
.

தேசங்களை தேவன் ஆசீர்வாதத்தின் ஆதரங்களாய் பயன்படுத்தக் கூடும் மட்டுமின்றி விசுவாசிகளுக்கான நியாயத்தீர்ப்பை அளிக்கவும் கூடும்.

வெளிப்படுத்தல் 17:10ன் படி அதில் குறிப்பிட்டுள்ள ஏழு இராஜாக்கள் அல்லது இராஜ்ஜியங்கள், அதில் ஐந்து பேர் இருக்கிறார்கள், ஒருவன் வர வேண்டியவனாய் இருக்கிறான்.

அப்போஸ்தலனாகிய யோவான் இவைகளை கி பி 96ல் எழுதினார் என்பதை நினைவு கூறுகிறோம். "இருக்கிறவைகள்" என்பது ரோம சாம்ராஜ்ஜியமாய் இருந்தது. எகிப்தியர்கள், அசீரியர்கள், கல்தேயர்கள், மேதிய - பெரிசியர்கள் மற்றும் கிரேக்கர்கள் போன்றவர்கள் ஒன்றன் பின் ஒன்றாய் எழுந்தவர்கள் மற்றும் இன்னும் வரவேண்டியது Revived Roman Empire [திரும்ப எழ இருக்கும் ரோம சாம்ராஜ்ஜியமாய்] இருந்தது அல்லது அந்திக்கிறிஸ்துவினால் உச்சநிலையை அடையும் ரோம சாம்ராஜ்ஜியமாய் இருந்தது.

DOCTRINES உபதேசங்கள்:

GOVERNMENT: NATIONAL அரசாங்கம் - தேசிய அளவிலானது

CYRUS – PERSIAN SHEPHERD கோரேஸ் -- பெரிசிய மேய்ப்பன்

DANIEL தானியேல்

பகுதி 9 - இராஜ்ஜியங்களின் அழிவும் ஒரு அழியாத இராஜ்ஜியம் அமைக்கப்படுதலும். 2:44-49.

44 அந்த இராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு இராஜ்ஜியத்தை எழும்பப்பண்ணுவார். அந்த இராஜ்ஜியம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை. ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுகினதை நீர் கண்டீரே , அப்படியே அது அந்த இராஜ்ஜியங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். 45 இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவ இராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார். சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான். 46 அப்பொழுது இராஜாவாகிய நெபுகாத்நேச்சார் முகங்குப்புற விழுந்து, தானியேலை வணங்கி, அவனுக்குக்

காணிக்கை செலுத்தவும் தூபங்காட்ட வும் கட்டளையிட்டான். 47 இராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், இராஜாக்களுக்கு ஆண்டவரும் மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான். 48 பின்பு இராஜா தானியேலைப் பெரியவனாக்கி, அவனுக்கு அநேகம் சிறந்த வெகுமதிகளைக் கொடுத்து, அவனைப் பாபிலோன் மாகாணம் முழுதுக்கும் அதிபதியாகவும், பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின்மேலும் பிரதான அதிகாரியாகவும் நியமித்தான். 49 தானியேல் இராஜாவை வேண்டிக்கொண்டதின்பேரில் அவன் சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் பாபிலோன் மாகாணத்துக் காரியங்களை விசாரிக்கும்படி வைத்தான். தானியேலோவென்றால் இராஜாவின் கொலுமண்டபத்தில் இருந்தான்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

சுமார் 2500 ஆண்டு காலங்களாய் மனிதன் சாம்ராஜ்ஜியங்களை அமைத்து தனது சொந்த ஞானத்தால் தேவனுக்கு எதிராய் அரசாள முயன்றான். இப்பொழுது கர்த்தர்தாமே திரும்பவும் கடந்து வந்து தமது பரந்த சாம்ராஜ்ஜியத்தை அமைக்கிறவராய் இருக்கிறார் அது 1000 ஆண்டு காலம் நீடிக்கிறதாய் இருக்கிறது.

வசனங்கள் 44 – 45.

இவ்வசனங்கள் தேவனது திட்டத்தின் இறுதி செயல்பாட்டினை மனுக்குலத்தின் இராஜ்ஜியங்களில் கையால் பெயர்த்தெடுக்கப்படாத கல் உருண்டு வருவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. அப்பொழுது உலக சாம்ராஜ்ஜியங்கள் அகற்றப்பட்டு நிபந்தனையற்ற தேவனின் உடன்படிக்கையான தாவீது மற்றும் பாலஸ்தீன உடன்படிக்கையினை நிலைநாட்டுவார். கையால்பெயர்த்தெடுக்கப்படாத கல் பூமி முழுவதையும் நிரப்புகிறதாய் இருந்தது.

முடிவில்லாத இராஜ்ஜியத்தை பரலோகத்தின் தேவன் அமைப்பார். இது 2 சாமுவேல் 7:16ன்படி தாவீதின் உடன்படிக்கையின் நிறைவேறுதலாய் இருக்கும். "உன் வீடும், உன் இராஜ்ஜியமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும். உன் இராஜாசனம் என்றென்றைக்கும்

நிலைபெற்றிருக்கும் என்கிறார் என்று சொல்லச் சொன்னார்." 2 சாமுவேல் 7:16.

இராஜ்ஜியம் அமைக்கப்படுவது உபத்திரவக்காலத்தின் இறுதியில் இடம்பெறும், அது இராஜாக்களின் காலத்தில் நடைபெறும் அது பத்து கால்விரல்களைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. பத்து ஆளுகிறவர்கள் வெளிப்படுத்தல் 17:12-14ல் கொடுக்கப்பட்டுள்ளது. *"12 நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து இராஜாக்களாம், இவர்கள் இன்னும் இராஜ்ஜியம் பெறவில்லை. இவர்கள் மிருகத்துடனே கூட ஒரு மணி நேரமளவும் இராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக்கொள்கிறார்கள். 13 இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள், இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். 14 இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் இராஜாதி இராஜாவாமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார், அவரோடு கூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்."*

தானியேல் நெபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தை உறுதிபடுத்துகிறவராய் இருந்தார், தற்போது என்ன நடக்கிறது என்பதையும் எதிர்கால சரித்திரத்தில் நெபுகாத்நேச்சார் காலந்தொடங்கி ஆயிர வருட ஆளுகை வரை நடக்க இருக்கும் காரியங்களை துள்ளியமாய் வியாக்கியானித்தார். அவர்கூறும்போது தேவன் இவைகளை இராஜாவுக்கு சொப்பனம் மூலம் நிச்சயம் நடைபெறவிருப்பதை தெரியப்படுத்தினார்.

வசனம் 46

நெபுகாத்நேச்சாரின் பிரதிக்கிரியை தானியேலை பணிந்து கொள்வதாய் இருந்தது. இங்கு மனித இராஜ்ஜியத்தில், மிகவும் வல்லமை பொருந்திய மனிதன் யூத சிறைக் கைதியின் முன் தலை குணிந்து பணிய நேரிட்டது. அவன் கூடியிருந்தவர்களுக்கு காணிக்கை செலுத்தக் கட்டளையிட்டு தானியேலுக்கு தூபம் காட்ட கட்டளையிட்டான்.

அதற்கு தானியேல் என்ன செய்தார் என்பது குறித்து கூறப்படவில்லை ஆனால் தொடர்ந்து தானியேல் என்ன செய்தார் என யூகிக்கப்படுகிறது, அவர் என்ன செய்தார் என்பதை தானியேல் 2:30ல் பார்க்கிறோம். "உயிரோடிருக்கிற எல்லாரைப்பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அல்ல, அர்த்தம் இராஜாவுக்குத் தெரிய வரவும்,

உம்முடைய இருதயத்தின் நினைவுகளை நீர் அறியவும், இந்த மறைபொருள் எனக்கு வெளியாக்கப்பட்டது."

வசனம் 47.

இங்கு நெபுகாத்நேச்சார் தானியேலின் தேவன் தேவர்களிலெல்லாம் பெரியவர் என உணர்ந்து கொண்டான். தலையானது பொன் என்று கேள்விபட்ட மாத்திரத்தில் சற்று இருமாப்பாய் இருந்திருக்க வேண்டும். இந்த வகையான செய்தியையே இராஜா கேட்க விரும்பியிருக்க வேண்டும். அவன் கூறும்போது தானியேலின் தேவன் இராஜாக்களின் கர்த்தர் மற்றும் வியாக்கியானிப்பதில் உண்மையுள்ளவர் என்றும் கூறினான். இது அவனது விசுவாச பயணத்தின் ஆரம்பமாய் இருந்தது. ஆனால் இது ஆரம்பம் மட்டுமாயிருந்தது.

அவன் பெருமைப்பட துவங்கினான் ஆனால் தேவன் தனது வாழ்வின் மூலம் என்ன செய்யவிருக்கிறார் என்பதை தீர்மானியாது இருந்து விட்டான். இதைக் குறித்து அவன் ஏழு ஆண்டுகாலங்கள் காத்திருந்து தான் கீழான நிலைக்கு தாழ்த்தப்படும் வரை வாழ்வில் காத்திருக்க வேண்டியதாய் இருந்தது. இதை அதிகாரம் 4ல் காண்கிறோம்.

.

வசனங்கள் 48-49.

தானியேல் பாபிலோனின் உயர் அதிகாரியாய் ஏற்படுத்தப்பட்டார், பாபிலோன் தலை நகரமாய் மிகப்பரந்த சாம்ராஜ்ஜியத்தின் தலை நகரமாய் விளங்கிற்று. மற்றும் பாபிலோனிய ஞானிகளுக்கு தலைவராயும் நியமிக்கப்பட்டார், மட்டுமின்றி மிகுந்த செல்வத்தையும் பெற்றுக்கொண்டார்.

அவரது மூன்று சிநேகிதராகிய சாத்ராக், மேஷாக், ஆபத்நேக்கோ இவர்களும் தானியேலின் கோரிக்கையின்படி அவருக்குக் கீழான மாகானங்களில் அவருக்குக்கீழ் உயர் அதிகாரிகளாக பணிஅமர்த்தப்பட்டனர். அவரது வெற்றியில் பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெற்ற நண்பர்கள் தேவ நாம மகிமைக்காக மற்றும் பாபிலோன் நன்மை கருதி அடிமைத்தன மக்களாயிருந்தவர்களை உயர்த்தினார் -- குறிப்பாக யூத நபர்களுக்கு அவ்வாறு செய்தார்.

தானியேல் பாபிலோனின் சட்ட அமைப்புகளை நிரவகிக்கும்படி உயர்த்தப்பட்டார், அதுவே "இராஜாவின் கொலுமண்டபத்தில் அமர்ந்திருப்பது" என்பதன் பொருள். இது லோத்து சோதோமில்

இருக்கையில் அவனது ஸ்தானமாய் இருந்தது ஆதியாகமம் 19:1. "லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான்"

கைக்கொள்ளுதல்:

கிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகையானது தாவீது உடன்படிக்கையில் நிறைவேறுதலாய் இருக்கிறது, அவ்வுடன்படிக்கையானது தேவன் ஒரு இராஜா யூதரை என்றென்றும் அரசாளுவார் என்பதே. அவர் அவர்களுக்கு ஒரு தேசத்தை பாலஸ்தீன உடன்படிக்கையில் வாக்களித்தார். தேவன் எதை வாக்களித்தாரோ அதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார். தேவன் தமது வாக்குத்தத்தங்கள் மிக நெருக்கமான விவரங்களுடன் காக்க வல்லவராய் இருக்கிறார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகையில் மனித இராஜ்ஜியத்தை அழித்து, அதை எடுத்துக்கொள்ளாது அதை பரிசுத்தப்படுத்துகிறவராய் இருப்பார்.பூமியிலுருந்து எல்லா அவிசுவாசிகளையும் அகற்றி ஆயிரவருட அரசாட்சியை விசுவாசிகளைக் கொண்டு அமைப்பது ஆரம்பமாகும்.

தேவன் எல்லா சரித்திரத்தையும் முன்கூட்டியே அதன் விபரங்கள் அனைத்தையும் அறிந்தவராய் இருக்கிறார். என்ன நிகழவிருக்கிறது என்பதை முன் கூட்டியே அவரால் சொல்ல இயலும் ஆனால் மிகமுக்கியமாய் நமது அவசியத்தை மிக பூரணமாய் அனுமதிக்கிறவராய் இருக்கிறார்.

தேவனின் மகத்துவத்தை விசுவாசிப்பது இரட்சிப்பின் விசுவாசம் ஆகாது. யாக்கோபு புத்தகத்தில், பிசாசுகளும் ஒரே தேவனைக் குறித்து விசுவாசித்து நடுங்குகின்றன, அது அவர்களுக்கு உதவப்போவதில்லை காரணம் அவர்கள் நடுங்குவதற்கான காரணம் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நியாயத்தீர்ப்புக்காக இருக்கிறது.

இரட்சிப்பு என்பது தனிப்பட்ட விசுவாசத்தை சிலுவையின் மீது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிரியைகள் மீது வைப்பதாகும், இது தேவனை விசுவாசிப்பது ஆகாது.

கர்த்தர் ஒருவனை உயர்த்தவும் அல்லது தாழ்த்தவும் செய்கிறவராய் இருக்கிறார். நாம் எந்த நிலையிலும் மனரம்மியமாய் இருக்க கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

DOCTRINES உபதேசங்கள்:

ROCK கன்மலை

BIBLE: INERRANCY வேதாகமம்: பிழையற்றது

BIBLE: INSPIRATION வேதாகமம்: ஏவப்பட்டு எழுதப்பட்டது.

PALESTINIAN COVENANT பாலஸ்தீனிய உடன்படிக்கை

DAVIDIC COVENANT தாவீதின் உடன்படிக்கை

KINGDOM - MILLENNIAL KINGDOM இராஜ்ஜியம் - ஆயிர வருட இராஜ்ஜியம்.

<u>தானியேல் அதிகாரம் 3.</u>

தானியேல் மூன்றாம் அதிகாரத்தை ஆறு பகுதிகளாய் பிரிக்கலாம்.

பொன்னால் உருவாக்கப்படும் சிலை வசனங்கள் 1-2.

பொற்சிலையை பிரதிஷ்டை செய்தல் வசனங்கள் 3-7.

மூன்று எபிரெய வாலிபர் பொற்சிலைய வணங்க மறுத்தல் வசனங்கள் 8-12.

மூன்று எபிரெய வாலிபரும் தேவனது வல்லமையை அறிவித்தல் வசனங்கள் 13-18.

மூன்று எபிரெய வாலிபர் அக்கினி சூலையிலிருந்து பாதுகாக்கப்படுதல் வசனங்கள் 19-27.

தேவனைக் குறித்து நெபுகாத்நேச்சாரின் அறிக்கை வசனங்கள் 28-30.

தானியேல் மூன்றாம் அதிகாரத்தின் தீர்க்கதரிசன பகுப்பாய்வு:

[i] நெபுகாத் நேச்சார் மகா உபத்திரகாலதில் ஆளுகிறவனாய்/மிருகமாய் சித்தரிக்கப்படுதல் (இவன்

இராஜாக்களுக்கெல்லம் இராஜாவாக) ஒரு சிலையை தனது உருவில் அமைத்து வணங்கும்படி செய்தல். வெளி. 13:14-15.

[ii] நெபுகாத்நேச்சார் நிறுவிய சிலையானது உபத்திரவகாலத்தில் பாழாக்கு அருவருப்பிற்கு முன் நிழலாய் இருக்கிறது. - தானியேல் 11:31, 12:11, மத்தேயு 24:15.

[iii] சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ என்பவர்கள் உபத்திரவ காலத்தில் விசுவாசிக்கும் இஸ்ரவேலரை பிரதிபலித்து காட்டுகிறவர்களாய் இருக்கின்றனர். விசுவாசிக்கிறவர்கள் தேவனது வார்த்தையால் விடுவிக்கப்படுவார்கள் சகரியா 14:1-9, மத்தேயு 24:9-26.

[iv] எரிகிற அக்கினி சூலையானது உபத்திரவகாலத்திற்கு முன் நிழலாய் இருக்கிறது, ஆனால் இதில் சத்துருக்கள் அழிக்கப்படுவதையும், விசுவாசிகள் பாதுகாக்கப்படுவதையும் காண்கிறோம்.

[v] அக்கினி சூலையில் நான்காவது நபர் தேவக் குமாரானாய் பிரதிபலிக்கிறார், இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை பிரதிபலிக்கிறது. அக்கினி சூலை போன்ற கால கட்டத்தில் இரண்டாம் முறையாக இப்பூமிக்கு கடந்து வந்து விசுவாசிக்கும் விசுவாசிகள் கொடிய அக்கினி போன்ற சோதனையினின்று விடுவிப்பார்.

[vi] தானியேல் 3:29ல் பணிந்து கொள்ளும் ஆணையானது ஆயிர வருட அரசாட்சியில் கிறிஸ்துவை உலகெங்கும் பணிந்து கொள்ள வேண்டியதை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது.

Some Principles சில அடிப்படைக் கருத்துக்கள்:

தேவன் எந்த ஒரு மூலப்பொருட்களால் குறைக்கப்படுவர் அல்லர், இதினிமித்தம் மனிதனால் வடிவமைக்கப்பட்ட மூலப்பொருட்கள் பணிந்து கொள்வதற்கு தகுதியற்றது.

மனித பெருமையோ அல்லது வல்லமையை தூஷிப்பது மனித சரித்திரத்தை மாற்றி அமைக்க முடியாது, தேவன் அரியனையில் இருக்கிறார்.

ஆவிக்குரிய விஷயங்களில் மனித சுயசித்தத்தில் தலையிடுவது அரசாங்கத்தின் சட்ட ரீதியான செயல்பாடாகாது.

ஆவிக்குரிய நிலையில் ஒத்துப்போதலை தேவன் ஒருபோதும் கனப்படுத்துவதில்லை -- கனமும், ஆசீர்வாதமும், பாதுகாப்பும் விசுவாசத்திற்காக நிற்கும்போது மட்டுமே இருக்கிறது.

தேவன் எப்பொழுதும் ஆவிக்குரிய விசுவாசிகளை பாதுகாக்கிறவராய் இருக்கிறார், அவர்களை பரலோகில் சேர்த்துக்கொள்ளும் வரைக்கும் இதை செய்கிறவராய் இருக்கிறார்.

ஒரு விசுவாசியின் மரணத்தின்போது தேவன் தனது தனிச்சிறப்புடனிருக்கிறார். சங்கீதம் . 68:20, 116:15.

இப்புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு அதிகாரமும் ஏதோ ஒரு பிரச்சனையை உள்ளடக்கியுள்ளது. இந்த அதிகாரத்தில் நெபுகாத்நேச்சாரின் தேசிய மதம் சார்ந்த விஷயத்தில் விசுவாசிகள் சவாலுக்குள்ளாகிறார்கள். ஒவ்வொரு பிரச்சனையும் சாத்தானது தாக்குதலாய் அமைந்து விசுவாசிகளது தேவனது திட்டத்திற்கு விரோதமாய் இருந்தது.

இன்றைய அளவில் அநேக மக்கள் சிறைச்சாலையில் அழிந்து போகிறவர்களாய் இருக்கின்றனர் காரணம் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தேவனது வார்த்தையை போதிக்கும் தைரியசாலிகளாய் விளங்குகின்றனர் அவர்கள் இரகசிய போலீசாருக்கு எதிராய் செயல்பட்டு அவர்கள் கூறும் அரசாங்கம் அவர்களது பிள்ளைகள் மீது அதிகாரம் செலுத்துகிறபடியால் அவ்வாறு செய்யலாகாது என தடைவிதிக்கிறவர்களாய் இருக்கின்றனர். இதினிமித்தம் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து அவர்கள் மரிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

இன்றைய அளவில் வேதாகம கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் அநேக மக்கள் செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் சரித்திரத்தின் இறுதிகட்ட உச்சநிலைக்கு சென்றுகொண்டிருப்பதாலும் அரசாங்கம் பிள்ளைகள் மீது அதிகார பிரயோகம் செய்து அவர்கள் வாழ்க்கைக்கு விளக்கமளித்து வருவதாலும் இது சாத்தியமாய் இருக்கிறது.

தானியேலின் வெளிப்பாடானது கூறுவது என்னவெனில் இவ்வகையான செயல்பாடு அந்திக்கிறிஸ்துவின் EFTPOS transactions ஜனங்களின் சரீரத்தில் பொருத்தப்படும் வரைக்கும் நடப்பதாய் இருக்கிறது. விசுவாசிகள் கர்த்தர் ஜெயங்கொண்டபடியால் இதற்கு விலகி ஜீவிப்பவர்களாய் விளங்குவர். இது இறுதிகால நிகழ்வாயிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

பகுதி 10 - பொன்னாலான சிலை உருவாக்கப்படுதல் 3:1-2.

1 இராஜாவாகிய நெபுகாத்நேச்சார் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, பாபிலோன் மாகாணத்திலிருக்கிற தூரா என்னும் சமபூமியிலே நிறுத்தினான். 2
பின்பு இராஜாவாகிய நெபுகாத்நேச்சார் தேசாதிபைகளையும் அதிகாரிகளையும் தலைவரையும், நியாதிபதிகளையும், பொக்கிஷக்காரரையும், நீதிசாஸ்திரிகளையும், விசாரிப்புக்காரரைஇயும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரையும் நெபுகாத்நேச்சார் இராஜா நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

முதலாவது உலக சாம்ராஜ்ஜியத்தை ஆளுவதில் திருப்தி கொள்ளாத மன்னன் எல்லாவற்றிற்கும் உன்னத நிலையில் தனது ஆட்சியும் கருத்தும் இருக்கவேண்டும் என முழுவதும் பொன்னாலான சிலையை உருவாக்கினான். அவன் இவ்வாறு சொல்லிக்கொள்வதில் ஆர்வமுள்ளவனாயிருந்தான், "தேவன் தவறிழைக்கிறார் தனது சாம்ராஜ்ஜியம் எந்நாளும் இருக்கும்" என எண்ணினான். அவன் தலை மட்டும் பொன்னாய் இருக்கப்போவதில்லை, முழுவதுமாய் பொன்னாய் இருக்கப் போவதாய் எண்ணினான். இந்தப் பெரிய விக்கிரகமானது அவன் இந்த காலகட்டத்தில் முழு வல்லமையையும் தான் பெற்றுவிட்டதாய் எண்ணினான். அவன் தன்னாட்சி செய்து வரும் இக்காலகட்டத்தில் முன்னும் பின்னும் ஊசலாடிக்கொண்டிருந்தான், இறுதியில் அது மதிகெட்ட காரியமாய் முடிவுற்றது. இதன் விளைவாய் மெய்யான இரட்சிப்பையும் சுயத்திலிருந்து விடுதலையையும் பெற்றுக்கொள்கிறவனாய் இருந்தான். தானியேல் 4:19-37. இதன் மூலம் இவன் அந்திக்கிறிஸ்துவை சித்தரிக்கிறவனாய் இருந்தான், அதற்கு பின் பெரிய சாம்ராஜ்ஜியத்தை ஆளுகிற மனிதராய் கூட இருந்தான். அவன் இரட்சிக்கப்படுகிறவனாய் இருந்தான் ஆனால் அலெக்ஸாண்டர், அந்தியோகஸ், காயஸ், போன்றோர் இதை அடையவில்லை மற்றும் அந்திக்கிறிஸ்து பெரிய அளவில் எல்லா நெபுகாத்நேச்சாரின் தீமை எழுதுவான், எவ்வித நனமையும் இன்றி எழுதுகிறவனாய் இருப்பான்.

பொன்னாலான சிலையானது கிட்டத்தட்ட 30 மீட்டர் உயரத்திற்கு, 3 மீட்டர் அகலமாயும் 2-20 டன் எடையுள்ளதாயும் இருந்தது. நவீன கால மதிப்பின்படி ஒரு பில்லியன் டாலர் ஆகும். (இது 2006 ன் மதிப்பின்படி). இது நெபுகாத்நேச்சார் எந்த அளவுக்கு செல்வந்தனாய் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

எப்படியிருப்பினும் அவன் தேவனின் மனிதனாய் விளங்கினான், கர்த்தர் அவனில் கிரியை நடப்பிக்கிறவராய் இருந்தார், அவன் எல்லோரையும் போன்று சத்தியத்தை தேடுகிறவனாய் இருந்தான், அவன் ஆரம்பத்தில் சுயத்தை முற்றிலும் தழுவினவனாய் இருந்தான். இந்த மனிதன் எல்லா மனிதருக்கும் நம்பிக்கை அளிக்கிறவனாய் இருக்கிறான். ஒரு மனிதன் ஜீவித்து இருப்பானேயானால் நம்பிக்கை இருக்கிறது. இரட்சிப்படைந்த மிக மோசமான மனிதன் -- அது தர்சு பட்டணத்து சவுலாய் இருந்தான். 1 தீமோத்தேயு 1:15.

தூரா சமவெளியில் பெரிய பொற்சிலை நிறுவப்பட்டது, தேசமெங்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டு அதன் பிரதிஷ்டைக்கான் ஒழுங்கு செய்யப்பட்டது. தூரா என்பது அக்காடிய சொல் (இம்மொழியானது மத்திய கிழக்கு நாடுகளில் கி மு 3000 முதல் 550 வரை பேசப்பட்டு வந்தது) அரமேயு மொழியானது பேச்சு வழக்கில் இருந்து வந்தது வேதத்தில் இப்பகுதியானது அரமேயு மொழியில் எழுதப்பட்டுள்ளது. அரமேயு மொழியானது மத்திய கிழக்கு நாடுகளில் கி மு 550 வரை பேசப்பட்டு வந்தது அதன் பின்னர் அரபிக் மொழியானது கி பி 6 ம் நூற்றாண்டு வரை பேசப்பட்டு வருகிறது. கிரேக்க மொழியானது கிழக்கு மத்தியதரைக்கடல் நாடுகளில் பேசப்பட்டு வந்தது, மேற்கு நாடுகளில் லத்தீன் மொழியானது வணிக மொழியாய் இருந்து வந்தது. இன்றைய அளவில் ஆங்கிலம் வாணிப மொழியாய் பேசப்பட்டு வருகிறது. மனித இராஜ்ஜியங்கள் வல்லமை மையங்களாய் மேற்கு தேசங்களில் மனித சரித்திரத்தில் விருத்தியடைந்து வருகிறது, மற்றும் அட்லாண்டிக் தேசத்தையும் இப்பொழுது ஊடுருவி செல்கிறதாய் இருக்கிறது EU-USA Nato Alliance தற்போது இரும்பு கலந்த களிமண் நாடுகளாய் உருப்பெற்று வருகிறது

வல்லமையும் அங்கீகார வேட்கையும் நெபுகாத்நேச்சாரை தொடர்ந்து ஆட்டிபடைத்து வந்தன. அவனது வல்லமையும் மற்றும் ஐசுவரியமும் இந்த சிலையில் மிதமிஞ்சி காணப்படுவதை காண்கிறோம். அவன் ஆளுகை செய்த தனது தேச தலைவர்கள் அனைவருக்கும் இதை காண்பிக்க முயன்றான், இதினிமித்தம் தூரா சமவெளில் சிலையின் பிரதிஷ்டைக்காய் அனைவரையும் அழைப்பித்தான்

இந்த மனிதனை மையமாய்க் கொண்ட விஷேசித்த ஆராதனைக்கு கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் எல்லா ஆளுநர்களும், எல்லா ஞானிகளும் மற்றும் சாத்ராக், மேஷாக், ஆபெத்நேக்கோ போன்றவர்களும் அழைக்கப்பட்டனர். அவர்களது தேசியபற்று மற்றும் ஆராதனைக்கு சாட்சிபகர தங்களது தெய்வீக தலைவரால் அழைக்கப்பட்டிருந்தனர், மற்றும் சிலைக்கு முன் தலை குனிவதன் மூலம் நெபுகாத்நேச்சார்

என்னும் மனிதனை வணங்குவது இதில் பிரதிபலிக்கப்பட்டது. சுயநலத்தை தெரிவிக்கும் ஆராதனை சாத்தான் ஆராதனையைக் குறிப்பிடுவதாய் இருந்தது மற்றும் வன்முறையான சாத்தானின் தாக்குதலாய் இருந்தது. இதுவே மனிதனின் OSN area of weakness, திறவுகோளாய் இருந்தது என்பதை சாத்தான் கண்டுகொண்டான். அதில் அவன் ஓரளவு வெற்றியும் கண்டான். இவ்வகை மனப்போராட்டத்தில் இராஜா ஏழு ஆண்டு காலங்கள் பயித்தக்காரனாய் நுழைய நேரிட்டது. நாம் கர்த்தருக்காக நிற்போமானால், கர்த்தர் சேவை செய்ய அனுமதிக்கும் பகுதியில் அவரை சேவிக்கும் போது, இப்படிப்பட்ட தாக்குதல் நமது own OSN area of weakness.ஆக எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுநர்களில் இவர்கள் அடங்குவர்:-

இளவரசர்கள் - "Satrapes" – இவர்கள் satraps அல்லது பாபிலோன் சாம்ராஜ்ஜிய மாகான ஆளுநர்கள் -- இவர்கள் ஸ்தல ஆளுநர்களாய் இருந்து செல்வம் மற்றும் வல்லமை இவைகளுக்கான வழியை தேடுகிறவர்களாய் இருந்தனர். பெரிசியர்களும் இதே பதத்தைப் பயன்படுத்தினர்.

Governors ஆளுநர்கள் - "Sigenin" - மாகாணங்களிலிருந்து இராணுவ தளபதிகள். மாகாணத்தில் உள்ள வல்லமைகளானது இவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இதைப்போன்றே பல நூற்றாண்டு காலமாய் ஹிட்லர் போன்றவர்களால் தளபதிகளை நியமித்து வல்லமையானது பகிர்ந்தளிக்கபடுவதாய் இருந்து வந்தது.

Captains தலைவர்கள் - "Pechah" - சிரிய பகுதிகளில் இராணுவ கட்டளையிடுபவர்கள்.

Judges நியாதிபதிகள் - "Adargazeraja" - மாகாணத்தின் பிரதாண நீதிபதிகள்.

Treasurers பொக்கிஷதாரர்கள் - "Gedaberin" - ஒவ்வொரு மாகாணத்தில் உள்ள பொக்கிஷங்களுக்கு காரியதரிசிகள்.

Counsellors ஆலோசகர்கள் - "Deth-Abar" - சட்டத்தைப் பாதுகாப்பவர்கள் வழக்கறிஞர்/ஜில்லா வழக்கறிஞர் சட்டம் வழங்குபவர்கள்.

Sheriffs ஷெரிஃப்கள் - ""Tiphtaye" – இதன் பொருள் மரணதண்டனை அளிப்பவர்கள் மற்றும் ஜில்லா கோர்ட் நீதிபதிகள்.

All the rulersஆளுபவர் அனைவரும் - "Shilton" – துணை ஆளுபவர்கள் அனைவரும் மற்றும் அலுவலர்கள்.

வசனங்கள் 1-12ல் தானியேல் இங்கு குறிப்பிடப்படவில்லை. இராஜ்ஜியத்தின் எல்லா தலைவர்களும் தோற்றத்தின்படி அங்கிருக்க, தானியேல் மற்றும் நான்கு யூதர்கள் அங்கில்லாதவர்களாய் காணப்பட்டனர். தானியேல் பிரத்தியேக அலுவல் காரணமாய் அங்கு இல்லாதிருக்க நேர்ந்திருக்கலாம். தானியேல் மூலம் கர்த்தர் மற்ற மூன்று நண்பர்களுக்கும் பயிற்சி அளித்து இருந்தார். தானியேல் இச்சந்தர்ப்பத்தில் அவர்களுடனில்லாது இருந்தது அவர்களுக்கு "பரீட்சையாய்" அமைந்தது, ஆனால் கர்த்தர் அவர்களை கைவிடாது அவர்களுடன் நிற்க அது ஏதுஉண்டாக்கியது. 1 கொரி. 10:13, மத்தேயு 28:18-20.

APPLICATION கைக்கொள்ளுதல்:

விசுவாசிகள் வேதாகமத்தில் காட்டப்பட்டுள்ள எதிர்கால நிகழ்வுகள் குறித்து தேவன் அவர்களை வழிநடத்தியிருக்க, அவிசுவாசிகள் தேவனது திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களாய் இருப்பர்.

அவிசுவாசிகள் தேவனது செய்திக்கு எதிராக செயல்படுகிறவர்களாகவே இருப்பர் மற்றும் அவர்கள் வல்லமை பொருந்தினவர்களாய் இருப்பார்களெனில், அவர்கள் பயமுறுத்துகிறவர்களாய் செயல்படுவர்.

சமுதாயத்தில் தனக்கு உயரிய அந்தஸ்து மற்றும் வல்லமை இருந்தும் மனிதனால் தேவனுடைய திட்டத்தை மாற்ற இயலாது.. சங்கீதம் 2:1-4.

காலா காலங்களில் மனித வழிநடத்துவோரின்றி பிரச்சனைக்குள்ளாகிறோம், அப்படிப்பட்ட பிரச்சனைகளுடன் போராடுகிறவர்களாய் இருக்கிறோம், ஆனால் நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் போது நாம் தனிப்பட்டவர்களாய் இருப்பதில்லை.

ஆவிக்குரிய மனிதன் மற்றவர்கள் பிரச்சனைகளால் சூழப்பட்டுள்ள சமயங்களில் கூடுகிறவனாய் இருக்கிறான். தேவன் போதிய அனுபவம் உண்டு எனச் சிந்திக்கும்போது, பிரச்சனைகள் வருவது அவர்களை பரீட்சிக்கவும் மற்றும் பெலப்படுத்தவும் என உணரும்படி செய்து, அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தை மற்றும் உபதேசத்தைச் சார்ந்து இருக்கும்படி செய்கிறதாய் இருக்கிறது. இக்காலகட்டங்களில் தேவன் தனது சமயத்தில் நம்மை தூக்கியெடுக்கிறவராய் இருக்கிறார்.

நாம் மற்றவர்களைச் சார்ந்து இருக்கிறோமா அல்லது தேவனது வார்த்தையை பரிசுத்த ஆவியானவர் மூலம் சார்ந்து இருக்கிறோமா? ஆவிக்குரிய தலைவர்கள் அபாயகரமான கருத்துக்களை உங்களுக்கு அளிக்கக்கூடும். அவர்கள் அபாயகரமானவர்களாய் இருந்து கொண்டு அவர்கள் உங்களை "ஆராதிக்க" உற்சாகப்படுத்தக் கூடும். இறுதியாய் நீங்கள் தனிமையில் பிரச்சனையுள்ள சூழல்களை சந்திக்க நேரிடும், ஆனால் தேவனுடன் நீங்கள் ஒருபோதும் உதவியை மற்றும் எந்த ஒரு காரியத்தையும் தீர்த்துவைக்கும் நிலையை இழந்து போவது இல்லை.

விக்கிரக் ஆராதனை என்பது ஒரு மனிதனின் உள்ளத்திலிருந்து துவங்குகிறதாய் இருக்கிறது. விக்கிரக ஆராதனையின் முடிவில், அவனுக்குள்ளான ஆழமான மதிப்பீடு அல்லது தனிப்பட்ட நபரின் தவிப்பானது வெளிப்படுகிறதாய் இருக்கிறது. தேவனது பராமறிப்பில் அதிருப்தியை காண்போர், ஒருவரின் கடமையிலும் அதிருப்தியை காண்பவர்களாய் இருப்பர். இக்காரியங்கள் எல்லாவற்றிலும் தவிப்பிற்கான கதவை திறந்து மனிதனை தேவனுடன் உள்ள ஐக்கியத்திலிருந்து அகலச்செய்வர், இங்கே விக்கிரக ஆராதனை ஆரம்பமாகிறது.

இச்சூழலை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அனுமதிப்பீர்களானால், உங்கள் இருதயம் இருளடைந்து/கடினப்பட்டு போய்விடுதல் இடம்பெறும். இதற்கு இல்லை என மறுப்பு தெரிவிப்போமெனில், நமது மனசாட்சியில் வேதாகமம் கூறுகிற "இருதயக் கடினம்" என்ற விக்கிரக ஆராதனை வளராது அது தவிர்க்கும். வேதவாக்கியங்கள் மந்தமாக மாறும் நாம் எப்பொழுதும் அதிகமான காரியங்களை எதிர்பார்க்கிறவர்களாயிருப்போம். நாம் தேவனுக்கடுத்த காரியங்களை விட்டு மற்ற காரியங்களை தேடுகிறவர்களாய் இருப்போம். நாம் மற்ற காரியங்களில் ஈடுபாடு கொள்வதன் காரணம் வேதவாக்கியங்கள் நன்மை பயக்காது போகும். நாம் மனிதக் கண்ணோட்டத்திற்கு சாய்ந்து போவோம். நாம் உபதேசங்களில் வஞ்சனைக்கு உட்படுவோம், நம்மை சுற்றியுள்ளவர்களுக்குள்ளே பிரச்சனைகளை வளர்த்துக்கொள்வோம். நாம் பிசாசுகளின் ஆதிக்கத்திற்குள்ளாய் மிக வலுவாய் சிக்கிக்கொள்வோம்

நாம் ஆவிக்குரிய செயல்பாட்டை எடுத்துகொள்ளாத பட்சத்தில் மற்றும் அறிக்கை செய்யாது இருப்போமானால், தேவனை வெறுக்கும் ஸ்தானத்திற்கு தள்ளப்பட்டுப்போவோம். விக்கிரக ஆராதனையானது மெய்த்தேவனுக்கு பதிலாய் ஆண்டுகொள்ளும். விக்கிரக ஆராதனையானது மதுபான அடிமைத்தனத்திற்கும் விஞ்ஞானமே கதியென விஞ்ஞானத்திற்கும் சாய்ந்து போக வழிநடத்துகிறதாய் இருக்கும். நாம் முடிவாய் இறுதியான தவிப்பிற்குள் கடந்து

வருகிறவர்களாய் இருப்போம். நாம் எல்லாவற்றிலும் முயன்று ஒன்றிலும் திருப்தி காணாதிருப்போம். நமது ஜெபம் பயத்தையும் திகிலையும் கொண்டுவருகிறதாய் இருக்கும். தேவன் கெட்ட குமாரனைப்போல பன்றிகள் தொழுவத்திலிருந்து மனந்திரும்புவதை எதிர்பார்க்கிறவராய் இருப்பார். நாம் திரும்பும்போது மட்டுமே நமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறவர்களாய் இருப்போம்.

DOCTRINE உபதேசம்

RELIGION மதம்

பகுதி 11 - பொன்னாலான சிலை பிரதிஷ்டை செய்யப்படுதல் தானியேல் 3:3-7.

3 அப்பொழுது தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், நியாதிபதிகளும், பொக்கிஷக்காரரும், நீதிசாஸ்திரிகளும், விசாரிப்புக்காரரும், நாடுகளிலுள்ள உத்தியோகஸ்தர் யாவரும் ராஜாவாகிய நெபுகாத்நேச்சார் நிறுத்தின சிலையின் பிரதிஷ்டைக்கு வந்து சேரும்படி அழைத்தனுப்பினான். 4 கட்டியக்காரன் உரத்த சத்தமாய்: சகல ஜனங்களும், ஜாதிகளும், பாஷைக்காரருமானவர்களே, உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது என்னவென்றால்: 5 எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது, நீங்கள் தாழ விழுந்து, இராஜாவாகிய நெபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளக்கடவீர்கள். 6 எவனாகிலும் தாழவிழுந்து, அதைப் பணிந்து கொள்ளாமற்போனால், அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையின் நடுவில் போடப்படுவான் என்றான். 7 ஆதலால் அகல ஜனங்களும், எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம் முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தைக் கேட்டவுடனே, நெபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொண்டார்கள்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

கி மு 600 ஆண்டுகளில் மக்கள் உருவங்களை விக்கிரகங்களாய் உருவாக்கி வந்தனர், அவைகளை மரத்தினாலும், அவைகளை

பொன்னினால் அல்லது வெள்ளியினால் மூடி செய்து வந்தனர். மிகவும் விலையேறப்பட்டவைகளாய் செய்யப்பட்டவைகள் தொலைந்து போயின. அவர்கள் யூகித்து உருவாக்கின விக்கிரகங்கள் போன்ற மக்கள்/தேவர்கள் இருந்தனர் உண்மையாகவே மக்கள் சிந்தித்தனாரா? அவர்கள் எதை சித்தரிக்கிறவர்களாய் இருந்தனர்? சபைப்பிதாகளும் மற்றும் அகஸ்டின் என்பவரும் கூறுகிறதாவது உருப்பிடித்து செய்கிறவர்கள் விக்கிரகங்களை மக்கள் சரீரப்பிரகாரமாய்க் கண்ட சொப்பனங்களின் பிரதிபலிப்பாய் அமைந்தன. அவர்கள் சுயநினைவின்றி நிரப்பப்பட்ட அவர்களது OSN/Satanic/demonic குழப்பங்களால் மற்றும் பின்னர் பிசாசுகளில் வல்லமைகளால் அவர்கள் கண்ட சொப்பனங்கள் அவர்கள் நினைவில் தோன்றி விக்கிரகங்களை செய்கிறவர்களுக்கு அளிப்பதினால் இப்படிப்பட்ட விக்கிரக உருவங்கள் உண்டானதாய் காணப்படுகின்றன.

அவர்களது சொப்பனங்களில் மிருகங்கள் தோன்றுவது ஒரு பாகமாய்க் கருதப்பட்டது, பலதரப்பட்ட மிருகங்களின் சொப்பனமானது தோன்றும்போது அம்மிருகங்கள் அசுத்தமான மிருகங்களாகவே இருந்தன. இப்படி ஒருவரது சொப்பனத்தில் தோன்றும் மிருகங்கள் பஞ்சாகமத்தில் அசுத்தமானவைகளாய் கருதப்பட்டன.

இது பண்டைய காலங்களில் நிகழ்ந்து வந்தது மட்டுமின்றி, இது போன்ற சொப்பனங்கள் இன்னும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த நவீன கால மக்களின் அனுபவங்கள் அவர்களது பயமுறுத்தும் சொப்பனங்களை நினைவிற்கு கொண்டு வந்து, அவைகளை ஒரு ஓவியனிடம் தெரிவித்து அவற்றை ஓவியமாய் வரைந்து பண்டைய உலகில் இருந்து வந்த பிசாசுகளின் - தெய்வங்களுக்கு ஒப்பிட்டுப்பார்ப்பர். ஆர்வமிக்க சில சித்திரங்கள் சொப்பனத்தின் பலனாய் உருவானவைகளே.

இரட்சிப்படையாத நவீனகால மனிதர் தான் காணும் சொப்பனத்தை உருவங்களாய் செய்யாது, சொப்பனங்களை சொப்பனங்களாக கருதி இருந்து விடுகின்றனர். ஒரு நவீனகால ஓவியன் தற்காலத்தில் அவன் கண்ட சொப்பனம் குறித்த ஒரு உதாரணம் காண்பிப்பது என்னவெனில், லிவியதான் என்னவென்று அவன் அறியாதிருந்தும் அவன் கண்ட சொப்பனத்தை விவரிக்கும்போது, லிவியதான் ஏழுதலைகளையுடைய ஒருகொடிய விலங்கினமாய் அதைச் சித்தரித்தான், இது சாத்தானின் அடையாளமாய் இருக்கிறது, இவ்விதமான வழியில் ஓவியங்கள் வளர்ந்தேறின.

இரட்சிப்படையாதோர் நடுவில் இப்படிப்பட்ட அடையாளங்கள் தொடர்ந்து காரணங்களாய் இருந்து வருகின்றன. விஷசமாய் அவைகள் தேவனைப் புறக்கணிப்பதைத் தீர்மானிப்பவைகளாய் இருக்கின்றன. அவைகள் பிசாசுகளால் உண்டானவைகளாய் இருக்கின்றன. மார்டின் லுத்தர் அவர்களும் கூட, இப்படிப்பட்ட சம்பவங்கள் தனது நாட்களில் நிகழ்ந்ததாய் குறிப்பிடுகிறார். மக்கள் சிருஷ்டிகரை தொழுது சேவிக்க மறுக்கும்போது, சத்துருவானவன் பிசாசுகள் மூலம், வினோதமான உருவங்களை வழிபட வழிநடத்துகிறவனாய் இருக்கிறான். இவ்வாறு அவர்கள் வல்லமையை அடைய உதவுகிறவனாய் இருக்கிறான். சாத்தானின் மதமானது வல்லமையைப் பெறும் மார்க்கமாய் இருந்தும் அவைகள் தீமையை இழைக்கும் வல்லமையுடையதாகவே திகழ்கின்றன.

தானியேல் 3ம் அதிகாரத்தில், பொன்னால் செய்யப்பட்ட ஒரு உருவத்தை காண்கிறோம். தரிசனத்தை பிரதிபலிக்கும் வண்ணமாய் பொன்னால் செய்யப்பட்ட சிலையை நாம் இங்கு காண்கிறோம். அச்சிலையானது பலதரப்பட்ட உலோகங்களாகிய வெள்ளி, வெண்கலம், இரும்பால் செய்யப்படாமல் முழுவதும் பொன்னால் செய்யப்பட்டிருந்தது. நெபுகாத்நேச்சார் தன்னைப் பிரதிபலிக்கும் வண்ணமாய் அச்சிலையை செய்தான் என்பது தெளிவாய் இருக்கிறது. அது அவனது முதலாம் சொப்பனத்திலிருந்து தோன்றினதாய்க் காணப்படுகிறது, அச்சொப்பனத்தில் அவன் கண்ட சிலையின் தலை மட்டும் பொன்னாய் இருந்தது ஆனால் அவன் உண்டுபண்ணுவித்த இந்த சிலையானது முழுவதும் பொன்னாய் இருந்தது குறிப்பிடத் தக்கது.

சிலையானது 30 மீட்டர் அல்லது 90 முழ உயரமாய் அடிக்கப்பட்ட பொன்னினால் உருவாக்கப்பட்டது. பொதுவாக சிலையானது மரத்தால் செய்யப்பட்டு மெல்லிய பொன்தகட்டால் அது மூடப்படுகிறதாய் இருக்கும், ஆனால் இச்சிலையோ முழுவதும் பொன்னால் செய்யப்பட்டதாய் இருந்தது. செங்கல்லால் ஆன ஒரு குன்றானது தெற்கு பாபிலோனில் கண்டு பிடிக்கப்பட்டது, அது இச்சிலைக்கு அடிஸ்தானமாய் விளங்கியது. புதைபொருள் ஆராய்ச்சியாளர் மூலம் இதைப்போன்ற உதாரணமான காரியங்களை அறிகிறவர்களாய் இருக்கிறோம் Colossus of Rhodes என்கிற சிலையானது 20 மீட்டர் உயரமாய் நிறுவப்பட்டிருந்தது.

ஹெரோடைட்டஸ் குறிப்பிடும்போது அவரது முதல் புத்தகத்தில் 183ம் பகுதியில், "அதே பாபிலோன் வட்டாரத்தில் இரண்டாவது ஆலயம் உருவாக்கப்பட்டு ஜுபிடர் சிலையானது பொன்னால் செய்யப்பட்டு ஒரு பொன் மேஜைமீது வைக்கப்பட்டு வழிப்பட்டு வந்தனர்" எனக்குறிப்பிடுகிறார். ஒரு பாபிலோனியர் குறிப்பிடும் போது

அப்பொன்னின் மதிப்பானது 800 பவுண்ட் ஆக இருந்ததாம். இவ்வாலயத்தின் வெளிப்பிரகாரத்தில் இரு பலிபீடங்கள் பொன்னினால் கட்டப்பட்டு ஒன்றில் சட்டரீதியான பால்குடிமறவாத மிருகங்களையும், மற்றபலிபீடத்தில் முழுவதும் வளர்ச்சியடைந்த மிருகங்களும் பலிசெலுத்தப்பட்டன. பண்டிகை காலங்களில் வருடத்தில் ஒரு முறை இப்பலிபீடங்களில் தூப வர்க்கமிட்டு இவைகளைத் தூப பீடங்களாகவும் பயன்படுத்தி வந்தனர். இதில் 1000 தாலந்து மதிப்புள்ள தூபமானது இட்டு தூபம் காட்டப்படும். கோரேஸ் அரசனின் காலத்தில் 12 முழ உயரத்தில் பொன்னாலான ஒரு விநோத மனிதனின் சிலையான் இவ்வாலயத்தில் நிறுவப்பட்டது.

ஹெரோடைட்டஸ் தொடர்ந்து கூறும்போது, கோரேஸைத் தொடர்ந்து பட்டத்துக்கு வந்த தரியூ மன்னன் இச்சிலையை உருக்கி தனது கருவூல பொக்கிஷமாய் செய்து கொண்டான் என்கிறார்.

இதினிமித்தம் பொற்சிலையானது தானியேலின் யூகத்தின் வெறுங்கற்பனையல்ல என்பது தெளிவாகிறது. மிகத்துள்ளியமாய் தானியேல் நெபுகாத்நேச்சாருக்கு தானியேல் 2ன் சொப்பனத்தை விவரித்தபோது, நெபுகாத்நேச்சார் மறுபடி பிறவாதவராய் இருந்தான். அவன் ஒரு அசிசுவாசியாய் இருந்தான், ஆகையால் இதை ஆவிக்குரிய நிலையில் புரிந்து கொள்ள இயலாத அவிசுவாசியாய் இருந்தான், ஆகையால் சத்தியத்தை புரட்டுகிற அஞ்ஞானிகளைப் போல இவனும் ஒருவனாய் இருந்தான். அவன் சொல்ல முயன்றது என்னவெனில் அவன் சொப்பனத்தில் கண்ட சிலையின் தலைப்பகுதி பொன்னாய் இருந்தது போல, அந்த சிலை முழுவதும் பொன்னாய் இருக்க விரும்பினான், மற்றும் அவன் அவ்வாறு நிலைத்திருக்க எண்ணம் கொண்டான், அவனது இராஜ்ஜியம் ஒருபோதும் தரக்குறைவான மற்ற உலோகமாய் இராதபடி எந்நாளும் ஒரேபோல இருக்க விரும்புகிறவனாய் காணப்பட்டான்.

கையால் பெயர்த்தெடுக்கப்படாத பெரிய கல்லானது அச்சிலையை நொறுக்கிப்போட்டதை அவன் மறந்து விட்டவனாய் காணப்பட்டான். தேவன் ஒவ்வொரு இராஜ்ஜியமும் குறிப்பிட்ட கால அளவு ஆளுகை செய்யும்படி அனுமதிக்கிறவராய் இருந்தார். இதை நெபுகாத்நேச்சார் இதைக்காண மறுக்கிறவனாய் காணப்பட்டான். மனித கண்ணோட்ட அமைப்பின்படி தன்னாட்சி சிந்தனையானது தன்னைக் குறித்து உயர்வாக எண்ணச் செய்தது. அந்த நாட்களில் ஜனங்கள் அரசரை பூமியில் தங்கள் தெய்வமாய் கருதி வந்தனர். அசீரிய இராஜாக்களும் மற்றும் எகிப்திய பாரோக்களும் பூமியில் தெய்வங்களாய் மதிக்கப்பட்டு வந்தனர். இதினிமித்தம் தெய்வத்திடமிருந்து அவர்கள் ஆசீர்வாதத்தின் வாய்க்கால்களாய் கருதப்பட்டு வந்தனர். அவர்கள் தமது பிரஜைகள் மீது அதிகாரம் உடையவர்களாய் நித்திய ஜீவனை மறுதலித்து வந்தனர்.

நெபுகாத்நேச்சார் தனது வல்லமை மற்றும் மகிமையை கொண்டாடும்படி பிரதிஷ்டை ஆராதனைக்கு அனைவரையும் அழைத்தனுப்பினான். அவன் தனது ஜனத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் கூட்டி சேர்த்தான். அவனது மத சூத்திரமானது, இருமுறை திரும்ப அமைக்கப்பட்டது, அதைக்காண்பதற்கு ஒரே காரியம் போல வாசிக்கும் போது இருந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் இதை காரணத்தோடே நடப்பிக்கிறவராய் இருந்தார், சுயவஞ்சகம் மற்றும் சுயத்தை மையமாய் கொண்டு தனது வல்லமை தீர்மானிக்கும் காரியமாய் அமைந்தது.

அரசாங்கத்தில் உள்ள எல்லா தர உயர் அதிகாரிகளும் பிரதிஷ்டை ஆராதனைக்கு அழைக்கப்பட்டனர். மாகான இளவரசர்கள், ஆளுநர்கள், இராணுவ தளபதிகள், இராணுவ குழுத் தலைவர்கள், நியாதிபதிகள், பொக்கிஷதாரர்கள், நிதி அமைச்சர்கள், ஆலோசகர்கள், சட்டத்தை பேணிக்காப்பவர்கள், ஷெரீஃப்கள், தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள், எல்லா மாகாண அலுவலர்கள் அனைவரும் ஒரு பெருங்கூட்டமாய் பிரதிஷ்டை ஆராதனைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். எல்லாதரப்பட்ட தலைவர்களும் இராஜாவின் புதுவிதமான கட்டளையை பின்பற்ற அழைக்கப்பட்டிருந்தனர்.

இதுவே சாத்தானின் ஆளுநர்கள் புறஜாதிய யுகத்தில் சரித்திரமுழுவதிலும் தேவ ஜனங்களை உபத்திரவப்படுத்த இராஜ வணக்கம் என்பதின் முதல் உதாரணமாய் இருக்கிறது. இது இறுதியானதும் மிகவும் தீமையானதும் எருசலேமில் அந்சிக்கிறிஸ்து நிறுவ இருக்கிற சிலையாய் இருக்கும். பரிசுத்த ஆவியானவர் குறிப்பிடுகையில் இந்த சிலையானது "நெபுகாத்நேச்சார் நிறுவின சிலையாய் இருக்கும் என குறிப்பிடுகிறார். தேவன் இராஜாக்களை இத்தகைய பெரிய தீமையினை செய்ய பொறுப்பாளிகளாய் இருக்க ஏவுகிறவராய் இருக்கிறார். இதைச் செய்யும் ஒவ்வொரு மனிதனும், இத்தகைய விக்கிரக ஆராதனை செய்ய தனிப்பட்ட விதத்தில் கடமைப்பட்டுள்ளான். இது அநேக வேறு மக்களை வித்தியாசமான கலாச்சாரங்களிலிருந்து மக்களை ஒரே இடத்தில் ஒரு மனிதனின் கீழ் கூட்டி சேர்க்க வகை செய்கிறதாய் இருக்கிறது.

சொப்பனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாம்ராஜ்ஜியங்கள் மூலம் குறிப்பிடப்படுவது என்னவெனில் மிகவும் வெற்றிகரமாக ஐக்கிய நாடுகளின் அமைப்பில் ஜனங்களை இணைக்க வகை செய்கிறதாய் இருக்கிறது. ஆளுபவர்களை வணங்குவது என்பது சாத்தானின் மதம் சார்ந்ததாயும் ரோம சாம்ராஜ்ஜியத்தை ஒவ்வொரு நூற்றாண்டுகளிலும்

இரத்த சாட்சிகளாய் கிறிஸ்தவர்களை கொலை செய்ய ஏது உண்டாக்குகிறதாய் இருக்கும். அநேகர் இராஜாவை தெய்வமாய் மதியாது மரணத்தைத் தழுவியவர்களாய் காணப்படுகின்றனர். சாத்தானின் இராஜ வணக்கமானது அலெக்ஸாண்டர். அந்தியோகஸ் IV, மிக சமீப காலத்தில் ஹிட்லர் போன்றோர்களால் அமல்படுத்தப்பட்டதாய் இருக்கிறது.

புதிய அரசாங்க மதத்திற்கு நெபுகாத்நேச்சாரின் திட்டம் மூலம் நல்ல வருமாணம் கிடைக்க வாய்ப்புண்டானது. மற்றும் அழகிய இசை ஜன்ங்களுக்காய் உருவாக்கப்பட்டது. நேர்த்தியான இசையானது உலகலாவிய மொழியாய் கருதப்பட்டது. இசையானது ஆராதனையை வெளிப்படுத்தும் ஓர் ஊடகமாய் விளங்கியது. இசையானது ஆட்டிப்படைக்கும் ஓர் கருவியாக சில சபையில் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாய் இருந்து வருகிறது.

சூரிய ஒளியில் மின்னும் பொன்னாலான பெரிய சிலையை திரளான ஜனக்கூட்டம் ஒன்று கூடி பணிந்து கொள்வதை ஒருவர் யூகிக்கக் கூடியதாய் இருக்கிறது. பின்னர் வசனம் 4ல் அவர்களை நோக்கி அறிவிக்கப்படுதல் இடம் பெறுகிறது. அந்த இராஜ்ஜியமானது ஜனங்களால் நிறைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. அங்கு குழுமியிருந்த பாஷைக்காரருக்கு அவர்களது பாஷையில் இராஜாவின் கட்டளையானது அறிவிக்கப்பட்டது.

இந்த சாதகமான தருணத்தில் இசைக் கலைஞர்கள் சிலை வணக்கத்தின் போது இசை எழுப்பி சிலையை பணிந்து கொள்ள வகை செய்தது, நெபுகாத்நேச்சாரை பணிந்து கொள்வதற்கு ஒப்பனையாக இருந்தது. இசையின் நோக்கமானது அவர்களது மனவெழுச்சியைத் தூண்டுகிறதாய் இருந்தது. இசையானது எல்லாத் தடைகளையும் அகற்றுவதற்கு துணைசெய்கிறதாய் இருந்தது. இசையானது கேட்போரை மயக்கி இயந்திரம் போன்று செயல்பட வைக்கிறதாய் இருக்கிறது.

வசனம் 6ல் அரசாங்க அதிகாரமானது எதிர்ப்போரை பயமுறுத்துவதாய் இருந்தது. பணிந்து கொள்ள மறுப்போருக்கு இங்கு நெபுகாத்நேச்சார் அக்கினி சூலையை ஆயத்தப்படுத்தி வைத்தவனாய் காணப்படுகிறான். இது அவனது வலுவான முறண்பாடாய் விளங்கியது. அரச வணக்கத்தை மீறுகிறவர்களுக்கு பெரிய அக்கினி சூலையானது, அங்கு ஏற்படுத்தப்பட்டதாய் இருந்தது.

அக்கினி சூலை என்பது கி மு 1660 வரை பெர்சியாவின் மரண தண்டனை அளிக்கும் முறையாக பயன்படுத்தப்பட்டு வந்தது. நவீன கால

பயமுறுத்தலுக்கு உதாரணமாக கி மு 1662ல் பெரிசிய அரசாங்கம் கூலி மற்றும் தானிய விலைக் கட்டுப்பாடு இவைகளை மீறுவோருக்கு அக்கினி சூலை தண்டனை அளிக்கப்பட்டு வந்தது. இவ்வகையான மரணதண்டனை பொதுவாக பொது இடங்களில் எல்லோரும் கூடும் இடங்களில் நிறைவேற்றப்பட்டு வந்தது.

வசனம் 7ல் மூன்று எபிரெய வாலிபரைத் தவிர அனைவரும் கீழ்ப்படிந்தவராய் இருந்தனர். மற்ற ஜனத்தொகையினர் நெபுகாத்நேச்சாரின் பயமுறுத்தலுக்கு அஞ்சி தாழ விழுந்து பொற்சிலையைப் பணிந்து கொண்டனர். நெபுகாத்நேச்சார் அதிகாரம் மற்றும் வல்லமை நிமித்தம் இப்பொழுது இந்த மனிதருக்கு தண்டனை வழங்கி தனது தெய்வ வல்லமையை நிலைநாட்டுதல் வேண்டும்.

கைக்கொள்ளுதல்:

தேவன் எப்பொழுதும் கிருபையின் கீழ் சுய சித்தத்தின் பற்றுருதியை காண்கிறவராய் இருக்கிறார். சுவிஷேசமானது பிரசங்கிக்கப்பட்டு இருக்கிறது அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவும் கூடும், நிராகரிக்கவும் கூடும். சுவிஷேசம் என்பது ஒருபோதும் கைக்கொள்ளும் காரியமல்ல. தேவனது வார்த்தைகளை போதிப்பது என்பது நமது கடமையாய் இருக்கிறது அதைக் கொண்டு ஆதிக்கம் செய்வதோ அல்லது பயமுறுத்துவதோ நமது காரியமல்ல.

இங்கு தேவனது வசனம் தவறாய் வியாக்கியானிக்கப்படுவதைக் காண்கிறோம், சத்தியத்திற்காக சுயமானது எடுத்துக்கொள்ளப்படும் வழிகாட்டியாக இருக்கிறது. இது விசுவாச துரோகத்தை கொண்டுவரக்கூடியதாய் இருக்கிறது. சாத்தானின் மதமானது சுயத்தை ஆராதிக்கக்கூடியதாய் இருக்கிறது, அதில் கலந்து கொள்வோர் இன்பத்தையும் அதிகாரத்தையும் அனுபவிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

இசையானது ஆராதிக்கும்படி ஒரு உபகரணமாய் இருக்கிறது ஆனால் மக்களைக் கையாளுவதற் கேதுவாக அதைப் பயன்படுத்துதல் கூடாது. அதை புலப்படாத தொடர்பாக பயன்படுத்தலாம் மற்றும் கிறிஸ்தவ போதனைக்காக அதைபயன்படுத்துதல் கூடாது அல்லது ஆராதனையில் மக்களைக் கையாளுவதற்கேதுவாகப் பயன்படுத்துதல் கூடாது.

நாம் அரசாங்க அதிகாரத்தின் கீழ் அரசாங்க ஆவிக்குரிய காரியங்களில் நமது முழங்கால்களை முடக்குதல் கூடாது. இப்படிப்பட்ட பயமுறுத்தல் வளர்ந்து கொண்டே செல்கிறதாய் இருக்கும்.

அரசாங்கம் அளிக்கும் நெருக்கத்தில் அதன் மிதமிஞ்சிய அதிகாரத்தை அதிக பட்ச ஒழுக்க ரீதியான தைரியம் கொண்டு எதிர்த்தல் வேண்டும். இது ஒரு விசுவாசிக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாய் கருதப்படுகிறது, தேவனுக்கு எதிரான செயல்களுக்கு ஒத்துப்போதல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

மதமானது எப்பொழுதும் வெளிப்பிரகாரமான சடங்குகளை வலியுறுத்துகிறது, கிறிஸ்தவமோ மனோரீதியான செயல்பாடுகளை ஒரு ஆராதனை செய்பவரிடம் வலியுறுத்துகிறதாய் இருக்கிறது.

ஆராதனை சுயசித்தத்தின் அடிப்படையில் இருத்தல் அவசியம், மற்றவர்கள் ஒரு நபரை கட்டாயப்படுத்துதல் கூடாது அல்லது மற்றெந்த காரியங்களையாவது அடையும்படி தூண்டுதல் கூடாது.

தேவன் ஆவிக்குரிய காரியங்களில் சுயசித்தத்தில் குறுக்கிட்டு தொந்திரவு செய்பவர் அல்லர், அவர் நம்முடைய கிருபை பொருந்திய மற்றும் மகத்தான ஆராதனையை தேடுகிற்வராய் இருக்கிறார்.

DOCTRINES உபதேசங்கள்

MUSIC இசை

IDOLATRY விக்கிரக ஆராதனை

பகுதி 12 - மூன்று எபிரெயர்கள் சிலையை வணங்க மறுத்தல்
தானியேல் 3:8-12.

8 அச்சயமத்தில் கல்தேயரில் சிலர் ராஜசமுகத்தில் வந்து யூதர்பேரில் குற்றஞ்சாற்றி, 9 இராஜாவாகிய நெபுகாத்நேச்சாரை நோக்கி: இராஜாவே, நீர் என்றும் வாழ்க. 10 எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித

கீதவாத்தியங்களின் சத்தத்தையும் கேட்கிற எந்த மனுஷனும் தாழவிழுந்து பொற்சிலையைப் பணிந்து கொள்ள வேண்டுமென்றும், 11 எவனாகிலும் தாழவிழுந்து பணிந்துகொள்ளமற்போனால், அவன் எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்பட வேண்டுமென்றும் இராஜாவாகிய நீர் கட்டளையிட்டீரே, 12 பாபிலோன் மாகாணத்தின் காரியங்களை விசாரிக்கும்படி நீர் ஏற்படுத்தின சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ என்னும் யூதரான மனுஷர் இருக்கிறார்களே, அவர்கள் இராஜாவாகிய உம்மை மதிக்கவில்லை, அவர்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்யாமலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமலும் இருக்கிறார்கள் என்றார்கள்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

ஜனங்கள் பொற்சிலையை தாழவிழுந்து பணிந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டனர். மூன்று எபிரெயர்கள் தவிர மற்ற அனைவரும் பணிந்து கொண்டனர். இது நெபுகாத்நேச்சாருக்கு அறிவிக்கப்பட்டது. யூதர்கள் மிகவும் சிறப்பான நிரவாகிகளாய் இருந்தனர் நெபுகாத்நேச்சார் அவர்களை கொலை செய்வதற்கு விருப்பமில்லாதவனாய் காணப்பட்டான். அவர்கள் மதிப்புமிக்கவர்களாய் கருதப்பட்டனர். அதினிமித்தம் அவர்களிடம் ஒரு நோக்கத்தோடா கட்டளையை மறுதலித்தீர்கள் என வினவி, குழப்பமடைந்திருக்கையில், அவனது இறுமாப்பின் போது அவனை மறுதலித்தவர்களாய் காணப்பட்டனர்.

அவர்கள் இராஜாவுக்கு மறுமொழியாக இராஜாவுக்கு பயப்படாமல், அச்சூழலில் முதலாம் கற்பனையை எடுத்துரைத்தனர். யாத்திராகமம் 20:3, தானியேல் 3:17. மூன்று வாலிபரும் தேவன் நெபுகாத்நேச்சாரின் கைக்கு தப்புவித்து இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார் என்றனர். இங்கு தேவன் சர்வ வல்லவராய் இருப்பதைக் கண்டனர் ஏசாயா 41:10-17. அவர் அவர்களது இக்கட்டில் உதவிபுரிபவராக கண்டனர்.

வசனம் 8ல் விசுவாசின் பிரச்சனைகளைக் காண்கிறோம். இங்கு நாம் காண்பது என்னவெனில் சாத்தானின் எழுச்சி யூதர்களுக்கு விரோதமாய் எழுவதை காண்கிறவர்களாய் இருக்கிறோம். குற்றம்சாட்டுபவர்கள் தங்களது தாக்குதல்களை தனிநபருக்கு விரோதமாய் எழுப்பாமல், அவர்கள் இனத்துக்கு விரோதமாய் செயல்படுவதைக் காண்கிறோம். இந்த வசனத்தில் கல்தேயர்கள் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்களாய் இராஜவுக்கு போதனையாளர்களாய் இருப்பதைக் காண்கிறோம்.

அவர்கள் யூதர்களைக் குறித்து பொறாமை கொண்டவர்களாய் அவர்கள் பாபிலோனுக்கு அடிமைகளாய் வந்து சமுதாயத்தில் தலைவர்கள் விளங்கி வந்ததை வெறுத்தார்கள். ஆகையால் அவர்கள் இத்தருணத்தைப் பயன்படுத்திக் கொள்பவர்களாய் விளங்கினர். யூதர் எப்போதும் பொதுவான சமுதாயத்தினருடன் ஒத்துப்போகாதவர்களாய் காணப்பட்டனர். அவர்கள் ஒரு தெய்வ வழிபாடு செய்கிறவர்கள், அவர்கள் பல தெய்வ வழிபாட்டினை புறக்கணித்து, புறஜாதியாரின் வழியில் செல்ல மறுப்பவர்களாயிருந்தனர். யூதர்கள் எப்பொழுதும் சூழ்நிலைக்கு தகுந்தவாறு வாழாதவர்களாய்க் காணப்பட்டனர், ஆகையால் பின்னர் அவர்கள் மறுபடி பிறந்த விசுவாசிகளாய் விளங்கினர். இவ்வாறு காணப்படுகிற வித்தியாசத்தில் ஹிட்லர் இப்படிப்பட்ட குழுவினரை உபத்திரவப்படுத்த முயன்றான். சாத்தானும் அவனது மக்களும் ஒத்துப்போவதையும் மற்றும் இணங்கிப்போவதையும் விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர். யோவான் 15:18ff.

குற்றம்சாட்டுபவர்கள் நெபுகாத்நேச்சாரிடம் இவ்வாறு கூறினர், யூதர்கள் "அவனை" மதிக்கவில்லை, "அவனது" தெய்வத்தை சேவிக்கவில்லை, "அவன்" நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளவில்லை எனக் குற்றம்சாட்டினர். இங்கு மதத்தையும் அரசியலையும் ஒன்றாக இணைப்பதைக் காண்கிறோம். அது ஒரு பழைய விக்கிரகமல்ல, அது நெபுகாத்நேச்சாரின் விக்கிரகமாய் இருந்தது. இப்படிப்பட்டவர்கள் யூதர்கள் அதிகாரத்துடன் இருப்பதைக் குறித்து பொறாமை கொண்டவர்களாய், இப்பொழுது அவர்களை பதவியிலிருந்து அகற்ற விருப்பங்கொண்டனர். அவர்கள் சாத்தானுடைய மக்களாய் இருப்பதற்கு காணக்கூடிய குற்றச்சாட்டுகளை உருவாக்குகிறவர்களாய் காணப்பட்டனர். இங்கு நாம் காண்பது என்னவெனில், கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்துவின் கீழ் ஏற்படவிருக்கும் உலகலாவிய மத அமைப்பைக் குறித்து பெரிய அளவில் எழுதப்படப்போவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

வசனம் 12ல் குறிப்பிடப்பட்டுள்ள சொற்றொடர் என்னவென்றால், "குறிப்பிட்ட யூதர்கள்" இது கல்தேயர்களால் தரக்குறைவாய் கருதப்பட்ட இனம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. அவர்கள் தொடர்ந்து குறிப்பிடுகையில், இம்மூன்று வாலிபரும் நெபுகாத்நேச்சாரால் பதவி அமர்த்தப்பட்டவர்கள், அவரை மதியாமல் அவர் சொல்வதற்கு கீழ்ப்படிய மறுத்தவர்கள் எனக்குற்றம் சாட்டினர். அவன் அவர்கள் "உண்மையுள்ளவர்களாய்" இருந்து தான் கூறுவனவற்றிற்கு அவர்கள் கீழ்ப்படிவர் என விசுவாசித்தான். அவர்களோ மதிப்புக்குரியவர்களும், நன்றியுள்ளவர்களும்,

உண்மையுள்ளவர்களுமாய் இருந்த போதிலும் தேவன் ஒருவரையே ஆராதிக்கிறவர்களாய் விளங்கினர்.

எப்படியிருப்பினும் இங்கு நாம் காணும் மூன்று வாலிபரும் விசித்திரமானவர்களும், விசுவாச கன்மலைமீது நிற்கிறவர்களும், அவர்களது தலைவர் தானியேல் அங்கில்லாதிருந்தும் சரியான தீர்மானம் எடுக்கிறவர்களுமாய் இருந்தனர். அவர்கள் உறுதியாய் நின்று தேவன்து வார்த்தையை தங்களது வாழ்விற்குக் கைக்கொள்கிறவர்களாய் இருந்தனர்.

தானியேல் 2 மற்றும் 3 அதிகாரத்திற்கு இடையே ஒரு இடைவெளி இருந்திருக்க வேண்டும் இந்த மூன்று வாலிபரும் teenagers ஆக இராது இருபது அல்லது முப்பது வயது நிரம்பியவர்களாய் இருத்தல் வேண்டும். செப்துவஜிந்து மொழிபெயர்ப்பின்படி [பழைய ஏற்பாட்டு கிரேக்க மொழிபெயர்ப்பு] இவ்வாண்டுகளின் இடைவெளி 18 ஆண்டுகளாய் இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. இச்சம்பவம் கி மு 587ல் நிகழ்ந்திருக்க வேண்டும், இது எருசலேமானது இறுதியாய் முற்றுகையிடப்பட்டு முழுவதுமாய் அழிக்கப்பட்ட வருடத்திற்கு மறு வருடத்தில் சம்பவித்திருக்க வேண்டும். கல்தேயர்களின் Anti-Semitism "தேசப்பற்றுறுதி" உடையவர்களாய் இருந்தனர். இம்மூன்று யூதர்களும் கட்டளைக்கு எதிர்த்து நின்றதை இவர்கள் கண்டபோது, எருசலேமில் இதேசமயத்தில் பாபிலோனுக்கு எதிர்த்து கலகம் செய்வதை இவர்கள் நினைவு கூர்ந்தனர்.

நெபுகாத்நேச்சார் மன நிலையானது, "கடவுள் ஆளும்படியான திறமையை அளித்து, தான் எத்தகைய தெய்வம் என அறிவிக்கிறவராய் இருக்கிறார்" என்பதைப் பற்றியதாய் இருந்தது. இது அவர்களது ஓவியங்களில் வரையப்பட்டு கடவுளும் அரசனும் ஒரே படமாய் வரையப்பட்டு, அரசன் தெய்வத்தின்பிரதிநிதியாய் பூமி மீது செயல்படுகிறான் என்பதைக் காட்டுவதாய் இருந்தது. நெபுகாத்நேச்சார் தன்னை பாபிலோன் முழுவதிலும் வெளிக்காட்டுகிறவனாய் இருந்தான், அதைச் செய்வதன் மூலம், இந்த மனிதர்கள் மனப்பூர்வமாய் அவனுக்கு சிதேக்கியாவின் கீழ் உள்ளவர்களைப்போல இவர்களும் எதிர்த்து நிற்பதாக உணர்ந்தான்.

உதாரணமாக மகா அசீரிய சக்கரவர்த்தியான அஷுர்பானர்பல் தன்னை இரதத்தில் இருப்பதாய் சித்தரித்து காட்டுகிறவனாய் இருந்தான். இதைப்போன்றே மண்டபத்தின் மேற்சுவரில் கடவுளை சித்தரித்து, அரசனுக்கும் தெய்வத்துக்கும் உள்ள நெருங்கிய உறவானது சித்தரிக்கப்படுகிறதாய் இருந்தது. இது தேசமும் கடவுளும்

ஐக்கியப்பட்டவராய் இருக்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருந்தது. இது தொடர்ச்சியாய் நம்பப்பட்டு வருகிறதாய் இருக்கிறது, வேதாகமம் அழைக்கிற சாத்தானின் அமைப்பிலும் இத்தகைய அமைப்பானது "உலகப்பிரகாரமான" என அழைக்கப்படுகிறதாய் இருக்கிறது. எகிப்து - அசீரியா - மேதிய பெரிசியா - கிரேக்கம் - ரோம் - அந்திக்கிறிஸ்து போன்றோரை இரண்டாம் வருகையின் போது கிறிஸ்து தோற்கடிப்பார். தானியேலின் எல்லா தரிசனமும் இக்கருத்தில் ஒன்றிணைக்கப்பட்டு, சாத்தானின் மனித ஆளுகையானது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது முடிவடையும் என அறிவிக்கிறதாய் இருக்கிறது.

இதையே நெபுகாத்நேச்சார் புரிந்து கொண்டவனாய் தனக்கும் தேவனுக்கும் இடையே உள்ள உறவாய் கருதினான். ஆகையால் அவன் தனது தெய்வத்தின்படியே தான் செயல்படுவதாய் விசுவாசித்தான். இதன் பொருள் நெபுகாத்நேச்சார் தெய்வ வாக்கை கூறுகிறவனாய் இருக்கிறான். அதை நிறைவேற்றுவது நெபுகாத்நேச்சாருக்கு மதிப்பை தேடித்தருவதாய் இருக்கிறது மற்றும் அவனது தெய்வத்தையும் மதிப்பதாய் இருக்கிறது, நெபுகாத்நேச்சாரை மதியாமல் இருப்பவன், பாபிலோனிய தெய்வங்களை அவமதிக்கிறவனாகிறான் மற்றும் தேசத்துரோகியாயும் இருக்கிறான். இது சாத்தானின் செயலாய் இருந்து ரோம சாம்ராஜ்ஜியத்தில் ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்படுவதற்கு ஏதுவாய் இருந்தது மற்றும் அந்திக்கிறிஸ்துவின் சாம்ராஜ்ஜியத்தில் அநேகர் கொலை செய்யப்பட இது வழி வகை செய்கிறதாய் இருக்கும்.

யூதர்களுக்கு இரண்டாம் தருணம் கொடுக்கப்பட்டது, இருப்பினும் அவர்கள் சிலையை பணிந்து கொள்ள மறுத்தனர். நெபுகாத்நேச்சார் அதைக் கேள்விபட்டு மிகவும் சினமடைந்தான். அவன் புத்தியீனமாய் நடந்து கொண்டு தேவன் தனக்கு கொடுத்த மனசாட்சிக்கு விரோதமாய் கலகம் செய்யத் துணிவு கொண்டான். நாம் இங்கு ஒரு அவிசுவாசி கேட்ட சத்தியத்திற்கு எதிர்மறையாய் செயல்படுகிறதைக் காண்கிறோம், இருப்பினும் தேவன் அவனில் கிரியை நடப்பிக்கிறவராய் இருந்தார். யோவான் 16:8-11. அவனும் கூட கிழிக்கப்பட்டவனாய் இருந்தான் காரணம் இம்மனிதரை அவன் நேசித்தான் மற்றும் அவர்களை மதிப்புக்குரியவர்களாய் கருதினான் இருப்பினும் அவன் செய்த தன்னாட்சியானது அவர்களது கீழ்ப்படியாமையை வெறுக்கும்படி செய்தது.

எரேமியாவின் வார்த்தைகள் அவனிடம் கொண்டு வரப்பட்ட நாள் முதலாய் தேவன் அவனில் கிரியை செய்கிறவராய் இருந்தார், மற்றும் 18

ஆண்டுகளுக்கு முன்னர் தானியேலை சந்தித்த நாள் முதற்கொண்டும் இது நிகழ்ந்து வந்தது. எரேமியா யூதர்கள் தாங்கள் அடிபணிந்து செல்லுதல் வேண்டும் என அவன் எருசலேமில் சிறைச்சாலையில் இருந்தபோதும் கூறுகிறவனாய் இருந்தான். நெபுகாத்நேச்சார் எரேமியாவை போகவிட்டு அவனை ஆசீர்வதிக்க முயன்றான். அதன் விளைவாக எரேமியா புலம்பல் புத்தகத்தை எழுத நேரிட்டது, அது பாபிலோனியரின் இறுதி சிறைப்பிடிப்பிற்கு முயன்றதைக் காட்டுவதாய் இருந்தது.

தேவன் நெபுகாத்நேச்சாருடன் கிட்டதட்ட 20 ஆண்டுகாலங்களாய் எரேமியாவைக் கொண்டு மட்டுமல்லாது தானியேலைக் கொண்டும் கிரியை செய்து வந்தார். தற்போது எசேக்கியேல் மற்றும் இந்த மூன்று வாலிபர் மூலமாகவும் அவனுடன் கிரியை நடப்பித்தார்.

கைக்கொள்ளுதல்:

மதத்தையும் மற்றும் தேசத்தையும் வேறுபிரிப்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாய் இருக்கிறது, அவர்கள் அவ்வாறு இணைக்கும்போது அங்கே எல்லோரும் மனப்பூர்வமான அடிமைத்தனத்திற்குள்ளாகிறார்கள். நாம் நமது தேசத்திற்காய் ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், இதைப்போன்ற காரியங்கள் அந்திக்கிறிஸ்து ஆளுகை செய்வதற்கு முன் இடம் பெறாதவாறு ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். சாத்தானின் எல்லா தந்திரங்களையும் எதிர்த்து தடை உண்டாக்குமாறு அவன் மதத்தையும் அரசியலையும் இணைக்காதவாறு ஜெபிக்க கடமைப்பட்டுள்ளோம்.

நீங்கள் மத சுதந்திரமுள்ளவர்களாய் அதினின்று அகன்று போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், இத்தகைய தீமையானது உங்களை மேற்கொள்ளாதிருக்க நீங்கள் கவனமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம்.

சுய சித்தம் என்பது வேதாகம திருமணத்தின் அடிப்படையாக இருக்கிறது, குடும்பம் மற்றும் தேசிய அரசாங்கம் இவற்றிற்கும் அடிப்படையாக இருக்கிறது.

உங்கள் சுயசித்தத்திற்கு எதிராய் அரசாங்கம் சட்டம் இயற்றுமென்றால் அது உங்கள் திருமணத்தையும் மற்றும் குடும்பத்தையும் தாக்குகிறதாய் அமையும்.

தேசமல்ல பெற்றோர்களே அதிகாரத்தின் ஆதாரங்களாய் விளங்குகின்றனர்.

மனித சுதந்திரம் மற்றும் அரசாங்கம் சமநிலையில் இருத்தல் வேண்டும். சாத்தான் எப்பொழுதும் தேசத்தை தன்வசப்படுத்தி குற்றங்கள் குழப்பங்களை உருவாக்க முயலுகிறவனாய் இருக்கிறான். அல்லது தேசத்தின் வல்லமையை பெரிதுபடுத்தி மனித சுதந்திரத்தை கீழடக்க முற்படுகிறவனாய் இருக்கிறான்.

Amillennialism, Anti-Semitism த்திற்கு நேராக வழிநடத்துகிறதாய் இருக்கிறது, காரணம் அவர்கள் சிந்திப்பது எல்லா யூதரின் ஆசீர்வாதங்களும் இப்பொழுது சபையின் சொத்தாக மாறிவிட்டது. சாத்தான் எப்பொழுதும் எல்லா யூதர்களையும் அழித்துவிட முயலுகிறான் இதினிமித்தம் அவன் தீர்க்கதரிசனத்தை நிறைவேற விடாமல் தடுத்துவிடச் செய்கிறவனாய் இருக்கிறான்.

ஒருவர் வெற்றியுள்ளவர்களாய் இருப்பார்களேயானால் எப்பொழுதும் மற்றொருவர் அவர்கள் மீது பொறாமையுடன் காணப்படுகிறவர்களாய் இருப்பர்.

பொறாமை கொள்பவரிடம் பழிவாங்குதல் கூடாது, அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். எல்லா சமயத்திலும் நாம் அவர்களுக்கு சத்தியத்தினை அளிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

"பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என கர்த்தர் சொல்லுகிறார்." ரோமர் 12:19, எபிரெயர் 10:31, 12:28-29.

நமது சூழல்களை நாம் பார்க்கும்பொழுது, நாம் அல்லது பிறர் மாயையான தோற்றத்திலிருந்து விடுபடுகிறவர்களாய் இருக்கிறோம். மற்றவர்கள் நம்மைக்குறித்து எதைச் சொன்னாலும் நாம் அதைக் குறித்து கவலைப்படுதல் கூடாது, நாம் நமது வாழ்வை கர்த்தருக்கய் வாழுதல் வேண்டும். கொலோசெயர் 3:16-17.

தேவன் சூழ்நிலைகளைக் குறித்து என்ன நினைக்கிறாரோ அதுவே முக்கியமானதாய் இருக்கிறது.

உபதேசங்கள்:

SEPARATION வேறுபிரிக்கப்படுதல்.

ANTI-SEMITISM ஆண்டி செமிட்டிஸம்

JEALOUSY பொறாமை

பகுதி 13 -- மூன்று எபிரெயர்கள் தேவனது வல்லமையை அறிவித்தல்: தானியேல் 3:13-18.

**13 அப்பொழுது நெபுகாத்நேச்சார் உக்கிரகோபங்கொண்டு
சாத்ராக்கையும், மேஷாக்கையும், ஆபேத்நேகோவையும் அழைத்துக்
கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அவர்கள் அந்தப் புருஷரை
இராஜாவின் சமுகத்தில் கொண்டு வந்து விட்ட போது. 14
நெபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி: சாத்ராக், மேஷாக்,
ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு ஆராதனை
செய்யாமலும், நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து
கொள்ளாமலும் இருந்தது மெய்தானா? 15 இப்போதும் எக்காளம்,
நாகசுரம், கின்னரம், வீணை, சுரமண்டலம், தம்புரு முதலான
சகலவித கீத வாத்தியங்களின் சத்தத்தையும் நீங்கள் கேட்கும்போது,
தாழ விழுந்து நான் பண்ணிவைத்த சிலையைப் பணிந்து கொள்ள
ஆயத்தமாய் இருந்தால் நல்லது, பணிந்து
கொள்ளாதிருந்தீர்களேயாகில், அந்நேரமே எரிகிற அக்கினிச்
சூளையின் நடுவிலே போடப்படுவீர்கள். உங்களை என் கைக்குத்
தப்புவிக்கப்போகிற தேவன் யார் என்றான். 16 சாத்ராக், மேஷாக்,
ஆபேத்நேகோ என்பவர்கள் இராஜாவை நோக்கி: நெபுகாத்நேச்சாரே,
இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்திரவு சொல்ல எங்களுக்கு
அவசியமில்லை. 17 நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத்
தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார். அவர் எரிகிற அக்கினிச்
சூளைக்கும், இராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி
விடுவிப்பார். 18 விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய
தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின
பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது உமக்குத்
தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.**

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

ஒவ்வொரு முறையும் நெபுகாத்நேச்சார் மனித கண்ணோட்டத்தின்படி எதையாகிலும் செய்யும்பொது, அது அவனுக்கு சவாலாகவும் சிட்சைக்கு ஏதுவாகவும் அமைந்தது. தானியேல் 2 ம் அதிகாரத்தில் அவன் ஒவ்வொன்றையும் தகர்த்து போடுகிறவனாய் இருக்கிறான், இந்த அதிகாரத்தில் மிகவும் கோபப்படுகிறவனாய்க் காணப்படுகிறான். அவன் வேதாகமத்தில் பதில்கள் உண்டென்பதை அறிந்திருந்திருந்தான் ஆனால் இத்தருணத்தில் அவன் அதைப் புறக்கணித்தான். அவன் தொடர்ந்து சத்தியத்தை அழிக்க முயன்றான், ஆனால் மாறாக அவன் சிட்சையை அடைந்து ஆழமான சவாலுக்குள் கடந்து சென்றான்.

இத்தகைய கொடிய செயல்பாட்டினால், மிகச் சிறந்த இராணுவ மனிதர்களை அவன் இழக்க நேரிட்டது. அவன் தன்னில் தானே சுயக்கட்டுப்பாட்டை இழந்தான். 2 தீமோத்தேயு 1:7 ஐ மனதில் கொண்டவர்களாய், பரிசுத்தாவியானவரின் அடையாளம் மற்றும் வாழ்வில் அவரது பிரசன்னம் "ஆவிக்குரிய வல்லமையாய்" இருக்கிறது, மற்றும் "இழந்து போனோரின் மீதும், சகோரதரர்கள் மீதுள்ள அன்பு" மற்றும் "நிலையான/ சுயக்கட்டுப்பாட்டின் மனநிலை போன்றவற்றை அளிக்கிறதாய் இருக்கிறது.

"கல்தேயரின்" மத வகுப்பின்படி இப்படிப்பட்ட சிந்தனையானது அவனது மனதில் விதைக்கப்பட்டது, இப்படிப்பட்ட யூதர்கள் உண்மையற்றவர்கள், அல்லது அவர்கள் தேசத்துரோகிகள், என எண்ணத்தூண்டியது மற்றும் நெபுகாத்நேச்சாரை உண்மையாய் அக்கினி தழல் போன்று எரியச்செய்தது. அவர்கள் குற்றம் செய்தவர்கள் என ஊர்ஜிதப்படுத்திக்கொண்டான், அதினால் உணர்ச்சிவசப்பட்டு, பெருமை அடிப்படையாய் கொண்ட தீர்மானம் எடுத்து தனது நல்ல மனிதரை கொலை செய்ய தீர்மானித்தான். அவர்களது பகைமை எண்ணம் அவர்களது நியாயத்தீர்ப்புக்கு வழிநடத்தியது, அது இராணுவ வீரரின் மரணத்திற்கேதிவாய் வழிநடத்திற்று மற்றும் மதத்தலைவர்களை கடைசி நாட்களை அந்திக்கிறிஸ்துவின் நாட்களில் வழிநடத்துவதாய் இருக்கும்.

வசனம் 14ல் மூன்று யூதர்களின் கேள்வியான "Is it true?” [உண்மைதானா?] என்ற சொற்றொடர் “Is it on purpose?” [ஒரு நோக்கத்துடனா?] என மொழிபெயர்த்து இருக்க வேண்டும். அரசன் இம்மூன்று யூதர்களும் சந்தேகத்திற்கிடமின்றி குற்றவாளிகள் என ஊர்ஜிதம் செய்தும், மற்றொரு தருணம் அளித்து விவரிக்க/தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வகை செய்தான்.

அவன் ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாய் யூதர்களின் கீழ்ப்படியாமை அல்லது அவர்களது அறியாமையை அறிந்து கொண்டு வசனம் 15ல் இரண்டாம் தருணத்தை யூதர்களுக்கு அளிக்கிறவனான். .அவன் சொன்னான் இது என்னால் உருவாக்கப்பட்ட பொற்சிலை என்றான். அதை அவன் தனிப்பட்ட காரியாக்கிக் கொண்டான்.

அவர்கள் அடிபணிய மறுப்பார்களேயானால் அவர்கள் உடனடியாக அக்கினிச்சூளையிலே போடப்படுவார்கள் என்பதையும் தொடர்ந்து கூறினான். அவன் அதோடு அவர்கள் விதியை நிர்ணயிக்கிற கேள்வியையும் கேட்கிறவனாகிறான், அந்த சூழலிருந்து அவர்களை எந்த தெய்வம் காப்பாற்றப்போகிறது? என கேட்டான். இவ்வாறு கேட்டபோது அவர்கள் சந்தேகித்திருக்க வேண்டும். இது அவர்களுக்கு விசுவாசப்பரீட்சையைக் கொண்டு வருகிறதாய் இருந்தது. இங்கு தேவனது குணாதிசயமானது பரீட்சை பார்க்கப்பட்டது. அவர்கள் தங்களைத் தேவனது கரத்தில் கொடுத்துவிட்டு அமர்ந்திருக்க வேண்டும். மனிதர் தேவனது குணாதிசயத்தை வெளிக்காட்டும்போது, தங்கள் மீதல்ல, அவர்கள் தேவன் மீது யுத்தத்தை அறிவிக்கிறவர்களாய் காணப்படுகின்றனர்.

இங்கு நெபுகாத்நேச்சார் தேவனது குணாதிசயத்தைக் குறித்து கேள்வி கேட்டு, விசுவாசிகளை தேவன் விடுவிக்க வல்லவரா என கேட்கிறவனாகிறான். அவிசுவாசி தேவனை விமர்சிக்கையில், அவர்கள் சிட்சையைக் கூட்டிக்கொள்கிறவர்களாகிறார்கள். இந்த விஷயத்தில், அளிக்கப்பட்ட பதில் விநோதமானதாய் இருந்தது. இப்படிப்பட்ட கருத்தானது மூன்று எபிரெயர்களுக்கு உண்மையான உற்சாகத்தை அளிப்பதாய் இருந்தது -- இப்பொழுது அவர்கள் இந்த சூழலானது தேவன் நியமித்த சூழல் என அறிந்து கொண்டனர், மற்றும் அவர்கள் விடுவிக்கப்படப்போகிறார்கள் என்பதையும் அறிந்திருந்தனர். எதிராளி தேவனைத் தாக்குகையில், நீங்கள் அதன் விளைவாக தேவனை சார்ந்து அமர்ந்திருக்க வேண்டும்.

மற்ற உதாரணங்களையும் நாம் காணக்கூடும் கோலியாத், மற்றும் அசீரியரின் ரப்சாக்கேயின் முற்றுகை, எருசலேம் சனகெரிப் மற்றும் மற்றவர்களால் முற்றிகை இடப்படும் சயம். 1 சாமுவேல் 17:33-51, ஏசாயா 36-37 அதிகாரங்கள். .

நெபுகாத்நேச்சார் கூறும்போது, தனது தெய்வத்துடன் தான் ஒருவன் மட்டுமே உறவு கொண்டவனாய் தெரிவிக்கிறான். தான் ஒருவனே விஷேசித்த உறவை தனது தேவனுடன் கொள்வதால் யார் மூன்று யூதர்களையும் விடுவிக்க போகிறார்கள் என்கிறான். "நான் உங்களுக்கு இராஜ்ஜியத்தை அளித்தவன்" நான் ஒருவனே இவ்வுலகின் அதிபதியாக

அறிவிக்கப்பட்டவன்" (எனது தெய்வத்தால் எனது சொப்பனம் மூலம் அறிவிக்கப்பட்டவன்) ஆகையால் எனக்கு எதிராய் நிற்கு இம்மூவரும் யார்? என்றான். இதைக் கூறும்போது, அவர்கள் தனது சொந்த தெய்வத்திற்கு விரோதமாய் எதிர்த்து நிற்கிறார்கள் என்று, அவன் அறிந்தவனாய் இவ்வாறு கூறுகிறான், ஆனால் இது தவறான ஒன்றாய் இருக்கிறது, இது போன்றே பிசாசுகளின் தர்க்கம் விக்கிரகங்களைக்குறித்து எப்பொழுதும் இருக்கிறதாய் இருக்கிறது.

வசனம் 16ல் அவர்கள் கூறும்போது அவர்களது பிரச்சனையய் தேவனிடம் விட்டுவிடுகிறவர்களாய் காணப்படுகின்றனர். அவர்கள் இராஜா சட்டப்பிரகாரமான ஆளுகிறவராய் இருந்தான் என்பதை அறிந்துணர்ந்திருந்தனர். "உமக்கு உத்திரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை" என்ற் சொற்றொடரின் பொருள் என்னவென்றால், தாங்கள் எதற்கும் எதிர்த்து நிற்க அவசியமில்லை என்பதாகிறது. மற்றும் அவ்ர்கள் எதைக் குறித்தும் பயப்பட்டவ்ர்களாயிருக்கவில்லை என்பதைக் காட்டுகிறது. அவர்கள் அரசனைப் போன்று நல்லவர்களல்லாத மனிதர்களுடன் இடைபடுவதில் அர்த்தமில்லை என்பதை அறிந்திருந்த்னர், அவன் தன்னாட்சி செய்கிறவனாய் மனோநிலையில் விழுந்து போனவனாய் காணப்பட்டான். அவனுக்கு அவர்கள் இவ்வாறு கூறினார்கள் தேவன் தங்களை அக்கினி சூலையிலிருந்து விடுவிக்க வல்லவராய் இருக்கிறார், அவர் விடுவிக்காமல் போனாலும் நாங்கள் நீர் நிறுத்தின பொற்சிலையை வணங்கப்போவதில்லை என உறுதியுடன் கூறினர். இது தாசனாகிய யோபு கூறினதற்கு ஒப்பாய் இருக்கிறது: "அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்..." யோபு 13:15.

அவர்கள் "எங்கள் தேவன்" என்று கூறும்பொழுது, அவர்கள் தேவனுடன் உறவு கொண்டவர்கள் எனவும், மனிதனால் கொடுக்க முடியாதவற்றை அவர் அளிக்க வல்லவர் என்பதும் இதனால் புலப்படுகிறது. அவர்கள் அலுவலக சிப்பந்திகளாய் கல்தேய சாம்ராஜ்ஜியத்தை சேவித்த போதிலும், அவர்கள் கர்த்தருக்கு கீழாக பணியாற்றி வந்தனர். எபேசியர் 5:8-22, 6:1-8.

இந்த சந்தர்ப்பம் முதற்கொண்டு இஸ்ரவேல் ஒரு தேசமாய் இராதபடி எருசலேம் பட்டணமும், சாலமோன் தேவாலயமும், யூதேயாவும் அகற்றப்பட்டு அழிக்கப்பட்டது ஆர்வத்தைத் தூண்டுகிறதாய் இருக்கிறது. மெய்யாகவே "புறஜாதியாரின் யுகம்" ஆரம்பமாய் இருந்தது. பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களின் தெய்வீக வெளிப்பாடு கி மு 400 ஆண்டுகளில் நின்று போனது (186 ஆண்டுகளுக்கு பின்னர்) மறுபடி அது தோன்றாமல் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் ஊழிய காலம் மட்டாக

மறைவாக இருந்தது. பாபிலோனின் சிறையிருப்பின் காலத்தில் உலகமதங்கள் ஆரம்பமானது. தேவனது வார்த்தையைக் கைக்கொள்ளும் தெய்வீக தீர்க்கதரிசிகள் இல்லாதிருந்தனர். கர்த்தரின் வருகை பரியந்தம் எஸ்றா போன்றவர்களால் ஜெப ஆலயங்களிலும், தேவாலயத்திலும் மிக தெளிவாய் தேவனது வார்த்தையானது போதிக்கப்பட்டு கற்றுக்கொடுக்கப்பட்டு வந்தது.

இம்மூன்று மனிதரும் தேவன் என்ன செய்யப்போகிறார் என்பதைக் குறித்து நிச்சயமற்றவர்களாய் இருந்தனர். இருப்பினும் அவர்கள் தேவனது வார்த்தையை கைக்கொண்டவர்களாய் கர்த்தர் அச்சூழலில் இடைபட அனுமதித்தவர்களாய்க் காணப்பட்டனர். அவர்கள் அச்சூழலுக்கான தேவனது திட்டம் மீது வாஞ்சை வைத்து, தேவன் செயல்படுவதற்காய் "அமர்நிருந்தனர்". இது யூதமனிதரின் மெய்யான விசுவாச செயல்பாட்டை காட்டுகிறதாய் இருந்தது. இதைப்போன்றே நாமும் செயல்பட கேட்டுக்கொள்ளப்படுகிறோம். தேவன் தனிப்பட்டவிதத்தில் என்ன செய்யப்போகிறார் என அறிந்து கொள்ள அவசியமில்லை. நாம் நமது விசுவாசப்பாதையில் முன்னேறி செல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம், கர்த்தர் பாதுகாக்கிறவரும், விடுவிக்கிறவருமானபடியால் அவரில் களிகூருதலோடு முன்செல்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். எபிரெயர் 4:2-12.

சாத்ராக், மேஷாக், ஆபெத்நேக்கோ தேவனுடைய வார்த்தையின் படி கொண்டு வரப்பட்டார்கள், அவர்களுக்கு தேவனது வாக்குத்தத்தம் குறித்து அறியாதவர்களாய் இருந்தனர் மட்டுமல்லாது அவ்ருடைய குணாதிசயம் முதற்கொண்டு அறியாதவர்களாய் காணப்பட்டனர். அவர்கள் அறிந்ததெல்லாம் **ஏசாயா 41:10** ஐ மட்டுமே, "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன். திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னைப் பெலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்."

வசனம் 18ல் மூன்று நபர்களும் மன்னனுக்கு தாங்கள் அவன் நிறுத்தின பொற்சிலையை குணிந்து வணங்கப்போவதில்லை என்பதைத் தெளிபடுத்தினர்.

கைக்கொள்ளுதல்:

நெபுகாத்நேச்சார் அநேக ஆண்டுகளுக்கு பின்னர் மனந்திருந்தினான், அவன் அவ்வாறு செய்தது சாட்சியாய் இருப்பதற்கு அல்ல. நாம் சாட்சியாய் இருப்பது குறித்து கவனமாய் இருக்க வேண்டிவர்களாய்

இருக்கிறோம். சாட்சியாய் இருப்பது என்பது பரிசுத்த ஆவியானவரின் சமயத்தின்படி நடந்து கொள்வதாகும், சரியான நேரத்தில் சரியான காரியத்தை சொல்லி தேவனது திட்டத்தை விளங்கப்பண்ணுவதாகும்.

தேவன் நமக்காய் வேதாகமத்தில் எவற்றை அமைத்து இருக்கிறார் என்பதை அறிந்து அதைப்பின்பற்றுவது கடினமானஒன்றாய் இருக்கிறது, மனித கண்ணோட்டத்தின்படி நமது வாழ்வில் தேவ சமாதானம் நிலவுவது மூலம் அதை அறிந்து கொள்கிறவர்களாய் இருக்கிறோம். இது நமது வாழ்வில் நடந்து கொள்வது மற்றும் சாட்சியாய் இருப்பதை வகையறுக்கிறதாய் இருக்கிறது.

ஒருவர் மிகவும் அளவுக்கு மீறி கோபப்படும்போது, சரியான நல்ல தீர்மானம் எடுப்பது அரிய காரியமாய் இருக்கிறது. (so called “red mist”).

அவிசுவாசிகள் விசுவாசிகளாயிருப்போர் மீது தாக்குதல் நடத்தும்போது, அது உடனடி நியாயத்தீர்ப்பாய் காணப்படுவதில்லை, மாறாக அவர்கள் தேவனுக்கு விரோதமாய் விமர்சிக்க தொடங்கும்போதே நியாயத்தீர்ப்பு அவரிடமிருந்து கடந்து வருகிறதாய் இருக்கிறது, தேவனது குணாதிசியமானது தீங்கை விளைவிக்கிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சமயங்களில் தேவனுக்காய் உறுதியாய் நிற்கப்பழகிக்கொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்து தனது குணாதிசயத்தை மெய்ப்பிக்கிறவராய் இருந்தார். தேவன் விமர்சிக்கப்படும் வேளைகளில் நாம் கிருபை பொருந்தினவர்களாய் இருத்தல் அவசியம், ஆனால் நாம் அவரது குணாதிசயத்தை அறிந்தவர்களாய் எதிர்த்து நிற்றல் வேண்டும்.

சில வேளைகளி நாம் "கர்த்தாவே எங்களை விடுவித்தருளும்" என்று சொல்கிறவர்களாயிருக்கிறோம். அந்தக்கால கட்டத்தில் கர்த்தரோ நம்மை விடுவிக்காது போகிறார். கிறிஸ்துவைக் குறித்த சாட்சிக்கு அப்பாற்பட்ட நிலையில் நாம் நமக்குத்தானே பிரச்சனைகளை வருவித்துக் கொள்கிறவர்களாகிறோம். அவர் நம்மை அவரது இராஜ்ஜியத்திற்குள்ளாக விடுவிக்கிறதாய் இருக்கலாம், அல்லது அவரது சமயம் சார்ந்த செயலாய் இருந்து, தனது மகிமையை பிரஸ்தாபப்படுத்துமாறு பின்னர் தக்க சமயத்தில் அவர்களை விடுவிக்கிறதாய் இருக்கலாம். நாம் அவரது வழிகளில் அமர்ந்திருந்து, அவைகளில் நடந்து கொண்டு, அவரை ஆராதித்துக் கொண்டு அவரை சேவிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

எல்லாசூழல்களையும் அடக்கியாளுபவர் தேவன் என அறிந்தவர்களாய் நாம் அவரில் நம்பிக்கையுடனிருத்தல் வேண்டும். எந்தஒரு சூழலிலும்

நாம் நம்மில் நம்பிக்கையுடையவர்களாய் இருத்தல் வேண்டும் காரணம் தேவன் நமக்காய் கிரியை செய்கிறவராய் இருக்கிறார்.

ஒரு தேசமானது தனது மதம் சார்ந்த காரியங்களை தனது பிரஜைகள் மீது திணிப்பதற்கு அதற்கு எவ்வித அருகதையுமில்லை. தேசமானது ஆவிக்குரிய இராஜ்ஜியத்தையும் அவ்வாறு செய்ய இயலாததாய் இருக்கிறது.

உபதேசம்

ATTITUDE மனநிலை

பகுதி 14 -- மூன்று எபிரெயர்கள் அக்கினி சூலையிலிருந்து பாதுகாக்கப்படுதல்: தானியேல் 3:19-27.

**19 அப்பொழுது நெபுகாத்நேச்சாருக்குக் கடுங்கோபமூண்டு:
சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ என்பவர்களுக்கு விரோதமாய்
அவனுடைய முகம் வேறுபட்டது. சூலையைச் சாதாரணமாய்ச்
சூடாக்குவதைப்பார்க்கிலும் ஏழுமடங்கு அதிகமாய்ச் சூடாக்கும்படி
உத்திரவு கொடுத்து: 20 சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோ
என்பவர்களை எரிகிற அக்கினிச் சூலையிலே போடுவதற்கு
அவர்களைக் கட்டும்படி தன் இராணுவத்தில் பலசாலிகளாகிய
புருஷருக்குக் கட்டளையிட்டான். 21 அப்பொழுது அவர்கள் தங்கள்
சால்வைகளோடும், நிசார்களோடும், பாகைகளோடும் மற்ற
வஸ்திரங்களோடும் கட்டப்பட்டு, எரிகிற அக்கினிச் சூளையின்
நடுவிலே போடப்பட்டார்கள். 22 இராஜாவின் கட்டளை
கடுமையாயிருந்தபடியினாலும், அக்கினி ஜுவாலையானது
சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைத் தூக்கிக்கொண்டு
போன புருஷரைக்கொன்று போட்டது. 23 சாத்ராக், மேஷாக்,
ஆபேத்நேகோ என்னும் அந்த மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய்
எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே விழுந்தார்கள். 24
அப்பொழுது இராஜாவாகிய நெபுகாத்நேச்சார் பிரமித்து தீவிரமாய்
எழுந்திருந்து, தன் மந்திரிமார்களை நோக்கி: மூன்று புருஷரை
அல்லவோ கட்டுண்டவர்களாக அக்கினியிலே போடுவித்தோம்
என்றான். அவர்கள் இராஜாவுக்கு பிரதியுத்தரமாக: ஆம் இராஜாவே
என்றார்கள். 25 அதற்கு அவன்: இதோ, நாலுபேர் விடுதலையாய்**

அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன். ஆர்களுக்கு ஒரு சேதமுமில்லை. நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான். 26 அப்பொழுது நெபுகாத்நேச்சார் எரிகிற அக்கினிசூளையின் வாசலண்டைக்கு வந்து, உன்னதமான தேவனுடைய தாசராகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் வெளியே வாருங்கள் என்றான். அப்பொழுது சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அக்கினியின் நடுவிலிருந்து வெளியே வந்தார்கள். 27 தேசாதிபதிகளும், அதிகாரிகளும், தலைவரும், இராஜாவின் மந்திரிகளும் கூடிவந்து, அந்தப்புருஷருடைய சரீரங்களின் மேல் அக்கினி பெலஞ்செய்யாமலும், அவர்களுடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய சால்வைகள் சேதப்படாமலும், அக்கினியின் மணம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்ததைக் கண்டார்கள்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

அந்த மூன்று யூத மனிதரின் மறுதலிப்பானது நெபுகாத்நேச்சாரைத் தனது கடுங்கோபத்தில் வேறொரு கட்டளையை பிறப்பிக்கச் செய்வதாய் இருந்தது. மட்டுமின்றி அம்மூன்று யூதர்களும் தங்கள் சொந்த மரணத்திற்கு வழிவகை செய்வதாய் இருந்த போதிலும், அவர்கள் மகிழ்ச்சியுடனும், அமைதியுடனும், மன்னனால் புரிந்து கொள்ள இயலாததுமாய் இருந்தது.

அரசனானவன் பல துறைகளில் சிறப்பு மிக்கவனாய் இருந்தும், அவன் தனது பரந்த சாம்ராஜ்ஜியத்தை அளுகிற செல்வ சீமானாயும், சந்தோஷம் மற்றும் மன அமைதியைத் தவிர எல்லாவற்றிலும் பூரண சம்பூரணனுமாய் இருந்தான். அவனது தன்னாட்சி மனப்போங்கினால் மிகவும் உக்கிரக் கோபம் மிகுந்தவனாய் தனது நல்ல சுபாவத்தினை இழந்தவனாய் அக்கினி சூளையை இன்னும் அதிக உஷ்ணப்படுத்தும்படி கட்டளை கொடுத்தான். அவன் ஒரு சாம்ராஜ்ஜியத்தையே அரசாளுகிறவனாய் இருந்தும், தனது உணர்ச்சிகளை ஆண்டு அடக்க இயலாதவனாய் இருந்தான், இத்தகைய நிலைமை முற்றிலும் சுயத்தால் ஆளப்படும் சாதாரண மக்களுக்குரியதாய் இருக்கிறது. ஹிட்லர் மற்றும் ஸ்டாலின் போன்றோர் இதைப்போன்றே காணப்பட்டனர், சர்ச்சில் மிகவும் கோபப்படுகிறவனாய் இருந்தும், சட்டரீதியாய் நடந்து கொள்கிறவனாய் இருந்தான்.

நெபுகாத்நேச்சாரின் இராணுவத்தில் இருந்த சிறப்பு மிக்க வீரர்கள், மூன்று எபிரெயர்களை எரிகிற அக்கினிச்சூலையிலே போடுவதற்கு கட்டளை பெற்றனர். இம்மனிதர்கள் ஹீரோக்களாய் இராணுவத்தில்

இருந்து, அரசனை யுத்தகளத்தில் பெரிய ஆபத்துகளில் இருந்து பாதுகாத்தவர்களாய் விளங்கினர், ஆனால் மன்னனின் தீர்மானத்தினால், தங்கள் ஜீவனை பலியாக அற்பணிக்க நேர்ந்தது.

அக்கினி சூளையானது மிகவும் அதிகமாய் சூடாக்கப்பட்டிருந்தபடியால் இராணுவ வீரர்களை கொன்று போட்டது, ஆனால் சாத்ராக், மேஷாக், ஆபெத்நேகோவை பாதிக்கவில்லை. சாத்தானின் இறுமாப்பானது, தெய்வத்துவத்தின் மீது யுத்தத்தை அறிவிக்கிறதாய் இருக்கும், விசுவாசிகளை கொன்று குவிக்கிறதாய் இருக்கும். இப்படிப்பட்ட காரியங்களில் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை நாம் பெற்றுள்ளோம். யோவான் 15:18-26. மட்டுமல்லாது இவ்வுலகில் சம்பவிக்கும் எத்தகைய காரியத்திலும் அவர் நம்முடன் இருப்பதாய் வாக்களித்துள்ளார். மத்தேயு 28:18-20, ரோமர் 8:35-39.

நெபுகாத்நேச்சார் அக்கினிசூளையை முன்னிருந்ததை விட ஏழுமடங்கு அதிகச் சூடாக்கும்படி செய்தான். அந்த மகாபெரிய அக்கினிச்சூளையானது படிகளில் ஏறிச் சென்று அனைவரும் குற்றவாளிகளை அதனுள் போடுவதைக் காணும் வண்ணம் அமைக்கப்பட்டதாய் இருந்தது

வசனம் 20ல் இராணுவத்தில் உள்ள பலசாலியான மனிதர்கள் இதற்காய் பயன்படுத்தப்பட்டதைக் காண்கிறோம். நெபுகாத்நேச்சார் எண்ணினான், "உங்களை விடுவிக்கப்போகிற தெய்வம் எது?" இக்காரியத்திற்கு எனது இராணுவத்தில் உள்ள பலசாலிகளை இதற்காக பயன்படுத்தப்போகிறேன், அக்கினியின் உக்கிரமானது போடப்படுகிறவர்களை ஒரு நொடியில் பட்சித்து சாம்பலாக்கப்போகிறது. இவைகள் அனைத்திலிருந்து ஒரே உண்மையான தேவன் காப்பாற்ற போவதன் நிச்சயத்தைக் காட்டுவதாய் இருந்தது. தேவன் தலையிட்டு அம்மூன்று மனிதரையும் காப்பாற்றுவதை, காவலாளிகள் தடை செய்கிறவர்களாய் இருந்தனர். அக்கினி சூளையில் போடப்படுவோர் தங்கள் ஆடைகளோடு சேர்த்து கட்டப்பட்டிருந்தனர்.

அக்கினி சூளையில் அம்மூவரும் நான்காவது நபராகிய யெஹோவாவின் தூதரைச் சந்தித்தனர், இவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் முன் அவதாரமாய் காணப்பட்டார், அவர்கள் அனைவரும் அக்கினிசூளையின் நடுவில் நடந்து ஐக்கியத்தை பரிமாறிக்கொண்டனர். அந்த அக்கினியானது அவர்களது கட்டுக்கள் மற்றும் அவர்களை அக்கினி சூளையிலே போட்டவர்களை மட்டும் பட்சிப்பதாய் இருந்தது.

நீங்கள் ஜனங்களை உபத்திரவப்படுத்த விரும்புவீர்களானால் அவர்களை எரியச் செய்யும்போது மெதுவாய் செய்தல் வேண்டும், அவர்களை

நொடியில் எரித்து சாம்பலாக்க முடியாது. அவர்களை அக்கினி சூளையை ஏழுமடங்கு அதிகரித்து விரைவாய் அவர்களை கொலை செய்ய நினைத்தாலும் இயலாது. நெபுகாத்நேச்சார் செயலில் இறங்கினான் தனது அக்கினி சூளையில், தனது இராணுவத்தின் சிறப்பான இராணுவீரரை கொலை செய்ய துணிந்தான். பொதுவாக மக்கள் அவர்களது ஆடைகள் அகற்றப்பட்டு, அக்கினியில் நிர்வாணமாய்ப் போடப்பட்டு -- மெதுவாய் அக்கினியால் கொலை செய்யப்படுவார்கள் -- இதினிமித்த அவர்களது பாடுகள் காணக்கூடியதும், கேட்கக்கூடியதுமாய் இருந்து மற்றவர்களுக்கு ஒரு பாடமாய் அமையும்.

அக்கினியானது படிகளில் ஏறிச் சென்று சூளையில் போடச் சென்றவர்களைப் பட்சித்துப் போட்டது. அக்கினி சூளையிலே அம்மூவரும் தூக்கிச் சென்றவர்களுடன் விழுந்திருக்க வேண்டும். நெபுகாத்நேச்சார் அக்கினிச் சூளைக்கு அருகில் அமர்ந்து தனது அக்கினி தேவதை, தனது தெய்வத்திற்கு விரோதமாய் மீறினவர்களை பட்சித்து நியாயத்தீர்ப்பு அளிப்பதைக் காணஆவலோடு இருந்தான். அவன் ஆச்சரியத்துக்குள்ளானான் காரணம், அவர்களைக் கட்டியிருந்த கயிறு எரிந்து போயிற்று, அவர்கள் அக்கினியின் நடுவே விடுதலையாய் உலாவினார்கள். அவர்கள் தங்களது ஆடையுடன் தொடர்ந்து உலாவினார்கள், அவர்கள் அக்கினியால் பாதிப்படையவில்லை. அரமேயு பாஷையில் “No hurt, No hurt”. எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. நான்காவது நபர் "தேவக் குமாரரின் சாயலுக்கு" ஒப்பாய் இருந்தார். இது கல்தேய/ அரமேயு மொழியில் Bar Elahin, என நேரடி மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது இது எபிரெய பாஷையில் Ben Elohim. என்றிருக்கிறது. இது மிகவும் தெளிவாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் காட்டுகிறதாய் இருக்கிறது இவர் "யெஹோவாவின் தூதர்" என அறியப்படுகிறார். இந்த சொற்றொடர் தேவதூதர்களுக்கு பயன்படுத்தப்பட்ட போதிலும், இங்கு தேவ குமாரன் யெஹோவாவின் தூதர் வேடத்தில் தோன்றியிருப்பது குறிப்பிடத் தக்கது.

வசனம் 26ல் நெபுகாத்நேச்சார் தன்னால் எவ்வளவுக்கருகில் வர இயலுமோ, அவ்வளவுக்கருகில் அக்கினி சூளையின் வாசலுக்கருகில் வந்தான், அந்த நான்காவது நபருடன் சேர்ந்து கொள்ள வாஞ்சையுள்ளவனான். இதற்கு முன் அவனது சிறப்பான வீரர்கள் தெய்வீகக் காரியங்களில் குறுக்கீடு செய்தனர். ஆனால் இப்போது தேவனது குறுக்கீட்டிற்கு அருகில் இழுக்கப்பட்டவனாய் இருக்கிறான். சாத்தானின் திமிர்பிடித்த தவறுகள் எப்பொழுதும் அவனது வீழ்ச்சிக்கு ஏதுவாய் வழிநடத்துகிறது. வசனம் 25 மற்றும் 26க்கு இடையில் அக்கினி சூளையானது குளிர்ச்சியடைய நீண்ட கால அவகாசம் எடுத்திருக்க

வேண்டும் அதினிமித்தம் அவன் அக்கினி சூளைக்கு அருகில் வருவதற்கு இயன்றது.

நெபுகாத்நேச்சாரின் கடவுள்கள் பிசாசுகளாய் இருந்தனர் என்பதை நினைவில் கொள்க, இத்தருணத்தில் அவன் அவைகளை பணிந்து கொள்வது என்பது அவனது வாழ்வில் அக்கினியால் மாத்திரமே என்பது சாத்தியமாயிற்று. அவனது தன்னாட்சி மற்றும் அவனது உணர்வுகள் விஷேசமானவைகளாய் இருந்தது என விசுவாசித்து, இக்கால கட்டத்தில் அவன் மெய் தேவனுடன் அக்கினியின் நடுவே பேசும் அனுபவத்தைப் பெற்றான். அவன் மனநிலை பாதிக்கப்பட்டவனாய் ஏழு ஆண்டுகள் தேவனுடன் இதைப்போன்ற அக்கினி அனுபவத்தைப்பெற்றுக்கொண்டான், இறுதி கட்ட இரட்சிப்பின் பயணத்தில் ஏழு ஆண்டுகள் மனோரீதியான தளர்ச்சியுற்றவனாய் பாடுகளை அனுபவித்தான்.

அநேக மணி நேரம் சென்ற பின்னர் நெபுகாத்நேச்ச்சார் அக்கினிச்சூளையை அணுகி, அக்கினிச்சூளையின் அடியில் உள்ள கதவை திறக்க நேர்ந்தது, குளிர்ந்த அக்கினி சூளையிலிருந்து அவர்கள் மூவரையும் வெளியே வரவழைத்தான். அவர்களுடன் நான்காவது நபர் வெளியே வரவில்லை. இக்கால அவகாசத்தில் அம்மூன்று நபர்களும் கர்த்தருடன் உள்ள ஐக்கித்தில் மகிழ்ந்தனர். கல்தேயர் அனைவரும் இக்காட்சியைக் கண்டனர். அனைவரும் உண்மையான கடவுள் இந்த யூதருக்கு உண்டு என அறிந்து கொண்டனர். இந்நிகழ்வானது மிக முக்கியம் வாய்ந்த நிகழ்வாய் இருந்தது, இது எருசலேமின் தேவன் நியாயந்தீர்க்கிறவரும், பாபிலோனிய தெய்வங்களுக்கில்லாம் மேலானவர் என விளங்கப்பண்ணிற்று.

யூத தேசம் முழுவதுமாய் வீழ்ச்சியடைந்து, தேவனது வீடானது அழிக்கப்பட்டு போனபோதிலும், பாபிலோன் இராஜ்ஜியத்தின் அலுவலர்கள் அனைவரும் இஸ்ரவேலரின் தேவன் எல்லா தேவர்களுக்கும் மேலானவர் என்றும், விடுவிக்கிறவர் என்றும் கண்டனர். இதன் மூலமாய் யூதர்கள் எருசலேமை சிறைபிடித்த போது மாண்டவர்கள் பாபிலோனிய தேவர்களால் அல்ல, அவர்களது தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டு மடிந்தனர் என புரிந்து கொண்டனர். இதன் பொருள் தேவன் ஏற்கனவே எருசலேமை விட்டு விலகி விட்டார், இதினிமித்தம் பாபிலோனியர்கள் அவர்களை சிறைபிடிக்க நேர்ந்தது, மற்றும் அவர்களது தேசத்தை அழிக்க நேர்ந்தது. எசேக்கியல் இதை அறிந்தவராய் எசேக்கியேல் 10ம் அதிகாரத்தில் இதைக் குறித்து எழுதியுள்ளார். இதையே பாபிலோனிய தலைவர்களால் எரேமியாவுக்கு கட்டளையிட்டனர். எரேமியா 40:1-4. நெபுசாரதன் இந்த நாளில் இந்த நிகழ்வை சமவெளியில் கண்டு தனது

இராணுவத்தை யூதாவை அழிக்கவும், தேவாலயத்தை இடித்து அழித்துப் போடவும் வழிநடத்தினான்.

நெபுகாத்நேச்சார் ஊழியம் செய்வதற்கு எரேமியா, தானியேல், எசேக்கியேல், தற்போது இம்மூன்று எபிரெய வாலிபர்களின் வார்த்தைகள் பேருதவியாய் இருந்தது. அவன் இன்னும் மனந்திரும்பாமல் இருக்கும்போது, தேவன் மிகக் கவனமாய் அவனது வாழ்வில் கிரியை செய்கிறவராய் இருந்தார். கர்த்தர் சாபத்திலிருந்து ஆசீர்வாதத்தை வரப்பண்ணுகிறவராய் இருந்தார், இதை இந்த மூன்று மனுஷரை அக்கினியிலிருந்து விடுவித்து பாபிலோனிய இராஜ்ஜியத்தின் எல்லா அதிகாரிகளுக்கு முன்னதாய் மெய்ப்பித்தார்.

இது அரசனுக்கு ஒரு சாட்சியாய் மட்டுமின்றி, அங்கு கூடின இராஜ்ஜியத்தின் அனைத்து தலைவர்கள் முன்னிலையில் வசனம் 27ல் கூறப்பட்டது போல, தலைசிறந்த இராணுவ மனிதர்கள் அக்கினியின் உக்கிரத்தால் இறந்து போனார்கள் அதே சமயம் அக்கினியில் போடப்பட்ட மூன்று யூத வாலிபரின் தலையிலுள்ள முடி கூட அக்கினியால் கருகிப்போகவில்லை என்பதை கண்ணாரக் கண்டனர். அவர்களை கட்டின கயிறு மட்டும் அறுந்து போயிற்று என அறிந்தனர். எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தபடி தேவன் தமது ஜனத்தை விடுவிக்க வல்லவராய் இருக்கிறார் என்பது காணக்கூடியதாய் இருந்தது. விடுவிக்கப்படுவது என்பது நிச்சயமான ஒன்றாய் இருந்தது, அழிவின் நிகழ்வுக்கு பின்னர், அது தேவனது சமயமாய் இருந்து, "கொடிய அக்கினி வேதனையிலிருந்து" தணிக்கப்பட்டு ஜனங்கள் விடுவிக்கப்பட்டு அவர்கள் தேசத்திற்கு திரும்புவது உறுதி செய்யப்பட்டதாய் இருந்தது. எரேமியா 25:11-14, 29:10-14, தானியேல் 9:1ff.

கைக்கொள்ளுதல்:

ஆத்துமாவில் உள்ள உபதேசம் என்பது மகிழ்ச்சி, துன்பம் இவற்றை வேறுபடுத்துகிறது, சமாதானத்தையும் நெருக்கப்படுகிற காலத்தில் பயப்படுவதையும் வேறுபடுத்துகிறதாய் இருக்கிறது.

காலம் மற்றும் இவ்வாழ்வி ஆரம்ப வழிமுறை தேவனுக்கு ஏற்கனவே தேவன் அறிந்த ஒன்றாய் இருக்கிறது. தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டது, பரிசுத்தவான்களின் மரணமாய் இருக்கிறது, சங்கீதம் 68:20, 116:15. நாம் மரணத்தைக் காண்பது இல்லை, நாம் இயேசுவைக் காண்போம். யோவான் 8:51, அப்போஸ்தலர் 7:55-60.

தேவன் தான் தீர்மானிக்கும் வேளையில் உங்களை தமது வீட்டிற்கு அழைத்துக் கொள்வது அவரது முதலுரிமையாய் இருக்கிறது. அவர் வாழ்வதற்கு உகந்த காலத்தையும் மற்றும் மரணத்தை குறித்தும் அறிந்துள்ளார்.

பெரிதளவில் நீங்கள் பரீட்சிக்கப்படும்போது தேவன் உதவுவார். நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும், நீர் என்னோடு இருக்கிறீர்.

கிறிஸ்தவர்களை புறம்பாக்கும் மக்கள், தங்களையே புறம்பாக்கிக் கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். உதாரணம் தானியேல் மற்றும் சிங்கக் குகை, எஸ்தரும் ஆமானும்.

சகிக்க முடியாத சந்தர்ப்பங்களில் தேவன் பொறுப்பெடுக்கிறவராய் இருக்கிறார். தேவன் பாடுகளை ஒரு விசுவாசிக்கு ஆசீர்வாதத்திற்கு ஏதுவாய் வடிவமைத்திருக்கிறார். இது 1 பேதுரு 1:7-8. ல் உதாரணமாய் கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் திராணிக்கு மிஞ்சி அவர் உங்களை சோதனைக்குட்படுத்தமாட்டார். 1 கொரிந்தியர் 10:13.

பாடுகளை தேவன் அனுமதிக்கக்கூடும் ஆனால் நீங்கள் சமாதானத்துடனும் மகிழ்வுடனும் பரீட்சிக்கப்படுகிற காலங்களில் அவரது பராமரிப்பில் களிகூற வேண்டும்.

சுவிஷேச வேலையானது ஆவியானவரின் கிரியையாய் இருக்கிறது, கர்த்தர் கிருபையாய் மனிதனை உட்படுத்துகிறவராய் இருக்கிறார். கனி கொடுப்பதற்கு நீண்ட அவகாசம் எடுக்கும்.

ஒரு அவிசுவாசியிடம் வாழ்க்கையானது, வார்த்தைகளைவிட அதிக சப்தமாய் பேசுகிறதாய் இருக்கிறது. ஆனால் தேவன் நேரடியாய் கிரியை செய்து எல்லாவற்றையும் காட்டிலும் அதிக சப்தமாய் பேசுகிறவராய் இருக்கிறார்.

DOCTRINE உபதேசம்

ANGEL OF JEHOVAH யெஹோவாவின் தூதர்.

பகுதி 15 -- தேவனை குறித்து நெபுகாத்நேச்சாரின் அறிக்கை: தானியேல் 3:28-30.

28 அப்பொழுது நெபுகாத்நேச்சார் வசனித்து: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர்கள் தங்களுடைய தேவனைத்தவிர வேறொரு தேவனையும் சேவித்துப் பணியாமல் அவரையே நம்பி, இராஜாவின் கட்டளையைத் தள்ளி, தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்ததினால், அவர் தமது தூதனை அனுப்பி, தம்முடைய தாசரை விடுவித்தார்.
29 ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்த பாஷைக்காரனும் துண்டித்துப்போடப்படுவான், அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது. இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க வேறொருவரும் இல்லையென்றான்.
30 பின்பு இராஜா சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களைப் பாபிலோன் தேசத்திலே உயர்த்தினான்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

எதிர் பாராவண்ணம் தேவனது வல்லமையின் நிரூபணமானது நெபுகாத்நேச்சாருக்கு அவன் அற்புதத்தைக் கண்டிருந்தும் அதன் செய்தியானது அளிக்கப்படாமல் இருந்தது. நிகழ்ந்த அற்புதத்தின் மூலம் வெகுவாக கவரப்பட்டிருந்தான் ஆனால் இன்னும் அப்படிப்பட்ட வல்லமையின் ஆதாரம் எங்கிருந்து வந்தது என இன்னும் சிந்திக்க தவறியவனாய் காணப்பட்டான். அவனது சிந்தனையில் இன்னும் அவன் நிலையற்றவனாயும், அவனது உணர்ச்சி சார்ந்தவிஷயத்தில் பிரதிக்கிரியை நடப்பிக்கிறவனுமாய் இருந்தான்.

தான் உண்டுபண்ணின விக்கிரகத்தை ஜனங்கள் பணிந்து கொள்வதைத் தவிர்த்து, மெய்த்தேவனை ஆராதிக்க ஜனங்களை வற்புறுத்துகிறவனாய் இருந்தான். இருவகையான பணிந்து கொள்ளுதலும் சரியானதல்ல மெய்யான ஆரதனை செய்தல் என்பது ஒவ்வொருவரின் சுயசித்தத்தின் பிரதிபலிப்பாய் இருக்கிறது. அவன் இன்னும் தான் தேவனின் உன்னதமானவனாய் இருப்பதாய் சிந்தித்து இப்பூமியில் தேவனுக்காய் பேசிவருவதாய் நினைத்தான். இதுவே இன்றைய அளவில் அநேக தேசங்களின் பிரச்சனையாய் அமைந்து "இராஜாக்களின் தெய்வீக உரிமை" என்பதால் பாதிக்கப்பட்டு தவறான உபதேசத்தினை தழுவி வருகிறார்கள். ஒரு இராஜாவும்/ இராணியும் தேவனுக்காய்

பேசும்பொழுது அவன்/அவள் மறுபடி பிறந்த விசுவாசிகளாய் இருக்க வேண்டும், மற்றும் இராஜாவாகிய தாவீதைப்போன்று, ஒரு தீர்க்கதரிசி அல்லது போதகர் வரத்தினைப் பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும். நம்பப்படுகிற எல்லா அமைப்பிலிருந்து பெரிதளவில் தீமையான புரண்டோடுகிறதாய் இருக்கிறது, இது தவறும் இயல்புடைய மனிதராலும்/மனுஷியாலும் சாத்தியமாகிறது -- நாம் இயேசுக் கிறிஸ்துவின் இரத்தத்தாலும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவாலும் விஷேசித்தவர்களாய் இருக்கிறோம். 1 பேதுரு 2:9-10.

இராஜா உன்னதமான தேவனுடன் ஐக்கியம் கொண்டிருந்த அம்மூன்று வாலிபரை அக்கினி சூளையின் நடுவிலிருந்து வெளியே அழைத்தான். அவன் இன்னும் புறஜாதியானாய் இருந்தான் ஆனால் அவர்களது தேவன் எல்லா தேவர்களுக்குள்ளும் மேலானவர் என்பதை அறிந்திருந்தான். அங்கு குழுமி இருந்தவர்கள் அம்மூவரையும் மிக அருகில் சென்று கண்டு அவர்கள் வஸ்திரங்கள் தீயினால் கருகாமலும், அவர்களைக் கட்டியிருந்த கயிறு மட்டுமே கருகியிருந்ததையும், அவர்களது வஸ்திரத்தில் அக்கினியின் மனம் கூட வீசவில்லை என கண்டனர்.

இந்த நிகழ்வை வார்த்தைகளால் பிரசங்கிப்பதற்கு அப்பாற்பட்ட நிலையில் வல்லமைக்கு அப்பாற்பட்டதாய் இருந்தது, தேவனின் செயல்கள் நிரூபணம் செய்யப்பட்டு, அவர் கர்த்தாதி கர்த்தாவும், இராஜாதி இராஜாவுமாய் அறியப்பட்டார். எவ்வித பிரசங்கமும் இந்நாளில் அவசியப்படவில்லை, விசுவாசத்தில் சத்தியமானது செயல்படுத்திக்காட்டப்பட்டது அது தேவனது குணாதிசயம் மற்றும் அவரது வல்லமை மற்றும் தேவன்து வல்லமை செயல்படுத்திக்காட்டப்பட்டது.

வசனம் 29ல் நெபுகாத்நேச்சார் 2 ம் அதிகாரத்தில் கூறிய அதே தண்டனையான அவர்கள் வீடு எருக்களமாக்கப்படும் என்ற தண்டனையை இங்கு தேவனை வணங்க மறுப்போருக்கு அளிக்கப்படும் என அறிவித்தான். இது எருசலேம் நகரம் இடிக்கப்பட்டு, தேவாலயம் தீக்கிரையாக்கப்பட்ட586 கிமுவு.க்கு மறுவருடத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும்.

கைக்கொள்ளுதல்:

மூன்றாம் அதிகாரத்தில் உள்ள அடிப்படைக்கருத்துக்களை கைக்கொள்ளுதல்.

தேவன் ஒரு நபரில் கிரியை செய்வாரானால் அவரது வாழ்வில் அவர் கிரியை நிகழுவதற்கு முன் பல ஆண்டுகள் காலம் எடுத்திருக்க வேண்டும். இதினிமித்தம் நாம் நமது நண்பர்களுக்காகவும், தேவனை அறியாத நிலையில் நாம் அன்புகூறுகிறவர்களுக்காகவும் எப்பொழுதும் ஜெபிக்கக் கடமைப் பட்டுள்ளோம், அவர்கள் வாழ்கிற காலம் வரை அவர்களைக் குறித்த நம்பிக்கை இருக்கிறது.

நீங்க்ள் வேறு பிரிக்கப்பட்ட பிரச்சனையில் இருப்பீர்களானால், தேவனது குணாதிசயம் பிரச்சனையாய் இருக்கிற்து, அது உங்கள் பிரச்சனையல்ல.

மிகவும் வல்லமையுள்ள சாட்சி என்பது அச்சூழலில் சுயத்துடன் பங்கு பெறும் விவரிக்கக்கூடிய ஒன்றாய் இருக்கிறது. காரியங்களை செய்யும்போது நீங்கள் விவரிக்கிறவர்களாயிருக்கிறீர்கள்.

தேவன் அமைதியாய் இருக்கும் காலங்களில், கட்டளையானது மூடப்படும்போது, எந்த வழியில் செல்வது என அறியாது இருக்கிறீர்கள் மற்றும் தேவனது வசனத்தின் அடிப்படையில் விவரிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். தேவன்தாமே தமது வார்த்தையை கனப்படுத்துவாராக.

உங்களுக்கு மிகவும் அதிகமாய் உதவி செய்யும் விசுவாசிகளை விட்டு நீங்கள் தனித்து இருக்கும் போது, மிகக்கொடுமையான சோதனைகள் வரும். இது உங்களுக்காய் வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டதாயும் தேவனது வார்த்தையை சீர்தூக்கிப்பார்க்கவும் செய்கிறதாய் இருக்கிறது.

தேவன் தமது தூதர்களைக்கொண்டு உங்கள் சூழ்நிலை எதுவாயினும் உங்களைக் காப்பாற்ற முடியும். அத்தகைய செயல்பாடுகள் இன்றும் அகிலாண்டத்தில் நிகழ்த்தப்பட்டு வருகிறது.

நீங்கள் கர்த்தரை முதன்மையான இடத்தில் வைப்பீர்களானால், நீங்கள் முன்னேறிச் செல்கிறவர்களாய் இருப்பீர்கள். இந்த அதிகாரத்தின் இறுதி வசனத்தில் அம்மூவரும் தேசத்தில் உயர்த்தப்பட்டார்கள் எனப் பார்க்கிறோம். அவர்கள் தங்களது விசுவாசத்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைத்தார்கள், அவர்களது வேலையை இரண்டாவது இடத்தில் வைத்தார்கள். அவர்கள் தங்களது வேலையை கர்த்தரின் கரத்தில் விட்டுவிட்டார்கள். அவர்கள் தாங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைத்த விசுவாசத்தை கைவிட்டு விடப்போவதாய் இல்லை. 1 பேதுரு 5:6-10.

DOCTRINE உபதேசம்

WORSHIP AND PRAISE ஆராதனையும் மற்றும் துதியும்.

<u>அதிகாரம் 4</u>

4ம் அதிகாரத்தின் பிரிவுகள்

தானியேல் 4ம் அதிகாரம் ஐந்து பிரிவுகளாய் பிரிக்கப்பட்டுள்ளன

நெபுகாத்நேச்சாரின் சாட்சி: வசனங்கள்1-3

நெபுகாத்நேச்சாரின் சொப்பனம்: வசனங்கள 4-18

தானியேலால் சொப்பனம் வியாக்கியானிக்கப்படுதல்: வசனங்கள் 19-27

நெபுகாத்நேச்சாரின் மனோ வியாதி: வசனங்கள் 28-33

சொப்பனம் நிறைவேறுதலும் நெபுகாத்நேச்சார் குணமாதலும்: வசனங்கள் 34-37

முன்னுரை

4 ம் அதிகாரம் நெபுகாத்நேச்சார் மனந்திரும்புதலுக்கு வழிநடத்தும் பிரச்சனைகள் அடங்கியுள்ளது. தானியேல் புத்தகத்தின் 1லிருந்து 4 அதிகாரங்கள் வரை எப்படி பரிசுத்த ஆவியானவராகிய தேவன் ஒரு கலாச்சாரத்தில் கிரியை செய்து தேவனது வார்த்தையை புறஜாதிய சமூகத்தில் கொண்டு வருகிறவராயிருக்கிறார் என்பது விளங்கும்.

மிகவும் வல்லமை பொருந்திய அரசனை கிறிஸ்துவிட்ம் கொண்டு வர் இயலுமென்றால், எந்த ஒரு தனிமனிதனையும் கொண்டு வர இயலும் என்பது சாத்தியம். இயேசு கிறிஸ்து மெதுவாக கிரியை செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. தானியேல் 1 முதல் 4 அதிகாரத்திற்கு இடைபட்ட காலம் சுமார் 20 லிருந்து 25 ஆண்டு காலங்களாகும். பரிசுத்த் ஆவியான தேவன் ஒரு நபரின் இரட்சிப்பிற்காய் அநேகரைப் பயன்படுத்தினார் என்பது நாம் அறியும் முக்கியமானதாய் இருக்கிறது. சுவிஷேசம் அறிவிக்கும் தருணத்திற்காய் நாம் ஜெபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம், ப்ரிசுத்த ஆவியானவரின் ஒத்துழைப்புடன் நாம் சுவிஷேசம் அறிவிக்க கடமைபட்டுள்ளோம்.

4ம் அதிகாரத்தின் ஆரம்பத்திலேயே நெபுகாத்நேச்சாரில் முழுமையான மாற்றம் ஏற்பட்டுள்ளதை நாம் காணக்கூடியவர்களாய் இருக்கிறோம். 4ம் அதிகாரம் ஒரு கைப்பிரதியாய் இருந்து, நெபுகாத்நேச்சார் எவ்வாறு மனந்திருந்தினார் மற்றும் அவர் எவ்வாறு இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கை வைத்தார் என்பதைக்காட்டுகிறதாய் இருக்கிறது.

பகுதி 16 -- நெபுகாத்நேச்சாரின் சாட்சி தானியேல் 4:1-3.

1 இராஜாவாகிய நெபுகாத்நேச்சார் பூமி எங்கும் குடியிருக்கிற சகல ஜனத்தாருக்கும், பாஷைக்காரருக்கும் எழுதுகிறது என்னவென்றால்: உங்களுக்கு சமாதானம் பெருகக்கடவதி. 2 உன்னதமான தேவன் என்னிடத்தில் செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும் பிரசித்தப்படுத்துவது எனக்கு நன்மையாய்க் கண்டது. 3 அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும், அவருடைய அற்புதங்கள் எவ்வளவு வல்லமையுமாயிருக்கிறது. அவருடைய இராஜ்ஜியம் நித்திய இராஜ்ஜியம். அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

இவ்வதிகாரத்தின் ஆரம்பம், அரசாங்க கட்டளை வடிவமைப்பில் அமைந்துள்ளது. இக்கட்டளையானது கி மு 580 -- கி மு 560க்கு இடைபட்ட காலத்துக்குரியது. இக்கைப்பிரதி மற்றும் கட்டளை மூலம் அன்றைய நாளில் அறியப்பட்ட முழு உலகமும் சுவிஷேசத்தை கேட்டறிந்தது. பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தில் இருந்த ஒவ்வொரு தனிமனிதனும் இவ்வார்த்தைகளைக் கேட்க நேரிட்டது. யூதேயா மற்றும் தேவாலயமும் அழிக்கப்பட்டு இஸ்ரவேல் தேசம் சிறையிருப்பில் இருந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் இது அளிக்கப்பட்டிருக்க வேண்டும். இது சிறையிருப்பிலிருந்தவர்களுக்கு பெரிதளவில் உற்சாகம் அளிப்பதாய் இருந்தது, எசேக்கியேலின் கிரியைகள் சுமார் கி மு 592ல் முக்கியத்துவம் அடைந்திருக்க வேண்டும். எசேக்கியேல் 1:1-3.

இங்கு பரிசுத்த ஆவியானவராகிய தேவன் நெபுகாத்நேச்சாரின் மீது சில திறவுகோல் சாட்சிகள் மூலம் கிரியை செய்தார். நெபுகாத்நேச்சார் ஒருவிசுவாசியாய் மாறுவதற்கு நீண்ட அவகாசம் எடுத்துக் கொண்டது. 3ம் அதிகாரத்தின் இறுதியில் நெபுகாத்நேச்சார் தேவன் இருக்கிறார் என்கிற உணர்வை அடைந்தான், ஆனால் அவன் இரட்சிப்பை

ஏற்றுக்கொள்ள வில்லை. இந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சாட்சியினிமித்தம் அவன் அசைக்கப்பட்டவனான். அவனை நாம் பரலோகில் காணும்போது மனம் மாறியபோதுள்ள முழுவிவரத்தையும் அறிந்து கொள்ளுமளவும் நாம் காத்திருக்க வேண்டும்.

மெய்தேவன் ஒருவர் உண்டு என்கிற உணர்விக்குப் பின் (இறையியல் ரீதியாக "தேவனைக்குறித்த மனசாட்சி") மனுக்குலத்தின் சாதாரண மனிதர்களும் இயேசுக்கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் தேவனது பிள்ளைகளாகும் சிலாக்கியத்தினை பெறுகிறவர்களாகிறார்கள். சிலர் கர்த்தரண்டை இலகுவய் வந்து விடுகிறார்கள், ஆனால் மற்றவர்கள் சோதனை நிரம்பிய கடின சூழல்களில் வருகிறவர்களாய் இருக்கின்றனர். நெபுகாத்நேச்சார் இதுபோன்ற கடின சூழலில் கடந்து வந்தவன், பெருமை மற்றும் சுயத்தை மையமாய் கொண்ட அவனது வாழ்வில் அவைகள் சுட்டெரிக்கப்பட வேண்டியதாய் இருந்தது. தேவன் தனக்கும் ஒரு பாவிக்குமிடையே விக்கிரகமேதும் இல்லாதவர். யாத்திராகமம் 20:1-5.

பரிசுத்த ஆவியானவர் சத்திய வார்த்தையை, நெபுகாத்நேச்சாரின் மனந்திரும்புதலால் உலெகமெங்கிலும் பரம்பச் செய்வதற்கு முடிந்தது. கோரேஸ் மற்றும் சில பெரிசிய இராஜாக்கள் தேவனது வார்த்தையை பரவச்செய்தார்கள் ஆனால் கிரேக்கு மற்றும் ரோம் போன்ற சாம்ராஜ்ஜியங்கள் அவர்கள் புறஜாதியாராய் இருந்தமையால் இவ்வகையான முறையை கடைபிடிக்கவில்லை. மகா அலெக்ஸாண்டர் தேவனிடம் கடந்து வருகிறவனாய் இருந்தான் அவன் தேவன் உண்டு என்கிற மனசாட்சியை உடையவனாய் இருந்தான், அவன் தேவன்து வார்த்தையின் சாட்சியை ஏற்றுக்கொள்கிறவனாய் இருந்தான். மற்றும் தேவனது உன்னதத்தன்மையையும் அவரது திட்டத்தையும் அறிகிறவனாய் இருந்தான். அவனது தனிப்பட்ட கர்வம், அவனது சொந்த மகத்துவம் தேவனுக்கு முன் அடிபணிய அவனை மறுக்கும்படி செய்தது. அவன் வருத்தப்படக்கூடிய நிலையில் அந்திக்கிறிஸ்துவை உருவகப்படுத்துபவர்களில் முதன்மையானவனான். மட்டுமின்றி அவன் ஒரு புறஜாதியானாய் மரித்து எல்லா பிசாசுகளின் வல்லமைகளை ஒன்றிணைக்கும் மதவாதியாய் மரிக்கும் முன் செயல்பட்டு, மரணம் எய்தினான். அந்திக்கிறிஸ்து சில காலம் இது போன்ற காரியங்களில் தொடர்ந்து செயல்பட வேண்டியிருக்கும்.

கிரேக்க சாம்ராஜ்ஜியத்தை பொருத்தமட்டில், விஷேசமாய் ரோம சாம்ராஜ்ஜியத்தில் கொய்னே கிரேக்கு பயன்படுத்தப்பட்டு புதிய ஏற்பாட்டில் சுவிஷேசம் அறிவிக்க பேருதவியாய் திகழ்ந்தது, ஆனால் இந்த சாம்ராஜ்ஜியங்கள் சத்தியத்திற்கு எதிராய் செயல்பட்டு சத்தியத்தைப் பின்பற்றுகிறவர்களை கி பி 320 வரை, கிறிஸ்தவம் ரோம

மதமாய் மாறும் வரைக்கும் உபத்திரவப்படுத்தினது. இறுதிகட்ட ரோம சாம்ராஜ்ஜியத்தின் அமைப்பானது மேற்கத்திய ஆளுகையைத் தழுவி அந்திக்கிறிஸ்து, உண்மையான விசுவாசிகளை உபத்திரவப்படுத்தி, கர்த்தர் மனிதரின் கலகங்களை அகற்றி தனது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க முயலும் வரைக்கும் நடைபெறுவதாய் இருக்கும்.

மகா அலெக்ஸாண்டர் பெரிதளவில் வெற்றி கண்டு, எல்லா பட்டணங்களையும் தனது ஆதிக்கத்திற்குட்படுத்தினான். தானியேல் தீர்க்கதரிசனத்திற்கு இசைய செயல்படுகிறவனாய் இருந்தான். அவன் எருசலேமிற்கு கடந்து சென்றபோது அங்கு பிரதாண ஆசாரியனை சந்தித்து, அவன் மூலம் தான் தானியேல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவன் என்பதை புரிந்து கொண்டான். இதினிமித்தம் அவன் எருசலேமை விட்டுவிட்டு, அவன் தனிப்பட்ட விதத்தில் ஒரு ஆண்டி - செமித்தியனாய் இராது, யூதர்களை உற்சாகப்படுத்தி, தனது இராணுவத்தை அநேக ஆயிரம் யூதர்கள் பின்பற்றி வரச் செய்தான் யூத ஜனத்தொகையானது எகிப்திலும் மற்றும் பாபிலோனிலும் அவனை வரவேற்று, அவர்களை அவன் அங்கீகரித்தபடியால், அவர்கள் அவனுக்கு ஆதரவளித்தனர். அவனுக்கு பின் எழும்பிய தளபதிகள் யூதர்களை உபத்திரவப்படுத்தினர், அவர்களில் முக்கியமானவன் சீரியாவின் செலூக்கஸ் ஆகும். மற்ற இடங்களில் மகா அலெஸாண்டர் மக்கள் கொய்னே கிரேக்கை கற்றுக்கொள்ள வற்புறுத்தினான், இது எதிர்காலத்தில் சுவிஷேச பிரபல்யத்திற்கு பேருதவியாய் அமைந்தது, கொய்னே கிரேக்க மொழியில் பழைய ஏற்பாடானது எகிப்தில் வைத்து மொழிபெயர்க்கப்பட்டது, இது கிரேக்கமொழியானது பேசப்படும் இடங்களுக்கு பரவ பேருதவியாய் அமைந்தது, மற்றும் இதற்குப் பின் 300 ஆண்டுகளுக்குப் பின் வந்த சுவிஷேசம் பரவுலலுக்கும் இம்மொழியானது வகை செய்கிறதாய் இருந்தது.

2 ம் வசனத்தில் மொழியானது, இதற்கு முன்னுள்ள அதிகாரத்தில் இறுமாப்புள்ள அரசனின் மாறுதலை உறுதிப்படுகிறதாய் இருக்கிறது. இது திரும்ப உருவாக்கப்படுதலை காட்டுகிறதாய் இருந்து, ஒரு நபரின் வாயின் வார்த்தைகள் மாறுவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, "அடையாளங்கள், அற்புதங்கள்" என்னும் வார்த்தைகள் தேவனது சரித்திர வெளிப்பாட்டை புரிந்துகொள்ள பயன்படுத்தப்பட்டுள்ளது. வேதாகம ரீதியில் சிந்திப்பதற்கு மீட்கப்படுதல், ஒப்புரவாக்கப்படுதல் போன்ற இதரவார்த்தைகளும் அவசியப்படுகிறதாய் இருக்கிறது. மனிதனுக்கு தேவன் தன்னை வெளிப்படுத்தும் போது, அதை அவர்கள் பெற்றுக்கொள்ளாத போது, அவர்கள் என்ன புரிந்து கொண்டார்களோ அது எப்போதும் அளவுக்குட்பட்டதாய் இருக்கிறது.

மூன்றாம் அதிகாரத்தில் உள்ள வார்த்தைகள் நெபுகாத்நேச்சாரை மையமாய் கொண்டதாய் இருக்கிறது. இங்குள்ள வார்த்தைகள் தேவனை மையமாய் கொண்டதாய் இருக்கிறது. நெபுகாத்நேச்சார் முன்னதாய் தனது கிரியைகளைக் குறித்து கரிசனையுள்ளவனாய் இருந்தான், ஆனால் இந்த அதிகாரத்தில் அவன் தேவனது கிரியையில் மிகவும் கரிசனையுடையவனாய் காணப்படுகிறான். நெபுகாத்நேச்சார் பண்டைய உலகில் பெரிய அளவில் நிர்வாகியாகியாய் இருந்தான். அவனது சட்ட அமைப்புகளும், பரிசீலனைகளும் பெரிதளவில் இருந்தது. அவன் தனது இராஜ்ஜியத்தின் திறமை மற்றும் முழுமைக்காக விசுவாசிகளின் வாழ்வை அணுக வேண்டியதாய் இருந்தது.

"உங்களுக்கு சமாதானம் பெருகக்கடவது" இது நெபுகாத்நேச்சாரின் புதிய சொற்றொடராய் இருந்தது. அவன் இப்பொழுது மிகத்தெளிவுடன் மறுபடி உருவாக்கப்பட்ட வாழ்வில் மகிழ்ந்து கொண்டிருந்தான், தன்னைப் போன்றே பிறரும் மகிழ வேண்டும் என விருப்பம் கொண்டவனாய் இருந்தான். "உங்களுக்கு சமாதானம் பெருகக்கடவது" என்பது சாதாரண வாழ்த்துதலை விட அர்த்தமிகுந்ததாய் இருந்தது. எல்லா சூழல்களிலும் தங்கியிருக்கக்கூடிய நிலையான ஒன்றை பிரதிபலிப்பதாய் இருந்தது, அது எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானமாயிருந்தது. . ஏசாயா 26:3-4, யோவான் 14:27, எபேசியர் 3:19, பிலிப்பியர் 4:7. .

மனிதர் இப்படிப்பட்ட கருத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள், மனிதனும் கடவுளும் அகில உலகையும் பகிர்ந்து கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள், புறஜாதிய மனம் மனிதன் தேவனுக்கு சமமாய் இருப்பதை வாஞ்சிக்கிறதாய் இருக்கிறது, அல்லது குறைந்தபட்சம் பணிந்து குணிந்து ஆராதிக்க அவசியமில்லை என வாஞ்சிக்கிறது. தேவன் இங்கே இருக்கிறார், நாமும் இங்கே இருக்கிறோம், ஆனால் எல்லாவற்றிற்கும் பின்னால் சிருஷ்டிக்கப்பட்ட அநித்தியமான உலகமானது இருக்கிறது என வேதாகமம் போதிக்கிறது. மனிதனின் தெய்வத்துவம் தத்துவமானது Big Bang theory, ஐ ஆதரிக்கிறதாய் இருக்கிறது. ஆனால் தேவனுடைய வார்த்தையானது சிருஷ்டிப்பானது திடீரென உள்ளாக நிலைகுலைந்து பின்னர் மறுபடி திரும்ப உருவாக்கப்பட்டது எனப் போதிக்கிறது. ஆதியாகமம் 1-2, 2 பேதுரு 3:10-18, வெளிப்படுத்தல் 21-22. இவ்வண்ட சராசரத்திற்கு பின்னணியில் எந்த ஒரு உயிரற்ற சக்தியும் இல்லை, சிருஷ்டிகரான இரட்சகர் தேவன் இவ்வண்டசாரத்திற்கு பின்னணியில் இருக்கிறார். இடைவெளியும் நேரமும் ஆரம்பமானது குறித்து அவர்கள் கூறுவது சரியே, ஆனால் சிருஷ்டிகரை புறம்பாக்குவது தவறானதாய் இருக்கிறது. அவர்கள் இப்போது black holes குறித்து பேசுகிறார்கள் ஆனால் பேதுருவின்

வெளிப்பாட்டை புறக்கணிக்கிறவர்களாய் இருக்கிறார்கள், இம்முழு அண்டசராசரமும் ஒரு நாளில் உருவளிந்து அக்கினி கடலுக்கு இறையாக இருக்கிறது, பழைய சிருஷ்டிப்பு யாவையும் அக்கினி கடலானது அழிக்கப் போகிறது.

ஒவ்வொரு சமயமும் தேவனது வாக்குத்தத்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள அவசியமில்லை, சாத்தானை நினைவு கூறும் உலகில் நேரம் - இடைவெளி இவற்றின் முன்நிலைக்கு திரும்புகிறவர்களாய் இருக்கிறோம். ஒருவேளை தேவன் தவறிப்போவாரானால் நாம் வெறொரு இன்சூரன்ஸ் பாலிஸியை தேட வேண்டியவர்களாய் இருக்கிறோம், ஆனால் தேவனது திட்டமானது ஒரு போதும் தவறினதும் இல்லை, தவறிப்போவதும் இல்லை. இது பரிசுத்த ஆவியானவரது யுத்தமாய் அமைந்து ஆவிக்குரிய நிலையில் வளர்ந்து முன்னேற விசுவாசிக்கு உதவுகிறவராய் இருக்கிறார், இது ஒவ்வொரு மனிதனுக்கும் மனுஷிக்கும் மனதின் போராட்டமாய் அமைந்திருக்கிறது. ரோமர் 12:1-2. நாம் எந்த எண்ணத்தையும் கிறிஸ்து இயேசுவின் சத்தியத்திற்கு சிறைபிடிக்கிறவர்களாய் இருக்கிறோம்.

வசனம் 2ல் நெபுகாத்நேச்சார் ஒரே மெய்தேவனே உண்டு என்றும், அவர் அநேக சத்தியத்தினை தனக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும் குறித்து உணர்ந்துள்ளதை அறிக்கை செய்கிறான் மட்டுமின்றி தனது இராஜ்ஜியத்தில் உள்ளவர்கள் அனைவருக்கும் அதைப் பகிர்ந்து கொள்ள வாஞ்சையுள்ளவனாய் இருப்பதையும் காண்கிறோம்.

வசனம் 3ல் பரலோகத்தின் தேவன் நித்திய அழியாத இராஜ்ஜியத்தை ஏற்படுத்தி, இவ்வாறு தானியேல் 2 ம் அதிகாரத்தின்படி தனது சொப்பனத்தின்படி தான் உண்டு பண்ணின பொற்சிலையை முற்றிலும் புறக்கணித்து, நித்திய இராஜ்ஜியத்தை ஏற்படுத்துவார் என அறிக்கை செய்கிறவனாய் இருக்கிறான் இதற்கு முன்னாக தனது பூமிக்குரிய இராஜ்ஜியத்தில் கவனம் செலுத்தினான். தற்போது அவன் நித்திய பரலோக இராஜ்ஜியத்தில் கவனம் செலுத்துகிறவனாய் இருக்கிறான். இந்த ஆண்டுகளில் அவன் முன்னும் பின்னுமாக அசைக்கப்பட்டவனாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தின் மூலம், இரட்சிப்புக்கு ஏதுவாய் தகர்க்கப்பட்டவனாய் காணப்பட்டான்.

கைக்கொள்ளுதல்:

சுவிஷேசத்தை அறிவிக்கும் போது பொறுமையைக் கையாளவேண்டும். நெபுகாத்நேச்சாரின் விஷயத்தில் 25 நீண்ட ஆண்டுகள் எடுத்தது. இந்நாட்களில் அநேகர் பொறுமையிழந்து 25 நிமிடங்களில் முடிக்க

முயற்சிக்கின்றனர் அல்லது 25 மாதங்களில் முடிக்க முயலுகின்றனர், இங்கு 25 ஆண்டுகாலம் எடுத்ததை உணராதிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் நெபுகாத்நேச்சார் போன்ற மனிதரிடத்தில் பல வகைகளில் கிரியை செய்கிறவராய் இருக்கிறார். அலெக்ஸாண்டரைப் போன்ற இராணுவத்தில் கைதேர்ந்த மற்றும் மொழி ஆர்வம் கொண்ட, மட்டுமின்றி ரோம இராணுவ ஆயுதங்கள் கூட நற்செய்தியை பரப்புகிறதாய் இருந்தது. பரிசுத்த ஆவியானவர் பலவிதமான முறைகளை பலவித சூழல்களில் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். ரோமர் 8:28.

சிலுவையின் இரத்தத்தில் முழுகி தேவனுடன் சமாதானம் அடைந்தால் மட்டுமே தேவனது சமாதானத்தை நீங்கள் அடைய முடியும்.

தேவன் எல்லாவற்றின் மீதும் சர்வ வல்லவராய் இருக்கிறார் என்பது கடினமான கருத்தாய் இருக்கிறது. தேவன் தனது செய்கைகளை தெரிவு செய்வது கிடையாது, ம்னிதன் தாழ்மையாய் கிருபையை தெரிவு செய்கிறவனாய் இருக்கிறான் அல்லது அறியாமையினால் தேவனது சத்தியத்தை மறுதளிக்கிறவனாகிறான்.

தேவனது திட்டத்தில் ஒவ்வொன்றும் தேவனால் துவங்கப்பட்டு மனிதால் பெற்றுக்கொள்ளப்படுகிறது. இது கிருபையாய் இருக்கிறது. தேவனது திட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டதாய் இருக்கிறது, இரட்சிப்பு, கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது ஆராதனை மற்றும் சமயத்தில் செய்யும் சேவை, மற்றும் நித்தியம்.

நமது அனுதின பிரச்சனைகளை தேவனிடத்தில் அற்பணிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம் 1 பேதுரு 5:7. தேவனது கிருபையானது அவர் யார் என்பதைச் சார்ந்து இருக்கிறது, நாம் யார் என்பதைச் சார்ந்து அல்ல.

நாம் கர்த்தருடைய வேலையை செய்ய இங்கு இருக்கிறோம். நாம் எதிர்கால நித்தியத்தை கண்ணோக்கி நிலைத்திருத்தல் வேண்டும் மற்றும் நாம் பூமியில் செய்யும் காரியங்களை நித்தியத்தின் வெளிச்சத்தில் அளவிட வேண்டும், தற்காலிக காரியங்களைக் கொண்டு அளவிடக்கூடாது.

DOCTRINES உபதேசங்கள்

EVANGELISM சுவிஷேசம்

EVANGELISM - NEW TESTAMENT PATTERN சுவிஷேசம் - புதிய ஏற்பாட்டு அமைப்பு

SIGNS அடையாளங்கள்

HOLY SPIRIT OPERATION பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள்

HOLY SPIRIT: MINISTRY IN THE NEW TESTAMENT பரிசுத்த ஆவியானவர்: புதிய ஏற்பாட்டில் அவரது ஊழியம்.

HOLY SPIRIT: MINISTRY IN THE OLD TESTAMENT பரிசுத்த ஆவியானவர்: பழைய ஏற்பாட்டில் அவரது ஊழியம்.

SECTION 17 - DREAM OF NEBUCHADNEZZAR பகுதி 17 - நெபுகாத்நேச்சாரின் சொப்பனம் தானியேல் 4:4-18.

4 நெபுகாத்நேச்சாராகிய நான் என் வீட்டிலே சவுக்கியமுள்ளவனாயிருந்து என் அரமணையிலே வாழ்ந்து கொண்டிருந்தேன். 5 நான் ஒரு சொப்பனத்தைக் கண்டேன், அது எனக்கு திகிலை உண்டாக்கிற்று. என் படுக்கையின்மேல் எனக்குள் உண்டான நினைவுகளும், என் தலையில் தோன்றின தரிசனங்களும் என்னைக் கலங்கப்பண்ணிற்று. 6 ஆகையால் சொப்பனத்தின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கிறதற்காகப் பாபிலோன் ஞானிகளையெல்லாம் என்னிடத்தில் கொண்டு வரும்படி கட்டளையிட்டேன். 7 அப்பொழுது சாஸ்திரிகளும், ஜோசியரும், கல்தேயரும், குறிசொல்லுகிறவர்களும் என்னிடத்தில் வந்தார்கள். சொப்பனத்தை நான் அவர்களுக்குச் சொன்னேன். ஆனாலும் அதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்க மாட்டாமற்போனார்கள். 8 கடைசியிலே என் தேவனுடைய நாமத்தின்படியே பெல்தெஷாத்சார் என்னும் பெயரிடப்பட்டு, பரிசுத்த தேவர்களின் ஆவியையுடைய தானியேல் என்னிடத்தில் கொண்டு வரப்பட்டான்; அவனிடத்தில் நான் சொப்பனத்தை விவரித்துச் சொன்னதாவது: 9 சாஸ்திரிகளின் அதிபதியாகிய பெல்தெஷாத்சாரே, பரிசுத்த தேவர்களுடைய ஆவி உனக்குள் இருக்கிறதென்றும்,எந்த மறைபொருளையும் அறிவது உனக்கு அரிதல்லவென்றும் நான் அறிவேன். நான் கண்ட என் சொப்பனத்தின் தரிசனங்களையும் அதின்

அர்த்தத்தையும் சொல்லு. 10 நான் படுத்துக்கொண்டிருந்த போது என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னவென்றால்: இதோ தேசத்தின் மத்தியிலே மிகவும் உயரமான ஒரு விருட்சத்தைக் கண்டேன். 11 அந்த விருட்சம் வளர்ந்து பலத்து தேசத்தின் எல்லைபரியந்தமும் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வான பரியந்தம் எட்டினது. 12 அதின் இலைகள் நேர்த்தியும் அதின் கனி மிகுதியுமாயிருந்தது. எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது. அதின் கீழே வெளியின் மிருகங்கள் நிழலுக்கு ஒதுங்கின. அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்துச் சகல் பிராணிகளும் போஷிக்கப்பட்டது. 13 நான் படுத்திருக்கையில் என் தலையில் தோன்றின தரிசனங்களைக் காணும்போது, காவலாளானாகிய பரிசுத்தவான் ஒருவன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன். 14 அவன் உரத்த சத்தமிட்டு; இந்த விருட்சத்தை வெட்டி, இதின் கொப்புகளைத் தறித்துப்போடுங்கள். இதின் கனிகளைச் சிதறடியுங்கள். இதின் கீழுள்ள மிருகங்களும் இதின் கொப்புகளிலுள்ள பட்சிகளும் போய்விடட்டும். 15 ஆனாலும் இதின் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும். இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக. மிருகங்களோடே பூமியின் பூண்டுலே அவனுக்கு பங்கு இருக்கக்கடவது. 16 அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது. இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்து போகவேண்டும். 17 உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்ஜியத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று நரஜீவன்கள் அறியும்படிக்குக் காவலாளரின் தீர்ப்பினால் இந்தக் காரியமும் பரிசுத்தவான்களின் மொழியினால் இந்த விசாரனையும் தீர்மானிக்கப்பட்டது என்றான். 18 நெபுகாத்நேச்சார் என்னும் இராஜாவாகிய நான் கண்ட சொப்பனம் இதுவே. இப்போதும் பெல்தெஷாத்சாரே, நீ இதின் அர்த்தத்தைச் சொல்லு, என் இராஜ்ஜியத்திலுள்ள ஞானிகள் எல்லாராலும் இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கக்கூடாமற்போயிற்று. நீயோ இதைத் தெரிவிக்கத்தக்கவன். பரிசுத்த தேவர்களுடைய ஆவி உனக்குள் இருக்கிறதே என்றான்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

அவனது சாட்சியானது வசனம் 4 முதல் கொடுக்கப்பட்டுள்ளது. சவுக்கியமுள்ளவன் என்பதன் பொருள் அவன் செழிப்புடனும் மனித பாதுகாப்புடனும் இருந்தான் என்பது பொருளாகும். வெளிப்பிரகாரமான அழுத்தங்களின்றி கவலையின்றி வாழ்தலைக் காட்டுகிறதாய்

இருக்கிறது. அவன் உலகம் முழுவதையும் வென்று, உலகம் ஒருபோதும் கண்டிராத அளவுக்கு தனது மிகச்சிறந்த ஆளுநர்களால் அரசாண்டு வந்தான். அவனது ஆளுகை சரித்திரத்தில் மிகப்பெரிய சாம்ராஜ்ஜியத்தை ஆளுகை செய்வதாய் இருந்தது. அவன் இளவரசிக்காக தொங்கும் தோட்டத்தை பாபிலோனில் உருவாக்கினான். எல்லாகாரியம் சிறப்பாய் சென்றுகொண்டிருந்தது மனிதக் கண்ணோட்டத்தில் சிறப்பாய் இருந்தது அவன் 100% பாதுகாப்புடனும் அவனிடம் ஒவ்வொரு காரியத்தையும் சிறப்பாக செய்து வந்தான். இக்காலக் கட்டத்தில் அவன் முதிர்ந்த வயதுள்ளவனாய், 50-60 வயது நிரம்பியவனாய்க் காணப்பட்டான்.

கல்தேயர்கள் என்கிற வார்த்தை “Raan” என்கிற வார்த்தையால் அழைக்கப்பட்டது. இதன் பொருள் பசுமையாய் வளருவது என்பதாகும், அவர்கள் இலைகளால் மூடப்பட்டவர்களாய் இருந்தனர், இது ஒரு மரத்தைப் போன்று செழித்து வளருவதைக் காட்டுகிறதாய் இருந்தது. இத்தருணத்தில் அவன் எதைக்குறித்தும் பயமின்றி காணப்பட்டான். நெபுகாத்நேச்சார் மற்றொரு திகிலூட்டும் சொப்பனத்தைக் கண்டான். அவன் இரண்டாம் அதிகாரத்தில் கண்ட சொப்பனத்திற்கு ஒப்பாய், அது அவனுக்கு தேவனிடத்திலிருந்து அளிக்கப்பட்டதாய் இருந்தது. அவன் மாற்கு 8:36ல் கூறப்பட்டுள்ள மனுஷனுக்கு ஒப்பாக மாறினான். "ஒருவன் இவ்வுலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டு, தனது ஜீவனை நஷ்டப்படுத்திக்கொண்டால் அதினால் அவனுக்கு இலாபம் என்ன?" தங்கள் அழியும் தன்மையைக் குறித்து அநேகர் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும், அவர்கள் தங்களது சிற்றின்ப வாழ்க்கை, மதுபான வாழ்வில் உல்லாசமாய் இருத்தல் போன்றவற்றைக் குறித்து கவனமாய் இருத்தல் வேண்டும், இந்த மனிதன் சத்தியத்தை தேடுகிறவனாய் இருந்தான், இருந்தபோதிலும் அவன் அதைக்குறித்து பயமுள்ளவனாயும் இருந்தான்.

“Harhorin” என்கிற வார்த்தை "சிந்தனைகளைக்" குறிக்கும் சொல்லாய் இருக்கிறது, இது யூகம் மற்றும் யூகித்தல் போன்றகாரியங்களை குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இங்கு அவன் ஒரு பெரிய மரத்தைக் குறித்த சொப்பத்தைக் கண்டான். அவனது சொப்பனம் அவனை மிகவும் கலங்கப்பண்ணினமையால் மீண்டு அவன்தனது ஞானிகள் அனைவரையும் அழைத்தான. தானியேல் ஞானிகள் அனைவருக்கும் பிரதாணியாய் இருந்தான், இத்தருணத்தில் தானியேல் அழைக்கப்படவில்லை காரணம் நெபுகாத்நேச்சார் தானியேல் எவ்வகையான ஆலோசனை அளிப்பான் என்பதை அறி!ந்திருந்தான், அவனது ஆலோசனை இன்னும் தன்னை கலங்கப்பண்ணுமோ எனப் பயந்து, இறுதியாய் தானியேல் அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

வசனம் 7ல் நான்கு வகையான ஞானிகள் காணப்படுகின்றனர். சாஸ்திரிகள் [magicians] இவர்கள் கல்தேயர்களின் இரகசியம் மற்றும் மதம் சம்பந்தமான காரியங்களை எழுதி பாதுகாக்கும் வேதபாரகர்கள், வானசாஸ்திரிகள் எனவும் அறியப்பட்டனர் இவர்கள் எதிர்கால நிகழ்வுகளை அறிவித்து வானசாஸ்திரத்தை மையமாய் கொண்டு அறிவிப்பவர்கள். கல்தேயர்கள் இவர்கள் அரசாங்கத்தில் வல்லமை மிக்க ஆசாரியர்களாய் திகழ்ந்தவர்கள், குறிசொல்லுபவர்கள் இவர்கள் பிசாசுகளின் ஆவியால் நிரப்பப்பட்டு தீர்க்கதரிசனம் உரைப்பவர்கள், இவர்கள் இராஜ்ஜியத்தின் எதிர்கால கொள்கைகளை தீர்மானிப்பவர்கள். இப்படிப்பட்டவர்கள் தானியேலுக்கு கடந்த இருபது ஆண்டுகளாய் போதித்து வழிநடத்தி வந்தவர்களாய் இருந்தும் இன்னும் இவர்கள் குறைவு பட்டவர்களும், புறஜாதிய கண்ணோட்டத்தை உடையவர்களுமாய் இருந்தனர்.

இப்படிப்பட்ட குழுவினர் மிகச்சிறந்த ஆலோசகராய் இருந்தபோதிலும், மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட உதவியை அடைகிறவர்களுமாய் இருந்தபோதிலும் சொப்பனத்தின் அர்த்தத்தை அவர்களால் மறுபடியும் அளிக்க இயலாதவர்களாய் இருந்தனர், காரணம் அச்சொப்பனம் தேவனிடத்திலிருந்து அளிக்கப்பட்டதாய் இருந்தது. ஒரு தேவனது மனுஷனால் மட்டுமே அதற்கு வியாக்கியானம் அளிக்க இயன்றது. ஞானிகளின் இயலாமைக்கு பின்னர், தானியேல் அங்கு கடந்து வந்து சொப்பனத்திற்கு வியாக்கியானம் அளிக்கிறவனாய் இருந்தான். நெபுகாத்நேச்சாரின் பின்னறிவின்படி தானியேல் தெய்வீக உதவி அளிப்பவனாய் விளங்கினான். அவனது பெயர் கல்தேயக் கடவுள்களின் பெயராய் மாற்றப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாய் இருந்தது.

நெபுகாத்நேச்சாரைக் கலங்கப்பண்ணின சொப்பனத்திற்கு வியாக்கியானம் அளிக்க தானியேல் இப்பொழுது கேட்டுக்கொள்ளப்படுகிறான். "பரிசுத்த தேவர்களின் ஆவியைப் பெற்றிருத்தல்" என்ற சொற்றொடரின் பொருள் (தேவர்கள் என்கிற வாக்கியம் மிகைப்படுத்திக் கூறுவதாய் இருக்கிறது) அது "மகா உன்னத தேவனின் ஆவி" என்று மொழிபெயர்த்திருக்க வேண்டும்.

அநேக பெரிய விசுவாசிகளான மோசே, தாவீது போன்று தானியேலும் தன்னைக்குறித்து அறிமுகம் செய்யாதவராய்க் காணப்பட்டார், ஆனால் கர்த்தர்தாமே தன்னை உயர்த்துமாறு ஆவல் கொண்டிருந்தார் மற்றும் நல்ல தருணங்களுக்கான கதவை திறக்கிறவராய் திகழ்ந்தார்.

வசனம் 10 - 18ல் சொப்பனத்தில் காணப்பட்ட மரத்தைக் குறித்துப் பார்க்கிறோம். மரத்தைக் குறித்த சம்பவமானது புதிய ஏற்பாட்டில் உள்ள

உவமைகள் போலல்லாது இருந்தது, அதில் இடம்பெற்றவை எல்லாராலும் புரிந்துகொள்ளப்படுபவைகளாய் இருந்தது மற்றும் அதின் வியாக்கியானம் முதிர்ந்த விசுவாசியால் மட்டுமே புரிந்து கொள்ளப்படுவதாய் இருந்தது. இது சங்கீதம் 1:3 மற்றும் எரேமியா 17:7-8, மற்றும் எசேக்கியேல் 47:12 ல் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது நெபுகாத்நேச்சாரின் இறுதி தரிசனமாய் இருந்தபடியால் எரேமியாவின் வார்த்தைகளை அல்லது சிலவற்றை அவன் வாசித்து இருக்க வேண்டும்.

நெபுகாத்நேச்சார் சொப்பனத்தை புரிந்து கொண்டிருக்க வேண்டும் ஆனால் அதை எதற்கு கையாளுவது என புரியாதிருந்திருக்க வேண்டும். அவனை பயப்படுத்தின உண்மை என்னவெனில், தேவதூதன் அம்மரத்தை ஒரு மனுஷனுக்கு ஒப்பிட்டு கூறுகிறான், அந்த மனுஷன் தானே என எண்ணினான். இதினிமித்தம் அவன் அதிகம் பயப்பட்டான். அவன் இந்த இடத்திலே பயப்பட்டது சரியே, இந்த சொப்பமானது விசுவாசப்பயணமாய் அமைந்து மனோநிலையானது பாதிக்கப்படுவது முன்னறிவிக்கப்பட்டதற்கு மூல காரணமாய் அமைந்தது.

தானியேலும், அரசனும் சொப்பனத்தைப் புரிந்து கொண்டனர் மற்றும் அரசனின் வாழ்க்கையில் செயல்படுத்துவது அடுத்த பகுதியில் வியாக்கியானிக்கப்படுகிறது. தானியேல் எரேமியாவின் தீர்க்கதரிசன ஆகமத்தை இக்காலக்கட்டத்தில் பாரூக்கிடமிருந்து பெற்றிருக்க வேண்டும், மற்றும் எசேக்கியேலுடன் நெருங்கின நிலையில் கிரியை செய்து அவனது எழுதப்பட்ட ஆகமத்திற்கு உதவியாய் இருந்திருக்க வேண்டும்.

கைக்கொள்ளுதல்:

செழிப்பு அல்லது விரோத்துவம் மூலம் நாம் கிறிஸ்துவண்டை வரக்கூடும்.

தேவனது வார்த்தையின் போதனைகளை கூர்ந்து கவனிக்கும்போது, ஒரு அவிசுவாசி பயங்கரமான அனுபவத்தை, அவன் தேவனோடு ஐக்கியம் இல்லாததால் அடைகிறவனாய் இருக்கிறான்.

சாலமோன் பிரசங்கியில் கண்டது போல தேவனது திட்டத்தில் மற்றும் அவரது ஐக்கியத்தில் இல்லாது மெய்யான மகிழ்ச்சியை அடைவது அரிது. பிரசங்கி 12:1, 7-14.

தேவனது வார்த்தைக்கு அப்பாற்பட்ட நிலையில் அவிசுவாசிகளும் மற்றும் சில விசுவாசிகளும் தங்களது பிரச்சனைகளுக்கு தீர்வுகாண முயலுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தவிப்படைந்து

களைப்புறுகிறவரை முயற்சிக்கிறவர்களாய் இருக்கின்றனர், அவர்களது பிரச்சனை என்ன என்பது குறித்து தேவன் என்ன நினைக்கிறார் என பின்னர் கண்டுபிடிக்க முயலுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆலோசனையின் தன்மையானது, தேவனது கண்ணோட்டத்தில் எத்தன்மை வாய்ந்தது என்ற அளவை வைத்தே அதன் முக்கியத்துவம் கருதப்படுகிறது.

ஒரு அவிசுவாசி ஆவிக்குரிய காரியங்களை அறிந்து கொள்ள இயலாது காரணம் அவர்கள் ஆவிக்குரிய நிலையில் அவற்றை பகுத்து நிதானிக்க இயலாதவர்களாய் இருக்கின்றனர். 1 கொரி 2:14.

தானியேலைப் போன்று நம்மை நாமே உயர்த்திக் கொள்ளக்கூடாது, நமது தாலந்துகளை பயன்படுத்தும்போது கர்த்தரின் வேளைக்காக ஆவிக்குரிய காரியங்களுக்காய் காத்திருத்தல் வேண்டும்.

DOCTRINE உபதேசம்

HAPPINESS மகிழ்ச்சி

பகுதி 18 - சொப்பனம் வியாக்கியானிக்கப்படுதல்   தானியேல் 4:19-27.

19 அப்பொழுது பெல்தெஷாத்சாரென்னும் பெயருள்ள தானியேல் ஒரு நாளிகை மட்டும் திகைத்துச் சிந்தித்துக் கலங்கினான். இராஜா அவனை நோக்கி: பெல்தெஷாத்சாரே சொப்பனமும் அதின் அர்த்தமும் உன்னைக் கலங்கப்பண்ண வேண்டியதில்லை என்றான். அப்பொழுது பெல்தெஷாத்சார் பிரதியுத்தரமாக: என் ஆண்டவனே அந்த சொப்பனம் உம்முடைய பகைவரிடத்திலும், அதின் அர்த்தம் உம்முடைய சத்துருக்களிடத்திலும் பலிக்கக்கடவது. 20 நீர் கண்ட விருட்சம் வளர்ந்து பலத்து தேசத்தின் எல்லை பரியந்தம் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினரு. 21 அதின் இலைகள் நேர்த்தியும் அதின் கனி மிகுதியாயுமிருந்தது. அதின் மீழே வெளியின் மிருகங்கள்

தங்கினது. அதின் கொப்புகளில் ஆகாயத்துப் பட்சிகள் தாபரித்தது. 22 அது பெரியவரும் பலத்தவருமாயிருக்கிற இராஜாவாகிய நீர்தாமே. உமது மகத்துவம் பூமியின் எல்லைபரியந்தம் எட்டியிருக்கிறது. 23 இந்த விருட்சத்தை வெட்டி, இதை அழித்துப்போடுங்கள். ஆனாலும் இதின் வேர்களாகிய அடிமர தரையில் இருக்கட்டுமென்றும். இரும்பும் வெண்கலமுமான விலங்கு இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி ஆகாயத்துப் பனியிலே நனைவதாக. ஏழு காலங்கள் அவன் மேல் கடந்து போகுமட்டும் மிருகங்களோடே அவனுடைய பங்கு இருக்கக்கடவதெறும், வானத்திலிருந்து இறங்கிச் சொன்ன பரிசுத்த காவலாளனை இராஜாவாகிய நீர் கண்டீரே. 24 இராஜாவே அதின் அர்த்தமும் இராஜாவாகிய என் ஆண்டவன்பேரில் வந்த உன்னதமானவருடைய தீர்மானமும் என்னவென்றால்: மனுஷரினின்று நீர் தள்ளிவிடப்படுவீர். வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பீர் மாடுகளைப் போல புல்லை மேய்ந்து ஆகாயத்துப் பனியிலே நனைவீர். 25 உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்ஜியத்தில் ஆளுகை செய்து தமக்கு சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை நீர் அறிந்துகொள்ளுமட்டும் எழு காலங்கள் உம்முடைய பேரில் கடந்து போக வேண்டும். 26 ஆனாலும் விருட்சத்தின் வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டும் என்று சொல்லப்பட்டது என்னவென்றால்: நீர் பரம் அதிகாரத்தை அறிந்த பின் இராஜ்ஜியம் உமக்கு நிலைநிற்கும். 27 ஆகையால் இராஜாவே நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும் சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும். அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

தானியேல் "திகைத்து சிந்திக்கலானான்" அவன் உண்மையிலே சொப்பனத்தைக்குறித்து அதிர்ச்சிக்குள்ளானவனாய் காணப்பட்டு, ஒரு மணி நேரமளவும் சிந்தித்து திகைத்தான். எப்பொழுதும் கெட்ட செய்தியை ஒரு தான் கவனம் வைக்கும் ஒரு நபருக்குக் கூறுவது கடினமான காரியம். தானியேல் அரசனுக்கு அநேக வருடங்களாய் சேவை செய்து வந்தான், இது அவனுக்கு நேரிட். டபோது, தகவலை ஒருங்கிணைத்து அரசனுக்கு தனது கரிசனையை தெரிவிக்கலானான். தீர்க்கதரிசிகள் நல்ல செய்தியை கொண்டுவருவது அரிதான ஒன்றாய் இருக்கிறது, பிரசங்கியார் நற்செய்தியை அறிவிக்கிறவர்களாய் இருக்கின்றனர், தீர்க்கதரிசிகள் எப்போதும் எச்சரிப்பின் வார்த்தைகளைக் கொண்டுவருகிறவர்களாய் இருக்கிறார்கள்.

வசனம் 19ல் தானியேல் இராஜாவுக்கு நிகழப்போவதை அறிந்தவனாய் அத்தைய நிகழ்வு அவனது சத்துருக்களிடத்தில் நேரிடும்படி கூறுகிறவனாய் இருக்கிறான், இராஜா தானியேல உற்சாகப்படுத்தி சொப்பனத்திற்கு வியாக்கியானத்தை அறிந்து கொள்ள முயலுகிறான்.

மரமானது ஒரு தனிநபரை குறிப்பிடுகிறதாய் இருக்கிறது, அந்த தனி நபர் நெபுகாத்நேச்சார், அதின் உயரம் மற்றும் பரந்து விரிந்து இருந்தது கல்தேய சாம்ராஜ்ஜியமானது வளர்ந்து கடந்த நூற்றாண்டுகளாய் செழிப்புடன் இருப்பதைக் காட்டுகிறதாய் இருந்தது. அதின் வளர்ச்சி அவ்வாறிருந்து மற்றும் அதின் நிர்வாகம் உன்னத நிலையை எட்டிப்பிடிக்கிறதாய் இருந்து நெபுகாத்நேச்சாரின் ஆளுகையானது பாதுகாப்பும், செழிப்புமாய் இருந்து பண்டைய மத்திய கிழக்கு உலகில் உன்னத நிலையை அடைந்திருந்தது.

காவலாலன் எனப்படுவது பரிசுத்த தேவ தூதரில் ஒருவனாய் இருந்து, மனிதரை கவனித்து அவர்களது செயல்பாடுகளை கர்த்தருக்கு அறிவிப்பது இவர்களது வேலையாகும். இங்கு அவர்கள் அரசனுக்கு கட்டளை அளித்து வல்லமையிலிருந்து விலக்கி தேவனது வல்லமையை விளங்கச் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தேவன் ஆளுகிறவர் என்கிற அறிவை உணர்த்தி ஏழு ஆண்டு காலம் அதை உணரும்படி செய்கிறவர்களாய் இருக்கின்றனர்.

மரமானது வெட்டப்பட்டு, அதின் அடிமரம் விலங்கிடப்படுவது நெபுகாத்நேச்சார் தனது இராஜியத்தையும் தனது ஆரோக்கியத்தையும் இழந்து விட்டபோதும் அவன் தனது ஜீவனை இழக்காது இருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிற்து. ஒரு மரத்தை வெட்டி வீழ்த்துவது என்பது மத்தேயு 3:10ல் கூறப்பட்டுள்ள நியாயத்தீர்ப்பைக் காட்டுகிறதாய் இருக்கிறது, "கோடாறியானது மரத்தின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது, நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்." லூக்கா 13:7ல் இதற்கு ஒப்பனையான வேதபகுதியில் கனிகொடாத அத்திமரம் வேட்டப்படும்படி உத்திரவிடப்படுகிறது. அடிப்படைக்கருத்தான முழுவதுமாய் யோவான் 1-17ல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

எல்லாவற்றையும் அறிந்த தேவனானவர், ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் நெபுகாத்நேச்சார் கிறிஸ்துவை முழுமையாய் விசுவாசிப்பான் மற்றும் தனது திட்டத்தில் முக்கியமானவனாய் பயன்படுவான் என அறிந்திருந்தார். இந்த ஏழு ஆண்டுகாலங்களில், நெபுகாத்நேச்சாரின் ஜீவனைத் தவிர அனைத்தும் அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. தேவனது கிருபையானது அவனது ஜீவனைக் காப்பதாய் இருந்தது,

அவனது பெருமையானது சரிக்கட்டப்பட்டு, தன்னைக்குறித்தல்லாது பிறகாரியங்களை பார்க்கும்படி நேரிட்டது. இது முழுமையாய் சத்தியத்திற்கு முன் கொண்டுவரப்பட்டு தனது சுயம் மற்றும் தேவன் முன்னிலையில் தனது மனம்மாறுதலுக்கு காரணமாய் அமைந்தது.

தானியேல் இராஜாவுக்கு கூறும்போது, தன்து எதிர்காலத்தைக்குறித்து தேவனால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை என கூறினான். தொடர்ந்து அவன் கூறும்போது முடிவாக இராஜா தேவன்தாமே பரலோகிற்கும், பூமியனைத்தையும் ஆளுகிறவர் என்கிற அறிவை அடைந்த பின்னர் முன்னிலைக்கு அவன் திரும்புவான் என்றான். நியாயத்தீர்ப்பு நிறைவேறும்போது, நற்செய்தியானது காத்திருந்தது.

இந்த வேதபகுதியானது தானியேலின் வாஞ்சையினை தெரிவிப்பதோடு நிறைவு பெறுகிறது, தெய்வீக வியாக்கியானத்தை இராஜா ஏற்றுக்கொண்டபோது, அவன் உடனடியாக செயல்பட்டு தேவனுக்கு நேராக தனது மனநிலையை மாற்றி அமைத்துக் கொண்டான் இதினிமித்தம் அவன் தன்மேல் சுமர இருந்த தெய்வீக நியாயத்தீர்ப்புக்கு விலக்கி தன்னைக் காத்துக்கொண்டான்.

கைக்கொள்ளுதல்:

வேதாகமத்திலிருந்து சத்தியத்தை சத்தியமாய் அறிவிக்க சாமார்த்தியமும் தைரியமும் அவசியம், அது கேட்போருக்கு பிரபலமான ஒன்றாய் இருந்தாலும் சத்தியத்தை அறிவித்தாக வேண்டும். சத்தியத்தை அன்போடு கூட வழங்குதல் வேண்டும். எபேசியர் 4:15.

தேவன் உயர்த்துகிறவரும், தாழ்த்துகிறவருமாய் இருக்கிறார். ஒரு தேசத்தை ஆளுகிறவரது ஆளுகையானது தேவன் அனுமதிக்கும் வரையுமே அவர்கள் அதிகாரத்தில் இருக்க இயலும்.

நாம் கடின சூழலில் இருக்கும்போது, தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை நினைவுகூறுதல் வேண்டும்.

தேவன் யார் ஒரு விசுவாசியாகக்கூடும் என்பதை அறிந்தவராய் இருக்கிறார், மற்றும் அவர்களை அவர் பாதுகாத்து அவர்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக்கொள்ளச் செய்கிறருமாய் இருக்கிறார்.

நீங்கள் ஜீவிக்கிற காலமெல்லாம் அவர் உங்களது வாழ்க்கையைக் குறித்து ஒரு நோக்கமுடையவராய் இருக்கிறார்.

DOCTRINE உபதேசம்

TREES மரங்கள்

பகுதி 19 - நெபுகாத்நேச்சாரின் மனோவியாதி தானியேல் 4:28-33.

28 இதெல்லாம் இராஜாவாகிய நெபுகாத்நேச்சாரின்மேல் வந்தது. 29 பன்னிரெண்டு மாதம் சென்ற பின்பு, இராஜா பாபிலோன் இராஜ்ஜியத்தின் அரண்மனைமேல் உலாவிக்கொண்டிருக்கும்போது, 30 இது என் வல்லமையின் பராக்கிரமத்தினாலும், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று இராஜ்ஜியத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான். 31 இந்த வார்த்தை இராஜாவின் வாயில் இருக்கும்போதே, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இராஜாவாகிய நெபுகாத்நேச்சாரே, இராஜ்ஜியபாரம் உன்னைவிட்டு நீங்கிற்று. 32 மனுஷரின்று தள்ளப்படுவாய். வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பாய். மாடுகளைப்போல் புல்லை மேய்வாய். இப்படியே உன்னதமானவர் மனுஷருடைய இராஜ்ஜியத்தில் ஆளுகை செய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறாரென்பதை நீ அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உன்மேல் வரும் என்று உனக்குச் சொல்லப்படுகிறது என்று விளம்பினது. 33 அந்நேரமே இந்த வார்த்தை நெபுகாத்நேச்சாரில் நிறைவேறிற்று. அவன் மனுஷரின்று தள்ளப்பட்டு மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான். அவனுடைய தலைமயிர் கழுகுகளுடைய இறகுகளைப்பொலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப்போலவும் வளருமட்டும் அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

தானியேலால் சொப்பனத்திற்கான வியாக்கியானம் அளிக்கப்பட்ட பின்னர், நெபுகாத்நேச்சார் எல்லாவற்றையும் மறுதளித்து, எச்சரிப்பை நிராகரிப்பதை தெரிந்து கொண்டான், அவன் தனது பெருமையில் நிலைகொண்டிருப்பதை தெரிந்துகொண்டான். இம்மனிதனிடம் தேவன் பொறுமையும், கிருபையுள்ளவருமானார், இவைகள் அனைத்தையும் அவன் செய்திருந்தபோதும், அவன் மனந்திருந்தலுக்கான காலம் அளிக்கப்பட்டது.

பனிரெண்டு மாதங்களுக்கு பின்னர், அவன் பாபிலோனை சுற்றிலும் நடந்து கொண்டிருந்தபோது, தனது வல்லமையினாலும், பராக்கிரமத்தினாலும் பெரிய கட்டிடங்கள் வடிவமைத்துக்கட்டப்பட்டன என எண்ணினான், அவ்வாறு எண்ணியபோதே கர்த்தர் தனது நியாயத்தீர்ப்பை அவனுக்கு மனநிலை பாதிப்பின் மூலம் அளித்தார். அவன் சொன்னதாவது, "என் வல்லமையின் பராக்கிரமத்தினாலும், என் மகிமைப்பிராதபத்துக்கென்று இராஜ்ஜியத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்." அவன் வெளிப்படையாக தனது பாடத்தை மற்றும் கற்றுக்கொள்ளவில்லை. அவன் இன்னும் அவனது பெருமையில் நிறைந்து தான் நிறைவேற்றிமுடித்தவைகளில் திருப்தி கொண்டிருந்தான். இதை பரலோகிலிருந்து கேட்ட சத்தமானது மாற்றியமைத்து விட்டது.

அசீரிய சாம்ராஜ்ஜியத்தைக் குறித்து எழுதிய எல்லா சரித்திர ஆசிரியர்களும், நெபுகாத்நேச்சாரின் ஆட்சியில் உள்ள ஆளுகையில் எவ்வித காரணமுமின்றி ஒரு இடைவெளி இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறவர்களாய் இருக்கின்றனர். காரணம் அவன் மிருகங்களுடன் ஏழு ஆண்டு காலங்கள் மனோரீதியில் பாதிக்கப்பட்டு zoanthropy என்ற நிலைக்கு ஆளானவனாய் காணப்பட்டான், இது மனிதனில் மிருக சுபாவம் உள்ள வியாதி ஆகும், அவனத்ய் பாடத்தினை கற்றுக்கொள்ளும் வரை இவ்விதவியாதியால் பாதிப்படைந்தவனாய் இருந்தான். இப்படிப்பட்ட நிலைமை அவனது சொந்த செயல்பாட்டினால் அவனுக்கு கொண்டுவரப்பட்டது. அவனது மனநிலையானது பாதிக்கப்பட்டு அதிகரித்தது குறித்து இதற்கு முந்தைய அதிகாரத்தில் காணலாம்.

பண்டைய உலகில் புத்திசயாதீனமுள்ள மனிதனைக் கொலை செய்வது துரதிஷ்டம் என கருதப்பட்டு வந்தது, ஆகையால் இவ்வகையான வியாதி சரீரப்பிரகாரமாய்க் கொலைசெய்யப்படுவதைத் தவிர்த்து பாதுகாப்பளிப்பதாய் இருந்தது, இது தாவீது காத்துக்கு முன்னர் பைத்தியக்காரனைப்போன்று பாசாங்கு செய்ததற்கு ஒப்பணையாய் இருக்கிறது, இதினிமித்தம் அவனுக்கு கேடுஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டனர். 1 சாமுவேல் 21:10-15.

முடிவாக அவன் மிருகங்களோடு வயல்வெளியில் புல்லை மேய்ந்தான். வல்லமை பொருந்தினவன் எவ்வாறு விழுந்து போனான்? கடவுளைப் போன்று இருக்க விரும்பிய மன்னன் இப்பொழுது மிருகத்தைப் போன்று புல்லை மேயும் நிலைக்கு ஆளானான்.

கைக்கொள்ளுதல்

கிருபையானது எப்பொழுதும் நியாத்தீர்ப்புக்கு முந்திக்கொள்கிறதாய் இருக்கிறது. நெபுகாத்நேச்சார் அநேக சந்தர்ப்பங்களில் எதிர்கால நியாயத்தீர்ப்பு குறித்து எச்சரிப்பைப் பெற்றும், அவை அனைத்தையும் அறியாதிருந்து விட்டான்.

ஒரு மனிதன் தன்னைத்தானே கடவுளது நிலைக்கு உயர்த்திக்கொள்ள முயற்சிக்கும்போது, அவன் தன்னைத்தானே மிருகங்கள் நிலைக்கு தாழ்த்திக்கொள்கிறவனாகிறான்.

அதிகாரம், ஐசுவரியம், அல்லது மனித வெற்றியில் பாதுகாப்பு என்பது இல்லை. மெய்யான பாதுகாப்பு என்பது தேவனோடு உள்ள உறவிலிருக்கிறது, ஒரு மனிதன் திரும்ப உருவாக்கப்படும்போது இது ஆரம்பமாகிறது. நாம் தேவனது திட்டத்தில் பிரவேசிக்கும்போது, நாம் தேவனது பாதுகாப்பை பெறுகிறவகளாய் இருக்கிறோம் மற்றும் இதை பரிசுத்த ஆவியானவரது திட்டத்திலும், அதிகாரத்திலும், கர்த்தருடன் உள்ள ஐக்கியத்திலும், அவருடன் நாம் பரலோகத்தில் இருக்கப்போவதனாலும் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்.

அடிக்கடி மக்கள் கர்த்தரை ஏற்றுக்கொள்ளு முன்னர் தாழ்வான நிலைக்குள் அமிழ்ந்து போகிறவர்களாகிறார்கள், அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொண்டு அவருடன் நடக்கும்போது மேல்மட்டத்திற்கு வருகிறவர்களாகிறார்கள்.

DOCTRINE உபதேசம்:

HOLY SPIRIT: MINISTRY IN THE OLD TESTAMENT பரிசுத்த ஆவியானவர்: பழைய ஏற்பாட்டில் அவரது ஊழியம்.

பகுதி 20 - சொப்பனம் நிறைவேறுதலும் நெபுகாத்நேச்சார் திரும்ப இராஜாவாதலும். தானியேல் 4:34-37.

34 அந்த நாட்கள் சென்ற பின்பு நெபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன், என் புத்தி எனக்குத் திரும்பி வந்தது. அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்தரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைபடுத்தினேன். அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம்.

அவருடைய இராஜ்ஜியமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். 35 பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள். அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார். அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன சொல்லுகிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன். 36 இவ்வேளையில் என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது. என் இராஜ்ஜியத்தின் மேன்மைக்காக என் மகிமையும் என் முகக்களையும் எனக்குத் திரும்பி வந்தது. என் பிரபுக்களும் என்னைத் தேடிவந்தார்கள். என் இராஜ்ஜியத்திலே நான் ஸ்திரப்படுத்தப்பட்டேன். அதிக மகத்துவமும் எனக்குக் கிடைத்தது. 37 ஆகையால் நெபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் இராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள். அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

நெபுகாத்நேச்சார் இறுதியாய் தேவனே ஒருவனை உயர்த்தவும் மற்றும் தாழ்த்தவும் செய்கிறவர் என்பதை உணர்ந்தான். மற்றும் தனது கண்களை பரலோகத்திற்கு ஏறெடுத்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாய் மாறினான். அவனது செயல்கள் விழுந்துபோன ஒரு அசுத்த ஆவி பிடித்த மனிதனைப் போல் அல்லாது, அமைதியுடன் கர்த்தரை தொழுது கொள்கிறவனாய் காணப்பட்டான். மாற்கு 5:2-6.

அவன் தற்போது முன்னிருந்த நிலைக்கு திரும்ப மாற்றப்பட்டு சரித்திரத்தினால் அங்கீகரிக்கப்பட்டவனானான் மற்றும் அவன் முன்னிருந்த நிலைக்கு திருப்பப்பட்ட அனுபவமானது நான்கு காரியங்களை புலப்படுத்துகிறதாய் இருக்கிறது.

[i] அவனது ஆரோக்கியம் முழுவதும் முன்னிருந்த்த நிலைக்குத் திரும்பியது மற்றும் அவனது வியாதி குணமாக்கப்பட்டது.

[ii] ஏழு ஆண்டுகள் அவனது இல்லாமையிலிருந்த அவனது இராஜ்ஜியம் திரும்ப அவனுக்குக் கிடைக்கப்பெற்றது, தானியேல் எல்லாக் காரியங்களையும் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம்.

[iii] இராஜா அழகிய மனிதனாய் இருந்தான் அவனது சரீரத்தோற்றம் முற்றிலும் முன்னிருந்த தோற்றத்தை அடைந்தது.

[iv] அவனது பிரபலம் அவனுக்கு திரும்ப கிடைத்தது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாக நெபுகாத்நேச்சார் தேவனிடமிருந்தும் மனிதரிடமிருந்தும் தயவைப் பெற்றுக்கொண்டான்.

கைக்கொள்ளுதல்:

நீங்கள் இரட்சிப்படைவதற்கு எதையாவது சாதிக்கவோ அல்லது எவ்வித தகுதியையும் பெற்றிருக்கவோ அவசியமில்லை, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாம் ஒருவராய் செய்து முடித்த காரியங்களைக் குறித்த உங்கள் மனநிலை எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதே அவசியமான ஒன்றாய் இருக்கிறது. நெபுகாத்நேச்சார் ஒருநாளில் தனது கண்களை ஏறெடுத்தான் அவனது மன அழுத்தத்தின்போது அவ்வாறு செய்தான், இது சிலுவையில் தொங்கிய கள்ளன் வாய்மொழியாய் கர்த்தரிடம் வேண்டிக்கொண்டதை போன்றிருக்கிறது. பிசாசுபிடித்த ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக தலைவணங்கியது போன்றிருக்கிறது, தலைசிறந்த புறஜாதிய மன்னன் தனது முழங்கால்களை தனது தேவனுக்கு முன் முடக்கியதை காட்டுகிறதாய் இருக்கிறது.

கர்த்தர் கிருபையின் அடிப்படையில் ஒரு விசுவாசியை உயர்த்துகிறவராய் இருக்கிறார். யோசுவா 3:7, 1 பேதுரு 5:5-6. .

நமது கண்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைப்பது என்பது கடினமான ஒன்றாய் இருக்கிறது, முதலாவதாக இரட்சிப்பிற்காய் ஏசாயா 45:22, தானியேல் 4:34, இரண்டாவதாக சேவை செய்யும் சமயத்தில், மற்றும் ஆராதிக்கும் சமயத்தில். ரோமர் 12:1-2, எபிரெயர் 12:1-2.

பெரிய மனிதர்களான நெபுகாத்நேச்சார், சாலமோன் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், கர்த்தரிடம் கடந்து வந்து, அவருடன் நடப்பதற்கு கற்றுக் கொள்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

DOCTRINE உபதேசம்

BLESSING ஆசீர்வாதம்

NOTES:

<u>தானியேல் அதிகாரம் 5.</u>

ஐந்தாம் அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேல் ஐந்தாம் அதிகாரம் ஆறு பிரிவுகளாய் பிரிக்கப்பட்டுள்ளது.

பெல்ஷாத்சாரின் விருந்து வசனங்கள் 1-4

சுவற்றில் எழுதுதல் வசனங்கள் 5-7

எழுதப்பட்டதை விவரிக்க ஞானிகளால் இயலாமல் போதல் வசனங்கள் 8-12

தானியேல் இராஜாவின் வெகுமானங்களை நிராகரித்தல் வசனங்கள் 13-24

சுவற்றில் எழுதப்பட்டவைகளை தானியேல் வியாக்கியானித்தல் வசனங்கள் 25-29.

பாபிலோனின் வீழ்ச்சி வசனங்கள் 30-31

முன்னுரை:

இந்த அதிகாரத்தின் காலத்தை மிகத்துல்லியமாய் வகையறுக்க இயலும், அது அக்டோபர் மாதம் 12ம் தேதி, கி மு 539ல் ஆகும். மேதிய பெரிசிய இராணுவம் பாபிலோனைச் சூழ்ந்து கொண்டது. அப்பட்டணமானது முற்றுகையிடப்பட்டிருந்தது. அரசனான நெபோனிடாஸ் வட தேசத்தில்

தனது இரானுவத்துடன் அரசாள, தனது மகன் பெல்ஷாத்சார் பாபிலோனில் தனது இரண்டாம் இராணுவத்துடன் அதைப் பாதுகாக்கவும், அரசாளவும் நியமித்து இருந்தனர். நெபோனிடாஸ் தனது இராணுவ தளபதியான கோப்ரையாஸை இழந்து போயிருந்தான், இவன் பெரிசியருக்கு குறைவை ஏற்படுத்தியிருந்தான், பாபிலோன் பட்டணத்து மக்கள் பெல்ஷாத்சாருக்கு ஆதரவளிக்காதவர்களாய் இருந்தனர். கோரேஸ் தாமே நெபோனிடாஸைப்பின்தொடர்ந்து அவனது இரண்டாம் இராணுவத்தை விட்டு விலகும்படி செய்து பாபிலோனை பிடிக்க வகை செய்தான். எல்லா வகையிலும் பாபிலோனியர்கள் பெரிசியர்களை எண்ணிக்கையில் வைக்காது அவர்களை வென்று விடலாம் என்ற உறுதியான ஸ்தானத்தில் இருந்தனர்.

ஜோஸிபஸ் நமக்குக் கூறுவது என்னவெனில், கோரேஸ் தனது ஆளுகையின் பதினேழாம் வருடத்தில், பெரிசியாவிலிருந்து தனது பெரிய இராணுவத்துடன் மற்ற இராஜ்ஜியங்களை தனது ஆளுகைக்குள்ளாக்கும்படி பாபிலோனை நோக்கி படையெடுத்து வந்தான். கோரேஸ் வருவதை அறிந்த நெபோனிடாஸ் தனது இராணுவத்துடன் வடதேசத்தில் அவனை சந்திக்கும்படி சென்றான், தனது குமாரனாகிய இரண்டாம் ஆளுநராக பாபிலோனில் விட்டுவிட்டு, அவனோடு தனது இரண்டாம் இராணுவத்தையும் தோற்றத்தில் "பாதுகாப்பான மதில்கள்" உள்ள பட்டணத்தில் விட்டு வைத்தான். அவன் தனது குமாரனை பாபிலோனில் விட்டுவிட்டான். அவன் பெயர் பெல்ஷாத்சார் என்பது ஆகும்.

இந்த அதிகாரத்தில் Nitocris [நிடோகிரிஸ்] என்னும் இராஜாத்தி குறிப்பிடப்படுகிறாள், இவள் பெல்ஷாத்சாரின் தாயார் ஆவாள். இவள் நெபோனிடாஸை மணந்திருந்தாள். இவன் நீண்ட காலத்திற்கு முன்னரே தனது திருமண வாழ்வை துறந்து, வடக்கில் உள்ள திம்னா என்னும் பாலைவனத்தில் தத்துவ சாஸ்திர வாழ்வை மேற்கொண்டவனாய் காணப்பட்டான்.

கல்தேயரின் ஆதிக்கத்தில் பாபிலோன் பாதுகாப்பு குறித்து மிகவும் அதிக அளவில் சுயநம்பிக்கை உடையவர்களாய் இருந்தனர், மற்றும் பட்டணத்தில் விருந்து செய்து மகிழ்ந்தனர். ஹெரோடைட்டஸ் நமக்கு கூறுவது என்னவெனில், பாபிலோனியர் தங்களை அடைத்துக் கொண்டு, கோரேஸின் முற்றிகை குறித்து வெளிச்சம் கொண்டாடுகிறவர்களாய் இருந்தனர். அவர்கள் தங்களது பண்டக சாலைக்குள் அநேக ஆண்டுகளுக்கான உணவு பதார்த்தங்களை சேகரித்து வைத்திருந்தனர். பாபிலோனைச் சுற்றிலும் மிகவும் பலமிக்க சுவர்கள் கட்டப்பட்டிருந்தது. அச்சுவற்றின் மீது இரண்டு குதிரை இரதங்கள் ஒரே சமயத்தில்

ஓடும்படியான அகலம் உடையதாய் இருந்தது. அப்பட்டணத்திற்குள் பாலம் அமைக்கப்பட்டு அப்பட்டணத்தைத் தனிமைபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட அமைப்பில் அவர்கள் நம்பிக்கை வைத்து, இப்படிப்பட்ட விருந்தை ஆயத்தபடுத்தி அவர்கள் கொண்டாடுகிறவர்களாய் இருந்தனர்.

எப்படியிருப்பினும் தேவன் கல்தேயரைக் குறித்து வேறொரு திட்டத்தை வைத்திருந்தார், அது அந்த இர வில் தானே சம்பவித்தது. தேவன் அவர்கள் சாம்ராஜ்ஜியத்திற்கு ஒரு முடிவை உண்டாக்கினார். இந்த ஜனங்கள் முரட்டாட்டம் பிடித்தவர்களும், அஜாக்கிரதையுள்ளவர்களுமாய் இருந்தனர், 2ம் உலக மகா யுத்தத்தின் போது பிரஞ்சு மக்கள் தங்கள் Maginot Line க்குள் இருந்தது போல இதுவும் இருந்தது. அவர்கள் இக்கால கட்டத்தில் சரித்திரத்தின் தவறான பகுதியில் இருந்த காரணத்தில் தங்களுக்கு எதிரான இராணுவ சக்தியை அசட்டை செய்கிறவர்களாய் காணப்பட்டனர்.

இந்த அதிகாரத்தில் நாம் பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியைக் காண்கிறோம், மற்றும் மிகச் சிறப்பான விசுவாசியான தானியேல் பாதுகாப்புடன் இருப்பதையும் காண்கிறோம்.

பகுதி 22 - பெல்ஷாத்சாரின் விருந்து   தானியேல் 5:1-4.

1 பெல்ஷாத்சார் என்னும் இராஜா தன் பிரபுக்களில் ஆயிரம் பேருக்கு ஒரு பெரிய விருந்து செய்து அந்த ஆயிரம் பேருக்கு முன்பாகத் திராட்ச்ரசம் குடித்தான். 2 பெல்ஷாத்சார் திராட்சைஇரசத்தை ருசித்துக்கொண்டிருக்கையில் அவன் தன் தகப்பனாகிய நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டு வந்த பொன் வெள்ளி பாத்திரங்களில் இராஜாவாகிய தானும் தன் பிரபுக்களும் தன் மனைவிகளும் தன் வைப்பாட்டிகளும் குடிக்கிறதற்காக அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். 3 அப்பொழுது எருசலேமிலுள்ள தேவனுடைய வீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களைக்கொண்டு வந்தார்கள். அவைகளில் இராஜாவும் அவனுடைய பிரபுக்களும் அவனுடைய மனைவிகளும், அவனுடைய வைப்பாட்டிகளும் குடித்தார்கள். 4 அவர்கள் திராட்சரசம் குடித்து பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

நெபோனிடாஸ் தனது மாமனாகிய நெபுகாத்நேச்சாருக்கு அடுத்தபடியாக கல்தேய சாம்ராஜ்ஜியத்திற்கு மிகப் பொருத்தமான ஆளுநராய் இருந்தான். இவன் ஆசாரிய வழி வந்தவனாய் சந்திர தேவனிடம் அதிக பயபக்தியுள்ளவனாய் இருந்தான், அவன் அத்தேசத்தின் முக்கிய கடவுளாகிய மர்துக் கின் மீது அவ்வளவு பக்தி காட்டவில்லை. இதினிமித்தம் பாபிலோனிய மர்துக்க ஆசாரியகள் இவனை அந்நியனாய் கண்டனர், மற்றும் ஆசாரியர்கள் தங்களது சொந்த அரசனிடமிருந்து விடுதலையை நாடினர்.

நெபோனிடாஸ் அவனது மாமனாராகிய நெபுகாத்நேச்சாருக்குப் பின் மிகவும் தலைசிறந்த ஆளுநராய் கல்தேய சாம்ராஜ்ஜியத்தில் விளங்கினான். இவன் ஆசாரிய வம்சத்தின்படி சந்திர தேவர்களிடத்தில் பயபக்தியுள்ளவனாகி, பாபிலோனியரின் முக்கிய கடவுளாகிய மர்துக்கிற்கு முக்கியம் அளிய்தாதவனாய் இருந்தான். இதினிமித்தம் மர்துக்கின் ஆசாரியர்களால் இவன் வேற்று மனிதனாய் கருதப்பட்டான், பாபிலோனில் உள்ள மர்துக் ஆசாரியர்கள் மாற்றப்பட்ட ஆராதனை முறையிலிருந்து தப்பி விடுதலை பெற தேடுகிறவர்களாய் காணப்பட்டனர். பெரிசிய மன்னனாகிய கோரேஸ் மூன்றாவது பாபிலோனிய இராணுவத்தை தோற்கடித்து சண்டையின்றி பாபிலோனை எடுத்துக்கொண்டதை இவர்கள் தங்களுக்கு கிடைத்த விடுதலையாய் நம்பினர். பெரிசிய மன்னனுக்கு பெல்ஷாத்சாருக்கு இருந்த ஆதரவை காட்டிலும் அதிகமான ஆதரவு கிடைத்தது, மதியீன மன்னனான பெல்ஷாத்சார் இதை உணராதிருந்தான்.

கல்தேய சாம்ராஜ்ஜியம் வீழ்ச்சி கண்ட அந்த இரவு விருந்துக்கு கடந்து செல்வோமாக. நெபுகாத்நேச்சாரின் பேரனாகிய பெல்ஷாத்சார், தனது இரண்டாம் குமாரத்தியாகிய நிட்டோகிரிஸ் மூலம் குடித்து வெறிகொள்ளும்படி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இவன் தனது தகப்பனாகிய நெபோனிடாஸுடன் கி மு 556 ல் இராஜாவாக அரியனையில் அமர்த்தப்பட்டான், இவன் அதிகாரம் பெற்று பின்னர், பாபிலோனை விட்டு மதசம்பந்தமான செயல்பாடுகளுக்காக அரேபியாவில் உள்ள டெர்னாம்/ திம்னா என்னும் பாலைவன சோலையில் அநேக ஆண்டுகளைக் கழித்தான், இக்காலகட்டத்தில் தனது குமாரனாகிய பெல்ஷாத்சாரை பாபிலோனில் துணை அரசனாய் நியமித்து தான் பாபிலோனின் ஆளுநராய் செயல்பட்டான்.

பல நூற்றாண்டுகளாய் பெல்ஷாத்சாரின் ஆளுகை குறித்து சரித்திர ஆசிரியர்களால் சந்தேகிக்கப்பட்டு வந்தது. பல புறஜாதிய சரித்திர ஆசிரியர்களால் வேதாகமத்தின் மதிப்பானது கணக்கில்

எடுத்துக்கொள்ளப்படாது இருந்தது. எப்படியிருப்பினும் பெல்ஷாத்சாரின் ஆளுகையானது வேதாகமத்தில் வலுப்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது. தானியேல் புத்தகம் குறித்த காலம் பற்றிய விவாதமானது இந்த அரசனின் காலமானது சரித்திர ஆதாரத்தை அளிக்கிறதாய் இருக்கிறது.

கி பி 1854ல் J E Taylor ஊர் என்னும் பகுதியில் செய்த புதைபொருள் ஆராய்ச்சியில், கியூனிபார்ம் கல்வெட்டுகளில் நெபோனிடாஸின் மூத்த குமாரரான பெல்ஷாத்சாரின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டுக்களில் எழுதப்பட்டிருந்தது நெபோனிடாஸ் தனக்காய் ஏறெடுக்கும் ஜெபம் மற்றும் மற்றும் தனது மூத்த குமாரனாகிய Bel-shar-usur. [Belshazzar – various spellings are acceptable]. க்கும் ஏறெடுத்த ஜெபமும் பொறிக்கப்பட்டு மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஜெபமானது ஆளுகை செய்யும் அரசர்களால் ஏறெடுக்கப்படுகிறதாய் இருக்கிறது. இன்னும் மற்ற கியூனிபார்ம் ஆதாரங்கள் பெல்ஷாத்சார் ஆடுகளையும் மற்றும் எருதுகளையும் சிப்பார் ஆலயத்தில் அரசனுக்கு காணிக்கையாக அற்பணித்தது குறித்து கூறுகிறது. மன்னர்களும் மற்றும் அவர்களுக்கு பதிலாய் ஆளுபவர்களும் சமமாய் கருதப்பட்டனர்; குமாரனும் அவனது தந்தையும் அரசாளுகையிலும் அதிகாரத்திலும் சமமாய் கருதப்பட்டனர்.

பெல்ஷாத்சார் குறித்து மதிப்புமிக்க சரித்திர ஆசிரியனாகிய Xenophon [born 430 BC],Herodotus [died 425 BC], Berosus and Abydenus என்பவர்களால் குறிப்பிடப்படாமல் இருந்தபோதிலும், அவன் ஒரு புராண கதாபாத்திரமாய் இருந்திருக்க வேண்டும் என யூகிக்கப்படுகிறது. இது ஜெர்மானிய அவிசுவாசிக்கும் இறையியல் வல்லுனர்களால் முழு வேதாகமும் புராணச் சரித்திரமே அது உண்மையை கூறுவதல்ல என்கின்றனர். எகிப்தின் அலெக்ஸாண்டிரியா பட்டணத்து டாலமி பகுப்பாய்வின் படி, பாபிலோனின் கடைசி அரசன் நெபோனிடாஸ் என்றும் அவன் 17 ஆண்டுகாலங்கள் ஆட்சி செய்தான் எனக்கூறுகிறது.

பெல்ஷாத்சார் தாமே பாபிலோனில் மன்னனுக்குப் பதில் அரசாண்டான், கிரேக்க சரித்திர ஆசியர் ஹெரோடைடஸ் ஜீவித்ததற்கு முன்னரே தானியேல் இப்புத்தகத்தின் எழுத்தாளர் வாழ்ந்து பெல்ஷாத்சார் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். பின்னாக எழுந்த சரித்திர ஆசிரியர்கள் பெல்ஷாத்சாரை மறந்திருக்க வேண்டும். **இது தானியேல் புத்தகம் காலம் குறித்து தெளிவுபடுத்தும் ஆதாரமாய் அமைந்து மறுபடியும் வேத எழுத்துக்களின் மெய்மைத் தன்மை ருசுப்படுத்துகிறதாய் இருக்கிறது.** மட்டுமின்றி அதோடுகூட பெல்ஷாத்சார் இரண்டாம் ஆளுநராக ஆட்சி செய்தபடியால், தானியேல் மூன்றாம் ஆளுநராக

இராஜ்ஜியத்தில் ஏற்படுத்தப்பட முனைவதை இந்த அதிகாரத்தில் நாம் காணலாம் [வசனம் 29 ஐக் காண்க]

பெல்ஷாத்சார் தப்பிக்கொள்ளும் உலகில் வாழ்ந்தான், சுய ஆடம்பரம் மிக்கவனாயும், தன்னிறைவடைந்தவனாயும், பாபிலோனின் பலத்த மதில்களுக்குப் பின் தன்னை வெல்லுவதற்கு எவராலும் இயலாது என எண்ணி அலட்சியமாய் இருந்துவிட்டான். அவன் தனது பிரபுக்களுடன் குடித்து வெறித்தான், இது 1939 - 1940 ல் பிரஞ்சு தளபதிகளின் செயலுக்கு ஒத்ததாய் இருந்தது, அவன் தனது இராணுவத்திற்கு கவனமாய் இருக்க கட்டளை கொடுக்க அலட்சியமாய் இருந்துவிட்டான். பிரஞ்சுக்காரரும் இதையே செய்தாலும் சில தொலை பேசி இணைப்புகள் தலைமையகத்துடன் செயல்படுவனவாய் இருந்தது. ஆனால் பெரும்பாலானோர் மதுபானம் அருந்தி வெறித்துக் கொண்டிருந்தனர்.

இவ்வாறு குடித்து வெறித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் எருசலேம் தேவாலயத்திலிருந்து நெபுகாத்நேச்சார் கொண்டு வந்திருந்த பொற்பாத்திரங்களில் குடித்து வெறிக்க அவைகளைக் கொண்டுவரக் கட்டளை கொடுத்தான். இத்தகைய செயல்பாடுகள் பாபிலோனிய ஆசாரியர்களை பதிய செய்யும்படி வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவன் தன்னை அவர்கள் வெறுக்கிறார்கள் என்பதை அவன் அறியாது இருந்த்தான். எவ்வகையான செயல்பாடும் அவர்கள் கோரேஸுக்கு உதவி செய்யும் திட்டத்தை மாற்றுவதாய் இல்லை. யூதர்கள் சிறைபிடிக்கப்பட்டு அடிமைகளாய் இருந்தமையால், அவர்களது தேவன் தனது கடவுளைவிட குறைவான வல்லமையுள்ளவராய் யூகித்துக் கொண்டான்.

இவனது தாத்தா நெபுகாத்நேச்சார் செய்த அதே தவறினை இவனும் செய்தான், அவன் அக்கினி சூளையில் போட ஏற்பாடு செய்ததன் மூலம் தேவனை குறைவாக எடைபோடுகிறவனாய் காணப்பட்டான், தீங்கிழைக்கும் அவரது குணாதிசயத்தினையும் மற்றும் அவர் ஈடுபடுகிற அவரது வல்லமையானது கல்தேய சாம்ராஜ்ஜியத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வருகிறதாய் இருந்தது. அவன் தனது தாத்தாவாகிய நெபுகாத்நேச்சார் மனந்திருந்திய அனுபவம், தன்னில்தானே இரட்சிப்படைந்த விதம் இவற்றிலிருந்து இவன்கற்றுக்கொள்ள தவறிவிட்டான். தேவனுக்கு பேரக்குழந்தைகள் இல்லை மற்றும் இந்த மனிதன் மெய்யாகவே பிசாசின் மகனாய் தனது குணாதிசயங்கள் மூலம் மெய்ப்பித்தான். மத்தேயு 7:13-23, யோவான் 8:42-44, 1 யோவான் 3:7-10.

பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தின் சூழ்நிலையானது உறுதியற்ற நிலையிலிருக்கும் எச்சரிப்பைப் பெற்றும் அவன் தேவனை பிரதிபலிக்கும் பாத்திரங்களை பயன்படுத்தி தனது புறஜாதிய தேவர்களின் ஆசீர்வாதத்தை நாடுகிறவனாய் காணப்பட்டான்.

தானியேல் பிரதான அதிகாரியாக ஞானிகளுக்கு இருந்தபோதிலும் பொது அறிவின்றி ஞானிகளை அழைத்து ஆலோசனை கேட்கிறவனாய் இருந்தான். அவனது முரட்டாட்டம் தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு எப்படியாவது அறிவுரை பெறவேண்டும் என அவனை வற்புறுத்த அவனுக்கு அவசியமான ஜெபதபங்களை நாடுகிறவனாய் காணப்பட்டான்.

பெல்ஷாத்சார் முரட்டாட்டமுள்ளவனும் பெருமையுள்ளவனுமாய் இருந்தான். பண்டைய சரித்திர குறிப்பு ஒன்று கூறும்பொழுது ஒரு முறை பெல்ஷாத்சார் வேட்டையாட சென்றபோது அவனது பிரபுகளில் ஒருவன் முதலாவதாக தன் எல்லையைக் கடந்தானாம். ஆத்திரமடைந்த மன்னன் தனது வாளை உருவி தனது பிரபுவை கொலை செய்தானாம். இதன் விளைவாக பிரபுக்கள் நடுவே வேட்டையாடுவதில் ஆர்வம் காட்டும் பிரபுக்கள் தொகையானது கனிசமாய் குறையத் தொடங்கி விட்டதாம். இம்மனிதன் தனது தாத்தாவின் தரிசனங்களை நம்பவில்லை, தனது இராஜ்ஜியமானது நிறைவை எய்தியுள்ளது குறித்து அந்த இரவில் காணத்தவறியவனாய் காணப்பட்டான், தனது தகப்பனைப்போன்று கர்த்தரின் இரக்கத்தை தேடுகிறவனாய் இல்லை. அவனது தகப்பன் கோரேஸ் மன்னனால் ஓய்வு பெற அனுப்பிவிடப்பட்டான், அவனது கொடிய மகனோ அன்று இரவிலே கொலை செய்யப்பட்டான்.

கைக்கொள்ளுதல்:

வேதாகமமானது ஒரு சரித்திரப் பாட புத்தகமாய் எழுதப்படவில்லை என்ற போதிலும், அதன் சரித்திர சம்பவங்கள் பதிவு செய்யப்பட்ட, முற்றிலும் துள்ளியமாய் பதிவு செய்யப்பட்ட ஒன்றாய் இருக்கிறது.

இப்புத்தகம் எழுதப்பட்ட காலம் பிரச்சனைக்குரிய முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்த போதிலும், தீர்க்கதரிசன வகையில் இப்புத்தகத்தில் இரண்டாம் பாதிப்பகுதியில் மிகத்துள்ளியமாய் நிறைவேறியுள்ளதையும், விஷேசமாய் பதினொன்றாம் அதிகாரத்தில் தேவனின் சர்வ ஞானம் குறித்து முற்றிலும் திருப்திகரமான ஆதாரம் இருப்பதையும், வேதபுத்தகமானது பரிசுத்த ஆவியானவரால் ஏவி எழுதப்பட்டது எனவும் ரூபிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

தப்பிக்கொள்வது வாழ்வில் எவ்வித தீர்வையும் கொண்டு வராது. ஒவ்வொரு பிரச்சனையையும் வாழ்வில் சந்தித்தே ஆகவேண்டும், மற்றும் அதற்கான தீர்வை கண்டேயாக வேண்டும். மனித இன்ப நுகர்தல் ஒருபோதும் தேவனோடு ஐக்கியம் கொள்வதில் திருப்தியை கொண்டு வருவதற்கு துணையாய் அமையாது.

வேதாகமத்தில் தேவன் கிறிஸ்துவின் தெய்வீகத்தை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. நீங்கள் தேவனது குணாதிசயத்தை தூஷித்து அதற்கு விலகியிருக்க முயலுவது அசாத்தியமான ஒன்றாய் இருக்கிறது.

DOCTRINE உபதேசம்:

BELSHAZZER - DECADENCE

பகுதி 22 - சுவற்றில் எழுதப்படுதல் தானியேல் 5:5-7.

5 அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக
இராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரில் எழுதிற்று. எழுதின
அந்தக் கையுறுப்பை இராஜா கண்டான். 6 அப்பொழுது இராஜாவின்
முகம் வேறுபட்டது, அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது.
அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது. 7
இராஜா உரத்த சத்தமிட்டு ஜோசியரையும், கல்தேயரையும்,
குறிசொல்லுகிறவர்களையும் உள்ளே அழைத்துவரும்படி
சொன்னான். இராஜா பாபிலோன் ஞானிகளை நோக்கி: இந்த
எழுத்தை வாசித்து அதின் அர்த்தத்தை எனக்கு வெளிப்படுத்துகிறன்
எவனோ, அவன் இராத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப்பணியும்
தரிப்ப்க்கப்பட்டு, இராஜ்ஜியத்திலே மூன்றாம் அதிபதியாய்
இருப்பான் என்று சொன்னான்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

புறஜாதிய அமைப்பும் மற்றும் தூஷணப்படுத்துதலும் இப்பொழுது உன்னத நிலையில் வளர்ந்திருந்தது. தேவாலயத்தின் பொற்பாத்திரங்களில் குடிப்பதன் மூலம் பாபிலோனிய, புறஜாதிய தேவர்களை ஜீவனுள்ள தேவனுக்கு மேலாக உயர்த்துவதாய் இருந்தது. அவர்கள் மிகத்தீவிரமாய் பரிசுத்தமானவற்றை மதியீனமான காரியங்களுக்கு பயன்படுத்த துணிந்தனர். அவர்கள் எதை நடப்பிக்கிறார்களோ அதற்கான கிரயத்தைச் செலுத்தியாக வேண்டும் என அறிந்திருந்தனர்.

பெல்ஷாத்சார் தானியேல் மற்றும் அவனது யூத நண்பர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகாலங்கள் தனது இராஜ்ஜியத்தில் எவ்வாறு சேவித்து

வந்தனர் என்பதை நினைவு கூர்ந்திருக்க வேண்டும் மற்றும் தனது தாத்தாவை எவ்வாறு zoanthropy, என்கிற வியாதியிலிருந்து எப்படி தேவன் குணமாக்கினார் என்பதையும் அறிந்திருக்க வேண்டும் மற்றும் அக்கினி சூளையிலிருந்து எவ்வாறு தேவன் மூன்று வால்பரையும் விடுவித்தார் என்பதையும் அறிந்திருக்க வேண்டும் அவன் தேவனது சர்வ வல்லமையை வித்தியாசமான வழிகளில் அறிந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட சம்பவங்கள் எழுதி பதிவேற்றப்பட்டிருந்தும், அவன் அதை படித்தவனாய் இல்லை, அவன் குடித்து வெறித்தவனாய் காணப்பட்டான்.

புதைபொருள் ஆராய்ச்சியாளர் விருந்து சாலையானது 60 மீட்டர் நீளமும் 20 மீட்டர் அகலமுமாய் இருந்தது எனக் கண்டறிந்துள்ளனர். அது தொங்கும் தோட்டத்திற்கு அருகாமையில் அமையப்பெற்றதாய் இருந்தது. அந்த விருந்து சாலையின் முக்கிய நுழைவாயிலை கண்டுபிடித்துள்ளனர் அது உயர்த்தப்பட்ட பகுதியில் அமையப்பெற்றிருந்தது. அதன் பின்புறத்தில் அமையப்பெற்ற சுவரானது தோண்டி எடுக்கும் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வசனம் 5ல் கையுறுப்பு காணப்பட்டது எனக் காண்கிறோம். அரமேயு பாஷையிலே காணப்பட்டது கரத்தின் உள்ளங்கை எனப்பார்க்கிறோம், உள்ளங்கையை உங்களை நோக்கி சுட்டிக்காட்டும் போது மட்டுமே காணக்கூடியதாய் இருக்கும். இந்தகையுறுப்பானது சாந்து பூசப்பட்ட சுவற்றில் எழுதத் தொடங்கியது. விசுவாசதுரோகத்தை குறித்து எச்சரிக்கும் இவ்வகையான முறையானது மற்றும் ஒழுக்கங்கெட்ட சாம்ராஜ்ஜியத்தின் அழிவானது பொருத்தமான ஒன்றாய் இருந்தது. பண்டைய உலகில் இராஜாவின் மகத்துவங்கள் சுவற்றில் எழுதுவது வழக்கமாய் இருந்து வந்தது. அநேக உதாரணங்களை புதை பொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்.

பெல்ஷாத்சாரின் சுவரில் அவனது சாதித்த சாட்சிகளும் மெய்யானவைகளும் யூகிக்கக் கூடியவைகளும் எழுதி அலங்கரிக்கப்பட்டிருந்தபோதும், அவனது கல்லறை வாசகம் போன்றவற்றை தேவனது கையுறுப்பானது விளக்குகளுக்கு எதிரே இருந்த சுவற்றில் எழுதிற்று.

வசனம் 6ல் பெல்ஷாத்சாரின் இதற்கான பிரதிக்கிரியைகளைக் காண்கிறோம். அப்பொழுது இராஜாவின் முகம் வேறுபட்டது, அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது. அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது. விருந்த மேஜையில் விருந்து பரிமாறுத்ல் நடந்து கொண்டே இருந்தது தானியேல் முழங்கால் முழங்கால்கள் மோதிக்கொண்டிருந்ததை பின்னர்தான் கவனிக்க

இயன்றது. பெல்ஷாத்சாரும் அவனது பிரபுக்களும் விரைவாக குடிபோதை தெளிந்து, அவர்கள் மறுபடியும் குடிக்கவும் வெறிக்கவும் துவங்கு முன்னர் அவர்கள் மரிக்க நேர்ந்தது, பெரிசியர்கள் அந்த இரவிலே அங்கு நுழைந்தனர்.

பெல்ஷாத்சார் இராஜா பெரிதளவில் எச்சரிக்கப்பட்டான். அவன் ஓடிவிட எத்தனித்தும், தப்பிக்கொள்ள இயலாது போயிற்று. இது ஒவ்வொரு மனிதனுக்கும் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பை சந்திப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. வெளி 20:10-15.

தேவனது நியாயத்தீர்ப்பானது பெரிதளவில் கலக்கத்தை கொண்டுவருகிறதாய் இருக்கிறது, அது அவிசுவாசிக்கு பயங்கரமான ஒன்றாய் இருக்கிறது, அது தங்கள் இருதயத்தை மாற்றிக்கொள்ள இயலாததாய் இருக்கிறது. பிசாசுகளைப் போன்று பயந்து நடுங்கினாலும், எவ்வித மாற்றத்தையும் காணாதிருக்கிறார்கள் யாக்கோபு 2:19. இது மிகவும் வல்லமை மிக்க காரியமாய் இருந்து, எல்லா மனிதரும் சந்திக்கக்கூடியதாய் இருக்கிறது. இருப்பினும் இரட்சிக்கப்படாதோர் எப்பொழுதும் அப்படியே இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.. cf 1 யோவான் 4:17-18. கர்த்தராகிய இயேசுவுக்கு முன்னதாக ஒரு வராலும் நிற்க இயலாது, தன்னைத் தானே மெச்சிக்கொண்டு சத்தியத்தைப் புறக்கணித்த ஒவ்வொரு அவிசுவாசியும் நித்திய நியாயத்தீர்ப்புக்கு உள்ளாவார்கள்.

பெல்ஷாத்சார் பயப்பட்டான் காரணம் அவன் தேவனை புறக்கணித்திருந்தான். அவன் சுயமாய் தன்னாளுகை செய்யும் மனிதனாய் இருந்தான். தன் அதிகாரத்தினாலும், ஆணவத்தாலும் பிறரைக் காண்கிறவனாய் இருந்தான், ஆனால் அவன் தேவனுக்கு முன்னிலையில் ஒன்று மில்லாதவனாய் இருந்தான். அவன் சொன்னான் இவ்வுலகமானது எவ்வழியில் எவ்வாறு சுழன்று கொண்டிருக்கப்போகிறது என்றான். சாம்ராஜ்ஜியமானது ஓடிக்கொண்டிருக்கும் மூலப்பிரமாணமே தனது பிரமாணத்தினால் தேவனது பிரமாணத்தினால் அல்ல என்று எண்ணினான். இந்த வகையான நபர் எப்பொழுதும் இப்படிப்பட்ட பிரச்சனைகளை சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

அவனது பிரபுக்கள் தொடர்ச்சியான பயங்கொண்டவர்களாய் இருந்தனர், எவ்வித கருத்துமின்றி காணப்பட்டனர், காரணம் அவர்களும் கூட பாலியல் சிற்றின்பத்திற்காய் வாழ்ந்து வந்தனர் மற்றும் மதுபானத்தைப் போன்று தப்பிக்கொள்ளும் மனப்பாங்குடையவர்களாய் இருந்தனர். இதில் விதிவிலக்கு அரசி நிடோகிரிஸ் விருந்து சாலையில் நடந்த

அமளியை கேட்டவுடனே அவள் அங்கு நுழைந்தாள். வேதாகமத்தில் பெரிய பெண்களை நீங்கள் காணும்போது, மனுஷர் விழுந்து போனவர்களாய் இருந்தனர். பெல்ஷாத்சார் நெபுகாத்நேச்சார் இராஜ்ஜியமானது தேவனால் பயன்படுத்தப்பட்டு இஸ்ரவேலை எவ்வாறு சிட்சித்தது என்பதை அவன் கற்றுக்கொண்டிருக்க வேண்டும். அது குறுகிய கால கட்டத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும்.. எப்படியிருப்பினும் பெல்ஷாத்சார் யூத ஜனங்களை ஒடுக்கினான் மற்றும் சாத்தானின் மறு ரூபமாய் செயல்பட்டான். தானியேல் இக்கால கட்டத்தில் மூத்த ஆளுநராய் இல்லாதிருந்தான் அவன் பெல்ஷாத்சாரின் மனநிலையினால் மற்றும் யூத ஜனங்கள் சிறையிருப்பில் இருந்தமையால் அப்படியாயிற்று,

அவர்களும் நலிவடைந்தவர்களாய் இருந்தனர், மற்றும் சிட்சையினால் முதிர்ச்சியுற்று இருந்தனர். அவர்கள் சுயமாய் நலிவுற்றவர்களாய் அழிந்து கொண்டிருந்தனர். "வேசித்தனமும் திராட்சை இரசம் புது இரசமும் அவர்கள் இருதயத்தை மலுங்கச் செய்து கொண்டிருந்தது" ஓசியா 4:11 நீதிமொழிகள் 16:18 -- அழிவுக்கு முன் அகந்தை வுருகிறதாய் இருக்கிறது.

வசனம் 7ல் சரித்திரமானது முன்நிலைக்கு திரும்புவதைக் காண்கிறோம், கலங்கிப்போன அரசன் ஞானிகளை அழைக்கிறதைப் பார்க்கிறோம், சபையின் ஆலோசகர்கள் சுவற்றில் கையுறுப்பு எழுதியதின் அர்த்தத்தை சொல்ல கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அரசனது தாத்தாவிற்கு வியாக்கியானிக்க அவர்கள் தவறினவர்களாய் இருந்தனர். இம்முறையும் அவர்கள் வியாக்கியானிக்க தவறுகிறவர்களாய் இருந்தனர். ஆனால் தேவனது பராமரிப்பின்படி இராஜாத்தியின் தாயார் அவனுக்கு சரியான புத்திமதியை அளிக்கிறவளாய் இருந்தாள். புத்திமதிக்காய் அவளை விருந்துக்கு முன்னதாய் அழைத்திருக்க வேண்டும் இதினிமித்தம் அவன் பாதுகாப்பிற்கு வழிநடத்தப்பட, இருப்பினும் அரசனும் தேசமும் மிகவும் கறைபட்டதாய் இருந்தது மற்றும் அந்த நாளில்தானே அவர்கள் முடிவுக்கு கடந்து வருகிறவர்களானார்கள்.

சுவரில் எழுதப்பட்டதை வியாக்கியானிப்போருக்கு பெல்ஷாத்சார் பெரிய அளவில் வெகுமதிகளையும் கனத்தையும் அளிக்கிறவனாய் இருந்தான். அவிசுவாசிகளாய் இருப்போருக்கு ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து புரிந்து கொள்வது இயலாத காரியம். [1 கொரி. 2:14] பரிசுகள் இங்கு பொருந்தாதவைகள் காணப்படுகின்றன மற்றும் இம்மனிதன் எவ்வாறு ஆவிக்குரிய நிலையில் சீர்குலைந்து காணப்பட்டான் என்பதை இது விவரிக்கிறதாய் இருக்கிறது. அவன் குற்றமற்றவனாய் நிற்கிறதைக் காண்கிறோம், அவனது தாத்தாவின் சாட்சியானது அவனுக்கு முன்னாக இருந்தும் அவன்அதை உணராதவனாய் காணப்பட்டான். அறுபது வயது நிரம்பிய இராஜாத்தி

தானியேலை குறித்து அவனுக்கு நினைவுபடுத்தி அந்த நாளில் காப்பாற்றுகிறவளாய் விளங்கினாள்.

கைக்கொள்ளுதல்:

பயத்திற்கு எதிர்மறை தைரியம் என்பதல்ல, பெரிதளவிலான அன்பு ஆகும். பயத்திற்கு மாற்றுமருந்தாய் விளங்குவது அன்பாகும். பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளுகிறதாய் இருக்கிறது. 1 யோவான் 4:17 - 5:12. பயமானது எனக்கு என்ன சம்பவிக்கப்போகிறது எனக் கேட்கிறதாய் இருக்கிறது, அன்பானது பிறர் ஒருவரைக் குறித்து அக்கறை உள்ளதாய் இருக்கிறது. உதாரணமாய் ஒரு குழந்தை மிகவும் அபாயகரமான வேளையில் அதன் தாய் வெளிப்புறம் பார்த்துக் கொள்கிறவராய் இருக்கிறாள். பிறரிடத்தில் காட்டும் அன்பானது பயத்தை மறக்கச் செய்து சரியானவற்றை செய்யத்தூண்டுகிறதாய் இருக்கிறது.

தேவன் நியாயத்தீர்ப்பை நிறைவேற்றாது இருக்கிறார் காரணம் அவர் கிருபைபொருந்தியவராய் இருப்பதால். உடனடி விடுதலைக்காக யூதர்கள் ஏறெடுக்கும் ஜெபத்திற்கு அவர் உடனடி பதில் அளிக்க வில்லை. 70 ஆண்டுகால சிறையிருப்பு நிறைவேற அவர் மெதுவாக செயல்படுகிறவராய் இருந்தார், இவ்வாறு அவர் சமயத்தை அதிகரித்து எல்லா மக்களும் மனந்திரும்பும்படி செய்கிறவராய் இருந்தார். தேவன் சரியான சமயத்தில் நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார்.

இஸ்ரவேலின் தேவன் இவ்வுலகின் சிருஷ்டிக் கர்த்தராய் இருக்கிறார். தேவன் நம் மூலம் கிரியை செய்கிறவராய் இருக்கிறார். ஒருவருக்கு சுவிஷேசத்தைக் குறித்து விளக்கம் அவசியமானால் அந்நபருக்கு சுவிஷேச விளக்கமளிக்கிறவராய் இருக்கிறார். நீங்கள் சேவையிலிருந்து வழிவிலகி செல்வீர்களானால், தேவனது திட்டம் வழிவிலகிற்று என அர்த்தமாகாது. அவரது திட்டம் நம்மைவிட பெரியதாய் இருக்கிறது, ஜெபத்துடன் கூடிய கீழ்ப்படிதல் திரும்ப செல்லும் வழியாய் அமைந்து மறுபடியும் பயன்படச் செய்கிறதாய் இருக்கிறது.

ஐக்கியத்திலிருந்து வெளியே இருக்கும் ஒவ்வொரு விசுவாசிக்கும் இது மெய்யாய் இருக்கிறது அல்லது தேவனுக்கு கீழ்ப்படியாத அவிசுவாசியாய் இருக்கிறாய் உங்கள் மனசாட்சியானது அழிக்கப்படாது இருக்கிறது. மெய்மை என்பது அடியுணர்வில் [subconscious] இருக்கத்தான் செய்கிறது அது செயல்படுவதற்கு தூண்டுதல் அவசியமாய் இருக்கிறது. மனசாட்சி என்பது நமது மனதின் மிகச் சிரிய ஒன்றாய் இருக்கிறது, அடியுணர்வே அதன் அதிக பட்சமாய் இருக்கிறது.

சில பெரிய அசம்பாவிதங்கள் நிகழும்போது, அது தேவன் இருக்கிறார் என்ற மன உணர்வை அளிக்கிறதாய் இருக்கிறது. நாம் நமது சூழ்நிலை குறித்து எச்சரிப்புடன் இருத்தல் வேண்டும், பின்னர் கர்த்தரை நோக்கிப் பார்த்தல் வேண்டும். நீங்கள் சரீரப்பிரகாரமாய் பாதிக்கப்பட்டிருந்தால், இது உங்கள் மனோரீதியான பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கிறது.

சரீரத்தின் எல்லா அவயவங்களும் மனோநிலையினால் பாதிப்படையக் கூடியதாய் இருக்கிறது. நாம் நினைக்கிறபடியே நாம் இருக்கிறவர்க்ளாய் இருக்கிறோம். நீதிமொழிகள் 23:7. நீங்கள் வாழவேண்டும் என்கிற சித்தத்தை உடையவர்களாய் இருக்கலாம் மற்றும் நீங்கள் வாழவேண்டும் என்ற நிகழ்விற்காய் சாதாரணமாய் பிற மக்களை கொலை செய்து மனதில் சத்தியத்தை/வல்லமையை நிர்ணயிக்காது இருக்கிறோம்.

கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் இறுதி நிலை குறித்து தேவன் நாடக முறையில் அறிவுறுத்தினார், அதை அவர்கள் பேசும் மொழியில் கூறினார், "எழுதப்பட்டது சுவரில் பதிந்திருந்தது" அது அவர்களின் இறுதி நிலையைக் குறித்துச் சுட்டிக்காட்டுவதாயும், அது நிச்சயம் நிறைவேறும் எனவும் கூறுகிறதாய் இருந்தது.

பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை தேவன்து வல்லமையிலிருந்து கடந்து வருகிறதாய் இருக்கிறது, ஒருபோதும் மனிதனின் ஸ்தானம், வல்லமை அல்லது அவன் செய்து முடித்தவைகளில் இருந்து வருவதில்லை.

DOCTRINE உபதேசம்:

APOSTASY விசுவாசத்துரோகம்.

பகுதி 23 - கையுறுப்பு எழுதியதை ஞானிகள் வியாக்கியானிக்கத் தவறுதல் தானியேல் 5:8-12.

8. அப்பொழுது இராஜாவின் ஞானிகளெல்லாரும் வந்து சேர்ந்தார்கள். ஆனாலும் அவர்கள் அந்த எழுத்தை வாசிக்கவும், அதின் அர்த்தத்தை இராஜாவுக்குத் தெரிவிக்கவும் கூடாதிருந்தது. 9 அப்பொழுது

இராஜாவாகிய பெல்ஷாத்சார் மிகவும் கலங்கினான். அவனுடைய முகம் வேறுபட்டது. அவனுடைய பிரபுக்கள் திகைத்தார்கள். 10 இராஜாவும் அவனுடைய பிரபுக்களும் சொன்னவைகளை இராஜாத்தி கேள்விபட்டு விருந்து சாலைக்குள் பிரவேசித்தாள். அப்பொழுது இராஜாத்தி: இராஜாவே நீர் என்றும் வாழ்க, உமது நினைவுகள் உம்மைக் கலங்கப்பண்ணவேண்டியதில்லை. 11 உம்முடைய இராஜ்ஜியத்திலே ஒரு புருஷன் இருக்கிறான். அவனுக்குள் பரிசுத்த தேவர்களுடைய ஆவி இருக்கிறது. உம்முடைய பிதாவின் நாட்களில் வெளிச்சமும் விவேகமும் தேவர்களின் ஞானத்துக்கு ஒத்த ஞானமும் அவனிடத்தில் காணப்பட்டது. ஆகையால் உம்முடைய பிதாவாகிய நெபுகாத்நேச்சார் என்னும் இராஜாவானவர் அவனைச் சாஸ்திரிகளுக்கும் ஜோசியருக்கும் கல்தேயருக்கும் அதிபதியாக வைத்தார். 12 இராஜாவினால் பெல்தெஷாத்சாரென்னும் பெயரிடப்பட்ட அந்தத் தானியேலுக்குள் சொப்பனங்களை வியர்த்திபண்ணுகிறதும், கருகலானவைகளைத் தெளிவிக்கிறதுமான அறிவும் புத்தியும் விசேஷித்த ஆவியும் உண்டென்று காணப்பட்டது. இப்போதும் தானியேல் அழைக்கப்படட்டும், அவன் அர்த்தத்தை வெளிப்படுத்துவான் என்றாள்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

இராஜாத்தியாகிய தாயார், நிடோகிரிஸ், தேவனுடைய கண்ணோட்டத்தை அந்த பிரச்சனை மிகுந்த சமயத்தில் சொல்ல நேர்ந்தது. வேதாகமத்தில் எஸ்தர், தொபோராள், அபிகாயில், பிலாத்துவின் மனைவி போன்றோர் நல்ல புத்திமதிகளை வழங்கினர். பண்டை கால உலகில் ஆண்கள் செயல்பட இயலா காலத்தில், தேவன் பெண்களை எழுப்பி ஆண்கள் மீது ஒழுக்க ரீதியான அதிகாரம் செலுத்தும்படி செய்தார். மகத்துவம் வாய்ந்த பெண்கள் எப்பொழுதும் உபதேசத்தை உடையவர்களாய் இருந்தனர், அப்படிப்பட்டவர்கள் இன்னும் எழுப்பப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

இன்னொரு பக்கம் பெண்கள் உதவ மறுப்பவர்களாய் இருக்கின்றனர். உதாரணமாக ஏவாள் ஆதாமுக்கு விலக்கப்பட்ட கனியைக் கொடுத்தாள், யோபுவின் மனைவி தேவனை தூஷித்து ஜீவனை விட போதனை கொடுக்கிறவளாய் இருந்தாள். பெண்கள் குடும்பத்திலும், திருமணவாழ்விலும் பெரும் பங்கை வகிக்கிறவர்களாய் இருக்கின்றனர். நன்மையோ தீமையோ புருஷர் குடும்பத்தில் பெரும்பங்கை வகித்த

போதிலும், பெண்களது தாக்கமானது அதிக வஞ்சகத்திற்குரியதும் அதிக வல்லமையுடையதாகவும் இருக்கிறது.

நிடோகிரிஸ் இராஜாத்தியாகிய தாயார் ஞானமுள்ள பெண்ணாக மட்டுமின்றி நகைச்சுவையுள்ளவளாயும் காணப்பட்டாள். நிடோகிரிஸ் அவளது வாழ்வின் இறுதியில் பாபிலோனின் எதிர்கால தலைவர்களுக்கு நகைச்சுவை ஒன்றை நிகழ்த்திவிட்டு சென்றாளாம். ஹெரோடொடஸ் கூறும்போது அவள் குறிப்பிடத்தக்க ஏமாற்று காரியத்தை திட்டமிட்டு சென்றாள் எனக்கூறுகிறான். அவள் சமாதியானது முக்கியமான வாசலின் மீது, ஒவ்வொருவரின் தலைக்கு மேல் கட்டப்பட்டு அவளது சமாதிக்கு கீழ் ஒவ்வொருவரும் நடக்குமாறு அமைக்கப்பட்டதாம்.

அவளது கல்லறையில் இவ்வாறு எழுதப்பட்டு இருந்ததாம். "பாபிலோனின் சிங்காசனத்தில் எனது பின்னடியார்களில் உங்களில் ஒருவருக்கு பொக்கிஷம் அவசியப்பட்டால், என் கல்லறையைத் திறந்து வேண்டியமட்டும் எடுத்துக் கொள்ளலாம், மெய்யான தேவையோடு இருப்பவர்களுக்கு மட்டுமே அது நன்மை பயப்பதாய் இருக்கும் இல்லையேல் அது நன்மை பயக்காது." பின் வந்த ஆளுநர் ஒருவன் அக்கல்லறையை திறக்க தீர்மானித்து கல்லறையை திறந்து பார்த்தபோது, அவன் அதில் அவளது சரீரத்தைத் தவிர ஒன்றையும் காணவில்லை அதில் ஒரு குறிப்பு இவ்வாறு கூறப்பட்டிருந்ததாம், "நீ பொக்கிஷம் மீது எந்த அளவுக்கு இச்சையுள்ளவனாய் இருந்திருக்கிறாய் மற்றும் நீ எந்த அளவுக்கு அஜாக்கிரதையாய் இருக்கிறாய், மரித்தவர்களின் கல்லறையை நீ திறந்து பார்க்காது இருந்திருக்க வேண்டும்." என எழுதியிருந்ததாம்.

ரோம மற்றும் கிரேக்க குறிசொல்லுகிறவர்கள் இது போன்ற விருந்துகள் மிகவும் தரங்கெட்ட நிலையில் இருக்கும் என தெளிவுபடுத்துகின்றனர், பெண்கள் மட்டும் வாசம் செய்யும் இராஜாவின் அந்தப்புரத்தில் இது நிழும் என்கின்றனர். இங்கு பொழுதுபோக்கும் விபச்சாரமும் நிகழும் என்கின்றனர். இது தரங்கெட்ட இழிவான விருந்தாய் இருக்கும் மதுபானம் அருந்துவதும் விபச்சாரத்தில் ஈடுபடுவதும், புறஜதிய விழாக் கொண்டாட்டத்தில் மிருகங்களுடன் கொண்டாடுதலும் நிகழும்.

நிடோகிரிஸ் திடீரென விநோதமான சத்தத்தை விருந்து சாலையிலிருந்து கேட்டாள். மற்றும் ஜனங்கள் பயத்தினால் கூக்குரலிட்டதையும் கேட்டாள். என்ன நடக்கிறது எனக் காண அங்கு சென்றாள். இந்த விருந்தில் அவள் உட்படவில்லை, காரணம் இவ்விருந்தானது மிகவும் தரங்கெட்டதாய் இருந்தது, அவள் ஒரு விசுவாசியாய் இருந்திருக்க வேண்டும். இராஜாத்தி தனது அறையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தாள், அங்கு அவள் கேட்ட அமளியானது அவளை விருந்து சாலைக்கு வழிநடத்துகிறதாய் இருந்தது.

அந்த குழப்பத்தில் அவள் பொறுப்பெடுத்தாள், பெல்ஷாத்சாருக்கு வலுவான உடனடி அறிவுரையைக் கூறினாள்
இதற்கு முன் தானியேல் அழைக்கப்பட்டு இது போன்ற நிகழ்வில் அழைக்கப்பட்டு வியாக்கியானித்ததை அவள் நினைகூர்ந்தாள். அவள் கூறும்பொழுது "பரிசுத்த தேவர்களின் ஆவி" அவனுக்குள் இருப்பதாக கூறினாள். "Ruach Elohin" - பரிசுத்த ஆவியானவர். அவள் தானியேலை பாபிலோனிய பெயரால் பெல்தெஷாத்சார் என அழைத்தாள்.

இங்கு பாபிலோனிய மனிதர்கள் விருந்து கொண்டாடி இஸ்ரவேல் தேவனின் தேவாலய பாத்திரங்களைக் கொண்டுந்து அவைகளை பரிசுத்த குலைச்சலாக்கினர். பரிசுத்த குலைச்சலாக்குவது மிகவும் கொடிய பாவமாய் இருக்கிறது. 1 சாமுவேல் புத்தகத்தில் உடன்படிக்கைப் பெட்டியை தாகோனின் ஆலயத்தில் பரிசுத்த குலைச்சலாக்கினதைக் காண்கிறோம். ஒவ்வொரு முறையும் உடன்படிக்கைப் பெட்டியை தாகோனின் ஆலயத்தில் வைக்கும் போதெல்லாம் தாகோனின் சிலையான்து அதற்கு முன் முகங்குப்புற விழுந்து கிடப்பதைக் கண்டனர். 1 சாமுவேல் 5:1-6:21.

நிடேகிரிஸ் இந்த சூழலுக்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டாள், அவள் வேதாகம உபதேசங்களை தானியேல் மூலம் அநேக ஆண்டுகளுக்கு முன் அறிந்தவளாய் இருந்தாள். அந்த குழப்பமான சூழ்நிலையில் அவள் நிலை தடுமாறாது காணப்பட்டாள். அவளது குமாரன் ஒழுகற்ற சீர்கேடான விருந்தில் ஈடுபட்டிருந்தான், ஆனால் அவளோ சத்தியத்தை அவளால் இயன்ற மட்டும் பேசினாள். தனது குமாரனுக்கும் தனக்கும் இடையே நடந்த சம்பாஷனைக்குப் பின் அவர்கள் உபயோகித்த அனைத்தும் பொக்கிஷ சாலைக்கு திரும்ப அனுப்பப்பட்ட்து, அவைகள் கோரேஸ் அரசனால் சிறையிருப்பிலிருந்து திரும்பின யூதர்கள் வசம் திரும்ப கையளிக்கப்பட்டது. எஸ்றா 1:7-11.

கைக்கொள்ளுதல்:

ஒரு அவிசுவாசியின் கண்ணோட்டத்தில் தனது சக மனிதர் ஒருவனை தேவைக்காக அழைத்தால், விசுவாசியானவன் அவனது பிரச்சனைக்குரிய தீர்வு கர்த்தரிடம் இருக்கிறது என்பதை நி்னைவில் கொள்ளுதல் வேண்டும். "பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே நலம்." சங்கீதம் 118:8-9.

ஒரு தேசம் அல்லது சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சியானது எப்பொழுதும் தலைமைத்துவம் தீர்மானிக்கும் மனோ நிலையைப் பொறுத்ததாய் இருக்கிறது. பிரச்சனைக்கு தீர்வு காண்பது தேவனது வார்த்தையின்

துள்ளியத்திற்கும் மற்றும் அதன் நிலையானத் தன்மையைக் கண்டுபிடித்து அதற்கு திரும்புவதாய் இருக்கிறது.

ஒரு கிறிஸ்தவனின் கடினமான சூழலில், அவிசுவாசியால் எல்லாவகையிலும் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் அந்நபருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்படுகிறவனாய் இருக்கிறான். நாம் எப்பொழுதும் ஆயத்தமாய் இருத்தல் வேண்டும். உபதேசங்களை அளிப்பதற்கும், ஆவிக்குரிய கீழ்ப்படிதலோடும் ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

ஒரு விசுவாசியிடமிருந்து பெறும் புத்திமதியானது, தற்போதைய ஞானத்தை பயன்படுத்தி பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் வேண்டும்.

ஜனங்கள் விசுவாசிகளை கவனிக்கும் போது, அவர்களோடு நெருங்கிய ஐக்கியம் இல்லாதிருக்கும்போது, அவர்களை அவர்களது முந்தைய நிகழ்வுகளின் அடிப்படையில் பரிந்துரை செய்தல் வேண்டும்.

ஒரு விசுவாசி எப்பொழுதும் சமநிலையுடன் காணப்படுதல் வேண்டும், தேவனுடைய பூரணமான சமயம் அறியாது தங்களை ஒரு சூழலுக்குள் நுழைத்துக்கொள்ளுதல் கூடாது.

DOCTRINES உபதேசங்கள்:

WOMEN பெண்கள்

CHRISTIAN LIFE கிறிஸ்தவ வாழ்க்கை

பகுதி 24 - தானியேல் இராஜாவின் வெகுமதிகளைப் புறக்கணித்தல்
தானியேல் 5:13-24.

13.ஆப்பொழுது தானியேல் இராஜாவின் முன் உள்ளே அழைத்து வந்து விடப்பட்டான். இராஜா தானியேலைப் பார்த்து நீ என் பிதாவாகிய இராஜா யூதாவிலிருந்து சிறைபிடித்து வந்த யூதரில் ஒருவனாகிய தானியேல் அல்லவா? 14 உனக்குள்ளே தேவர்களின் ஆவி உண்டென்றும், வெளிச்சமும் புத்தியும் விஷேசித்த ஞானமும் உன்னிடத்தில் காணப்பட்டதென்றும் உன்னைக் குறித்துக்

**கேள்விப்பட்டேன். 15 இப்போதும் இந்த எழுத்தை வாசிக்கிறதற்கும்
இதின் அர்த்தத்தைஎனக்குத் தெரிவிக்கிறதற்கும் சாஸ்திரிகளும்
ஜோசியரும் எனக்கு முன்பாக அழைத்துக் கொண்டு வரப்பட்டார்கள்.
ஆனாலும் இந்த வசனத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்த அவர்களால்
கூடாமற்போயிற்று. 16 பொருளை வெளிப்படுத்தவும்
கருகலானவைகளைத் தெளிவிக்கவும் உன்னாலே கூடுமென்று
உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேன். நீ இந்த எழுத்தை வாசிக்கவும்,
இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கவும் உன்னாலே கூடுமானால்,
நீ இரத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப்பணியும் தரிக்கப்பட்டு,
இராஜ்ஜியத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பாய் என்றான். 17
அப்பொழுது தானியேல் இராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக:
உம்முடைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்.
உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்ம். இந்த
எழுத்தை நான் இராஜாவுக்கு வாசித்து, இதின் அர்த்தத்தை
தெரிவிப்பேன். 18 இராஜாவே உன்னதமான தேவன் உம்முடைய
பிதாவாகிய நெபுகாத்நேச்சாருக்கு இராஜ்ஜியத்தையும்
மகத்துவத்தையும் கனத்தையும் மகிமையையும் கொடுத்தார். 19
அவருக்குக் கொடுக்கப்பட்ட மகத்துவத்திலே சகல ஜனங்களும்,
ஜாதியாரும், பாஷைக்காரரும் அவருக்கு முன்பாக நடுங்கிப்
பயந்திருந்தார்கள்; அவர் தமக்கு சித்தமானவனைக்கொன்று
போடுவார், தமக்கு சித்தமானவனை உயிரோடே வைப்பார், தமக்கு
சித்தமானவனைத் தாழ்த்துவார். 20 அவருடைய இருதயம்
மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே
கடினப்பட்டபோது, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார்.
அவருடைய மகிமை அவரைவிட்டு அகன்று போயிற்று. 21 அவர்
மனுஷரினின்று தள்ளப்பட்டார். அவருடைய இருதயம்
மிருகங்களுடைய இருதயம் போலாயிற்று. காட்டுக்கழுதைகளோடே
சஞ்சரித்தார். உன்னதமான தேவன் மனுஷரின் இராஜ்ஜியத்திலே
ஆளுகை செய்து தமக்கு சித்தமானவனை அதின்மேல்
அதிகாரியாக்குகிறார் என்று அவர் உணர்ந்து கொள்ளுமட்டும்
மாடுகளைப்போல புல்லை மேய்ந்தார். அவருடைய சரீரம்
ஆகாயத்துப் பனியிலே நனைந்தது. 22 அவருடைய குமாரனாகிய
பெல்ஷாத்சார் என்னும் நீரோவென்றால், இதையெல்லாம்
அறிந்திருந்தும், உமது இருதயத்தைத் தாழ்த்தாமல், 23
பரலோகத்தின் ஆண்டவருக்கு விரோதமாக உம்மை உயர்த்தினீர்.
அவருடைய ஆலயத்தின் பாத்திரங்களை உமக்கு முன்பாகக்
கொண்டுவந்தார்கள். நீரும் உம்முடைய பிரபுக்களும், உம்முடைய
மனைவிகளும், உம்முடைய வைப்பாட்டிகளும் அவைகளில்
திராட்சரசம் குடித்தீர்கள். இதுவுமின்றி தம்முடைய கையில் உமது
சுவாசத்தை வைத்திருக்கிறவரும், உமது வழிகளுக்கு எல்லாம்**

அதிகாரியுமாகிய தேவனை நீர் மகிமைப்படுத்தாமல் காணாமலும் கேளாமலும் உணராமலும் இருக்கிற வெள்ளியும் பொன்னும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தீர்கள். 24 அப்பொழுது அந்தக் கையுறுப்பு அவரால் அனுப்பப்பட்டு, இந்த எழுத்து எழுதப்பட்டது.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

தானியேல் இப்போது இராஜாவின் முன்னிலையில் கொண்டுவரப்படுகிறான், இஸ்ரவேலின் தேவன் அண்டசராசரத்தின் உன்னத தேவனாய் இருப்பது தெளிவு படுத்தப்படுகிறது. தானியேல் ஐந்தாம் அதிகாரத்தில் இதுவே நாம் கற்றுக்கொள்ளும் பாடமாய் இருக்கிறது. தேவன் மற்ற தேவர்களைப் போல் அவர்களது ஆலயம் பரிசுத்த குலைச்சலாகும் போது, மற்றும் பரிசுத்த பொருட்கள் பரிசுத்த குலைச்சலாகும் போது செயல்படுகிறவர் அல்லர். இஸ்ரவேலின் தேவன் அண்டசராசரத்தின் தேவனாய் இருந்து அவர் ஒரே உண்மை தேவனாய் இருந்து நியாயத்தீர்ப்பைக் கொண்டு வருகிறவராய் இருக்கிறார்.

தானியேலின் சுயசரிதையானது பெல்ஷாத்சாரால் அந்த விருந்து சாலையில் முறையாய் கூறப்பட்டது, அவன் பாபிலோனில் கடந்த ஐம்பது ஆண்டுகளாய் செய்ததவை அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் சுருங்க அனைத்தையும் கூறுகிறவனாய் இருந்தான் அல்லது அவ ன் தானியேலை இதுவரை அறிந்தவனாய் இருந்தும் அவனைக்குறித்து அறியாதவனாய் இருந்தான். வசனம் 15ல் பெல்ஷாத்சார் கூறும்போது ஞானிகளால் சுவற்றில் எழுதப்பட்ட வாசகத்தை வியாக்கியானிக்க இயலாமல் போயிற்று எனக்கூறுகிறான். இது தானியேலை அவன் அறிந்திருந்தும் அவனை பயன்படுத்த விருப்பமில்லாமையை காட்டுவதாய் தோன்றுகிறது, இருப்பினும் இது சுட்டிக்காட்டுவது என்னவென்றால், அவன் தேவனைக் குறித்து எதிர்மறையான கருத்தை கொண்டவனாய் இருந்தான், தானியேல் பேசுவதைக் கேட்கமனதற்றவனாய் இருந்தான் என்பதை விளங்கச் செய்கிறதாய் இருக்கிறது.

விருந்து சாலையில் தேவனால் அழிவைக் குறித்த அறிவிப்பானது ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது, ஆகையால் தானியேல் இக்காலக் கட்டத்தில் திரும்புகிறதற்கு அப்பாற்பட்ட நிலையில் சென்று விட்டிருந்ததை அறிந்தவனாய் இருந்தான். பெல்ஷாத்சாரின் முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருந்ததை அவன் கண்டான், கூர்ந்து கவனிக்கக்கூடிய வகையில் சுவற்றில் எழுதப்பட்டிருந்ததையும் கண்டான். இராஜா இன்னும் தானியேல்

எழுதப்பட்டதற்கு அர்த்தம் கூறுவான் என்ற நிச்சயமற்றவனாகவே இருந்தான் அவன் இப்படிப்பட்ட சொற்றொடரை பயன்படுத்தியது மூலம் தெரியவருகிறது, "நீ இந்த எழுத்தை வாசிக்கவும், இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கவும் உன்னாலே கூடுமானால்..." இராஜாத்தி தானியேலைக் குறித்து தெளிவாய் கூறியிருந்த போதும், மற்றும் அவன் தானியேலின் முந்தைய காரியம் குறித்து தெளிவாய் அறிந்திருந்தும் இவ்வாறு கூறுகிறவனாய் காணப்பட்டான்.

வசனம் 17ல் தானியேல் இராஜாவின் வெகுமானங்களை நிராகரித்து, சுவற்றில் எழுதப்பட்டதன் அர்த்தத்தை கூறுவது இலவச சேவை எனத் தெளிவு படுத்தினான். இங்கே தானியேலின் வார்த்தைகளும் செயல்பாடுகளும் சோதோமின் இராஜாவுக்கு முன் ஆபிரகாமின் வார்த்தைக்கு ஒப்பாக இருந்தது, ஆபிரகாம் தரங்கெட்ட அவிசுவாசியிடமிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ள மனமற்றிருந்தான்.

தானியேலின் வியாக்கியானத்தின் போது எரேமியா, எசேக்கியேல் (இவ்விருவரும் இக்காலக் கட்டத்தில் மரித்து போயிருந்தனர்) ஏசாயா 200 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கருத்துக்களை மனதில் கொண்டிருந்தான், அவைகள் பெல்ஷாத்சாருக்கு அறிவுரை வழங்கும் ஞானத்திற்கு பெலன் சேர்க்கிறதாய் இருந்தது.

தானியேல் கூறும்போது தேவன் ஆளுபவர்களுக்கு முதல் உரிமை அளித்து, தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்ற தனிநபருக்கு அதிகாரம் கொடுக்கிறவராய் இருக்கிறார். வசனம் 18 19ல் நெபுகாத்நேச்சாரைக் குறித்து குறிப்பிட்டு அவனுக்கு தேவன் இரஜ்ஜியத்தையும், மகத்துவத்தையும், மகிமையையும், கனத்தையும் மற்றும் முழுமையான அதிகாரத்தையும் அளித்தார், மற்றும் இந்த புதிய இராஜாவுக்கு அப்பெரிய இராஜாவாகிய மனிதன் முரட்டாட்டத்திற்கும், பெருமைக்கும் உள்ளானான். அதன் விளைவாக, தேவன் அவனை அவன் இராஜ்ஜியத்திலிருந்து எடுத்துவிட்டு அவனை மிருகங்களைப்போல புல்லை மேய வயல்வெளிகளுக்கு அனுப்பி, தேவன் தாமே பொறுப்பாளராகவும் அவர் மட்டுமே தமக்கு சித்தமானவர்களுக்கு ஆளுகை செய்ய அநுமதிக்கிறார் என்பதை அறிந்து உணருமட்டும் அவனை அங்கே இருக்கும்படி செய்தார்.

வசனம் 22, 23ல் தானியேல் கூறும்போது, பெல்ஷாத்சார் தன்னை தாழ்த்தாமல், அவன் முரட்டாட்டம் செய்கிறவனாய் காணப்பட்டான், மற்றும் மெய்தேவனை அவன் பணிந்து கொள்ளவில்லை. மாறாக பணிந்து கொள்வதைப் பரிசுத்தகுலைச்சலாக்கிக் கொண்டிருந்தான் மற்றும் தேவனை நிந்தித்துக் கொண்டிருந்தான்.

தானியேல் பெல்ஷாத்சாரின் வாழ்க்கை முறை மற்றும் அவன் தேவனது கரத்திலும் அவரது திட்டத்திலும் இருப்பதை குறிப்பிட்டான். தேவன் அறியாது இருந்தும், அவரது திட்டம் இன்னும் செயல்படுகிறதாய் இருக்கிறது, அவன் அத்திட்டத்திற்குக் கீழாக மண்ணாக இருப்பதை உணர்த்தினான்.

வசனம் 24ல் "அப்பொழுது' என்கிற வார்த்தையுடன் துவங்குகிறதாய் இருக்கிறது, இதன் காரணம் பெல்ஷாத்சாரின் எதிர்மறையான மனநிலையாய் இருந்தது, கையுறுப்பானது தேவனிடமிருந்து கடந்து வந்து, இராஜ்ஜியத்தின் நியாயத்தீர்ப்பு மற்றும் இன்னொருவனை மாற்றி அமைப்பது குறித்த தேவனது திட்டத்தை அறிவிப்பதாய் இருந்தது.

APPLICATION கைக்கொள்ளுதல்:

நான்கு தெய்வீக நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும், சுயசித்தம், திருமணம், குடும்பம் மற்றும் தேசங்கள் போன்றவைகளில் மற்றவர்கள் மீது செலுத்தும் அதிகாரமானது மறைந்திருக்கிறது. உதாரணமாக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது மறைவான அதிகாரம் உடையவர்களாய் இருக்கின்றனர் அதை நேர்மறையாய் பயன்படுத்தி, சிட்சை செய்ய நீண்ட தூரம் செல்ல வேண்டியதாய் இருக்கும், அல்லது எதிர்மறையாய் பயன்படுத்தும்போது, நீங்கள் பெற்றோராய் இருப்பதற்கு தவறுகிறவர்களாகிறீர்கள், நியாதீர்ப்பு உங்கள் மீது கடந்து வருகிறதாய் இருக்கிறது.

எப்படியிருப்பினும் அதிகாரம் என்பது ஒவ்வொரு கட்டத்திலும் வரையறைக்குட்பட்டதாயில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக தெய்வீக நிறுவனங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர் தேவன் ஆகும், ஒரு வர் திருப்திகரமான வகையில் செயல்படவில்லையானால், தேவன் தலையிட்டு சிலவேளைகளில் அந்நபரை மாற்றி அமைக்கிறவராய் இருக்கிறார்.

இந்த வகையில் பெல்ஷாத்சார் அதிகார மோகம் கொண்டவனாய், தனது அதிகாரத்தை விரிவாக்க எண்ணி, அதிகாரப்பூர்வமான ஒரு நல்ல ஆளுநராக சட்ட ரீதிக்கு மேலாக தன்னை உயர்த்துகிறவனாய் காணப்பட்டான்.

இந்த வகையில் நெபுகாத்நேச்சார், இப்படிப்பட்ட கருத்தை நேரடியாய் பெற்று, மிருகத்தைப் போன்று மாறி ஏழு ஆண்டுகள் சிறுமைக்குப்பின்னர் அதிகாரம் 4ல் அவன் தேவனின் ஆளுகைத்

தன்மையை புரிந்து கொண்ட பின்னர் தன்னை தாழ்த்துகிறவனாய், அவரை ஆராதிக்கிறவனாய்க் காணப்பட்டான்.

ஒவ்வொரு விசுவாசியும் ஒரு கட்டத்தில் "தேவனைப் பற்றிய உணர்வுள்ளவர்களாய்" ரோமர் 1 மற்றும் 2ம் அதிகாரங்களில் காணப்படுவது போல் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. ஒரு மனிதன் தன்னை ஒரு நாத்திகன் என்று சொல்லக்கூடும் ஆனால் அவன் தன் இருதயத்தில் கடவுள் இருக்கிறார் என்பதை அறிந்தவனாய் இருக்கிறான். காரணம் அவன் தேவனது சாயலில் உருவாக்கப்பட்டுள்ளான் மற்றும் அவன் தேவனுக்குக் கடமைபட்டுள்ளான். இப்படிப்பட்ட மக்கள் இப்போதும் மறுபடியும் கர்த்தரின் அதிகாரம் மற்றும் அவரது மகத்துவத்தை மறுதலிக்கக்கூடும், ஆனால் எல்லோரும் இறுதியாய் தாங்கள் மறுதலித்தவருக்கு முன்பாக ஒரு நாளில் நின்றே ஆக வேண்டும்.

தேவனது வார்த்தை அதை மறுதலித்தவர்களை நியாயந்தீர்க்கிறதாய் இருக்கிறது.

மனிதன் தனது மரணம் எப்போது சம்பவிக்கும் என்பதை அறியாது இருக்கிறான்.

மதுபானம் அருந்துதல் தனது சொந்த பிரச்சனைகளை உருவாக்குகிறது, மித மிஞ்சி மது பானம் அருந்துதல் இழிநிலைக்கு செல்வதற்கு அடையாளமாய் விளங்கிறது.

ஒரு இராஜ்ஜியம் எழுவதும் வீழ்வதும் சர்வ வல்லமையுள்ள தேவனைப்பொறுத்ததாய் இருக்கிறது.

தேவன் ஒரு தேசத்தை அல்லது தனிநபரை செழிக்கச் செய்யவும் அல்லது நியாயந்தீர்க்கவும் இயலும்.

நாம் எப்பொழுதும் மற்றவர்களை கிருபைக் கேதுவாய் வழிநடத்துதல் வேண்டும் மற்றும் அவர்கள் கறைபடியும்படி செய்யாதிருக்க வேண்டும், தீமை செய்யும் மக்களுடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களாய் இருத்தல் கூடாது.

பெல்ஷாத்சாரைப் போன்று நிடோகிரிஸ் உபதேசத்தின் அடிப்படைக்கருத்தை அறிந்திருந்தாள், ஆனால் அவனோ எந்த ஒரு ஆளுகையும் தனது வாழ்வில் குறுக்கிடாது இருக்க அவைகளை புறக்கணிக்கிறவனாய் இருந்தான், தனது சுய இச்சைகளின்படி வாழ நினைத்தான். எழுதப்பட்ட வார்த்தை குறித்து எதிர்மறையான மனநிலையுடன் இருந்தான் மற்றும் தனது தேசத்தில் அவன்

நெருக்கப்பட்ட நிலையில் இருந்தான். தேவன் எப்பொழுதும் உள்ளே அடியெடுத்து வைக்கிறவராய் இருக்கிறார்.

DOCTRINE உபதேசம்

OBEDIENCE கீழ்ப்படிதல்

பகுதி 25 - தானியேல் சுவற்றில் கையுறுப்பு எழுதியவற்றை வியாக்கியானித்தல் தானியேல் 5:25-29.

25 எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால்: மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின் என்பதே. 26 இந்த வசனத்தின் அர்த்தமாவது: மெனே என்பதற்கு, தேவன் உன் இராஜ்ஜியத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும், 27 தெக்கேல் என்பதற்கு நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும், 28 பேரேஸ் என்பதற்கு, உன் இராஜ்ஜியம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பெரிசியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான். 29 அப்பொழுது பெல்ஷாத்சார் தானியேலுக்கு இரத்தாம்பரத்தையும், அவனுடைய கழுத்தில் பொற்சரப்பணியையும் தரிப்பிக்கவும், இராஜ்ஜியத்திலே அவன் மூன்றாம் அதிகாரியாயிருப்பவன் என்று அவனைக் குறித்துப் பறைமுறையிடவும் கட்டளையிட்டான்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

சுவற்றில் எழுதப்பட்டது விருந்தின் உச்ச கட்டத்தில் நிகழ்ந்ததாய் இருந்தது. தேவன் நான்கு அரமேய வார்த்தைகளை சுவற்றில் எழுதியதின் மூலம் கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் மீது நியாயத்தீர்ப்பை தெரிவிக்கிறவராய் இருந்தார். பண்டைய உலகில் இராக்களின் கேடுபாடுகள் அரமனை சுவற்றில் எழுதப்படும் அல்லது புறஜாதிய ஆலய தூண்களில் எழுதப்படும் ஆனால் "மெனெ மெனே தெக்கெல் உப்பார்சின்" என்று எழுதப்பட்டதோ எரிந்து கொண்டிருந்த விளக்குகளுக்குப் பின் சுவற்றில் எழுதப்பட்டது விருந்து சாலையில் உடனடியான வருத்தத்தை உருவாக்குகிறதாய் இருந்தது.

2 ம் அதிகாரத்தில் நெபுகாத்நேச்சார் சொப்பன விஷயத்தில், ஞானிகள் அழைக்கப்பட்டனர் அவர்கள் அனைவரும் சமமாய் பெரிதளவில்

வெகுமானமும் பதவியும் அளித்த போதும் அவர்களால் அதை பகுத்தறிய இயலாது இருந்தது. வசனம் 9ல் "behal" மிகவும் கலங்கினர் என்று மொழியாக்கம் செய்யப்பட்டதற்கு பதிலாக மிகவும் பயப்பட்டனர் என்று இருக்க வேண்டும். இதன் பொருள் அவர்கள் மனோரீதியாய் சிதறடிக்கப்பட்டு வருத்தப்படக்கூடிய வகையில் தேவனது கையுறுப்பானது சுவற்றில் எழுதியதைக் கண்டார்கள். இது சிலருடைய விமர்சனங்களுக்கு இன்றைய அளவில் பதில் அளிக்கிறதாய் இருக்கிறது நமக்கு இதுபோன்ற அதிகம் அற்புதங்கள் தேவைப்படுகிறதாய் இருக்கிறது. இந்த மக்கள் அற்புதங்களைக் கண்டும் அவர்கள் தங்களது பாலுணர்வு சிற்றின்பங்களும் மதுபானத்திற்கும் திரும்பினார்கள் அவர்கள் அனைவரும் பெரிசியரால் கொலை செய்யப்பட்டனர்.

தானியேல் அங்கு வந்து சேர்ந்தபோது பெரிதளவிலான வெகுமதிகளை புறக்கனித்தான், தீர்க்கதரிசன வரம் விற்பனைக்குரியதல்ல. அவன் கனத்தை ஒருவகையில் பெற்றிருக்க வேண்டும் ஆனால் அது சில மணிநேரத்திற்கு மட்டுமே உரியதாய் இருந்தது, அது பெரிசியர்கள் அங்கு வந்தடையும் வரை இருந்தது எனக்கூறலாம். அவனை சில மணி நேரத்திற்கு ஏக ஆளுநராக ஏற்படுத்தினர். அவன் பெல்ஷாத்சாரின் தாத்தா நெபுகாத்நேச்சாருக்கு என்ன நிகழ்ந்தது எனக்கூறிப்பிட்டிருந்தான் அது பெருமையினால் அது அவனுக்கு சம்பவித்ததாய் இருந்தது. அதன் பின்னர் இராஜா தேவாலயத்து பொன்பாத்திரங்களை தீட்டுபடுத்திய குற்றம் குறித்தும் உணர்த்துகிறவனாய் இருந்தான். அது வேதாகம உபதேசங்களை அவனுக்கு போதிப்பதற்கு பயனுள்ளதாய் இருந்தது. அவன் பின்னரும் இராஜாவும் அவனது இராஜ்ஜியமும் முடிவுக்கு வந்து விட்டது, அவனது இராஜ்ஜியம் மேதியருக்கும் பெரிசியருக்கும் கையளிக்கப்பட்டது பொன்னான தலைக்குப் பின்னர் சிலையின் புயம் வெள்ளியானது ஆளுகை செய்ய ஆரம்பமானதை தானியேல் 2ம் அதிகாரத்தில் கூறப்பட்டதை காட்ட மனதுள்ளவனான்.

தானியேல் மூன்றாம் ஆளுநராய் ஆளுகை செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டான், இது பெல்ஷாத்சார் முதல் ஆளுநர் அல்ல, அவனது தந்தை நெபோனிடஸ் முதல் ஆளுநர் இவன் இரண்டாம் ஆளுநராய் பாபிலோனில் அமர்த்தப்பட்டான், தானியேல் பெல்ஷாத்சாரின் வெகுமானங்களை நிராகரித்ததை தெளிவாய் காண்கிறோம். அவன் குறுகிய கால இலக்கில் ஆர்வம் காட்டுகிறவனாய் இல்லை, அவன் நித்தியமான காரியங்களில் ஆர்வம் காட்டுகிறவனாய் இருந்தான். அவன் நித்தியத்தில் கர்த்தரின் சமூகத்தில் நித்தியத்தில் வாழ வேண்டியவனாய் இருந்தான். அவன் பாபிலோனிய அரசனோடு

வாழப்போகிறவன் அல்ல, இதினிமித்தம் அவன் நீண்ட காலம் வாழப்போவதற்கு முதலிடம் அளிக்கிறவனாய் காணப்பட்டான்.

மோசேயும் தானியேலைப்போன்று நீண்டகால கண்ணோட்டத்தை உடையவனாய் இருந்தார், தான் எகிப்தில் தலைவராய் இருப்பதிலிருந்து நீண்ட காலம் தேவனை சேவிப்பதற்கு எகிப்தை விட்டு புறப்படுகிறவனாய் இருந்தான். அவன் எகிப்தின் பார்வோனாய் மாறியிருந்தால் தனது ஜனங்களுக்கு அநேக காரியங்களை செய்திருக்கக் கூடும் என்று சொல்லி இருக்கலாம். இதன் பொருள் மனித வழியில் செய்யாது தேவனின் வழியில் செய்ய வேண்டும் என்பதாய் இருந்தது. அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு இஸ்ரவேலின் தேவனோடு தனது நித்தியத்தை கழிக்கப் போவதை அவன் அறிந்தவனாய் இருந்தான். தானியேலுக்கு கனத்துக்குரிய பதவிக்கு மேலான பதவி அளிக்கப்பட்டிருந்தது, அவன் விருந்து சாலையில் மேலான அந்தஸ்தில் உணவு வகை, திராட்சைரசம், அவன் விரும்பும் பெண்கள் போன்றவற்றை பெற்று இருக்க இயலும், ஆனால் அவனோ அவற்றைவிட்டு, சுயத்திற்கு முக்கியத்தும் அளிக்காது சுயத்தை மையமாய் கொண்டவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்காமல், தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதில் கவனம் செலுத்துகிறவாய் இருந்து, அவன் நித்தியத்திற்குள் பிரவேசிக்கும் முன்னர் தேவன் விரும்புவதில் அதிக கவனமுடையவனாய் இருந்தான்.

இதற்கு முறனாக ஏவாள் குறுகிய கால இலக்கை கண்ணுற்று, அவளும் ஆதாமும் தவறான வழியில் சென்று தோட்டத்தில் இருந்த நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசித்தனர். நமக்கு அளிக்கப்படுகிற சவால், தேவனது திட்டத்தின் அடிப்படையில் செயல்படுவதாகும், நீண்டகாலத்துக்குரியவைகளை சிந்தித்து, செயல்பட்டு தேவனது திட்டத்தை நமது வாழ்வில் நிறைவற்றுகிறவர்களாய் இருத்தல் அவசியம். மனிதர்களின் புகழ்ச்சி மற்றும் அநித்தியமான பாவசந்தேஷங்களில் மனதை செலுத்தாமல் இருத்தல் வேண்டும். தானியேல் அமைதியாய் எல்லா பரிசுத்த பொற்பாத்திரங்களையும் பண்டக சாலைக்குத் திரும்பக்கொண்டு சென்று, பெரிசியர்களின் வருகைக்காய் விருந்து சாலையை விட்டு வெளியேறி காத்திருந்தான்.

சுவற்றில் எழுதப்பட்டவை:

சுவற்றில் எழுதப்பட்டவை குறுக்கெழுத்து வரிசையில் பின்னிட்டு எழுதப்பட்டது. அவர்கள் விருந்து கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, ஒரு கையுறுப்பானது தோன்றி சுவற்றில் எழுதத் துவங்கியது. அவர்கள்

மதுபான வெறியின் போது, எழுதப்பட்டதைக் குறித்து அவர்கள் அதிசயித்திருக்க வேண்டும்.

"மெனே" - இதன் பொருள் உமது இராஜ்ஜியத்தை தேவன் தராசிலே நிறுத்துப் பார்த்து இருக்கிறார். பெல்ஷாத்சார் மனிதல்ல, தேவன் சர்வ வல்லவர் என்னும் பாடத்தை கற்றுக்கொள்ள அவசியமாய் இருந்தது. (இந்தப் பாடத்தை நமது மனதில் உறுதியாய் அறிந்திருத்தல் அவசியம்).

"தெக்கேல்" - இதன் பொருள் தராசிலே நிறுக்கப்பட்டு குறைவுள்ளவனாய் காணுதல். இது ஒவ்வொரு அவிசுவாசிக்கும் வருத்தம்தரக்கூடிய முடிவாய் இருக்கிறது. இயேசுக் கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்காதோர் இறுதி நியாயத்தீர்ப்பின்போது அவருக்கு முன்பாக நிற்க வேண்டும். அவர் உங்கள் இரட்சகராய் அல்லது நியாதிபதியாய் இருக்கிறார். நாம் அனைவரும் வாழ்க்கை என்னும் தராசில் வைத்து நிறுக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம் கிறிஸ்து நமக்காய் செய்தவை மட்டும் தராசை சமநிலையில் வைத்து நமக்கு தயவை கொண்டுவரும்.

"பேரேஸ்" - பெல்ஷாத்சாரின் இராஜ்ஜியம் பிரிக்கப்பட்டு மேதியருக்கும் பெரிசியருக்கும் கொடுக்கப்படும். பெல்ஷாத்சாருக்கு தேவனது கிருபையானது நிறைவு பெற்றது. இனிமேல் பொன்னான தலை என்பது இல்லை, அடுத்தகட்டமாய் புயம் வெள்ளியாயிருக்கிறது, தேவனால் தீர்க்கதரிசனமாய் உரைத்தது நிகழ்வுக்கு வருகிறது.

பெல்ஷாத்சார் தான் கூறியபடியே வாக்குப்பண்ணின அனைத்தையும் தானியேலுக்குக் கொடுத்தான். அவனை மூன்றாவது ஆளுநராக தேசத்தில் நியமனம் செய்தான், அந்த இரவில் தானே இராஜ்ஜியமானது முடிவுக்கு வந்தது. தானியேல் பாபிலோனுக்கு ஒரு வாலிபனாய் வந்தான், அவன் தனது ஜனத்தில் சிறைபிடிக்கப் பட்டவனில் ஒருவனாய் இருந்தான். இராஜ்ஜியம் படுகாயம் அடைந்த சூழலிலும் நிலைத்து இருந்தான், அப்பட்டணத்திற்கு ஆளுநராக சேவைபுரிந்தான், தனக்கு என்பது வயதாகும் இத்தருணத்தில் மூன்றாவது ஆளுநராக தேசம் அனைத்திற்கும் ஆளுநர் ஆனான். இதைக் குறித்து அவன் வியக்கவோ அல்லது வழிவிலகவோ இல்லை, என்ன கடந்து வருவதாய் இருக்கிறது என்பதைஅவன் அறிந்தவனாய் இருந்தான், பெரிசியர் அரன்மனைக்குள் பிரவேசிப்பதை வரவேற்பவனாய் இருந்தான். அவர்கள் கீழ் சேவகம் செய்ய மனதுள்ளவனாய் இருந்தான், மட்டுமின்றி அவர்கள் கீழ் பாடு சகிக்கவும் ஆயத்தமாய் இருந்தான். தானியேல் தேவனது நோக்கத்திற்கு தன் வாழ்வை அர்ப்பணித்தவனாய் இருந்தான், அவன் அரன்மனையில் வசித்தான், ஆனால் அரன்மனையோ அவனுக்குள் இல்லாதிருந்தது.

கைக்கொள்ளுதல்:

உள்ளாக மாற்றம் பெறுவதே முக்கியமான காரியங்களாய் இருக்கிறது. எல்லாவகையான உயர்வை நீங்கள் பின்தொடரக்கூடும் ஆனால் சுழல்காற்றை நீங்கள் அறுவடை செய்தே ஆகவேண்டும்.

பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன்னர் அவிசுவாசி அவருக்கு முன் நிற்க வேண்டும், அவர்கள் சிருஷ்டிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட வகையில் கேள்விகள் கேட்கப்படும். ஆதியாகமம் 1:26. அவன் தேவனது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜெந்துவாய் இருக்கிறான், ஒவ்வொருவரும் நீங்கள் எதை உருவாக்கினீர்கள்? எனக் கேட்கப்படுவர். கிறிஸ்து பாவத்தைக்குறித்து வினவமாட்டார் காரணம் எல்லா பாவத்திற்கான கிரயம் சிலுவையில் செலுத்தித் தீர்க்கப்பட்டாயிற்று. அவிசுவாசி சொல்லுவான் தான் உருவாக்கியது ஒன்றுமில்லை என்பான், கிறிஸ்து அவர்களுக்கு செய்து முடித்தவைகளில் ஒரு சிறிதளவாவது பொருந்தும்படி செய்யவில்லை என்பார்கள், அதை உதாசீனப்படுத்தினதை அறிவிப்பார்கள். மிகவும் காலதமதமாய் தாங்கள் உதாசீனப்படுத்திய நித்திய ஜீவனுக்குரிய ஒரே நம்பிக்கையை உணர்ந்து கொள்வார்கள், அவிசுவாசிகள் அனைவரும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

உற்பத்தி குறித்து கேட்பதற்கு தேவனுக்கு தகுதியில்லையா? இல்லை அவர் சிருஷ்டி கர்த்தராய் இருப்பதால் அவர் விரும்புவதைக் கேட்க உரிமையுடையவராய் இருக்கிறார். விசுவாசிகளாகிய நாம் கிறிஸ்துவில் உற்பத்தியைப் பெற்றவர்களாய் இருக்கிறோம், இதினிமித்தம் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு முன் நிற்கப்போவது இல்லை. எப்படியிருப்பினும் நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன் தோன்ற வேண்டும் நாம் உருவாக்கிய வற்றையும், உருவாக்க தவறியவற்றையும் அவருக்கு முன் காட்டியே ஆகவேண்டும். உருவாக்க இயலாத கிரியைகள் வெந்து அழிந்து போம், நாம் மட்டும் மீந்து இருந்து பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் செயதவைகள் மட்டும் எஞ்சியிருப்பதாய் இருக்கும். 1 கொரி 3:11-15. பெல்ஷாத்சார் பொது மக்கள் முன்னிலையில் வைத்து நியாயந்தீர்க்கப்பட்டான், அது அவனது தெரிந்து கொள்ளுதல் மற்றும் அவன் செயல்பாடுகளுக்குத் தக்கதாய் இருந்தது. அவன் அளந்து பார்க்கப்பட்டு குறைவுள்ளவனாய் காணப்பட்டான்.

பீமா நியாயாசனத்தில் கிறிஸ்து விசுவாசியை கேள்வி கேட்கிறவராய் இருப்பார், நீ உருவாக்கியது என்ன? அந்த சமயத்தில் இயேசு இரட்சிக்கப்பட்ட அனைவரையும் பார்த்து சொல்வது, "என் பிதா எல்லாவற்றையும் அளித்தார். நான் எனது நீதியாகிய இலவச கிருபை வரத்தை அளித்தேன். அந்த பூரணமும் மற்றும் வல்லமையும் உங்களுக்கு ஒவ்வொரு நாளும் கிடைக்கக்கூடிய்தாய் இருந்தது. நான் மரித்து

உயிர்த்தெழுந்து எனது பரிசுத்த ஆவியானவரை தொடர்ந்து உங்களை நிரப்பி வழிநடத்த அவரை அனுப்பித் தந்தேன். நீங்கள் கிறிஸ்துவின் விசுவாசியாய் எதை உருவாக்கினீர்கள்? 2 கொரி 5:7-20.

ஒவ்வொரு முறையும் நீங்கள் விழும்போதும், பிதாவின் சித்தத்திற்கு விரோதமாய் செல்லும்போதும், இயேசு பிதாவின் வலது பாரிசத்தில் நின்று, உங்கள் இரட்சிப்பை பற்றிக்கொண்டு தொடர்ந்து உங்களுக்காய் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்காக உருவாக்கின புதிய தன்மையை பாதுகாக்கிறவராய் இருக்கிறார், அவர் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, முத்தரித்து, ஆவிக்குரிய வரங்களை அளித்துள்ளார். அவற்றை பீமா நியாயாசனத்திற்கு முன்பாய் சீர்தூக்கிப் பார்க்க இருக்கிறோம். நீங்கள் எதை சாத்தித்துள்ளீர்கள் மற்றும் உருவாக்கியுள்ளீர்கள் என்பதை அறிந்துணர இருக்கிறீர்கள் மனித கிரியைகள் அக்கினியால் அழிந்து போகும்.

இருபை என்பது இழந்து போனோருக்கு தற்காலிகமான ஒன்றாய் இருக்கிறது, அது ஒரு காலகட்டத்தில் ஆரம்பமாகி நியாத்தீர்ப்பில் முடிவடைகிறது. தேவன் இதைச் செய்கிறவராய் இருந்து, நமக்கு பயிற்சி அளித்து, நம்மை எச்சரிக்கிறவராய் இருக்கிறார். நாம் தேவனது பொறுமை குறித்து குழப்பமடையாது இருத்தல் வேண்டும், மற்ற காரியங்களோடு ஒத்துப் போகாதிருத்தல் வேண்டும். முடிவாக பழைய இடம் காலம் மற்றும் அண்டசராசரம் அனைத்து அகன்று போகும். இறுதிவரை நிலைத்திராதவைகளோடு இணைக்கப்பட்டிருக்க வேண்டாம்.

DOCTRINES உபதேசங்கள்

JUDGMENT: GREAT WHITE THRONE நியாயத்தீர்ப்பு: வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

JUDGMENT SEAT OF CHRIST கிறிஸ்துவின் நியாயாசனம்.

பகுதி 26 - பாபிலோனின் வீழ்ச்சி தானியேல் 5:30-31.

30 அன்று இராத்திரியிலே கல்தேயரின் இராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலைசெய்யப்பட்டான். 31 மேதியனாகிய தரியு

தன் அறுபத்திரண்டாம் வயதில் இராஜ்ஜியத்தைக் கட்டிக்கொண்டான்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

அந்த இரவில் பெல்ஷாத்சார் மற்றும் பெரும்பாலான அவனது பிரபுக்கள் கொலை செய்யப்பட்டனர். வலுமிக்க கோட்டை அமைந்த பட்டணத்தை எவ்வாறு பெரிசியரால் கைப்பற்ற இயன்றது?

தரியு (மேதியரால் மகா கோரேஸ் எனப் பெயரிடப்பட்டவன்) பாபிலோனை சிறைபிடிக்க தளபதி ஒருவனைப் பெற்றிருந்தான். தரியு நெபோனிடாஸை சிறைபிடிக்க வட தேசத்தில் தனது இராணுவ குழுவினருடன் இருந்தான். ஒரு பகுதி இராணுவத்துடன் முக்கிய தளபதியானவன் ஆறு பட்டணத்திற்குள் நுழையும் நுழைவாயில் அமர்ந்து காத்திருக்கையில் அவனது பொறியாளர்கள் வடக்கே நிடோகிரிஸ் பேசின் என்று சொல்லப்படும் பகுதிக்கு ஆற்றை திசை திருப்பிவிடப்பட்டது.

ஆறானது வேறு மார்க்கமாய் திசைதிருப்பப்பட்டிருந்தும், பட்டணம் இன்னும் பாதுகாப்பாகவே இருந்திருக்கும், அதை சரியாக காவல் புரிந்திருநால். தண்ணீர் பட்டணத்திற்குள் செல்லும் எல்லா பாலங்களும் வறண்டுபோகவே, மேதிய படைகள் பட்டணத்திற்குள் நுழைய வாய்ப்புண்டாயிற்று.

கோரேஸின் தளபதி தனது இராணுவத்தை தண்ணீரற்ற பாலம் வழியாய் அதிகாலை வேளையில் பட்டணத்திற்கு நுழைய வகை செய்தான். அவன் இராணுவமானது மிக அமைதியாய் உள்ளே நுழைய வகை செய்தான். இவ்வாறு பெரிசிய இராணுவமானது பட்டணத்திற்குள் நுழைந்தது.

பாபிலோனிய இராணுவம் எச்சரிப்பாய் இருந்தும், அவர்களால் பெரிசிய இராணுவத்தை மேற்கொள்ள இயலாமல் போயிற்று.

ஹெரொடைடஸ் தப்பி மீந்த அநேகரிடம் நேர்காணல் செய்தபோது. அவர்கள் கூறியது பபட்டணத்தின் ஒருபகுதியானது மையத்திலிருந்து பிடிபட்டபோது என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என அவர்கள் அறியாது அஜாக்கிரதையாய் இருந்தனராம். எதிரிகள் உள்ளே நுழைந்ததும் பாபிலோனிய இராணுவத்தை நிலைகுழையச் செய்து செயல் இழக்கச் செய்தனராம்.

அந்த சாம்ராஜ்ஜியத்தின் இறுதி கட்டத்தில், தானியேல் மூன்றாவது ஆளுநராக தேசத்தில் அமர்த்தப்பட்டிருந்தான், அவனது ஆளுகை காலம் மிகவும் குறுகிய காலமாய் இருந்தது, அந்த இரவில் தானே மேதியரும் பெரிசியரும் பாபிலோனுக்குள் தண்ணீர் கடந்து வரும் பாலம் வழியாக பட்டணத்திற்குள் புகுந்து பெல்ஷாத்சாரையும் அவனது கொடிய பிரபுக்களையும் கொலை செய்தனர். தானியேல் அற்புதமாய் அதற்கு தப்பி, பின்னர் கைப்பற்றியவர்களுக்கு சுருங்க அனைத்தையும் கூறி அவர்களுடன் ஆளுகை செய்ய நேர்ந்தது.

பெரிசியர்கள் சக்கரவர்த்தி ஆட்முறை உள்ளவர்களாய் இருந்தனர், பாபிலோனியரைப் போன்றே உள்ளூர்வாசிகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு பகுதிகளை கட்டுப்படுத்தி வந்தனர். தானியேல் பாபிலோனை நடத்த வெளிப்படையாய் தெரிவு செய்து, நெருக்கமாய் எல்லாவற்றையும் அறிந்து ஒவ்வொரு காரியமும் சிறப்பாய் நடக்க வகை செய்கிறவனாய் இருந்தான். தானியேல் அரமனை படுகொலைக்கு தப்பி மீந்திருந்தான், (அவன் மூன்றாவது ஆளுநராக பதவி ஏற்ற பின்னர் அந்த அறையை விட்டு வெளியேறியிருக்க வேண்டும்) அதன் பின்னர் புதிய பெரிசிய சாம்ராஜ்ஜியத்தின் ஆளுநராய் பொறுப்பெடுக்க நேர்ந்தது. அவனது நற்பெயர் நேர்மையுள்ளவர்களில் ஒருவனாய் கருதப்பட்டான், எதிராளிகள் அவனை இனங்கண்டு கொண்டிருந்தனர். தேவன் அவரது திட்டத்தில் நாம் இருக்கும் போது பாதுகாப்பாய் இருக்க அறிந்தவராய் இருக்கிறார்.

கைக்கொள்ளுதல்:

கோரேஸ் பாபிலோனின் மதில் சுவர்களைக் கண்ட போது அதைப் போன்று ஒருபோதும் எதையும் கண்டதில்லை என்றான். எப்படியிருப்பினும் எப்படி பலமுள்ள நிலையில் மதில் சுவரானது கட்டப்பட்டிருந்தும், தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன் அது நிலைநிற்க முடியாது, மூழ்கடிக்க இயலாத கப்பல் மூழ்கிப்போம், காணக்கூடாத மதிகள் விழுந்துபோம், தங்கள் சுயக்கிரியைகள் மீது நம்பிக்கை வைக்கும் புத்தியீனமக்கள் தேவன் மீது, கிறிஸ்துவின் மீதும் அவரதிட்டத்தின் மீதும் நம்பிக்கை வைக்காதே போகிறவர்கள் எப்பொழுதும் விழுந்து போவார்கள்.

தேவன் தமது சர்வவல்லமை சித்தத்தினால் பாபிலோனை அழித்துப்போட்டார், மனித கண்ணோட்டத்தின்படி அது முழுவதும் அழிக்க இயலாது என்றிருந்தது. இது யோசுவா மற்றும் எரிகோ விற்கு இணையாக இருக்கிறது. பாபிலோனை அழிக்க தேவனுக்கு நான்கு வார்த்தைகள் போதுமானதாய் இருந்தது.

ஒரு நபரும் தான் மரிக்கப்போகும் சமயத்தை அறியாது இருக்கிறார்கள். காணக்கூடிய காரியங்கள் பாதுகாப்பாகவும் செழிப்பாகவும் தோன்றலாம் ஆனால் தேவனால் உறுதிசெய்யப்பட்ட ஒரே பாதுகாப்பு நித்திய பாதுகாப்பாய் இருக்கிறது.

DOCTRINES உபதேசங்கள்:

DEATH மரணம்

SIN – Sin Unto Death பாவம் -- மரணத்துக்கு ஏதுவான பாவம்.

<u>அதிகாரம் 6.</u>

6ம் அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேல் ஆறாம் அதிகாரம் ஆறு பிரிவுகளாய் பிரிக்கப்பட்டுள்ளன:

மேதியனாகிய தரியுவிற்கு கீழ் தானியேலின் ஸ்தானம்: வசனங்கள் 1-3

தானியேலை அழிப்பதற்கான சதி திட்டம் வசனங்கள் 4-9

தானியேலின் ஜெபம் வசனங்கள் 10-15

சிங்கக் கெபியில் தானியேல் வசனங்கள் 16-17

தானியேல் விடுவிக்கப்படல் வசனங்கள் 18-24

தானியேலின் செழிப்பும் தரியுவின் கட்டளையும் வசனங்கள் 25-28.

முன்னுரை:

தானியேல் புத்தகத்தை இரு பிரிவுகளாய் பிரிக்கலாம் முதல் ஆறு அதிகாரங்கள் தானியேல் மனித ஆளுகையில் வாழ்ந்த காலங்கள் கடைசி ஆறு அதிகாரங்கள் மனித இராஜ்ஜியத்தைக்குறித்த தீர்க்கதரிசனங்கள் அடங்கியுள்ள பகுதி.

மனித இராஜ்ஜியமானது ஏதேன் தோட்டதில் மனித வீழ்ச்சியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இதன் முதல் வெளிப்பாடு பாபேல் கோபுரத்தில் வெளிப்பட்டு இராஜ்ஜியம் என்கிற சொல் முதலாவது வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டது இது நிம்ரோதின் கீழ் செயல்பட்டது. சரித்திர மூலம் நிகழ்ந்த பெரிய யுத்தங்கள் அனைத்தும், தேவனுடைய கண்ணோட்டம் மற்றும் மனிதனின் பரிதாபத்துக்குரிய முயற்சியால சரித்திரத்திற்கு மேல் ஆளுகை செய்ய எண்ணியதாய் இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் தேவ இராஜ்ஜியத்தின் அங்கத்தினராய் இருக்கிறோமா அல்லது மனித இராஜ்ஜியத்தின் ஏமாற்றங்களில் நிலை கொண்டிருக்கிறோமா எனத் தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

"மனித இராஜ்ஜியத்தின்" கருப்பொருள் மனிதக் கிரியைகளால் கட்டப்பட்டு தேவனின் கிருபையை புறக்கணிக்கிறதாய் இருக்கிறது. அது எப்பொழுதும் கிருபையை சார்ந்திராமல், சிலுவைக்கு செல்லாமல் கிரீடத்தை பெற முயலுவதாய் இருக்கிறது. கம்யூனிச கருத்தைப் போன்றே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அப்பாற்பட்ட நிலையில் நேர்த்தியான சமுதாயத்தை கொண்டுவர முயற்சிப்பதாய் இருக்கிறது. நூறு ஆண்டுகளுக்குள்ளாக இப்படிப்பட்ட ஆளுகை வீழ்ச்சியடைந்துள்ளதை கண்டுள்ளோம், தேவனற்ற திட்டமனைத்தும் ஒன்றுமில்லாமையில் முடிவடைந்து இருக்கிறது. சங் 2:1-5.

இருவிதமான கட்டுப்படுத்தும் ஆற்றல் மனிதருக்கு அளிக்கப்பட்டுள்ளது, முதலாவதாய் கலாச்சார ரீதியில் பாபேலில் கண்டது போல், இரண்டாவதாக விசுவாசிகளின் அதிகபட்ச விசுவாசத்துடன், கர்த்தராகிய இயேசுவை முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் அன்புகூர்ந்து செயல்படுவது. இதன் பொருள் விசுவாசிகள் முழுமையான தேசிய பற்றுறுதி அளியாமல், மனித இராஜ்ஜியத்தின் சீர்குலைவு அதன் முடிவு என்பதை உணருவதாகும். அவர்கள் வேதாகமத்தின் தேவனை பணிந்து கொள்கிறவர்களாய் இருக்கின்றனர் தேசிய கடவுளை பணிய மறுக்கிறவர்கள்.

இந்த அதிகாரத்தில் தானியேல் தேசிய கடவுளருக்கு உண்மையாய் இருப்பதைக் காட்டிலும் தேவனுக்கு உண்மையுள்ளவனாய் இருக்கிறான். நெருக்கப்படுகிற காலங்களில் வாழும் அப்படிப்பட்ட விசுவாசிகள் அதே போன்ற பிரச்சனைகளை இன்றைய அளவில் சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர். ஒரு தேசத்தின் கடவுள், கடவுளற்ற கொள்கையை பின்பற்றுவதாய் இருக்குமானால், நீங்கள் பரலோகத்தின் தேவனை பணிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். எல்லா இராஜ்ஜியங்களும் எல்லா ஜனத்தொகையும் தங்களது கொள்கைக்குள்ளாக்கும் பிரச்சனையினால் தவிக்கிறவர்களாய்

இருக்கிறார்கள். மகா அலெக்ஸாண்டர் இதை நடப்பிப்பதற்காக பொதுவான மொழியை ஏற்படுத்தி தனது பிரஜைகள் அனைவரும் கொய்னே கிரேக்க மொழியை பேசும்படி செய்தான். ஆனால் அவனது தளபதிகள் அவனை கொலை செய்து அவனை இனம் காணாது செய்துவிட்டனர். உடனடியாக மகா அலெக்ஸாண்டரின் மரணத்திற்குபின்னர் அவனது இராஜ்ஜியம் நான்கு பிரிவுகளாய் பிரிக்கப்பட்டு நான்கு பழைய தளபதிகள் வசம் சென்றது, அவர்கள் உடனடியாய் தங்களுக்குள் சண்டையிட்டுக்கொள்ளத் துவங்கினர்.

சில கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டோர் மனிதனை சுய அழிவிலிருந்து காக்கிறவர்களாய் இருந்தனர், அவ்வாறுகட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டோர், தேவனுடைய செயலாய் இருந்து நூற்றாண்டு காலங்களாய் செயல்பட்டுவருகின்றனர், இல்லையேல் மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொண்டு என்றோ மடிந்திருக்க வேண்டும். மகா உபத்திரவ காலத்தின் போது கட்டுப்படுத்தும் ஆற்றல் கொண்டோர் அகற்றப் படுவர் மற்றும் உண்மையான ஒழுக்கசீர்கேடுள்ள சாத்தானின் "மனித சாம்ராஜ்ஜியம்" ஆளுகைக்கு வரும். எப்படியிருப்பினும் இந்த வேதபகுதியில் தானியேலுக்கும், தேசத்திற்குமிடையே பிரிவுகாணப்பட்டு தேவனது கட்டுப்பாட்டுக்குள்ளாய் இருக்கும் தெய்வீக தானியேலை காண்கிறோம்.

பொன்னான தலையாக கருதப்பட்ட கல்தேய சாம்ராஜ்ஜியத்திற்கு பதிலாக வெள்ளியிலான புயமாகிய மேதிய - பெரிசிய சாம்ராஜ்ஜியம் ஆளுகை செய்ய துவங்கியது. இரு புயங்களும் இரு சாம்ராஜ்ஜியங்களைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. இது கி மு 538 முதல் 331 வரையுள்ள சரித்திர காலத்தில் இடம்பெற்றதாய் இருக்கிறது. யூதர்களுக்கு பொற்காலமாய் விளங்கிய காலத்தில், இப்படிப்பட்ட சாம்ராஜ்ஜியத்தால் மெய்யான செழிப்பை அடைந்தவர்களாய் விளங்கினர்.

புதிய சாம்ராஜ்ஜியத்தில் தானியேல் உயர்ந்த ஸ்தானத்தில் அமர்த்தப்படுகிறான், இவன் மூன்று பிரதம மந்திரிகளில் ஒருவனாய் ஏற்படுத்தப்பட்டான் [Sarek] இது இராஜ்ஜியத்தில் அமர்த்தப்பட்டிருந்த 120 ஆளுநர்களுக்கு மேலான பதவியாய் இருந்தது. இது சாம்ராஜ்ஜியத்தை நிலையான நிர்வாகம் செய்து தொடர்ந்து சுமூகமாய் ஆளுகை செய்ய ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இப்புதிய சாம்ராஜ்ஜியத்தில் தானியேலுக்கு விரோதமாய் அநேகத் தலைவர்கள் எழும்பினர் அவர்கள் தானியேல் மேல் பொறாமை கொண்டு அவனை வலையில் அகப்படுத்த சட்டங்களை கொண்டு வர எத்தனித்தனர்.

பெரிசியர்களின் பொதுவான சட்டம் மட்டுமே பெரிசிய அரசனால் இயற்றப்பட்டு அதை அமல் படுத்தக்கூடும். பொறாமை கொண்ட தலைவர்கள் அரசனிடம் பொய்களைக் கூறி, அரசனை மட்டுமே 30 நாட்களுக்கு வணங்க வேண்டும் என்கிற கட்டளையை பிறப்பிக்கச் செய்தனர். இது மனுக்குலத்திற்கு இரண்டாவது பெரிய முயற்சியாய் இவ்வரச வணக்கம் அமைந்தது. இதைத் தொடர்'ந்த சாம்ராஜ்ஜியங்களும் இதையே பின்பற்றியது, இது சாத்தானின் கொள்கையாய் இருக்கிறது. மறுமலர்ச்சியடைந்த ரோம சாம்ராஜ்ஜியத்தின் இறுதி அரசனாகிய அந்திக் கிறிஸ்து இதைப் பயன்படுத்துகிறவனாய் இருப்பான், இதன் மூலம் விசுவாசிகளை அழிப்பவனாய் இருப்பான், ஆனால் அது அவனை அழித்து அவனைக் கொழுத்திவிடுகிறதாய் அமையும்.

பகுதி 27 - மேதியனாகிய தரியுவின் கீழ் தானியேலின் பதவி. தானியேல் 6:1-3.

1.

1 It pleased Darius to set over the kingdom an hundred and twenty princes, which should be over the whole kingdom; 2 And over these three presidents; of whom Daniel was first: that the princes might give accounts unto them, and the king should have no damage. 3 Then this Daniel was preferred above the presidents and princes, because an excellent spirit was in him; and the king thought to set him over the whole realm.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

'மேதியனாகிய தரியு' சரித்திரத்தினால் அறியப்பட்ட ஒரு நபரல்ல மற்றும் தாராளவாதிகள் தர்கித்து தானியேல் புத்தகம் ஒரு சரித்திர புத்தகமன்று என வாதிடுகிறவர்களாய் இருக்கின்றனர். இந்தப்பெயரைக் குறிப்பிடும்போது இப்புத்தகத்தின் பண்டைய தன்மையை அளிக்கிறதாய் இருக்கிறது. இது ஒரு பிரச்சனையாய் இருந்தபோதிலும், ஆதார கருத்துக்கள் அடங்கிய சரித்திர நிகழ்வுகள் மறைந்து போயுள்ளதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். வேதவசனங்களின் விமர்சனம் இங்கு நமக்கு ஒரு பிரச்சனையல்ல. விமர்சனமானது வேதாகமம் மிகவும் உறுதியற்ற சரித்திர பின்னணியத்தை உடையதாய் இருக்கிறது என விமர்சிக்கிறதாய் இருக்கிற்து.

புதை பொருள் ஆராய்ச்சியில் மிகச்சிறிய பகுதியே தோண்டி எடுக்கப்பட்டு, ஒரு சிறிய பகுதிமட்டும் பகுத்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. நாம் ஒரு கலைப்பொருளின் ஒரு சிறு பகுதியை மட்டுமே

உடையவர்களாய் இருக்கிறோம் அவைகளும் கூட அரிமானங்கள், மனித அழிவுக்கு தப்பி இருக்கிறவைகளாய் இருக்கின்றன. அந்த சிறு பகுதி மட்டுமே எஞ்சியிருக்கிறதாய் இருக்கிறது. எஞ்சியுள்ள அந்தப் பகுதி மட்டுமே புதைபொருள் ஆராய்சியாளரால், தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரவேலைப் பொறுத்த மட்டில், 10% க்கும் கீழாக தோண்டி எடுக்கப்பட்ட ஆய்வின்படி, ஒரு சிறிய பகுதி மட்டுமே தோண்டி எடுக்கப்பட்டபடியால், ஒரு நிபுணர் கூறும் பொழுது ஒரு மலையை சுமார் 800 ஆண்டுகள் தோண்டியெடுத்து ஆய்வு செய்தால் மட்டுமே அங்குள்ள சரித்திர நிகழ்வுகளை முழுமையாய் வெளிக்கொண்டு வர இயலும் என்கிறார். சரித்திர ஆசிரியர்கள் வேதாகமத்தின் சர்ச்சைக்குரிய ஆதாரக்கூறுகளை தாங்கள் பெற்றிருப்பதாய் கூறுகிறவர்களாய் இருக்கிறார்கள், அவ்வாறு இருக்கலாம் என அடிக்கடி வாதிடுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

தோண்டி எடுக்கப்பட்டவைகளில் நாம் காண்பது என்னவெனில், பத்தாயிரத்தில் ஒன்றுக்கும் குறைவாகவே சாதனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன, அதைக் கொண்டே சரித்திர ஆசிரியர்கள் நிதானிக்கிறவர்களாய் இருக்கின்றனர் அல்லது வேதாகமத்தை விமர்சிக்கிறர்களாய் இருக்கின்றனர்.

இதைக் குறித்து ஓர் உதாரணம் ஹிடைட் சாம்ராஜ்ஜியத்தைப் பற்றியதாகும், சரித்திர ஆசிரியர்கள் கி மு 19ம் நூற்றாண்டினை குறித்த கட்டுக்கதைகளை அடுக்கிக்கொண்டு செல்வதாகும். எப்படியிருப்பினும் ஒருவர் மத்திய கிழக்கு நாடுகளை தோண்டி எடுப்பாரெனில் கிட்டத்தட்ட 7000 டேப்ளட்களை தோண்டி எடுத்து ஹிடைட் சாம்ராஜ்ஜியத்தை முழுமையை அறிந்துகொள்ள அவசியப்படுவதாய் இருக்கும். மற்றும் அந்த யுகத்தைக்குறித்த பாடப்புத்தகங்களை தெளிவாய் வெளியிட வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதாய் இருக்கும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி, தரியு என்ற மேதியன் பெரிசியர்களால் கோரேஸ் என அறியப்படுகிறார். இந்த அதிகாரத்தில் 28ம் வசனத்தில் இவ்விரு பெயர்களும் குறிப்பிட்ப்பட்டுள்ளது. கோரேஸ் மேதியனாய் கருதப்படுகிறான் அவனது தாயார் மேதிய இராஜாத்தியாய் இருந்தாள், ஆகையால் அவன் மேதிய பெயரை பெற்றவனாய் இருந்தான் அதே சமயத்தில் பெரிசிய பெயரை உடையவனாயும் இருந்தான், காரணம் இரு ஜனத்தாரையும் இனைக்க உதவியாய் இருந்தது. இவனது வயதும் சரியான வயதாய் பொருந்து கிறதாய் இருக்கிறது, இந்த வயதில் நம்மால் அறியப்படுகிற மகாக் கோரேஸ் பாபிலோனுக்குள் நுழைந்தான்.

வசன் 1ல் தானியேலின்தரிசனப்படி, நான்கு சாம்ராஜ்ஜியங்களில் இரண்டாவது சாம்ராஜ்ஜியம் வல்லமையும், மகத்துவத்தையும் அடைகிறதாய் இருக்கிறது. இந்த சாம்ராஜ்ஜியம் அதிக வல்லமையுடையதாய் விளங்குகிறது, ஆனால் செல்வத்தில் இதற்கு முன்னுள்ள இராஜ்ஜியத்தை விட குறைவாய் காணப்படுகிற்து. இருப்பினும் படையெடுப்பின் வெற்றி மூலம் விரைவில் சரிசெய்யப்படுவதாய் அமைந்தது. இந்த சாம்ராஜ்ஜியம் இந்தியாவின் இந்து சமவெளி வரை சென்றது, மேற்கே திரேஸ் வரை பரந்து விரிந்தது, கிழக்கில் ஐரோப்பா கண்டத்தின் பெரும்பகுதி வரை இதன் ஆட்சிக்கு உள்ளடங்கியதாய் இருந்தது.

இக்கால கட்டத்தில் இந்து மதத்தின் மறுமலர்ச்சி இயக்கமாய் ஜைனமதம் தோன்றியது, அதோடு புத்தமதமும்தோன்றியது, மேற்கத்திய நாடுகளி கிரேக்க தத்துவ சாஸ்திரமும் எழும்பலாயின. இது சரித்திரத்தில் மிக முக்கியமான தத்துவ சாஸ்திர காரியங்களாயின. அதன் நடுநாயகமாய் தானியேல் ஒரு பெரிய யூதமனிதனாய் சத்தியத்தை பரவச்செய்ததும் அமைந்தது. நமக்கு முன்னில் இருக்கும் இந்த சிறிய புத்தகமான தானியேலை நாம் குறைவாய் மதிப்பிட்டு விடக்கூடாது. இம்மனிதன் தனது நாட்களில் மிகவும் பிரபலமானவனாய் திகழ்ந்தான், அவனது கிரியைகள் பரந்த நிலையில் வாசித்தறியப்பட்டது. கிரேக்க தத்துவ சாஸ்திரிகளைக் குறித்து நாம் படிக்கும்போது, அவர்கள் கருத்துக்களானது கிழக்கிலும் மேற்கிலும் உள்ளவற்றோடு ஊடுருவியிருக்கிறது என யூகிக்கலாம், ஆனால் எபிரெய தீர்க்கதரிசிகளின் கிரியைகள் மற்றும் தானியேலின் கிரியைகள் கிரேக்கர்களின் கருத்துக்களில் பெரிதளவில் தாக்கத்தை ஏற்படுத்திய இருக்கக் கூடும் என அறிகிறோம்.

இந்த சாம்ராஜ்ஜியத்தில் இக்காலகட்டத்தில் 120 மாகாணங்களாய் பிரிக்கப்பட்டு ஆளப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது, இருப்பினும் இது எஸ்தரின் காலத்தில் 127 மாகாணங்களாய் இருந்ததும் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இவ்விரு காலங்களிலும் நல்ல அரசாங்க அமைப்பு இருந்தது. இராஜ்ஜிய ஆளுகையில் மூன்று நபர்கள் தலைமை வகித்தனர், அவர்களுக்கு மேலாக தானியேல் நிர்வாகம் செய்தான். கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் இறுதி இரவில் இது உறுதி செய்யப்பட்டது என்பதை தானியேல் 5ம் அதிகாரத்தில் காண்கிறோம். இப்படிப்பட்ட கருத்துக்கள் முக்கியம் வாய்ந்தவைகளாய் சுட்டிக்காட்டப்படுகின்றன. இராஜாவின் மகத்துவத்தினால் அவன் புதிய ஆளுநராக நிர்வாகம் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டான். அவன் இராஜ்ஜியத்தில் முதன்மையாய் இருக்க தெரிவு செய்யப்பட்டான்.

வசனம் 3ல் மிகச் சிறந்த சாட்சியினால், வெற்றிபெற்ற மன்னன் தானியேலை தெரிவு செய்து தனது சாம்ராஜ்ஜியத்திற்கு "பிரதாண சிப்பந்தியாய்" இருக்க தெரிவு செய்தான். கோரேஸ்/தரியு முதிர்ச்சி பெற்ற ஒரு நபர் நேர்மையுடன் ஆளுகை செய்வதற்கு தெரிவு செய்ய வேண்டியதாய் இருந்தது. “Yattir” என்ற வார்த்தையின் பொருள் எல்லாவற்றிற்கும் மேலான அல்லது நிறைவான என்பதாகும்,

கைக்கொள்ளுதல்:

சரித்திர ரீதியில் இங்கு நிகழ்ந்த வேதாகமச் சம்பவங்களை நிரூபிக்க இயலவில்லை. என்றபோதிலும், தேவனால் அழைப்பைப்பெற்ற தலைவர்களை இனங்கண்டு கொள்ளுதல் அவசியமானதாய் இருக்கிறது. என்ன நிகழ்ந்தது என்பதை அறிந்து கொள்வதும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. தானியேல் நம்பிக்கைக்கு பாத்திரமான நபராய் விளங்குகிறார்.

நீங்கள் வேலை செய்யுமிடத்தில் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தாலும், முதிர்ந்த விசுவாசி மாறாதவனாய் இருந்து தனது சூழ்லில் நிகழ்கிறவைகளினால் தொடப்படாதவனாய் இருக்கிறான்.

நாம் வேத வசனத்துக்கு முதல் இடம் கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், மற்றும் பதவி உயர்வு, வாழ்க்கை முன்னேற்றம் இரண்டாம் முக்கியத்துவம் உள்ளவைகளாய் இருக்கின்றன. மத்தேயு 6:33. உங்கள் சூழலில் வேதவசனத்துக்கு ஏதாகிலும் குறுக்கீடுமேயானால் அவைகளை புறக்கணிக்கவேண்டும்.

நாம் எப்பொழுதும் நமது வேலைகளைக் கர்த்தருக்கென்று செய்தல் வேண்டும், நாம் செய்யும் வேலை எதுவாயினும் அதை சிறப்பாய் செய்தல் வேண்டும். தற் புகழ்ச்சிக்காய் செய்தல் கூடாது, நமது கிறிஸ்தவ விசுவாசத்திற்கேற்ப சாட்சியுடன் செயல்படுதல் வேண்டும்.

DOCTRINE உபதேசம்:

HOLY SPIRIT: MINISTRY IN THE OLD TESTAMENT பரிசுத்த ஆவியானவர் - பழைய ஏற்பாட்டில் அவரது ஊழியம்.

பகுதி 28 - அழிப்பதற்கான சதி ஆலோசனை தானியேல் 6:4-9.

4 அப்பொழுது பிரதானிகளும் தேசாதிபதிகளும் இராஜ்ஜியத்தின் விசாரிப்பிலே தானியேலைக் குற்றப்படுத்தும்படி முகாந்தரம் தேடினார்கள். ஆனாலும் ஒரு முகாந்தரத்தையும், குற்றத்தையும் கண்டுபிடிக்க அவர்களால் கூடாதிருந்தது. அவன் உண்மையுள்ளவனாய் இருந்தபடியால், அவன் மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறையும் காணப்படவில்லை. 5 அப்பொழுது அந்த மனுஷர் நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய வேதவிஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்ககூடாது என்றார்கள். 6 பின்பு அந்தப் பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி இராஜாவினிடத்தில் போய் அவனை நோக்கி: தரியு இராஜாவே நீர் என்றும் வாழ்க. 7 எவனாகிலும் முப்பது நாள் வரையில் இராஜாவாகிய உம்மைத் தவிர எந்த தேவனையாகிலும் மனுஷனையானாலும் நோக்கி; யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம் பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட, இராஜா கட்டளை பிறப்பித்து, உறுதியான தாக்கீது செய்யவேண்டுமென்று இராஜ்ஜியத்தினுடைய எல்லாப் பிரதானிகளும், தேசாதிபதிகளும், பிரபுக்களும், மந்திரிமார்களும், தலைவர்களும் ஆலோசனை பண்ணிக்கொண்டிருகிறார்கள். 8 ஆதலால் இப்போதும் இராஜாவே, மேதியருக்கும் பெரிசியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படி நீர் அதைக் கட்டளையிட்டு, அதற்குக் கையெழுத்து வைக்கவேண்டும் என்றார்கள். 9 அப்படியே இராஜாவாகிய தரியு அந்த்க் கட்டளைப்பத்திரத்துக்கு கையெழுத்து வைத்தான்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 4 ல் மனோரீதியான பாவங்கள் பொறாமை என்னும் ரூபத்தில் நிர்வாகத்தில் கிரியை செய்வதை நாம் காண்கிறோம். காரணம் திறமை மற்றும் ஊழலற்ற ஆட்சி திறமையானது தானியேலில் கண்டமையால், மற்றவர்களின் திறமை குறைவான மற்றும் மிகவும் வளைந்து கொடுக்கிற ஆட்சிமுறை செய்ததினால் உண்டான பொறாமை அவனது வீழ்ச்சிகாக அவர்களை முயற்சி செய்ய தூண்டுவதாய் இருந்தது.

"முகாந்திரம் தேடினார்கள்" என்னும் சொற்றொடர் நிரந்தரமாய் தேடினார்கள் மற்றவர்கள்த் தொடர்ச்சியாய் தானியேலை நிரந்தரமாய் ஒழித்துக்கட்ட முயற்சித்தார்கள், ஆகிலும் அவர்கள் ஒன்றும் காண இயலாததால் மிகவும் சோர்வுக்குள்ளானார்கள். வசனம் 5ல் தானியேலின்

செயல்பாடுகள் மிகவும் நீதியாயும் உண்மையுமாய் இருக்கக்கண்டார்கள், அவனது குணாம்சத்தில் எவ்வித குற்றத்தையும் காண இயலாதவர்களாயும் இராஜா அவனை பதவி நீக்கம் செய்வதற்கான எவ்வித முகாந்தரத்தையும் கண்டு கொள்ள இயலாதவர்களாய் காணப்பட்டனர்.

எப்படியிருப்பினும் ஒரு விஷயத்தைக் கண்டுகொண்டனர், அது தானியேல் தேவனுக்கு கீழ்ப்படிகிற விஷயமாய் இருந்தது. அவன் இராஜாவுக்கு உண்மையாய் இருப்பதற்கும், தேவனிடத்தில் பயபக்தியாய் இருப்பதற்குமிடையே உள்ள முறண்பாட்டைக் கண்டுகொண்டனர். வசனம் 6ல் கூட்டங்கூடி இவ்வார்த்தை மூலமொழியில் “Regash" என்று வருகிறது இதன் பொருள் சதித்திட்டம் திட்டம் தீட்டுவதற்கு ஒன்றுகூடினர் என்பது பொருளாகும். தானியேலை ஒழித்துக் கட்ட சதித்திட்டம் தீட்டினார்கள். அவர்கள் தேவன் தமது ஸ்திரீ புருஷரைக் காக்கிறவர் என்பதை மறந்து போனார்கள். அவர்களுக்கு எதிராய் நிற்பவர்களுக்கு எதிராய் தேவன் எதிர்த்து நிற்கிறார் என்பதையும் மறந்து போனார்கள். சங்கீதம் 2. இப்படிப்பட்ட ஜனங்கள் இராஜாவாகிய கோரேஸ்/தரியுவை தங்கள் வசப்படுத்திக்கொள்ள ஒன்று கூடினர். இம்மனிதனாகிய தானியேல் நல்ல காரணங்களுக்காக "பெரியவர்" என அழைக்கப்பட்டான் அவனிடத்தில் ஒரு குற்றமும், ஊழலும், பிராதும் காணப்படாது இருந்தது.

அவர்கள் இராஜாவை அணுகும் போது "இராஜாவே நீர் வாழ்க" என்ற சொற்றொடரை பயன்படுத்தினர், இது இராஜாவைக் குறிப்பிடும் வழக்கச்சொல்லாய் இருந்து வந்தது, இது எல்லா தலைவர்களும் செய்யும் மாய்மாலமாய் இருந்தது. இது தலைமை நிர்வாகம் செய்யும் தானியேலுக்கு விரோதமான செயல்பாடாய் இருந்தது.

இந்த சட்டமானது இராஜ்ஜிய நிர்வாகத்தை முப்பது நாளளவும் கட்டி வைப்பதாய் அமைந்தது, எல்லா கொள்கைகளின் தீர்மானமும் இராஜா எடுக்க வேண்டியதாய் அமைந்தது. மேதிய பெரிசிய சட்டத்தில் மதச் சம்பிரதாயங்களை மாற்றி அமைக்கும் முறைமை இருந்தது மற்றும் கடவுளுக்குப் பதிலாய் வேறொன்றை ஏற்படுத்தும் சட்டமும் இருந்தது. இது அவர்களது சட்டத்தின் பெலவீனமாய் இருந்தது, இவ்வித செயல்பாடுகளால் அவர்களது சட்டத்தை அமல்படுத்த ஒரு விக்கிரகத்தை வணங்கும்படி செய்யலாம் மற்றும் இராஜ வணக்கமானது இது மூலம் அறிமுகம் செய்யப்படுகிறதாய் இருந்தது.

இராஜ வணக்கமானது இந்த வேதபகுதியில் சுட்டிக்காட்டப்படுகிறதாய் இருக்கிறது, எதிர் காலத்தில் இது அந்திக்கிறிஸ்துவின் சிலை வணக்கத்திற்கு ஒப்பாய் கிறிஸ்தவர்களுக்கு அறிமுகப்படுத்தபடுவதாய்

இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் சாத்தானின் அடையாளங்களாய் அமைந்து பெரிசிய சாம்ராஜ்ஜியத்தில் விசுவாசிகளை அழிக்க பயன்படுத்தப்பட்டதாய் இருக்கிறது. இது பின்னர் பெரிசிய சபையில் ஒரு பழக்கமாகி சபையில் வருகிற பார்வையாளர்கள் அரசனை வணங்க அவசியம் ஏற்பட்டது. எஸ்தரின் காலத்திலும் இது அமலில் இருந்து வந்தது.

அரசனை சந்திக்க வரும் அந்நியன் கீழ்க்கண்டவாறு அரசன் முன்னிலையில் கூற வேண்டுமாம்:-

"சட்டங்களுக்கு அந்நியரான மனிதர்கள் வித்தியாசமானவர்களும், தங்களது சொந்த சட்டங்களுக்கு மரியாதை கொடுக்க கடமைபட்டவர்களுமாய் இருக்கிறார்கள். கிரேக்கர்களின் பழக்க வழக்கத்தின்படி, விடுதலை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் எல்லா மன்னர்களையும் மதித்து, அநேக சட்டங்கள் மத்தியில் இதைக் கடைபிடிக்க கடமைபட்டுள்ளோம். மன்னரைக் கனப்படுத்தவும், அவரை பணிந்து கொள்ளவும், அண்டசராசரத்தை பாதுகாக்கும் தன்மை கொண்டவரானபடியால் அவரை பணிந்து கொள்ள கடமை பட்டுள்ளோம். நமது சட்டங்களோடு நாம் ஒத்துப்போவதால் மன்னனுக்கு முன்பாக விழுந்து பணிந்து வணங்குகிறோம், அவரைக் காணும்போதும், அவருடன் பேசும்போதும் இதைச் செய்கிறோம். மனதாலும் நினைவாலும் இதைச் செய்து உனக்காய் மற்றவர்கள் பரிந்து பேச செய்கிறவர்களாய் இருக்கிறோம். மன்னன் தன்னை வணங்க மறுப்போருக்கு வழிநடத்துதல் அளிப்பது தேசிய பழவழக்கமாய் இராமல் இருக்கிறது."

தரியு/கோரேஸ் இப்பொழுது சுயகௌரவத்தின் அடிப்படையில், எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல், தலைவர்கள் கொன்டுவந்த பத்திரத்திரத்திற்கு முப்பது நாள் வரையும் செல்லும்படி கையொப்பம் இட்டான். இது "தீட்டப்பட்ட சதி" யாக இருந்தமையால் அரசன் இதில் விழுந்தான். இது நெபுகாத்நேச்சார் தீமையில் விழுந்ததின் அடிப்படையில் இருந்தது. பெருமையானது அரசனை தீடீர் தாக்குதல் செய்தது, மற்றும் பெருமை மற்றும் கர்வம் போன்றவை மூலம் சாத்தான் பெரிய மனிதர்களுக்கு திடீர் தாக்குதல் நடத்துகிறான். இம்மனிதர் தான் விசேஷித்தவன் என விசுவாசித்தான், என்றபோதிலும் இவன் தேவனது திட்டத்திற்கு கீழ் இருப்பதை அறிய வேண்டியவனாய் இருந்தான்.

சுயத்தை மையமாய் கொண்ட பெருமையானது ஆபத்து நிறைந்ததாய் இருக்கிறது, நாம் சாதாரண மனிதராய் இருக்கிறோம். உதாரணமாக மகா கோரேஸ் இச்சம்பவத்திற்கு பின்னர், வட எல்லையில் அவசியமற்ற ஒரு சண்டையில் அவன் மரிக்க நேர்ந்தது, இச்சண்டையில் தனது

பெருமையினால் அவசியமற்ற சண்டை செய்து அவர்களை அடக்கப் பார்த்தான். அவர்களது அரசியால் வழிநடத்தப்பட்ட பழங்குடியினர் அவனை கொன்று போட்டனர், அவனது இராணுவம் தோற்றுப்போன நிலையில் திரும்ப அனுப்பப்பட்டது. இம்மனிதன் கோரேஸ் ஒரு விசுவாசியைப் போல தோற்றமளித்தான், ஆனால் நெபுகாத்நேச்சாரைப்போன்றல்ல. பெருமைக்கு விரோதமான யுத்தத்தில் வெற்றி காணவில்லை, தனது வாழ்வை நல்நோக்கத்திற்காய் இவன் இழந்து போகவில்லை.

கைக்கொள்ளுதல்:

எந்த ஒரு ஸ்தாபனத்திலும் நீங்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவராய் இருப்பீர்களானால், அங்கேயுள்ள மக்கள் உங்களை கீழடக்க முயலுவார்கள், அல்லது உங்களை வணங்க முயலுவார்கள். இப்படிப்பட்ட இரு சாராரும் மிகவும் அபாயகரமானவர்கள், இவர்களை தாழ்மையுடன் சந்தித்து வேதாம உபதேசத்தால் அஸ்திபாரமிடப்பட்டு ஜாக்கிரதையுடன் செயல்பட வேண்டும்.

சாதாரண திறமையுடைய மக்கள் மிகவும் திறமை மிக்கவர்கள் மிகவும் அக்கரை கொண்டவர்களாய் அவர்களை தரங்குறைந்தவர்களாய் காட்டுவார்கள். இதுவே சரித்திரத்தில் யூதமக்களை வெறுத்துவிட ஒரு காரணமாய் இருந்தது, அவர்கள் பிறமக்களால் அவமதிக்கப்பட்டும், அவதூறுக்கும் உள்ளானார்கள். சோம்பலும் திறமையற்ற மக்களுள் தானியேல் மிகவும் சிறப்பானவராய் காணப்பட்டபடியால், மற்றவர்கள் தாக்குதலுக்கு ஆளானார்.

ஒவ்வொருவரும் சமமாய் உருவாக்கப்படவில்லை, அவர்கள் சமமான திறமையும் பெற்றிருக்கவில்லை. ஆனால் ஞானமுள்ள அரசாங்கம் திறமையுள்ளவர்களை கண்டறிகிறதாய் இருக்கிறது. பெரிதும் மகத்துவமான மனித சாம்ராஜ்ஜியத்தின் அடையாளம் என்னவெனில், வரம் பெற்ற மற்றும் திறமையுள்ள மனிதர்களை கண்டுகொண்டு, அவர்களை பாராட்டி வெகுமானம் அளித்து, திறமையற்றவர்கள் மற்றும் சோம்பேறிகளை அகற்றிப்போடுகிறது. உண்மையான சமத்துவம் கண்டுகொள்ளப்படுவது கிறிஸ்துவின் சரீரத்தில் மட்டுமே, நாம் அனைவரும் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவோடு இணைக்கப்படும்பொழுது, அனைவரும் பரிசுத்த ஆவியானவர் மூலம் நிரப்பப்பட்டு இந்த சிலாக்கியத்திற்குள்ளாகிறோம்.

சபையில் எல்லா வரங்களும் சேவை செய்யும் வரங்களாய் இருக்கின்றன மற்றும் அவைகள் மற்றவர்களுக்கு உதவும்படி அளிக்கப்பட்டுள்ளது,

மற்றவர்களை ஆளுகை செய்ய அல்லது மற்றவர்களை தாழ்த்திப்போட அல்ல.

விசுவாசிகள் ஸ்தாபனத்தில் அதிக பட்ச சாட்சியினை உருவாக்குகிறவர்களாய் இருத்தல் வேண்டும், அவர்களது ஆவிக்குரிய திறமைகளை வெளிக்காட்டி, அவர்களது வாழ்வின் தனித்திறமைகளை வெளிக்காட்டுதல் வேண்டும்.

உண்மையுள்ள தலைவர்களுக்கு தெய்வீகக் கண்ணோட்டமில்லை எனில் எளிமையான தீர்மானங்களுக்கு ஒப்புக்கொடுக்கிறவர்களாய் இருப்பர்.

DOCTRINE உபதேசம்:

LAWS IN THE NEW TESTAMENT புதிய ஏற்பாட்டில் உள்ள பிரமாணங்கள்:

பகுதி 29 - தானியேலின் ஜெபம் தானியேக் 6:10-15.

10 தானியேலோவென்றால், அந்த பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க அங்கே தான் முன் செய்துவந்தபடியே தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான். 11 அப்பொழுது அந்த மனுஷர் கூட்டங்கூடி, தானியேல் தன் தேவனுக்கு முன்பாக ஜெபம்பண்ணி விண்ணப்பம் செய்கிறதைக் கண்டார்கள். 12 பின்பு அவர்கள் இராஜாவுக்கு முன்பாக வந்து, இராஜாவின் தாக்கீதைக் குறித்து; எந்த மனுஷனாகிலும் முப்பது நாள் வரையில் இராஜாவாகிய உம்மைத்தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக் குறித்து விண்ணப்பம்பண்ணினால் அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்பட வேண்டும் என்று நீர் கட்டளைப்பத்திரத்தில் கையெழுத்து வைத்தீர் அல்லவா என்றார்கள், அதற்கு இராஜா: அந்தக் காரியம் மேதியருக்கும் பெரிசியருக்கும் இருக்கிற பிரமாணத்தின் படி உறுதியாக்கப்பட்டதே என்றான். 13 அப்பொழுது அவர்கள் இராஜாவை நோக்கி: சிறைபிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன்

உம்மையும் நீர் கையெழுத்து வைத்துக் கொடுத்த கட்டளையையும் மதியாமல் தினமும் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணுகிறான் என்றார்கள். 14 இராஜா இந்த வார்த்தைகளைக் கேட்ட போது, தன்னில் மிகவும் சஞ்சலப்பட்டு, தானியேலைக் காப்பற்றும்படிக்கு அவன் பேரில் தன் மனதை வைத்து, அவனைத் தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்கு மட்டும் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தான். 15 அப்பொழுது அந்த மனுஷர் இராஜாவிடத்தில் கூட்டமாய் வந்து; இராஜா கட்டளையிட்ட எந்த தாக்கீதும் கட்டளையும் மாற்றக்கூடாதென்பது மேதியருக்கும் பெரிசியருக்கும் பிரமாணமாயிருக்கிறதென்று அறிவீராக என்றார்கள்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

தானியேல் பலகணிகளை திறந்து வைத்து ஜெபித்தான், காரணம் அவன் ஜெபிப்பதை அனைவரும் காணவேண்டுமென்றிருந்தான். தரியு அரசனிடம் அவன் விண்ணப்பம் பண்ணாது இருந்தது தெளிவாய் இருந்தது, அவனது கண்ணோட்டம் கர்த்தர் மேல் இருந்தது மற்றும் அவனது திட்டப்படி அவனது அனுதின பழக்க வழக்கத்தை மாற்றாது செயல்பட்டான், மனிதரின் கோரிக்கைகளை அவன் பொருட்படுத்தவில்லை. தானியேல் மரிக்கவும் ஆயத்தமாய் இருந்தான். இக்காரியத்தினால் நாம் அனைவரும் சவாலுக்கு உள்ளாகிறவர்களாயிருக்கிறோம், கடந்தகால யுகத்தில் மரித்த இரத்தசாட்சிக்ளுடன் நாமும் நிற்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். சரியான காரியத்துக்கு நாம் கர்த்தருடன் இணைந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், நமது பாது காப்பை கருதுதல் கூடாது.

கடந்த காலத்தில், விசுவாசிகளின் மனோநிலையானது வித்தியாசமானதாய் இருந்தது. சவுல் மிகவும்கரிசனையுள்ளவனாய் இருந்து எல்லா வழிகளிலும் ஒத்துப்போகிறவனாய் இருந்தான், தாவீதோ பாவம் செய்தும் அவன் ஒத்துப்போகாதவனாய் காணப்பட்டான். தேவன் கர்த்தரின் பாடுகளில் ஐக்கியங்கொள்கிறவர்களை தேடுகிறவராய் இருக்கிறார், 2 கொரி. 1:5-7, பிலிப்பியர் 3:10, 1 பேதுரு 4:13.

தானியேல் பத்திரத்தில் கையெழுத்து வைக்கப்பட்டதை அறிந்தவுடன், தனது முழங்காலில் நின்று மூன்று வேளையும் எருசலேமுக்கு நேராக ஜன்னலின் கதவுகளை திறந்து வைத்து அனைவரும் காணும் வண்ணம் ஜெபிக்கிறவனாய் இருந்தான். மற்றும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறவனாயும் காணப்பட்டான். அவன் முறண்பாடற்றவனாய் இருந்தான், மதியீனமான சட்டத்தை அவன் ஒரு பொருட்டாக

எண்ணவில்லை. தானியேல் தனக்கு முன்பாக எரேமியாவின் வார்த்தைகளை வைத்து அவைகளை விசுவாசித்தான். அவன் தனது ஜனங்களுக்காக ஜெபிக்கிறவனாய் காணப்பட்டான். எரேமியா 25:11-12. தானியேல் தங்களது சிறையிருப்பின் காலம் நிறைவு பெற்றுவிட்டதை அறிந்தவனாய் இருந்தான். அவன் பாபிலோனுக்கு வந்து சேர்ந்த வருடம் கி மு 605 - 635.

தானியேல் தனது நற்பெயர் மற்றும் வாழ்க்கை முழுமையையும், திறப்பில் நின்று தனது ஜனங்களுக்காய் பரிந்து பேசி ஜெபிப்பதில் அமைத்துக் கொண்டான். அவன் செய்ய வேண்டியதெல்லாம் ஜன்னலின் கதவுகளை மூடிக்கொண்டு, தன்னை ஒருவரும் காணாவண்ணம் ஜெபிக்க வேண்டியதாய் இருந்தது. அவன் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாய் இருந்தமையால் தன்னை அத்றகு ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறவனாய் காணப்பட்டான். அச்சூழலில் அவன் கர்த்தர் மீது நம்பிக்கை வைத்தான், என்ன நடந்தாலும் அது தேவனது நாம மகிமைக்காகவே நிகழும் என நிச்சயித்து இருந்தான், இதற்கு முன் மூன்று சிநேகிதருக்கு நேர்ந்ததே தனக்கும் சம்பவிக்கும் என்பதை அறிந்திருந்தான்.

பலகணிகளை திறந்து வைத்து தானியேல் ஜெபிக்க காரணம் என்ன? இதற்கான பதில் **எரேமியா 29:10-13ல்** கொடுக்கப்பட்டுள்ளது. *"10 பாபிலோனிலே எழுபது வருஷம் நிறைவேறிய பின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். 11 நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார், அவைகள் தீமைக்கல்ல சமாதானத்துக்கேதுவான நினைவுகளே. 12 அப்பொழுது நீங்கள் கூடிவந்து என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள், நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். 13 உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டு பிடிப்பீர்கள்.*

வசனம் 10ல் தெற்கு இராஜ்ஜியமான யூதேயாவின் சிறையிருப்பு, இதற்குமுன் 120 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த வட இராஜ்ஜியமான இஸ்ரவேல் போன்றிராது 70 ஆண்டுகள் மட்டுமே சிறையிருப்பிலிருந்து மீளுகிறதாய் இருந்தது. தானியேல் முன்னதாகவே இவ்வேதவசனங்களை வாசித்து, இதில் உள்ள வாக்குத்தத்தை கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு உரிமைபாராட்டியிருக்க வேண்டும். தானியேல் 70 வருடங்கள் நிறைவேறிவிட்டதை அறிந்திருந்தான்.

வசனம் 11 - 13ல் தேவனது வாக்குத்தத்தங்களை நாம் காண்கிறோம், தற்போது தானியேல் அவைகளை உரிமைபாராட்டி, இராஜாவின் கட்டளையை பொருட்படுத்தாது, இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்து திரும்புவது தனது பாதுகாப்பை விட முக்கியம் எனக் கருதுகிறவனாய் இருந்தான். அவன் தொடர்ந்து ஜெபிக்கிறவனாய் காணப்பட்டான், தீமைக்கு முடிவுண்டாக்க எண்ணினான். தமது ஜனங்கள் பின்னர் தாக்குதலுக்கு உள்ளாவார்கள் என்பதை அறிந்திருந்தான், தான் தற்போது தாக்கப்படுவதால் தனது ஜனங்கள் பின்னர் தாக்கப்படுவதிலிருந்து மாற்றப்படக்கூடும் என்பதை அறிந்திருந்தான், தமது ஜனங்கள் திரும்புவது உறுதியான காரியம் என்பதை அறிந்திருந்தான்.

தானியேல் தேவனது வார்த்தையை கைக்கொள்ளுவது, இக்காலக்கட்டத்தில் அவசியம் என்பதை உணர்ந்தான். சிறையிருப்பிலிருந்து திரும்புகிற காலம் அருகில் இருப்பதை அறிந்தவனாய் இருந்தான். அதிகம் ஜெபிக்க வேண்டும் என உணர்ந்தான்

1 இராஜாக்கள் 8:28 -- 29ல் தானியேல் தனது ஜன்னலின் கதவுகள் திறந்திருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான. எருசலேம் நோக்கி ஜெபிப்பதன் அவசியத்தையும் உணர்ந்து கொண்டான் காரணம் எருச்லேமே தமது ஜனங்களின் உண்மையான ஆராதனை ஸ்தலமாய் அமைந்திருந்தது. இதினிமித்தமே தானியேல் எருசலேம் நோக்கி ஜெபிக்கிறவனாய் இருந்தான்.

1 இராஜாக்கள் 8:28 - 29 கூறுகிறது, *"28 என் தேவனாகிய கர்த்தாவே, உமது அடியேன் இன்று உமது சந்நிதியில் செய்கிற விண்ணப்பத்தியும், மன்றாட்டையும் கேட்டு, உமது அடியேனுடைய விண்ணப்பத்தையும், வேண்டுதலையும் திருவுளத்தில் கொண்டருளும். 29 உமது அடியேன் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக் கேட்கும்படி என்னுடைய நாமம் விளங்குமென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்த ஆலயத்தின்மேல் உம்முடைய கண்கள் இரவும் பகலும் திறந்திருப்பதாக."*

சமாரியாவின் கிணற்றண்டையிலே இயேசு சந்தித்த பெண்மனியை நாம் நினைவு கூறும்போது யோவான் 4:20 - 24. இதுநாள் வரைக்கும் மனிதர் எருச்லேமில் ஆராதித்து வந்தனர் எதிர் காலத்தில் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளப்போகிறார்கள். நமது யுகத்தில் பெந்தெகொஸ்தே நாளில் சபை பிறந்த அந்நாள் முதற்கொண்டு ஆவியானவர் எல்லா விசுவாசிகளுக்குள்ளும் வாசம் செய்வதால், உண்மையோடும் தொழுது கொண்டு வருகிறார்கள்.

இதன் பொருள் நாம் தேவனை எந்த இடத்திலும் தொழுது கொள்ள முடியும், மற்றும் எத்திசையை நோக்கியும் பரிசுத்த ஆவியானவர் நிறை

வுடன் ஜெபிக்கலாம் காரணம் தேவனது வல்லமையினால் நிரப்பப்பட்டு, அவரது திட்டத்தின் படி நடக்கிறவர்களாய் இருக்கிறோம். எப்படியிருப்பினும் ரோமர் 9:11ல் இஸ்ரவேலரை தேவன் திரும்பச் சேர்த்துக்கொள்ளப்போகிறார், அக்காலத்தில் எருசலேம் அவரது சிங்காசனமாய் இருக்கும்.

தானியேல் தற்போது இஸ்ரவேலின் தேவனுக்கு இணங்கி செல்கிறவராய் இருக்கிறார், ஆனால் இப்போது அவர் மேதிய பெரிசிய அரசனால் ஒரு கோரிக்கையை பெற்றுக்கொள்கிறவராய் இருக்கிறார்.

சங்கீதம் 55:17ல் எத்துனைதரம் அவர் ஜெபித்தார் என்பதைக் காண்கிறோம். "அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்ப:ண்ணி முறையிடுவேன். அவர் என் சத்தத்தைக் கேட்பார்." இவைகள் யூதரின் ஜெப வேளையாய் இருக்கிறது, காலை 9 மணி, மதியம் 12/00 மணி, மாலை 6:00 மணி.

தாவீது தேவன்து இருதயத்திற்கு ஏற்ற மனுஷன் என அறியப்பட்டார். தானியேலின் வேதாகமத்தில் தாவீதின் சங்கீதம் இடம் பெற்றிருந்தது. இதிலிருந்து தானியேல் எருச்லேமை நோக்கி சத்தமாய் மூன்று வேளையும் ஜெபிக்க தலைப்பட்டார் என்பது தெளிவாகிறது. இதையே கணக்கச்சிதமாய் வசனம் 10ல் செய்கிறவரய் இருந்தார். இவ்வகையான வாழ்க்கை முறையானது, சரிசெய்ய நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. தானியேல் இக்காலக் கட்டத்தில் வயது சென்றவராயும் 85 வயது நிரம்பியவராயும் காணப்பட்டார்.

வசனம் 11ல் விரோதமாய் கூட்டங்கூடினவர்கள் மனோரீதியான பாவங்களால் நிறைந்து காணப்பட்டனர். **நீதிமொழிகள் 6:16-19.** விசுவாசி ஒரு அமைப்பில் அவசியப்படாத வேளைகளில், மக்கள் பொறாமை கொண்டவர்களாய் உங்களை அகற்றிவிட எத்தனிப்பர். சாத்தானின் பகைமை எண்ணம் எப்பொழுதும் உங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கும். **யோவான் 15:18-26**. ஏன் இந்த மனிதர் தானியேல் 80 வயதுக்கும் மேல் வயது சென்றவராய் இருந்தும் அவர்களால் காத்திருக்கக் கூடாது போயிற்று ? அவரது மரணத்திற்காய் அவர்கள் காத்திருந்திருக்கலாமே? சாத்தானால் தூண்டிவிடப்படுகிற மனிதர் காத்திருக்க மாட்டார்கள், சாத்தானின் பகைமை எண்ணம் அவர்களது பொறுமையை இழக்கச் செய்து அவர்களது இச்சைகளைத் தூண்டுகிறதாய் இருக்கும்.

வசனம் 12 மற்றும் 13ல் அவர்கள் இராஜாவை அணுகி அவனிடம் அவன் தாக்கீதுக்கு கையெழுத்து இட்டதை நினைவுபடுத்தினர். அவர்கள்

இராஜாவை தங்கள் வசப்படுத்திக்கொள்ள முயன்றனர், தானியேல் அயல்நாட்டைச் சேர்ந்தவர் என்றும் அவன் இராஜாவின் தாக்கீதை ஏற்றுக்கொள்ள மறுத்து வெளிப்படையாக மூன்று வேளையும் தேவனை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறான் என்று கூறினர். அவர்கள் இதை தனிப்பட்ட காரியமாக்கினர், அதை இராஜாவின் இறுமாப்புடன் கொக்கியிட எத்தனித்தனர், அதை அவர்கள் சொந்த காரியமென தவறாய் நம்பினர்.

அவர்கள் கூறினர், "தானியேல் இராஜவை ஒரு பொருட்டாக எண்ணவில்லை அவரது தாக்கீதை அவர் மதிக்கவில்லை" என்றனர். அவர்கள் கோரேஸ்/தரியு வின் பெருமைக்கு மேல்முறையீடு செய்தனர். தானியேல் இராஜாவின் உற்ற நண்பராய் திகழ்ந்தார், அவரை தங்களது "மனித இராஜ்ஜியத்தின்" தத்துவ அடிப்படையில் அவரை பிடித்தவர்கள் அவர் உண்மையுள்ளவராய் இருந்த போதிலும் அவரை நசுக்கும்படி எத்தனித்தனர். இராஜா தானியேலை உண்மை மரியாதையுடன் அன்புகூர்ந்தான், இம்மனிதர்களால் தானியேல் பிடிபட்டபோது, பெருமையுடன் ஒத்துப்போகிறவர்களாய் மனித இராஜ்ஜியத்தில் செயல்பட்டனர்.

வசனம் 14ல் தரியு/கோரேஸ் தான் தீமையான ஆலோசனையால் பிடிபட்டிருப்பதை உணர்ந்தான். தன்னால் இயன்ற அவசர தீர்மானங்களை எடுக்க முயன்றான். அவன் தன்னில் தானே மிகவும் குழப்பமுற்று காணப்பட்டான். தனது நிர் வாகத்தில் ஞானத்தில் சிறந்த, வயதில் முதிர்ந்த, பழமைவாய்ந்த நிர்வாகி, தனது பெருமை அகம்பாவத்தினால், தீய மனிதரின் சொற்கேட்டு மரண தண்டனை அளிப்பது இராஜாவுக்கு கடினமான காரியமாய் விளங்கியது. கோரேஸ்/தரியு இப்பொழுது தானியேலை தப்புவிக்க சட்டரீதியான தீர்வுகளை அந்த நாள் முழுவதும் தேடி முயன்று கொண்டிருந்தான்.

சாத்தானின் எண்ணப்படி தானியேலை பிடித்த மனித இராஜ்ஜியத்திற்குட்பட்டோர், தரியு/ கோரேஸை அதிகமாய் நெருக்க தலைப்பட்டனர், மேதிய பெரிசிய சட்டத்தின்படி இயற்றப்பட்ட சட்டத்தை எக்காரணம் கொண்டும் மாற்றி அமைப்பது கூடாததாய் இருந்தது. சாத்தானின் சதிஆலோசனை மேற்கொண்ட் போதிலும், ஜெபம் தனது வெலையை செய்யத் துவங்கியது, இப்பொழுது இராஜா தனது மதியீனத்தை உணரத்துவங்கினான், கொடிய மக்களின் சதி ஆலோசனையையும் உணர்ந்து கொண்டான். (சாத்தானின் மனிதர்கள் நீண்ட காலத்திற்கு புத்திமான்களாய் இருக்க முடியாது).

கைக்கொள்ளுதல்:

தாக்கீதைக் குறித்து தானியேல் கேள்விப்பட்டார் மற்றும் தனது ஜெபவாழ்வை அனைவரும் காணும் வண்ணம் அமைத்துக் கொண்டார்.

கீழ்க்கண்ட அடிப்படைக்கருத்துக்களை தனது வாழ்விற்கு அமைத்துக் கொண்டார்:-

[அ] தனது வழியை அவர் கர்த்தருக்கென ஒப்புக்கொடுத்தார் - சங்கீதம் 55:22.

[ஆ] தேவனது சத்தியத்தை தனது வாழ்க்கைக்கு கைக்கொண்டபடியால், கிறிஸ்துவுடன் செயலாற்றுகிறவராய் விளங்கினார் - சங்கீதம் 37:4-5.

[இ] தானியேல் இச்சதி ஆலோசனையை ஏற்றுக்கொண்டார் காரணம் கர்த்தர் அதனூடாக கடந்து செல்ல அனுமதித்து இருந்தார் - ஏசாயா 28:29.

[ஈ] அந்த நெருக்கடியான சூழலுக்காய் அவர் தேவனுக்கு நன்றி சொன்னார். - 1 சாமுவேல் 3:18b.

[உ] காரணங்களை அறிந்த தானியேல் அமைதியுடனும், கவலை கொள்ளாதவருமாய் இருந்தார். - நீதிமொழிகள் 3:5-6.

[ஊ] அவர் மனச்சோர்வடையவில்லை ஆனால் தொடர்ந்து சமாதானத்துடன் காணப்பட்டார். - ஏசாயா 26:3-4.

[எ] தானியேல் அச்சூழலுக்கு தக்கவாறு தேவனது திட்டம் மற்றும் அவரது குணாதிசயத்தை கைக்கொண்டார். - சங்கீதம் 57: 2-3.

இவைகளைச் செய்வதற்கு கர்த்தர் மீதும் அவரது வார்த்தையின் மீதும் நம்பிக்கை வைத்தல் அவசியம். அவரது வாக்குத்தத்தங்கள் மற்றும் அவரது உபதேசங்கள் மீது நீங்கள் நம்பிக்கை வைத்தல் வேண்டும். அவர்கள் தேவனது பரிசுத்த குணாதிசயத்தினால் நிறைந்து காணப்பட்டனர். அவைகளை நம்புவதற்கு நீங்கள் வாசிக்க/கேட்க/ அறிந்திருத்தல் வேண்டும், அனுதின வாழ்வில் அவைகளை கைக்கொண்டு நடத்தல் வேண்டும்.

தரியு/கோரேஸ் தனது மதியீனத்தில் சிக்கிக்கொண்டதைக் கண்டான். தானியேல் தனது என்பதாவது வயதில் அல்லது தொண்ணூறு வயது ஆரம்பத்தில் சிங்கக் கெபியில் போடப்பட்டார், அவர் சிங்கங்களால் சேதமின்றி காக்கப்பட்டார், ஆனல் அவரை குற்றம் சாட்டினவர்கள் போடப்பட்டபோது அவைகளால் பீறிப்போடப்பட்டனர்.

தேவனது வார்த்தையானது தெளிவாய் கட்டளையிடுவது என்னவென்றால் தேவனது பிரமாணமானது தேசிய பிரமாணத்திற்கு ஒத்துப்போகச் செய்யப்படாது இருக்குமேயானால், நமது வாழ்க்கையை தேவனது கரங்களில் அற்பணித்துவிட்டு தேசிய பிரமாணத்திற்கு கீழ்ப்படிய மறுத்தல் வேண்டும். ஒரு நபர் வயதில் முதிர்ந்தராய் இருக்கும்போது, இது போன்ற சந்தர்ப்பங்களில் தங்களது விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் இயேசுவுடன் நடப்பதையும் ஆவிக்குரிய நிலையில் வெளிக்காட்டுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

<u>சில அடிப்படை கருத்துக்கள்:</u>

ஒரு இராஜ்ஜியத்தின் வளர்ச்சி மற்றும் தளர்ச்சி பூமியின் மீதுள்ள ஒரு விசுவாசிக்கான தேவனது திட்டத்தை மாற்றமுடியாது.

தேசங்கள் சீர்கேடடையும்போது தேவன் அதை சிட்சிக்கிறவராய் இருக்கிறார்.

தேவனது பணி யுகத்தில் வெற்றி தடையாய் அமைவதில்லை. [In God's service age does not hinder success.]

பொறாமை என்கிற பாவமானது எளிதாக மனோரீதியான கொலைக்கு மாற்றப்படும், அதன் விளைவு வெளிப்படையான பாவங்களாய் இருக்கும்.

மனோரீதியான பாவங்கள் மற்றவகளின் வாழ்க்கையை பாதிப்பதாய் இருக்கும்.

நீங்கள் மனோரீதியான பாவங்களுக்கு உட்படுவீர்களானால் அதற்கு பதிலுக்குப் பதில் செய்யாது கர்த்தரிடத்தில் அவைகளை விட்டுவிடுங்கள்.

வாழ்க்கைப் பிரச்சனைகளை சட்டம் ஒருபோதும் தீர்த்துவைக்காது, திரும்ப உருவாக்குவது மட்டுமே அதைத் தீர்த்துவைக்கும்.

முதிர்ந்த விசுவாசிகள் ஒவ்வொருவரும் விரைவில் அல்லது பின்னர் அவர்களது சொந்த சிங்கக் குகையினை சந்தித்தே ஆக வேண்டும்.

DOCTRINE உபதேசம்:

STABILITY நிலையானத் தன்மை

பகுதி 30 - சிங்கக்கெபியில் தானியேல் தானியேல் 6:16-17.

16 அப்பொழுது இராஜா கட்டளையிட அவர்கள் தானியேலைக் கொண்டு வந்து அவனைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். இராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்ப்பார் என்றாம். 17 ஒரு கல் கெபியினுடைய வாயிலின்மேல் கொண்டுவந்து வைக்கப்பட்டது, தானியேலைப் பற்றிய தீர்மானம் மாற்றப்படாதபடிக்கு தன் மோதிரத்தினாலும் தன் பிரபுக்களின் மோதிரத்தினாலும் அதின்மேல் முத்திரைபோட்டார்கள்.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 16ல் தரியுவினால் அரைகுறை மனதுடன், சட்டரீதியாக எவ்வித தீர்வும் காண இயலாதவாறு தண்டனையானது நிறைவேற்றப்பட்டது. அவன் தானியேலை நோக்கி அவனது தேவன் தவிர்க்க முடியாத மரணத்திலிருந்து அவனை தப்புவிப்பார் என்று கூறினான். அவன் தானியேல் தனது தேவனை இடைவிடாமல் ஆராதித்து வந்தான் என்பதை அறிந்திருந்தான். தா;னியேல் சொல்தவறாத மனிதனாய் இருந்தான் மற்றும் அவனது சாட்சி பெரியதாய் இருந்தது.

வசனம் 17ல் பயங்கரமான அடக்கு ஆட்சிமுறையைக் காண்கிறோம். தானியேல் தனது சக இராஜ்ஜியத்தின் நிர்வாகிகளுடன் பாதுகாப்பாய் இருப்பதைவிட சிங்கங்களுடம் மிகவும் பாதுகாப்பாய் இருக்கப்போகிறார். அவர் சிங்கங்களின் கெபியில் ஓய்வு பெறப்போகிறார். அவர் பலதரப்பட்ட மனிதர்களுடன் இருப்பதைவிட பலதரப்பட்ட மிருகங்களுடன் இருப்பதற்கு முதலிடம் கொடுத்தார்.

தானியேல் சிங்கங்களின் கெபியை அடைந்தபோது எவ்வித கசப்புமின்றி காணப்பட்டார். அவர் தேவனது கரங்களில் இளைப்பாறும்படி சென்றார். உபா 33:27.

கைக்கொள்ளுதல்:

தேவனுடைய இராஜ்ஜியம் மனிதருக்கு தேவனுடன் வாழும் நித்தியத்தை அளிக்கிறதாய் இருக்கிறது, மனித இராஜ்ஜியம் தேவனது நியாயத்தீர்ப்பில்லாத வாழ்வை அளிக்கிறதாய் இருக்கிறது. மனித

இராஜ்ஜியம் மனிதனை தேவனிடமிருந்து வேறுபிரித்து அறநெறிகளின் அடிப்படையில் தேசத்தை மகிமை படுத்துகிறது.

இது உலகலாவிய மனித சகோதரத்துவத்தின் அடிப்படையில் அல்லது உலக சமாதான கருத்தில் தோன்றுகிறதாய் இருக்கிறது ஆனால் இவ்விரண்டுமே வேதத்திற்கு எதிரானதாய் இருக்கிறது.

மனிதனின் உலகலாவிய சகோதரத்துவம் என்கிற காரியம் வேதாகமத்தில் இல்லை. வேதாகமம் கூறுவது இரு வித குழுக்கள் இரு வித பிதாக்களுடன் இருக்கின்றனர், விசுவாசிகளுக்கு பிதா தேவனாய் இருக்கிறார், அவிசுவாசிகள்/ தேவனை புறக்கணிப்போருக்கு பிசாசு பிதாவாயிருக்கிறான். யோவான் 8:42-58.

உலக சமாதானம் என்பது ஆயிர வருட ஆளுகையில் இடம் பெறுவதாய் இருக்கிறது. அது வரையிலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுவது மத்தேயு 24ல் யுத்தங்களையும், யுத்தங்களின் செய்தியையும் கேள்விப்படுவீர்கள் என்றார்.

மனித இராஜ்ஜியத்தின் தலைவர்கள் நல்லவர்களாகவே இருக்கின்றனர், உண்மையுள்ளவர்களாகவே இருக்கின்றனர், ஆனால் அவர்கள் தவறிழைப்பதில் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

DOCTRINE உபதேசம்

GOD CARES FOR YOU தேவன் உங்களைக் குறித்து கரிசனையுள்ளவராய் இருக்கிறார்.

பகுதி 31 - தானியேலின் விடுதலை. தானியேல் 6:18-24.

**18 பின்பு இராஜா தன் அரமனைகுப்போய் இராமுழுவதும்
போஜனம்பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு
முன்பாக வரவொட்டாமலும் இருந்தான். அவனுக்கு நித்திரையும்
வராமற்போயிற்று. 19 காலமே கிழக்கு வெளுக்கும்போது இராஜா
எழுந்திருந்து, சிங்கங்களின் கெபிக்குத் தீவிரமாய் போனான். 20 இராஜா
கெபியின் கிட்ட வந்த போது, துயரச்சத்தமாய்த் தானியேலைக்
கூப்பிட்டு, தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ
இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்கங்களுக்குத்**

தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று தானியேலைக் கேட்டான். 21 அப்பொழுது தானியேல், இராஜாவே நீர் என்றும் வாழ்க. 22 சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்குத் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயைக் கட்டிப்போட்டார். அதேனென்றால் அவருக்கு முன்பாக நான் குற்றமற்றவனாகக் காணப்பட்டேன். இராஜாவாகிய உமக்கு முன்பாகவும் நான் நீதிகேடு செய்ததில்லை என்றான். 23 அப்பொழுது இராஜா தன்னில் மிகவும் சந்தோஷப்பட்டு, தானியேலைக் கெபியிலிருந்து தூக்கிவிடச் சொன்னான். அப்படியே தானியேல் கெபியிலிருந்து தூக்கிவிடப்பட்டான். அவன் தன் தேவன் பேரில் விசுவாசித்திருந்தபடியால், அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை. 24 தானியேலின்மேல் குற்றஞ்சாட்டின மனுஷரையோவென்றால் இராஜா கொண்டு வரச்சொன்னான். அவர்களையும், அவர்கள் குமாரரையும் அவர்கள் மனைவிகளையும் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். அவர்கள் கெபியின் அடியிலே சேருமுன்னே சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்போட்டது.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

தானியேல் யூதவிசுவாசியின் பிரதிநிதியாய் இருந்தான், அவன் மனித இராஜ்ஜியத்திலிருந்து வேறுபிரிந்து எல்லா விசுவாசிகளும் இருக்க வேண்டிய பிரகாரம் இருந்தான்.

இங்கு நாம் தானியேலை கெபியில் காண்கிறோம். இத்தருணத்தில் பெரிசியாவின் ஆளுநர் மனித சட்டத்தை, தெய்வீக கட்டளை அளவுக்கு உயர்த்துவதைக் காண்கிறோம். கெபியின் மீது வைக்கப்பட்ட கல் மீது இராஜாவின் முத்திரை மோதிரத்தால் முத்திரை வைக்கப்பட்டது, இதினிமித்தம் தானியேல் சிங்கக் கெபியில் பாதுகாப்பாய் இருக்க முடிந்தது, முத்திரையை உடைத்தால் தான் தானியேலை எவராலும் காப்பாற்ற இயலும். தானியேல் மனிதர்களின் இடையூறு இன்றி பாதுகாப்புடன் இருந்தார், இராஜா தனது பிரதாணிகளும் முத்திரை வைக்குமாறு வற்புறுத்தினான், அவர்களது முத்திரை பின்னர் சாட்சியாய் மாறியது. முதல் அற்புதம் இடம்பெற்றது, அது தானியேல் குகைக்குள் போடப்படும்போது நிகழ்ந்தது, குறைந்தபட்சம் மூன்று மீட்டர் உயரத்திலிருந்து தானியேல் விழுந்திருக்க வேண்டும் அவர் விழுந்த போது ஒன்று அல்லது இரண்டு சிங்கங்களின் மீது விழுந்து இருக்க வேண்டும், தானியேல் அந்த இரவை சிங்கங்களோடு கழித்து அவைகளுடன் அயர்ந்த நித்திரை செய்திருக்க வேண்டும்.

இராஜா அரண்மனைக்குச் சென்று அந்த இரவை உண்வின்றி, உறக்கமின்றி கழிக்க நேர்ந்தது. சிங்கங்களின் கெபியானது ஒரு cesspool. ஆக இருந்தது. அது அதிர்ச்சி தரக்கூடிய சிங்கங்களின் மல ஜலாதி நிறைந்த இடமாய் இருந்தது. இங்குதான் தானியேல் அந்த இரவைக் கழித்தார். தானியேல் தனது என்பதாவது வயதில் இத்தருணத்தில் காணப்பட்டார்.

உலக வல்லமை மற்றும் புகழுடன் சூழ இருந்த தரியுவை தானியேல் ஊக்கங்குறையச் செய்த போது, அவன் பயந்த படியினால் அவ்வாறு இருக்க இயலவில்லை. இது உங்கள் சூழ்நிலை உங்கள் மகிழ்ச்சியை நிலைநிறுத்தாது என்பதைக் காட்டுகிறது. பவுல் சொல்கிறது போல, "எந்நிலையிலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன்." பிலிப்பியர் 4:11. தானியேல் தேவனால் கைவிடப்பட்ட நிலையிலும் அவர் பராமறிப்பை ஏற்படுத்தியிருந்ததை அவரால் உணர முடிந்தது.

எப்படியோ இராஜா அந்த இரவை உபவாசத்தில் கழித்தார். இந்த உபவாசம் ஆவிக்குரிய உபவாசமல்ல. அவன் புசியாமல் குடியாமல் கவலைகொண்டவனாய் காணப்பட்டான்.

இவ்வேதபகுதியில் இசைக்கருவிகள் எனக்கூறப்படுவது, இரவில் நித்திரைக்கு செல்லும்போது பெண்களுடன் இசையுடன் இராஜாக்கள் செல்வது வழக்கம். இராஜா மதுபானம், பெண்கள் அல்லது பாடல்கள் இன்றி காணப்பட்டார். அந்த இரவில் அவனுக்கு பார்ட்டி எதுவும் இல்லாதிருந்தது. அவன் பார்ட்டி பெணகளை நிராகரித்து இருந்தான், அவன் மன அமைதியின்றி உணவு, மற்றும் சந்தோஷமளிப்பவைகளை தடை செய்து தள்ளி வைத்திருந்தான்.

வசன்ம் 19ல் விடியற்காலம் விரைவில் வராமல் தாமத்தது தரியுவுக்கு, அவன் விடியறகாலத்தில் சிங்கங்களின் கெபிக்கு விரைந்து சென்றான். அவன் உணர்ச்சி மேம்பாட்டுடன் செயல்படுத்திய ஒன்றும் வாய்க்காதே போனது. அவனது தந்திர ஆலோசனை எதுவும் பலிக்காதே போனது. துயர சத்தத்துடன் கீழே நோக்கிப்பார்த்து, மிகவும் பயத்துடன், அவன் தேவனது வார்த்தையில் நம்பிக்கை வைக்காதவனாய் இருந்த போதிலும், தானியேல் இடைவிடாமல் ஆராதிக்கும் தேவன் அவனை காக்க வல்லவராய் இருந்தாரா? என வினவினான்.

வயது முதிர்ந்த தானியேலின் வாழ்த்துதல் சப்தம் கேட்டு தரியு ஆறுதலடைந்தான், "இராஜாவே நீர் வாழ்க" என்று வாழ்த்தினான். தானியேல் தரியுவிடம் தன்னை ஒரு தேவ தூதன் கடந்து வந்து சிங்கங்களின் வாயை அடைத்துப்போட்டதினால் தான் பாதுகாப்புடன் இருந்ததை சொன்னான். அவன் தேவனுடைய கிருபையை சாட்சியாய்

சொன்னான். வசனம் 22ல் தானியேல் அவன் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவனாய் இருந்தான் என்றும் இராவுக்கு எவ்வித தீங்கும் இழைக்கவில்லை என்றும் கூறினான். இதினிமித்தம் தானியேல் தான் எவ்வித குற்றமும் புரிய வில்லை என்பதை இராஜாவுக்கு தெளிவுபடுத்தினான். சிங்கங்களின் மூலம் தேவன் அவன் குற்றமற்றவன் என்பதை அறிவித்தார்.

வசனம் 23ல் நெருக்கப்பட்டிருந்த இராஜா இப்பொழுது மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அனைவரும் தங்கள் சொந்த இஷ்டப்படி பணிவதைக் குறித்து இராஜா நிலையற்றவனாய் இருந்தான். அவன் தானியேலை சிங்கக் கெபியிலிருந்து தூக்கிவிட கட்டளை பிறப்பித்தான். தானியேல் தேவனில் நம்பிக்கை வைத்தபடியால் அவன் தப்புவிக்கப்பட்டான். அதற்கு முறணாய் அவன் தேவனில் நம்பிக்கை வைக்காதே போனால் அவன் சிங்கங்களின் கெபியிலே மரித்திருக்க வேண்டும், அவன் மரித்து ஆபிரகாமின் மடியிலே சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது பரதீசுக்கு சென்றிருக்க வேண்டும், இருப்பினும் கர்த்தரது பணியானது இன்னும் நிறைவு பெறாது இருந்தது, ஆகையால் தானியேல் இன்னும் உயிருடன் இருக்க வேண்டியதாய் இருந்தது.

தரியு இப்பொழுது குற்றம்சாட்டினவர்களை சிங்கக்கெபியிலே தூக்கிப்போட கட்டளையிட்டான், அவர்கள் தரை சேருமுன்னே பசியாயிருந்த சிங்கங்கள் அவர்களைப் பட்சித்துப்போட்டது, இதன் மூலம் தரிய இராஜா இரவில் நிகழ்ந்த அற்புதத்தை தெளிவுபடுத்திக்கொண்டான். இங்கு தரியு குற்றம் சாட்டினவர்கள் குடும்ப சகிதம் சிங்கக் கெபியிலே போடக்கட்டளையிட்டான்.

தானியேல் இப்பொழுது குற்றம்சாட்டினவர்கள் குடும்ப சகிதம் மரிப்பதை கவனித்தான். இது சட்டத்தை தவறாய் பயன்படுத்துவதாய் இருந்தபோதிலும், தேவனுடைய கிருபையால் இப்படிப்பட்டவர்கள் ஒருவகையில் குற்றவாளிகளாய் கருதப்பட்டனர். சில பகுதிகளில் நாம் வேலை செய்யும் போது, அதிகாரத்தில் இருப்பவர்களின் குணநலன்களை கட்டுப்படுத்த இயலாது. ஆனால் அவர்களுடன் கொள்ளும் உறவில் சரியான இடத்தில் இருத்தல் அவசியம்.

கைக்கொள்ளுதல்:

ஒருவர் விசுவாசியாய் ஜீவிக்கும் காலத்து கர்த்தருக்காய் அவர்கள் செய்ய வேண்டிய பணி இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் பணியில் ஒருவருக்கு ஒருபோதும் ஓய்வு பெறுவது என்பது கிடையாது.

உங்களது சொந்த பாவத்திற்கு நீங்களே பொறுப்பாளிகளாய் இருக்கிறீர்கள் மற்றும் தனிநபர்களை பாவங்களுக்காய் நியாயந்தீர்க்க கூடாது, குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் பாவத்திற்குட்படும்போது அவர்களது ஒத்துழைப்பு இல்லாமல் செயல்படுகிறார்கள்.

எப்பொழுது நாம் சட்டத்திற்கு எதிர்த்து நிற்கலாம்? அது தேவனுடைய உபதேசம் மற்றும் பிரமாணங்களுக்கு நேரடி எதிர்ப்பு தெரிவிக்கும்போது அவகளுக்கு விசுவாசி கீழ்ப்படிய மறுக்க வேண்டும். அப். 4:12-30. ஒருவர் தேசத்தின் தெய்வீக நிர்வாகத்தை தனது நிலையினின்று வழிவிலகச்செய்யும் சட்டத்தினை பிரகடனப்படுத்துமேயானால், அந்த விசுவாசி அதைமாற்றி அமைக்க முயலுதல் வேண்டும், அதை அவருக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி செய்தல் வேண்டும். ஓட்டுப்போடும் பிரஜையாய் இருப்பீர்களானால் உங்களது தருணம் வரையறைக்குட்பட்டே இருக்கும். நீங்கள் உயர் அதிகாரியாக பெரிய அரசாங்க பதவியில் இருப்பீர்களானால் உங்களது தருணம் பெரியதாய் இருக்கிறது.

DOCTRINE உபதேசம்

FASTING உபவாசம்.

பகுதி 32 - தானியேலின் செழிப்பும் மற்றும் தரியுவின் கட்டளையும். தானியேல் 6:25-28.

25 பின்பு இராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும், பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால்: உங்களுக்கு சமாதானம் பெருகக்கடவது. 26 என்
இராஜ்ஜியத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்பட வேண்டுமென்று என்னாலே தீர்மானம் பண்ணப்படுகிறது. அவர் ஜீவனுள்ள தேவன். அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர். அவருடைய இராஜ்ஜியம் அழியாதது. அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும். 27
தானியேலைச் சிங்கங்களின் கைக்குத் தப்புவித்த அவரே தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதினான். 28
தரியுவின் இராஜ்ஜியபார காலத்திலும்,

பெரிசியனாகிய கோரேசுடைய இராஜ்ஜியபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாய் இருந்தது.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 25 - 27 ல் தரியு தனது ஆளுகைக்குட்பட்ட இராஜ்ஜியங்கள் அனைத்திற்கும் ஒரு கட்டளை எழுதினான், அதில் அனைத்து இராஜ்ஜியத்திலும் வாசம் பண்ணும் அனைவரும் தானியேலின் தேவன் ஒருவரையே பணிந்து கொள்ள வேண்டும் என்றிருந்தது. இங்கு தரியு தனது பிரஜைகள் அனைவரையும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி வற்புறுத்த முயலுவதைக் காண்கிறோம் இவ்வாறு தெய்வீக நிறுவனத்தை முதன்மையாக்க முயலுவதைக் காண்கிறோம் -- சுயசித்தம் முதன்மை படுத்தப்படுகிறது.

வற்புறுத்தி சுவிஷேசம் அறிவிக்கும் முறையானது தவறு, செய்தியானது சரியாய் இருந்தது. முழு இராஜ்ஜியமும் சுவிஷேசத்தை கேட்கும் தருணமானது தானியேலின் சிங்கக் கெபியின் அனுபவம் கிடைக்கச் செய்வதாய் இருந்தது.

தரியுவின் இராஜ்ஜியபார காலத்திலும், பெரிசியனாகிய கோரேசுடைய இராஜ்ஜியபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாய் இருந்தது. தானியேல் எவ்வித குற்றச்சாட்டுமின்றி தேவனால் செழிப்பைப் பெற்றவனாய் இருந்தான். இப்புத்தகத்தை எழுதியவர் தரியுவும், கோரேஸும் வேறுபட்டவர்களாயிருக்கிறார்கள் என்பதைக் காட்டும்படி எழுதியிருக்கிறதைக் காண்கிறோம், இது ஒரு வேதபகுதி பிரச்சனையாய் இருக்கிறது இது குறித்து பரலோகம்தான் பதில் தரவேண்டும். இதை நகல் எழுதும் போது உண்டான பிழை என நாம் விசுவாசிக்கிறோம், இவ்விருவரும் ஒருவரே என்பதை நாம் விசுவாசிக்கிறோம்.

கைக்கொள்ளுதல்:

அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். ரோமர் 8:28. தானியேல் எவ்வித திட்டமிடவில்லை. தேவன் சூழ்நிலைக்கு தக்கவாறு அதை எளிதாக்கினார். தானியேல் தேவனை நம்பினான் மற்றவைகளைத் தேவன் செய்தார்.

தேவனுடைய வார்த்தையை போதியாமல் சுவிஷேசம் அறிவிப்பது ஒருவரது சுய சித்தத்தை மீறச்செய்வதாய் இருக்கும். அப்படிப்பட்ட முறைகள் ஒரு தனிநபரின் மறைவை படையெடுப்பது போன்று இருக்கிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஒவ்வொருவரும் இரட்சகராய் ஏற்றுக்கொள்ள வேண்டும் என கட்டளை கொடுக்க முடியாது.

மனித இராஜ்ஜியத்தில் எப்பொழுதும் மனித சுதந்தரத்தை குறைக்க முயற்சிக்கிறது, தலைவர்களின் கருத்தை அல்லது சமய கருத்தை அனைவரும் உறுதியுடன் ஒத்துக்கொள்ளச் செய்கிறது.

DOCTRINE உபதேசம்

FAITHFULNESS OF GOD தேவனின் உண்மைத் தன்மை

NOTES

<u>தானியேல் 7 ம் அதிகாரம்</u>

7 ம் அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேல் 7 ம் அதிகாரத்தை நான்கு பிரிவுகளாய் பிரிக்கலாம்.

நான்கு மிருகங்கள் குறித்து தானியேலின் தரிசனம் வசனங்கள் 1-7.

மனித குமாரன் மேகத்தில் வரும் தரிசனம் வசனங்கள் 9-14.

நான்கு மிருகங்களைக் குறித்த விளக்கம் வசனங்கள் 15-18.

நான்காவது மிருகத்தைக் குறித்த விவரணம் வசனங்கள் 19 - 28.

முன்னுரை:

கி மு ஆறாவது நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ஷெக்கினா மகிமையானது தேவாலயத்தை விட்டு விலகிற்று. எசேக்கியேல் 10ம் அதிகாரம். இது ஒரு மாற்றம் நிகழவிருப்பதைச் சுட்டிக்காட்டுவதாய் இருந்தது. கி மு 586ல் ஆகஸ்ட்மாதம் பெரிய அள்வில் பேரழிவு நிகழ்ந்தது, எருசலேம் தேவாலயம் மற்றும் எருசலேம் பட்டண்ம் இடிக்கப்பட்டு போயிற்று. மகா பெரிய சாலமோன் தேவாலயம் பாபிலோனியரால் தகர்க்கப்பட்டபோது, அக்கினியால் கொளுத்திய போது அது வெறும் ஒரு அறையாகவே இருந்தது. தேவனது சமூகம் இஸ்ரவேலரை விட்டு அகன்றது மட்டுமின்றி, அவர்களுக்கு தேவாலயமோ எருசலேம் பட்டணமோ இல்லாது அழிக்கப்பட்டது. அது முதற்கொண்டு ஒரு யூத அரசனும் தேசத்தை ஆளுகை செய்யவில்லை, சரித்திரத்தின் இறுதியில் கர்த்தாதி கர்த்தாவும் இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசுக் கிறிஸ்து மறுபடியும் வந்து ஆளுகை செய்யப்போகிறார்.

இக்கால கட்டமே "புறஜாதியாரின் காலம்" ஆரம்பமானதாய் கருதப்படுகிறது, இக்காலம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை நீடிக்கிறதாய் இருக்கிறது. இது சக்ரவர்த்தி ஆட்சி முறையின் ஆரம்பமாய் இருந்தது, இது தேவனுடைய வழியாய் இருந்து புறஜாதிய தேசங்கள் ஆளுகை செய்வதும், சுவிஷேச செய்தியானது சர்வதேச அளவில் கட்டுப்பாடின்றி பரவ வகை செய்வதாயும் இருந்தது. இந்நாள் வரைக்கும் இஸ்ரவேல் இருந்து வருவது ஆச்சரியபடத்தக்கதாய் இருந்து வருகிறது, காரணம் புறஜாதிய கட்டளைகளை தங்கள் சொந்த வல்லமையினால் செய்யாதிருப்பதற்காக. ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கை மூலம் இஸ்ரவேல் இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கிறது.

இது முதற்கொண்டு தேவன் அநேக வாக்குத்தத்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் உட்பட நிறைவேற காலதாமதம் செய்து வருகிறார், முக்கியமாய் பாலஸ்தீனிய உடன்படிக்கை, தாவீதின் உடன்படிக்கை இன்னும் காலதாமதமாகி வருகின்றன. சரித்திர காலகட்டங்களில் கடந்து வந்த இஸ்ரவேல் நம்பிக்கை வைத்து தேவனால் ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்கள் தேசங்களுக்கும், தனிநபருக்கும் செய்யப்பட்டவைகளை உணர்ந்து ஆக வேண்டும். விசுவாசிக்கு பொறுமையும் மற்றும் நம்பிக்கையும் அவசியமானதாய் இருக்கிறது.

இக்கால முதற்கொண்டு வெளிப்பாடு இலக்கியங்களாகிய தானியேல், சகரியா, வெளிப்படுத்தல் போன்ற இலக்கியங்கள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. இது எதைக்காட்டுகிறது என்றால், வேதாகமத்தின் மற்ற புத்தகங்களில் நீங்கள் வல்லுநர்களாகி, பின்னர் வெளிப்பாடு இலக்கியங்களை வியாக்கியானிப்பதற்கு வகை செய்வதாய் இருக்கிறது. வெளிப்பாட் இலக்கியம் முதிர்ந்த விசுவாசிக்கு அளிக்கப்பட்டு நாம்

வாழும்காலத்தை புரிந்து கொள்ள வகை செய்கிறதாய் இருக்கிறது. -- நாம் புறஜாதியாரின் காலத்தில் வாழ்ந்து வருகிறோம்.

தானியேல் 7-11 அதிகாரங்கள், "புறஜாதியாரின் யுகம்" துவங்கிய பின்னர் சரித்திரம் எவ்வாறு முன்னேறி வருகிறது என்பதைக் குறித்த தரிசனங்களை அடக்கியுள்ளது. இப்படிப்பட்ட தரிசனங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட அமைப்பினை பெற்றதாய் இருக்கிறது, அது இடம் மற்றும் காலம் இவைகளை உள்ளடக்கியுள்ளது. இவைகள் பத்மு தீவில் வெளிப்படுத்தின ஆகமத்திற்கு ஒத்துப்போகிறதாய் இருக்கிறது. இவைகளில் தீர்க்கதரிசன மின்னல்களை உடையதாய் இருக்கிறது.

இந்த அதிகாரத்தின் நிகழ்வுகள் கி மு 553ல் இடம்பெற்றவைகளாய் இருக்கின்றன. பெல்ஷாத்சாரின் முதலாம் ஆண்டு ஆழுகையின் போது நிகழ்ந்தது. இது ஏழாம் அதிகாரத்தில் நாளாகம வரிசைப்பட இல்லாதிருக்கிறது, ஐந்து மற்றும் ஆறு அதிகாரத்தின் முந்தைய நாட்களில் நிகழ்ந்ததாய் கருதப்படுகிறது. இதன் காரணம் முதல்பாதி தானியேல் புத்தகத்தில் அரசியல் சம்பந்த காரியங்கள் குறித்தும் இரண்டாவது பாதி தீர்க்கதரிசனம் குறித்தும் இடம்பெறுகிறதாய் இருக்கிறது, ஆகையால் சரித்திர ஒழுங்கின்படி பின்னர் இது இடம்பெறுகிறதாய் இருக்கிறது.

பகுதி 33 - நான்கு மிருகங்களைக் குறித்த தானியேலின் தரிசனம்: தானியேல் 7:1-8.

**1 பாபிலோன் இராஜாவாகிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலே
தானியேல் ஒரு சொப்பனத்தையும் தன் படுக்கையின்மேல் தன்
தலையில் தோன்றின தரிசனங்களையும் கண்டான். பின்பு அவன்
சொப்பனத்தை எழுதி காரியங்களின் தொகையை விவரித்தான். 2
தானியேல் சொன்னது: இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான
தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால்; இதோ வானத்தின் நாலு
காற்றுக்களும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது. 3 அப்பொழுது
வெவ்வேறு ரூபமுள்ள நாலுபெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து
எழும்பின. 4 முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது. அதற்கு கழுகின்
செட்டைகள் உண்டாயிருந்தது. நான் பார்த்துக்கொண்டிருக்கையில்
அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது. அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு,
மனுஷனைப் போல இரண்டு கால்களின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி
செய்யப்பட்டது. மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது. 5 பின்பு
கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன். அது ஒரு**

பக்கமாய் சாய்ந்து நின்று, தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது. எழும்பி வெகு மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது. 6 அதின் பின்பு சிவிங்கியைப்பொலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன். அதின் முதுகின் மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது. அந்த மிருகத்திற்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது. அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது. 7 அதற்குபின்பு இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாய் இருந்தது. அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப்பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமாய் இருந்தது. அதற்கு பத்துக் கொம்புகள் இருந்தது. 8 அந்தக்கொம்புகளை நான் கவனித்து இருக்கையில், இதோ அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று. அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது. இதோ அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

பெல்ஷாத்சார் எதிர்பார்ப்புக்கு மாறாக கல்தேய சாம்ராஜ்ஜியத்தின் இறுதி அரசனல்ல, அவனுடை தந்தை மகா கோரேசினால் ஓய்வு பெற அனுமதிபெற்று, வடக்கே இருந்த பாலைவனச் சொலையில் வாழ்ந்தான், அவனுடைய தாயாரும் வாழ்ந்தாள், சில ஆண்டுகளுக்குப் பின் அவன் மரித்து பாபிலோனில் அடக்கம் செய்யப்பட்டான், அது கோரேசின் மரத்திற்குப் பின்னர் நிகழ்ந்ததாய் இருந்தது. பெல்ஷாத்சார் ஒரு எளிய தலைவனாய் இருந்தான் மற்றும் இது நினைவு கூறப்படும் வகையில் எதிர்கால சாம்ராஜ்ஜியங்களின் சரித்திரமானது தீர்க்கதரிசனமாய் தானியேல் கண்ட தரிசனத்தின் வாயிலாய் முடுக்கிவிடப்படுகிறதாய் இருக்கிறது இது நெபுகாத்நேச்சாரின் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறும் வகையில் தானியேல் 2ம் அதிகாரத்தோடு சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது.

நெபுகாத்நேச்சாரின் சொப்பனத்திற்கு வலுவூட்டும் வகையில் கர்த்தர் இதை தானியேலுக்கு அளித்தார். சிலயானது பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு களிமண் இவைகளால் செய்யப்பட்டிருந்த போதும், தானியேலுக்கு தரிசனத்தில் நான்கு மிருகங்கள் தோன்றி, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் கொடிய இராஜ்ஜியங்களைக் குறித்து மற்றும் பாபிலோனிய சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்குப் பின் நிகழவிருக்கும்

காரியங்கள் விவரிக்கப்படுகின்றன. அவைகள் வன்முறையாய் செயல்பட்டன, இருப்பினும் பின் தொடர்ந்த சாம்ராஜ்ஜியங்கள் மிகவும் மோசகரமானதாய் இருந்தன.

நெபுகாத்நேச்சாரின் ஆளுகையின்போது இராஜ்ஜியமானது மேல் நோக்கி சென்றுகொண்டிருந்ததை தானியேல் கண்டுணர்ந்தார், முக்கிய மாற்றமாக பெல்ஷாத்சாரின் ஆளுகையின் போது இராஜ்ஜியம் சரிவடைந்து வருவதை தானியேலால் காண முடிந்தது, சிலையின் தலை பொன்னாக இருந்தது அவன் கண்களுக்கு முன்பாக சிலையின் புயம் வெள்ளியாக மாறுவதை அவன் கண்கூடாக காண நேர்ந்தது.

சரித்திரத்தில் தேசங்களையும் அல்லது இராஜ்ஜியங்களையும் நிலைநிற்கச் செய்ய குறிப்பிடத்தக்க நேர்மறையான காரியங்களை சர்வ தேச அள வில் செய்கிறவைகளாய் இருந்தன. சிலையைக் குறித்த தரிசனமானது தொடர்ச்சியாய் ஆளும் இராஜ்ஜியங்களை காண்பித்து, கி மு 605 முதல் சுமார் 1000 ஆண்டுகள் ரோம சாம்ராஜ்ஜியத்தின் விழுகை வரை நிலை நிற்பதற்கான தாக்கங்களை அறிந்த உலகிற்கு செய்கிறதாய் இருந்தது. அவைகள் கல்தேயர், மேதிய பெரிசியர், கிரேக்கர் மற்றும் ரோம சாம்ராஜ்ஜியத்தினர் ஆவர்.

உண்மையான ரோம சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், குறிப்பிடத்தக்க பண்டைய சரித்திரம் நிறைவடைகிறதாய் இருக்கிறது, இதன் பின் குழப்பங்கள் பெருகத் துவங்கி "இருண்ட காலம்" என அறியப்படுகிற காலம் சரித்திரத்தில் நிகழ்வதாய் இருந்தது. மேற்கு ஐரோப்பாவில் வெற்றிடமானது ரோமன் கத்தோலிக்க திருச்சபைகளில் ஆவிக்குரிய காரியங்களால் நிரப்பப்பட்டது, மற்றும் "பரிசுத்த ரோம சாம்ராஜ்ஜியமானது "வேற்றிகண்ட மலைவாழ் மக்களால் நிறுவப்பட்டது. அதேசமயத்தில் கிழக்கு சாம்ராஜ்ஜியங்கள் இஸ்லாமியருக்கும், கிரேக்க ஆர்தொடாக்ஸ் சபைகளுக்கும், கிழக்கு ரோம சாம்ராஜ்ஜியத்திற்கும் 1453 கி பி வரை பகிர்ந்தளிக்கப்பட்டது. ரோம சாம்ராஜ்ஜியம் வீழ்ச்சி அடைந்தபோதும், அது தேசங்களில் நிலைத்திருந்து மலைவாழ்மக்களால் அவற்றை தள்ளாடச் செய்கிறதாய் இருந்தது. அவைகள் பல வகையான பெலமானதும் பெலவீனமான் இராஜ்ஜியங்களால் ஒன்றுதிரட்டப்பட்ட இராஜ்ஜியமாய் அமைந்தது -- பாதம் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாய் இருந்தது இதை குறிக்கிறதாய் இருக்கிறது.

மறுமலர்ச்சிக்குப் பின்னர் சில இராஜ்ஜியங்கள் நிலையான தன்மைக்கு வரத்துவங்கின அவைகள் மன்னர் ஆட்சி மூலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் மற்றும் சமீபத்திய காலத்தில் தோன்றிய அமெரிக்க ஐக்கிய தேசம் இவ்விரண்டும் நேரடியாக நுழைந்தவர்களை பண்டைய ரோம

போர்வைக்குள் மூடி மறைக்கிறதாய் இருந்தது. இவ்விரு இராஜ்ஜியங்களின் மன்னர்கள் மிகவும் வலிமையுள்ளவர்களாயும் இரும்பைப் போன்று உரமிக்கவர்களாயுமாய் இருந்தனர், இந்த இராஜ்ஜியங்களில் வலிமைமிக்க விசுவாசிகள் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். மட்டுமின்றி பூமியிலேயே மிக முக்கியம் வாய்ந்த இராணுவவீரரும் இவர்கள் இராஜ்ஜியத்தில் இருந்தனர். USA ன் தற்போதைய சரிவானது மற்றும் உலக பொருளாதார அமைப்பை 2007 - 2016 வரை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது, இதன் சரிவுக்கு பின்னர் மேற்கத்திய ஐரோப்பா தற்போதைய ஆதிக்கம் செய்கிறதாய் இருக்கிறது. எப்படியிருப்பினும் மேற்கத்திய நாடுகள் எந்த சக்திக்கும் அடிபணியாது, அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் இச்சையில் விழுகிறதாய் இருக்கும், இறுதியான மேற்கத்திய நாடுகள் அமைப்பு மிக பயங்கரமானதாய் இருக்கும்.

புறஜாதிய இராஜ்ஜிய யுகத்தில் அவைகள் மெய்யாக பெரியவைகளாய் திகழ்ந்தன மற்றும் தேவனது வார்த்தையின் உபதேசங்களில் வல்லமை மிக்கவைகளாய் இருந்தன. அவைகள் தேவனது வார்த்தையை விட்டு, தங்கள் சொந்த மார்க்கங்களுக்கு வழிவிலகும் போது வீழ்ந்து போயின. பண்டைய ரோம சாம்ராஜ்ஜியத்திலிருந்து வழிவிலகும் இராஜ்ஜியங்கள் எப்பொழுதும் கடும் இயற்கைச் சீற்றத்துக்கு உள்ளாயின. தீர்க்கத்ரிசன வார்த்தைகளின்படி இறுதி சாம்ராஜ்ஜியத்தின் அமைப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக ஒருலக ஆளுகையானது பலதரப்பட்ட கலாச்சார புறஜாதிய தீமையான சாம்ராஜ்ஜியம் இருக்கும். இது அந்திக்கிறிஸ்துவால் ஆளுகை செய்யப்பட்டு மேற்கத்திய நாடுகளை மையமாய் கொண்டு செயல்படும். இது தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் கூறப்பட்ட கால்விரல்கள் பாதி களிமண்ணும், பாதி இரும்புமான இராஜ்ஜியமாய் இருக்கும் மற்றும் தானியேல் 7:23-24ல் கூறப்பட்ட பத்து கொம்புகளுள்ள மிருகமாய் இருக்கும். மேற்கத்திய நாடுகள் பழைய ரோம இராஜ்ஜியத்தின் ஆசனமாய் விளங்கும் -- எல்லா தீமைகளும் மற்றும் வன்முறைச் செயல்பாடுகளும் இன்னும் அங்கே காணப்படுகின்றன, தாராளவாதம் ஐரோப்பாவில் நிலைகுலைய வைத்துக்கொண்டிருக்கிறது, அது இன்னும் நீண்ட காலம் நீடிக்கப்போவதாய் இல்லை. விஷேசமாய் சீரியாவின் அகதிகள், அதன் இராணுவ தீவிரவாதிகள் EU வின் பிரஜைகளை கொன்று குவித்து வருகின்றனர். 2016 ல் நாம்காண்பது old liberal democrat Europe ன் முடிவு ஆரம்பமாகும்.

வசனம் 2ல் கூறப்பட்ட பரலோகின் நான்குகாற்றுகள், சமுத்திரத்திலிருந்து எழும்பி வர இருக்கும் இராஜ்ஜியங்களை மனித சரித்திரத்திலிருந்து குழப்பிவிட்டு கலங்கடிக்கப்போவதை

பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. சமுத்திரமானது ஒழுங்குப் படுத்தபடாததாய் இருக்கிறது, அது தேசங்களின் நிலையை காட்டுகிறதாய் இருக்கிறது, அது திரட்சியான அல்லது ஒழுங்கற்ற சமுத்திரத்தை போன்ற மனுக்குலத்தை காட்டுவதாய் இருக்கிறது. சமுத்திரமானது புறாதிய அதிகாரத்தின் அடையாளமாய் எப்பொழுதும் திகழ்ந்து வருகிறது. கிரேக்கர்களும், ரோமர்களும் சமுத்திர மக்களாய் திகழ்ந்துவந்தனர். அவர்கள் வணிகத்திற்காகவும், படையெடுத்து துரிதமாய் செல்ல கடற்படையையும் பயன்படுத்திவந்தனர், பிரிட்டிஸரும், அமெரிக்கரும் மீந்திருந்தனர். அமைதியற்ற சமுத்திரத்தின் வல்லமையானது அந்த சிலையின் அமைதியற்ற இருளின் வல்லமையாய் செயல்பட்டது, ஐரோப்பிய கலாச்சாரத்தின் கீழ் அந்திக்கிறிஸ்துவினால் இராணுவ இயந்திரமானது ஒழுங்குபடுத்தப்பட இருக்கிறது. அது இதற்குமுன் அநேகந்தரம் செயல்பட்டது போன்று இருக்கும்.

தானியேல் நான்கு மிருகங்களைக் குறித்து குறிப்பிடும்போது அவைகள் சமுத்திரத்திலிருந்து எழும்பி, ஒன்று மற்றொன்றின் அர்த்தத்திலிருந்து பிரிந்து போகிறதாய் இருக்கும், அது கலாச்சாரத்திலும் மற்றும் கண்ணோட்டத்திலிருந்தும் வேறுபட்டுகாணப்படும், ஆனால் அவைகள் ஒன்று மற்றொன்றின் உத்தரவை பின்பற்றுகிறதாய் இருக்கும்.

வசன்ம் 4ல் முதலாவது புறஜாதிய சாம்ரஜ்ஜியம் கல்தேய சாம்ராஜ்ஜியம் எனப்பார்க்கிறோம். கல்தேயர்கள் குரிடிஸ்டான் என்கிற மலையில் தோன்றினவர்கள் அவர்கள் கீழேயுள்ள சதுப்புநில பள்ளத்தாக்கில் இறங்குகிறவர்களாய் காணப்பட்டனர். இவர்கள் பாபிலோனியர் அல்லர். இவர்கள் தென் பாபிலோனில் வாசம் செய்தனர் இவ்ர்கள் "பிட்ஸ்" [“bits”] என அழைக்கப்பட்டனர். .இவர்கள் ஒன்றாக்கப்பட்ட நிலையில் இவகளது ஆதிக்கம் தெற்குப் பகுதியாகிய பரந்த பள்ளத்தாக்காய் இருந்தது.

இக்காலக் கட்டத்தில் நெபொபோலேஸர் அவர்களது பெரிய தலைவனாய் விளங்கினான். அக்காலத்தில் அசீரியா உலகை ஆதிக்கம் செய்து, உலக இராணுவத்திலும் தொழில் போன்றவைகளிலும் முதன்மையாய் விளங்கி வந்தது. நெபொபோலேஸர்தாமே தன்னை வாடகைக்கு அமைத்துக் கொண்டு அவர்களது கூலிப்படைக்கு தலைவனாய் விளங்கினான், அவர்களுக்காய் பாபிலோனை அரசாண்டு வந்தான். அவன் மேதியர்கள் மற்றும் ஸ்கைத்தியர்களுடன் கூட்டுறவு அமைத்துக்கொண்டு, நினிவே மீது தாக்குதல் நடத்தி அசீரியர்களின் அப்பெரிய பட்டணத்தை கி மு 612ல் கைப்பற்றினான். அவன் ஒரு சிரிய சாம்ராஜ்ஜியத்தை ஆரம்பித்தான். ஸ்கைத்தியர்கள் அப்பட்டணத்தின் கொள்ளையையும் பெண்களையும் எடுத்துக் கொண்டனர், மேதியர்கள் எல்லா பொன்னையும், கைவினைஞர் அனைவரையும் எடுத்துக்

கொண்டனர். நெபொபோலேசர் கொஞ்சம் பொன்னையும் அரசியல் அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டு, கல்தேயருக்குத் தலைவனாய் அவர்களை வழிநடத்தினான், இது சில காலம் நியோ பாபிலோனிய சாம்ராஜ்ஜியம் என அறியப்பட்டது.

இவனுக்கு நான்கு குமாரர் இருந்தனர், இவர்களில் ஒருவனான நெபுகாத்நேச்சார் இவனுக்கு பின் அரசபதவி வகிக்கிறவனான். கார்கெமிஸ் யுத்தத்தில் பார்வோன் நெகேவிற்குக் கீழிருந்த எகிப்தியரை தோற்கடித்தான். நெபுகாத்நேச்சார் அவர்களை பின்தொடர்ந்து எருசலேம் வரையிலும் வந்தனர் அங்கிருந்த தலைவர்களுடன் கி மு 606 முதல் 605ல் தொடர்பு கொண்டனர். குறுகிய கால முற்றுகைக்குப் பின்னர் இஸ்ரவேல் அவனுக்கு அடிபணிய ஆரம்பித்தது. இக்காலகட்டத்தில் அவனது தந்தையான நெபொபோலேசர் மரித்த செய்தியை கேள்விப்படவே சில வாலிபரை மட்டும் சிறைபிடித்துக் கொண்டு அதில் தானியேலும் அடங்குவான், அவன் தனது அரியனையை கைப்பற்ற சென்றுவிட்டான்.

நெபுகாத்நேச்சார் ஒரு பெரிய தலைவனாகவும், கட்டிட நிபுணராகவும், நிர்வாகியாகவும், ஒரு தலைசிறந்த இராணுவ தளபதியாகவும், மற்றும் சிறந்த தேசீயவாதியாகவும் திகழ்ந்தான். அவன் மனோரீதியாக வியாதிப்படும் வரை மிகவும் வெற்றிவாழ்க்கை செய்து வந்தான், ஏழு ஆண்டுகாலங்கள் அவன் வியாதிபட்டிருந்தான் தானியேல் 4ம் அதிகாரத்தில் குறிப்படப்பட்டுள்ள படி. அவன் குணமான பின்னர் ஒரு விசுவாசியாகி, அவன் தன் ஆளுகைக்குத் திரும்பி பெரிய ஆளுநராய் மாறினான்.

இவனது மரணத்திற்குப் பின் இராஜ்ஜியம் விரைவில் மிகமோசமான வகையில் சீரழியத்துவங்கியது, இவன் மரணத்திற்குப் பின் அவன் குமாரனாகிய ஏவில் மெரோதேக் பட்டத்திற்கு வந்தான். ஏவில் என்பது அரசன் கெட்டவன் என்று பொருள்படாது. கல்தேயர்களில் அப்படிப்பட்ட பதம் அவன் பட்டத்து இளவரசன் என்பதை குறிப்பதாய் இருந்தது. எப்படியிருப்பினும் அவனது ஆளுகை குறிப்பிடத்தக்கதாய் இருந்தது, அவனது மைத்துனன் அவனுக்கு விஷம் கொடுத்து கொன்றுவிட்டான். அதன் பின்னர் இருவர் ஒருவரும் அரசனாய் இல்லை. நெபோனிடஸ் அவனது மரபினரால் தெரிவு செய்யப்பட்டான், அவன் நெபுகாத்நேச்சாரின் குமாரத்துவத்துக்கு முயன்றான். எப்படியிருப்பினும் அவன் விரைவிலேயே தனது குமாரனாகிய பெல்ஷாத்சாரை அரசனாய் அமர்த்திவிட்டு சென்றுவிட்டான். இவன் ஒழுக்கங்கெட்ட அரசனாய் தானியேல் 5ம் அதிகாரத்தில் பாபிலோனின் ஆளுநராய்க் காண்கிறோம்.

ஆசிய சிங்கமானது அதிகாரத்திற்கும் மற்றும் வேகத்திற்கும் அடையாளமாய் விளங்கி வந்தது, அது 2ம் அதிகாரத்தில் சிலையின்

தலையான பொன்னுக்கு சமமாய் கருதப்படுகிறது. பெலத்தை கழுகுகளின் சிறகுகளில் காண்கிறோம். இது அவர்களது விரைவான இயக்கத்தையும் மற்றும் அவர்கள் பலத்துக் கொண்டபோது பகைமை உணர்வுடன் நடந்து கொண்டதைக் குறித்தும் பேசிகிறது. கழுகு தனது செட்டைகளில் பெரிதளவில் பெலன் உள்ளதாய் இருக்கிறது. இறகுகள் பிடுங்கப்பட்டது, இராஜ்ஜியத்தின் இராணுவ பலமானது அழிக்கப்பட்டதைக் காட்டுகிறது. ஜனங்கள் அடிமைகளாயினர் மற்றும் அவர்களது அரசன் குடித்து வெறித்து மரணத்தைத் தழுவினான். கழுகும் மற்றும் சிங்கமும் புறஜாதிய இராஜ்ஜியத்தின் முதல் மற்றும் கடைசி இராஜ்ஜியங்களின் அடையாளச்சின்னமாய் இருந்தது. ரோமர்கள் கழுகை அடையாளச்சின்னமாய் பயன்படுத்தினர் மற்றும் சிங்கங்களின் தோலை போர்த்தவர்களாய் காணப்பட்டனர். பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் சிங்கமாய் இருந்தும், பரிசுத்த ரோம சாம்ராஜ்ஜியம், ரஷ்யா, ப்ருஷ்யன், ஆஸ்ட்ரோ - ஹங்கேரியன் மற்றும் அமெரிக்கா சாம்ராஜ்ஜியங்களின் அடையாளம் கழுகாய் இருந்து வருகிறது.

"அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு" என்கிற சொற்றொடர், நெபுகாத்நேச்சார் வியாதிப்பட்டு குணமடைந்தது சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது, மனித இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது. இரட்சிப்பு நெபுகாத்நேச்சாரை விடுவித்தது, தேவனுக்கு பேரக்குழந்தைகள் இல்லை, வருத்தப்பட தக்கவிதத்தில் அவரது பிள்ளைகள் விசுவாசத்தில் அவரை பின்பற்ற வில்லை ஆகையால் அவர்களது சாம்ராஜ்ஜியம் சரிவடைந்து விரைவில் தரைமட்டமானது.

வசனம் 5ல் ஒருபக்கம் சாய்ந்து நிற்கும் கரடியை நாம் காண்கிறோம், அது மிகுந்த அதிகாரத்தையும் விரைவூக்கத்தையும் பெற்றதாய் இருந்தது. இது மேதிய பெரிசியரை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது, இராணுவ கண்ணோட்டத்தில் பல முள்ளவர்கள் மட்டுமின்றி, பண்டைய உலகில் ஜனங்களின் பெரிய எதிர்பார்ப்பாயும் விளங்கினர். பெரிசியர்கள் கற்பனை மாடம் மற்றும் தத்துவம் போன்றவைகளில் ஆர்வம் காட்டவில்லை, அவர்கள் விஞ்ஞானம், மருத்துவம், வானசாஸ்திரம், இரசாயனம் மற்றும் பௌதிககம் போன்றவைகளில் ஆர்வம் காட்டுகிறவர்களாய் இருந்தனர். இதன் விளைவாக அவர்கள் மிகவும் உள்ளூரம் வாய்ந்தவர்களாய் அந்த சந்ததியில் விளங்கினர், ஆனால் அவர்கள் பெரிய பெலவீனம் மதுபானமாய் இருந்தது.

கரடியானது ஒருபக்கம் சாய்ந்து நின்றது. பெரிசியன் சாம்ராஜ்ஜியம் எப்பொழுதும் ஒருபக்கம் சாய்ந்தே இருந்தது, மேதியருடன் இணைந்து செயல்பட்டபடியினால், பெரிசியருடன் சேர்ந்து பழமைவாய்ந்த மேதியருடன் செயல்பட்ட நிலையில் எப்பொழுதும் பெரிசியரை விட

பெலவீனமுள்ளவர்களாய் விளங்கினர். தன் வாயிலே மூன்று எலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது, அது மூன்று இராஜ்ஜியங்களை கவிழ்த்துப் போட்டு தனது இராஜ்ஜியத்தை அமைத்துக்கொண்டதைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. மற்றும் பெரிசியர்கள் அந்த பிராந்தியத்தில் அடக்கி ஆளும் ஆற்றல் பெற்றவர்கள் என விவரிக்கிறதாய் இருக்கிறது.

முதலாவது எலும்பு மேதிய தேசத்தை பிரதிபலிக்கிறது, பெரிசியர்கள் கி மு 549ல் இவர்களை தோற்கடித்து மெற்கொண்டனர். மேதியர்கள் பெரிசியருக்கு மைத்துனர்களாய் இருந்தனர் இதன்நிமித்தம் அவர்கள் பெரிசியருடன் இணைந்து கொண்டனர். கோரேஸ் அவர்களது இராஜாவாயிருந்து பாதி மேதியனாயும் பாதி பெரிசியனாயும் விளங்கினான். இரண்டாவது விலா எலும்பு லிபியா, அதன் அரசனாகிய க்ரோஸஸ் மிகவும் ஐசுவரிய முள்ளவனாய் இருந்தான். அவன் பண்டைய சரித்திரத்தில் மிகவும் பிரபலப் பட்டவனாய் இருந்தான், நாணயங்களில் ஆளுபவர்களின் முத்திரை பதித்து நாணயங்களை பழக்கத்திற்கு கொண்டு வந்தவன் இவனே.

லிபியர்களின் சாம்ராஜ்ஜியமானது கி மு 546ல் கோரேஸால் தோற்கடிக்கப்பட்டது. மூன்றாவது விலா எலும்பு கி மு 539ல் வெற்றிகொள்ளப்பட்ட பாபிலோனிய சாம்ராஜ்ஜியம். இதுவே 5ம் அதிகாரத்தின் பாடமாய் இருக்கிறது. மூன்று விலா எலும்புகளும் காட்டுவது என்னவெனில் கரடியானது புதிய சாம்ராஜ்ஜியத்தை செதுக்கி உருவாக்குவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. முடிவாக அது கிழக்கே இந்தியா வரையும், மேற்கே கிரேக்கு வரைக்கும் விரிந்து படர்ந்தது. இது நிர்வாகத்தில் மிகவும் பலமான ஒன்றாய் விளங்கியது. அஞ்சல் பணியானது மற்றும் தொலைத் தொடர்பு காரியங்கள் சிறப்பாய் செயல் பட்டு வந்தது.

பெரிசிய சாம்ராஜ்ஜியத்தின் பெரிய பிரச்சனை என்னவெனில் அதிகமான மதுபானத்திற்கு அது அடிமையாய் இருந்தது, மற்றும் பாலுறவு பார்டிகள் நடத்தி தங்களைக் கெடுத்துக்கொண்டு வந்தன. அவர்கள் பெருங்குடியராய் இருந்து வந்தனர். இது பெரிசியரை தோற்கடிக்க கிரேக்கருக்கு பேருதவியாய் இருந்தது. மாசிடோனியர் தங்கள் காலாட்படைகளை நம்பிக்கையுடன் முன்னேறச் செய்து பெரிசிய படையினரை மேற்கொண்டனர்.

.

அத்தருணத்தில் கல்தேய சாம்ராஜ்ஜியத்தில், மேதிய -- பெரிசிய தலைவர்களாய் விளங்கியவர்கள் மேதியனாகிய தரியு/ பெரிசியனான கோரேஸ். பண்டைய உலகில் பெரிய அளவில் நலிவுற்றது, தேவன்

பெரிசியரை எழுப்பி அதை அகற்றினார், ஆனால் காலம் செல்ல செல்ல, அவர்களது பெலவீனம் அவர்கள் சாம்ராஜ்ஜியத்தில் பெரிய அளவில் எழுதப்பட்டது, அவர்கள் ஆடம்பரத்தை விரும்பியதால் அது அவர்களை பெலவீனப்படுத்தி அவர்கள் முன்னோக்கிய கண்ணோட்டத்துடன் யுத்தம் செய்யத் தடையாய் இருந்தது. அவர்கள் விழுந்து போயினர் காரணம் தானியேல் போன்றோர் அவர்களுக்களித்த சத்தியத்தைக் கைக்கொள்ள தவறிவிட்டனர், நெகேமியா போன்றோர் பெரிசியர்கள் அதிகாரத்தை தாங்குகிறவர்களாய் காணப்பட்டனர்.

கோரேஸ் "தேவனின் மேய்ப்பன்" எனப்பெயரிடப்பட்டான், ஏசாயா 44:28ல் கிட்டத்தட்ட 712 கி மு வில். "கோரேஸைக் குறித்து: அவன் என் மேய்ப்பன், அவப் எருசலேமை நோக்கி: நீ தட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் என்று சொல்லுகிறவர் நான்." மேய்ப்பர்கள் ஆடுகளை போஷிப்பர் மற்றும் கெட்டவைகளிடமிருந்து நல்லவைகளை விடுவித்து காப்பாற்றுவர். இதையே கோரேஸ் செய்தான் பெரிசியர்கள் தேவ திட்டத்தில் அவர்களது பங்கை அடைந்தனர். ஆனால் ஊழல்களும், சீரழிவும் அவர்களது ஆளுகையை முடிவுக்கு கொண்டு வந்தது.

அமெரிக்காவின் ஆதிக்கமானது இன்றைய அளவில் சரிவடைவதை நாம் காண்கிறவர்களய் இருக்கிறோம், அதன் ஒழுக்க நெறி தவறுவதன் மூலமும், மதரீதியான சீரழிவு, பொருளாதார ஊழல் போன்றவைகளால் சீரழிந்து வருகிறது. மேற்கத்திய நாடுகள் வீழ்ச்சியடைவதில்லை எனச் சிந்திக்க மறுக்கிறது. தேவனுடைய வார்த்தையானது அதைக்குறித்து நமக்கு கூறுகிறதாய் இருக்கிறது. மேற்கத்திய நாடுகள் அதிக அதிகமாய் தீமைக்குள்ளாய் இருண்ட நாட்களில் ஆதிக்கம் செய்கிறதாய் இருக்கும். மேற்கத்திய நாடுகள் பழைய ரோம சாம்ராஜ்ஜியத்திலிருந்து சரிவடைந்து போனது, தேசங்களின் கூட்டுறவில் விழுந்து போய், அந்திக்கிறிஸ்துவின் கட்டுப்பாட்டிற்குள் கடந்து செல்லும். பழைய ரோம சாம்ராஜ்ஜியத்திலிருந்து சரிவடைந்த கடைசி மிருகத்தின் வன்முறைச் செயல்பாடுகளால், சீரழிவு அதிகரித்து இருண்ட நாட்களில் ஆதிக்கம் செய்கிறதாய் இருக்கும்.

மேதிய பெரிசிய சாம்ராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டபோது பெரிதளவில் சுவிஷேசப் பிரபல்யமானது உலகில் பரவியது. கோரேஸ் ஒரு பெரிய சாலை அமைக்கும் நிபுணனாய் திகழ்ந்தான். அவன் அந்நாட்களில் பயணம் செய்வதை எளிதாக்கினான். இவன் தொடர்ந்து ஏசாயா 45:1-4ல் குறிப்பிடப்படுகிறான், அவன் தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டவன் என அழைக்கப்படுகிறான். அவன் தேவனால் கட்டளை பெற்று, அவன்

செய்ய வேண்டிய பணிகள் விவரிக்கப்பட்டது. கர்த்தர் சொல்லுகிறதாவது அவர்தாமே அவனுக்கு முன்னாகச் சென்று பட்டணங்களை கோரேசுக்கு அடிபணிய வைப்பேன், பட்டணத்தின் கதவுகளை வெற்றியாளனுக்கு திறக்கப்படும் என்றார். 25 ஆண்டுகாலங்களில் மத்திய கிழக்கு உலகை வென்று தனது ஆட்சிக்குட்படுத்தினான்.

ஒளிப்பிடத்தில் உள்ள ஐசுவரியமும், அந்தகாரத்தில் உள்ள பொக்கிஷம் என ஏசாயா 45:3ல் கூறப்படுவது புறஜாதிய ஆலயங்களிலிருந்து கோரேஸ் எடுத்துக்கொண்ட கொள்ளையை குறித்துக் குறிப்பிடுகிறது. இது இஸ்ரவேலின் தேவனோடு சம்பந்தப்பட்டதாய் காணப்பட்டு, இது இஸ்ரவேலின் நிமித்தம் இடம்பெற்றதாய் விளங்குகிறது. வசனம் 13ல் அந்த அதிகாரத்தில் யூதர்கள் கோரேஸின் கண்களில் தயவு கிடைக்கப்பெற்று விடுதலையாக்கப்படுத்தல் முன்னறிவிக்கப்படுகிறது.

கோரேஸின் குமாரன், காம்பைஸஸ் 2 கொலை செய்யப்பட்டு ஒரு தவறான இராஜா பதவியேற்றான், இவன் மாகிகளால் உருவாக்கப்பட்டு, சூடோ செமர்டஸ், தரியு ஒரு தளபதியால் கொலை செய்யப்பட்டு கி மு 520 முதல் கி மு 486 வரை அரசாண்டான். அவனது குமாரான் Xerxes கிரேக்கர் மீது இரண்டு இலட்சம் காலாட்களோடு படையெடுத்து வென்றான். இவனே எஸ்தருக்கு யூத இளவரசிக்கு, கணவனாய் விளங்கினான்.

கி மு 445 ல் அர்தெஸெஸ்டா லாங்கிமெனஸ் ஆளுகை செய்யும் போது ஒரு பெரிய தாக்கீது வெளியிடப்பட்டு தானியேல் தீர்க்கதரிசனப்படி 70 வாரங்கள் குறித்து தானியேல் 9ம் அதிகாரத்தில் கூறப்பட்டது ஆரம்பமானது, இக்காலத்தில் நெகேமியா 2ல் இராஜா நெகேமியாக்கு கட்டளையிட்டு எருசலேம் மதில்களை திரும்பக் கட்டுவதற்கு தட்டளை கொடுத்தான்.

பின்தொடர்ந்து ஆளுகை செய்தவர்களின் திறமையற்ற ஆட்சியினால் முடிவாக மகா அலெக்ஸாண்டர் பெரிசிய சாம்ராஜ்ஜியத்தை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான். தானியேல் 2 ம் அதிகாரம் சிலையின் புயமானது மாறி வயிற்றுப் பகுதி ஆளுகை செய்ய வெண்கலம் ஆளுகை செய்ய வழி அமைத்துக் கொடுத்தது.

வசனம் 3ல் மகா அலெக்ஸாண்டர் குறித்து கூறப்படுகிறது. மாஸிடோனிய அரசனான பிலிப், எப்பிரியன் இளவரசியான ஒலிம்பியஸை மணந்திருந்தான் இது கி மு 4ம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் நிகழ்ந்தது. கி மு 356ல் பெல்லா என்னுமிடத்தில்

அலெக்ஸாண்டரின் குமாரன் மாஸிடன் பிறந்தான். அவன் தத்துவ ஞானி அரிஸ்டாட்டில் கீழ் வளர்ந்தான்.

கி மு 340ல் அலெக்ஸாண்டர் தனது 16 வது வயதில் தனது தகப்பன் தெபெஸ் இராஜாவால் சிறைபிடிக்கப்பட்டு கைதியாய் கொண்டு போகப்பட்டபடியால் ஆளுநராய் பதவிஏற்றான். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர், பெரிசியர்களான பொதுவான விரோதிகளுக்கு எதிராக கிரீஸை ஒன்றாய் இணைப்பது பிலிப்பின் கனவாய் இருந்தது, அவன் தனது 19ம் வயதில் மரிக்கவே அலெக்ஸாண்டர் மாஸிடனில் கி மு 336ல் அரியணை ஏறினான்.

தெற்கே, தெபெஸ், ஏதென்ஸ் மற்றும் கொரிந்து போன்ற பட்டணங்களில் உண்டான கலகத்தை அடக்கி, அலெக்ஸாண்டர் திரேஸாவில் உள்ள இல்லிரியா கலகத்தினால் கீழாக்கப்பட்ட போதிலும், அவன் திரும்ப வந்து தெபெஸை சமமாக்கினான், ஒரே ஒரு வீட்டை மட்டும் விட்டுவிட்டு அது பிண்டர் என்கிற புலவருக்குச் சொந்தமானது. அவன் முற்றிலும் அலைக்கழிக்கப்பட்ட வாலிபனாய் இருந்தான், தனது முடிவை குறித்து அகம்பாவ நம்பிக்கையுடனிருந்தான். தானியேல் முன்னறிவிப்பின் படி அவன் செயல்பட வேண்டியவனாய் இருந்தான்.

கிரேக்க இராணுவத்தை கூட்டுறவு செய்து அடக்கியாளுவதற்கு அநேக மொழி பேசி வந்த அவர்களுக்காக அலெக்ஸாண்டர் கொய்னே கிரேக்க மொழியை அவர்கள் நடுவே பரப்பினான். மற்றும் அவன் வெற்றி கண்ட தேசங்களிலும் தனது இராணுவத்தின் மூலம் இப்பாஷையை பரவச்செய்தான். கொய்னே கிரேக்கு பழைய ஏற்பாட்டின் மொழியாய் மாறி செப்துவ ஜிந்த் உருவானது, பின்னர் இம்மொழியானது புதிய ஏற்பாட்டின் மொழியாய் மாறியது, இதினிமித்தம் தேவன் அவிசுவாசிகளை பயன்படுத்தி, புதிய பழைய ஏற்பாடுகளை துள்ளியமாய் உலகலாவிய விதத்தில் பரவும்படி செய்தார்.

அலெக்ஸாண்டர் தனது இராணுவத்துடன் ஆசியாவைக் கடந்த போது, 11 வருடங்களில் அதை தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளும்படி, கிரானிகஸ் யுத்தம் (கி மு 334) இஸூஸ் யுத்தம் (கிமு 333) கௌகமேலா யுத்தம் (331 கிமு) மற்றும் ஹைடாஸ்பெஸ் (கி மு 326) போன்ற யுத்தங்களை மேற்கொண்டான் மற்றும் இதைப்போன்று 40 அதிகமான யுத்தங்களை செய்து பிரபலமடைந்தான். சிறுத்தையானது வேகத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது, இது அலெக்ஸாண்டர் 13 ஆண்டுகளில் வெற்றி கண்டு செய்து முடித்ததைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

மேலான இனத்தை பெருக்க வேண்டும் என்கிற நோக்கோடு, தனது கிரேக்க தளபதிகளை அவர்களது மனைவிகளை விவாகரத்து

செய்துவிட்டு, பெரிசிய இளவரசிகளை மணம்புரிந்து கொள்ள சொன்னான். பெரிசியர்கள் கணக்கு மற்றும் விஞ்ஞானம் போன்றபாடங்களில் வெகுவாய் முன்னேறி இருந்தனர். இத்திட்டமானது அவனது தளபதிகளை கோபமடைய செய்கிறதாய் இருந்தது. கிழக்கையும் மேற்கையும் பிரித்து தனித்தனியே ஆளுகை செய்ய விரும்பினர். இது தேவனது திட்டமாய் இருந்தது. அலெக்ஸாண்டரின் கலப்பின கொள்கையானது ஒரு பக்கம் வைக்கப்பட்டு, தளபதிகள் அலெக்ஸாண்டரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினர்.

அலெக்ஸாண்டர் பஞ்சாப் மாநிலத்தில் நுழைந்து, அந்நாட்களில் அரசனாயிருந்த போரேஸ் மன்னனைத் தோற்கடித்து அதை வெற்றிகண்டனர். தனது கிரேக்க இராணுவம் கடந்த 11 ஆண்டுகளாய் யுத்தத்தில் அணிவகுத்து யுத்தம் செய்த இராணுவ வீரர் தொடர்ந்து யுத்தத்திற்கு செல்ல மறுப்பு தெரிவித்தனர். இதனால் இராணுவ வீரர்களின் ஒரு பகுதியினர் ஓடிப்போவதற்கு படகுகளை உருவாக்கிக்கொண்டு, பாபிலோனுக்குத் திரும்பினர்.

இறுதியாய் அலெக்ஸாண்டர் பாபிலோன் வந்தடைந்தான், அவன் மிதமிஞ்சி குடித்து வெறித்த பின்னர், ஜுரத்துடன் தன் படுக்கைக்குச் சென்றான். பத்து நாட்களுக்குப் பின்னர் ஜூன் மாதம் 13 தேதி கி மு 323ல் உலகை அரசாண்ட மாமன்னர் மரித்துப்போனான். அவன் இரட்சிப்படையாதவனாய் மரணத்தை தழுவினவனாய் காணப்பட்டான். அவன் தனது சொந்த தளபதிகளால் கொலை செய்யப்பட்டதாய் கருதப்படுகிறது, பின்னர் அவர்கள் இராஜ்ஜியத்தை தங்களுக்குள் பங்கிட்டு கொள்ள தீவிரித்தனர். அதிகம் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டனர். தீர்க்கதரிசன வார்த்தை பின்னர் தானியேலுக்கு அளிக்கப்பட்டு, தானியேல் 8:8 அலெக்ஸாண்டர் கொலை செய்யப்பட்டதை பதிவு செய்துள்ளார்.

தரிசனத்தில் நான்கு தலைகள் என்பது நான்கு தளபதிகள் இராஜ்ஜியத்தை பங்கிட்டு பிரித்து கொண்டதை பிரதிபலிக்கிறது. அவர்கள் இராஜ்ஜியத்தை நான்கு பாகமாய் பிரித்து சுதந்தரித்து கொண்டனர். அதில் இரு இராஜ்ஜியங்கள் செலூக்கியர்களின் இராஜ்ஜியம் தமஸ்குவை மையமாய் கொண்டதும், டாலமி இராஜ்ஜியம் எகிப்தை மையமாய் கொண்டும் செயல்பட்டது, இது சுமார் இருநூறு ஆண்டுகாலம் நீடித்தது. தீர்க்கதரிசனத்தின்படி அலெக்ஸாண்டருக்கு பின்னர் இவ்விரு இராஜ்ஜியங்களின் விவரம் 11ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

வசனம் 7ல் நாம் நான்காது இராஜ்ஜியத்தைக் காண்கிறோம், அது ரோம சாம்ராஜ்ஜியம். ஆங்கில மொழியில் ரோம சாம்ராஜ்ஜியம் தோன்றிய விதம் குறித்து, சிரிது துள்ளியமான விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. நான்கு வித்தியாசமான ஜனக்குழுக்கள் இணைந்து ரோம சாம்ராஜ்ஜியம் உருவாக்கப்பட்டது. முதலாவதாய் சமவெளி மக்கள் இவர்கள் இரும்பு யுக மக்கள் என அறியப்படுகின்றனர் மற்றும் இவர்கள் லத்தீன் அல்லது வில்லா நோவன்ஸ் என்றும் அறியப்பட்டனர். மற்ற மூன்று குழுக்களும் மலைவாழ் மக்களாயிருந்தனர் அவர்களுள் சாபின்ஸும் அடங்குவர். வடக்கே திபேரியாவின் எஸ்ட்ருகன்ஸ் மற்றும் கால்ஸ். ரோமாபுரிக்கு தெற்கே அங்கே வாசம் செய்த கிரேக்கர்கள் அடங்குவர்.

ஆரம்பத்தில் ரோமாபுரியின் ஏழு குன்றுகளில் வாசம் செய்த மூன்று குழுவினர் மட்டும் இராஜ்ஜியத்தில் பங்கெடுத்தனர், அதில் முதல் குன்றானது பாலட்டின் என அழைக்கப்படுகிறது. இரண்டாவது க்யூரினல் மற்றும் மூன்றாவது காலியன் என அழைக்கப்பட்டன. குழுவினர்களுக்குள் தொடர்ச்சியாய் சண்டை இருந்து கொண்டே இருந்தது, அதை நிறுத்திக்கொள்ள தீர்மானம் செய்தனர் அதினிமித்தம் அவர்கள் பொதுவான சந்தை ஒன்றை சமவெளியில் அமைத்தனர். இந்த பொதுவான சந்தை ஃபோரம் என அறியப்பட்டது.

சந்தையில் முக்கிய மனிதர்களாய் காணப்படுவோர் தேசப்பற்றுடையவர்களும், ரோம மக்களில் இராஜகுலத்தைச் சார்ந்தவர்களுமாய் இருந்தனர். அவர்கள் தங்களுக்குள் 300 வகுப்பினராய் பிரித்துக் கொண்டனர், ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஒரு குலமரபுத் தலைவர் ஏற்படுத்தப்பட்டிருந்தார். செனட்டஸ் என்று அழைக்கப்படும் இடத்தில் அவர்கள் கூடி வந்தனர் இதிலிருந்து நாம் செனட் என்கிற வார்த்தையைப் பெற்றுள்ளோம்.

மற்ற கலப்பின மக்கள் அதற்குள் கடந்து வருகிறவர்களாய் இருந்தனர் ஆனால் அவர்கள் தேசக் குடியுரிமை பெறாதவர்களாய் இருந்தனர். அவர்கள் ப்ளேபியன்ஸ் என அழைக்கப்பட்டனர். அவர்கள் பேட்ரிஸியன்ஸ்களை திருமணம் செய்ய இயலாதவர்களாய் கருதப்பட்டனர். இது பிரச்சனைக்கு காரணமாய் அமைந்தது. சுமார் கிமு 460ல் ப்ளேபியன்ஸ் போதிய அளவில் அதிகாரம் பெறத்துவங்கினர், அவர்கள் எழுதப்பட்ட சட்டங்களை கோரத்தொடங்கினர். அப்படிப்பட்ட சட்டங்கள் 12 மேஜையின் மீது எழுதப்பட்டது, அவைகள் 12 மேஜைகளின் சட்டம் என அழைக்கப்பட்டது. அப்படிப்பட்ட சட்டங்கள் மிகவும் நோக்கமுடையவைகளாய் இருந்தன, அவைகள் ரோமச் சட்டத்தின் அடிப்படையில் அமையப்பெற்றவைகளாய் இருந்தன. இத்தகைய சட்டம் இரு குழுவினருக்குமாய் இருந்தது.

கி மு 367ல் நில சம்பந்தமான பிற சட்டங்களும் ரோம சமுதாயத்தில் அமைக்கப் பட்டு வெளியிடப்பட்டது. அந்த நூற்றாண்டில் பேட்ரிஸியன்ஸ் மற்றும் ப்ளேபெரியன்ஸ் இரு சாராரும் ரோமரின் அடிஸ்தானத்தில் மூழ்கத்துவங்கி ரோமருக்கு அஸ்திபாரத்தை அமைத்தனர். பின்னர் இத்தாலியை ஒன்றினைக்க இன்னும் 100 ஆண்டுகள் அவசியப்பட்டது.

ரோமர்கள் வழக்கத்திற்கு மாறான உணவு பழக்கத்தினை உடையவர்களாய் இருந்தர். அவர்கள் வெங்காயம், நூர்கோல், முட்டைகோஸ், அத்திபழம், ஒலிவ எண்ணெய், ஆப்பிள், பேரிக்காய், கூழ், பிரெட், பன்றி மாமிசம், மாட்டிறைச்சி போன்றவற்றை உணவுக்காய் பயன்படுத்தினர். அவர்கள் குடிப்பதற்கு தண்ணீரையும் ஆட்டுப் பாலையும் பயன்படுத்தி வந்தனர். அவர்கள் தேசம் ஓர் தனிப்பட்ட தேசமாய் இருந்து ஆரம்ப காலத்தில் மது பான மின்றி காணப்பட்டனர். ஆரம்பத்தில் அவர்களது வீடுகளில் ஒரே அறைமாத்திரம் அமையப்பெற்று அவைகளில் மரச்சாமான்களும் சில சமையல் பாத்திரங்களும் இருந்தன. அவர்கள் முக்கிய உணவை மதிய உணவாய் கொண்டிருந்தனர்.

லேபர் யூனியன் அமைப்பதில் இவர்களே முதன் மக்களாய் திகழ்ந்தனர், அவர்கள் முதலாவது யூனியன் மரத்தச்சருக்காய் அமைக்கப்பட்டது, அதைத் தொடர்ந்து பாதணிபணியாளருக்கும், சாயம் முக்குபவர்களுக்கும், குழல் ஊதுபவர்களுக்கும் ஏற்படுத்தப்பட்டது. வறுமை என்பது ரோமில் இல்லாதிருந்தது. இது மூன்று ப்யூனிக் யுத்தங்களின் ஆரம்ப முதல் கிட்டதட்ட 500 ஆண்டு காலங்கள் நிலவி வந்ததாய் கருதப்படுகிறது. அவர்கள் மிகவும் கடின உழைப்பாளிகளாகவும், எளிமையான வாழ்க்கை முறையினை உடையவர்களாயும் திகழ்ந்தனர். அவர்களை ஆளுபவர்களும் எளிமையான வாழ்க்கை செய்வதை அதிகம் மதித்தனர், இராஜரீக பழக்கவழக்கங்களையும், ஆடம்பரங்களையும் ஆரம்ப காலகட்டங்களில் வெறுத்தவர்களாய் காணப்பட்டனர். அவர்கள் சரிவடையத் துவங்கும் போது, ஆடம்பரத்தை அதிகம் நேசித்தனர், மதுபானத்திற்கும் குடிபோதைக்கும் அடிமைகளாய் மாறினர். அவர்களது வீழ்ச்சியானது எல்லா புறஜாதிய இராஜ்ஜியங்களின் உண்மையை எடுத்துக்கூறி சரித்திரத்தின் மூலம் நமது நாட்கள் வரையில் விளங்கச் செய்து வருகிறது.

ரோமர்கள் வல்லமை மிக்க மக்களாய் தேவனால் பயன்படுத்தப்பட்டு வந்தனர், அவர்களை சுவிஷேசத்திற்கும் மற்றும் வன்முறை எதிர்ப்புக்கும் தேவன் பயன்படுத்தினார். மற்ற மக்கள் எல்லாரைப் பார்க்கிலும் பண்டைய நாட்களில் யூதர்களின் முன்னேற்றத்திற்கு தனது நோக்கத்திற்கு இசைய இவர்களை தேவன் பயன்படுத்தினார். ரோமரைக்

குறித்த சரிதையானது இருபங்காக பிரிக்கப்படுகிறது, ஜனநாயக ஆட்சி முறை மற்றொன்று ஜீலிய சீசரின் இராஜ்ஜியம் என்பதே இரு பங்காய் விளங்குவது. ஜீலிய சீசர் கி மு 44ல் மரணமெய்தினான்.

ரோமர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனித அவதாரம் எடுப்பதற்கும், அவரது ஊழியத்திற்கும் மற்றும் கிறிஸ்தவம் பரவுவதற்கும் நான்கு நூற்றாண்டு காலங்கள் பாதுகாப்பான சூழலை அமைத்துக் கொடுத்தவர்களாய் இருந்தனர். பழைய ஏற்பாட்டு பின்னணியம் யூதப்பழக்கவழக்கமாய் இருக்க, புதிய ஏற்பாடானது கிரேக்க கலாச்சாரத்தை பின்னணியாய் கொண்டு, கிரேக்க மொழி மற்றும் அதிகாரத்தில் இருந்த ரோமர்களின் ஆதிக்கம் நிறைந்ததுமாய் காணப்படுகிறது. ரோமர்கள் நெபுகாத்நேச்சாரின் சிலையில் கால்கள் இரும்பாய் திகழ்கின்றனர்.

மிருகத்தைக் குறித்த விளக்கங்களை கண்ணுறும்போது, எட்டு சரித்திர சொற்றொடர்களை தொடர்ச்சியாய் சரித்திரத்தில் வியாக்கியானிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு குணாதிசயமும் ரோம சாம்ராஜ்ஜியமானது தேவனது ஜனத்தை எதிர்க்கும் போது குறிப்பிடப்படுகிறதாய் இருக்கிறது. .

"கெடியும் பயங்கரமான" -- மத்தியதரைக்கடல் பகுதியை வெற்றி கண்டதைக் குறித்து இது குறிப்பிடுகிறதாய் இருக்கிறது. கி மு 264ல் ஐந்து அதிகார மையங்கள் இருந்தன அவைகள் ரோமர்கள், கார்த்தேஜினியர்கள், மாசிடோனியர்கள், ஹெலனிஸ்டிக் சாம்ராஜ்ஜியங்களான சிரியா மற்றும் எகிப்து போன்ற இடங்களில் அமைந்திருந்தன. கார்த்தேஜ் வட ஆப்பிரிக்கா மற்றும் ஸ்பைன் போன்ற தேசங்களை உள்ளடக்கியிருந்தது. ரோமில் முழுமையான ஆட்சிமையமாய் அமைய நூறு ஆண்டுகளுக்கு மேல் எடுத்துக் கொண்டது. கார்த்தேஜினியர்களை வெற்றிகாண மூன்று ப்யூனிக் யுத்தங்கள் அவசியமாய் இருந்தது.

ப்யூனிக் என்ற வார்த்தை பொனிஸியன்ஸ் என்கிற வார்த்தையிலிருந்து வந்தது, இவ்விடத்தில் கார்த்தேஜினியர்கள் இருந்தனர். கார்த்தேஜின் பிரபலமான தலைவர்கள் ஹன்னிபல் என அறியப்பட்டனர், இவர்கள் கி மு 216ல் கண்ணாயி யுத்தத்தில் ரோமர்களை படுதோல்வி அடையச் செய்தனர். கார்த்தேஜின் மக்கள் அவர்கள் அதிகாரத்தைக் குறித்து மிகவும் வைராக்கியமுடையவர்களாய் இருந்தனர், தங்களது முக்கிய தளபதிக்கு அனுப்பப்படும் எல்லாவற்றையும் தடைசெய்தனர், இறுதியாய் இது கார்த்தேஜின் வீழ்ச்சிக்கு வழிநடத்தியது, இப்பட்டணத்தில் உப்பை விதைத்தனர். அநேகமாயிரம்

கார்த்தேஜினியர்கள் ரோமர்களால் கொன்று குவிக்கப்பட்டனர். ஒருவரையும் மீதமாய் வைக்கவில்லை. ஹன்னிபல் தங்களைத் தாங்களே தற்கொலை செய்து கொண்டனர், இது கி மு 182ல் நிகழ்ந்தது.

கி மு 201ல் ரோமர்கள் கிழக்கு மத்தியத்தரைகடல் பகுதியினரை வெற்றி கண்டனர். கிரேக்க மொழியானது கிழக்கு ஆட்ரியாடிக் பகுதியிலும், மேற்குப்பகுதியில் லத்தீன் பாஷையும் பேசப்பட்டு வந்தது. இவ்விரு மொழிகளும் இசைவுடையதாய் திகழ்ந்தன.

"பயங்கரமும்" – இது ரோமர் கூட்ட எழுச்சியை பிரதிபலிக்கிறது மற்றும் சமூக எழுச்சியையும் அடிமை வேலையாட்கள் பயன்படுத்தப்பட்டதையும் பிரதிபலிக்கிறது. அவர்களது முழு அமைப்பும் அவர்கள் சமூக நிலையானத்தன்மையும் அழிக்கப்பட்டு மாற்றம் கண்டது. விவசாயம் செய்பவர்கள் அவர்களது காணியாட்சியிலிருந்து துரத்திவிடப்பட்டனர். 17 ஆண்டுகள் இரண்டாவது ப்யூனிக் யுத்தத்தின் போது ஒரு மில்லியன் ஜனங்கள் கொன்று குவிக்கப்பட்டனர். பெரிதளவில் ஒழுக்கசீர்கேடும் ஜனத்தொகையானது இடம்விட்டு இடம் மாற்றமடையவும் செய்தனர்.

ரோம சாம்ராஜ்ஜியம் விவசாய பொருளாதரம் மிக்க நாடாய் இருந்தது. அதன் அழிவால் ஜனங்கள் ரோம் நோக்கி சென்றனர் அவர்கள் குற்றவாலிகளாய் துரத்தப்பட்டு மிகவும் வறுமையை சந்தித்தனர். ரோம தலைமைத்துவம் அக்கூட்டத்தினரை போஷித்து, எகிப்திலிருந்து தானியத்தினை இறக்குமதி செய்தனர், அதற்கு அரசாங்கம் செலவிட்டு இறக்குமதி செய்தது. "பயங்கரம்" என்கிற வார்த்தை ஒழுக்கம் மற்றும் பொருளாதார சீர்குலைவை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. இது அநேக உள்நாட்டு யுத்தத்தினால் முடிவுக்கு வந்தது.

ரோமர்கள் மூன்று காரியங்களை பாதுகாத்தனர்:--

ஜூலிய சீசரின் எழுச்சியும் மற்றும் அவனால் உருவாக்கப்பட்ட நிர்வாக அமைப்பு.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனித அவதாரம், மற்றும் அவரது இரட்சிப்பின் பணி.

முதலாம் நூற்றாண்டில் பகுப்பாய்வு மூலம் நிறைவு பெற்ற வேதாகமம்.

"மகா பலத்ததுமாய் இருந்தது." ரோம் ஒரு பட்டணமாயிருந்து பின்னர் அது ஒரு சாம்ராஜ்ஜியமாய் உருவானதை இது பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது.

“**Strong Exceedingly”** – this represents Rome evolving from a city state into an Empire that dominated all.

"**அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது;"** – இது கி மு 146 முதல் 49 கி மு வரை நீண்டகால உள்நாட்டு யுத்தம் நிகழ்ந்ததைப் பிரதிபலிக்கிறது. இக்காலக்கட்டத்தின்போது, அநேக மறுமலர்ச்சியாளர்கள் இருந்தனர், ஆனால் பெரிய அளவில் அடக்குமுறையும் இருந்து வந்தது. அதே சமயம் அடிமைகளால் கலகமும் இருந்து வந்தது, ஸ்பார்ட்டகஸ் கலகம் கி மு 71ல் நிகழ்ந்தது, அது க்ராஸஸ் மற்றும் பாம்பே போன்றவர்களால் அடக்கப்பெற்றது இதன் விளைவாக 38,000 மக்கள் ரோமிற்கு வெளியே உள்ள பிரதாண மார்க்கங்களில் சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

சுல்லா மற்றும் மாரியஸ் இவர்களிடையே பெரிய முறண்பாடு இருந்து வந்தது, இரு இராணுவ தளபதிகளுக்குமிடையே 100 க்கும் கி மு 79க்கும் இடையே யுத்தம் நடந்து வந்தது. அவர்கள் கொலை தீர்ப்பு அமைப்பைக் கையாண்டு, அதிகாரத்தில் இல்லாதவர்களை கொன்று குவித்து வந்தனர் மற்றும் அவர்களது சொத்துக்களை ஜப்தி செய்து தங்களது இராணுவத்திற்கு அவைகளை கொடுத்து வந்தனர். அது இதற்கு முன் வரை நடந்திராத இரக்கமற்ற செயலாய் இருந்து வந்தது, அவர்கள் இச்சையினால் எல்லாவற்றையும் நடப்பித்து வந்தனர் அது சாத்தனது செயல்களின் துவக்கமாய் இருந்து வந்தது.

கி மு 60ல் ஜூலிய சீசர், பாம்பே, மற்றும் க்ராஸ்ஸஸ் போன்றோரின் முத்தலைவரின் ஆளுகை அமைக்கப்பட்டது. ரோம சாம்ராஜ்ஜியத்தில் க்ராஸ்ஸஸ் மிகவும் செல்வ சீமானாய் இருந்தான். அவனுக்காய் வேலை செய்யும் மில்லியன் ஜனங்கள் இருந்தனர் அவன் தனது சம்பாத்தியத்தை அச்சுறுத்தி பணம் பறித்தல் மற்றும் அடிமைத்தனம் மூலம் பெற்றுவந்தான். மற்றவர்கள் ஜெயசாலிகளான தளபதிகளாய் இருந்து வந்தனர். க்ராஸ்ஸஸ் என்பவன் பயிற்சியின்றி, சிறப்புத் தன்மையின்றி இராணுவ மேதையாய் இருக்க தீர்மானித்து அதை விரும்பினான், அவன் பார்த்தியாவுக்கு ஒரு இராணுவத்தை வழிநடத்திச் சென்று கி மு 53ல் யுத்தத்தில் கொலை செய்யப்பட்டான்.

இறுதியாக பாம்பே மற்றும் ஜூலிய சீசர் இருவரும் தம்மில்தாமே மோதிக்கொண்டனர். கி மு 48ல் பாரஸாலியா என்னுமிடத்தில் பாம்பே தோற்கடிக்கப்பட்டான். அவன் ஜூலிய சீசரை ரோம சாம்ராஜ்ஜியத்திற்கு

ஏகத் தளபதியாய் விட்டு பிரிந்து போனான். "பற்கள்" என்னும் வார்த்தை ரோம சாம்ராஜ்ஜியம் சத்துருக்களை கிழித்தெறிந்தது என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறதாய் இருக்கிறது. அவர்கள் இதற்குமுன் நண்பர்களாய் இருந்தும் அவர்களை கிழித்தெறிகிறதாய் இருந்தது.

"**அது நொறுக்கிப்பட்சித்தது"** -- சீசர் மூன்று பகுதிகளில் பிரச்சனைகளைச் சந்திக்கிறவனாய் இருந்தான்.

ரோமப்பிரஜைகளின் ஊழல்கள் வீடுகளில் கூட்டங்களின் ஆளுகையினால்.

குறிப்பாக ஜெர்மனியிலிருந்து பார்பேரியன் படையெடுப்பால் உண்டான அபாயம்.

ரோம மாகாணங்களில் சிறப்பான அரசாங்க ஆளுகையின் அவசியம் ஏற்பட்டது.

சிசெரோ சீசரிடம் இவ்வாறு கூறினான், "அவன் ஒரு பெரிய இராணுவ வீரனாய் இருந்தான் என்றும், தேசீயவாதியாகவும், சட்டம் இயற்றுபவனாகவும், சட்ட பட்டதாரியாகவும், சிறந்த சொற்பொழிவாளராகவும், கவிஞராகவும், சரித்திர ஆசிரியராகவும், இலக்கணவித்துவானாகவும், கணித மேதையாகவும், கட்டிடக்கலைஞனாகவும் இருந்ததாய் கூறினான்."

சீசர் ஒரு அவிசுவாசியாய் இருந்தான், அவன் தனது நாட்களில் எல்லா நபரைக்காட்டிலும் அவனது நடத்தையிலும், குணத்திலும் மிகவும் கிருபையுள்ளவனாய் இருந்தான். அவன் பாம்பேயுடன் முறண்பாடு கொண்டிருந்த சமயம், அவனது தளபதிகளில் ஒருவன் வெறுமையாய்ப் போகவிரும்பி எதிராளிகளுடன் சேர்ந்து கொண்டான். சீசர் அவனது சுயசித்தத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல் அவனை மதித்து கனப்படுத்தி பாம்பேயின் பட்டாளத்தில் பாதுகாப்பை ஏற்படுத்தி அவனது தளவாடங்களை அதன் பின்னர் அவனுக்கு அனுப்பி வைத்தான்.

அவன் பாம்பேயை வெற்றிகண்டபோது, அவனை எதிர்த்த உயர்குடி குழுவினரை எடுத்துக்கொண்டான், அவர்களது நிலத்தை அவர்களுக்கு மீட்டுக்கொடுத்து அவர்கள் சொத்தையும் திரும்ப கொடுத்தான். அவன் சாம்ராஜ்ஜியமானது எல்லாரும் பிரஜைகளும் சம உரிமை பெறும் வருக்கும் ஒரு சாதகமான இடமாய் அமையாது என்று கூறினான். கூட்டத்தினரை போஷிக்க மறுத்து, அநேகரை கட்டாயமாய் படையில்

சேர்த்துக் கொண்டு, அவர்களில் அநேகரை கொரிந்துவிற்கு அனுப்பிவைத்தான் மற்றும் மற்ற பட்டணங்களையும் கட்டி எழுப்பி குடியேற அனுப்பிவிட்டான், இதன் மூலம் கூட்டத்தினரை புறக்கணித்து சிலகாலத்திற்கு அனுப்பி விட்டான். கூட்டம் இல்லாத காலமிருந்தது, வேலையில்லாதோர் ஒருவரும் இல்லாதிருந்தனர்.

சீசர் 12 மேஜைகளில் சட்டங்களை கண்டான் அவைகள் போதுமானதாய் இல்லை என்பதையும் கண்டுகொண்டான், ஆகையால் அவைகளை தனது வாழ்வின் கடைசி ஐந்து ஆண்டுகளில் தொகுத்து அமைத்தான், இவைகளை செய்து கொண்டிருக்கும்போது அவன் மூன்று முகாம்களுடன் போர் தொடுத்தான், அவன் பார்த்தியாவுக்குச் சென்று, அவர்களை முறியடித்தபோது அவன் இவ்வகையான சொற்றொடரை ஏற்படுத்தினான் “Veni, Vidi Vici” -- நான் வந்தேன், நான் கண்டேன், நான் வென்றேன்.

அவன் ஜூன் மாதத்தில் இளவேனிற்காலம் வருகிறது என்பதைக் கண்டு, ஜூலியன் காலண்டரை மாற்றி அமைத்தான், அதை போப் கிரிகெரி சிறிது மாற்றி அமைத்து இன்றைய அளவிளான நமது அடிப்படை காலண்டரை ஏற்படுத்தினர்.

அவன் கோழையான ஒரு சிப்பாய் தனது பட்டாளத்தில் இருப்பதை மறுத்தான், " ஒரு கோழை அநேகம் தரம் மரிக்கிறவனாய் இருக்கிறான், வீரனோ ஒரேதரம் மரிக்கிறவனாய் இருக்கிறான்." இந்தவகையில் அவனது ஆணவம்/வீரம் மதியீனமான ஒன்றாய் இருந்தது, அவனுக்கு பாதுகாப்பு அவசியமாய் இருந்தது. இறுதியாய் அவன் மார்ச்சு மாதம் கி மு 44ல் ரோமில் கொலை செய்யப்பட்டு, 23 கத்திக்குத்துக்களுடன் பாம்பேயின் எதிரியால் ஒரு சிலையின் பாதப்படியில் செத்து மடிந்தான். சீசர் அனோரீதியான பாவங்களால் கொலை செய்யப்பட்டான், அவன் எச்சரிப்பின்றி அவன் துரதிஷ்டவசமாய் செத்து மடிந்தான்.

சீசர் மிகவும் புத்திமானாய் இருந்தான், சர்ச்சிலைப்போன்று ஆறு காரியதரிசிகளை ஒரே நேரத்தில் வழிநடத்தக்கூடியவனாய் திகழ்ந்தான். மிகவும் கொஞ்ச நேரமே உறங்கி உயிர்வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் கடின உழைப்பாளியாய் திகழ்ந்தான். அவன் கால் என்கிற இடத்திற்கு புறமாகானத்தலையராய் சென்றான் ஜெர்மானியரின் படையெடுப்பால் அவன் இராணுவ நுணுக்கங்களை வெகுவாய் கற்றுக்கொண்டான்.

சீசரின் மரணத்திற்குப் பின் கிழ்க்கு சாம்ராஜ்ஜியத்தில் அலுவலகப்பணியான்து ஆட்டம் காணத்துவங்கியது. புதிய ஏற்பாடானது ஸ்தாபனமானதாய் காணப்பட்டது. பெரிய ஏரோது மாற்கு ஆண்டனி

மற்றும் கிளியோபார்ட்டா போன்றோருக்கு ஆதரவு அளித்தான் இவர் சீசரின் வாரிசாக இருந்தான். மாற்கு ஆண்டனி ஆக்டியம் யுத்தத்தில் மரித்துப் போனான் மற்றும் ஏரோது அவனை அடக்கம் செய்தான். ஆனால் வெண்கலம் பொன்று தைரியமாய் இருந்து அவன் ஆக்டேவியனைப் பார்த்து இவ்வாறு சொன்னான், "நான் ஆண்டனிக்கு உண்மையாய் இருந்தது போல, உனக்கும் உண்மையாய் இருப்பேன்" என்றான். ஆக்டேவியன் ஏரோதை முழுவதும் பதவி அதிகாரத்தின் அவன் கண்ணோக்கமாய் இருப்பதைக் கண்டு, அவன் பயன் உள்ளவன் என்றும் அவனை "யூதர்களுக்கு இராஜாவாக" உறுதி செய்தான், அது கிழக்கு சாம்ராஜ்ஜியத்தை பார்த்தியன்ஸிடமிருந்து அடக்கியாளுவதற்கு பேருதவியாய் இருந்தது, ஏரோது ரோமர்களை நன்றாய் சேவித்து சிறப்பாய் ஆளுகை செய்தான்.

"மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது;" -- ஆக்டேவியினுடன் கி மு 31ல் ஜூலியன் சீஷர் தமது ஆளுகையைத் துவங்கினான் இப்பொழுது தனது பெயரை அகஸ்டஸ் சீசர் என மாற்றிக்கொண்டு நான்கு ஆண்டுகளுக்கு பின்னர் தமது இராஜ்ஜியத்தை தானே வடிவமைத்துக்கொண்டான். அவனது நிர்வாக ஆட்சி தலைவர்கள் மிகுந்து சமாதானத்துடனும், நிலையானதன்மையுடனும் ஆட்சிபுரிந்தனர். அகஸ்டஸ் கி பி 14ல் மரணமெய்தினான் அவனைத் தொடர்ந்து திபேரியஸ் கி பி 37 வரை ஆட்சிபுரிந்தான். இவ்வரிசையில் கடைசி மூன்று இராயர்கள் கலிகுலா, கிளௌதியஸ், மற்றும் நீரோ போன்றவர்கள் ஆவர்.

முதல் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில், பிலேவியன் சீசர் ஆண்டான். மீதியானதை தன் காலின் கீழ் மிதித்துப்போட்டது என்பதன் பொருள் இவன் யூதர்களின் புரட்சியினிமித்தம், கி பி 67 முதல் 70 வரை அவர்களை அகற்றிவிட்டான். மாசாடா அதைத் தொடர்ந்து இரு ஆண்டுகள் நிகழ்ந்தும் முடிவில் அதுவும் அழிக்கப்பட்டது. இப்படிப்பட்ட சீசர்கள் முதலாவது பெரிய உபத்திரவத்தை துவக்கி வைத்தனர் யோவான் பத்மு தீவிற்கு அனுப்பப்பட்டது இவர்களது உபத்திரவ காலத்தில்தான், அநேக இயேசுவின் அப்போஸ்தலர்கள் கொலை செய்யப்பட்டனர். பேதுரு மற்றும் பவுல் போன்றோர் முன்னதாகவே நீரோ மன்னனுக்கு கீழ் கொலை செய்தனர் இவன் கடைசி ஜூலியன் சீசராய் கருதப்படுகிறான்.

"அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும் வேற்றுருவமாய் இருந்தது." -- ரோம அதிகாரத்தின் பொன்னான காலத்தைத் தொடர்ந்து பிலேவியன் சீசர் ஆளுகை செய்தான், 100 ஆண்டு காலம் கி பி 96 முதல் 192 வரை இதற்கு முன் கண்டிராத வண்ணம் வித்தியாசமானதாய் இருந்தது. இராஜ்ஜியத்தில் ஓரிடத்திலிருந்து

மற்றொரு இடத்திற்கு சமாதானத்துடன் பயணம் செய்ய இயன்றது. சமாதானமானது வலுவான இராணுவத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது, மற்றும் வலுவான பொருளாதார அமைப்பிலும் அமைந்திருந்தது. இராணுவ வீரர்கள் சாம்ராஜ்ஜியத்தின் விழிம்பில் மட்டுமேயன்றி வேறெங்கிலும் காணப்பட வில்லை. ரோம் நகரானது ஒரு வணிக மையமாகவும்/ உலகின் வங்கியாகவும் திகழ்ந்தது.

சரித்திரத்தில் எக்காலத்திலும் இல்லாத அளவு பெண்களின் நிலையானது சிறப்பாக அமைந்திருந்தது. அவர்கள் பத்திரமாகவும் மற்றும் பாதுகாப்புடனும் இருந்தனர். அவர்களுக்கு அதிக பட்ச சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தது. ஏழை எளியவர்களுக்கான சிறப்பான தானதர்ம அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அடிமைத்தனமானது சில இடங்களில் இல்லாது இருந்தது (சுரங்கங்கள் தவிர) இத்தருணத்தில் அடிமைகள்ரோம சட்டத்திற்கு இலாபம் ஈட்டித் தருகிறவர்களாய் இருந்தனர். குற்றங்கள் எல்லாக் காலங்களைவிட மிகக் குறைவாய் காணப்பட்டது, நீதியானது நிலைநாட்டப்படுகிறதாய் இருந்தது. வருத்தப்படக்கூடிய காரியம் என்னவெனில் சபைக்கு விரோதமான உபத்திரவத்தின் அளவானது அதிக அளவில் காணப்பட்டதுதான்.

மூன்றாவது நூற்றாண்டில் விசுவாசத்துரோகமானது சபைக்குள் நுழைந்து சாம்ராஜ்ஜியத்தியத்தை ஊழலுக்கு உட்படுத்தியது. 90 ஆண்டுகாலங்களில் 18 சக்கரவர்த்திகள் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவத்தை தேசீய மதமாக்கும் வரை, சபையை உபத்திரவப்படுத்தி வந்தனர். இறுதியாய் ஆண்ட சக்கரவர்த்தியின் பெயர் ரோமலஸ் அகஸ்டஸ் கி பி 476ல் கோதிக் தலைவர் ஓடோவாசரால் தோற்கடிக்கப்பட்டு மேற்கத்திய சாம்ராஜ்ஜியத்தை முடிவுக்கு கொண்டு வந்தான்.

"அதற்கு பத்து கொம்புகள் இருந்தன." இது மன்னராட்சியின் உச்சக்கட்டத்தை குறிப்பிடுகிறதாய் இருக்கிறது, மேற்கத்திய நாடுகள் "ஒருலக "அரசாங்காத்தை அமைக்கப்போவதை குறிக்கிறதாய் இருக்கிறது. சாத்தான் எப்பொழுதும் ரோம சாம்ராஜ்ஜியத்தை வித விதமான ஆளுநர்களால் ஜெயமின்றி திரும்ப எழுப்புவதில் முயன்றுகொண்டு இருக்கிறான். கிபி 800ல் சார்லிமக்னே உட்பட பரிசுத்த ரோம சாம்ராஜ்ஜியத்தை ஆளும்படி ஏற்படுத்தப்பட்டான், அது பரிசுத்தமாகவோ அல்லது ரோமனாகவோ இல்லாதிருந்தது, ஐந்தாம் சார்லஸ் 19ம் வயதில் கிட்டதட்ட ஐரோப்பா முழுவதையும் 16ம் நூற்றாண்டில் சுதந்தரித்துக் கொண்டான், இதே போன்று நெப்போலியன் மற்றும் மற்றவர்களும் 1800ல் சுதந்தரித்துகொண்டனர். ,

சார்லஸ் 5ன் விஷயத்தில் அவன் பதவி மோகத்தை அடையவிடாதபடி அநேக தடைகளை சந்திக்க வேண்டியதாய் இருந்தது. முதலாவதாக மார்டின் லூத்தரால் கிபி 1517ல் மறுமலர்ச்சியானது துவங்கப்பட்டது. மற்றும் அவனுக்கு அரசியல் விரோதிகள் எழும்பினர், பிரான்ஸ் தேசத்தின் பிரான்ஸிஸ் 1 தொடர்ந்து இவனது இராஜ்ஜியத்தை நொறுக்கி சீர்குலைக்க முயன்று கொண்டே இருந்தான். துருக்கியின் உயர்வாய் கருதப்பட்ட சுலைமானும் இவனது சாம்ராஜ்ஜியத்தை தகர்க்க முயன்றான். சார்லஸ் தனது 55வது வயதில் ஓய்வு பெற்று துறவர வாழ்வை மேற்கொண்டான். அவனது குமாரனாகிய பிலிப் 2 ஸ்பெயினைச் சார்ந்தவன் இங்கிலாந்துடன் ஸ்பானிஷ் அர்மடாவோடு சேர்ந்து தாக்குதல் நடத்தினான் ஆனால் காற்றுக்களால் துரத்தியடிக்கப்பட்டான்.

நெப்போலியனது முயற்சியானது, ஸ்பெயினில் அவனது முகாமானது அழிக்கப்பட்டு தடைசெய்யப்பட்டது, மாஸ்கோ அவனை பின்னடையச் செய்தது, இறுதியாக வாட்டர்லூ யுத்தமும் அவனை பின்னடையச் செய்தது. ஹிட்லர் கடைசி ஆளுநராகவும் தீமையினால் நிரப்பப்பட்டு சாத்தானால் ஆண்டுகொள்ளப்பட்ட மனிதனாகவும் திகழ்ந்தான். அவன் இரண்டாம் உலகமகா யுத்தத்தில் வெற்றிக்காண வேண்டியதாய் இருந்தது, ஆனால் அவனால் இயலாது போயிற்று. அவன் தனது தளபதிகளுக்கு அழித்த வழிகாட்டுதல் தவறாய் அமைந்துவிட்டது. இதை தேவனது கரம் மட்டுமே விவரிக்க முடியும், தடைகள் ஹிட்லரின் வெற்றியை தடுத்து நிறுத்தின. சாத்தான் தனது எல்லாவித தந்திரங்களுடன் பெரிய உலக ஆளுநரை மேற்கத்திய நாடுகளில் எழுப்ப இருக்கிறான் -- அவன் அந்திக் கிறிஸ்து!

வசனம் 8ல் பத்து கொம்புகளை தானியேல் தானியேல் 2ம் அதிகாரத்தில் உள்ள பத்து கால்விரல்களுக்கு ஒப்பிட்டு காட்டுகிறவனாய் இருக்கிறான். இந்த அதிகாரத்தில் உள்ள துஷ்ட மிருகங்கள் அதிகாரம் மற்றும் வேகம் இவைகளை சம்பந்தப்படுத்திக் காட்டுவதாயும், சொப்பனத்தில் கண்ட சிலையானது அரசியல் ஒற்றுமையை சம்பந்தபடுத்திக் காட்டுவதாயும் இருக்கிறது. பத்து கொம்புகளில் இருந்து சிறிய கொம்பு ஒன்று எழும்பி அதாவது அந்திக்கிறிஸ்து எழும்பி, மூன்று இராஜாக்களை அழித்துப்போடுவான். அவனது தனிச்சிறப்புத் தன்மையானது இச்சொற்றொடர் மூலம் காட்டப்பட்டுள்ளது, "அதற்கு மனித கண்கள் போன்று கண்கள் இருந்தன." அவன் சாத்தானால் ஆண்டுகொள்ளப்பட்டு, அவன் அசாத்தியமான பேச்சாளனாய் இருப்பான், அவன் தேவனைக் குறித்து தூஷணமானவைகளை பேசுவான்.

அந்திக்கிறிஸ்துவின் பிண்ணனியம் குறித்து வெளிப்படுத்தல் 13, 17 ஆகிய அதிகாரங்களில் அளிக்கப்பட்டுள்ளது, அவனது முடிவு குறித்து

வெளிப்படுத்தல் 19ல் கொடுக்கப்பட்டுள்ளது. 2 தெசலோனிக்கேயர் 2ம் அதிகாரத்தில் குறிப்பிடத்தக்கது என்னவெனில், அவனது முழுமையான இனங்காணுதல் வெளிப்படுத்தப்படவில்லை, பரிசுத்த ஆவியானவர் மற்றும் அனைத்து கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அகற்றப்படும் வரைக்கும் அவன் வெளிப்படாது இருப்பான்.

கைக்கொள்ளுதல்:

தேவன் இராஜ்ஜியங்கள் எழும்ப காரணமாய் இருக்கிறார், அவர் அதன் சீரழிவு மற்றும் விசுவாசத்துரோகம் போன்றவைகளுடன் இடைபடுகிறவராய் இருக்கிறார்.

தேவன் கடந்த கால நித்தியத்தை அறிந்தவராய் இருக்கிறார், அவர் தமது திட்டத்தைப் பன்படுத்தி ஒரு நபர் சரித்திரத்தில் செயலாற்றச் செய்கிறவராய் இருக்கிறார்.

ஒரு அரசாங்கம் மிக நன்றாய் மற்றும் படுமோசமாய் அமைக்கப்படுவது முற்றிலும் அதன் ஆளுநரால் அமையப்பெறுகிறது. சிறப்பாய் அமையப்போவதன் மாதிரி இயேசுக் கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின் போதாகும், அவிசுவாசிகளின் அமைப்பின் மாதிரி சீசர்களுடையது. மிக மோசமான ஆளுகைக்கு அடால்ஃப் ஹிட்லர் உதாரணமாய் இருக்கிறான். எல்லா தீமையான அளுநர்களும் அழிக்கப்பட்டு போயினர், இறுதியான ஆளுந்ரை தேவன் தாமே அழித்துப்போடுவார்.

அவிசுவாசிகளின் செயல்பாடுகளினால், தேவனது திட்டமானது உடனடியாய் மேம்படுத்த தேவனால் இயலும். உதாரணத்திற்கு நிலையானத் தன்மையானது ஜூலிய சீசரின் அமைப்பானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பாதுகாப்பதாய் அமைந்தது, மற்றும் கிறிஸ்தவம் பரவுவதற்கு வகை செய்தது. மகா அலெக்ஸாண்டர் ஒரு மொழியை அளித்து புதிய ஏற்பாடு மிகத்துள்ளியமாய் வெளிவர உதவியாய் இருந்தான். அவர்களது தீமைக்குப் பதிலாக அவர்கள் தேவனது திட்டத்தில் பயன்படுகிறவர்களாய் அமைந்தனர்.

ஒற்றுமை கடந்து வருகிறதாய் இருக்கிறது ஆனால் அது தேவனது நேரத்தில் கடந்து வரும், அது அழைக்கப்படுவது அவரது திட்டத்தின் கீழ் அமைவதாய் இருக்கும்.

DOCTRINES உபதேசங்கள்:

CYRUS – PERSIAN SHEPERD கோரேஸ் -- பெரிசிய மேய்ப்பன்.

HEROD – POWER COMPLEX ஏரோது -- அதிகார மோகம் கலந்தவன்.

பகுதி 34 - மேகத்தில் வரும் மனுஷ குமாரனைக் குறித்த தரிசனம். தானியேல் 7:9-14.

9 நான் பார்த்துக்கொண்டிருக்கையில் சிங்காசனங்கள் வைக்கப்பட்டது. நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார். அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும், பஞ்சைப்போலத் துப்புரவாகவும் இருந்தது. அவருடைய சிங்காசனம் அக்கினிஜிவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. 10 அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினரு. ஆயிரமாயிரம்பேர் அவரைச் சேவித்தார்கள். கோடா கோடிபேர் அவருக்கு முன்பாக நின்றார்கள். நியாய சங்கம் உட்கார்ந்தது. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. 11 அப்பொழுது நான் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அந்த கொம்பு பெருமையான பேச்சுக்களைப் பேசினதினிமித்தம் அந்த மிருகம் கொலை செய்யப்பட்டது. அதின் உடல் அழிக்கப்பட்டு, எரிகிற அக்கினிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. 12 மற்ற மிருகங்களுடைய ஆளுகையோவென்றால், அவைகளை விட்டு நீக்கப்பட்டது. ஆனாலும் அவைகளுக்குக் காலமும் சமயமும் ஆகுமட்டும் அவைகள் உயிரோடே இருக்கும்படி கட்டளையிடப்பட்டது. 13 இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். 14 சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் இராஜரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய இராஜ்ஜியம் அழியாததுமாயிருக்கும்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 9ல் தானியேல் மனிதரின் அனைத்து சிங்காசனங்களும் வைக்கப்பட்டதைக் காண்கிறார். எல்லா இராஜ்ஜியங்களும், வலிமையான ஒன்றும் தற்காலிகமானதாய் இருந்தது. முடிவாக தேவன் தமது சிங்காசனத்தில் தோன்றுகிறார், அவருடைய சிங்காசனம் அக்கினிஜிவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது. அல்லது அந்த சிங்காசனத்திலிருந்து பூகம்பம் போன்ற அக்கினியின்

வல்லமையானது பரவுகிறதாய் இருந்தது. தேவன் எப்பொழுதும் இருக்கிறார் மற்றும் எப்போதும் அந்த சிங்காசனத்தில் வல்லமையுடனும் மகத்துவத்துடனும் இருக்கிறவராய் இருப்பார். இந்த உண்மையை இப்பொழுது தானியேல் காண்கிறவராய் இருக்கிறார். மயக்கமுற்ற மனிதர் இவ்வுண்மையை தங்களது அழிவினிமித்தம் மறந்தவர்களாய் இருக்கின்றனர். நாம் நெருக்கப்படும்போது மற்றும் கலக்கமுறும்போதும் கர்த்தரின் மகிமையை மறந்து போகிறவர்களாய் இருக்கிறோம், நாம் தரிசனத்தில் கண்ட அவரது வல்லமையை நிலைப்படுத்திக்கொள்ளுதல் அவசியம். ஏசாயா 61:3.

இதைப்போன்ற விளக்கத்தை எசேக்கியல் அதிகாரம் 1:26-27 ஆகிய வசனங்களில் காண்கிறோம். *"26 அவைகளின் தலைகளுக்குமேலுள்ள மண்டலத்தின்மீதில், நீல இரத்தினம்போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்த சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷசாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது. 27 அவருடைய இடுப்பாகக் காணப்பட்டது முதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக்கண்டேன். அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன். "*

அந்த அதிகாரத்தில் , சிங்காசனமானது, சக்கரங்கள் குறித்து பேசப்பட்டு, இக்காலக்கட்டத்தில் அவைகள் பொதுவான ஒரு அமைப்பாய் விங்கின.

தேவன் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதை சித்தரிக்கும் காரியமானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதற்கு ஒப்பனையாய் இருக்கிறது. **வெளிப்படுத்தல் 1:13-14.** *"13 அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பான்வரையும் கண்டேன். 14 அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாய் இருந்தது, அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப் போலிருந்தது."*

வசனம் 10ல் எண்ணிக்கைக்கு அடங்காத சிங்காசனங்கள் அவரது சிங்காசனத்திற்கு முன் இருந்ததைப் பார்க்கிறோம், அவைகள் நியாத்தீர்ப்புக்காய் காத்திருந்தன. அநேகர் அவருக்கு ஊழியம் செய்தனர், அவருக்கு முன்பாக நின்று கொண்டிருந்த அநேகர் நியாயத்தீர்ப்பு அடையும்படி நின்றிருந்தனர். இவர்கள் அவிசுவாசிகள் அவர்களது கிரியைகளுக்குத் தக்கதாய் நியாயத்தீர்ப்படைகிறவர்கள்.

கடைசி நியாயத்தீர்ப்பானது வெளிப்படுத்தல் 20:11-15ல் கொடுக்கப்பட்டுள்ளது. "11 பின்பு நான் பெரிய வெள்ளைச்

சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன். அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்று போயின, அவைகளுக்கு இடங்காணப்படவில்லை. 12 மரித்தோரோகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக் கண்டேன். ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்த புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகலின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள். 13 சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது, மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள். 14 அப்பொழுது அரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். 15 ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான். "

வசனம் 11ல் அந்திக்கிறிஸ்துவின் மரணம் காணப்படுகிறது. அவன் தேவனுக்கு விரோதமாய் பெரிய தூஷணங்களைப் பேசினான். கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது அந்திக்கிறிஸ்து பிடிபட்டு, கொலை செய்யப்பட்டு அக்கினி கடலிலே எரியப்படுவான் இது வெளிப்படுத்தல் 19:20 விவரிக்கப்படுகிறது. "20 அப்பொழுது மிருகம் பிடிக்கப்பட்டது. மிருகத்தின் முன்பாகச் செய்த அற்புதங்களால் அதின் முத்திரையைத் தரித்தவர்களையும் அதின் சொருபத்தை வணங்கினவர்களையும் மோசம்போக்கின கள்ளத்தீர்க்கதரிசியுங்கூடப் பிடிக்கப்பட்டான். இருவரும் கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டார்கள்."

வசனம் 12ல் நான்கு இராஜ்ஜியங்களைப் பிரதிபலிக்கும் நான்கு காட்டு மிருகங்கள் காட்டப்படுகின்றன, தானியேல் அந்த சாம்ராஜ்ஜியங்கள் எறிந்துவிடப்படுகிறதைக் கண்டான் அவைகளது ஆளுகையானது அகற்றப்பட்டது அந்த சமுதாயத்தில் மீந்திருப்பவர்கள் இருந்ததாக கண்டான். இது இதற்கு முன் கி மு 612ல்ஆளுகை செய்த அசீரியாவுக்கு முறண்பட்டதாய் இருந்தது, அது முழுவதும் கல்தேயரின் கீழ் கடந்து வந்த ஒரு குழுவினரால் அழிக்கப்பட்டது, அது பொன்மயமான தலையாய் விளங்கினது.

வசனம் 13ல் இப்பொழுது தேவன் எல்லா சத்துருக்களை கிறிஸ்துவின் பாதத்தின் கீழ் வைப்பதைப் பார்க்கிறோம். பரலோகத்தின் மேகங்கள் அப்போஸ்தலர் 1:9ல் காண்கிறபிரகாரம் தேவ தூதர்களாய் இருக்கின்றனர். உண்மை என்னவெனில் அவர்கள் ஜீவிகளாய் காட்டப்பட்டு "அவர்கள் அவரை அவருக்கு அருகில்

கொண்டுவரப்படுவதைக் காண்கிறோம். " திட்டம் வகுத்தவராகிய பிதாவுடன் நேர்காணலின் விளைவு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு எல்லா ஜனங்கள், தேசங்கள், பாஷைக்காரர் மீதுள்ள ஆதிக்கம் அளிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட மனுஷ வர்க்கத்தினர் அனைவரும் அவரை சேவிப்பார்கள்.

வசனம் 12ல் சாம்இராஜ்ஜியங்களைப் போலல்லாது, இந்த இராஜ்ஜியமானது நித்திய இராஜ்ஜியமாய் இருக்கும். அதன் ஆளுகையும் நித்தியமானதாய் இருக்கும் எனக் கூறப்படுகிறது. அந்த இராஜ்ஜியம் மறுபடியும் அழிக்கப்படுவதில்லை, இயேசு கிறிஸ்து தாவீதின்குமாரனாய் காட்டப்படுகிறார், யூதரின் இராஜா தாவீதின் உடன்படிக்கையை ஆயிரவருட ஆளுகையில் நிறைவேற்றுவார்.

கைக்கொள்ளுதல்:

இந்த பிரபஞ்சத்தில் ஒரே ஒரு நிலையான காரியம் மட்டும் உண்டு, அது தேவனது திட்டமே ஆகும். ஒருவர் தேவனது திட்டத்தில் இருப்பாரானால், அவர் நித்திய ஜீவனைப் பெற்றவராய் இருப்பார், முழுமையான அண்டசராசரம் அகன்று போகும் ஆனால் தேவனது வார்த்தை/திட்டம் எந்நாளும் நிலைத்து இருக்கும்.

இயேசு கிறிஸ்து இருக்கிறார் மற்றும் எப்பொழுதும் தேவனை உடையவராய் இருக்கிறார். அவர் இரட்சகராய் இருக்கிறார் ஆனால் அவர் நியாதிபதியாகவும் இருக்கிறார்.

சாம்ராஜ்ஜியங்கள் எழும் மற்றும் வீழ்ச்சியடையும். அவைகளுக்கு ஆளுகை செய்யும்படிய சமயம் ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் பெரியதாகும்படியான சமயமும் ஒதுக்கப்பட்டுள்ளது ஆனால் அழிவும் விசுவாசத்துரோகமும் முடிவாக அவைகள் அனைத்தையும் அழித்துப் போடுவதாய் இருக்கிறது, ஆளுகையானது பிறருக்கு அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

தேவன் தமது வாக்குத்தத்தை நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார். அவர் எதைச் சொல்கிறாரோ அவர் அதை செய்கிறவராய் இருக்கிறார், அதை முழுவதுமாய் செய்து முடிக்கிறவராய் இருக்கிறார்.

DOCTRINES உபதேசங்கள்:

ANTICHRIST – WORLD RULER அந்திக் கிறிஸ்து -- உலக ஆளுநர்.

FOOTSTOOL பாதப்படி

பகுதி 35 - நான்கு மிருகங்களைக் குறித்த விளக்கம்: தானியேல் 7:15-18.

15 தானியேலாகிய நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன். என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னைக் கலங்கப்பண்ணினது. 16 சமீபத்தில் நிற்கிறவர்களில் ஒருவனிடத்தில் நான் போய், இதன் பொருள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்லும்படி, அவனை வேண்டி கொண்டேன். அவன் அந்தக் காரியங்களின் அர்த்தத்தை எனக்கு அறிவித்துச் சொன்னது என்னவென்றால்: 17 அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு இராஜாக்கள். 18 ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் இராஜரீகத்தைப் பெற்று என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் இராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றான்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாவுகளும்:

தானியேல் மிகவும் கலக்கமுற்றதும், இப்படிப்பட்ட தரிசனத்தில் தன் சரீரத்தில் குன்பப்பட்டதும் ஆர்வத்தைத் தூண்டுகிறதாய் இருக்கிறது. மனிதர் "சரீரத்திற்கு புறம்பான அனுபவங்களை" குறித்து பேசுகிறவர்களாய் இருக்கின்றனர் ஆனால் தானியேல் தனது சரீரத்தில் நிகழ்ந்தவைகளைக் குறித்து கூறுகிறவராய் இருக்கிறார். மற்றும் தீர்க்கதரிசன சத்தியமானது மிகவும் வல்லமையுடன் அவரை பாதிப்புக்குள்ளாக்கியது. அவர் கண்ட தரிசனம் தன் தலைக்குள் காண்கிறவராய் இருக்கிறார். அவர் அதைக்குறித்து சிந்திக்கையில், பேரழிவு, படுகொலைகள், முறண்பாடுகள் சில காலத்திற்கு மனுக்குலத்திற்கு முன் சில காலத்திற்கு வைக்கப்பட்டுள்ளது காண்கிறவராய் இருந்தார். தீர்க்கதரிசியானவர் மனுக்குலத்திற்கு பெரிய தீமைகள் நான்கு கொடிய மிருகங்கள் மிருகங்கள் மூலம் வருவதைக் கண்டார்.

வசனம் 17ல் அவர் போதனை அளிக்கும் ஒரு தூதனிடம் வந்து, இந்த தரிசனங்கள் அர்த்தம் என்ன என வினவினார், அந்த தூதன் அந்த தரிசனத்திற்கான வியாக்கியானத்தை அளித்தான். இதினிமித்தம் தானியேல் மிகவும் சந்தோஷப்பட்டு, தூதர்கள் உற்சாகப்படுத்துவதை

நாடினார். கள்ளத்தீர்க்கதரிசிகள் தங்களது தரிசனத்தைக் குறித்து களிகூறுகிறவர்களாய் இருக்கின்றனர், காரணம் அவைகள் சொந்த பழைய பாவ சுபாவத்திலிருந்து தோன்றுகிறவைகளாய் இருக்கின்றன அல்லது இன்னும் தாழ்வான நிலையிலிருந்து தோன்றுகின்றன. தவறான தீர்க்கதரிசிகள் தங்களது செய்தியில் மகிழ்கிறவர்களாய் இருக்கின்றனர் காரணம் அவர்கள் தங்கள் சத்துருக்களிடம் சேவை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் எப்பொழுதும் மனுக்குலத்தைக் கலக்கமுறச் செய்கிறவர்களாய் இருக்கின்றனர், மனுக்குலத்திற்கு இதமான வார்த்தைகளைப் பேசி, தவறான நம்பிக்கைகளை அளிக்கிறவர்களாய் இருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் "பேரழிவைக்குறித்து" பேசலாம், தேவனுடைய ஜனங்கள் சத்தியத்தை விட்டு விலகிச் செல்லும் போது, அவைகளை அவர்கள் கண்ணோக்கம் செலுத்த வேண்டும் என்று பேசலாம்.

தேவனது வார்த்தைகள் மனுக்குலத்திற்கு எப்போதும் கடின வார்த்தைகளும், எச்சரிப்பும், சவாலும் நிறைந்ததாய் இருக்கும், இருப்பினும் அதிக நம்பிக்கையை அவர்கள் மத்தியில் அளிப்பதாய் இருக்கும்.. அதிகமான நேரங்களில் நாம் சத்தியத்தை நோக்கும்போது, அது முதலாவது வருத்தத்துடன் அமரச்செய்வதாய் இருக்கும். அதன் பின்னர் தூரத்தில் வெளிச்சத்தை நாம் காண்கிறவர்களாய் இருப்போம், அதன் மீது நமது கண்ணோட்டத்தை செலுத்தி தேவனது பெலத்தில் அதை நோக்கி நடைபோடுகிறவர்களாவோம். எரேமியா 14:14, 23:14-32, எசேக்கியேல் 13:10-16, யோவான் 8:44.

தூதன் தானியேலுக்குக் கூறும்போது, இப்படிப்பட்ட பெரிய தீமையின் இராஜ்ஜியங்கள் ஒன்றன்பின் ஒன்றாக தோன்றுகிறதய் இருக்கும் அவைகள் மனித இராஜ்ஜியமாய் இருக்கும் இவைகளுக்குப் பின் தேவன் இராஜ்ஜியத்தின் பொறுப்பை எடுக்கிறவராய் இருக்கிறார் அந்த இராஜ்ஜியம் நித்திய இராஜ்ஜியமாய் இருக்கும். இரட்சிப்படையாத மனிதர் தாங்களே வேற்றி பெற்றோராக எண்ணிக்கொள்வர், ஆனால் இறுதியாக தேவனது ஜனங்கள் மட்டும் பூமியை சுதந்தரித்து கொள்கிறவர்களாய் இருப்பர். அதிகமான நேரங்களில் அங்கே அழுகையின் பள்ளத்தாக்கு உண்டாயிருக்கும், ஆனால் அங்கு எந்நாளும் களிகூறுதல் கர்த்தரின் இறுதி ஜெயத்தை நாம் காணும்போது உண்டாயிருக்கும்.

கைக்கொள்ளுதல்:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 24ல் இவ்வாறு கூறுகிறார், "நான் வருமளவும் யுத்தங்களையும், யுத்தங்களின் செய்தியையும்

கேள்விப்படுவீர்கள்." சமாதானம் என்பது "தேசத்தின் சாதாரண காரியமாய் இராது" பூமியின் மீது சாத்தான் செயல்படுகிறவனாய் இருப்பான். யோவான் 15:18ff, யாக்கோபு 4:7, 1 பேதுரு 5:5-11.

மனித இராஜ்ஜியத்தில் தேவனது இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படும் வரைக்கும், அதாவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரைக்கும் பூமியில் சமாதானம் என்பது ஒருபோதும் இல்லாதிருக்கும்.

தேவனது இராஜ்ஜியமே நித்தியமானதாய் இருக்கும், முதலாவது அது பழைய பூமியில் முயற்சி செய்யப்படும், பின்னர் அது நித்தியமானதாய் இருக்கும். வெளிப்படுத்தல் 20:22.

DOCTRINES உபதேசங்கள்

CHRIST: SECOND ADVENT கிறிஸ்து: இரண்டாம் வருகை.

பகுதி 36 - நான்காம் மிருகத்தின் விளக்கம். தானியேல் 7:19-28.

19 அப்பொழுது மற்றவைகளையெல்லாம் பார்க்கிலும் வேற்றுருவும் கெடியுமுள்ளதுமாய் இருப்புப்பற்களும் வெண்கல நகங்களுமுடையதாய் நொறுக்கி பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டதுமாயிருந்த நாலாம் மிருகத்தைக் குறித்தும், 20 அதின் தலைமேலுள்ள பத்துக் கொம்புகளைக் குறித்தும், தனக்கு முன்பாக மூன்று கொம்புகள் விழுந்து போக எழும்பினதுமாய் கண்களையும் பெருமையானவைகளைப் பேசு வாயையுமுடையதுமாய் மற்றவைகளப் பார்க்கிலும் பருமனாகத்தோனமாயிருந்த அந்த வேறே கொம்பைக்குறித்தும், அவற்றின் பொருளை அறிய மனதாயிருந்தேன். 21 நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும் நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் இராஜ்ஜியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும், 22 இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன். 23 அவன் சொன்னது: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் இராஜ்ஜியமாம். அது எல்லா இராஜ்ஜியங்களைப் பார்க்கிலு வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப்போடும். 24 அந்தப் பத்துக்கொம்புகள் என்னவென்றால், அந்த இராஜ்ஜியத்திலே எழும்பும் பத்து இராஜாக்களாம், அவர்களுக்குப்

பின்பு வேறொருவன் எழும்புவான். அவன் முந்தினவர்களைப்
பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று இராஜாக்களைத் தாழ்த்திப்போட்டு,
25 உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி,
உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும்
பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான். அவர்கள் ஒரு காலமும்,
காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில்
ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். 26 ஆனாலும் நியாயசங்கம் உட்காரும்.
அப்பொழுது முடிவுபரியந்தம் அவனைச் சங்கரிக்கும்படியாகவும்
அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்.
27 வானத்தின் கீழெங்குமுள்ள இராஜ்ஜியங்களின் இராஜரிகமும்
ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய
பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். அவருடைய
இராஜ்ஜியம் நித்திய இராஜ்ஜியம், சகல கர்த்தத்துவங்களும் அவரைச்
சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான். 28 அவன் சொன்ன
வார்த்தை இத்தோடே முடிந்தது. தானியேலாகிய நான் என்
நினைவுகளால் மிகவும் கலங்கினேன். என் முகம் வேறுபட்டது. இந்த
காரியத்தை என் மனதிலே வைத்துக் கொண்டேன்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வும்:

தானியேல் குறிப்பாக நான்காவதும் இறுதியானதுமான மிருகத்தைக் குறித்து மிகவும் ஆர்வமுள்ளவராய் காணப்பட்டார். அதன் பயங்கரமான தோற்றம், அதன் பத்து கொம்புகள், அவைகளில் இருந்து தோன்றிய சிறிய கொம்பு போன்றவை அவருக்கு ஆர்வத்தைத் தூண்டுகிறதாய் இருந்தது. மேற்கத்திய சரித்திரத்தை நாம் கற்கண்டாக்க இயலாது, அதிகமான விசுவாசிகள் மேற்கத்திய அதிகார தலைமைத்துவத்தால் கொன்றுகுவிக்கப்பட்டனர் அதைத் தொடர்ந்து இஸ்லாமியர்கள் செயல்பட்டனர். மேற்கத்திய நாடுகளில் பெரிதளவில் தீமையானது செயல்பட்டது, மற்றும் இன்னும் அங்கிருந்தே செயல்பட இருக்கிறது. மிக மோசமானது இனி வர இருக்கிறது. தானியேல் சரித்திரத்தை மேற்பார்வை செய்தபோது அது அவரை குழப்பமடையச் செய்தது, அவர் சுவிஷேசம் அறிவிக்கப்படுவது, ரோமர்களின் உபத்திரவம், இருண்ட காலத்தில் வைக்கிங் மற்றும் பிற புறஜாதிகள், அநேக மதசம்பந்தமான யுத்தங்கள், பேரழிவுகள், "சிறிய கொம்பு," போன்றவை அவரை குழப்பத்திற்குள்ளாக்கியது.

வசனம் 19ல் தானியேக் இம்மிருகமானது இதற்கு முன் தோன்றின எல்லா மிருகங்களின்று வித்தியாசமானதாய் இருந்ததைக் குறிப்பிடுகிறார். அதன் பலதரப்பட்ட மொழிகள்/ சமுதாயத்தினர்/ பல இனக்கலவை

மற்றும் அதன் பயங்கரத்தோற்றம், விசுவாசிகளால் அருவருக்கக்கூடிய கண்ணோட்டத்துடனும் அது காணப்படுகிறதாய் இருந்தது. குறிப்பாக தானியேல் இதுவரைக் கண்டு இராத மிருகத்தைப் போன்று அது அதிக பயங்கரத்தோற்றத்துடன் காணப்பட்டது. மேற்கத்திய நாடுகளின் தலைவர்களது சாத்தானின் வன்முறைச் செயல்கள், அவர்கள் விசுவாசிகளின் மீது சீறிப்பாய்தல் குறித்தும், படுகொலைகள் தீயவர்களால் கட்டவிழ்க்கப்படுவது குறித்தும் அவர் அதிர்ச்சிக்குள்ளாகவும், திணறலுக்கும் உள்ளானார். ஏன் கர்த்தர் இவ்வகையான உபத்திரவங்களை அனுமதிக்க வேண்டும் என்பது அவருக்கு புரியாத புதிராய் இருந்தது.

வசனம் 20ல் பத்து கொம்புகள் குறித்தும் மற்றும் சிறிய கொம்பு வந்து மற்ற கொம்புகளைவிட பலத்துக் கொண்டது குறித்தும் குறிப்பிடுகிறார். இது குறித்த உண்மையானது வெளிப்படுத்தல் 17ம் அதிகாரத்தில் பத்து ஆளுநர்கள் அந்திக்கிறிஸ்துவை தங்களது தலைவராக்கிக் கொண்டு அவனுடன் கூட்டுச் சேருவது குறித்து கூறப்பட்டுள்ளது. தானியேல் அந்திக்கிறிஸ்து தோற்றத்திற்குக் காணக்கூடிய ஜெயத்தை பெறுவதை காண்கிறவராய் இருக்கிறார். அவன் தீமையை தேவனது திட்டத்திற்குள்ளாக செய்ய அனுமதிக்கப்படுகிறான், அவன் அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்டு, வருத்தத்துடன் திணறடிக்கப்படுகிறான், இருப்பினும் அவன் தேவனுடைய சிங்காசனத்தில் இவைகளுடன் அமர்ந்து தன்னை பதிலாய்க் காட்டுகிறவனாய் இருக்கிறான், வருத்தப்படக்கூடிய காரியங்களுடன் சில காலம் அமர்ந்தவனாய் காணப்படுகிறான். எபிரெயர் 4:14-16.

வெளிப்படுத்தல் 17:12 – 14 கூறுகிறது, *"நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து இராஜாக்களாம், இவர்கள் இன்னும் இராஜ்ஜியம் பெறவில்லை, இவர்கள் மிருகத்துடனேகூட ஒரு மணி நேரமளவும் இராஜாக்கள் போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள். 13 இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள், இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள். 14 இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள், ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தாவும் இராஜாதி இராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார். அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறார்கள் என்றான்.*

stout என்கிற வார்த்தை “Rab”, என்கிறவார்த்தையாக குறிப்பிடப்பட்டுள்ளது இதன் பொருள் பெரிய, மிகுதியான, அதிகமான அல்லது அநேகமான எனப்பொருள்படும். தானியேல் சிறிய கொம்பை

தீமையாய் காண்கிறார். அவன் விசுவாசிகளுக்கு விரோதமாய் யுத்தம் செய்கிறவனாய் இருக்கிறான் மற்றும் அவர்கள் மீது அதிகாரம் செலுத்தி வெளிப்படுத்தல் 17:14ல் உள்ளவைகளை உறுதிப்படுத்துகிறவனாய் இருக்கிறான்.

வசனம் 22ல் அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது தகர்க்கப்படுகிறது, பின்னர் ஆயிர வருட ஆளுகை அமைக்கப்பட்டு கர்த்தர் முழுமையான வெற்றியுடன் ஆட்சி அமைக்கிறார். பின்னர் அவர் எதிராளிக்கு தோற்றத்தின்படி ஜெயமளித்து மனுக்குலத்தின் வில்லனாய் கருதப்பட்ட அந்திக்கிறிஸ்துவின் மேல் இறுதி வெற்றியை கர்த்தர் மட்டுமே பெறுகிறவராய் இருக்கிறார்.

வசனம் 23 மற்றும் 24ல் அந்திக்கிறிஸ்துவின் எழுச்சியைப் பார்க்கிறோம். இறுதியானதும் நான்காவது கட்டமானதாயும் இருக்கிற ரோம சாம்ராஜ்ஜியம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது கட்டவிழ்த்து மன்னராட்சி செய்வதைப் பிரதிபலிப்பதாய் இருக்கிறது. தானியேல் 2ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இரண்டு கால்கள் கிழக்கு மற்றும் மேற்கு இடையே உள்ள பிரிவை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது, மீதமிருக்கு அதிகாரமானது முடிவாக மிருகத்தினால் தகர்க்கப்படப்போவதாய் இருக்கிறது, ஒருலக அரசாங்கமானது அமைக்கப்பட போகிறது. அது அமைக்கப்பட்டும், அதின் அதிகாரத்தின் அடிப்படையில் எதையும் பிடித்துக் கொள்ள இயலாது, அது சுயத்தை மையமாய் கொண்ட தீமையாய் இருந்து அதன் முக்கியமான தலைவர்களின் ஒருபகுதியாய் இருக்கும். சுயத்தை மையமாய் கொண்ட மனிதர் நீண்ட காலத்திற்கு கலந்திருக்க மாட்டார்கள், அவர்களது சுய ஆர்வம் அவர்களை வேறுபிரிக்கிறதாய் இருக்கும். அந்தக்குழுவானது சரியாய் கிரியை செய்யவிடாது சாத்தான் கெடுக்கிறவனாய் இருப்பான் -- அவனது பின்னடியார்கள் அனைவரும் சுய ஆர்வமிக்கவர்களாய், அவனைப் போன்றே சுயவிரும்பிகளாய் இருப்பர்.

உலகமானது மேலோட்டமாய் நீதி செய்யும் "ஒருலக அரசாங்கத்தின் கீழ்" வீழ்ந்து போகும் என்பது குறிப்பிடத்தக்கது. வேதாகமம் சொல்லுகிறபடி அது "முழு உலகையும் அது பீறிப்போடும்." அதன் முக்கியமான அடிப்படை நோக்கம் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் வளமுள்ளதாக்குவது, அவமதிப்பு செய்தல், மற்றும் தீமையான முடிவுண்டாக உலகின் மூலதனத்தைச் சூறையாடுவது போன்ற செயல்களில் இறங்கும். எல்லாவற்றிற்கும் மேலாக நான்கவது மிருகத்தின் அமைப்பானது, அவமதிப்பு செய்வதும் தீமையானதும் ஒருலக அரசாங்கத்தை அமைப்பதுமாய் இருக்கும், அது பத்து பாகமான

இராஜ்ஜியங்களாய் அல்லது பிராந்தியமாய்ப் பிரிக்கப்படும். முழு பூமியும் எனக் குறிப்பிடப்பட்டாலும், அதன் முழு ஆதிக்கமும் அதன் கட்டுப்பாட்டுக்குள் வராது இருக்கும். அரசியல் ஆதிக்கம் மட்டுமே நுணுக்கமாமாயும், தனிப்பட்ட சுய ஆர்வமுள்ளவர்களின் கையைல் விழுந்து போவதாய் இருக்கும்.

ரோமரின் கிளப் -- 1970ல் நூறு மனிதர்கள் 25 மேற்கத்திய தேசங்களில் இருந்து ஒன்றாய் கடந்து வந்து ஒரு குழுவை அமைத்தனர். இதன் தலைவர் டாக்டர் பெக்காய் ஆகும். [Dr Peccei,] அவர் குறிப்பிடும்போது: "இந்த தீர்மானங்களை உலகலாவிய அணுகுமுறையாய் எடுத்துக் கொள்வதற்கு, ஒரு புதிய சர்வ உலக சட்டத்தை ஸ்தாபித்தல் வேண்டும், அது பொருளாதார ரீதியிலும், சமூக மற்றும் அரசியல் ரீதியிலும் அமைக்கப்படவேண்டும் என்றார்." ரோமரின் கிளப் உலகை பத்து பாகங்களாய் பிரித்துள்ளது ஆர்வத்தை தூண்டக்கூடிய ஒன்றாய் இருக்கிறது அவைகள் பின்வருமாறு:

1] வட அமெரிக்கா.
2] மேற்கு ஐரோப்பா,
3] ஜப்பான்,
4] இஸ்ரேல், தென் ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்ரேலிசியா/பசிபிக் [Australasia/Pacific.]
5] கிழக்கு ஐரோப்பா, ரஷ்யா உட்பட,
6] லத்தீன் அமெரிக்கா,
7] வட ஆப்ரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள்.
8] மெயின் ஆப்ரிக்கா,
9] தென் மற்றும் தென் கிழக்கு ஆசியா,
10] மத்திய ஆசியா, சீனா உட்பட.

உலகலாவிய பிரச்சனைகளுக்கு கிளப்பின் தீர்வுகள்:

அ] பிரச்சனைக்கு உலகலாவிய அணுகுமுறையில் தீர்வுகாணுதல்.
ஆ] மூலதனமிடுதல், உணவு பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் தவிர.
இ] உலகலாவிய கிராம அடிப்படையில், பொருளாதார சமநிலை, மற்றும் எல்லாப்பிராந்தியங்களிலும் வளர்ச்சிக்காய் செயல்படுதல்.
ஈ] பயனுள்ள ஜனத்தொகை கொள்கைகளை அமைத்தல்.
உ] உலகலாவிய தொழில் மயமாக்குதல் உலகலாவிய கிராம அமைப்பை சார்ந்து உள்ளாக சார்ந்துஇருத்தல் (மத்திய வங்கிகளின் கட்டுப்பாட்டில் செயல்படுதல்)

கிழக்கு ப்ளாக்கின் வீழ்ச்சியுடன், வன்முறையாட்சியின் பயங்கரம், உலகலாவிய பிரச்சனைகள், உலகலாவிய பொருளாதார பிரச்சனைகள், உலகலாவிய் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் பெருகுவதாய் இருக்கும். அந்த தேசங்கள் நிலையானத் தன்மையை அடையும் ஏகாதிபதித்துவத்தை கைவிட்டுவிடும், மற்றும் அவைகள் அந்திக்கிறிஸ்துவின் ஆதிக்கத்தால் அந்த நாட்களில் கதறுவதாய் இருக்கும்.

பத்து கொம்புகளைக் குறித்த வியாக்கியானத்தில் மேற்கு ஐரோப்பா, அல்லது மறுமலர்ச்சியடைந்த ரோம சாம்ராஜ்ஜியம், ஐரோப்பாவின் பழைய பகுதிகளில், தோன்றுவதாய் இருக்கும், அவைகள் சரியில்லாதவைகளாய் இருக்கும், இருப்பினும் அந்திக்கிறிஸ்து அரசியல் மற்றும் மதசம்பந்தமான அதிகாரத்துடன் புதிய ரோமாபுரியை அடிஸ்தானமாய் கொண்டு பழைய ரோம சாம்ராஜ்ஜியத்தை தானியேல் 9 அதிகாரத்தில் காண்கிற வண்ணம் ஸ்தாபிப்பவனாய் இருப்பான்.

மற்ற அதிகாரங்கள் அந்திக்கிறிஸ்துவை குறித்து விவரிப்பதோடு நிறைவு பெறுகிறது, அவன் மூன்றரை வருடங்கள் பூமி மீது ஆளுகை செய்கிறவனாய் இருப்பான், அவனது மூன்று பிராந்திய தலைவர்கள் அகற்றப்படுவர், விசுவாசிகள் கொடுமையாய் உபத்திரவப்படுத்துவது, தெய்வீக இராஜ்ஜியம் அமைக்கப்படுவதால் இறுதி அரசியல் மாற்றம் நிகழ்வதாய் இருக்கும்.

வசனம் 28ல் தானியேல் தரிசனத்தைப் புரிந்து கொண்டு, .அதை மறைமுகமாய் கூறுகிறவராய் இருக்கிறார், அவர் இப்பொழுது எழுதும் போது, அதைக் குறித்து மற்றவர்களுக்கு எதையும் கூறாமல் எழுதுகிறவராய் இருக்கிறார். அவர் பார்த்தது என்னவென்றால், அது மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய ஒன்றாய் இருந்தது, மனுக்குலத்திற்கு சாத்தானால் கட்டவிழ்க்கப்படும் தீமைகளாய் இருந்தது. தானியேல் ஆழமான துன்ப நிகழ்வுகள் தேவனின் சித்தம் மற்றும் திட்டங்களுக்கு விரோதமான மனிதரின் கலகத்தினால் உண்டாவதை கண்கிறவரும் உணருகிறவருமாய் இருக்கிறார். இறுதியில் எல்லாப் பயங்கரங்களும் முடிந்த பின்னர் ஜெயம் உண்டாகிறதாய் இருக்கிறது. ஆதாம் மற்றும் ஏவாளால் பாவத்தினாலும் மரணத்தினாலும் உண்டான சட்டதிட்டங்கள் பயங்கரமானவைகளாய் இருந்தபோதும், அவைகளின் பாடுகள் இந்தக்கடைசி நாட்களில் கிறிஸ்துவால் சுமந்து தீர்க்கப்பட்டாயிற்று. 1 கொரிந்தியர் 1:5-7, பிலிப்பியர் 3:10, 1 பேதுரு 4:13.

கைக்கொள்ளுதல்:

சரித்திரத்தில் துன்மார்க்கர் விசுவாசிகளை மேற்கொண்டு அவர்களுடன் சண்டையிட அனுமதிக்கப்படுகின்றனர்.

தேவன் சில வேளைகளில் விசுவாசிகள் இரத்த சாட்சிகளாவதற்கு அனுமதிக்கிறவராய் இருக்கிறார் **வெளிப்படுத்தல் 6:9-11ல்** காண்க. *"9 அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவ வசனத்தின் நிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். 10 அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். 11 அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது, அன்றியும் அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன் பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவேறுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.*

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளில் ஒன்று: "சபை யுகத்தில் இருக்கும் நாம் அந்திக்கிறிஸ்துவை அறியக் கூடுமோ?" அநேகமான வியாக்கியானிப்பவர்களின் பதில் "இல்லை" என்பதாகும் அல்லது அதை எவ்வித நிச்சயத்துடனும் கூறுவதற்கில்லை என்பதாய் இருக்கிறது. கடைசி நாட்களில் சபையானது அழைத்துக் கொள்ளப்படு முன்னர், நாம் அதை அறியலாம் என எண்ணலாம், ஆனால் அவன் தன்னை முழுவதுமாய் வெளிப்படுத்தா வண்ணம், தன்னைக் குறித்து இனம் காணும் கிறிஸ்தவர்கள் தன்னைச் சூழ இல்லாத வண்ணம் பார்த்துக் கொள்வான். சாத்தான் இக்காரியத்தில் மிகவும் கவனமுள்ளவனாய் இருக்கிறான், அவன் ஒவ்வொரு வேதாகமத்தை விசுவாசிக்கும் விசுவாசிக்ள் அகற்றப்படுவதை விரும்புகிறவனாய் இருக்கிறான். தனது இறுதி அசைவை கனக்கச்சிதமாய் செய்து முடிக்க காத்திருக்கிறான்.

2 தெசலோனிக்கேயர் 2ம் அதிகாரத்தை படிக்கும் போது, சபையானது சாத்தானால் வாசம் செய்யப்படு ஆளுநர், வெளிப்படும் முன்னர் சபையானது அகற்றப்பட இருப்பதை அது சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

உபத்திரவ காலத்தைக் குறித்து பவுல் வசனம் 3ல் கூறும்போது: *"3 எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள்*

வராது. வசனம் 4 அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்."

பவுல் கூறும்போது விசுவாசத்துரோகம் முந்தி நேரிட வேண்டும், அதன் பின்னர் அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான் என்கிறார். உபத்திரவ காலமானது துவங்குவது, அந்திக்கிறிஸ்துவுக்கும் இஸ்ரவேலருக்குமிடையே ஓர் உடன்பாடு கையெழுத்தாக வேண்டும் என்று நுணுக்கமாய் இவ்விடத்து கூறப்படுகிறது. இப்பொழுது இஸ்ரவேல் ஒரு தேசமாய் இருக்கிறது ஆனால் அந்திக்கிறிஸ்து இன்னும் வெளிப்படவில்லை, ஆனால் இஸ்ரவேல் தனது தலைமைத்துவத்தில் அந்திக்கிறிஸ்துவினால் ஆளுகை செய்யப்படும் மேற்கத்திய வல்லமைகளுடன் நட்புறவு கொண்டு/ பாதுகாப்பு உடன் படிக்கை செய்து கொள்வதாய் இருக்கும். அக்கால கட்டத்தில் அவன் இஸ்ரவேலரை விடுவிப்பவனாய் இருப்பது போலிருக்கும்.

பவுல் இப்பொழுது தெசலோனியருக்கு கூறும்போது, தீமையானது தடை செய்யப்பட்டு வருவது குறித்து வசனம் 5-7ல் கூறுகிறார். *"5 நான் உங்களிடதிலிருந்தபோது இவைகளைச் சொன்னது உங்களுக்கு ஞாபகமில்லையா? 6 அவன் தன் காலத்திலே வெளீப்படும்படிக்கு இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே, 7 அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது, ஆனாலும் தடை செய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது."*

தீமை நிகழ்வதை தடை செய்பவன் குறித்து ஒரு நபரைக் குறித்து குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. தடை செய்கிறவன் என்பது பிரதாண தேவதூதன் மிகாவேலாய் இருக்கலாம் (இவன் இஸ்ரவேலருக்கு தெய்வீக பாதுகாவலனாய் நியமிக்கப்பட்டவன்) அல்லது பரிசுத்த ஆவியானவராய் இருக்கலாம். தற்போதுள்ள சபை யுகத்தில் எல்லா விசுவாசிகளுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் நிரந்தரமாய் வாசம் செய்து வருகிறார். [யோவான் 14:16,17], ஆகையால் சபையின் அங்கத்துவம் இப்பூமியிலிருந்து அகற்றப்படும்போது பரிசுத்த ஆவியானவரும் இப்பூமியிலிருந்து அகற்றப்படுகிறவராய் இருக்கிறார். பின்னர் இஸ்ரவேலரின் யுகம் துவங்குகிறதாய் இருக்கும். இதற்கான ஆதாரத்தை மற்ற வேதபகுதிகளிலும் காணலாம், மகா உபத்திரவகாலத்தின் ஆரம்பத்தில் மிகாவேல் தூதன் பின்னணியத்தில் நிற்பதை காணலாம் அவன் இஸ்ரவேலர் தாக்கப்படுவதை அனுமதித்து,

அந்திக்கிறிஸ்துவால் வஞ்சிக்கப்படுவதை அனுமதிக்கிறவனாய் இருப்பான், தனது யூத ஆதரவாளர்கள் (குறைந்தபட்சம் 2/3rds இந்த சமயத்தில் விசுவாச துரோகிகளாவர்).

தனது பாதுகாப்பை அவிசுவாசிகளான இஸ்ரவேலருக்கு நிறுத்திக் கொள்வது அவர்கள் மேசியாவாகிய யெஷுவாவை/இயேசுவை புறக்கணித்ததினிமித்தம் சத்துருவால் அவர்கள் வஞ்சிக்கப்பட ஒப்புக்கொடுக்கப்படுவார்கள், ஆனால் தேவனது திட்டத்தின்படி அது நியமிக்கப்படுகிறதாய் இருக்கும், அவர்கள் மனந்திரும்பும்போது (**சகரியா 12:10ff**), மிகாவேல் "எழுந்து நிற்பான்" மற்றும் அவர்களுக்காக மறுபடியும் யுத்தம் செய்து அவர்களை பாதுகாப்பனவாய் இருப்பான், கர்த்தரின் வருகையின் போது அவர்கள் வரவேற்பவர்களாயிருப்பவர். **தானியேல் 12:1.**

பவுல் தொடர்ந்து வசனம் 8ல் கூறும்போது, "8 நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார்." இது காட்டுவது என்னவெனில் அந்திக்கிறிஸ்துவின் முழு வெளிப்பாடும் சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரே இருக்கும், குறுகிய காலத்தில் பூமியில் ஒரு விசுவாசிகூட அவரது வல்லமை குறித்து ஆவிக்குரிய சவால்விட இல்லாதிருப்பர். குறுகிய காலத்திற்குப் பின்னர் மறுபடியும் விசுவாசிகள் இருப்பார்கள், ஜனங்கள் கிறிஸ்தவர்களை குறித்து கேள்விகளைக் கேட்கும்போது, மற்றும் இவைகளையெல்லாம் விசுவாசிக்கிறவர்களாயிருப்பர். ஒருமுறை விசுவாசிகளது எண்ணிக்கையானது கட்டியெழுப்பப்படும்போது, பரிசுத்த ஆவியானவரது செயல்பாடுகள் மறுபடியும் அதிகரித்து அவர்களை பாதுகாக்க முற்படுவார், இது அந்திக்கிறிஸ்துவுக்கு எதிர் செயலாற்றுவதாய் இருக்கும்,

அந்திக்கிறிஸ்துவின் குணாதிசயம் மற்றும் அவனது அவிசுவாசிகளின் மீதான செயல்பாடுகள், உபத்திரவ காலத்தின் போது வசனம் 9-12ல் காண்கிறோம். *"9 அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும், 10 கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். 11 ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கும்படிக்கு, 12 அவர்கள் பொய்யை*

விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்."

DOCTRINE உபதேசம்:

KINGDOM - MILLENNIAL KINGDOM இராஜ்ஜியம் - ஆயிரவருட இராஜ்ஜியம்.

NOTES குறிப்புகள்:

<u>தானியேல் 8 ம் அதிகாரம்:</u>

8 ம் அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேலின் எட்டாம் அதிகாரத்தை இருபிரிவுகளாய் பிரிக்கலாம்.

ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக் கடா இவைகளைக் குறித்த தரிசனம் வசனங்கள் 1-14.

தரிசனத்தின் பொருள் வசனங்கள் 15 - 27.

முன்னுரை:

எட்டாம் அதிகாரம் தானியேல் 2:4 முதற் கொண்டு அரெமேயு எழுதப்பட்டது எபிரேய மொழியில் ஆரம்பமாவதை காண்கிறோம். இப்பொழுது பேசப்படுகிற பொருள் மாறுகிறதாய் இருக்கிறது, இப்பொழுது கூறப்படுகிற சரித்திரம் யூதர்களை பற்றியதாய் இருக்கிறது. புறஜாதிய அரெமேயு மொழியானது புறஜாதிய ஆளுகையின் சரித்திரம் குறித்து கூறப்பயன் படுத்தப்பட்டது, இஸ்ரவேல் மீது கண்ணோட்டம் செலுத்தும் சரித்திரம் எழுதும் போது எபிரேய பாஷையில் எழுதப்பட்டது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

பாபிலோனிய சிறையிருப்பானது இஸ்ரவேலில் பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. சிறை பிடிக்கப்பட்டதன் காரணமாய் தேவாலயத்தில் காணப்பட்ட ஷெக்கினா மகிமையானது பின்னர் காணப்படாமல் போயிற்று. சிறைபிடிக்கப்பட்டதன் காரணமாய் இஸ்ரவேலில் காணப்பட்ட மன்னர் ஆளுகை அகற்றப்பட்டு மன்னர்களின்றி காணப்பட்டனர். அரசாளப்போகிற ஒரே இராஜா

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து அவர் தமது நித்திய ஆளுகையை ஆயிர வருட அரசாட்சியின் போது துவங்குகிறவராய் இருப்பார்.

இந்த அதிகாரம் சரித்திரத்திலிருந்து ஒருபகுதியை பிரித்தெடுத்து குறிப்பிட்ட அடிப்படைக் கொள்கைகளை நமக்கு தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறது. இங்கு நாம் பெரிசிய சாம்ராஜ்ஜியத்தின் எழுச்சியை நாம் காண்கிறோம் இது கி மு 550 முதல் 332 வரை நீடிப்பதாய் இருந்தது. நாம் இங்கு ஆட்டுக்கடாவைக் காணவிருக்கிறோம் அது பெரிசியாவைக் குறிக்கிறது, ஒற்றைக் கொம்புள்ள வெள்ளாட்டுக்கடா கிரேக்கைக் குறிக்கிறதாய் இருக்கிறது. கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் வளர்ச்சியானது இங்கு உருவரைக் குறிப்பாகக் காட்டப்பட்டுள்ளது, மற்றும் அலெக்ஸாண்டரின் பழைய தளபதியாகிய செலூக்கியஸ் குறித்தும் கூறப்படுகிறது. அநியோகஸ் IV (எப்பிப்பேனஸ்) இவன் அந்திக்கிறிஸ்து ஒப்பனையாய் இருக்கிறான், ஹிட்லரைப் போன்று சாத்தானின் உருவெடுவத்தவனாய் திகழ்ந்தான். சாத்தான் இரண்டு குறிப்பிடத்தக்கவர்களை எழுப்பி "பாவ மனுஷனைப் "பூரணப்பட்டுத்துகிறவனாய் இருக்கிறான்.

தரிசனம் கொடுக்கப்படுவது வேதாகமத்தில் பொதுவான ஒன்றாய் இருந்த போதிலும், அதன் வியாக்கியானம் கடைசி இரு வசனங்கலில் தானியேல் தனது தனிப்பட்ட கரிசனையை அளிக்கிறவராய் இருக்கிறார்.

பகுதி 37 - ஆட்டுக்கடா மற்றும் வெள்ளாட்டுக்கடா குறித்த தரிசனம். தானியேல் 8:1-14.

1 தானியேலாகிய எனக்கு முதலில் கான்பிக்கப்பட்ட தரிசனத்துக்குப் பின்பு, இராஜாவாகிய பெல்ஷாத்சார் இராஜ்ஜியபாரம்பண்ணின மூன்றாம் வருஷத்திலே வேறொரு தரிசனம் எனக்குக் காண்பிக்கப்பட்டது. 2 தரிசனத்தில் நான் கண்டது என்னவென்றால்: நான் பார்க்கையில் ஏலாம் தேசத்திலுள்ள சூசான் அரமனையில் இருந்தேன். அங்கே நான் ஊலாய் என்னும் ஆற்றங்கரையில் இருந்ததாகத் தரிசனத்திலே கண்டேன். 3 நான் என் கண்களை ஏறெடுத்துப் பார்த்தேன். இதோ, இரண்டு கொம்புகளுள்ள ஒரு ஆட்டுக்கடா ஆற்றிற்கு முன்பாக நின்றது, அதின் இரண்டு கொம்புகளும் உயர்ந்தவைகளாயிருந்தது. ஆகிலும் அவைகளில் ஒன்று மற்றதைப்பார்க்கிலும் உயர்ந்திருந்தது. உயர்ந்த கொம்பு பிந்தி முளைத்தெழும்பிற்று. 4 அந்த ஆட்டுக்கடா மேற்கும் வடக்கும் தெற்கும் பாய்கிறதைக் கண்டேன். ஒரு மிருகமும் அதின் முன்னே நிற்கக்கூடாதிருந்தது. அதின் கைக்குத் தப்புவிப்பாருமில்லை, அது தன் இஷ்டப்படியே செய்து வல்லமை கொண்டது. 5 நான் அதைக்

கவனித்துக்கொண்டிருக்கையில், இதோ, மேற்கேயிருந்து ஒரு வெள்ளாட்டுக்கடா நிலத்திலே கால் பாவாமல் தேசத்தின் மீதெங்கும் சென்றது. அந்த வெள்ளாட்டுக்கடாவின் கண்களுக்கு நடுவே விஷேசித்த ஒரு கொம்பு இருந்தது. 6 நான் ஆற்றின் முன்பாக நிற்கக்கண்ட இரண்டு கொம்புகளுள்ள ஆட்டுக்கடாவினிடமட்டும் அது வந்து, தன் பலத்தின் உக்கிரத்தோடே அதற்கு எதிராகப் பாய்ந்த்து. 7 அது ஆட்டுக்கடாவின் கிட்டச் சேரக்கண்டேன். அது ஆட்டுக்கடாவின் மேல் கடுங்கோபங்கொண்டு, அதை முட்டி அதின் இரண்டு கொம்புகளையும் முறித்துப்போட்டது. அதின் முன் நிற்க ஆட்டுக்கடாவுக்குப் பலமில்லாமையால், வெள்ளாட்டுக்கடா அதைத் தரையிலே தள்ளி மிதித்துப்போட்டது. அதின் கைக்கு ஆட்டுக்கடாவைத் தப்புவிப்பார் இல்லை. 8 அப்பொழுது வெள்ளாட்டுக்கடா மிகுதியும் வல்லமைகொண்டது, அது பலங்கொண்டிருக்கையில் அந்தப் பெரிய கொம்பு முறிந்து போயிற்று. அதற்குப் பதிலாக ஆகாயத்தின் நாலு திசைகளுக்கும் எதிராய் விஷேசித்த நாலு கொம்புகள் முளைத்தெழும்பினது. 9 அவைகளில் ஒன்றிலிருந்து சின்னதான ஒரு கொம்பு புறப்பட்டு, தெற்குக்கும், கிழக்குக்கும் எதிராகவும், சிங்காரமான தேசத்துக்கு நேராகவும் மிகவும் பெரிதாயிற்று. 10 அது வானத்தின் சேனைபரியந்தம் வளர்ந்தது. அதின் சேனையாகிய நட்சத்திரங்களில் சிலவற்றைப் பூமியிலே விழப்பண்ணி, அவைகளை மிதித்தது. 11 அது சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி, அவரிடத்திலிருந்து அன்றாட பலியை நீக்கிற்று. அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது. 12 பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது. அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று. அது கிரியை செய்து அனுகூலமடைந்தது. 13 பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன். அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக் குறித்தும் பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும் பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும் உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். 14 அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும். பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

இத்தரிசனத்தின் காலம் கி மு 546 ஆகும், அது பெல்ஷாத்சாரின் மூன்றாம் வருட ஆளுகையாய் இருந்தது. கல்தேய சாம்ராஜ்ஜியத்தை

பெல்ஷாத்சாரின் கரத்தில் ஒப்படைத்துவிட்டு மூத்த அரசனாகிய நெபோனிடாஸ் அரேபியாவில் வாழ்ந்ததை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இந்த தரிசனத்தின் போது கல்தேய சாம்ராஜ்ஜியம் நிறைவடைய 8 குறுகிய ஆண்டுகளே உள்ளது மற்றும் சுவற்றில் எழுதப்பட்ட நிகழ்வுகள் தானியேல் 5 ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

வசனம் 2ல் அவர் தரிசனம் கண்ட இடத்தை நாம் காண்கிறர்களாய் இருக்கிறோம். அவர் ஏலாம் மாகானத்தில் சூசா என்னுமிடத்தில் ஊலாய் ஆற்றங்கரையில் இருந்தார். சூசா என்பது பெரிசியரின் தலைநகர் பட்டணத்தில் ஒன்றாய் இருக்கிறது, ஆனால் பெரிசியாவின் எழும்பும் நட்சத்திர மையமாய் விளங்கியது. மகா கோரேஸ் அதன் இராஜாவாயிருந்தான். தானியேல் சூசாவிலே இருந்தான், லிதியர்கள் தாக்குதல் நடத்துவதற்காக அவன் அங்கிருந்திருக்க வேண்டும். இது பின்னர் (நூறு ஆண்டுகளுக்கு பின்னர்) நெகேமியாவின் வீடாய் இருந்தது [நெகேமியா 1:1] எஸ்தர் புத்தகத்தின் பெரும்பகுதி இங்கு நிகழ்ந்ததாய் கருதப்படுகிறது. [எஸ்தர் 2:8].

சூசான் பாபிலோனுக்கு கிழக்கே 200 கி மீ தூரத்தில் அமைந்திருந்தது. இப்பட்டணம் பண்டைய நாட்களில் மிகவும் பிரசித்திவாய்ந்த பட்டணமாய் திகழ்ந்தது. கி மு 518ல் கட்டப்பட்டு, தரியூ இராஜாவின் அரமனையாய் திகழ்ந்தது என புதை பொருள் ஆராய்சி மூலம் வருணிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

கி மு 640ல் அசீரியரால் ஏலாம் மாகாணம் பணி நீக்கம் செய்யப்பட்டது. அதில் வசித்தவர்கள் சமாரியாவிற்கு மற்றப்பட்டனர், இது சமாரியா அமைவதற்கு கரணமாய் அமைந்தது. இது கெதர்ல கோமேரின் [Chedorlaomer] ன் வீட்டு மாகாணமாய் இருந்தது, ஆதியாகமம் 14ம் அதிகாரத்தில் மலையிலிருந்து ஒரு இராஜா லோத்துவை சிறைப்பிடித்துக்கொண்டுபோனான். இந்த மாகாணம் தானியேலுக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்னரே பிரசித்திப் பெற்றதாய் இருந்தது.

ஊலாய் என்னும் ஆற்றங்கரை வேறு பெயர்களால் குறிப்பிட்டப்படுகிறது, இது டைகிரிஸ் நதியின் ஒரு பிரிவாகும். தானியேல் தரிசனத்திற்காய் ஒதுக்கியிருந்த இந்தப் பகுதி தேசத்தின் மையப்பகுதியாய் இருந்து, தேவனின் திட்டப்படி இத்தரிசனத்திற்கு சில ஆண்டுகளுக்கு பின்னர் பாபிலோனுக்காக திரும்ப அமைக்கப்பட்டது.

3 வது வசனத்தில் இரண்டு கொம்புள்ள வெள்ளாட்டுக்கடாவை நாம் பார்க்கிறோம். அதில் ஒரு கொம்பு சமமின்றி உயர்ந்ததாய் காணப்பட்டது. அந்த இரு கொம்புகளும் மேதிய பெரிசிய

சாம்ராஜ்ஜியங்களை பிரதிபலிக்கிறது. பெரிசிய இராஜாக்கள் அவர்களது இராணுவத்துடன் யுதத்திற்கு அணிவகுத்து நிற்கையில் அவர்களது வழக்கம் என்னவென்றால், இராஜரீக கிரீடத்திற்கு பதிலாக கற்கள் பதிக்கப்பட்டு இருகொம்புகளுள்ள தலைப்பகையை அணிவது ஆர்வத்தைத் தூண்டக்கூடியதாய் இருந்தது.

மேதியரும் மற்றும் பெரிசியரும் ஒரு அடிப்படையான இனத்தைச் சார்ந்தவர்கள். ஆரம்பத்தில் மேதியர்கள் பிரபலமானவர்களாய் திகழ்ந்தனர் இக்காலத்தில் பெரிசியர்கள் ஆளுகிறவர்களாய் இருந்தனர். இது அச்சாமெனிஸ் வீட்டாராய் இருந்தனர். இந்த குடும்பத்தினர் ஆளுகிற குடும்பமாய் இராது, இராணுவ கண்ணோட்டத்தில் ஓர் வலுவான குடும்பமாயிருந்து முடிவாக இராஜ்ஜியத்தை ஆளுகை செய்கிறவர்களாய் இருந்தனர். இந்தக் குடும்பத்தில் தோன்றியவரே கேரேஸ் என்பவர். இவர் இக்காலத்தில் தலைசிறந்த தலைவராய் இருந்தார், அவருடைய பெருமையே இறுதியாய் அவரை அழித்துவிடுவதாய் இருந்தது.

அவர் தாயார் ஒரு மீதியானளாய் இருந்தாள், அவர் தகப்பன் ஒரு பெரிசியனாய் இருந்தான். இவன் இறுதியான மேதிய ஆளுநராய் இருப்பதற்கு சரியான நபராய் இருந்தான். இவனது பெயரை மேதிய பெயராய் நாம் காண்கிறோம், "மேதியனாகிய தரியூ" என இவன் அறியப்பட்டான். (இவனது தாயார் கோரேஸ் என்கிற தகப்பனாரின் பெயரை இவனுக்கு சூட்டினார்) தானியேக் நெபுகாத்நேச்சாரை சேவித்தபோது, அவனது மனைவி ஒரு மேதிய இளவரசியாய் இருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது (இவளுக்காக தொங்கும் தோட்டம் நிறுவப்பட்டது) இவ்வாறு ஏற்கனவே தானியேல் மேதிய பெயர்களால் அறியப்பட்டிருந்தான், மேதியர்கள் பாபிலோனை கைப்பற்றும் போதும் மேதிய பெயர்களால் அறியப்பட்டிருந்தான்.

மேதியர்கள் தோற்கடிக்கப்பட்டபோது கோரேஸ் பிரபலமானான், இரண்டாவது கொம்பு பின்னர் வருகிறதாய் இருந்து, முடிவாய் ஆளுகை செய்கிறதாய் இருந்தது. அவனது தாயார் மேதிய இளவரசியாய் இருந்து, அவனது ஆளுகையானது தடையின்றி ஆளும்படி நேரிடுகிறதாய் இருந்தது. இருபாலரும் ஒருவருக்கொருவர் சொந்தம் பாராட்டுகிறவர்களாய் இருந்தனர். ஒருவரையும் உபத்திரவப்படுத்தாதபடிக்கு மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாய் இருந்தான், இதினிமித்தம் மரியாதையை சம்பாதித்து, அவனை எதிர்த்த தலவர்களிடமும் மரியாதையுடன் நடந்துகொண்டான். அவனது சத்துருக்களாலும் ஆச்சரியப்படத்தக்கவிதத்தில் இராணுவத் தனிச்சிறப்பை பெற்றவனாய் இருந்தான்.

மேதியர்கள் ஆரம்பத்தில் இரானியன் மேட்டு நிலத்தை ஆளுகை செய்கிறவர்களாய் இருந்தனர், ஆனால் பெல்ஷாத்சார் பாபிலோனை ஆளும்படி ஏற்படுத்தப்பட்டபோது,கோரேஸ் பெரிசிய இராணுவத்தின் தலைவராய் இருந்தான் (அவனது தந்தையின் இராணுவம்) மேதியர்களை வென்று அதினிமித்தம் "உயர்ந்தவன்" ஆனான். கி மு 540ல் ஸ்கைத்தியர்களுடன் கூட்டுறை அமைத்துக் கொண்டு, அவனது வட பாகத்தை பாதுகாப்புக்குட்ப்படுத்தினான். மேற்கே லிதியர்களுடன் போரிட்டு 539ல் மெசப்போதோமியாவை கைப்பற்றி, பாபிலோனுடன் எடுத்துக் கொள்கிறவனான். ஆட்டுக்கடா கிழக்கிலிருந்து வந்து, வடக்கு, தெற்கு, மற்றும் மேற்கு போன்ற திசைகளில் தீர்க்கதரிசனம் உரைத்தபடியே பரவிற்று.

ஆட்டுக்கடாவானது வெற்றிகரமாய் வடக்கு, தெற்கு மற்றும் மேற்குபகுதிகளை வெற்றிக் கண்டதை காண்கிறோம். கிழக்கு பாகத்தை மேற்கொள்ளாததையும் காண்கிறோம். இறுதியாய் கோரேஸ் கிழக்கே சென்று மங்கோலிய இனத்தை அடக்கும்படிஇ சென்றான், அவன் அங்கு முகாமிட்டு இருக்கும்போது கொலை செய்யப்பட்டான். தானியேல் கோரேஸுக்கு கிழக்கு பாகம் சரியான பாகம் இல்லையென்பதை கண்டவனாய் இருக்கிறான். கோரேஸ் வெற்றிக்கண்ட மூன்று குழுக்களும் மிகவும் ஆழமாய் பிசாசின்கொள்கைகளை பின்பற்றுகிறவர்களாயிருந்தனர். உதாரணத்திற்கு லிதியாவின் க்ரோஸஸ் என்பவன் எப்பொழுதும் குறிகேட்பதில் முனைந்து காணப்பட்டான். அவன் கோரேஸுடன் செய்த யுத்தத்தில் பிசாசு பிடித்த குறிசொல்லுகிறவன் குறி சொல்லும்போது, அவன் ஒரு குறிப்பிட்ட ஆற்றைக் கடக்கும் போது ஒரு பெரிய சாம்ராஜ்ஜியம் வீழ்ச்சியடையும். புரியாத வகையில் சொல்லப்பட்ட அருள்வாக்கு, "ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தை அழிப்பாய்" என்பதாகும். அவன் அந்த யுத்தத்தில் வெற்றியடைவேன் என் யூகித்தான், ஆனால் அவனது சாம்ரஜ்ஜியமானது அழிக்கப்பட்டது அவனுக்கு அதைரியத்தை அ்ளிப்பதாய் இருந்தது.

பண்டைகால சரித்திரத்தின் கேம்பிரிட்ஜ் வால்யூம் 4 கூறும்பொழுது. "பெரிசிய சாம்ராஜ்ஜியம் ஒரே தனிப்பட்ட சந்ததியாய் இருந்து, தொடர்ச்சியாய் பல வெற்றிகளைக் கண்டு, மகா அலெக்ஸாண்டரைத் தவிர, அரேபியர்கள் முகமதின் வம்சாவழியினர், மேதியர்களை தோற்கடித்தனர் 549 கி முவில் இவர்களுடன் க்ரோஸஸுடன் லிதியனும் சேர்ந்து கொண்டனர். பாபிலோனை கி மு 539ல் கைப்பற்றினர், எகிப்தை கி மு 525ல் கைப்பற்றினர் [இது கோரேஸால் அல்ல காம்பைஸஸால் கைப்பற்றப்பட்டது] கொடுக்கப்பட்ட 30 ஆண்டுகளுக்குள் பெரிசிய சாம்ராஜ்ஜியம் விரிவடைந்து நைல் பள்ளத்தாக்கில் உள்ள

மெசப்பத்தோமியாவை மன்னர் ஆளுகை செய்து விரிவடைந்தது, இது மேற்கு சைனாவை விட பரந்து விரிவடைந்தது."

வசனம் 5ல் வெள்ளாட்டுக்கடா அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இங்கு எபிரேய அமைப்பின்படி ஒரு சூழலானது பார்க்கப்படுகிறது முதலாவது ஒரு கதையின் சுருக்கம் கூறப்பட்டு, பின்னர் அதன் விரிவாக்கம் கூறப்படுகிறது. வெள்ளாட்டுக்கடாவானது அலெக்ஸாண்டர் கீழ் இருந்த கிரேக்கர்களைப் பிரதிபலிக்கிறது, அலெக்ஸாண்டர் தனிப்பட்ட பெரிய கொம்பாய் இருக்கிறான்.

இவனது இராணுவ அணுகுமுறை தனிச் சிறப்பு வாய்ந்ததாய் இருந்தது. அவன் ஒரு யுத்தத்தில் இருந்து திரும்பும்போது தோல்வியுற்றவனாய் திரும்புவதிலை. அவன் தனது இராணுவத்தை தனது சொந்த கிரேக்க இராணுவ அமைப்பின்படி உருவாக்கியிருந்தான். அவனது இராணுவ வீரர் 100 கிலோ எடையுள்ள பாறையை 100 மீட்டர் தூரத்திற்கு வீசும்படியான வலுப்பெற்றவர்களாய் இருந்தனர்.

அவன் தனது இராணுவ வாழ்வை அநேக கிரேக்க யுத்தங்களில் ஜெயங்கொண்டவனாய் கழித்து அவர்கள் அனைவரையும் தனது இராணுவத்தில் ஒருங்கிணைத்து இருந்தான். அவன் மேற்கிலிருந்து கடந்து வந்து கிழக்கு நோக்கி செல்கிறவனாய் இருந்தான். கிரேக்கர் மிகச் சிறந்த காலாட்படையினால் அறியப்பட்டிருந்தனர், பெரிசியர்கள் நல்ல குதிரைப்படை மற்றும் இரதங்கள் போன்றவற்றை சார்ந்திருந்தனர். கிரேக்க கூலிப்படையினர் "அதிர்ச்சி பட்டாளம்" என்ற காலாட்படையினால் அறியப்பட்டிருந்தனர். பெரிசியர்களுடன் நிகழ்ந்த பெரிய யுத்தத்திற்குப் பின்னர், அலெக்ஸாண்டர், மற்றவர்களுக்கு முன்மாதிரியாய் கிரேக்க கூலிப்படையினர் அனைவரையும் கொலை செய்தான். இது பெரிசியர்களின் பெலத்தில் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியது, கிரேக்க கூலிப்படைகள் அனைவரும் யுத்தத்திற்கு முன்னாக ஓடிப்போனார்கள் மற்றும் அவர்களது கிரேக்க சகோதரருடன் சேர்ந்து கொண்டார்கள்.

வசனம் 5ல் கூறப்பட்டுள்ளபடி அதின் பாதங்கள் தரையைத்தொடாமல் இருந்தது. அவன் 40 யுத்தங்களைச் செய்தான், 30,000 கி மீ. தூரம் பயணம் செய்தான், அவனது இராணுவத்துடன் அணிவகுத்து சென்று குறைந்தபட்சம் பதின்மூன்று ஆண்டுகள் யுத்தம் செய்கிறவனாய் இருந்தான். 40,000 யுத்த வீரர்களுடன் போர் செய்து, 100,000 பேர்களை வென்றான்.

அலெக்ஸாண்டர் கிரேக்க மொழியில் பாண்டித்துவம் பெற்று விளங்கினான் அவன் இல்லியட் மற்றும் ஒடிஸி போன்றவைகளை

மனப்பாடம் செய்திருந்தான். டிராய் என்னுமிடத்திற்கு அருகில் இவ்விரண்டு காரியங்களில் இருந்து ஓதி தமது படைவீரர்களை உற்சாகப்படுத்தி ஆசியாவிற்குள்ளான ஹெலிஸ்போர்ட்டுக்குள் நுழையும்படி செய்தான். இது அவர்களது ஆர்வத்தை குறைத்து விடுவதாய் இல்லை.

சுமார் 60,000 பெரிசிய மற்றும் கிரேக்க கூலிப்படைகள் கிரானிகஸ் என்னுமிடத்தில் கி மு 334ல் தோற்கடிக்கப்பட்டனர். அவனது இராணுவத்தின் ஒரு குழுவினர் கருங்கடல் நோக்கி சென்றனர். அங்கு அவர்கள் பொக்கிஷம் நிறைந்தபட்டணத்தைக் கைப்பற்றி இராணுவத்திற்கு கொடுக்குமாறு செய்தனர். அலெக்ஸாண்டர் இப்பொழுது சிலிசியன் வாசலுக்கு ஊடாய் சென்றான், இது தெற்கு துருக்கியின் பெரிய வாசலாய் அமைந்திருந்தது, இவர்கள் தர்சு என்னும் அப்போஸ்தலனாகிய பவுலின் சொந்த பட்டணத்தை அடைந்து பின்னர் மலைப்பகுதிக்கு திரும்பினர்.

பெரிசியாவின் தரியூ III இஸுஸ் என்னுமிடத்தில் கி மு 333ல் 100,000 மனிதருடன் இவனுக்கு விரோதமாய் யுத்தம் செய்தான். ஒரு சில மணி நேரத்திற்குள் சுமார் 60,000 பெரிசியர்கள் செத்து மடிந்தனர், அலெஸாண்டரின் படையினர் சாமார்த்தியமாய் அவர்களை மேற்கொண்டனர்.

கி மு 331ல் மறுபடியும் தரியூ III ஐ கௌகமேலா யுத்தத்தில் தோற்கடித்தான், கடைசியாக இறுதி நம்பிக்கையும் அற்றுப்போக பெரிசிய சாம்ராஜ்ஜியத்தை முற்றிலும் அழித்துப்போட்டான். தரியூ III யுத்தத்தில் தப்பி, தனது மனைவியை பின்வைத்து விட்டு சென்றான், இருப்பினும் அவன் பீஸஸ் என்பவனால் கொலை செய்யப்பட்டான். இவன் அதைத் தொடர்ந்த வருடத்தில் ஸாட்ரபின் பாக்ட்ரியாவாய் இருந்தான். எப்படியிருப்பினும் அலெக்ஸாண்டர் பாக்ட்ரியாவின் மீது தாக்குதல் நடத்தி, பீஸஸை கொன்றுபோட்டான் பண்டைய பேர்ஸிப்போலிஸ்ஸை தீக்கொழுத்தி இது பெரிசியாவின் தலைநகராய் இருந்தது. குடிவெறியிலிருந்த அனைவரையும் வெட்டிக் கொலை செய்தான்.

அலெஸாண்டர் எப்போதும் முன்செல்கிறவனாய் இருந்தான் யானைப்படையுடன் எதிர்பட்ட போரேஸ் என்னும் பஞ்சாபின் அரசனையும் எதிர்கொண்டான். இந்தியாவில் நடந்த இன்னொரு யுத்தத்தில் அவனது படை வீரர்கள் மதில் சுவற்ற அளவிடமுடியாதபடி திணரினர், அலெக்ஸாண்டர் ஒரு ஏணி அமைத்து அதை அளந்து வெற்றிகரமாய் தனது துருப்புகளை வழிநடத்தி மேற்கொண்டான். இது அநேக ஆண்டுகளுக்கு முன்னர் தீருவில் செய்தது போல இருந்தது.

அவனுக்கு கொஞ்சமும் மரணபயம் என்பதில்லாதிருந்தது, அவன் தெய்வங்களுக்கு விஷேசித்தமானவன் என்பதை நம்பினான். அலெக்ஸாண்டர் மிகவும் தந்திரமான முறையில் பாபிலோனில் கொலை செய்யப்பட்டான். [மகா அலெக்ஸாண்டரைக் குறித்து இன்னும் சில விபரமறிய கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்பேடுகளைக் காண்க].

20 மனிதர்களை தனது தளபதிகளாய் தெரிவு செய்திருந்தான் அவர்களில் 18பேர் இராஜாக்களாய் மாறினர். உலகின் முழு சரித்திரமும் அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பின் இந்த தளபதிகள் தொடர்ந்து 50 ஆண்டுகள் சாம்ராஜ்ஜியத்திற்காய் பட்ட கஷ்டங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல.

வசனம் 8ல் வெள்ளாடானது "**மிகுதியும் வல்லமைகொண்டது"** என்பது அலெக்ஸாண்டர் மிகவும் பெரிய அளவில் வல்லமை கொண்டதை காட்டுகிறதாய் இருக்கிறது. அவன் இரட்சிப்படைந்தது குறித்து எதுவும் கூறவில்லை, வருத்தப்படக்கூடிய நிலையில் அவனது ஆணவம் அவனது வாழ்வில் சாத்தானின் ஆளுகைக்கு அவனை உள்ளாக்கியது. அவன் மகா பெரியவனாய் இருந்தான் காரணம் தனிச்சிறப்புடையவனாய் திகழ்ந்தான். அவன் ஒழுக்கசீலனாகவும், யுத்தத்தில் மிகவும் தைரியசாலியாயும் திகழ்ந்தான். அவன் எப்பொழுதும் எண்ணிக்கையில் அதிகமான நிலையில் இருந்தான் மற்றும் எப்பொழுது வெற்றிவாகை சூடி முன்னேறுகிறவனாய் இருந்தான். அவன் பலத்தின் உச்சக்கட்டத்தில் இருக்கும்போது அந்த உயர்ந்த கொம்பானது முறிக்கப்பட்டது (அவன் கொலை செய்யப்பட்டான்) அது அலெக்ஸாண்டரின் மரணத்தைக்குறிக்கிறது. அவன்ஜெயங்கொள்ளாத ஒரே இடம் அரேபியாவாய் இருந்தது.

அரேபியா மீது தாக்குதல் நடத்த ஒழுங்கு செய்திருந்தான் அப்பொழுது அவனுக்கு ஜுரம் கண்டு 323 கி மு வில் மரணத்தை தழுவினான். வேதாக்மம் அவன் வன்முறையினால் "முறிக்கப்பட்டான்" என பதிவு செய்திருக்கிறது. அவன் மரணத்தை அவ்வாறு குறிப்பிட்டு இருந்தது, சமீபபத்திய ஆதாரம் குறிப்பிடும்போது, அவன் கொலை செய்யப்பட்டதை உறுதிப்படுத்துகிறதாய் இருக்கிறது. கிரேக்க மொழி வல்லுணர்கள் சமீப்பத்திய காலத்தில் முடிவாக கூறியது என்னவெனில், அவன் மதுபானத்தினாலும், ஜுரத்தினாலும் பாதிப்படைந்து மரணமடைந்தான் என்கின்றனர், ஆனால் வேதாகமம் சொல்லும்போது அவனது மரணம் வன்முறையான கொலை என்று கூறுகிறது.

கொஞ்சகாலம் தளபதிகள் அனைவரின் நோக்கமும் சாம்ராஜ்ஜியத்தை ஒன்றாய் இணைக்க வேண்டும் என்பதாய் இருந்தது. இந்த போராட்டம்

கடந்த 20 ஆண்டுகளாய் இருந்து வந்தது. முதலாவது சிறப்பு வாய்ந்த தளபதி ஆண்டிஜினஸ் ஆக இருந்தான் அவன்து மகன் ஒற்றைக் கண் டெமிடிரியஸ் ஆக இருந்தான். அவர்கள் கிட்டத்தட்ட முன்னேறிக்கொண்டிருக்கும் போது, லைசிமிகஸ் என்பவனும் செலூக்கஸ் என்னும் தளபதிகள் இருவரும், அவர்களை ஏமாற்றி பஞ்சாப் அரசனிடமிருந்து யானைப்படைகளை பெற்றனர் அதற்கு பதிலாக கிழக்கு இராஜ்ஜியத்தின் ஒருபகுதியை திரும்பப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் தந்தையையும் மகனையும் தோற்கடித்து இப்ஸஸ் யுத்தத்தில் மேற்கொண்டனர்.ன்

முடிவாக சாம்ராஜ்ஜியமானது நான்கு பாகமாய் பிரிக்கப்பட்டது, செலூக்கஸ் சிரியாவை எடுத்துக்கொண்டான், டாலமி எகிப்தை எடுத்துக்கொண்டான், லிசிமிகஸ் மற்றும் காஸண்டர் மக்கதோனியாவை எடுத்துக் கொண்டனர் மற்றும் ஐரோப்பாவின் மற்ற பகுதிகளையும் எடுத்துக் கொண்டனர்.

செலூக்கஸ் அவனது பலத்தினால் அறியப்பட்டிருந்தான். ஒரு வகையான விளையாட்டு பந்தயத்தில், மற்றுவர்கள் ஒரு காளையை துன்புறுத்தும்போது எவ்வளது அதிக நேரம் அதை அடக்கி பிடித்து கொண்டிருப்பது. ஒரு வேளை அக்காளையினால் முட்டித்தள்ளப்படுவார்களேயானால் அவர்கள் அந்த ஆட்டத்திலிருந்து தோல்வியை தழுவுகிறவர்களாவர். செலூக்கஸ் காளையை அடக்குவதில் பிரசித்தப்பெற்றவனாய் இருந்தான், அவன் அது போன்ற விளையாட்டுகளில் வெற்றி பெற்றவனாய் இருந்தான். இதன் மூலம் மிகவும் வலுபெற்றவனாய் அவன் திகழ்ந்தான் மற்றும் தைரிய சாலியாயும் விளங்கினான்.

டாலமி .என்னும் தளபதி வெளிஉறவுகளைப் பாதுகாத்தவர். அவன் சாம்ராஜ்ஜியமானது ஒன்றுபட இயலாது இருப்பதை உணர்ந்தான், ஆகையால் அவன் எகிப்திற்குச் சென்று கிரேக்க சாம்ராஜ்ஜியத்தை விரிவாய் ஸ்தாபித்து கடைசி கிரேக்க ஆளுந்தராய் கி மு முதல் நூற்றாண்டின் வாழ்ந்த கிளியோபார்ட்டாவுடன் இணைந்து கொண்டான், இவள் மூன்று முக்கியமான ரோமர்களை தன் அழகினால் மயக்கி அவர்களது ஆளுகைய தன் வசமாக்கிக் கொண்டாள். (அவர்கள் மூவரும் பாம்பே, சீசர் மற்றும் மாற்கு அந்தோனி ஆகும்) ஒவ்வொருவரை அவள் மயக்கி கொலை செய்தாள் முடிவாக அவளும் தற்கொலை செய்து கொண்டு மாண்டாள். டாலமி தான் மகிழும்படி, மற்ற தளபதிகள் தாங்களே பணம் மற்றும் பொழுது போக்கு போன்றவற்றை விட்டு வெளியேறும்படி செய்துவிட்டான்.

வசனம் 9 லிருந்து நாம் செலுக்க்ஸை பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம். அவனும் டாலமியும் அவர்களை பின்பற்றுகிறவர்களையும் தொடர்ந்து 11ம் அதிகரத்தில் நாம் காண்கிறோம். செலூக்கஸுக்கு 247 மாகாணங்களை ஆளும்படியாய் இருந்தது. அவன் கிமு 281 வரை வாழ்ந்தான், இராணுவத்தை திரும்ப இணைக்கும் போது அவன் கொலை செய்யப்பட்டான்.

அவன் குமாரன் அந்தியகஸ் 1 கால்ஸ் என்பவர்களுடன் பிரச்சனைகளை சந்தித்தான். சிலர் பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் அயர்லாந்துக்குச் சென்றுவிட்டனர். ஆனால் கனிசமான எண்ணிக்கையுள்ளவர்கள் திரும்பிக்கொண்டு ஆசியா மைனரின் மலைகளில் தங்கி விட்டனர் அங்கு தங்கி அவர்கள் கலாத்தியர் என்னும் இனத்தை உண்டாகி, தங்களது பெயரை அம்மாகானத்திற்கே சூட்டினர் பவுல் இம்மாகானத்தில் வசிப்பர்களுக்கு ஒரு கடிதத்தை எழுதினார்.

அடுத்த ஆளுநர் அந்தியோகஸ் II ஆக இருந்தான். அநேக அந்தியோகஸ்கள் உலகில் இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. பண்டைய உலகில் 25 அந்தியோக் களும், 50 அலெக்ஸாண்டரியாக்களும் இருந்தனர். வட தேசத்தில் செலூக்கஸ் அல்லது அந்தியோகஸ் இராஜாவாகவும், தெற்கு இராஜ்ஜியதில் டாலமி இராஜாவாகவும் இருந்தனர். அவர்கள் யார்வழி வருகின்றனர் என்கிற யூகத்தை காட்டுகிறவர்களாய் இருந்தனர். பெருமை என்பது அவர்கள் பெலவீனமாய் இருந்தது, எல்லா மேற்கத்திய ஆளுநர்களுடன் புறஜாதிய யுகத்தில் இது நிலைவரமாய் குடிகொண்டிருந்தது. -- சாத்தானின் வல்லமையில் பலம் மற்றும் பலவீனப்பகுதிகள் இருந்தது. மத்தேயு 4:8-11.

அந்தியோகஸ் III மிகவும் வலிமை பொருந்தியவனாய் ரோமர்கள் தவிர மற்றெல்லாவரையும் வெற்றிகொண்டிருந்தான். ஹனிபல்களை வாடைகைக்கு பொறுத்தாத வரையிலும் ரோமர்களுடன் பிரச்சனையின்றி இருந்தது. கிழக்கிலே ஹனிபல் மரித்து போகவே செலுசைட்ஸ்க்கு உதவ முயன்றனர். அந்தியோகஸின் மகன் செலூக்கஸ் IV ஹெலியோட்ரஸ் என்னும் கிரேக்கனை நிர்வாக காரியங்களில் உதவியாய் இருக்கும் படி கூலிக்கு அமர்த்தினான், அவர் பொருளாதார நிர்வாகத்தை கவனித்துக்கொள்கிறவனாயிருந்தான், ஆனால் அவன் செலூக்கஸை கொலை செய்கிறவனான்.

அந்தியோகஸ் IV ன்சரித்திரப்படி, மிகவும் பிரபலமான தளபதியாய் இருந்து, ரோமில் பயிற்றுவிக்கப்பட்டவனாய் இருந்தான். அவனது வன்முறை மற்றும் கர்வமும் நிறை வாழ்க்கை முறையானது ரோமருக்கு தாங்கக்கூடாதிருந்தது, அவன் ஏதென்ஸ்க்கு கடந்து சென்று அங்கு அவன்

மிகவும் பிரபல மடைந்தான். அவன் ஏதென்ஸில் இருக்கும்போது தனது சகோதரன்கொலை செய்யப்பட்டதை கேள்விப்பட்டான்.

ஏதெனியன் சாம்ராஜ்ஜியத்திலிருந்து தனது தளபதி ஸ்தானத்தை ராஜினாமா செய்தான், பெர்கமுஸ் ஆளுநரிடமிருந்து இராணுவத்தை இரவலாகப்பெற்று, ரோம இராணுவ பள்ளியில் இன்னொரு குழுவை ஸ்தாபித்தான். இரவலாக வாங்கின இராணுவத்தைக்கொண்டு சீரியாவின் மீது படையெடுத்தான். அவனையும் அவனுடன் மக்கள் திரளையும் கண்டபோது அவர்களை வரவேற்று ஹெலியொடாரஸ் பெரிய அளவில் பணத்தை சுருட்டிக்கொண்டு சிறையிருப்புக்குக் கடந்து சென்றான்.

அந்தியோகஸ் IV (தன்னை "ஹம்பளை" எப்பிப்பேனஸ் என அழத்துக்கொண்டான் = தெய்வங்கள் தன் மூ,லம் வெளிப்படுத்துகின்றனர்) இதைக் கூறிக்கொண்டு அவன் தெற்கேயும் கிழக்கேயும் பெருகுகி பலத்துக் கொண்டவனாய்க் காணப்பட்டான். தெற்கே எகிப்து இருந்தது கிமு 169ல் தேசம் இரு தளபதிகளால் ஆளுகை செய்யப்பட்டது. அவர்கள் சிரியாவின் மீது படையெடுக்க திட்டம் தீட்டினர் ஆனால் அந்தியோகஸ் பிறர் கேள்வி கேட்க இயலாத வகையில் கலகம் செய்தான். கடந்த 160 வருடங்களில் ஒருவரும் செய்திராத வகையில் கலகத்தில் ஈடுபட்டான். அவன் வடக்கு தேசத்தோடு எதிர்த்து நின்று மெம்பிஸுக்கு சென்றான்.

அவன் பின்னர் அலெக்ஸாண்டிரியா நோக்கிச் சென்று தனது இராஜ்ஜியதிற்கு எகிப்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான், ஆனால் ரோமர்கள் எகிப்து செலூக்கஸினால் கட்டுப்படுத்தப்படுவதை விரும்பவில்லை. வட ஆப்ரிக்காவில் ரோம தளபதி ஒருவன் அவனை சந்தித்தான். அவன் ரோமபுரியில் இவனுக்கு சகநண்பனாய் இருந்தான், அவன் அந்தியோகஸுக்கு சொன்னது அவன் வீட்டுற்கு திரும்பு முன் தான் சொன்னதை நிறைவேற்ற கேட்டுக்கொண்டான். அவன் ரோமமி சினமூட்ட வேண்டாம் எனத் தீர்மானித்தான், ரோமை மேற்கொள்ள முடியாது என்றும் அறிந்திருந்தான்.

இப்பொழுது அந்தியோகஸ் தனது வீட்டிற்கு திரும்பி, இஸ்ரவேல் மூலம் கடந்து செல்கிறவனான, மற்றும் அவன் ரோமபுரியாரின் பயமுறுத்துதல்களால் ஏமாற்றமடைந்திருந்தான், அவன் தனது கோபத்தை யூதர் மீது காட்டுகிறவனாய் இருந்தான். டாலமி வரிவசூல் செய்வதைத் தவிர்த்து யூதர் மீது வேறெந்த கவனமும் செலுத்தாதிருந்தான். யூதர் அதிக பாதிப்புக்குள்ளாயிருந்தனர். செலுகஸ் அந்தியோகஸ் IV எப்பிப்பேனஸ் யூதேயா வழியாக அணிவகுத்து சென்றான் யூத ஹெலனிஸ்டிக் கலாச்சாரம் மீது தாக்குதல் நடத்த

முயற்சி செய்து, அவர்களை தேசத்திலிருந்து இனங்கானாவண்ணம் செய்ய எத்தனித்தான். இதுவே அவர்களது தேவ உறவிலிருந்து முறண்பட்ட செயல்பாடாய் இருந்து, சாத்தானின் தன்மையின் அடையாளமாய் விளங்கியது.

வசனம் 9ல் -- அந்தியோகஸ் எப்பிப்பேனஸ் கிழக்கில் உள்ள பார்த்தீனியர்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்யப் போனான். அவன் அவர்களது அரசன் மித்ராடைட்டஸுக்கு விரோதமாய் யுத்தம் செய்தான். அவன் பழைய பெரிசிய சாம்ராஜ்ஜியத்தில் பெரும்பாகத்தை மறுபடியும் மேற்கொண்டான், அவன் டைகிரிஸ் யூப்ரடீஸ் பள்ளத்தாக்கை தவிர்த்து மற்றும் திமாரிகஸ் ஆண்டுவந்த தெற்கு மீதியா தவிர எல்லா பாகத்தையும் மேற்கொண்டான். கி மு 165 ல் கிழக்கு நோக்கிச் சென்று அப்பகுதியை வென்றான். அவன் கிழக்குப் பகுதியில் வெற்றிவாகை சூடுகிறவனாய் இருந்தான். அதன் பின்னர் "மனரம்மியமான தேசம்" நோக்கி சென்றான், அது இஸ்ரவேல் தேசமாய் இருந்தது, தனது சித்தத்திற்கு அவர்களை வணைந்து கொண்டு சாத்தானின் பகைமை எண்ணத்தை செயல்படுத்த தீர்மானித்தான்.

அவன் மக்களை கிரேக்கராக்கும்படி கடந்து சென்றான் மற்றும் அவர்கள் தேவனுக்கு பயபக்தியாய் இருப்பதை கீழடக்கி, தனக்கே பயபக்தியாய் இருக்கச் செய்தான். அவன் இஸ்ரவேலின் தேவனை அவமதிக்கிறவனாய் காணப்பட்டான், அவன் உண்மையாகவே சாத்தானின் மனிதனாய் இருந்தான், அவனுக்கு சாத்தான் பெரிய வெற்றியை அளித்திருந்தான், ஆனால் அவன் தேவனை வெறுத்து ஒதுக்குவதே அவனது பெலவீனமாய் இருந்தது. ஒரு கூட்டம் யூதர்கள் கிரேக்க கலாச்சாரத்தின்படி நடக்கிறவர்களாய் இருந்தனர். அவர்களது விசுவாசமும் கிரேக்க கலாச்சாரத்திற்கு ஒத்துப்போகிறதாய் இருந்தது, அவர்களோடு கொண்டிருந்த உறவானது முழுவதும் வெற்றிகரமாக அமையவில்லை. அவன் இஸ்ரவேல் மீது குறிப்பிட்த்தக்க வரிகளை சுமத்தி அவனுக்கு ஆதரவு அளிப்பவர்களை வேறுபடுத்தினான். அவனது முறட்டுத்தனம் அவனை தோல்வியடையச்செய்தது. கி மு 167ல் ஜூயஸ் ஒலிம்பஸுக்கு ஒரு பொற்சிலையை செய்வித்தான், அது தாடியுடன் தன்னைப்போன்றே இருந்தது, அதை எருசலேமில் உள்ள தேவாலயத்தில் வைக்குமாறு கட்டளையிட்டான். அது பாழாக்கும் அருவருப்பு என அழைக்கப்படுகிறது.

கிரேக்கர்கள் அதை மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கமுற்பட்டபோது அதை ஆசாரியர்கள் மறுத்து விவாதித்தனர் அவர்களை சிரியோ-கிரேக்க இராணுவத்தினர் கொன்று போட்டனர். சட்டரீதியாக செலுத்தப்படும் பலிமுறை களை அகற்றி விட்டனர், 1000 பன்றிகளை கொண்டு வந்து பலிசெலுத்தினர். பன்றியின் இரத்தத்தை தேவாலயம்

முழுவதிலும் தெளித்தனர். மற்றவர்கள் எருசலேமில் புகார் கூறி இத்தகைய கொடி செயல்கள் இஸ்ரவேலின் தேவனுக்கு எதிராக செய்யப்படுகிறது என்றனர். மற்றும் பட்டணத்திலிருந்து 1000 பிள்ளைகள் கொலை செய்யப்பட்டனர், அவர்களது இரத்தம் பன்றியின் இரத்தம், மற்றும் ஆசாரியர்கள் இரத்தத்துடன் கலக்கப்பட்டது.

எகிப்தியருக்குக் கீழ் யூதர்கள் பெரிய அள்வில் தன்னாட்சி உரிமம் பெற்றிருந்தனர் ஆனால் இந்த கீழ்த்தரமான செயல்பாடுகள் அவர்களது சுதந்தரத்திற்காக யுத்தம் செய்யவைத்தது, இது பிரபலமான யூத தலைவர் யூதாஸ் மக்கபேயஸ் தலைமையில் செய்தனர். இந்த கலகம் சிரியோ-கிரேக்க இராணுவத்துடன் எருசலேமுக்கு அருகான மோடன் என்னும் கிராமத்தில் துவங்கிற்று. அவன் ஆசாரியனை தேடி அஸ்மோனியன் வீட்டிலே யூதாஸின் தகப்பனை பன்றியை பலிசெலுத்துமாறு கட்டளையிட்டான். ஆசாரியன் பட்டயத்தை உருவி அந்த அலுவலரை பலிசெலுத்தினான். இந்த செயலானது அவனது பட்டயத்தை உருவும் ஐந்து குமாரருக்கு ஒரு அடையாளமாய் இருந்தது மற்று அவனுடன் சென்ற இராணுவத்திற்கும் ஒரு பாடமாய் அமைந்தது.

அவர்களுக்கு விரோதமாய் படைகள் அனுப்பப்பட்டிருந்தும் அவர்கள் புறம்பாக்கப்பட்டார்கள். கலகமானது வன்முறையாக மாறியது மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டு வந்தது. ஆனால் முடிவாக மக்கபேயர்கள் வெற்றி கண்டனர். அவர்கள் தேவாலயத்தைத் திரும்ப பெற்று, அதை பரிசுத்தப்படுத்தி முறையான மிருக பலிகளை மூன்றரை ஆண்டுகாலங்களில் முதன் முறையாய் செலுத்தினர். சுத்திகரிப்பானது கொண்டாடப்பட்டது வீதிகளில் மெழுகுதிரிகளை பிடித்துக்கொண்டு ஊர்வலம் நடத்தினர் மற்றும் எல்லா வீடுகளிலும் மெழுகுதிரிகளை ஏற்றி அதைக் கொண்டாடினர்.

இது கிறிஸ்மஸ் தினத்தின் ஆரம்பமாய் இருந்தது, இது ஜனவரி 1 வரை கடந்து செல்கிறதாய் இருக்கிறது இது ஒளியின் பண்டிகை அல்லது ஹனுக்கா என அழைக்கப்பட்டது. இது 200 ஆண்டுகளுக்கு பின் தோன்றிய இயேசுக் கிறிஸ்துவின் வார்த்தைகளாய் இருக்கின்றன. "நான் உலகிற்கு வெளிச்சமாய் இருக்கிறேன்." யோவான் 8:12. மக்கபேயர்களின் வெற்றியானது யூதர்களுக்கு சுதந்திரமாக ஆரம்பமானது இது ரோம ஆதிக்கத்திலிருந்த பாம்பே எருசலேமை கி மு 63ல் பிடித்தது வரை நீடிப்பதாய் இருந்தது.

அதைத் தொடர்ந்த ஐந்து வசனங்களில் இந்த நிகழ்வுகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மறுபடியும் யூதரைக் குறித்து அடிப்படை கருத்துக்களடங்கிய கதையானது கூறப்படுகிறது.

வசனம் 10ல் அந்தியோகஸ் IV அதிகாரத்திற்கு வந்தது குறித்து கூறப்படுகிறது. "பரலோக சனைகள்" என்பது விசுவாசிக்கும் யூதர்கள் தேவாலாயத்தில் கொலை செய்யப்பட்டதைக் குறிக்கிறது. அவர்களில் சிலர் அநேக யுத்தங்களில் அந்தியோகஸ் இராணுவத்தால் கொலை செய்யப்பட்டனர். கி மு 161ல் யூதாஸ் கொலை செய்யப்பட்டான், இவன் யோனத்தான் இவனது சகோதரனைத் தொடர்ந்து தலைவனாய் ஏற்படுத்தப்பட்டான்.

"தனது காலின் கீழ் மிதித்தது" என்பதன் பொருள் யூதாயிசத்தை கீழடக்கிப்போட்டதை காட்டுகிறதாய் இருக்கிறது. அந்தியோகஸ் விருத்தசேதனத்திற்கு தடைவிதித்தான், மற்றும் யூதப்பண்டிகள், ஓய்வு நாட்கள் போன்றவற்றிற்கு தடை விதித்தான். புறஜாதிய தேவர்களை வணங்க் அவனது ஆதிக்கத்தில் இருக்கிற அனைத்து யூதர்களும் வற்புறுத்தப்பட்டனர், பாக்காஸூம் வற்புறுத்தப்பட்டனர்.

வசனம் 11ல் "**அது சேனையினுடைய அதிபதி பரியந்தமும் தன்னை உயர்த்தி"** எனக் கூறப்பட்டுள்ளது. இது தன்னைப்போன்ற ஒரு சிலையை உருவாக்கி மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைத்ததை காட்டுகிறது மற்றும் சேனையின் அதிபதி இயேசுக் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. அன்றாடக பலி என்பது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது, அந்தியோகஸினால் தேவாலயம் பரிசுத்த குலைச்சலாக்குவது குறித்தும் இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது "**அவருடைய பரிசுத்த ஸ்தானம் தள்ளுண்டது"** என்ற சொற்றொடர் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

வசனம் 12ல் சேனை என்பது செலுக்கஸின் இராணுவத்தை காட்டுகிறது. சீயோன் என்பது தேவாலயத்தின் ஒரு பாகமாய் இருந்தது, மற்றும் மற்ற பகுதி அரணிப்பான பள்ளத்தாக்காய் இருந்தது. பள்ளத்தாக்கில் தொடர்ந்து யுத்தம் நடந்து கொண்டே இருந்தது.

"பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடுங்கூடச் சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது" இது யூதர்களின் விசுவாசத் துரோகத்துடன் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. இது அநேக பிரச்சனைகளுக்கு காரணமாய் அமைந்தது. கிரேக்கர்கள் சில கிரேக்க மார்க்கத்தில் அமைந்த யூதர்களின் ஆதரவை பெற்றனர். இது அந்திக்கிறிஸ்து அவனது யூத கள்ள தீர்க்கதரிசியின் ஆதரவு மதியீன இஸ்ரவேலர்களினால் பின்னான காலங்களில் கிடைத்தது போல, அவர்களது அழிவுக்கு ஏதுவாக கிடைக்கக் கூடியதாய் இருக்கும். சில விசுவாசிகளும் கூட சத்தியத்திலிருந்து இடறி கிரேக்க புறஜாதிகளுடன் இணைந்து கொள்வார்கள்.

சிறிய கொம்பானது, "சத்தியத்தை தரையிலே தள்ளி மிதித்தது" இது லேவியரின் பலி முறைகள் தடை செய்யப்படுவதன் மூலம் நிறைவேறுகிறாய் இருக்கிறது. **அது கிரியை செய்து அனுகூலமடைந்தது.** இது அதன் ஆரம்பவெற்றியைக் காட்டுகிறதாய் இருக்கிறது இது யூதரைக் கீழ்ப்படுத்தும் கொள்கையை ஏற்படுத்துவதைக் காட்டுகிறது.

வசனம் 13 மற்றும் 14ல் "பரிசுத்தவானாகிய ஒருவன் பேசக்கேட்டேன். அப்பொழுது வேறொரு பரிசுத்தவான் பேசினவரை நோக்கி: அன்றாட பலியைக் குறித்தும் பாழ்க்கடிப்பை உண்டாக்கும் பாதகத்தைக் குறித்தும் பரிசுத்த ஸ்தலமும் சேனையும் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதைக் குறித்தும் உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும் என்று கேட்டான். 14 அவன் என்னை நோக்கி: இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும். பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்றான். " கூறப்படுகிறது.

பரிசுத்தவான்கள் அல்லது இதற்கென வேறுபிரிக்கப்பட்ட தூதர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதைப்பார்க்கிறோம். அவர்கள் மிதிபட ஒப்புக்கொடுக்கப்படுவதை குறித்து உண்டான தரிசனம் எதுவரைக்கும் இருக்கும்? எனக்கேட்டனர், அதற்கு மறுமொழியாக 2300 நாட்கள் என பதில் கூறப்பட்டது 6வருடங்கள், 3மாதங்கள் 20நாட்கள். பரிசுத்த ஸ்தலம் 164 கி மு டிசம்பர் மாதத்தில் சுத்திகரிக்கப்பட்டது, ஆகையால் அந்த சமயமானது கிமு 170 ல் பிரச்சனை ஆரம்பமான காலத்திற்கு எடுத்துச் செல்கிறதாய் இருக்கிறது. தேவாலயம் மூன்றரை ஆண்டுகாலங்கள் பரிசுத்த குலைச்சலாக்கப்பட்டது ஆனால் உபத்திரவம் 6 ஆண்டுகளுக்கு முன்னதாகவே துவங்கி விட்டது.

கிரேக்க மார்க்கத்தில் அமைந்த யூதன் மெனெலஸ் பிரதாண ஆசாரியனாக விருப்பப்பட்ட அந்த வருடத்தில், அவன் கர்த்தரை சேவிக்க மனதற்றவனாய் இருந்தான். அவன் சிரியா வரை சென்று ஆலயத்தில் திருடப்பட்டவைகளை சிரிய ஆளுநருக்கு கொடுத்தான். இதை அவன் அந்தியோகஸினால் பிரதாண ஆசாரியனாக்கப்பட்டதன் விளவாகச் செய்தான். அவன் கிரேக்க மார்க்கத்தில் அமைந்தவனாய் இருந்தான் முடிவாக அவன் தேவாலயத்தை சிரியருக்கு ஒப்புக்கொடுத்து அதன் அழிவுக்கு வழிவகுத்தான். அவன் அவனது தேசத்திற்கும் தேவனுக்கு துரோகியானான், அவன் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியானான். அந்தியோகஸிடமிருந்து ஒரு தளபதி கடந்து வந்து 2300 நாட்களுக்கு முன்னதாய் பணத்தைப் பெற்றுக்கொண்டான், இது தேவாலயம் சுத்திகரிப்புக்கு முன்னாக நிகழ்ந்தது. [இன்னும் கூடுதல் விபரங்களுக்கு

ஜோஸிபஸின் "யூதர்களின் பழங்காலத்தவைகள்" புத்தகம் 12 அதிகாரம் 5ல் காண்க]

கைக்கொள்ளுதல்:

தானியேல் தனது கிழக்கத்திய கார்டினல் டைரக்ஷன்ஸ் களை விட்டுவிட்டது தீர்க்கதரிசனமானது முற்றிலும் துள்ளியமாய் நிறைவேறியுள்ளதை இப்புத்தகம் வேதாகமம் முழுமையிலும் சுட்டிக்காட்டுகிறதாய் உள்ளது.

தேவன் இவ்வுலகை அழிவினின்று பாதுகாத்து, பிசாசுகளின் ஆதிக்கம் மிகுதியாய் உள்ள பகுதிகளிலில், சாத்தானால் ஆட்கொள்ளப்பட்டவர்களிடமிருந்து விடுவித்து பாதுகாக்கிறவராய் இருக்கிறார்.

தேவனுடய குணாதிசயமானது உபத்திரவத்தின்கீழ் அடிமைப்படுத்தப்படும்போது அல்லது நெருக்கப்படும்போது நாம் அதை எதிர்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

கிளர்ச்சி/புரட்சி தேவனால் ஒருபொதும் ஏற்றுக்கொள்ளப்படாது, சுதந்தரத்திற்கான யுத்தம் ஏற்றுக்கொள்ளப்படுவதாய் இருக்கிறது.

சரித்திரம் இடம் பெறும் முன்னரே தேவன் அறிவார் என்பதை நாம் காண இயலும்.

வேதாகமத்தைப் புனித நிலையற்ற சரித்திரத்துடன் ஒப்பிடுவது வேதாமத்தின் முற்றிலுமான துள்ளியத்தன்மையை வகையறுக்கிறதாய் இருக்கிறது.

DOCTRINES உபதேசங்கள்:

ALEXANDER – ONE WORLDISM அலெக்ஸாண்டர் - ஓருலகத்துவம்

REVOLUTION புரட்சி

ABOMINATION OF DESOLATION பாழாக்கும் அருவருப்பு.

பகுதி 38 - தரிசனத்தின் அர்த்தம்   தானியேல் 8:15-27.

15 தானியேலாகிய நான் இந்த தரிசனத்தைக்கண்டு, அதின் பொருளை அறிய வகைதேடுகையில், இதோ மனுஷசாயலான ஒருவன் எனக்கு எதிரே நின்றான்.16 அன்றியும் காபிரியேலே, இவனுக்குத் தரிசனத்தை விளங்கப்பண்ணென்று ஊலாயின் மத்தியிலே கூப்பிட்டுச் சொல்லுகிற ஒரு மனுஷ சத்தத்தையும் கேட்டேன். 17 அப்பொழுது அவன் நான் நின்ற இடத்துக்கு வந்தான். அவன் வருகையில் நான் திடுக்கிட்டு முகங்குப்புற விழுந்தேன். அவன் என்னை நோக்கி: மனுபுத்திரனே கவனி. இந்த தரிசனம் முடிவு காலத்துக்கு அடுத்தது என்றான். 18 அவன் என்னோடே பேசுகையில், நான் தரையிலே முகங்குப்புறக் கிடந்து அயர்ந்த நித்திரை கொண்டேன், அவனோ என்னைத் தொட்டு நான் காலூன்றி நிற்கும்படி செய்து: 19 இதோ கோபத்தின் முடிவு காலத்திலே சம்பவிப்பதை உனக்கு தெரிவிப்பேன். இது குறிக்கப்பட்ட முடிவுகாலத்துக்கு அடுத்தது. 20 நீ கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெர்சியா தேசங்களின் இராஜாக்கள். 21 ரோமமுள்ள அந்த வெள்ளாட்டுக்கடா கிரேக்கு தேசத்தின் இராஜா. அதின் கண்களுக்கு நடுவே இருந்த பெரிய கொம்பு அதின் முதலாம் இராஜா. 22 அது முறிந்துபோனபின்பு அதற்குப் பதிலாக நாலு கொம்புகள் எழும்பினது என்னவென்றால், அந்த ஜாதியிலே நாலு இராஜ்ஜியங்கள் எழும்பும். ஆனாலும் அவனுக்கு இருந்த வல்லமை அவைகளுக்கு இராது. 23 அவர்களுடைய இராஜ்ஜியபாரத்தின் கடைசிக் காலத்திலோவென்றால், பாதகருடைய பாதகம் நிறைவேறும்போது, மூர்க்க முகமும் சூதான பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு இராஜா எழும்புவான். 24 அவனுடைய வல்லமை பெருகும். ஆனாலும் அவனுடைய சுயபலத்தினால் அல்ல. அவன் அதிசயமான விதமாக அழிம்புண்டாக்கி, அநுகூலம் பெற்றுக் கிரியை செய்து, பலவான்களை பரிசுத்த ஜனங்களையும் அழிப்பான். 25 அவன் தன்னை உயர்த்தினால், வஞ்சகத்தை கைகூடி வரப்பண்ணி, தன் இருதயத்தில் பெருமை கொண்டு நிர்விசாரத்தோடிருக்கிற அநேகரை அழித்து, அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவருக்கு விரோதமாய் எழும்புவான். ஆனாலும் அவன் கையினாலல்ல வேறு விதமாய் முறித்துப்போடப்படுவான். 26 சொல்லப்பட்ட இராப்பகல்களின் தரிசனம் சத்தியமாயிருக்கிறது. ஆதலால் இந்தத் தரிசனத்தை நீ மறைத்து வை. அதற்கு இன்னும் அநேக நாள் செல்லும் என்றான். 27 தானியேலாகிய நான் சோர்வடைந்து, சில நாள் வியாதிப்பட்டிருந்தேன். பின்பு நான் எழுந்திருந்து,

இராஜாவின்வேலையைச் செய்து, அந்த தரிசனத்தினால் திகைத்துக் கொண்டிருந்தேன். ஒருவரும் அதை அறிய வில்லை.

பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

வசனங்கள் 15 மற்றும் 16ல் ஒரு நபரை தானியேல் மனிதரைவிட மேலானவராய் காண்கிறார். அந்த நபர் தேவதூதர்களுள் மேலான அந்தஸ்தில் உள்ள காபிரியேல் ஆகும். யுகா யுகமாய் அந்த தேவ தூதனே யூதமக்களுக்கு போதனை செய்து வருவது. மற்றொரு மனிதனின் சத்தம் தண்ணீர்கள் மேலிருந்து காபிரியேலை அழைத்து போதித்து தானியேலை தரிசனத்தை புரிந்து கொள்ளச் செய்கிறதாய் இருந்தது. அந்த மனிதனின் சத்தம் ஒரு தேவ மனிதனி சத்தமாய் இருந்தது அது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சத்தமாய் இருந்தது. தானியேலுக்கு மகா சிறப்பான போதகர் அளிக்கப்படுகிறது.

வசனங்கள் 17 மற்றும் 18ல் தானியேல் மறு உத்தரம் செய்கிறார். அவன் மிகவும் பயந்து காபிரியேல் தூதனின் பாதத்தில் விழுந்து எதிர்கால காரியங்களை குறித்து அறிந்து கொள்கிறார். தானியேல் விழுந்தபோது மயக்கமுற்ற நிலையில்/தூங்குகிற நிலையில் விழுந்து கிடந்தார் ஆனால் காபிரியேல் தூதன் தட்டியெழுப்பி அவர் எழுந்திருக்க உதவி செய்கிறவராய் இருக்கிறார். தரிசனமானது திணரச் செய்யுமளவிற்கு மகிமை பொருந்தினதாய் இருந்தது, அத்ன் பயங்கரம் எதிராளியின் தீமைகளால் நிறைந்து காணப்படுகிறதாய் இருந்தது, மற்றும் தேவனது முழுமையான விடுத்லையும் பிற்காலத்திலே யோவான் கண்ட தரிசன்த்துக்கு ஒப்பானதாகவும் காணப்பட்டது என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். தானியேல் இப்பொழுது முழுவது விழிப்புடன் கவனமாய் இருந்து, இந்த தேவ தூதன் போதிப்பவைகளை கேட்க ஆயத்தமாய் இருந்தார்.

வசனம் 19ல் தேவதூதன் அவருக்கு போதிக்க இருப்பதாகக் கூறுகிறார். "இறுதியான கோபாக்கினையானது" பெரிதாய் இருக்கிறது, அது உபத்திரவ காலத்தைப் பற்றியது. இறுதி காலத்தில் தேவனின் "கோபாக்கினையானது" கலகம் செய்யும் மனுக்குலத்திற்கு எதிராய் தெய்வத்துவத்துக்கு விரோதான செயல்களுக்கு நிகழ்வதாய் இருக்கிறது. தரிசனத்திற்கான முழு விளக்கமும் இப்பொழுது அளிக்கப்பட்டாயிற்று. இரு கொம்புள்ள ஆட்டுக்கடா மேதியா பெரிசியா என இனங்கண்டுகொள்ளப்பட்டுள்ளது. மற்றும் கடினமான வெள்ளாட்டுக்கடா கிரேக்க தேசத்தின் இராஜாவாய் இருக்கிறான். பெரிய

கொம்பானது முதல் கிரேக்க அரசனான அலெஸாண்டரைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

காபிரியேல் தொடர்ந்து பேசுகிறான், பெரிய கொம்பானது முறிக்கப்பட்ட பின்னர், இது அலெக்ஸாண்டரின் அகால மரணத்தை (கொலை செய்யப்பட்டதை) குறிக்கிறது. அவனது ஸ்தானத்தில் நான்கு தளபதிகள் பின்தொடர்கிறவர்களாய் இருக்கின்றனர். இந்த தளபதிகளும் கிரேக்க சாம்ராஜ்ஜியத்தை பொறுப்பெடுக்கிறவர்களாகின்றனர். காபிரியேல் இந்த இராஜ்ஜியங்கள் "தனது ஆதிக்கத்திற்குள்" இல்லை என குறிப்பிடுகிறவராய் இருக்கிறார். தளபதிகள் சரீரப்பிரகாரமாய் அலெக்ஸாண்டருக்கு சொந்தமாய் இல்லை. அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பின் அவனது தாயார், அவனது மனைவி மற்றும் அவனது குமாரன் போன்றவர்கள் அவர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் கொலை செய்யப்பட்டனர்.

தேவதூதன் தொடர்ந்து காலத்தின் வாசல்களை நோக்கிக் கொண்டிருந்து, அந்தியோகஸ் சாத்தானின் கடைசி அரசனான அந்தியோகஸுக்கு ஒப்பாக செயல்படுவதை காண்கிறவனாய் இருக்கிறான். யூதர்களை அழிக்க சாத்தான் பலமுறை திட்டங்கள் வகுத்தும், அவன் தெரிந்து கொள்ளும் மனிதர் ஒவ்வொரு முறையும் தங்களது பலத்தை/ வல்லமையை பிரயோகிக்கிறவர்களாய் இருந்தனர். இம்மனிதர் ஒவ்வொருவரும் மிகவும் வல்லமை மிக்கவர்களாய் இருந்தனர் ஆனால் அவர்களது வல்லமை அவர்களது சொந்த வல்லமையாய் இருக்க வில்லை. ஒவ்வொருவரும் சாத்தானால் ஆட்கொள்ளப்பட்டவர்களாய் இருந்தனர். இறுதியான அந்திக்கிறிஸ்து 2 தெசலோனிக்கேயர் 2:7-12ல் காண்கிற வண்ணம் அநேக வல்லமையான அற்புதங்களை செய்கிறவனாய் இருப்பான். உலகத்தின் இராஜ்ஜியங்களை "இவ்வுலகத்தின் அதிபதியிடமிருந்து" சாத்தானிடமிருந்து அவன் ஏற்றுக்கொண்டு ஆளுகை செய்கிறவனாய் இருப்பான். யோவான் 12:31, 14:30, 16:11.

வன்முறையான வல்லமையினால் ஆளுகை செய்கிறவனாய் இருந்து, தீமையான கொடுமையான அழிவை விசுவாசிகளுக்கு அளிக்கிறவனாய் இருப்பான். சரியாய் இருப்பவைகளை நாசம் பண்ணுவதையும் காண்கிறோம். சில காலத்திற்கு மதசம்பந்தமான காரியங்களில் "சமாதாண கொள்கையுடைவனாய்" இருப்பான், ஆனால் வேத வசனத்தை சரிவர அறியாதவர்களுக்கு வஞ்சகமாய் அமைந்து அவர்களை ஏமாற்றுவதற்கு ஓர் உபகரணமாய் அமையும். சரியான விசுவாசிகள் அவனுக்கு பெரிதளவில் பிரச்சனையாய் இருப்பார்கள், ஆகையால் மதத்தின் கொள்கைகளை அவன் உடைத்துப்போட்டு

"பிசாசின் கொள்கைகளை நிலைப்படுத்தி" மதத்தின் பெயரால் அநேகரை கொலை செய்வான். வெளிப்படுத்தல் 6:1-8.

அவனது ஆதிக்க காலத்தில் சாத்தானின்கொள்கையானது பிரபலமாய்க் காணப்படும் எல்லா மதங்களையும் அழித்து, ஓருலக மதம் உருவாகி -- சாத்தானை வழி படுவது உண்டாகும் -- இது திரும்ப கட்டப்பட இருக்கிற எருசலேம் தேவாலயத்தை மையமாய் கொண்டு செயல்படும். இறுதியாக கர்த்தராகிய இயேசுவை நேரிடையாக எதிர்ப்பது நேரிடும், அவன் கர்த்தரின் இரண்டாம் வருகையை தடை செய்ய முயலுவான், அவம் முற்றிலும் அதில் தோல்வியை காண்பான். அவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் முழுவதும் அழிக்கப்படுவான். [வெளிப்படுத்தல் 19:19 - 21].

வசனம் 26 மற்றும் 27ல் காபிரியேல் தரிசனத்தை தானியேலுக்கு உறுதிப்படுத்துகிறவனாய் இருக்கிறான். அது தேவனிடமிருந்து கடந்து வந்ததாய் இருந்தது. அது நற்செய்தியாய் அல்ல எதிர்காலத்தில் விசுவாசிகளின் சந்ததியானது அறிந்துகொள்ள வேண்டிய சத்தியமாய் இருந்தது. தானியேல் எதிர்காலத்தில் நிகழ்வதை முன்கூட்டியே அறிகிறவராய் இருந்தார். அதை அவர் எழுதி பத்திரப்படுத்தினார். அவர் சரீர ரீதியில் பாதிக்கப்பட்டார், அதினால் சில காலம் வியாதிபட்டார். இந்த தரிசனம் பகுக்கப்பட்ட வேதவசனங்களின் ஒரு பாகமாய் அமைந்தது.

அவர் இராஜாவின் வேலையை தொடர்ந்து செய்கிறவராய் இருந்தார். எபேசியர் 6:7, கொலோசெயர் 3:23. அவருக்கு பிரம்மாண்டமான தகவல்கள் தேவனிடமிருந்து அறிவிக்கப்படுகிறதாய் இருந்தது, ஆனால் அவைகளை தனது நாட்களில் அறிவிக்காது இருந்தார். அவருடன் இருந்த சகாக்கள் ஒருவரும் இதை அறிய வில்லை.. அவற்றை அறிந்து கொள்ள விருப்பமும் படவில்லை. தானியேல் கண்ட தரிசனம் அவரின் உண்மையை விளங்கப்பண்ணுகிறதாய் இருக்கிறது, அவருடைய கீழ்ப்படிதல் இவைகளை பதிவு செய்து வைத்தது மூலம் தெளிவாகிறதாய் இருக்கிற்து. -- இக்காரியங்கள் அவர் முழுமையாய் புரிந்து கொள்ள இயலாதவைகளாய் இருந்தன, அவைகள் அவரை மிகவும் ஆழமாய் பாதிக்கக்கூடியவைகளாய் இருந்தன.

கைக்கொள்ளுதல்:

தேவ தூதர்கள் தோன்றும்போது பாலுறவு அற்றவர்களாய் தோன்றுகிறார்கள். அவர்கள் காணக்கூடாத வைகயில் ஒளியினால் சூழப்பட்டவர்களாய் இருக்கின்றனர். மிருகங்கள், பாலுறவு சார்ந்த நிலையில் இருக்கின்றன, கவர்ச்சி மிக்க பெண்கள் தூதர்களாய்

தோன்றுவார்கள் எனில் அவர்கள் எப்பொழுதும் பிசாசுகளாய் இருக்கின்றனர். எந்த ஒரு காரியமும் ஆவிக்குரிய நிலையில் விநோதமான, ஆவிக்குரிய, அல்லது பாலுறவு சம்மந்தி நிலையில் தோன்றுவார்களெனில் அவர்கள் எதிராளியினால் தோன்றுகிறவர்களாய் இருக்கின்றனர்.

தேவ வசனத்திற்கு உண்மையான அர்த்தத்தை அறிய விரும்புவோருக்கு தேவன் உதவு கிறவராய் இருக்கிறார்.

அந்தியோகஸ் IV க்கும் உபத்திரவ கால அந்திக்கிறிஸ்துவுக்கும் மிக நெருக்கமான பொருத்தம் காணப்படுகிறதாய் இருக்கிறது, இரு கால கட்டத்திலும் இஸ்ரவேலானது தனது வாழ்விற்காய் மற்றும் விடுதலைக்காய் போராட வேண்டியதாய் இருக்கிறது. இரு காலக்கட்டங்களிலும் அவர்கள் சொந்த தலைமைத்துவம் கலங்கப்பட்டு மேற்கு ஐரோப்பிய புறஜாதியாருக்கு யூதர்கள் அந்தியோகஸுக்கும் பின்னர் அந்திக்கிறிஸ்துவுக்கும் விற்கப்பட்டு போகிறவர்களாய் இருக்கின்றனர்.

சில வேளைகளில் ஒருவர் வேதாகமத்தில் காட்டப்பட்டுள்ள எதிர்காலத்தை குறித்து படிக்கும்போது, அவர்கள் ஜனங்களால் மனமடிவுக்குள்ளாக்க நேரிடும், ஜனங்கள் கேட்கிறார்களோ இல்லையோ, நாம் சத்தியத்தை பிரசங்கிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். எசேக்கியேல் 2:5-7, 3:11.

நாம் அனைவரும் தேவனது திட்டத்தில் ஒரு பகுதியில் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நீங்கள் தேவனது திட்டத்தில் அமைந்து செயல்படுவதை ஒருவரும் காணாதிருக்கக்கூடும், ஆனால் நீங்கள் ஒரு நல்ல கூட்டத்தில் இருக்கிறீர்கள் என மெய்ப்படுகிறதாய் இருக்கிறது. தானியேலுக்கும் இதைப்போன்ற பிரச்சனைகளை சந்திக்க நேரிட்டது.

DOCTRINES உபதேசங்கள்:

ANGELS தேவ தூதர்கள்

DEMONS பிசாசுகள்.

NOTES

தானியேல் அதிகாரம் 9.

9 அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேல் 9 அதிகாரத்தை இரு பிரிவுகளாய் பிரிக்கலாம்.

தானியேலின் ஜெபம். வசனங்கள் 1-21.

எழுபது வாரங்களின் தீர்க்கதரிசனம் வசனங்கள் 22-27.

முன்னுரை:

இந்த வேதபகுதியை பார்க்கும்போது ஏழு சந்தர்ப்பங்கள் யுகங்கள்/காலங்களை அறிமுகப்படுத்த முக்கியமானவைகளாய் கருதப்படுகின்றன.

கி மு 721ல் வடக்கு இராஜ்ஜியம் அசீரியரின் கீழ் சிதறடிக்கப்பட்டுப் போனது, அதேசமயம் தெற்கு இராஜ்ஜ்யம் ஆளுகைக்கு உட்பட்டு, அழிவுக்கு உட்பட்டு, நாடுகடத்தப்பட்டு, இறுதியாய் அவர்களது இனங்களுடன் கலந்து போக நேரிட்டது.

கிமு 586 ல் தெற்கு இராஜ்ஜியம் கல்தேயரின் நெபுகாத்நேச்சாரால் சிறையிருப்புக்குள் தடந்து சென்றது.

கிமு 516ல் இரண்டாம் தேவாலயமானது கட்டி முடிக்கப்பெற்று, யூதர்கள் நாடுதிரும்பி ஆவிக்குரிய வல்லமை மற்றும் அதிகாரத்தை பெற்றுக்கொண்டனர், இது யூதருக்கு பொற்காலமாய் கிமு 323 வரை அறியப்படுகிறது.

கிமு 312 -- 164 வரை செலூக்கியர்கள் அரசாண்டு, அதிகாரம் 8ல் கண்டபடியும் 11ம் அதிகாரத்தில் கண்டபடியும் ஆளுகை செய்தனர்.

கிமு 164 முதல் கிமு 63வரை யூதேயா ஹஸ்மோனெயன் அரசாளுகையில் சுதந்தரமாய் இருந்தனர்.

கிமு 63 முதல் கி பி 70 வரை யூதர்கள் ரோமரின் ஆளுகைக்குள் இருந்து, பின்னர் பாம்பே எருசலேமை கைப்பற்றி, எருசலேமை, தேவாலயத்தை தளபதியானவனும் எதிர்கால மன்னனுமான தீத்து முற்றிலும் அழித்துப்போட்டான். இவன் ரோமின் "இளவரசனாய்" இருந்தான், பட்டணமானது விழுகையில் அவனது தந்தையாகிய வெஸ்பாஸியன் மன்னராய் இருந்தான். ,

கி பி 70லிருந்து யூதர்கள் சிதறடிக்கப்பட்டு, அவர்களது சொந்த தேசத்திலிருந்து அகற்றப்பட்டனர்.

1914ல் -- முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பமாகி, அநேக அடையாளங்களில் முதலாவதாக நிகழ்ந்து முடிவு நோக்கி காலக்கடிகாரம் ஓடத் துவங்கியது.

1948ல் இஸ்ரவேல் ஒரு தேசமாய் திரும்ப ஸ்தாபிக்கப்பட்டது, இது சரித்திரத்தில் முதன் முறையாக 1900 ஆண்டுகளுக்கு பின்னர் ஜனங்கள் திரும்ப ஒரு இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதாய் அமைந்தது.

1967ல் இஸ்ரவேல் எருசலேம் முழுமையும் மறுபடியும் கைப்பற்றியது, 1980ல் இது இஸ்ரவேலின் தலை நகரமாய் உறுதி செய்யப்பட்டது. . UN இதை அங்கீகரிக்கவில்லை, அவர்களது ஆக்கிரமிப்பானது இன்னும் புறஜாதிய தேசங்களால் "மிதியுண்டு" கிடக்கிறது. UN சட்டதிட்டங்களுக்கு இஸ்ரவேல் அடிபணிந்து சென்றாலும், அவர்கள் அதற்கு எதிர்மறையாகவும் அதற்கு தீமையையுமே இழைத்து வருகின்றனர். புறஜாதியர் எப்பொழுதும் இஸ்ரவேலுக்கு எதிர்மறையாக செயல்பட்டு வருகிறவர்களாய் இருந்து வருகின்றனர்.

லேவியராகமம் 26ல் யூதர்களின் சிட்சையானது ஐந்து நிலைகளில் கூறப்பட்டுள்ளது, நான்காவது நிலை புறஜாதிய ஆதிக்கத்தால் ஆளுகை செய்யப்படுவது, ஐந்தாவது தேசத்திலிருந்து அகற்றப்படுவது.

இஸ்ரவேலரின் கீழ்ப்படியாமைக்கு ஐந்து நிலைகளில் தேசிய தண்டனையானது யூதர்களுக்கு அளிக்கப்படுகிறதாய் இருந்தது.

முதல் நிலை -- லேவியராகமம் 26:14-17 -- சரீரப்பிரகாரமாகவும் பொருளாதார ரீதியிலும் யூதர்களுக்கு அளிக்கப்பட்ட சிட்சை.

இரண்டாம் நிலை -- லேவியராகமம் 26:18-20 -- யூதர்களின் அதிகரிக்கும் சிட்சை.

மூன்றாம் நிலை -- லேவியராகமம் 26:21-22 -- தொடர்ந்து அதிகரிக்கும் யூதர்களின் சிட்சை.

நான்காம் நிலை -- லேவியராகமம் 26:23-26 -- புறதேச வல்லமை ஆட்கொள்ளுதல்.

ஐந்தாம் நிலை -- லேவியராகமம் 26:27-39 -- தேசத்திலிருந்து சிதறடிக்கப்படல்.

]SEVEN, SEVENTY AND SEVENTY TIMES SEVEN] ஏழு எழுபது மற்றும் எழுபது முறைகள் ஏழுதரம்:

ஒவ்வொரு ஏழாம் வருஷத்திலும் யூதர்கள் சாபத் வருடத்தை ஆசரிக்க கட்டளை பெற்றிருந்தனர். 490 ஆண்டுகாலம் இஸ்ரவேல் சாம்ராஜ்ஜியம் சவுலினால் ஆரம்பமாகி கிமு 606 அடிமைத் தன வாழ்வு வரை யூதர்கள் ஏழாம் வருடத்தில் ஓய்ந்து இருக்கத் தவறினர், நிலத்துக்கு ஓயுவு கொடுக்கத் தவறினர்.

எழுபது வருடங்கள் -- அடிமைத்தனம்.

இதினிமித்தம் தேவன் 70 இழந்து போன சாபத் வருடங்களை கி மு 606 முதல் 536 வரை சரிகட்ட நேர்ந்தது. இந்த ஆண்டுகள் அடிமைத்தன ஆண்டுகளாய் கருதப்படுகின்றன.

கி மு 606 கல்தேயரின் அடிமைத்தனத்திற்குள் பாபிலோனுக்கு தானியேல் சிறைபிடிக்கப்பட்டு போன ஆண்டு துவங்குவதை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது.

கி மு 536ல் அடிமைத்தன வாழ்வானது முடிவுக்கு வந்து, கோரேஸின் தாக்கீது மூலம் யூதர்கள் எருசலேம் திரும்பி தேவாலயத்தை திரும்ப கட்டுவது ஆரம்பமானது.

DESOLATIONS – SEVENTY YEARS [பாழ்க்கடிக்கப்பட்ட -- எழுபது ஆண்டுகள்]

70 நீண்ட ஆண்டுகாலங்கள் பாழ்க்கடிப்பானது இருந்தது. அரசியல் ரீதியான முதல் சிறையிருப்பு கிமு 605, முதல் நாடு திரும்புதல் கிமு 535.

இரண்டாம் கட்டமாய் எருசலேம் நெபுகாத்நேச்சாரல் சிறைபிடிக்கப்பட்டது தேபத் மாதம் 10ம் தேதி கிமு 589ல் ஆகும்.

தேவாலயம் அஸ்திபாரமிடப்பட்ட 9ம் மாதம் [சிஸ்லே] 24ம் தேதி கி மு 520ல் இது முடிவுக்கு வந்ததாய் கருதப்படுகிறது.

இதைக் கணக்கிடும்போது இக்காலக்கட்டம் ஆச்சரியப்படக்கூடியவகையில் சரியாக 25,200 நாட்கள் அதாவது சந்திர காலகணக்கின்படி 70 வேதாகம வருடங்கள் எனக்கணக்கிடப்படுகிறது.

DEDICATION OF THE TEMPLES – SEVENTY TIMES SEVEN தேவாலாயம் பிரதிஷ்டை செய்யப்படல் -- ஏழு எழுபது தடவை:

கி மு 515ல் பஸ்கா பண்டிகையின் போது, இரண்டாவது தேவாலயமானது பிரதிஷ்டை செய்யப்பட்டது. எஸ்றா 6:15-22.

பிரதிஷ்டையானது சாலமோன் தேவாலயப் பிரதிஷ்டையிலிருந்து 490 (70x7) ஆண்டுகளுக்குப் பின் கி மு 1005ற்கு பின் நிகழ்வதாய் இருந்தது.
[This dedication was 490 (70x7) years after the dedication of Solomon’s Temple in 1005 BC.]

THE SEVENTY WEEKS OF YEARS IN DANIEL 9 தானியேல் 9ம் அதிகாரத்தில் எழுபது வாரங்களின் ஆண்டுகள்:

அர்தெஷெஸ்டா லாங்கிமெனஸ் கிமு 445ல் உரைத்த தாக்கீதிற்கு முன் தேவாலய பிரதிஷ்டையிலிருந்து 70 ஆண்டுகள் துவங்கி யூத யுகத்தில் 490 ஆண்டுகளாய் கணக்கிடப்படுகிறது.

வசனங்கள் 24-27ல் கூறப்பட்டுள்ள காலம் விபரமாய் கற்றுக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது, இக்கால கட்டம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையுடன் நிறைவு பெறுகிறதாயிருக்கிறது. இன்னும் கடைசி ஏழு ஆண்டு காலங்கள் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது.

It was also 70 years from the temple dedication before the edict of Atarxerxes Longimanus in 445 BC, which commenced a period of 490 years for the rest of the Jewish Age.

THE PERIOD OF THEOCRACY – SEVENTY TIMES SEVEN YEARS தெய்வீக ஆளுகையின் காலம் -- ஏழு எழுபது வருடங்கள்:

யோசுவா தலைமையில் கானானுக்குள் திரும்ப பிரவேசித்தது முதல் சவுல் இஸ்ரவேல் சாம்ராஜ்ஜியத்தை துவங்கினதற்கும் இடைப்பட்ட காலம் 490 ஆண்டுகள் ஆகும்.

பகுதி 39 - தானியேலின் ஜெபம். தானியேல் 9:1-21.

1 கல்தேயருடைய இராஜ்ஜியத்தின்மேல் இராஜாவாக்கப்பட்ட மேதிய குலத்தானாகிய அகாஸ்வேருவின் புத்திரனான தரியு இராஜ்ஜியபாரம்பண்ணுகிற முதலாம் வருஷத்திலே, 2
தானியேலாகிய நான் எருசலேமின் பாழ்க்கடிப்புகள் நிறைவறித்தீர எழுபது வருடம் செல்லுமென்று கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசியோடே சொல்லிய வருஷங்களின் தொகையைப் புஸ்தகங்களால் அறிந்துகொண்டேன். 3 நான் உபவாசம்பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி, 4
என் தேவனாகிய கர்த்தரை நோக்கி ஜெபம்பண்ணி, பாவ அறிக்கை செய்து: ஆ ஆண்டவரே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உடன்படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே, 5 நாங்கள் பாவஞ்செய்து,
அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம். 6 உமது நாமத்தினாலே எங்கள் இராக்களோடும்
எங்கள் பிரபுக்களோடும் எங்கள் பிதாக்களோடும் தேசத்தினுடைய சகல ஜனங்களோடும் பேசின தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்குச் செவிகொடாமற்போனோம். 7 ஆண்டவரே, நீதி
உமக்கே உரியது. உமக்கு விரோதமாகச் செய்த துரோகத்தினிமித்தம் உம்மாலே சமீபமும் தூரமுமான எல்லா தேசங்களிலும் துரத்தப்பட்டிருக்கிற யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும் சகல இஸ்ரவேலருமாகிய நாங்கள் இந்நாளில் இருக்கிறபடியே வெட்கம் எங்களுக்கே உரியது. 8 ஆண்டவரே, உமக்கு விரோதமாகப்
பாவஞ்செய்தபடியால், நாங்களும் எங்கள் இராஜாக்களும் எங்கள் பிரபுக்களும் எங்கள் பிதாக்களும் வெட்கத்துக்குரியவர்களானோம். 9
அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம்பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு எங்களுக்கு முன்பாக வைத்த அவருடைய நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம். 10 ஆனாலும்

எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும்
மன்னிப்புகளும் உண்டு. 11 இஸ்ரவேலர் எல்லாரும் உமது
நியாயப்பிரமாணத்தை மீறி, உமது சத்தத்துக்குச் செவிகொடாமல்
விலகிப்போனார்கள். அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோம்.
ஆகையால் தேவனுடைய தாசனாகிய மோசேயின்
நியாயப்பிரமாணப் புத்தகத்தில் எழுதியிருக்கிற சாபமும்
ஆணையாக்கினையும் எங்கள் மேல் சொரியப்பட்டன. 12
எருசலேமில் சம்பவித்ததுபோல வானத்தின் கீழ் எங்கும்
சம்பவியாதிருக்கிற பெரிய தீங்கை எங்கள்மேல்
வரப்பண்ணினதினால், அவர் எங்களுக்கும் எங்களை நியாயந்தீர்த்த
நியாதிபதிகளுக்கும் விரோதமாகச் சொல்லியிருந்த தம்முடைய
வார்த்தைகளை நிறைவேற்றினார். 13 மோசேயின்
நியாயப்பிரமாணப்புத்தகத்தில் எழுதியிருக்கிறபடியே இந்த
தீங்கெல்லாம் எங்கள்மேல் வந்தது. ஆனாலும் நாங்கள் எங்கள்
அக்கிரமங்களை விட்டுத் திரும்புகிறதற்கும் உம்முடைய
சத்தியத்தைக் கவனிக்கிறதற்கும் எங்கள் தேவனாகிய கர்த்தரின்
முகத்தை நோக்கிக் கெஞ்சினதில்லை. 14 ஆதலால் கர்த்தர்
கவனமாயிருந்து அந்தத் தீங்கை எங்கள் மேல் வரப்பண்ணினார்,
எங்கள் தேவனாகிய கர்த்தர் தாம் செய்து வருகிற தம்முடைய
கிரியைகளில் எல்லாம் நீதியுள்ளவர்; நாங்களோ அவருடைய
சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம். 15 இப்போதும் உமது
ஜனத்தைப் பலத்த கையினால் எகிப்து தேசத்திலிருந்து
புறப்படப்பண்ணி இந்நாள்வரைக்கும் இருக்கிறபடி, உமக்குக்
கீர்த்தியை உண்டாக்கின எங்கள் தேவனாகிய ஆண்டவரே, நாங்கள்
பாவஞ்செய்து, துன்மார்க்கமாய் நடந்தோம். 16 ஆண்டவரே ,
உம்முடைய சர்வநீதியின்படியே உமது கோபமும் உமது உக்கிரமும்
உம்முடைய பரிசுத்த பர்வதமாகிய எருசலேம் என்னும் உம்முடைய
நகரத்தை விட்டுத் திரும்பும்படி செய்யும். எங்கள் பாவங்களினாலும்
எங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலும் எருசலேமும் உம்முடைய
ஜனமாகிய நாங்களும் எங்கள் சுற்றுப்புறத்தார் யாவருக்கும்
நிந்தையானோம். 17 இப்போதும் எங்கள் தேவனே, நீர் உமது
அடியானுடைய விண்ணப்பத்தையும் அவனுடைய கெஞ்சுதலையும்
கேட்டு, பாழாய்க் கிடக்கிற உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தின்மேல்
ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும். 18
என் தேவனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும்,
உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழிடங்களையும், உமது
நாமம் தரிக்கப்பட்டிருக்கிற நகரத்தையும் பார்த்தருளும். நாங்கள்
எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி,
எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம். 19
ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும்.

என் தேவனே, உம்முடைய ஜனத்துக்கும் உம்முடைய நாமம் தரிக்கப்பட்டிருக்கிறதே என்றேன். 20 இப்படி நான் சொல்லி, ஜெபம்பண்ணி, என் பாவத்தையும் என் ஜனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, என் தேவனுடைய பரிசுத்த பர்வதத்துக்காக என் விண்ணப்பத்தை என் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாகச் செல்லிக்கொண்டிருந்தேன் 21 அப்படி நான் ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கும்போதே, முதல் தரிசனத்திலே நான் கண்ட புருஷனாகிய காபிரியேல், வேகமாய்ப் பறந்து வந்து, அந்திப்பலியின் நேரமாகிய வேளையிலே என்னை தொட்டான்.

BACKGROUND AND ANALYSIS பின்னணியமும் பகுப்பாய்வுகளும்:

தானியேல் 9 அதிகாரம் இஸ்ரவேலின் பெரிய சிறையிறுப்பின் இறுதிகட்டத்தில் எழுதப்பட்டது. இது கோரேஸ்/தரியூவின் முதலாம் அண்டு கி மு 539ல் பாபிலோன் விழுந்தபோது, அல்லது கி மு 546ல் 8 அதிகாரத்தின் நிகழ்வின் போது இது இடம் பெற்றிருக்கலாம். இவ்வதிகாரத்தில் பெரும்பகுதி தானியேலின் ஜெபமும், அறிக்கை செய்தலும் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. கோரேஸ் ஜெயம்பெற்ற மனிதனாய் விளங்குகிறான். அவப் தனது மாமாவை அதாவது மனைவியின் தகப்பனாரை சாம்ராஜ்ஜியத்தை ஆளுகை செய்ய ஏற்படுத்தினான், அவன் Cyaxeres II. என அறியப்படுகிறான் அவன் மேதியாவிற்கு அரசனாய் இருந்தான் அவன் கடைசி மேதிய இராஜாவாயிருந்தான். கோரேஸ் பாபிலோனை முற்றுகை யிடும்போது 62 வயது நிரம்பியவனாய் இருந்தான். பாபிலோன் சாம்ராஜ்ஜியத்தின் இரண்டு முக்கியமான தலைவர்கள் தானியேல் மற்றும் பெல்ஷாத்சாரின் பெரிய தளபதியாகிய Gobryas ம் கோரேஸிடம் கடந்து சென்றனர்.

ஜெபத்தின் அடிப்படைக் கருத்தானது வசனம் 2ல் கொடுக்கப்பட்டுள்ளது எரேமியா புத்தகத்தை ஆழமாய் படித்து புரிந்து கொண்ட்தன் அடிப்படையில் இஸ்ரவேல் தேசத்தின் மற்றும் எருசலேமின் பாழாக்குதல் குறுகிய காலத்திற்கு மட்டுமே என்பதை தானியேல் புரிந்து கொண்டிருந்தார். அவர் எரேமியா புத்தகத்தை மட்டுமல்லாது வேதாமகத்தில் மற்ற ஆறு விஷேசமான முக்கிய வேதபகுதிகளையும் வாசித்து தியானம் செய்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருந்தது.

.[1] **யாத்திராகமம் 23:10-11.** *"ஆறு வருடம் நீ உன் நிலத்தில் பயிரிட்டு, அதின் பலனை சேர்த்துக்கொள். 11 ஏழாம் வருஷத்தில் உன் ஜனத்திலுள்ள எளியவர்கள் புசிக்கவும், மீதியானதை வெளியின் ஜெந்துக்கள் தின்னவும், அந்த நிலம் சும்மா கிடக்க விட்டுவிடுவாயாக.*

உன் திராட்சை தோட்டத்தையும் உன் ஒலிவத்தோப்பையும் அப்படியே செய்வாயாக. "

இங்கு தானியேல் சாபத் வருட கர்த்தரின் கட்டளையைக் காண்கிறவராய் இருக்கிறார். ஏழாம் வருடம் ஓய்ந்திருக்கிற வருடமாகும். இதையே யூதர்கள் கடைபிடிக்க தவறிப்போயினர். தேசத்தில் தங்கியிருக்கும் எளியவர்கள் மற்றும் மிருகஜீவன்கள் புசிக்கத்தக்கதாய் ஏழாம் வருடத்திலே நிலத்தை சும்மா விட்டுவிடவேண்டும். ஏழாம் வருடத்திற்கான பூமியின் பலன் அதற்கு முந்தின வருடத்திலேயே பயிராகி இருக்கும்.

[2] **லேவியராகமம் 25:3-4.** *"3 ஆறுவருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைகழித்து, அதின் பலனைச் சேர்ப்பாயாக. 4 ஏழாம் வருஷத்திலோ கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்கவேண்டும்.. அதில் உன் வயலை விதைக்காமலும், உன் திராட்சைத்தோட்டத்தைக் கிளைகழிக்காமலும், 5 தானாய் விளைந்து பயிரானதை அறுக்காமலும் கிளைகழிக்காதே விட்ட திராட்சைச் செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக, தேசத்துக்கு அது ஓய்வு வருஷமாயிருக்கக்கடவது.*

[3] லேவியராகமம் 26:33. *"33 ஜாதிகளுக்குள்ளே உங்களைச் சிதற அடித்து, உங்கள் பின்னாகப் பட்டயத்தை உருவுவேன்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாகும். 34 நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்தில் இருக்கும்போது, தேசமானது பாழாய்க்கிடக்கிற நாளெல்லாம் தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். அப்பொழுது தேசம் ஓய்வடைந்து, தன் ஓய்வு நாட்களை இரம்மியமாய் அநுபவிக்கும். "*

இங்கு இஸ்ரவேல் சிதறடிக்கப்படுவது ஐந்தாவது சிட்சையாய் இருக்கிறது, தேசத்திற்கு சாபத் ஓய்வானது அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

[4] **2 நாளாகமம் 36:20-21.** *"20 பட்டயத்திற்குத் தப்பின மீதியானவர்களை அவன் பாபிலோனுக்குச் சிறைபிடித்துப்போவான். பெர்சியா இராஜ்ஜியபாரம் ஸ்தாபிக்கப்படுமட்டும் அங்கே அவர்கள் அவனுக்கும் அவன் குமாரருக்கும் அடிமைகளாயிருந்தார்கள். 21 கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்ன வார்த்தை நிறைவேறும்படிக்கு, தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும், அது பாழாய்க்கிடந்த நாளெல்லாம் அதாவது, எழுபதுவருடம் முடியுமட்டும் ஓய்ந்திருந்தது."*

சிறையிருப்புக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னரே எரேமியா பிரசங்கித்து வந்தான், ஆனால் அவனது எச்சரிப்பை இஸ்ரவேல் கேட்கவில்லை. தேவனது நியமங்களை யூதர்கள் புறக்கணிக்கிறவர்களாய் இருந்தனர், இதினிமித்தம் தேசத்தை சாபத் மூலம் சுத்திகரித்து மற்ற தீமை களையும் தேசத்தை விட்டு அகற்றுவதை செய்ய வேறு வழியின்றி காணப்பட்டது,

[5] எரேமியா 25:11-12. "*11 இந்த தேசமெல்லாம் வனாந்திரமும் பாழுமாகும். இந்த ஜாதிகளோ, எழுபது வருஷமாகப் பாபிலோன் இராஜாவைச் சேவிப்பார்கள். 12 எழுபது வருஷம் நிறைவேறின பின்பு, நான் பாபிலோன் இராஜாவினிடத்திலும், அந்த ஜாதியினிடத்திலும் கல்தேயருடைய தேசத்தினிடத்திலும், அவர்களுடைய அக்கிரமத்தை விசாரித்து, அதை நித்திய பாழிடமாக்கி, "*

இந்த வேதபகுதியில் 70 ஆண்டுகள் சிறைபிடித்தவர்களால் கடினமாய் நியாயந்தீர்க்கப்பட்ட பின்னர் அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. கிமு 605-535, மற்றும் 586-516 கிமு.

[**6] எரேமியா 29:10.** "*10 பாபிலோனிலே எழுபதுவருஷம் நிறைவேறினபின்பு நான் உங்களைச் சந்தித்து, உங்களை இவ்விடத்துக்குத் திரும்பிவரப்பண்ணும்படிக்கு உங்கள் மேல் என் நல்வார்த்தையை நிறைவேறப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

தானியேல் எவ்வாறு தேவனுடைய வார்த்தைகளை கற்றறிந்து, இஸ்ரவேலின் எதிர்கால நம்பிக்கை குறித்து அறிந்திருந்தார் என்பதை நாம் இதன் மூலம் காணமுடிகிறது.

வசனம் 3ல் தனது அறிக்கையை "ஜெபம் மற்றும் விண்ணப்பங்கள், உபவாசம் மற்றும் இரட்டுடுத்தி, சாம்பலில் அமர்ந்து ஜெபித்ததன்" மூலம் வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார்.

அந்த ஜெபமானது பல காரியங்களுடன் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. உபவாசம் என்பது சமயத்தை வேதபாடம் மற்றும் ஜெபத்தில் செலவு செய்வதைக் காட்டுகிறது, மற்றும் சட்டரீதியான செயல்பாடுகளுக்கும் இது பயன்படுத்தப்பட்டது, இது ஆகாரமின்றி இருப்பதை மட்டும் பொருளாகக் கொள்வதில்லை. சாம்பலானது பழைய ஏற்பாட்டில் தகனபலியை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது, இது சிலுவை மூலம் பயன்பெறுகிறதாய் இருக்கிறது.

இரட்டு உடுத்துதல் தாழ்மையை பிரதிபலிக்கிறது மற்றும் கிருபை அளிக்கப்படுவதை சம்பத்தப்படுத்துகிறது. இரட்டு உடுத்துதல் சுயத்தை விட மற்ற காரியங்களில் கண்ணோக்குவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நமது காலத்தில் "இரட்டு உடுத்துவது" என்பது உள்ளான நிலையில் உடுத்துவதைக் காட்டுவதாய் இருக்கிறது. எபேசியர் 2:1-10, 1 யோவான் 1:9. இது சுத்திகரிப்புக்கு நாம் ஒன்றும் செய்ய இயலாதையும் தேவனே எல்லா கிரியைகளையும் தமது இரக்கத்தினால் செய்கிறவராய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. தானியேல் இரட்டு உடுத்தியிருந்தார் காரணம் அவர் இஸ்ரவேலரின் யுகத்தில் வாழ்ந்தார், அது பாரம்பரிய தாழ்மையையும், மனந்திரும்புதலையும் காட்டுகிறதாய் இருந்தது. இன்றைய அளவில் நாம் விசுவாசத்தில் அதே மனநிலையில் நேரடியாகச் செயல்படுகிறவகளாய் இருக்கிறோம், வேறுவிதமாய் உடுத்துவதை மற்றும் வேறுவிதமாய் செயல்படுவதை தவிர்த்து செயல்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

வசனம் 4ல் தானியேல் தனது ஜெபத்தை பிதாவாகிய தேவனிடம் அறிக்கை செய்யும் ஜெபமாய் ஏறெடுக்கிறவராய் இருக்கிறார். அறிக்கை செய்தலுக்கு ஒத்துப்போகிற அநேக காரியங்கள் வேதாகமத்தில் இருக்கிறது, அவை எல்லாம் பாவமன்னிப்பிற்கு ஒரு விசுவாசியை இன்றைய அளவில் வழி நடத்துகிறதாய் இருக்கிறது.

அறிக்கை செய்தல் - 1 யோவான் 1:9.

சுய நியாத் தீர்ப்பு - 1 கொரி. 11:31.

Yield in the aorist tense in ரோமர் 12:1

ஒவ்வொரு பாரத்தையும் இறக்கி வைத்தல் - எபிரெயர்12:1.

ஒளியின் பிதாவுக்கு அடிபணிதல் - எபிரெயர் 12:9.

கரங்களை உயர்த்தி காத்திருத்தல் எபிரெயர் - 12:12

வழியை செவ்வைப் படுத்துதல் - மத்தேயு 3:3, எபிரெயர் 12:13.

மரித்தோரிலிருந்து எழுந்திருத்தல் - எபேசியர் 5:14

பழைய மனிதனை களைந்துபோடுத்ல் - எபேசியர் 4:22.

"நான் ஜெபித்தேன்" என்பது Hithpael perfect ஆக இருக்கிறது, மற்றும் பிரதிபலிக்கும் stem ஐக் கொண்டதாய் இருக்கிறது, இது தானியேல் இஸ்ரவேல் தேசத்திற்கு பயன் உண்டாக ஜெபிக்கிறதை காட்டுகிறதாய் இருக்கிறது மற்றும் தனது மக்கள் திரும்பவும் சேர்க்கப்படுவதற்காக ஜெபிப்பதாய் இருக்கிறது. கர்த்தர் என்கிற வார்த்தை இவ்விடத்தில் யெஹோவா தேவனைக் குறிக்கும் சொல்லாய் இருக்கிறது, தனது ஜெபத்தை பிதாவாகிய தேவனிடம் ஜெபிக்கிறவராய் காணப்படுகிறார்.

அறிக்கை செய்தல் என்ற வார்த்தை Hithpael imperfect ஆக இருக்கிறது “Yadar" என்பதன் பொருள் நம்மைக் குறித்து ஏதோ ஒன்றை குறிக்கும் சொல்லாய் இருக்கிறது. Piel stem என்கிற வார்த்தையின் பொருள் அறிக்கை செய்வதை விட நியாயந்தீர்க்கப்படுதல் என்பதைக் காட்டுகிறது. அறிக்கை செய்தல் என்பது பெரிய அளவில் பயங்கரமான தேவனைக் காட்டுகிறதாய் இருக்கிறது. பெரிய என்கிற வார்த்தை, எல்லாம் வல்ல தேவனைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது, இவ்வாறு ஒருவர் சுயநீதியை சார்ந்திராது தேவனது கிருபைச் சார்ந்து இருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, "பயங்கரம்" என்கிற வார்த்தை பரிசுத்தம் மற்றும் நியாந்தீர்ப்பதை குறிக்கும் சொல்லாய் இருக்கிறது.

இந்த வேதபகுதி தேவன் பரிசுத்தம் மற்றும் நியாயங்கள் மூலம் தேசத்தைச் சிட்சிக்கிறவர் என்று உணரச்செய்கிறதாய் இருக்கிறது. தானியேல் தேவனது உண்மை மற்றும் இரக்கத்தை தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு காட்டுகிறார் என்பதை அறிந்திருந்தார்.

வசனம் 4ல் அவரில் அன்புகூறுகிறவர்களுக்கு அவரது கட்டளைகள் பாதுகாக்கப்படுவதைக்குறித்து கூறப்படுகிறது. எபிரெய வார்த்தை “Shamar”, என்பது ஒன்றை பாதுகாக்கும் வார்த்தையாக அர்த்தம் கொள்ளப்படுகிறது. பெரிசிய சாம்ராஜ்ஜியத்தில் தேவனது வார்த்தையை பாதுகாக்கிறவ்ர்களாய் இருந்தனர், ஆகையால் தேவன்தாமே அவர்களை பாதுகாக்கிறவராய் இருந்தார்.

வசனம் 5ல் தானியேல் கூறுவது, "நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமக்காரராயிருந்து, துன்மார்க்கமாய் நடந்து, கலகம்பண்ணி, உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்றுபோனோம்." என்கிறார்.

இந்த ஜெபத்தில் வீழ்ச்சிக்கான நான்கு கருத்து கூற்றுக்களைக் காண்கிறவ்ர்களாய் இருக்கிறோம். நாம் பாவஞ்செய்தோம் the Kal perfect of Chata which means to miss the mark set by the Word of God. இதன் பொருள் தேவனது வார்த்தையின்படியல்லாது இலக்கு தவறினோம் என்பதாகும்.

இதன் stem and perfect tense காட்டுவ்து என்னவெனில், யூதர்களின் கடந்த கால சரித்திரத்தை காட்டுகிறதாய் இருக்கிறது. சங்கீதம் 78 இப்படிப்பட்ட உண்மைகளை அறிவிக்கிறதாய் இருக்கிறது.

"ஆக்கிரமஞ் செய்து" is again a Kal perfect of “Avah”, இதன் பொருள் கடந்த காலத்தில் தகாத வழியில் தேசிய காரியங்களில் ஈடுபடுதல் என்பதாகும். சாபத்தை [Sabbaths] ஆசரியாமல் அலைந்து திரிகிறவர்களாய் காணப்பட்டனர்.

"துன்மார்க்கமாய் நடந்து, " is the Hiphil Perfect of “Rasha”. The hiphil stem is causative active இதன் பொருள் அநீதியான காரியங்களை செய்ததினால் குற்றமனசாட்சியுடன், தவறான காரியங்களில் செயல்படுவதை குறிக்கிறது.

"கலகம் செய்து" is the Kal perfect of “Marad”. இதன் பொருள் இஸ்ரவேல் தேவனின் நீதி நியாயங்கள் மற்றும் நியாயத்தீர்ப்பு இவைகளுக்கு விரோதமாக செயல்படுவதைக் குறிக்கிறது.

தானியேல் 6 வசனத்தில் ஜெபிக்கும்போது, " உம்முடைய சேவகருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாதே போனோம்" என்று ஜெபிக்கிறவராய் இருக்கிறார். இது தேசத்தின் இராஜாக்கள், இளவரசர்கள், பிதாக்கள், ஜனங்கள் அனைவரையும் குறிக்கிறதாய் இருக்கிறது. " இங்கு தானியேல் தேவன் தமது ஜனங்களுக்கு மிகுதியான தருணங்களை தீர்க்கதரிசிகள் அளித்துள்ளதை புறிந்து கொண்டுள்ளதை அறிக்கை செய்கிறார்.

ஓசியா, ஏசாயா, எரேமியா போன்றோரைக் கர்த்தர் இஸ்ரவேலருக்கு அனுப்பியிருந்தும் ஜனங்கள் அவர்களை புறக்கணித்தனர். அவர் குறிப்பிடும் போது , அவர்கள் சமுதாய தலைவர்களுக்கு மட்டுமின்றி முழு சமுதாயத்திற்கும் ஊழியம் செய்கிறவர்களாய் இருந்தனர். தேவனுக்கு செவிகொடுக்க முழு சமுதாயமும் தவறிவிட்டனர். வருத்தப்படக்கூடிய விதத்தில் இப்படிப்பட்ட் பாவத்தின் விளைவால் அவதியுற்றனர்.

ஏசாயாவை பொறுத்தமட்டில், அவரது ஊழியம் தெற்கு இராஜ்ஜியத்திற்கு வெற்றிகரமாய் அமைந்தது ஆனால் எரேமியாவின் ஊழியம் முழுவதும் தோல்வியை தழுவினதாய் இருந்தது. இருப்பினும் அவர் 100% முடிவுமட்டாய் வெற்றிகரமாய் செயல்பட்டார். மற்றும் தனது செய்திகள் அனைத்தையும் தனது ஊழியக்காரன் பாரூக் மூளம் தானியேலுக்கு தெரியப்படுத்தினார். எரேமியாவின் கிரியைகள் தானியேலுக்கு மிக உதவியாய் இருந்தது மற்றும் எசேக்கியேலை ஊக்குவிப்பதாயும் அமைந்தது. ஆகையால் எரேமியா விதைத்தார், தானியேல்

களையெடுத்தார் மற்றும் எசேக்கியேல் எழுப்புதலின் அறுவடை செய்தார்.

வசனம் 7ல் நீதி தேவனுக்குரியது என்பதை தானியேல் புரிந்து இருந்தார். இது எபிரேய மொழியில் தேவனுக்கே உரிதான தேவ நீதியைக் காட்டும் சொல்லாக இப்பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பின்னர் இவ்வசனத்தில் "வெட்கம் எங்களுக்கே உரியது" என்பது அவர்கள் வேத உபதேசங்களை அறியாத வெட்கம் சம்பந்தமாய் கூறப்படுகிறது. தான் கடந்து வந்த யூதா கோத்திரத்திற்கு மட்டுமல்லாது தானியேல் இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாருக்காகவும் ஜெபித்தது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. அவர் தென் இராஜ்ஜியத்தில் வாழ்ந்த அனைத்து கோத்திரத்தாருக்கும் பிரதிநிதியாய் ஜெபிக்கிறவராய் இருக்கிறார்.

"துரத்திவிடப்படல்" என்கிற வார்த்தை எபிரெய மொழியில் Nadach which is in the Hiphil stem. இது causative active stem ஆகக் காணப்பட்டு தேவன் தாமே தேசத்திலிருந்து அவர்களை துரத்திவிட்டார் என்பதை காட்டுகிறதாய் இருக்கிறது.

அவர்கள் தேவனை புறக்கணித்தபடியால் இது அவர்களுக்கு நேரிட்டது. யூதாவின் கடைசி நான்கு இராஜாக்கள் யூதாவின்மீது ஆட்சி செய்த மோசமான நிலையைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

வசனம் 9ல் தானியேல் தேவனது குணாதிசயம் முறண்படுவதைக் கூறுகிறார். அவர் தேவனின் இரக்கம் மற்றும் மன்னிக்கும் தனமை போன்றவற்றை காண்பிக்கிறவராய் இருக்கிறார் நியாயத்தீர்ப்பு என்பது தேவனின் விநோத கிரியையாய் இருக்கிறது, ஏசாயா 28:20. அது முழுமையும் இறுதியானதும் கிருபையின் காலம் முடிந்து போனதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

இரக்கங்கள் என்கிற வார்த்தை “Rachamim” is in the plural as seen by the suffix “im”. என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் பொருள் கிருபையின் முழுமையை செயல்பாட்டைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இந்த வார்த்தை அடுத்து கடந்து வந்து "மன்னித்தல்" என்கிற வார்த்தையை பிரதிபலிக்கிறது, இதன் பொருள் மன்னித்து மறத்தல் என்பதாகும். சங்கீதம் 103.

தொடர்ந்துள்ள வசனங்களில் இஸ்ரவேல் எவ்வாறு கலகம் செய்தனர் மற்றும் தேவனது வழிநடத்துதல்களை புறக்கணித்தனர் என்பதைக்

குறித்த விளக்கங்கள் கூறப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை காத்துக்கொள்ள, கேடகத்தவறினர், இதுவே யூதர்களின் யுகத்தில் முக்கியமான கடமையாய் இருந்தது.

இக்காலக்கட்டங்களில் யூதர்கள் பெரிதான மகத்துவமுள்ள மக்களாய் இருக்க வேண்டியவர்களாய் இருந்தும், அவர்கள் தேவனுக்கு அநேக ஆண்டு காலமாய் செவிகொடுக்கமறுத்ததினால், நியாயத்தீர்ப்புக்கு உட்பட்டு சிதறடிக்கப்பட்டனர். அவர்கள் எழுத்தின்படி வாழ்கிறவர்களும், கர்த்தரை அறிகிறதில் பின்னடைந்தவர்களும், தேவனின் கிருபை பராமாரிப்பை அழித்தவர்களுமாய் திகழ்ந்தனர்.

வசனம் 11ல் யூதர்கள் தேவனை விட்டு அகன்று சென்றதை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். எபிரெய வார்த்தையாகிய “sur” என்பதன் பொருள் ஒன்றிலிருந்து வழி விலகுதல் என்பதாகும். அவர்கள் அகன்று சென்றது தேவனை விட்டு மனதளவில் அகன்றதைக் காட்டுகிறது. இதற்காக குறிப்பிடப்பட்டுள்ள சாபம் இந்த வசனத்தில் சிதறடிக்கப்படுதல் ஆகும்.

வசனம் 12ல் தேவன் பேசிச் சொன்ன வார்த்தைகள் யூதர்களுக்கு ஒன்றும் புதியனவல்ல. அவர்கள் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னரே மேசேயின் காலத்திலே இதைத் துவங்கியிருந்தனர். இக்காலக்கட்டங்களில் பொதுவாய் அவர்கள் உண்மையற்றவர்களாய் நடந்து கொண்டு வந்தனர்.

வசனங்கள் 13&14ல் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சத்தியத்தின் அடிப்படையில், அவர்கள் தேவனது வெளிப்பாடாய் இருந்தும், அவர்கள் அறிக்கை செய்யவோ, தேசிய அளவில் மன்னிப்போ கர்த்தரிடம் கேட்காதவர்களாய் இருந்தனர். இதன் விளைவாக தீமை குடிகொண்டது. முற்றிலும் நீதிபரராய் இருக்க, சிதறடிக்கப்படல் என்கிற சாபத்தை அவர்கள் மீது கொண்டு வந்தார். இதை தானியேல் புரிந்து கொண்டவராய் தேவன் யூதர்களை சிதறடித்தது முற்றிலும் சரியே காரணம் அவர்களது பிடிவாதம் மற்றும் ஆழம் கண்டு கொள்ளாத அளவுக்கான கீழ்ப்படியாமை காரணமாய் அமைந்தது.

வசனம் 15-19வரை இஸ்ரவேலுக்கான பரிந்து பேசுதலாய் இருக்கிறது. இப்பொழுது தானியேல் தேசிய பாவங்களை அறிக்கை செய்கிறார், தொடர்ந்து அவர்களுக்காய் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார். இது தானியேல் கிருபையை சித்தரிக்கும் வண்ணம் செயல்படுவதாய் இருந்தது. மன்னிப்பு கிடைக்குமேயானால் அது கிருபையின் அடிப்படையில் கிடைக்கிறதாய் இருந்தது. அவர் தேவன் நீதி செய்கிறவர் என்பதை எதிர்பார்த்து, அவர் நியாயந்தீர்த்துள்ளார், ஆனால் அவர் தேவன் கிருபையாய் செயல்படவும், சிறையிருப்பிலிருந்து விடுதலை

அளிப்பதையும் எதிர்பார்த்தவராய் இருந்தார். நீதியுள்ள நியாயத்தீர்ப்பு அதற்கு காரணமாய் இருந்தபோதிலும், கிருபையும் மற்றும் இரக்கமும் அதற்கு முடிவை கொண்டு வருகிறதாய் இருந்தது.

அவர் யூதர்களின் சரித்திரத்தை எண்ணிப்பார்க்கிறவராய் இருந்தார், அவர்கள் எகிப்திலிருந்து தேவனால் எவ்வாறு கொண்டுவரப்பட்டனர், அவர்களுக்கு அவர்களுக்கு அளித்த பாதுகாப்பு எத்தைகயது என்பதையும், பல நூற்றாண்டு காலமாய் அவர்கள் செழிப்படைந்து இருந்தது எங்ஙணம் என்பதை அவர் அறிந்தவராய் இருந்தார். வருத்தபடக்கூடிய வகையில் யூதர்கள் அடிபணிய மறுத்து மோசேயின் பிரமாணங்களுக்கு கீழ்ப்படிய மறுத்துவிட்டனர்.

வசனம் 16ல் அவர் தேவனது நீதி மற்றும் அவரது குணாதிசயம் இவைகளின் அடிப்படையில் முறையிடுகிறவராய் இருந்தார். யூதர்களின் சூழலானது மிகவும் கெட்டதாய் இருந்தது, அவர்கள் திரும்ப மீட்டுக்கொள்ளக்கூடாத அளவுக்கு மோசமானதாய் இருந்தது என எண்ணினர், ஆனால் அவர்களது நம்பிக்கையற்ற நிலையில் அவர்கள் தேவனிடமாய் திரும்புகிறவர்களாய் இருந்தனர்.

தானியேல் தேவனை நோக்கி முறையிடும்போது அவருடைய நீதியினிமித்தம் முறையிடுகிறவராய் இருந்தார், அவருடைய அன்பினால் அல்ல என்பது ஆர்வத்தை தூண்டுகிறதாய் இருக்கிறது. கடந்த கால நித்தியத்தில் நீதியும் அன்பும் ஒத்துபோகுமாறு தேவன் அடிவமைத்து இருந்தார். நீதியானது முதலாவது திருப்தி செய்யப்படுகிறதாய் இருந்தது. இது கிருபையின் வழியாய் செய்யப்படுகிறதாய் இருந்தது, இது தேவனது தயவாய் கருதப்பட்டது. இது பழைய ஏற்பாட்டில் பல வழிகளில் வருணிக்கப்படுகிறதாய் இருந்தது, ஆசரிப்புகூடாரம், ஆசாரியர்களது ஆடை, பலிமுறைகள், பண்டிகைகள் போன்றவைகள் மூலம் வருணிக்கப்படுகிறது.

கிருபையானது தேவனின் எல்லா குணாதிசயங்களையும் ஒன்றாக இணைத்து கூட்டி சேர்க்கிறதாய் இருக்கிறது. கிருபையில்லாது தேவன் மனிதனை அழிக்கவும் நியாயம் தீர்க்கவும் செய்கிறவராய் இருப்பார். தேவனது திட்டமானது முழுவதும் அவரது அன்பின் அடிப்படையில் இல்லை என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

தானியேல் தேவனை நோக்கி முறையிடும்போது, அவரது குணாதிசயங்களின் அடிப்படையிலும், சட்டரீதியான அவரது கோபத்தை தமது ஜனங்களுக்கு திருப்பினதையும் நினைகூர்ந்து ஜெபிக்கிறவராய் இருக்கிறார். இங்கு தானியேல் எருசலேமை, பட்டணமென்றும், சீயோன்

மலை என்றும், பரிசுத்த பர்வதம் என்றும், யூதா ஜனங்கள் என்றும் அழைக்கிறார்.

தானியேல் தேவனது திட்டத்தில் யூதர்களின் முக்கியமான செயல்பாடு என்ன என்பதை அறிந்துணர்ந்திருந்தார் மற்றும் அவர்கள் மிக மோசமான நிலையில் தவறி சிதறடிக்கப்பட்டிருந்தும், அவர்கள் தேவனது திட்டத்தில் ஒரு திறவுகோள் அம்சமாய் விளங்கினர். அவர் இதினிமித்தம் தேவனோடுள்ள உறவை தனிப்பட்ட நிலையில் எடுத்துக்கொண்டு பிரச்சனைக்கு தீர்வு காண விழைகிறவராய் இருக்கிறார்.

தானியேல் "எங்கள் தேவனே" என்று வசனம் 17ல் அழைக்கிறார். கேட்டல் என்கிற வார்த்தை is in the Kal imperative ஆக இருக்கிறது, அது கர்த்தரிடமிருந்து கேட்டலை குறிக்கிற சொல்லாய் இருக்கிறது. இது மிகவும் முதிர்ந்த நிலையில் உள்ள ஒரு விசுவாசியின் ஜெபமாய் இருக்கிறது. தானியேல் அதிக் பட்ச அன்பை பிதாவினிடத்தில் காட்டுகிறவராய் இருக்கிறார், இது அவர் ஒரு பழைய விசுவாசியாக அநேக ஆண்டுகள் அவருடன் நடந்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. தானியேல் மறுபடியும் the imperative mood ஐப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார், தேவனது அன்போடுள்ள உறவில் பரிசுத்த சந்நிதானத்தில் ஷெக்கினா மகிமை திரும்பக் கடந்து வர வேண்டிக்கொள்கிறவராய் இருக்கிறார்.

இந்த ஜெபத்தில் தேவாலயம் கிமு 586ல் இடிக்கப்பட்டு அழிவைக் கண்டிருந்தது, தானியேல் எருசலேம் தேவாலயம் திரும்பக்கட்டப்பட அறைகூவல் விடுகிறவராய் இருக்கிறார். இந்த ஜெபமானது யூதர்கள் நாடு திரும்பும் காலகட்டத்தில் நிறைவேறுகிறதாய் இருந்தது கிமு 536ல் இது நிறைவேறிற்று, இரண்டாம் தேவாலயமானது கிமு 516ல் திரும்ப கட்டப்பட்டு நிறைவு பெற்றது.

இது எருசலேமின் அலங்கங்கள் கட்டப்படுவதற்கு முன்னதாகவே கட்டிமுடிக்கப்பட்டு தீர்ந்தது. இது கர்த்தரை பொருத்தமட்டில் சரியான முன்னுரிமையாய் இருந்ததை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. மற்றும் இது அவரது ஒப்புயர்வற்ற தன்மையை ஒவ்வொரு காரியத்திலும் விளங்கச்செய்கிறவராய் இருக்கிறார். இந்த வசனத்தின் முடிவில் தேவ குமாரனை குறித்த குறிப்பைக் கூறி திரித்துவத்தில் அவரது தனித்தன்மைய வேறுபடுத்திக் காட்டுகிறவராய் இருக்கிறார்.

18ம் வசனத்தில் we continue the Kal imperatives.. தானியேல் தேவன் கேட்கிறவராய் இருக்கிறார் என்பதை கூறுகிறவராய் இருக்கிறார். அவர் தமது கண்களைத் திறந்து, அந்த சூழலில் ஏதோ ஒன்றைச் செய்கிறவராய் இருக்கிறார். நீண்ட வேதபாடத்தின் அடிப்படையில் செயல்பட

கேட்டுக்கொள்கிறவராய் இருக்கிறார். "பெயரிட்டு அழைக்கப்படும் பட்டணம்" எருசலேமாய் இருக்கிறது, அது சமாதான பிரபுவின் பட்டணமாய் கருதப்படுகிறது. அவர் தேவனிடம் அணுகுவதை மறுபடியும் உறுதி செய்கிறவராய் இருக்கிறார். அது யூதர்கள் செய்தவைகளல்லாது, கிருபையின் அடிப்படையில் செயல்படுவதாய் இருந்தது. அது தேவனது மகா இரக்கத்தை அடிப்படையாக கொண்டதாய் இருந்தது. யாக்கோபு அதிகாரங்கள் 1-2.

வசனம் 19ல் நான்கு அதிக்மான கட்டளைச்சொற்களக் காண்கிறொம், the Kal imperative of “Shamea” இத்ன் பொருள் கேட்பது, the Kal imperative of “Salach” இதன் பொருள் மன்னிப்பதில் பொருளடங்கியது, மன்னித்து மறப்பது ஆகும். மறுபடியும் எடுத்துக் கொள்ளாது விட்டுவிடுவது ஆகும்.

மூன்றாவது கட்டளைச் சொல் the Hithpael imperative of “Qodesh” is causative and could be translated இதன் பொருள் கேட்க வைப்பது, மற்ற வார்த்தைகள் கிட்டச்சேர்த்துக்கொள்வது.

நான்காவது கட்டளைச் சொல் Kal imperative of “Asah” இதன் பொருள் ஏதோ ஒன்றிலிருந்து ஏதோஒன்றை உருவாக்குவது. தானியேல் கூறும்போது "உமது கிருபையினால் விடுதலையை உற்பத்தி செய்கிறீர்" இது தேவனது திட்டம் மற்றும் தேவனில் உள்ள ஆர்வத்தின் அடிப்படையில் செய்வது. யூதர்கள் :இஸ்ர்வேல்" மக்கள் என அழைக்கப்படுகின்றனர், இதன் பொருள் தேவனுடன் ஆளுகை செய்வது என்பதாகும்.

வசனம் 20 மற்றும் 21ல் ஜெபத்திற்கு விரைவான மறுமொழி அளிக்கப்படுகிறது, காரணம் தானியேல் காபிரியேல் தேவதூதனுடன் பேசிக்கொண்டிருக்கையில், இன்னும் தனக்காக, த;னது மக்கள் யூதர்களுக்காய் தீவிரமாய் ஜெபித்து கொண்டே இருக்கிறார், கர்த்தருக்கு முன்பாக கிருபையை முன்வைத்து ஜெபிக்கிறவராய்க் காணப்பட்டார்.

வசனம் 21ல் மனிதன் என்ற சொல் “Ish” என்ற எபிரெய சொல்லாய் இருக்கிறது, இதன் பொருள் மனிதன் அல்லது தனிப்பட்டநபர். பிரதாண தூதனாகிய காபிரியேல் மனித சாயலில் வெளிப்பட்டார். காபிரியேல் தானியேலின் தீவிரமான் ஜெபத்துக்கு மறுமொழியாக முக முகமாய் பதில் அளிக்கிறவராய் காணப்பட்டார். காபிரியேல் கடந்து வந்து தானியேலைத் தொட்டு அந்த மாலை வேளையிலே [03:00 ம் மணிவேளையில்] தானியேலுடன் இடைபடுகிறவராய் இருந்தார்.

கைக்கொள்ளுதல்:

தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்வதும், கைக்கொள்வதும் கிறிஸ்தவர்களின் தலையாய கடமையாய் இருக்கிறது, தேசிய வாழ்வில் அவைகளை கடைபிடித்து வாழ்வதும் முக்கியமானதாய் இருக்கிறது.

தேவ வார்த்தையின் சத்தியத்தை பகிர்ந்து கொடுப்பீர்களானால் உங்களை தேவன் கனப்படுத்துகிறவராய் இருக்கிறார்.

எரேமியாவின் விஷயத்தில், நெபுகாத்நேச்சார் அவனை தேடி அவனுக்கு வாழ்வளித்தான். மற்ற யூத சிறைக்கைதிகள் கீழ்ப்படிய மறுக்கவே அவர்களது பராமரிப்பானது அவர்களுக்குத் தடை செய்யப்பட்டது. எரேமியா 39-45. தானியேல் இத்தகைய தீமைகளை அறிக்கை செய்கிறவராய் இருந்தார்.

தேவனுடைய வார்த்தையை படிப்பதினால், பெரிதான நம்பிக்கையை அடைந்து கொள்ள முடியும், நமது தனிப்பட்ட எதிர்காலத்தை மட்டுமல்லாது, சரித்திரத்தின் எதிர்காலத்தையே அறிந்து கொள்கிறவர்களாவோம். அவர் இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாய் இருக்கிறார். சரித்திரத்தின் காரியங்கள் நிச்சயமாய் இருக்கிறது - அவர் ஆளுகை செய்ய வருகிறவராய் இருக்கிறார்.

நாம் நம்மை நாமே தேவனுக்கு முன்பாகச் சுத்திகரித்துக் கொள்ள ஒன்றும் செய்ய இயலாது, தேவன் தமது இரக்கத்தினால் எல்லா கிரியைகளையும் செய்து தமது குணாதிசயத்தின் அடிப்படையில் செயல்படுகிறவராய் இருக்கிறார்.

மனித இராஜ்ஜியத்தில் தேவனுடைய வார்த்தையைக் காத்துக் கொள்ளுதல் நமக்கு அவசியம்.

மதமும் நாடும் சேர்ந்த கலவையானது, தேசிய அளவில் தேவனால் அமையப்பெறுகிறதாய் இருக்கிறது.

மனுஷன் தனக்கு மறு உத்தரவு அளிக்கும்படி தேவன் எப்பொழுதும் போதுமான அளவு தகவல்களை அளிக்கிறராய் இருக்கிறார். எப்படியிருப்பினும் மனித்ன் ஒளியின் பேரில் உள்ள அன்பை விட இருளிடத்தில் அன்பு செலுத்துகிறவனாய் இருக்கிறான்.

தேவ்ன் எப்பொழுதும் நம்முடன் தமது கிருபையின் அடிப்படையில் செயல்படுகிறவராய் இருக்கிறார்.

தேவன் எப்பொழுதும் நியாயத்தீர்ப்புக்கு முன் கிருபையை அளிக்கிறவ்ராய் இருக்கிறார். கர்த்தர் யூதர்களுக்கு நாற்பதாண்டு கால

எச்சரிப்பை அவர்களது முதலாவது சிதறடிப்புக்கு முன், எரேமியா மூலம் அளித்தார் மற்றும் நாற்பது ஆண்டுகால எச்சரிப்பை ஆரம்பகால சபைக்கு அளித்தார் மற்றும் அந்நிய பாஷை பேசும் வரத்தினை கிபி 70ல் சிதறடிக்கப்படுவதை முன்னிட்டு அளித்தார்.

ஒரே சாபத்திற்குள்ளான புறஜாதியாரைப்போன்று இல்லாது, அந்த சந்தர்ப்பத்தில் ஆவிக்குரிய மரணமாகிய சாபம் அல்லது தேவனை விட்டு அகன்று ஜீவிப்பதல்லாது, யூதர்கள் இரண்டாம் சாபத்தை உடையவர்களாய் இருந்தனர், அவர்களது தேசத்திலிருந்து சிதடிக்கப்படல் என்ற இரண்டாம் சாபத்தை பெற்றவர்களாய் இருந்தனர்.

எல்லா சாபங்களும் திரும்ப உருவாக்கப்படுதலினால் உயர்த்தப்படுகின்றன. புறஜாதியன் கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் அங்கமாகும்போது, ஒரு யூதன் செய்வது போலவே இருபாலரும் புதிய ஜீவனை அடைகிறவர்களாகின்றனர். அவர்கள் மனந்திரும்பும்போது/ முழுமையான யூதனாகி புதிய பூமிக்குரிய/நித்திய ஆவிக்குரிய நிலையை முடிவாய் பெறுகிறவனாகிறான்.

ஒரு மனிதன் இங்கு செய்யும் ஆவிக்குரிய ஜெபமானது, தேவனுடைய வார்த்தையைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. இந்த காலக்கட்டத்தில் ஒரு மீட்கப்பட்ட தேசத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

வேத வசனங்களைப் புரிந்து கொள்ளும்படி, அறிக்கை செய்யாத பாவங்களை அறிக்கை செய்ய அவசியமாய் இருக்கிறது.

இந்த வேதபகுதி காட்டுவது என்னவென்றால், உங்களது தோல்விகள் உங்கள் உறவை அல்லது தேவனுடன் உள்ள எதிர்காலத்தை அழித்துவிடமுடியாது எனக்காட்டுகிறதாய் இருக்கிறது. நீங்கள் மனந்திரும்பும்போது, கீழ்ப்படிதல் என்கிற ஸ்தானத்திற்கு திரும்பும்போது நீங்கள் மீட்கப்படுகிறவர்களாகிறீர்கள். நாம் கர்த்தரை முக முகமாய் காணும்போது மட்டுமே "முடிவுக்கு" வருகிறவர்களாகிறோம்.

தேவனுடைய வார்த்தையின் உபதேசத்தை நீங்கள் அதிகமாய் அறிய அறிய, உங்கள் ஜெப வாழ்வும், அருட்பணியும் சிறப்படைகிறதாய் இருக்கிறது.

தானியேல் செய்தது போல நாமும் மிகவும் முதிர்ந்த நிலையில் ஆவிக்குரிய அடிப்படையில் தேவனிடத்தில் பதிலை எதிர்பார்த்து கேட்க வேண்டும். அவர் "கேட்கும்போது" உபதேசங்களை புரிந்து கொண்டதன்

அடிப்படையில் கேட்கிறவராய் இருக்கிறார் -- அதில் இறுமாப்போ அல்லது உத்தேசங்களோ காணப்படவில்லை.

DOCTRINES உபதேசங்கள்:

JEREMIAH - GOD'S MESSENGER எரேமியா - தேவனின் செய்தியாளர்.

CONFESSION OF SIN பாவங்களை அறிக்கை செய்தல்

COVENANTS உடன்படிக்கைகள்

GOD: CHARACTER OF GOD தேவன்: தேவனின் குணாதிசயம்

SHEKINAH GLORY ஷெக்கினா மகிமை

LIGHT ஒளி

TRINITY திரித்துவம்

பகுதி 40 - எழுபது வாரங்களைக் குறித்த தீர்க்கதரிசனம் தானியேல் 9:22-27.

22 அவன் எனக்குத் தெளிவுண்டாக்கி, என்னோடே பேசி: தானியேலே, உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டு வந்தேன். 23 நீ மிகவும் பிரியமானவன். ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது, நான் அதை அறிவிக்க வந்தேன். இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்து கொள். 24 மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும் அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும் நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும், தீர்க்கதரிசனத்தை முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும், உன ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின் மேலும் எழுபதுவாரங்கள்

செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது. 25 இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும், அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும். ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும். 26 அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்தஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. 27 அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார். அருவருப்பான செட்டைகளோடு பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நியமிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்.

பிண்ணனியமும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 22ல் தானியேலின் ஜெபத்திற்கான மறுமொழி அளிக்கப்படுகிறது. பதிலை காபிரியேல் வியாக்கினிக்கிறார், மற்றும் தானியேலுடன் முக முகமாய் பேசினார். பேசினார் என்கிற வார்த்தையானது Piel stem, ல் இருக்கிறது, அது intensive active, ஆக இருக்கிறது, ஆகையால் அது intensive teaching session ஆக இருந்தது. இங்கு காபிரியேல் தானியேலுக்கு இஸ்ரவேலைக் குறித்த எதிர்கால சரித்திர கண்ணோட்டத்தை அளிக்கிறவராய் இருக்கிறார், அதிகாரம் 10,11 மற்றும் 12ல் இதன் விபரம் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

இந்த அமைப்பானது ஒரு யூத அமைப்பாய் இருந்து முக்கியமான அமைப்பின் பெருக்கமாய் இருக்கிறது. இந்த அமைப்பானது ஆதியாகமம் 1 மற்றும் 2 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

காபிரியேல் கூறும்போது உனக்கு "அறிவை உணர்த்தும்படி" எனக் குறிப்பிடுகிறார். அறிவு என்கிற வார்த்தை "Sakal" in the Hiphil infinitive. என்று மூலபாஷையில் வருகிறதாய் இருக்கிறது. The Hiphil stem is causative active while the infinitive shows the purpose of the task. The purpose of Gabriel's talk to Daniel is to cause to give him skill and understanding to operate in his place in history, and as others understand, they will be able to operate in their time of history also. The answer is going to be given in 490 years of Jewish History.

வசனம் 23ல் காபிரியேல் தானியேலுக்குச் சொல்லும் போது தா;னியேல் ஜெபம் துவங்கின உடனே தான் போதிக்கும்படி அனுப்பப்பட்டதாய் கூறுகிறான். காபிரியேல் துவங்கும்போது, தானியேல் தேவனிடம் முழு பிரியத்தையும் பெற்றவன் என்கிற உற்சாக வார்த்தைகளுடன் துவங்குகிறார். தானியேல் எல்லா காலங்களிலும் கொள்கை மாறாத விசுவாசியாக கருதப்படுகிறார். காலா காலமாய் அவர் பாவம் செய்து வந்தவராய் இருந்தார் காரணம் மனுக்குலத்தில் அனைவரும் பாவம் செய்கிறவர்களாய் இருந்தனர், இவ்வதிகாரத்தின் ஆரம்ப பகுதியில் தனது பாவங்களை அறிக்கை செய்கிறவராய்க் காண்கிறோம், இவர் சிறைப்பட்டுப்போன யூதர்களுக்கு மிகவும் முதிர்ந்த விசுவாசியாகக் காணப்படுகிறார். 1 யோவான் 1:5-10. இவர் தேவனில் அன்புகூறுகிறவராய் காணப்படுகிறார் மற்றும் நடத்தையிலும் பொறுமையுடன் தான் பணிசெய்வதிலும் தேவனுக்கு முன்பாக விளங்கினார், மற்றும் எல்லா காரியங்களையும் தேவனது குணாதிசயத்தை சார்ந்தே செய்கிறவராய் காணப்படுகிறார்

காபிரியேல் தானியேலிடம் கூறும்போது, தான் கேட்டதையும் புரிந்து கொண்டதான விபரங்களை விரிவான நிலையில் தரிசனத்தின் முழு அர்த்தத்தையும் கூறுவதாய் சொல்கிறார். திறவுகோள் கண்ணோட்ட கருத்தின்படி தேவனது திட்டத்தில் யூதர்கள் 490 ஆண்டுகளை மேசியா வருமளவும் கழிக்க வேண்டியதாய் இருந்தது. அவர் இஸ்ரவேலின் மேசியாவாக வரவேண்டி இருந்தது. மேசியா வரும் வரை "புறஜாதியாரின் காலம்" மையங்கொண்டிருக்க வேண்டிதாய் இருந்தது. அவர்கள் அவரை நோக்கி கூப்பிடுவதால் அவர் மறுபடியும் வருகிறவராய் இருக்கிறார். சகரியா 12-14.

வசனம் 24ல் 70 வாரங்களைக் குறித்து பார்க்கிறோம். 70 வாரங்கள் என்பது 490 ஆண்டு காலங்களை குறிக்கிறதாய் இருக்கிறது, பண்டைய உலகில் ஒரு வாரம்7 ஆண்டுகளைக் குறிக்கிறதாய் இருக்கிறது. ரோமர்கள் மற்றும் கிரேக்கர் இதைப்போன்ற நாட்கண்க்கை வைத்திருந்தனர்.

யூதர்களின் எதிர்காலம் குறித்த 70 வாரங்களின் தீர்க்கதரிசனம்: வசனங்கள் 24-27.

வசனம் 24 கூறுகிறது, "**24 மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும் அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும் நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனத்தையும், தீர்க்கதரிசனத்தை முத்திரிக்கிறதற்கும், மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும், உன ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த**

நகரத்தின் மேலும் எழுபதுவாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது. "
ஒரு வாரம் என்றால் என்ன? பண்டைய உலகில் கிரேக்கரும் மற்றும் லத்தீன் தத்துவஞானிகளும் தீர்க்கதரிசன வாரம் என்றால் என்னவென்று அறிவார்கள், அவ்வாரங்கள் வருடத்தை குறித்ததாய் இருக்கிறது. இந்த அமைப்பின்படி ஒருவாரம் என்பது 7 ஆண்டுகளுக்கு சமமாய் இருக்கிறது. 70 வாரங்கள் என்பது 70 x 7 வருடங்கள் = 490 வருடங்கள்.

இந்த வருடங்கள் எத்தகைய வருடங்கள்? வேதாகமத்தில் பயன்படுள்ள இந்த வருடங்கள் யூதர்களில் சந்திர காலக்கணக்கிலிருந்து கணக்கிடப்படுகிறது. இக்கால கணக்கு ஆபிரகாம் கல்தேய காலகணக்கின்படி பாதுகாத்ததாகும். ஆபிர்காமின் கால கணக்கு சந்திர காலக்கணக்காகும் இது 360 நாட்களைக் கொண்டது. இக்கால கணக்கு 70 x 7 x 360 நாட்கள் = 176,400 நாட்கள் ஆகும்.

"தீர்மானிக்கப்பட்டது" என்கிறவார்த்தை Niphal perfect of “Chathak” which in the passive voice என்பதிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது இதன் பொருள் வெட்டப்பட்ட அல்லது வெட்டியெடுக்கப்பட்ட என்பதாகும். இதன் பொருள் 490 தீர்க்கதரிசன சந்திர ஆண்டு காலம் சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது, இது யூதர்களுக்கு கர்த்தர் ஆளுகை செய்ய வருமுன் குறிக்கப்பட்ட காலமாய் இருக்கிறது.

இதில் யார் உட்படுவர்? பரிசுத்த நகரத்தில் உள்ள ஜனங்கள் இது யூதர்களைக் குறிக்கிறது மற்றும் எருசலேம் அல்லது யூதேயாவில் உள்ளவர்களை குறிக்கிறது. இந்த 490 ஆண்டுகள் தேவனது திட்டத்தில் ஆவிக்குரிய அஸ்திபாரமாய் மேசியாவின் வருகையில் இடம்பெறுகிறவர்களாய் காணப்படுவர்.

எருசலேமிற்கும் யூத ஜனங்களுக்கு என்ன நிகழவிருக்கிறது என்பதை ஜெபத்திற்கு மறுமொழியாய் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இக்கேள்விகளுக்கு மறுமொழியாக காபிரியேல் கூறும்போது ஆறுகாரியங்களை இக்காலக்கட்டத்தின் இறுதிக்குள் நிறைவேற வேண்டும் எனக் கூறுகிறவராய் இருக்கிறார். இக்கால கட்டம் எப்பொழுது முடிவுக்கு வரும்? இந்து முழு ஜெபமும் யூதர்கள் மற்றும் எருசலெமைக் குறித்ததாய் இருக்கிறது, இது யூதர்களின் இறுதி யுகத்தைக் குறிக்கிறதாய் இருக்கிறதாய் இருக்கிறது. இது இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிகழ்வதாய் இருக்கிறது, இது இன்னும் நிறைவு பெறவில்ல. ஆறு காரியங்கள் பின்வருமாறு.

1. **மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், --** இது சட்டரீதியாக யூதர்கள் சிதறடிக்கப்பட்டது நிறைவுக்கு வருகிறதைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

இஸ்ர்வேல் ஒரு தேசமாய் இருந்து சிதறடிக்கப்பட்டு அது முடிவுக்கு வருவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிகழ்வதாய் இருக்கிறது, இராஜாவும் மேய்ப்பனுமானவர் யூதர்களை திரும்ப அழைத்து பாலஸ்தீன உடன்படிக்கையை நிறைவேற்றுகிறவராய் இருப்பார். சமீபத்திய நாட்களில் உலகெங்கும் சிதறடிக்கப்பட்டுள்ள யூதர்கள், திரும்ப சேர்கப்பட்டு வருகிறார்கள், இது 2015ல் நிகழ்ந்துள்ளது. மேசியா தனிப்பட்ட விதத்தில் அழைக்கும்போது அனைத்து யூதரும் திரும்ப சேர்க்கப்படுவார்கள்.

2. **பாவங்களைத் தொலைக்கிறதற்கும் --** இது அக்கினி ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது (வெளிப்படுத்தல் 20:10-15) ஆயிர வருட அரசாட்சிக்கு விசுவாசிகளை வேறுபிரிப்பதைக் காட்டுகிறது, அவிசுவாசிகள் பூமியிலிருந்து அகற்றப்படுவார்கள். இது இரண்டாம் வருகையில் மட்டும் நிகழ்வதாய் இருக்கிறது.

3. **அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும் --** இது இஸ்ரவேலை தேவனுக்குக் கீழாக திரும்ப கூட்டிச் சேர்ப்பதைக் காட்டுகிறது. யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிய போது அவர்களுக்கு பிரதாண ஆசாரியர் மற்றும் தீர்க்கதரிசி இருந்தனர் அவர்களுக்கு இராஜா இல்லை. கிறிஸ்து வரும்போது அவர் அர்களுக்கு தீர்க்கதரிசியும், ஆசாரியனும், இராஜாவுமாயிருப்பார். யூத மக்களுக்கு விரோதமாய் செய்யப்பட்ட அனைத்து அக்கிரமங்களும் "குமாரன்/நீதியின் சூரியன்" ஆளுகை செய்யும் போது அனைத்தும் நிறைவுக்கு கடந்து வரும்.

4. **நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், --** இது பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலாய் இருக்கிறது மற்றும் நித்தியமான பூரண எதிர்காலத்தின் ஆரம்பமாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருட ஆளுகையாகவும் இருக்கிறது. இது மறுபடியும் ஒரு முறை இயேசு இராஜாவாக ஆளுகை செய்யும் கண்ணோட்டமாய் இருக்கிறது.

5. **தரிசனத்தையும், தீர்க்கதரிசனத்தை முத்திரிக்கிறதற்கும், --** இது யூதர்கள் யுகத்தின் முடிவாயிருக்க, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது எருசலேமில் உள்ள யூதரின் ஜெபம் மற்றும் பதில் சம்பந்தமாய் இருக்கிறது. கர்த்தரின் வருகையானது தீர்க்கதரிசன வார்த்தையின் நம்பிக்கையின் நிறைவேறுதலாய் இருக்கிறது மற்றும் இது இறுதி செயல்பாடாய் இருந்து யூதர்களின் உடன்படிக்கையின் மக்களது தரிசனமும் மற்றும் தீர்க்கதரிசனமுமாய் இருக்கிறது.

6. **மகா பரிசுத்தமுள்ளவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும், --** இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சம்பந்தப்பட்டதல்ல. ஆனால் ஆயிர வருட

அரசாட்சியின் போது ஊழியத்திற்கென பிரதிஷ்டை செய்யப்படும் தேவாலயத்தைக் குறிக்கிறதாய் இருக்கிறது. இது குறித்து எசேக்கியேல் 40-48ல் விவரிக்கப்படுகிறது. இது யூதரால் தேவாலய சுத்திகரிப்பைக் காட்டுகிறதாய் இருக்கிறது, அந்தியோகஸ் IV அந்திக்கிறிஸ்துவுக்கு முன்னோடியாய் இருந்து தேவாலயத்தை பாழாக்கும் அருவருப்பால் தீட்டுபடுத்தினதிலிருந்து சுத்திகரிப்பதாய் இருக்கும், தீமையான விக்கிரகமானது தேவாலயத்திலிருந்து அகற்றப்பட்டு, அது திரும்ப தெய்வீக நிலையில் மறு பிரதிஷ்டை செய்யப்பட்டு, மோசேயின் பலிமுறைகள் திரும்ப செயல்படுத்தப்படும்.

காபிரியேலால் இக்கால கட்டம் தெளிவாகப் பேசப்பட்டு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிறைவுக்கு வருகிறதாய் இருக்கிறது. ஆகையால் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு, 490 யூத ஆண்டு காலங்கள் எஞ்சி இருக்கிறதாய் இருக்கிறது. இதற்கடுத்த மூன்று வசனங்களில், 70 ஆண்டுகாலங்கள் மூன்று பகுதிகளாய் பிரிக்கப்பட்டுள்ளன.

வசனம் 25, "{**25 இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்: எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுவதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழு வாரமும்,[49 ஆண்டுகள்] அறுபத்திரண்டு வாரமும் [434 ஆண்டுகள்] செல்லும், அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும். ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும்."**

வசனம் 25ல் காபிரியேல் தானியேலுக்கு கூறும்போது to know which is the Kal imperfect of “Yada” which is followed by the Piel imperfect of “Sakal” இதன் பொருள் அறிந்து உணர்ந்து கொள்ள வேண்டியது என்பதாகும். இங்குள்ள தொடர்காரியம் என்னவெனில், அறிந்து உணர்வடைய வேண்டும். the Piel stem is an intensive stem. இதில் கவனம் செலுத்த வேண்டும். வேதவசனங்களின் சத்தியத்தில் கவனம் செலுத்துவது அவசியமாய் காணப்படுகிறது.

நாம் 70 வார காலங்களை மூன்று பகுதிகளாய் பிரிக்கலாம். -- 7 வாரங்கள் + 62 வாரங்கள் + மீந்திருக்கும் ஒரு வாரம். இதை வருடக்கணக்கில் கணக்கிடும்போது 49 ஆண்டுகள் + 434 ஆண்டுகள் +7 ஆண்டுகள்.

இதன் துவக்க காலம் எது?

i) பெரிசிய இளவரசர்களால் தானியேலின் காலத்திற்குப் பின் மூன்று தாக்கீதுகள் யூதர்கள் தங்களது தாய்தேசம் திரும்புவதற்கு அளிக்கப்பட்டது அவையாவன:

1) கிமு 538ல் கோரேஸின் தாக்கீது கர்த்தரின் வீட்டை திரும்பக் கட்டுவதற்கான தாக்கீது (தேவாலயம்) (எஸ்றா 1:1-2).

2) மகா தரியூவின் தாக்கீது 520 கிமு வில், தேவாலயம் திரும்பக்கட்ட ஆரம்பம் (எஸ்றா 6:3) தரியூவின் தாக்கீது கோரேஸ் இதற்கு முன் அளித்த தாக்கீதை உறுதி செய்வதாய் இருந்தது, கோரேஸின் மரணத்திற்குப் பின் தேவாலய வேலையானது நிறுத்தப்பட்டிருந்தது.

3) **கி மு 445ல்** எருசலேம் மதில்கள் திரும்பக்கட்டப்படுவதற்காக **அர்தெஷெஸ்டா லாங்கிமெனஸின் தாக்கீது**. (நெகேமியா 2:1-8)

தானியேல் 9:25ன் படி 70 வாரங்களின் காலக்கடிகாரம் எருசலேமின் மதில்கள் திரும்பக்கட்ட தாக்கீது வெளிப்பட்ட முதல் ஓடத்தொடங்கியது. இது அர்தெஷெஸ்டாவின் தாக்கீது கிமு 445ல் அளிக்கப்பட்ட போது.

பெரிசிய இராஜாக்களின் வழக்கப்படி இது போன்ற கட்டளைகளை புது வருட துவக்கத்திலே வெளியிடுவது வழக்கம் யூதரின் நிசான் மாதம் 1ம் தேதியில் இது பிரகடனப்படுத்தப்பட்டது இது நமது ஈஸ்டர் தினத்திற்கு முந்தின தினத்தில் ஆகும்.

தானியேலின் 70 வாரங்களின் ஆரம்ப தினம் குறித்து ஸர். ராபர்ட் ஆண்டர்ஸன் கூறும்போது: இவர் New Scotland Yard ன் ஸ்தாபகர் மற்றும் கிறிஸ்தவ எழுத்தாளர்க்ளில் மிகவும் பிரபலமானவர். நமது காலக்கணக்கின்படி அர்தெஷெஸ்டா கி மு 445 மார்ச்சு மாதம் 13ம் தேதியில் இத்தாக்கீதை பிரகடனப்படுத்தியதாய் கூறுகிறார்.

யூதர்களின் புது வருடம் முதல் நாளில் இத்தாக்கீது வெளியிடப்பட்டதை நாம் அறிந்துள்ளபடி தானியேலின் 70வாரங்களின் துவக்கம் மார்ச்சு மாதம் 14ம் தேதி கி மு 445ல் துவங்கியது.

துவக்க காலம்: - கி மு 445 மார்ச்சு மாதம் 14ம் தேதி.

இக்கால அளவு: - 490 ஆண்டு காலம்.

இக்கால அளவின் முடிவு: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.

வசனம் 25ல் எருசலேமின் மதில்கள் திரும்ப கட்டி தீர 49 ஆண்டுகள் எடுத்துக் கொண்டது (7 வாரங்கள்) இது இக்கட்டான சூழலில் கட்டி முடிக்கப்பட்டது. வேதாகம் ஆதாரப்படி எருசலேமானது மிகவும் கடினமான சூழலில் கட்டி முடிக்கப்பட்டது.

இவ்வேதபகுதியானது வசனம் 26ல் தொடர்கிறதாய் இருக்கிறது, "**அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார். ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்தஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது.**"

இப்பகுதியை நாம் ஒரு பகுதியாய் பார்க்கும்போது, 69 வாரங்களின் ஆண்டுகளாய்ப் பார்க்கிறோம். (வசனம் 25 - 7+62) அல்லது 483 யூத ஆண்டுகள், மேசியா சங்கரிக்கப்படுதல், தனக்காக அல்ல.

இந்த மேசியா யார்? தீர்க்கதரிசனப்படி தீர்மானிக்கப்பட்ட காலத்தில் ஒரே ஒரு நபர் மட்டுமே இக்காலகட்டத்தில் அறிமுகப்படுத்தப்படுகிறார் -- அவர் இயேசு கிறிஸ்து.

லூக்கா எழுதின சுவிஷேசத்தில், குருத்தோலை ஞாயிரன்று எருசலேமில் நுழையும் போது, சிலுவையில் அறையும்படிக்கு, ஜனக்கூட்டம் இயேசுவை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவாக அவரை வரவேற்றது. (லூக்கா 19:38) இந்த ஒரே சமயத்தில் எருசலேமின் குடிகள் அவரை மேசியா என அழைத்தது குறிப்பிடத்தக்கது.

எப்பொழுது அவர் வெட்டப்பட்டார்? -- லூக்கா 3:1ன் படி இயேசு கிறிஸ்து திபேரியஸ் சீசரின் 15ம் ஆண்டில் ஞானஸ்நானம் பெற்றார். அவரது ஊழியம் மூன்று ஆண்டுகாலம் நீடித்த படியால் எருசலேமில் நுழைந்தது தியேரியஸின் 18ம் வருடத்தில் இருந்திருக்க வேண்டும்.

திபேரியஸின் தேதியை இவ்வாறு புரிந்து கொள்ளலாம் (பிறப்பு நவம்பர் 16 கிமு 42) அவன் சீசரானது செப்டம்பர் 18 கிபி 14ல். அவன் மார்ச்சு மாதம் 16ம் தேதி கி பி 37 வரை ஆட்சி செய்தான். எருசலேமில் நுழைந்தது திபேரியஸின் 18ம் ஆண்டில் அதாவது கிபி 32, குருத்தோலை ஞாயிறுக்கு முந்தி இருந்திருக்க வேண்டும்.

குருத்தோலை ஞாயிறு கிபி 32ல் எப்பொழுது என கணனி மூலம் கணக்கிட்டபோது, இயேசுக் கிறிஸ்து தனது ஊழியகாலத்தில் ஒரேமுறை

யூதருக்கு இராஜாவாய் அழைக்கப்படுகிறார் அது நிசான் மாதம் 10ம் தேதியில் அல்லது 6ம் தேதி எப்ரல் கிபி 32ல் ஆகும்.

இது சரியென்றால், 483 யூத ஆண்டை மேசியா வெட்டப்பட்டதை இவ்வாறு கணக்கிடலாம், 14ம் தேதி மார்ச்சு மாதம் 445 கி முவிற்கும் 6ம் தேதி ஏப்ரல் மாதம் கிபி 32 க்கும் இடைப்பட்ட காலம் 476 சூரிய ஆண்டுகள் 24 நாட்கள் ஆகும்.

மொத்த நாட்கள் கீழ்க்கண்ட வாறு இருக்கிறது:

476 சூரிய ஆண்டுகள் x 365 நாட்கள் = 173,740 நாட்கள்.

14 மார்ச்சு முதல் ஏப்ரல் 6ம் தேதி கிபி 32 வரை = 24 நாட்கள்

லீப் ஆண்டுகள் கிமு 445 முதல் கிபி 32 வரை = 116 நாட்கள்

ஆக மொத்த நாட்கள் = 173,880 நாட்கள்.

யூதரின் காலக்கணக்குப்படி 483 x 360 நாட்கள் = 173,880 நாட்கள்

எதிர்பாரத வண்ணம் இதோடு சம்பந்தப்பட்டவை முழுமையாகாது.

69 வாரங்களை குறித்த காலக்கணக்கு - 14ம் தேதி மார்ச்சு மாதம் கிமு 445 -- 483 ஆண்டுகள் -- 6ம் தேதி ஏப்ரல் கிபி 32 வரை.

கீழ்க்கண்ட கேள்விகள் இப்பொழுது எழக்கூடும்:

இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நிகழ்ந்து விட்டதா? - இல்லை.

இயேசுக் கிறிஸ்து எருசலேமுக்குள் பவனி சென்றது 7 ஆண்டுகளுக்கு அதிகமா? - ஆம். [Is it longer than 7 years since Jesus Christ rode into Jerusalem? - Yes]

இதினிமித்தம் 69 வாரங்களுக்கும் 70வது வாரத்திற்கு இடையே ஒரு நீண்ட இடை வெளி இருக்க வேண்டும்.

இரண்டாம் வருகை நிகழ்வது -- 32 கிபி -- இடைவெளி -- கடைசி 7 ஆண்டுகள் -- இரண்டாம் வருகை. எனக் கணக்கிடலாம்.

இந்த இடைவெளிக்காலத்தில் சபை யுகம் சரித்திரத்தில் நிகழ்ந்து வருகிறது, இது நாம் வாழும் காலத்தை குறிக்கிறதாய் இருக்கிற்து.

70வது வாரம் என்பது 7 ஆண்டுகளைக் குறிக்கிறதாய் இருக்கிறது (இந்த தீர்க்கதரிசனத்தில் மற்ற ஆண்டுகளைப் போல் இந்த 7 ஆண்டுகளும் சபையுகத்தின் இறுதியில் துவங்குகிறதாய் இருக்கும், இது சபை எடுத்துக் கொள்ளப்பட்டபின், சபையானது அகற்றப் பட்ட பின் இருக்கும். தானியேல் இந்த நாளானது அந்திக்கிறிஸ்து சமாதன உடன்படிக்கைக்கு அந்த நாளில் இஸ்ரவேலை ஆளுகிறவருடன் கையெழுத்து போடும் நாளிலிருந்து துவங்கு வதைக் காண்கிறவராய் இருக்கிறார். அந்நபர் ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாய் இருப்பான் அவன் சாத்தானின் சேவகனாயும் இருப்பான். இந்த 70 வாரங்களில் 7 ஆண்டுகள் மிகவும் மோசமான 7 ஆண்டுகளாய் இருக்கும் மனித சரித்திரத்தில் வேதாகமத்தில் உபத்திரவ காலம் என அழைக்கப்படுகிறது, இது யாக்கோபுக்கு இக்கட்டு காலம் எனவும் அறியப்படுகிறது.

சரித்திர காலகட்டத்தில் மேசியாவின் மரணத்திற்கு பின் இரண்டாம் பாதியானது கொடுக்கப்பட்டுள்ளது இது வசனம் 26லும் வசனம் 27லும் கொடுக்கப்பட்டுள்ளது

வசனம் 26ல் தொடர்வது, "**நகரத்தையும் பரிசுத்தஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள். அதின் முடிவு ஜலப்பிரவாகம்போல இருக்கும். முடிவு பரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது.**"

பிரபுவானவன் ரோமத் தளபதியாய் இருந்தான் பின்னர் அவன் சக்கரவர்த்தியாய் மாறினான் அவன் பெயர் வெஸ்பாஸியன், அவனைத் தொடர்ந்து அவன் குமாரன் தளபதியாய் இருந்தான் (பின்னர் அவன் சக்ரவர்த்தியானான்) டைடஸ் லேகியோனுக்கு அதிகாரியாய் இருந்தான் அவன் கிபி 70ல் எருசலேமை அழித்துப்போட்டான். அவர்கள் ஒரே ஒரு சுவரை மீதமாய் வைத்தனர், அது அழுகையின் சுவர் என அறியப்படுகிறது. அவர்கள் தேவாலயத்தை அழித்துப் போட்டனர். இன்றைய அளவில் எருசலேமில் தேவாலயம் இல்லை, ஆனால் தேவாலயம் கட்டுவதற்கான ஸ்தலம் மட்டும் இருக்கிறது. தற்சமயம் அரேபியரின் மசூதி ஒன்று அதற்கு அருகில் இருக்கிறது. தேவாலயத்தின் உண்மையான ஸ்தலமானது மேற்கே அமைந்து முத்திரிக்கப்பட்டு இருக்கிறது "பொன் அல்லது கிழக்குவாசலுக்கு" அருகில் தேவாலய மலை காம்ப்ளக்ஸ் இருக்கிறது (அந்த ஸ்தலத்தில் கிழக்கு வாசலானது முன்னதாகவே கட்டப்பட்டுவிட்டது) மகா பரிசுத்த ஸ்தலத்தின் ஸ்தலமானது கப்போலாவின் மோசே மூலம் குறியிடப்பட்டுள்ளது.

ரோமர்கள் தேவாலயத்தை முழுவதுமாய் அழித்துப் போட்டனர், மற்றும் எருசலேமில் இருந்த 100,000 ஜனங்களையும் கொன்றுபோட்டனர். மற்றும் இரண்டு மில்லியன் ஜனங்களை சிறைபிடித்து கொண்டு சென்றனர். ஜெஸூபியஸ் கூறும்போது அது படுகொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளமாய் காட்சியளித்தது என்கிறார். "பாழாக்குதல் நியமிக்கப்பட்டது" இது இறுதி யுத்தம் வரை இருக்கும் மற்றும் இறுதி யுத்தம் இன்னும் ஆரம்பமாகவில்லை ஆகையால் நாம் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து கலகத்தை எதிர்பார்க்கலாம் கர்த்தர் வருமளவும் இது தொடர்கிறதாய் இருக்கும். மிகவும் கலகத்தின் காலம் கடைசி மூன்றறை வருடமாய் இருக்கும் இது உபத்திரவ காலத்தில் சம்பவிக்கும் ஆனால் இதற்கு முன் அந்திக்கிறிஸ்து யுத்தம் செய்து ஒரே உண்மையான கடவுளை ஆராதிப்பவருடன் யுத்தம் செய்வான். மற்றும் அவன் விக்கிரக ஆராதனையை ஸ்தாபிப்பான். இக்காலகட்டத்தில் அந்த தேவாலய மலையின் தேவாலயமானது கட்டப்பட்டிருக்கும் இது உபத்திரவ காலத்தின் போது செயல்படுவதாய் இருக்கும்.

வசனம் 27ல் இறுதி வாரத்தைக் குறித்த பொதுவான் தீர்க்கதரிசனத்தைக் காண்கிறோம், "**அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்றபோது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார். அருவருப்பான செட்டைகளோடு பாழாக்குகிறவன் வந்து இறங்குவான். நியமிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்."**

அந்திக்கிறிஸ்து, மேற்கத்திய சர்வ அதிகாரி கிறிஸ்துவின் இரண்டாம் வ்ருகைக்கு முன்பு தனது காலத்தில் உடனே யூதர்களுடன் ஏழு ஆண்டு காலங்களுக்கு சமாதான உடன்படிக்கை செய்வான், முதல் மூன்றறை வருடத்தில் அவனுக்கு ஆதரவளிப்பவர்களுக்கு சமாதானமும் செழிப்பும் உண்டாகும். அவன் பலி மற்றும் காணிக்கைகளை அனுமதிப்பான் முதல் பாதிக்காலத்தில் தேவாலயத்தில் இவைகளை நிறைவேற்ற அனுமதிப்பான். இக்காலத்திற்கு முன் வேறொரு ஆலயம் இருந்திருக்க வேண்டும் தெளிவாய் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. அது உபத்திரவ கால தேவாலயம் அது சாத்தானுக்கு செய்யப்படுவனவையால் தீட்டுப்பட்டு இருக்கும், கர்த்தர் இதை தமது வருகையின் போது புதுப்பிப்பார்.

கர்த்தரின் பாதங்கள் எருசலேமை தொடும் முன்னர் பெரிய பூமியதிர்ச்சி உண்டாகி அது எருசலேம் நகரை சமமாக்கும், ஆகையால் உபத்திரகால தேவாலயம் இடிக்கப்பட்டுபோகும், மட்டுமின்றி தற்போதைய சுவர்களும், மசூதியும் கூட இடிந்து போம். வெளிப்படுத்தல் 16:17-21. இதைக் குறித்து

கவலை கொள்ளுதல் வேண்டாம், ஆயிர வருட ஆளுகைக்கான தேவாலயம் உருவாகும், எருசலேமின் முழு பூமியும் சமமாகும் மற்றும் உருமாற்றமடைந்து அருகில் உள்ள குன்றுகள் அனைத்தும் 1500 அடி தாள விழுந்து போகும்.

ஏழு ஆண்டுகளில் பாதி கடந்த போது மேற்கத்திய சக்ரவர்த்தி (மிருகம், பாவ மனுஷன், அந்திக்கிறிஸ்து) பலிகளை ஓயப்பண்ணி, தனது சிலையை தேவாலயத்தில் வைத்து அதை ஆராதிக்கும்படி செய்வான் [வெளிப்படுத்தல் 13] தானியேல் புத்தகத்தில் பின்னுள்ள அதிகாரங்களில் இது குறித்த காலத்திற்கு வருவோம். எப்படியிருப்பினும், கர்த்தரது வ்ருகையின் போது, அந்திக்கிறிஸ்து, கள்ளத்தீர்க்கதரிசி, எல்லா அவிசுவாசிகளையும் அகற்றி விடுவார். வெளிப்படுத்தல் 19-20. பின்னர் தமது இராஜ்ஜியத்தை பூமியில் ஸ்தாபிப்பார், ஆயிர வருட புதிய தேவாலயம் அதன் ஸ்தானத்தில் உருவாக்கப்படும். பூமியதிர்ச்சியானது முழுவதுமாய் இன்றைய அளவில் மலையை மாற்றி அமைக்கப்போகிறது. ஆயிரவருட அரசாட்சியின் போது (எசேக்கியேல் அதிகாரம் 40-48) எருசலேம் ஒரு துறைமுகமாகி கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்ளும். இதன் பொருள் இதன் புவியல் அமைப்பானது பூமியதிர்ச்சியால் மாறி ஆயிரம் அடி தாள உருவாகி சவக்கடலானது பள்ளத்தாக்கு மூலம் எருசலேம் அருகில் கடந்துவருவதாய் இருக்கும் அக்கபா வளைகுடாவானது திறவுண்டு ஒரே சமுத்திரமாகும்.

தானியேலின் 70 வாரங்கள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகிறது:

<u>கிமு 445 -- 483 ஆண்டுகள் -- கிபி 32 -- சபையுகம் [அறியப்படாத காலப்பகுதி] -- சபை எடுத்துக்கொள்ளப்படுதல் -- 7 ஆண்டு உபத்திரவகாலம் -- இரண்டாம் வருகை.</u>

கைக்கொள்ளுதல்

நாம் கர்த்தரை உண்மையாய் தேடுவோமெனில், அவர் புரிந்துகொள்ளும் உணர்வையும் மற்றும் திறைமையும் அளித்து தெய்வீக அறிவையும் மற்றும் வழிநடத்துதலையும் அருளுவார்.

கர்த்தருக்கு அவசியமானது கீழ்ப்படிதலும் மற்றும் முதிர்ச்சியுமாகும், இதினிமித்தல் நாம் தேவனிடம் அவருக்கு சித்தமானதை நமக்குக் காட்ட அவரிடம் கேட்கலாம்.

நாம் கிறிஸ்தவர்களாய் அதிக முதிர்ச்சியடையும்போது, சரியான வற்றைக் கேட்க முயலுவோம்.

இப்பொழுது கர்த்தர் தமது வார்த்தைகள் மூலம் நமக்கு போதிக்கிறவராய் இருக்கிறார், அது ஜீவிக்கிறதும் மற்றும் என்றேன்றும் நிலைத்திருக்கிறதுமாய் இருக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நமக்கு கர்த்தர் நமது ஜீவனாயும், எல்லாமாயும் இருக்கிறார். நாம் எந்த சூழலிலும் ஓர் அடிமையாக இல்லை. ஒவ்வொரு நாளும் கர்த்தருடன் அற்புதமான தினமாய் இருக்கிறது. என்ன நடந்தாலும் கர்த்தர் நமது ஜீவனைக் காக்கிறவராய் இருக்கிறார்.

வேதவசனத்தின் சத்தியத்தை கற்றுக்கொள்ள மும்முரமான அழ்ந்த அறிவு அவசியமாய் இருக்கிறது.

இங்கு மேசியா தனக்காக மரிக்கவில்லை என்பதைக் காட்டுகிறவராய் இருக்கிறார், ஆனால் அவர் உலகின் பாவங்களுக்காய் மரித்து இருக்கிறார். இந்த தீர்க்கதரிசனம் கர்த்தர் வருவதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பதாய் உரைக்கப்பட்டது.

வசனம் 26ல் தேவாலயம் அழிக்கப்பட்டது, எனக்காண்கிறோம் இது தீத்து இராயனாலும் மற்றும் லேகியோன்களாலும் கிபி 70 அழிக்கப்பட்டது.

வசனம் 27ல் எப்படியிருப்பினும் பலிமுறைகள் நிறுத்தப்பட்டது எனக்கூறப்பட்டுள்ளது இது மிக நெருக்கமான நிலையில் எருசலேமில் மறுபடியும் தேவாலயம் அமையப்போவதைக் காட்டுகிறது.

In verse 27 however the sacrifices are again said to cease intimating that there is a Temple again in Jerusalem.

வசனம் 26 மற்றும் 27க்கு இடைபட்ட காலம் 1900 ஆண்டுகளுக்கு மேலாகும். இங்கு உலக சரித்திரத்தை நாம் முன்கூட்டியே படிக்கிறவர்களாய் இருக்கிறோம்.

DOCTRINE உபதேசம்

JERUSALEM எருசலேம்

Notes

CHAPTER 10 அதிகாரம் 10.

10 ம் அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேல் பத்தாம் அதிகாரத்தை ஐந்து பிரிவுகளாய் பிரிக்கலாம்:

தரிசனத்திற்காக தானியேலின் ஆயத்தம் வசனங்கள் 1-10.

மகிமையடைந்த கிறிஸ்துவின் தரிசனம் வசனங்கள் வசனங்கள் 5-6.

தானியேல் மீது மறுரூபமடைந்ததன் விளைவு வசனங்கள் 7-9.

பரலோக செய்தியாளரிடமிருந்து செய்தி வசனங்கள் 10-14.

தானியேல் நிச்சயப்படுதலும் மற்றும் பெலப்படுத்தப்படுதலும் வசனங்கள் 15-21.

முன்னுரை:

தானியேல் புத்தகமானது இனி வரும் விசுவாச சந்ததிக்கு சத்திய வெளிப்படுகளை வருணிக்கும் ஓர் தெளிவான புத்தகமாய் விளங்கி வருகிறது. புதிய உபதேசங்களும், மற்றும் அடிப்படைக் கருத்துக்களும் வெளிப்படுத்தப்பட்டு கர்த்தர் விரும்பும் வகையில், அவரது திட்டத்தின்படி அளிக்கப்பட்டிருக்கிறது.

காரியங்கள் தேவனுடையை வழிநடத்துதல்படி வெளிப்படுத்தப்பட்டு, அவரது நித்திய திட்டத்தின்படி அளிக்கப்பட்டுள்ளது. இது மனித வாஞ்சையின்படி அல்ல. சபையை குறித்த உபதேசங்கள் பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படவில்லை, மற்றும் சாத்தான் பெந்தகொஸ்தே நாளில் ஆச்சரியத்திற்கேதுவாக எடுத்துச் செல்லப்பட்டான். யூதப்பண்டிகை அதற்கு முந்தின தினம் வரை ஒருவரும் இதைக் குறித்து அறிவு இல்லாதவர்களாய் இருந்தனர், யூதர்கள் விடுதலையாக்கப்படும்வரைக்கும் அவர்களுக்கு பத்து கட்டளைகள் அவசியப்படவில்லை. அவர்கள் மக்ன கார்ட்டாவை பிரதிபலிக்கிறவர்களாய் இருந்தனர். இந்த அடிப்படைக் கருத்தானது உபத்திரவகாலத்தில் தொடர்கிறதாய் இருந்தது.

தானியேலுக்கு பல ஆண்டுகாலங்களில் போதனை வழிமுறைகள்/ தகவல் அளிக்கும் வழிமுறை நமது ஆர்வத்தைத் தூண்டுகிறதாய் இருக்கிறது. அதிகாரம் 1ல் கல்தேய அரங்கத்தில் தானியேல் கற்றுக்கொள்ளும் மாணவனாய் இருக்கிறார், அதிகாரம் 2ல் தேவன் சொப்பனங்களுக்கு வியாக்கியானம் அளிக்கும் வரத்தை அளிக்கிறவராய் இருக்கிறார். பின்னர் தனக்குதானே சொப்பனங்களைக் காண்கிறவராகவும், 7,8ம் அதிகாரங்களில், தேவ தூதரால் நேரடியாக போதிக்கப்படுகிறவரயும் விளங்குகிறார். இது அவருக்கு அளிக்கப்பட்ட வழி முறைகளில் முன்னேற்றங்களை அளிக்கிறதாய் இருந்து, மற்றும் தானியேலுக்கு மனித சரித்திரத்தின் முற்கண்ணோட்டத்தை பெற்று பலவிதமான் வெளிப்பாடுகளை அடைய உதவியாய் இருந்தது.

பகுதி 41 - தானியேலின் தரிசனத்திற்கான ஆயத்தம் தானியேல் 10:1-4.

1 பெர்சியாவின் இராஜாவாகிய கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பெல்தெஷாத்சார் என்று பெயரிடப்பட்ட தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப்பட்டது; அந்தக் காரியம் சத்தியமும் நீடிய யுத்தத்துக்கு அடுத்ததுமாயிருக்கிறது; அந்தக் காரியத்தைஅவன் கவனித்து, தரிசனத்தின் பொருளை அறிந்து கொண்டான். 2 அந்த நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரமுழுவதும் துக்கித்துக் கொண்டிருந்தேன். 3 அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசிகரமான அப்பத்தை நான் புசிக்கவுமில்லை, இறைச்சியும் திராட்சைரசமும் என் வாய்க்குள் போகவுமில்லை. நான் பரிமளதைலம் பூசிக்கொள்ளவுமில்லை. 4 முதலாம் மாதம் இருபத்துநாலந்தேதியிலே நான் இதெக்கேல் என்னும் பெரிய ஆற்றங்கரையில் இருந்து,

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

கோரேஸ் கிமு 559ல் பெரிசியாவின் இராஜாவாக பதவி ஏற்றபோது, மேதியாவைக்கீழ்ப்படுத்தி, பெரிசியர்கள் எக்பாட்னாவை கிமு 550ல் தலைமைப் பட்டணமாய் அமைத்துக் கொண்டனர். அவன் லிதியர்களின் மீது கிமு 547ல் தாக்குதல் நடத்தினான், கிமு 546ல் அவர்களை தோற்கடித்தான். அவன் பாபிலோனை கிமு 539ல் தோற்கடித்தான். கோரேஸின் மூன்றாம் வருஷத்தில் பலவழிகளில் ஈடுபட்டதை காண்கிறோம். அவனது மூன்றாம் வருடத்திலே அவனது அரசபதவி பெலப்பட்டது, கி மு 546ல் இரு அரியணைகளில் அவன் ஆட்சி புரிந்தான். அவன் கிமு 536ல் பாபிலோன் மீது இரஜாவாகி யூதர்கள் தங்கள் தாயகம் திரும்புவதற்கான தாக்கீதை அறிவிக்கிறவனாய் இருந்தான். இவனது

மூன்றாம் ஆண்டில் இரு முக்கியமான காரியங்கள் நிகழ்ந்தது ஒன்று லிதியாவின் க்ரோஸஸை தோற்கடித்தது, இரண்டாவது யூதர்கள் தாயகம் திரும்புவதற்கான தாக்கீதை அறிவித்தது.

"காரியம்" எகிற வார்த்தையின் பொருள் உபதேசம் என்பதாகும், தேவனிடமிருந்து சத்தியங்கள் என்பதாகும். இந்த தருணத்திலே உபதேசமானது தானியேலுக்கு வெளிப்படுத்தப்பட்டது. என்ன வெளிப்பட்டது என்பதே 11 ம் அதிகாரத்தின் பொருளடக்கமாய் இருக்கிறது. அது தானியேல் காலம் முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையுள்ள சரித்திர காலமாகும். இதில் ஆரம்பமாகும் சபையுகம் என்பது குறிப்பிடப்பட வில்லை.

தானியேல் பெல்ஷாத்சார் என்னும் கல்தேய பெயரால் அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. தானியேல் 11ம் அதிகாரத்தில் எழுதப்பட்ட அனைத்தையும் நன்கு புரிந்து இருந்தார். புரிந்து கொள்ளுதல் என்பதற்கான எபிரெய வார்த்தை “Bin” என்பது அதன் பொருள் அதைப் புரிந்து கொண்டது மட்டுமல்லாது அதைக் கைக்கொள்ளவும் செய்தல் என்பதாகும். காபிரியேல் போதித்து தானியேல் எழுதும்போது அவர் கற்றுக்கொண்டதை எழுதினார். அவர் உலக சரித்திரத்தைக் காணும்போது ஒரே மார்க்கத்தில் காண்கிறவராய் இருந்தார், அது மேசியாவின் இறுதி வெற்றியாய் இருந்தது. மட்டுமின்றி யூத ஜனங்களுக்கும் விசுவாச மக்களுக்கும் அக்காலத்தில் உண்டாக இருக்கும் உபத்திரவத்தையும் அறிகிறவ்ராய் இருந்தார்.

புரிந்துகொள்ளுதல் என்கிற வார்த்தை “Binah” இது ஒர் பெயர்ச்சொல்லாய் இருக்க வினைச் சொல் போன்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் பொருள் பகுத்தறிதல் மற்றும் கற்றுக்கொண்டு அதனைக் கடைபிடித்தல் ஆகும்.

வசனங்கள் 2 மற்றும் 3ல் தரிசனம் கண்ட சமயம் கூறப்பட்டுள்ளது. King James Version ல் தானியேல் மூன்று வாரமளவும் துக்கித்து கொண்டிருந்தார் எனக் கூறுகிறது. "துக்கித்தல்" என்கிற வார்த்தை is the Hithpael participle of ”Abal”. இதன் பொருள் உபவாசித்தல் என்பதாகும். மூன்று வாரங்கள் தானியேல் உபவாசித்து ஜெபித்தார். உபவாசம் ஜெபத்திற்காய் ப்யன்படுத்தப்பட்டது மற்றும் வேத பாடம் கற்று கொள்வதற்குமாக இருந்தது. இந்த தியாகமான வேத பாடம் மற்றும் ஜெபம். தானியேல் சிறையிருப்பு ஓர் முடிவுக்கு வருகிறதாய் இருப்பதை புரிந்துகொண்டிருந்தார்.

வசனம் 3ல் தானியேல் தனது உபவாசத்தை விவரித்துக் கூறும் "ருசிகரமான அப்பம் என் வாய்க்குள் போகவில்லை" என்கிறார் இறைச்சி மற்றும் திராட்சை இரம் பானம் பண்ணவில்லை என்கிறார். வாசனை

திரவியம் எதுவும் பூசிக்கொள்ளவில்லை என்கிறார், இவ்வாறு மூன்று முழுமையான வாரத்தைக் கடத்துகிறவராய் இருந்தார்.

புசிப்பது என்பதற்கான வார்த்தை "Akal" in the Kal present with a negative இது ருசிகரமான அப்பம் புசிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. மற்றும் திராட்சை இரசம் பாணம் பண்ணவில்லை என்பதையும் குறிக்கிறதாய் இருக்கிறது. பண்டைய உலகில் ஒவ்வொருவரும் திராட்சை இரசம் அருந்தி வந்தனர். தண்ணீர் அசுத்தமுள்ளதாய் இருந்தபடியால் திராட்சை இரசம் வழக்கமாய் தண்ணீருக்குப் பதிலாய் பயன்பட்டு வந்தது. இது தண்ணீரை சுத்திகரித்து அதில் கிருமிகளை கொல்லுகிறதாய் இருந்தது.

தானியேல் தான் உபவாசிப்பதைமற்றவர்களுக்கு வலியுறுத்திக் கூறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது, இக்காலக்கட்டங்களில் வாசனை திரவியங்களை பூசிக்கொள்ளவில்லை. மத்தேயு 6:16-18. பெரிசியர்கள் குளித்து முடித்த உடனே தங்களில் வாசனை திரவியங்களைப் பூசிக்கொள்வர். இது போன்ற வாசனை திரவியங்களை தானியேல் பூசிக்கொள்ளவில்லை, இதை அவருக்கு நெருங்கினவர்கள் மட்டும் அறிந்தவர்களாய் இருந்தனர்.

வசனம் 4ல் உபவாச நாள் முடிந்ததன் சரியான நாள் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிகழ்வானது இதெக்கேல் நதி ஓரம் நிகழ்ந்ததாய்க் காண்கிறோம். இந்நதியை டைகிரிஸ் என அறிகிறோம். இந்நதியானது 1000 கிலோமீட்டர் நீளமுள்ளது, இந்நதிக்கரையில் சரியாக எந்த இடத்தில் தானியேல் உபவாசித்தார் என்பதை நாம் அறியோம்.

கைக்கொள்ளுதல்:

மனிதனுக்கான தேவனுடைய வெளிப்பாடுகளை எல்லாக் கிறிஸ்தவர்களும் புரிந்து கொண்டு அவற்றை பிறருக்கு போதிப்பது மிகவும் அவசியமானதாய் இருக்கிறது.

நீங்கள் ஒரு நல்ல போதிப்பவராய் இருந்து உங்கள் மாணவருக்கு நீங்கள் அறிந்த அனைத்தையும் போதிப்பது அவர்கள் பெரிதளவில் கிறிஸ்தவ முதிர்ச்சியடைவதற்கும், பெரிய கிறிஸ்தவர்களாய் வளரவும் ஒரு தருணத்தை அவர்களுக்களித்து உங்கள் கிறிஸ்தவ சாட்சியினை விளங்கப்பண்ணுகிறதாய் இருக்கிறது.

உபவாசம் என்பது ஜெபத்திற்கும் வேதபாடத்திற்கும் நேரத்தை செலவிடுவதாய் இருக்கிறது, இது மற்ற நல்லகாரியங்களுக்கு சட்டரீதியாய் பயன்படுத்தப்படக்கூடியதாயும் இருக்கிறது.

துறவரம் என்பது ஆவிக்குரிய ஒரு காரியமல்ல என்பதை அறிந்து கொள்வது முக்கியமான ஒன்றாய் இருக்கிறது. மதவாதிகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உபவாசித்து, தங்கள் சரீரங்களை கெடுத்து வந்தார்கள் இது உபவாசமல்ல. உபவாசம் என்பது மனோ நிலை சார்ந்ததாயும், வேத வசனங்களைக் கற்றுக்கொள்வதற்கு, வழி நடத்தப்படுவதற்காய்ஜெபிப்பதற்கும் செய்து கொள்ளும் அற்பணிப்பைக் காட்டுகிறதாய் இருக்கிறது. சரீர கடினத்துவத்துடன் மனதை செலுத்தி, மற்றவர்களின் கவனத்தை ஈர்க்காத வண்ணம் செயல்படும் ஒன்றாய் இருக்கிறது.

அதிக எடையுள்ளவர்களாய் இருப்பீர்களானால், உணவை ஒதுக்கி வைப்பது சரீர லாபத்தை அளிக்கிறதாய் இருக்கிறது, ஆவிக்குரிய நன்மையடைய ஜெபத்திலும், தேவனது சித்தத்தை அறிவதிலும் கண்ணோட்டம் செலுத்தும்போது அவைகளை அடைந்து கொள்கிறவர்களாகிறோம். 1 கொரிந்தியர் 8:8, 1 தீமோத்தேயு 4:3. உபவாசம் என்பது சரீரத்தையும், ஆத்துமாவையும் கர்த்தருக்கென அற்பணித்து, ஆகாரம் உட்கொள்ளாமல், வேத வசனத்தின் மீது வழி நடத்துதலுக்காய் கவனம் செலுத்துவது ஆகும்.

DOCTRINE உபதேசம்:

FASTING உபவாசம்

Notes

பகுதி 42 - மகிமையடைந்த கிறிஸ்துவின் தரிசனம். தானியேல் 10:5-6.

5 என் கண்களை ஏறெடுக்கையில், சணல் வஸ்திரந்தரித்து, தமது அரையில் ஊபாசின் தங்கக்கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன். 6 அவருடைய சரீரம் படிகப்பச்சையைப்போலவும், அவருடைய முகம் மின்னலின் பிரகாசத்தைப்போலவும், அவருடைய கண்கள் எரிகிற தீபங்களைப்போலவும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல நிறத்தைப்போலவும், அவருடைய வார்த்தைகளின் சத்தம் ஜனக்கூட்டத்தின் ஆரவாரத்தைப்போலவும் இருந்தது.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

இந்த வசனங்கள் தரிசனத்தின் பொருளடக்கம் குறித்து கூறுகிறதாய் இருக்கிறது. தானியேல் தனது கண்களை ஏறெடுத்து கவனம் செலுத்துகிறவராய் இருக்கிறார். கவனம் செலுத்துதல் என்பதற்கான எபிரெய வார்த்தை “Raah” என்பதாகும், which is in the Kal imperfect, இதன் பொருள் தொடர்ந்து பார்த்தல் அல்லது கவனித்துப் பார்த்தல் என்பதாகும். கவனம் செலுத்துதல் ஆவிக்குரிய முதிர்ச்சியுடன் வருகிறதாய் இருக்கிறது. பல வருடங்களாக வேத பாடம் மற்றும் ஜெபம் போன்றவைகளுக்கு அற்பணித்து கட்டியெழுப்புகிறவர்களாய் இருக்கிறோம்.

இந்த வேதபாடம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவால் துவங்கப்பட்டு, காபிரியேல் தேவ தூதனால் அறிமுக போதனை செய்யப்படுகிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தோற்றம் இங்கு Christophony, என்று அழைக்கப்படுகிறது, இது அவரது அவதாரத்தை முன்னிட்டு சரீர தோற்றத்தில் காணப்படுவதாய் இருந்தது. பூமியில் கிறிஸ்துவின் அவதாரத்திற்குப் பின் Christophonies என்பது இல்லாதிருந்தது. இருப்பினும் யோவான் தனது தரிசனத்தில் பரலோகில் கர்த்தரை தரிசிக்கிறவராய் இருந்தார். அவர் அரசாள திரும்புகிறவராய் இருக்கிறார்.

Christophonies க்கான உதாரணங்கள் ப்ழைய ஏற்பாட்டில் அடிக்கடி நிகழ்ந்துள்ளன. ஆதியாகமம் 18ல் ஆபிரகாம் சந்தித்த நபர், சோதோம் கொமோராவை அழிக்க வெளிப்பட்டது, ஆதியாகமம் 32ல் யாக்கோபுடன் போராடிய மனிதர். யோசுவா 5ல் சேனைகளின் கர்த்தராக யோசுவாவுக்கு தோன்றினவர், கிதியோனோடு தொடர்பு கொண்ட நபர், அக்கினி சூலையிலே மூன்று நபர்களுடன் தோன்றின நபர், இந்த வேதபகுதியில் ஆற்றங்கரையில் தோன்றின நபர் அனைவரும் ஒருவரே. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் விளக்கத் தோற்றம் வெளிப்படுத்தல்

1ல் கூறப்பட்டதற்கு மிகவும் ஒத்த நிலையில் காணப்படுகிறதாய் இருக்கிறது.

எசேக்கியேல் 1:26-28ல் மற்றொரு விளக்கத்தைக்காண்கிறோம். *"26 அவைகளின் தலைகளுக்குமேலுள்ள மண்டலத்தின் மீதில் நீல இரத்தினம்போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்த சிங்காசனத்தின் சாய்லின் மேல் மனுஷசாயலுக்குஒத்த ஒரு சாயலும் இருந்த்து. 27 அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக்கண்டேன். அவருடைய இடுப்பாகக் காணப்பட்டு முதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன். 28 மழை பெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப்பிரகாசம் காணப்பட்டது. இதுவே க்ர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது, அதை நான் கண்டபோது முகங்குப்புற் விழுந்தேன். அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன். "*

மற்றொரு வேத பகுதியில் அவரது மகிமையும் மற்றும் வல்லமையும் சுட்டிக்காட்டபடுகிறது. வெளிப்படுத்தல் 1:13-16. *"அந்த ஏழு குத்துவிளக்குகளின் மத்தியிலே, நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன். 14 அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலைப் போலிருந்தது. 15 அவருடைய பாதங்கள் உலைக்கலத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது, அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. 16 தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார், அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது.*

உப்பாசின் தங்கம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தங்கம் எவ்விடத்தைச் சார்ந்தது என்பதை நாம் அறியோம். இது மிகவும் உயர்ந்த தரத்தை உடையதாய் இருந்தது. இதன் தரமானது பண்டைய உலகில் நன்கு அறியப்பட்டிருந்தது. இது பெரிதான ஐசுவரியமாய் பெரிசிய இராணுவத்திற்கு குறிப்பிடத்தக்கவிதத்தில் அளிக்கப்பட்டிருந்தது.

The Christophony யானது ஆற்றங்கரையில் காணப்படுகிறதாய் இருந்தது, தானியேலுக்கு காபிரியேல் போதனை செய்கிறபோது அருகில் காணப்படுகிறதாய் இருந்தது.

கைக்கொள்ளுதல்:

இயேசுக் கிறிஸ்து தனது மகிமையில் முறண்படாதவராயிருந்து, காலகாலா காலங்களில் தனது ஊழியத்தை வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார்.

கர்த்தரைக் குறித்து ஒரு நபர் அறிந்து கொள்ள விருப்பம் கொள்ளும்போது, அந்நபருக்கு தேவனைக் குறித்த வெளிப்பாட்டின் அடிப்படைக் கருத்துக்களை கேள்விப்படும் தருணங்களை அளிக்கிறவராய் இருக்கிறார். அதைக் காலச் சந்தர்ப்பங்களுக்கு தகுந்தவாறு அந்நபர் தேவன்து திட்டத்தில் அமைந்திருப்பாரெனில் வெளிப்படுத்திக் காட்டுகிறவராய் இருக்கிறார்.

The Christophony என்பது எப்பொழுதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியதாய் இருக்கிறது, தெய்வத்துவத்தில் அவர் ஒருவரே காணப்பட்டக்கூடியவராய் இருக்கிறபடியால், இது சாத்தியமாய் இருக்கிறது. பிதாவாகிய தேவனையோ, பரிசுத்த ஆவியானவரையோ ஒருவரும் இதுவரைக் கண்டதில்லை. யோவான் 1:18, 6:46, 1 தீமோத்தேயு 6:16, 1 யோவான் 4:12.

DOCTRINE உபதேசம்:

ANGEL OF JEHOVAH யெகோவாவின் தேவ தூதர்.

Notes

பகுதி 43 - தானியேல் மீது மறுரூபமாகும் தன்மை: தானியேல் 10:7-9.

7 தானியேலாகிய நான் மாத்திரம் அந்தத் தரிசனத்தைக் கண்டேன். என்னோடே இருந்த மனுஷரோ அந்தத் தரிசன்த்தைக் காணவில்லை, அவர்கள் மிகவும் நடுங்கி ஓடி ஒளித்துகொண்டார்கள். 8 நான்

தனித்துவிடப்பட்டு அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன். என் பெலனெல்லாம் போயிற்று. என் உருவம் மாறி வாடிப்போயிற்று. திடனற்றுப்போனேன். 9 அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன். அவருடைய வார்த்தைகளின் சத்தத்தை நான் கேட்கும்போது, நான் முகங்கவிழ்ந்து நித்திரை போகிறவனாய்த் த்ரையிலே முகங்குப்புற விழுந்துகிடந்தேன்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 7ல் நாம் தானியேலுடன் இருந்த மற்றவர்களின் பிரதிக் கிரியை பார்க்கிறோம். அவர்கள் தரிசனத்தைக் காணவில்லை. எப்படியிருப்பினும் அவர்கள் நித்திய இடம் மற்றும் காலம் இவைகளால் தொடப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் பயப்பட்டு அவ்விடத்தை விட்டு ஓடியிருக்க வேண்டும். மற்ற மக்கள் தகுதி பெறவில்லை, இவ்வகையான உபதேசத்தைப் பெற தகுதியற்றவர்களாய் இருந்தனர். அறிய வேண்டியவைகளை அறிந்து கொள்ள, கர்த்தர் சில அடிப்படை கொள்கைகள் மூலம் செயலாற்றுகிறவராய் இருக்கிறார். நாம் சில காரியங்களை அறிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவைகளை அறிந்து கொள்ளாதபட்சத்தில் ஒரு காரியமும் வெளிப்படுத்தப்பட மாட்டாது. இதன் காரணமாய் உபத்திரவ காலத்தைக்குறித்த அநேக விளக்கங்கள் நமக்கு இன்னும் மறைபொருளாகவே இருக்கின்றன. அவைகளை அறிய வேண்டியவர்களுக்கு அவைகள் வெளிப்படுத்தப்படும்.

ஆரம்பத்தில், தானியேலுடன் இருந்த மற்றவர்கள் விசுவாசிகளோ அல்லது அவிசுவாசிகளோ நாம் அறியோம். ஒரு அவிசுவாசி பாராட்டக்கூடிய உபதேசம் சுவிஷேசமாய் இருக்கிறது. இளம் விசுவாசிகள் பாலுக்காக வாஞ்சிப்பர், அவர்கள் ஆழமான கடின காரியங்களுக்காக வாஞ்சிக்க மாட்டார்கள். ஆழமா ன காரியங்களை விசுவாகள் வளராத பட்சத்தில் புரிந்து கொள்ளமாட்டார்கள். இப்படிப்பட்ட வெளிப்படுத்தலால் உண்டான தாக்கத்தை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். முதிர்ந்த விசுவாசியான தானியேல் பலப்படுவதையும், இளம் விசுவாசிகள் மற்றும் முதிர்ச்சியில்லாத விசுவாசிகள் இவைகளால் மேற்கொள்ளப்படுவதைப் பார்க்கிறோம்.

பாபிலோனிய அரசனான கோரேஸின் முதலாம் ஆண்டு வரை தானியேல் அலுவலகத்தில் தங்கி இருந்தார், அவர் ஓய்வு பெற்றவராய் இருந்தும் தேவனால் இன்னும் பயன்படுத்தப்படுகிறவராய் இருந்தார்.

தானியேல் தரிசனத்தின் தாக்கம் வசனம் 8ல் துவங்குகிறதைக் காண்கிறோம், அவர் காபிரியேலுக்கு தப்பி ஒடிவிடாதபடிக்கு அவரது முகபாவனையானது மிகவும் அழுத்தத்திற்கு கீழ் காணப்படுகிறதாய் இருந்தது. அவரது முகம் அழுத்தத்திற்குள்ளாகியது, அவரது கன்னங்களின் நிறத்தை இழந்து போனார், மற்றும் அவரது பெலன் அவரைவிட்டு அகன்று போனது. இது பொய்த்தீர்க்கதரிசிக்கு முறண்பாடாயிருந்து, அவரை மெய் தீர்க்கதரிசி என விளங்கப்பண்ணிற்று.

வசனம் 9ல் சொல்லப்பட்ட காரியங்களுக்கு செவிகொடுத்து, தனது கவனத்தை அதின் மீது செலுத்தினார், அவர் முகங்குப்புற விழுந்து தரிசனத்தை குறித்து முதலாவதாய் கேள்விப்படுகிறவராய் இருந்தார்.

கைக்கொள்ளுதல்:

முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களால் மட்டுமே தேவனுடைய வார்த்தையின் முன்னோட்டமுள்ள உபதேசத்துடன் ஒத்து போக முடியும்.

அவிசுவாசி மற்றும் முதிர்ச்சியடையாத விசுவாசிகளுக்கு வேதாகமத்தின் சில பகுதிகள் பயத்தையும் நடுக்கத்தையும் கொண்டு வருகிறதாய் இருக்கிறது.

முதிர்ந்த விசுவாசிகளையும் கூட சில உபதேசங்கள் திணரடித்து மற்றும் வெறுமையாக்குகின்றவனவாய் இருக்கின்றன.

தேவனுடைய வார்த்தையிலிருந்து ஆழமான சத்தியங்களை ஈர்த்து கொள்ள தகுதி பெற அவ்சியமாய் இருக்கிறது. உபதேசங்களை உபதேசங்கள் மீது கட்டியெழுப்ப வேண்டும்.

அநேக சந்தர்ப்பங்களில் நீங்கள் தனிமையில் இருப்பதை உணருகிறவர்களாய் இருப்பீர்கள், ஆனால் நீங்கள் ஒருபோதும் தனிமையில் இல்லை.

தேசங்களை வீழ்ச்சியடைய செய்யும் வேதாகம தீர்க்கதரிசனங்கள், மற்றும் பேரழிவுகள் சில மக்களை பயமுறுத்துகிறதாய் இருக்கும்.

கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஒருபோதும் ஓய்வு பெறுவது இல்லை. உங்களது கடமை நிறைவு பெறும்போது, சரீரத்திலிருந்து விடுபட்டு கர்த்தரை முகமுகமாய் தரிசிக்கிறவர்களாய் இருப்பீர்கள்.

உபதேசங்கள்:

MATURITY முதிர்ச்சி

MATURITY: CROSS TO THE CROWN முதிர்ச்சி: சிலுவையிலிருந்து கிரீடம் வரை.

MATURITY – SIGNS OF MATURITY (Romans 15:1-15) முதிர்ச்சி -- முதிர்ச்சியின் அடையாளங்கள் (ரோமர் 15:1-15)

Notes

பகுதி 44 - பரலோக செய்தியாளரிடமிருந்து செய்தி   தானியேல் 10:10-14.

**10 இதோ, ஒருவன் கை என்னைத் தொட்டு, என் முழங்கால்களும் என்
உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கி வைத்தது.
11 அவன் என்னை நோக்கி: பிரியமான புருஷனாகிய தானியேலே, நான்
இப்போது உன்னிடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தேன், ஆதலால், நான்
உனக்குச் சொல்லும் வார்த்தைகளின்பேரில் நீ கவனமாயிருந்து, கால்
ஊன்றி நில் என்றான்; இந்த வார்த்தையை அவன் என்னிடத்தில்
சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்து நின்றேன். 12 அப்பொழுது
அவன் என்னை நோக்கி: தானியேலே, பயப்படாதே, நீ அறிவை
அடைகிறதற்கும், உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாகச்
சிறுமைப்படுத்துகிறதற்கும், உன் மனதைச் செலுத்தின முதல்நாள்
துவக்கிஉன் வார்த்தைகள் கேட்கப்பட்டது. உன் வார்த்தைகளினிமித்தம்
நான் வந்தேன். 13 பெர்சியா ராஜ்ஜியத்தின் அதிபதி இருபத்தொரு நாள்
மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனாலும் பிரதான
அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்.
ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் இராஜாக்களிடத்தில்
தரித்திருந்தேன். 14 இப்போதும் கடைசி நாட்களில் உன் ஜனங்களுக்குச்
சம்பவிப்பதை உனக்குத் தெரிய பண்ணும்படிக்கு வந்தேன்; இந்தத்
தரிசனம் நிறைவேற இன்னும் நாள் செல்லும் என்றான்.**

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 10ல் தானியேலின் உதவியாளராகிய காபிரியேல் மற்றும் போதனையாளர், அவனைத் தொட்டு, அவனை பெலப்படுத்துகிறதை காண்கிறோம். தரிசனத்தினால் முகங்குப்புற தரையில் விழுந்து கிடந்த தானியேலுக்கு கரங்களாலும், தனது முழங்காலாலும் காலூன்றி நிற்க இது உற்சாகப்படுத்துகிறதாய் இருந்தது. உண்மையான வெளிப்படுத்தல்கள் நம்மை திணரடிக்கிறது என்பதை இது நமக்கு நினைப்பூட்டுகிறதாய் இருக்கிறது. -- கள்ளத்தீர்க்கதரிசிகளால் கூறப்படுகிற எளிதான மற்றும் கீழ்நோக்கி செல்லுகிற காரியம் அல்ல.

இரு தேவ தூதர்கள் தானியேலுக்கு உதவுகின்றனர். அவ்விருவரும் மிகாவேல் இஸ்ரவேலுக்கு ஆதரவாய் இருப்பவர்ம் மற்றும் காபிரியேல் ஆகும். மிகாவேல் தேவ தூதன் தானியேலுக்கு தோன்றினார். தானியேல் 10:13, 21, 12:1, 1 தெசலோனிக்கேயர் 4:16, யூதா 9, வெளிப்படுத்தல் 12:7.

காபிரியேல் தேவ தூதன் தானியேல் 8:16, 9:21, லூக்கா1:19, 26-38.ஆகிய தேவவசனங்களில் குறிப்பிடப்படுகிறார். பிரதாண தேவ தூதரின் இவ்விருவரும் வேதாகமத்தில் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகிறார்கள் இன்னொருவன் லூசிபர் அல்லது சாத்தான்.

வசனம் 11ல் காபிரியேல் தானியேலுக்கு கூறும்போது, பிரியமான புருஷனாகிய தானியேலே என்கிறார். இது தானியேலை உற்சாகப்படுத்துகிறதாய் இருந்தது. இந்த வார்த்தைகளை புரிந்து கொள்ளுமாறு அவன் கூறுகிறவனாய் இருந்தான். இதன் எபிரெய சொல், Hithpael imperative of “Bin”. இதன் பொருள் புரிந்துகொண்டு கைக்கொள்ளுதல் என்பதாகும். புரிந்து கொள்ளுதல் என்கிற எபிரெய வார்த்தை மிகவும் வலிமை மிக்க வார்த்தையாய் இருக்கிறது. காபிரியேல் கூறும் போது தான் புரிந்து கொள்ள உதவியாய் தேவனால் அனுப்பப்பட்டதாய் கூறுகிறான். மற்றும் தான் காணும் அனைத்தையும் எதிர்கால சந்ததிகளுக்காக கைக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறான். இச்செய்தியானது தானியேலுக்கு கொண்டு வரப்பட்டு அவன் நடுங்கி நிற்கிற பொழுது அவனுக்கு அளிக்கப்பட்டது.

இப்பொழுது காபிரியேல் தானியேலை பயப்பட வேண்டாம் எனக்கூறுகிறான், which is the Kal imperfect of Yare. இஸ்ரவேலின் சரித்திரம் தொடர்பான காரியங்களை கைக்கொள்ளும்போது தானியேல் பயந்து நடுங்குகிறவனாய் காணப்பட்டான். பிரதாண தேவ தூதனால் தானியேல் மட்டும் போதனை பெறவில்லை, இவன் கன்னி மரியாளுக்கும் போதனை

செய்தான் லூக்கா 1:26 மற்றும் இதே அதிகாரத்தில் சகரியாவுக்கும் போதனை செய்தான்.

காபிரியேல் இப்போது தானியேல் புரிந்து கொள்ளும் தனது வாஞ்சை நிறைவேறுவதை நிச்சயித்துக் கொண்டான், தானியேலின் ஜெபங்கள் இந்த விளைவுகளை கொண்டு வருகிறதாய் இருந்தது. அவனது ஜெபங்கள் கேட்கப்பட்டு அதற்கான பதில் கடந்து வருகிறதாய் இருந்தது. காபிரியேலின் வாஞ்சை தேவனுடைய வார்த்தையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதாய் இருந்தது, அது அநுதின அடிப்படையில் நிகழ வேண்டியதாய் இருந்தது. தேவ்ன் தொட்ர்ச்சியாக அவனது ஜெபங்களைக் கேட்டு அதற்கு பதில் செய்கிறவராய் விளங்கினார், எபிரெயர் 11:1-2.

நாம் ஜெபிக்கும்போது, பாவமில்லாத பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து காணப்படுவது அவசியமாய் இருக்கிறது. அதன் மூளம் நாம் அறிக்கை செய்யாத பாவங்களை ஜெபத்திற்கு முன் அறிக்கை செய்ய இயலுவதாய் இருக்கும். 1 யோவான் 1:5-10. இங்கு தானியேல் தன்னைத்தானே தண்டித்துக் கொள்கிறவராய் காணப்படுகிறார், அதன் பொருள் அவர் தன்னைத்தானே நியாயந்தீர்த்துக் கொண்டு கர்த்தருடன் உள்ள ஐக்கியத்தை உறுதிபடுத்துகிறவராய் இருந்தார். நீதிமொழிகள் 17:3, 2 கொரிந்தியர் 13:5.

அவது ஜெபங்கள் உடனடியாக கேட்கப்பட்டது, ஆனால் காபிரியேல் தாமதமாய் வந்து தானியேலுக்கு போதனை அளித்து தேவனது திட்டங்களை அறிந்து கொள்ளும் அவரது வாஞ்சைகளை நிறைவு செய்கிறவராய் காணப்பட்டார். காபிரியேல் பெர்சிய அவையிலிருந்து மிகவும் வலிமை மிக்க பிசாசனவனால் மூன்று வாரங்கள் தடை செய்யப்பட்டான். இந்தப் பிசாசு ஆண்டி-செமிட்டிக் பிசாசுகளின் ஒன்றாய் விளங்கியது, அது அந்த காலத்தில் பெர்சியாவை/ ஈரானை உபயோகித்தது, சரித்திர்ம் மூலம் தேவனது திட்டங்களை நிறேவேறா வண்ணம் தடை செய்கிறதாய் இருந்தது. இந்த பிசாசு எபேசியர் 6:12ல் காண்கிற வண்ணம் "உலகத்தின் அதிபதி" அந்தகார சக்தியாக காண்கிறோம், அவைகள் இன்றைய அளவிலும் நிலைத்து இருந்து கிரியை செய்து தேவ்னது திட்டங்கள் தேவது ஜனங்களிடையே நிறைவேறா வண்ணம் எதிர்த்து நிற்கிறதாய் காணப்படுகிறது இது ஈரானில் 2016லும் செயல்படுகிறதாய் காணப்படுகிறது.

அவிசுவாசிகள் விஷயத்தில் பிசாசுகள் அவர்களைப் பிடித்துக் கொள்ள ஏதுவிருக்கிறது, விசுவாசிகளின் விஷயத்தில் அவர்களிடம் கிரியை செய்கிறதாய் இருக்கிறது தலைமைத்துவம் வலுவாக அமைந்து வேதாம உபதேசங்களைக் கைக்கொள்ளுமானால் பிசாசுகளை எதிர்த்து செயல்படுதிறதாய் இருக்கும். பிசாசுகள் பெர்சியா/ ஈரான்

தலைவர்களை அடக்கியாள முயலுகிறதாய் இருக்கிறது, பல நூற்றாண்டுகளாய் சாத்தானின் நோக்கங்கள் நிறைவேற செயல்படுகிறதாய் இருக்கின்றன. சமீப காலத்தில் சாத்தானின் கிரியைகளை ஈரானின் தலைவர்கள் செயல்படுத்துவதையும் அவர்கள் இஸ்ரவேலரை மற்றும் விசுவாசிகளை எதிர்த்து வருவதைக் கேள்விப்படுகிறவ்ர்களாய் இருக்கிறோம். பிசாசுகள் அவ்ர்களது தலைவன் சாத்தானைப் போன்றே திமிர் கொண்டவைகளாய் செயல்படுகின்றன, அவைகள் மனுக்குலத்தையும் குறிப்பாக யூதர்க்ளையும் வெறுக்கிறவைகளாய் காணப்படுகின்றன. இத்தகைய பகைமை எண்ணங்களும் மற்றும் அகந்தை போன்றவைகள் சுய அழிவை கொண்டு வருகிறதாய் இருந்து, பிசாசு பிடித்த அனைவரின் அழிவைக் கொண்டு வ்ருகிறதாய் இருக்கிறது. ஏசாயா 14:9-11, 12-23.

அடலஃப் ஹிட்லர் ஜெர்மனி தேசத்தவர் இதற்கு ஒரு நல்ல உதாரணமாய் விளங்குகிறார், அவனும் அவனது தலைமை அரசியல் ஆதரவாளர்கள் அனைவரும் பிசாசு பிடித்தவர்களாய் விளங்கினர், இவர்கள் யூதர்கள் மீது பகைமை உணர் வுடன் செயல்பட்டனர். ஹிட்லரின் ஆரம்ப இரு ஆண்டுகளில் அவனது தீர்மானங்கள் மிகவும் புத்திசாலித்தனமானதாய் இருந்தது அவைகள் பிசாசுகள் ஆலோசனை களாய் இருந்தன, அவன் யூதர்கள் மீது வெறுப்புணர்வை காட்டத்தொடங்கிய போது, அவனது தன்னார்வம் மற்றும் அவனது திமிர்பிடித்த சிந்தனை போன்றவை அதிகமதிகாமன முட்டாள்தனமான தீர்மானங்களை எடுக்கவைத்தது.

வ்சனம் 14ல் காபிரியேல் சொன்னது என்னவென்றால், தான் வந்ததன் நோக்கம் தானியேலின் ஜெபத்திற்கான பதிலை அளித்து, அவனுக்கு உதவும்படியாகவும் அவனது ஜனங்களுக்கு கடைசி நாட்களில் என்ன சம்பவிக்கப்போகிறது என்பதை அறிவிப்பதற்காகவும் ஆகும். மட்டுமின்றி தானியேலுக்கு சொன்னபோது இது சம்பவிக்க அநேகாலம் எடுக்கும் என்றான். இக்காலக்கட்டம் நாம் அறிந்துள்ளபடி கிறிஸ்துவின் இரண்டாம் வ்ருகையின் போது கடைசிகாலத்தில் இருக்கும்.

கைக்கொள்ளுதல்:

ஆவிக்குரிய உ்லகம் என்பது சரீரப்பிரகாரமான உலகத்தின் பின்னணியமாய் இருக்கிறது. ஆவிக்குரிய உலகிலிருந்து ஒரு தெய்வீக நபர் தானியேலுக்கு உதவி செய்து எதிர்கால சரித்திரத்தில் என்ன நிகழப்போகிறது என்பதை புரிந்து கொள்ளச் செய்கிறவராய் இருக்கிறார் மற்றும் அவனுக்கு எதிராய் செயல்படும் மற்ற ஆவிக்குரிய சக்திகளுக்கு எதிராய் செயல்படுகிறவராயும் இருக்கிறார்.

உங்கள் ஜெபங்கள், நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆதிக்கத்திற்குக் கீழ் இருப்பீர்களானால், உடனடியாய் கேட்கப்பட்டு அதற்கான பதில் தாமதமாய் கொடுக்கப்படுகிறதாய் இருக்கும். ஜெபத்திற்கான பதில் கிடைக்க நாம் பொறுமையுடன் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாம் தேவனுடன் பரீட்சைக்கு நிற்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். 2 கொரி. 13:5, 1 யோவான் 1:5-10. நாம் நம்மைத் தாமே சோதித்து அறிதல் வேண்டும் இதினிமித்தம் நாம் நியாயந்தீர்க்கப்படாது இருப்போம்.

நமது உலகின் அரசியல் வல்லமைகளில் மிகவும் சக்தி வாய்ந்த பிசாசுகள் இருக்கின்றன. அவகள் அரசியல் தலைவர்களை சாத்தானின் கொள்கைகளைக் கைக்கொள்ளச் செய்கின்றன, அவைகள் தேவன் மனிதனோடுள்ள செயல்பாடுகளை புறம்பாக்குகிறவைகளாய் இருக்கின்றன. அவைகள் பூகோள ரீதியாக வரையறைக்குட்பட்டவைகள் ஆனால் வல்லமையுள்ளவைகள், நாம் ஜெபத்தின் மூலம் இத்தகைய சாத்தானின் சதிகளுக்கு அரசியல் ரீதியான எதிர்ப்பைக் கொண்டு வர இயலும்.

சாத்தான் மிகக்கொடிய வஞ்சகனாய் இருக்கிறான் மற்றும் வேதாகம அடிப்படைக் கருத்துக்களில்லாத வலிமை மிக்க தலைவர்களை அவன் வஞ்சிக்கிறவனாய் இருக்கிறான். வெளிப்படுத்தல் 20:1-3. நாம் இத்தகைய தீமைக்கு எதிர்த்து நிற்கிறவர்களாய் இருக்க வேண்டும் அவைகளுக்கு பயப்படாது முடிவுகால நிகழ்வுகள் குறித்து அறிந்து எச்சரிப்புடன் இருத்தல் வேண்டும். எபேசியர் 6:12. இந்த உலகத்தில் இருப்பவனிலும், நம்முடன் இருப்பவர் பெரியவராய் இருக்கிறார். 1 யோவான் 4:4.

DOCTRINES உபதேசங்கள்

ANGELIC CONFLICT தேவ தூதரின் முறண்பாடுகள்

PRAYER ஜெபம்.

பகுதி 45 - தானியேல் நிச்சயப்படுத்திக்கொள்ளுதலும் மற்றும் பெலப்படுதலும்: தானியேல் 10:15-21.

15 அவன் இந்த வார்த்தைகளை என்னோடே சொல்லுகையில், நான் தலைகவிழ்ந்து, தரையை நோக்கி, பேச்சற்றுப்போனேன். 16 அப்பொழுது மனுபுத்திரரின் சாயலாகிய ஒரு வன் என் உதடுகளைத் தொட்டான். உடனே நான் என் வாயைத் திறந்து பேசி, எனக்கு எதிரே நின்றவனை நோக்கி: என் ஆண்டவனே தரிசனத்தினால் என் மூட்டுகள் புரண்டன, பெலனற்றுப்போனேன். 17 ஆகையால் என் ஆண்டவனுடைய அடியேன் என் ஆண்டவனோடே பேசக்கூடுவதெப்படி? இனி என்னில் பெலனில்லை, என்னில் மூச்சுமில்லை என்றேன். 18 அப்பொழுது மனுஷ ரூபமான ஒருவன் திரும்ப என்னைத் தொட்டு என்னைத் திடப்படுத்தி, 19 பிரியமான புருஷனே பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக, திடங்கொள் திடங்கொள் என்றான். இப்படி அவன் என்னோடே பேசுகையில் நான் திடங்கொண்டு அவனை நோக்கி: என் ஆண்டவன் பேசுவாராக, என்னை திடப்படுத்தினீரே என்றேன். 20 அப்பொழுது அவன்: நான் உன்னிடத்திற்கு வந்த காரணம் இன்னதென்று உனக்குத் தெரியுமா? இப்போது நான் பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ணத் திரும்பிப் போகிறேன். நான் போன பின்பு, கிரேக்கு தேசத்தின் அதிபதி வருவான். 21 சத்திய எழுத்திலே கண்டிருக்கிறதை நான் உனக்குத் தெரிவிப்பேன். உங்கள் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர என்னோடேகூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலங்கொள்ளுகிற வேறொருவரும் இல்லை.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

காபிரியேல் தானியேலுக்கு பதினொன்றாம் அதிகாரத்தின் பொருளடக்கத்தை அளித்த பின்னர், தானியேல் "தலை கவிழ்ந்து தரையை நோக்கினார்" எனக்கூறப்பட்டுள்ளது. இது கவன செலுத்துதல் என்பதற்கான எபிரெய மரபு மொழியாகும். சொல்லப்பட்ட காரியங்கள் மீது தானியேல் கவனம் செலுத்தலானார். அவர் பேசக்கூடாதவராய் மௌனமாய் காணப்பட்டார்.

காபிரியேல் தானியேலின் உதடுகளை தொட்டான் அப்பொழுது அவரால் பேச முடிந்தது. இப்பொழுது அவர் காபிரியேலுக்கு தான் பெற்றுக்கொண்ட முழுமையான போதனையின் விளைவு குறித்து கூறினார். அது அவருக்கு அதிர்ச்சியை உண்டாக்கிற்று மற்றும் அவரை மிகவும் பெலவீனமடையச் செய்தது. தானியேல் காபிரியேலை நோக்கி "என் ஆண்டவனே" என்கிறார் இது அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படும் மரியாதையை சுட்டிக்காட்டுகிறது. என் வருத்தங்கள் என் மீது உள்ளன என தானியேல் கூறினார். தானியேல் மிகுந்த குழப்பத்துக்கு

உள்ளானார். அவர் அதிர்ச்சிக்குள்ளாகி மற்றும் இஸ்ரவேலருக்காக மிகவும் பாரத்துடன் காணப்பட்டார். யூதர் களின் சரித்திரம் குறித்தும் உபத்திரவ காலம் குறித்தும் ஆழ்ந்த சிந்தனைக்குள்ளானார்.

வசனம் 17ல் தொடர்ந்து காபிரியேலுடன் பேசினார். அவர் சொன்னபோது, போதனையானது தன்னை மூச்சற்று போகச் செய்தது என்றார். அவர் அதிகமாய் நடுக்கத்திற்குள்ளானார். தீர்க்கதரிசன வார்த்தைகள் ஒன்றும் அவருக்கு ஆறுதலாய் இல்லை. அவைகள் எச்சரிப்புடையதாக இருந்தது, உண்மைன தீர்க்கதரிசிஎதிர் கால நிகழ்வுகளை காண்கிறவனாய் இருக்கிறான். தானியேல் ஒவ்வொரு காரியத்தையும் காண்கிறவராய் காணப்பட்டார், பேரழிவு உட்பட மற்றும் அந்திக்கிறிஸ்துவின் இறுதி முடிவு, இன்னும் இன்றைய தினத்தில் வரக்கூடி அனைத்தையும் கண்டார்........ இவைகளைக் கண்ட போது அவர் மிகவும் உணர்ச்சிவசத்திற்குட்பட்டார்.

வசனம் 18ல் காபிரியேலின் இரண்டாம் ஊழியத்தைக் காண்கிறோம். காபிரியேல் தானியேலைத் தொட்டபோது அவர் பெலனடைந்தார். பெலப்படுத்தப்படல் என்பதன் எபிரெய வார்த்தை Piel imperfect of “Chazaq”. என்று காணப்படுகிறது. தானியேல் சொல்லப்பட்ட செய்தியினால் பெலப்படுத்தப்பட்டார், அச்செய்தியின் மையக்கருத்தானது நம்பிக்கை அளிப்பதாய் இருந்தது, கர்த்தர்தாமே எல்லாவற்றின் மேலும் ஜெயமெடுக்கிறவராய் கூறப்பட்டது. பகை எண்ணங்கள் மற்றும் எதிராளியின் தீமைகள் இவைகளை சந்தித்த தானியேலுக்கு பெலனை கண்டுகொள்வது அவசியமாய் இருந்தது, மற்றும் படுகொலைகள் கட்டவிழ்த்து விடப்படுதல் போன்றவகளை அறிந்த தானியேலுக்கு பெலன் அவசியமாய்க் காணப்பட்டது -- சர்வவல்லமையுள்ள தேவன் அரசாளுகிறவராய் இருக்கிறார்!!

வசனம் 19;ல் காபிரியேல் தானியேலுக்கு உற்சாகமளித்து பெலப்படுத்துகிறவராய் காணப்படுகிறார், காபிரியேல் சொல்லும்போது, திடன் கொள், திடன் கொள் என்கிறான். "Chazaq” என்கிற வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த வார்த்தை the Kal imperative ஆக இருக்கிறது. முதன்முறையாய் இது ஆவிக்குரிய நிலையில் திடன் கொள்வதையும் இரண்டாம் முறை இது சரீர பிரகாரமாய் திடன் கொள்வதையும் குறிக்கிறது. ஆவிக்குரிய நிலையில் வேதாகம உபதேசங்களால் திடன்கொள்ளவும் ஊழியம் செய்யும்படியாக சரீரப்பிரகாரமாய் திடன்கொள்ளவும் கூறப்படுகிறதாய் இருக்கிறது.

மூன்றாம் முறையாக “Chazaq” என்கிற வார்த்தை இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது அது the Hithpael imperfect ஆக இருக்கிறது, The

Hithpael stem is reflexive ஆகையால் தானியேல் கூறும்போது, இவைகளைக் கற்றுக்கொண்டு, அவர் தன்னில் தானே பெலன்கொள்கிறவராய் இருக்கிறார்.

வசனம் 20ல் காபிரியேல் தானியேலிடம் கேட்டுக்கொள்வது என்னவெனில், "நான் எதற்காக வந்தேன் என்பது உனக்குத் தெரியுமா?" என்றான். தானியேல் கூறும்போது, இவைகள் அனைத்தையும் எதிர்கால சந்ததிகளான விசுவாசிகளுக்காய், பதிவு செய்து வைக்கும்படியாக என்றார். காபிரியேல் இப்பொழுது அடுத்த காரியம் என்ன என்பதை விவரிக்கிறவராய் காணப்பட்டான். தான் பெரிசியாவின் பிரபுவோடே யுத்தம் செய்யப்போவதாய்க் கூறினான், தேவனுடைய திட்டத்திற்கு எதிராய் செயல்படும் முக்கியமான பிசாசுகளுடன் யுத்தம் செய்யப்போவதாய்க் கூறுகிறான். அவன் சரித்திரத்தின் இடை வழியைக் கண்டு மாசிடோனியாவின் மகா அலெக்ஸாண்டரின் அவையில் உள்ள பிசாசுகள் “world ruler/Kosmokrator” வுடன் பிர்ச்சனைகளை கொடுக்க இருப்பதைக் கண்டான்.

இதினிமித்தம் காபிரியேல் மகா கோரேஸை மட்டும் பாதுகாக்காமல் (இவனை தேவன் "எனது மேய்ப்பன்" என்கிறார்) புதிய ஏற்பாட்டுக்கு மொழியை அளித்த மகா அலெக்ஸாண்டரை பாதுகாக்கிறவனாய் இருக்கிறான். இதற்கு இடையே உள்ள காலம் இருநூறு ஆண்டுகளாய் இருந்த போதும், தேவன் என்ன நிகழப்போகிறது என்பதைக் குறித்த உணர்வுடன் காணப்பட்டார், இக்கடமையினை காபிரியேல் செய்யும் 200 + ஆண்டுகளுக்கு முன்னதாகவே செய்கிறவராய் இருப்பதைக் காணலாம். தேவன் தன திட்டங்களைப் பாதுகாக்கிறவராய் இருக்கிறார். அலெக்ஸாண்டர் பாதுகாக்கப்பட்டான், மற்றும் ஆரம்பத்தில் யூதர்களும் இவனால் பாதுகாக்க ப்பட்டனர். வசனம் 21ல் we have the Hiphil imperfect of “Nagad” இதன் பொருள் ஒரு கதையை விபரமாய் எடுத்து செல்வதாகும். இப்பொழுது அது எழுதப்பட்டுள்ளது மற்றும் காபிரியேல் தூதன் மறுபடியும் அதைக் கூறி அதன் துள்ளியத்தை விளங்கப்பண்ணுகிறார் அது பகுக்கப்பட்ட வேதாகமத்தின் ஒரு பகுதியாய் விளங்குகிறது. தானியேல் எழுதிய வேத வாக்கியங்கள் பகுக்கப்பட்ட வேதாகமத்தின் வேத எழுத்துக்களாய் கருதப்படுகிறது

காபிரியேல் முடிவாகக் கூறும்போது, உன் அதிபதியாகிய மிகாவேலைத் தவிர அவருக்கு உதவி செய்ய வேறு எவரும் இல்லை என்கிறார். மிகாவேல் பிரதாண தேவதூதர்களில் ஒருவனாயிருந்து இஸ்ரவேலை பாதுகாக்கும் விஷேச தேவதூதனாய் விளங்குகிறான். இவ்விருவரும் ஒன்று சேர்ந்து யூதமக்களின் பாதுகாப்பிற்காக செயல்படுவதைப் பார்க்கிறோம். தானியேல் யூதமக்கள் பாதுக்காக்கப்பட வேண்டியதை

அறிய வேண்டியதாய் இருந்தது, மிகக்கொடூரமான படுகொலை சம்பவங்கள் இவர்களுக்கு நேர்ந்தாலும் அவர்கள் இன்னும் ஜீவிக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதையும் அறிய வேண்டியவனாய் இருந்தான்.

கைக்கொள்ளுதல்:

வேதாகம காரியங்களில் ஈடுபடும்பொழுது, என்ன சொல்லப்பட்டுள்ளது அல்லது என்ன எழுதப்பட்டுள்ளது என்பதில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாய் இருக்கிறது, அவ்வேத பகுதியை சரியாக மற்றும் துள்ளியமாய் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாய் இருக்கிறது.

ஒருவர் ஒரு வேதபகுதிக்கு பொருள் விளக்கம் அளிக்கும்போது, அல்லது மற்றவர்கள் பிரசிங்கிக்க கேட்கும்போது, தற்போதைய "கிறிஸ்தவ வியாக்கியானங்கள்" அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது, அவ்வேதபகுதியின் முழு விபரங்களை பார்க்கத் தவறி விடுகின்றனர். சில நேரங்களில் இது தவறான புரிந்து கொள்ளுதலுக்கு வழி நடத்தக் கூடும்.

உதாரணமாய் யுகங்களைக் குறித்த கண்ணோட்டத்தின் படி சபை எடுத்துக்கொள்ளப்படுவது ஏழு வருட உபத்திரவ காலத்திற்கு முன் நிகழ்வதாய் இருக்கிறது. உபத்திரவ காலம் சபை எடுத்துக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வதாய் இருக்கிறது. எப்படியிருப்பினும் அந்திக்கிறிஸ்துவும் இஸ்ரவேல் தேசமும் உடன்படிக்கைக்கு கையெழுத்து இடுவது இந்த ஏழு ஆண்டு உபத்திரவ காலத்தில் அமையும், இது தானியேலின் 70வது வாரமாய் கருதப்படுகிறது. அந்திக்கிறிஸ்து முழுவதுமாய் தன்னை வெளிப்படுத்துவது சபையானது அகற்றப்பட்ட பின்னர் நிகழ்வதாய் இருக்கிறது [2 தெசலோனிக்கேயர் 2] உபத்திரவ காலம் துவங்குவதற்கும் சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு இடையே அறியப்படாத இடைவெளி உள்ளதாய் பார்க்கிறோம். இந்த இடை வெளி குறித்து நாம் சரியான தெளிவில்லாதவர்களாய் இருக்கிறோம், இது ஒரு ஆண்டு அல்லது அதற்கு அதிகமாய் இருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

எவ்வளவு கடினமான சூழ்நிலையாய் இருப்பினும், ஒரு விசுவாசிக்கு வேதாகமத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் பெலப்பட சாத்தியமுண்டு. தேவன் சொல்லுகிறார் நமது திராணிக்கு மிஞ்சி நாம் சோதிக்கப்படுவது இல்லை என்கிறார், நாம் சோதிக்கப்படும்போது அவர் அதற்கு தப்பிக்கொள்ளும் போக்கை உண்டாக்குகிறவராய் இருக்கிறார்

எதிர்காலத்தில் என்ன நிகழவிருக்கிறது என்பதை தேவன் அறிந்தவராய் இருக்கிறார் மற்றும் ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும் அவர் "பிரியமானவர்களாய்" அவர் காண்கிறவராய் இருக்கிறார்.

இந்த வேதபகுதியானது டைடானிக் யுத்தங்களைக் குறித்த சில உள்நோக்கை அளிக்கிறதாய் இருக்கிறது, இவ்வுலகின் தலைநகர்களில் காணக்கூடாத வகையில் தேவ தூதர்களிடையே நிகழும் போர் நடவடிக்கைகளை காட்டுகிறதாய் இருக்கிறது.

உங்கள் மனதில் தேவனது வார்த்தை இருக்க வேண்டியது அவசியமானதாய் இருக்கிறது. விசுவாசி தேவனது திட்டத்தை சார்ந்து இருக்கும்போது மட்டுமே சரித்திரத்தில் பேரழிவு சமயங்களில் வேத உபதேசங்கள் மூலம் ஒத்து ப்போக இயலும்.

விசுவாசியின் ஜெப ஜீவியம் தேவ தூதர்களின் முறண்பாடுகளுடன் நேரடியாய் தொடர்புகொண்டு இருத்தல் வேண்டும் மற்றும் மிக முக்கியமாக வல்லமையான ஜெபத்திற்கு தீவிரமான தாக்குதல் நேரிடும், ஆனால் இயேசு கிறிஸ்துவில் அதிகமான வல்லமை கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

DOCTRINES உபதேசங்கள்:

GOD CARES FOR YOU தேவன் உங்களைக் குறித்து கரிசனையுள்ளவராய் இருக்கிறார்.

PEACE சமாதானம்

தானியேல் அதிகாரம் 11.

11ம் அதிகாரத்தின் பிரிவுகள்:

தானியேல் 11 ம் அதிகாரத்தை நான்கு பிரிவு களாய் பிரிக்கலாம்.

கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் தீர்க்கதரிசனம் வசனங்கள் 1-20

அந்தியோகஸ் எப்பிப்பேனஸ் இணங்கண்டுகொள்ளப்படுதல் வசனங்கள் 21-35

பாவ மனுஷன் செயல்படுதல் வசனங்கள் 36-39

தென்திசை இராஜாவின் தற்காலிக ஜெயம் வசனங்கள் 40-45.

முன்னுரை:

இது தானியேலுக்கு நான்காவதும் மற்றும் இறுதியானதுமான தரிசனமாகும். இந்த தரிசனம் கோரேஸ்/ தரியூ முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை நீண்ட காலத்துக்குரியதாய் இருக்கிறது, இதன் இடைவெளியில் கர்த்தரின் முதல் வருகை ஊழிய்ம் முழுமை அடைந்தது மற்றும் இரண்டாம் வருகை போன்றவைகுறிப்பிட்ப்பட்டுள்ளது, சபை என்பது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடவே இல்லை.

இந்த அதிகாரம் எப்பொழுதும் வாதத்துக்குரிய அதிகாரமாகவே இருக்கிறது காரணம் இத்ன் தீர்க்க தரிசனம் மிகத்துள்ளியமாய் இருக்கிறது. கி மு 100க்கும் பழமை வாய்ந்த சவக்கடல் சுருளி வடிவில் தானியேல் புத்தகம் கிடைத்துள்ளது முக்கியம் வாய்ந்ததாய் நினைவுகூறப்படுகிறது, அது தெளிவான நகலில் இருந்து நகல் எடுக்கப்பட்டு இருக்கிறது. இது சரித்திரமானது நிகழ்வுக்குப் பின்னர் எழுதப்படாமல், சரித்திரமானது நிகழ்வுக்கு முன்னரே துள்ளியமாய் எழுதப்ப்ட்டுள்ளது, இது உண்மையான தீர்க்கதரிசன சத்தியமாய் இருக்கிறது..

3 ம் நூற்றாண்டைச் சார்ந்த புறஜாதிய தத்துவஞானி Porphyry என்பவர் முதன்முதலில் தானியேல் புத்தகமானது போலியானது எனத் தாக்குதல் செய்தான். இக்காலத்து சரித்திர நிகழ்வுகள் மிக துள்ளியமானதாய் இருந்த படியால் அவைகளின் நிகழ்வு நிகழ்ந்த பின்னரே எழுதியிருக்க வேண்டும் என வாதிட்டான்.

இத்தாக்குதல் அதைதொடர்ந்த நூற்றாண்டில் வசித்த ஜெரோம் என்பவரை துக்கப்படுத்தியது, அவர் எழுதிய கமெண்ட்ரி அடுத்த 1000ஆண்டுகளுக்கு சரியென கருதப்பட்டது. ஜெரோம் எழுதிய

கமெண்டரி சபைப் பிதாக்களால் அங்கீகரிக்கப்பட்டு பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன எழுத்தாக அங்கீகாரம் பெற்றது.

இதில் இடம் பெறும் மிகத்துள்ளியமான நிகழ்வுகள் தானியேல் புத்தகமான தெய்வீகமாய் ஏவி எழுதப்பட்டது என்பதை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது. தானியேல் 11ம் அதிகாரத்தில் மனித சரித்திரமானது மிகத்துள்ளியமாய் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது. இதில் அவசியமற்ற சிலப்பகுதிகள் குறிப்பிடப்படவில்லை. தேவன் தனது ஆளத்துவம்ம் மற்றும் தனது திட்டம் இவைகள் குறித்து எவைகளை அறிந்து கொள்ள விரும்பினாரோ அவைகளைத் தெரியப்படுத்தியுள்ளார்.

அந்தியோகஸ் IV எப்பிப்பேனஸ் குறித்து இந்த அதிகாரம் ஒரு நபர் முழுமையாய் அறிந்துகொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது, முக்கியமாய் அவன் யூதர்களுடன் உள்ள உறவுமுறையை நன்கு விளக்குகிறதாய் இருக்கிறது. காபிரியேல் பெரிசியாவுக்குகடந்து சென்று கிரேக்க அதிபதியுடன் யுத்தம் செய்கிறவராய் காணப்படுகிறார். இது பிசாசுகளின் சக்திகளோடு யுத்தம் செய்வதைக் காட்டுகிறது. யுத்தம் செய்யும் இவ்விரு இடங்களும் சரித்திரத்தில் அடுத்த 300 ஆண்டுகளுக்கு முக்கியம் வாய்ந்த இடங்களாய் கருதப்படுகின்றன. காபிரியேலுக்கு தொடர்புபடுத்திக் கூறுவதில் வரம் பெற்றவராய் திகழ்ந்தான். தானியேலுக்கு தீர்க்கதரிசன வரம் அளிக்கப்பட்டு இருந்தது, ஆனால் தேவனே அவை அனைத்திற்கு உரியவராய் விளங்குகிறார்.

பகுதி 46 - கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் தீர்க்கதரிசனம்: தானியேல் 11:1-20.

1 மேதியனாகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே நான் அவனைத் திடப்படுத்தவும் பெலப்படுத்தவும் அவனுக்குத் துணை நின்றேன். 2 இப்போதும் நான் மெய்யான செய்தியை உனக்கு அறிவிப்பேன். இதோ இன்னும் இராஜாக்கள் பெரிசியாவில் எழும்புவார்கள். அதின் பின்பு நாலாம் இராஜாவாயிருப்பவன் எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனாகி, தன் ஐசுவரியத்தினால் பலங்கொண்டு, கிரேக்கு இராஜ்ஜியத்துக்கு விரேதமாகச் சகலரையும் எழுப்பிவிடுவான். 3 ஆனாலும் பராக்கிரமமுள்ள ஒரு இராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு தனக்கு இஷ்டமானபடி செய்வான். 4 அவன் எழும்பினபின்பு அவனுடைய இராஜ்ஜியம் உடைந்து போம். வானத்தின் நாலு திசைகளிலும் பகுக்கப்படும்; ஆனாலும் அது அவனுடைய சந்ததியாருக்கு அல்ல. அவன் செய்த ஆளுகையின்படியும் அல்ல; அவனுடைய இராஜ்ஜியம் பிடுங்கப்பட்ட்டு அவனுடையவர்களல்லாத வேறேபேர்களிடமாய்த் தாண்டிப்போம். 5 தென்றிசை இராஜா பலவானாயிருப்பான். ஆனாலும் அவனுடைய பிரபுக்களில் ஒருவன்

அவனைப் பார்க்கிலும் பலவானாகி ஆளுவான். இவனுடைய ஆளுகை பலத்த ஆளுகையாயிருக்கும். 6 அவர்கள் சில வருஷங்களுக்குப் பின்பு, ஒருவரோடொருவர் சம்பந்தம் பண்ணும்படிக்குத் தென்றிசை இராஜாவின் குமாரத்தி வடதிசை இராஜாவினிடத்தில் வருவாள். ஆனாலும் அவளுக்குப் புயபலம் இராமற்போம். அவனும் அவனுடைய புயமும் நிலைநிற்பதில்லை. அவளும் அவளைஅழைத்துவந்தவர்களும், அவளைப் பெற்றவனும், அவளை அக்காலங்களில் பலப்படுத்தினவனும் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். 7 ஆனாலும் அவளுடைய வேர்களின் கிளையாகிய ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்பி, இராணுவத்தோடே வந்து வடதிசை இராஜாவின் அரணிப்புக்குள் பிரவேசித்து அவர்களை விரோதித்து, 8 அவர்களுடைய அதிபதிகளையும், அவர்களுடைய விலையேறப்பெற்ற வெள்ளியும் பொன்னுமாகிய பாத்திரங்களையும் அவர்களுடைய தெய்வங்களையும்கூட எகிப்துக்குக் கொண்டுபோய் சில வருஷங்கள் மட்டும் வடதிசை இராஜாவைப்பார்க்கிலும் நிலையாய் நிற்பான். 9 தென்றிசை இராஜா இராஜ்ஜியத்துக்கு விரோதமாக வந்து, தன் தேசத்துக்குத் திரும்பிப்போவான். 10ஆனாலும் அவனுடைய குமாரர் யுத்தஞ்செய்ய எத்தனித்து, திரளான சேனைகளைக் கூட்டுவார்கள். இவர்களில் ஒருவன் நிச்சயமாய் வந்து வெள்ளம்போலக் கடந்து திரும்பவும் தன்னுடைய அரண்மனைமட்டும் யுத்தங்கலந்து சேருவான். அப்பொழுது தென்றிசை இராஜா கடுங்கோபங்கொண்டு வடதிசை இராஜாவோடே யுத்தம்பண்ணுவான். இவன் பெரிய சேனையை ஏகமாய் நிறுத்துவான் ஆனாலும் இந்த சேனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படும். 12 அவன் இந்தச் சேனையை நீக்கின பின்பு, அவனுடைய இருதயம் கர்வங்கொள்ளும் அவன் அநேமாயிரம்பேரை மடிவிப்பான். ஆனாலும் பலங்கொள்ளமாட்டான். 13 சில வருடங்கள் சென்ற பின்பு வடதிசை இராஜா திரும்ப முந்தின சேனையிலும் பெரிதான சேனையோடும் வெகு சம்பத்தோடும் நிச்சயமாய் வருவான். 14 அக்காலங்களில் தென்றிசை இராஜாவுக்கு விரோதமாக அநேகர் எழும்புவார்கள். அப்பொழுது உன் ஜனத்திலுள்ள துண்டரிக்காரரின் புத்திரர் தரிசனத்தை நிறைவேற்றத் தங்களை உயர்த்துவார்கள். 15 வடதிசை இராஜா வந்து, கொத்தளம் போட்டு அரணான நகரங்களைப் பிடிப்பான். தென்றிசை இராஜாவின் புயபலங்களும் அவன் தெரிந்து கொண்ட ஜனமும் நில்லாமற்போம். எதிர்க்கிறதற்குப் பெலன் இராது. 16 ஆகையால் அவனுக்கு விரோதமாக வருகிறவன் தன் இஷ்டப்படிச் செய்வான். அவனுக்கு முன்பாக நிலைநிற்பவன் ஒருவனும் இல்லை. அவன் சிங்காரமான தேசத்தில் தங்குவான். எல்லாம் அவன் கைவசமாகும். 17 தன் இராஜ்ஜியத்தின் வல்லமையோடெல்லாம் தானும் தன்னோடேகூடச் செம்மைமார்த்தத்தாரும் வர, இவன் தன் முகத்தைத் திருப்புவான். இப்படிச் செய்து கெடுதியுண்டாகும்படி அவனுக்கு ஒரு கன்னிப்பெண்ணைக் கொடுப்பான். ஆனாலும் அவளாலே ஸ்திரம்

பெறான் அவள் அவன் பட்சத்தில் நில்லாள். 18 பின்பு இவன் தன் முகத்தைத் தீவுகளுக்கு நேராகத் திருப்பி, அநேக தீவுகளைப் பிடிப்பான். ஆனாலும் ஒரு சேனாதிபதி இவன் செய்த நிந்தையினிமித்தம் இவனுக்குச் சரிக்குச் சரிக்கட்டுவான். 19 ஆகையால் தன் முகத்தை தன் தேசத்தின் அரண்களுக்கு நேராகத் திருப்புவான். அங்கே இடறிவிழுந்து காணப்படாமற்போவான். 20 செழிப்பான இராஜ்ஜியத்தில் தண்டல் காரனைத் திரியப்பண்ணுகிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான். ஆகிலும் சில நாளைக்குள் கோபமில்லாமலும் யுத்தமில்லாமலும் நாசமடைவான்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

வச. 1 மேதியனாகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே நான் அவனைத் திடப்படுத்தவும் பெலப்படுத்தவும் அவனுக்குத் துணை நின்றேன்.

இந்த வசனம் பத்தாம் அதிகாரத்தின் கடைசி வசனமாய் இருந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. வசனங்களும் அதிகாரங்களும் பொதுவாக சரியான இடத்தில் இடம்பெறாமல் போனால் அவைகள் தெய்வீகமாய் ஏவப்படவில்லை என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. அச்சடிக்க துவங்கிய போது மூலக்கூறுகள் தொடரியலாக பகுக்கப்பட்டது. இங்கு நாம் காபிரியேல் தேவ தூதன் நின்று தரியுவை பெலப்படுத்துகிறான், அவன் பெர்சிய ராஜ்ஜியதின் அதிபதியின் கைக்கு தப்புவித்து பெலப்படுத்துகிறவனாய் காணப்படுகிறான். இந்த கோரேஸே/தரியுவே 6ம் அதிகாரத்தில் தானியேலை சிங்கக்கெபியில் போட்டவன்.

வச. 2 இப்போதும் நான் மெய்யான செய்தியை உனக்கு அறிவிப்பேன். இதோ இன்னும் இராஜாக்கள் பெரிசியாவில் எழும்புவார்கள். அதின் பின்பு நாலாம் இராஜாவாயிருப்பவன் எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனாகி, தன் ஐசுவரியத்தினால் பலங்கொண்டு, கிரேக்கு இராஜ்ஜியத்துக்கு விரேதமாகச் சகலரையும் எழுப்பிவிடுவான்.

வசனம் 2ல் காபிரியேல் தானியேலுக்கு மெய்யான செய்தியை அறிவிக்க வாக்குபண்ணுகிறான். இந்த வசனத்தில் அவன் நான்கு இராஜாக்களைக் குறிப்பிடுகிறான். அவர்கள் இராஜாக்கள் மட்டுமல்லாது யூதர்களின் சரித்திரத்திலும், மத்திய் கிழக்கு நாடுகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களுமாய் இருக்கின்றனர்

கோரேஸ் இராஜ்ஜியத்தின் கிழக்கு எல்லையிலே மரித்தான். அவன் முதலாம் அரசனைத் தொடர்ந்து ஆளுகை செய்தான். முதலாம் அரசன் கோரேஸின் குமாரனான காம்பைஸஸ், இவன் கிமு 532 முதல் 522 வரை ஆளுகை செய்தான். இவன் எஸ்றா 4:6ல் அகாஸ்வேரு என அறியப்படுகிறான். இது எப்படியிருப்பினும் இது அவனது தலைப்புகளில் ஒன்று அவனது இயற்பெயரல்ல. இது அரசன் என்கிற தலைப்பிற்கு ஒப்பானது, மற்றும் பிரதாண ஆசாரியன் என்னும் கருத்தையும் கொண்டது.

அந்த சமயத்தில் மத்திய கிழக்கு நாடுகளின் பெரும்பகுதி பெரிசியரின் ஆதிக்கத்திற்கு கீழ் இல்லாது இருந்தது மற்றும் அது கோரேஸின் மரணம் எகிப்தில் நிகழ்ந்த போது இருந்தது. இப்பகுதிக்கு காம்பைஸஸ் அரசனாகும்படி தீவிரித்தான். எகிப்திற்கு படையெடுத்து சென்றதினிமித்தம், மேதிய ஞானிகளின் சொற்கேட்டு புறஜாதிய வழிகளில் நடந்த தனகு சகோதரன் ஸ்மெர்டிஸை கொலை செய்தான். பொது மக்களுக்கு ஸ்மெர்டிஸை கொலை செய்து அகற்றியதை இரகசியமாய் வைத்தான், இருப்பினும் மாகிகளுக்கு இது வெளியரங்கமாய் இருந்தது. இக்காலக்கட்டத்தில் தானியேல் மரித்திருக்க வேண்டும் அல்லது கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் இதைக் குறித்து சரிவர எதையும் அறியாதர்களாய் இருக்கிறோம். இந்த விபரங்கள் தீர்க்கதரிசனமாய் அளிக்கப்பட்டு வெளிப்படையாய் இருப்பதை காணவில்லை. "எல்லா ஞானிகளும்" என்பது தானியேல் உட்பட இப்பயங்கரத்துக்குள் உட்படுவர் எனக்காட்டுகிறது. யூத மக்கள் தேவாலயம் கட்டும் பணி இக்காலத்திற்குரியதாய் இருந்தது. ஆண்டி - செமிட்டிஸம் தற்காலிக ஜெயத்தைப் பெற்றிருந்தது.

கிமு 526ல் காம்பைஸஸ் எகிப்தை வென்றான். பெலூஸியத்தில் நடத்த பெரிய யுத்தத்திலும் வெற்றிபெற்றான். எகிப்திய படைகளின் கிரேக்கத் தளபதியினால் கைவிடப்பட்டான். அவன் எகிப்திற்கு முடிசூடப்பட்ட மன்னனாய் இருந்தான் இருந்தபோதிலும் அவன் தற்கொலை செய்துகொள்ள நேரிட்டது, மாகி ஒற்றர்களால் இவன் விஷம் வைத்து கொல்லப்பட்டான். மாகிக்கள் அவனை கொலை செய்தபின்னர் அவர்களது மனிதர் ஆளுகை செய்ய தயராக இருந்தனர். இவைகள் அனைத்தும் தானியேலின் மரணத்திற்கு பின் நிகழ்ந்ததாகத் தோன்றுகிறது. மாகிக்களால் தோன்றிய ஆண்டி செமிட்டிஸம் கட்டவிழ்க்கப்பட்டு தானியேலின் கொள்கைக்கு எதிராக செயல் பட்ட்து. இது போன்ற செயல்களை பரலோகில் மட்டுமே முழுமையாய் அறிந்து கொள்ள இயலும்.

காம்பைஸுக்கு பின் வந்த இரண்டாம் அரசன் மாகிக்களின் போலி அரச்னான சூடோ ஸ்மெர்டிஸ். இவன் ஒரு ஆண்டி செமிட்டிக்காக செயல்பட்டான் மற்றும் கோரேஸ் கட்டளையிட்ட தேவாலய பணிகளை தடை செய்தான். இவன் சூடோ ஸ்மெர்டிஸ் என அறியப்பட்டான், மாகிக்கள் இவனை அரியணையில் அமரச் செய்தனர், இவன் காம்பைஸஸின் சகோதரனைக் கொலை செய்தான். இவன் அர்தெஷ்டா என்னும் தலைப்பை எடுத்துக்கொண்டான். எட்டு மாதங்கள் மட்டும் அரசாண்டான் காம்பைஸஸை கொலை செய்வதற்கு முன் தரியுவின் தளபதியாய் திரும்பினான். இந்த தரியூ எகிப்திலிருந்து பெர்சியாவுக்கு திரும்பினான். இவன் காம்பைஸஸ் நான்கு தளபதிகளுடன் கொலை செய்யப்பட்ட பின்னர் திரும்பினான். அவர்கள் சவாரி செய்து வரும்போதே யார் அரசன் என்பதை தீர்மானித்து விட்டனர் மற்றவர்கள் அவனுக்கு ஆதரவு அளித்தனர். அவர்கள் தலைநகருக்குள் நுழைந்து எல்லா மாகிக்களையும் கொன்றுபோட்டனர் பின்னர் அரியணையை பிடித்தனர்.

இந்த மூன்றாம் அரசனான தரியூ 1 சூடோ ஸ்மெர்டிஸைத் தொடர்ந்து அரசனான் இவன் கிமு 486 வரை அரசனாய் ஆளுகை செய்தான். இவன் மகா தரியூ என அறியப்பட்டான். இவனது ஆளுகையின் போது எருசலேமில் தேவாலயமானது நிறைவுபெற்றது, யூதர்களுக்கு பெரிய அளவில் பாதுகாப்பு கிடைத்தது. மாகி அனைவரையும் அடக்கிக் கீழ்ப்படுத்த அவனுக்கு ஆறு ஆண்டுகள் பிடித்தது. இதற்கு முன்னரே தானியேல் மரித்து போய்விட்டார் என்பது தெளிவாயிருக்கிறது, அவன் மாகிக்களுக்கெல்லாம் தலைவனாய் இருந்தபடியால் அவர்களால் நேரிட்ட எல்லா தீமைகளையும் அனுமதித்து இருக்க மாட்டான்.

கிமு 515ல் தரியூ பெரிசிய சாம்ராஜ்ஜியத்தை மறுபடி பிரித்தான், அவன் 75 மில்லியன் கொண்ட இருபது மாகாணங்களாய் பிரித்தான். இது நிர்வாகம் செய்வதற்கு அடிப்படையாக இருந்தது இது தானியேலால் துவங்கப்பட்டது. யூதர்கள் சுய்மாய் ஆளுகை செய்ய இராஜ்ஜியத்தில் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது, அவர்களை தனிமாகானமாய் அமைத்து யூத நிர்வாகிகளால் ஆளுகை செய்யப்பட்டது.

கிமு 520ல் தேவாலயம் திரும்பக் கப்பட்டது, 516ல் கட்டி முடிக்கப்பட்டது. அது இடிக்கப்பட்டு 70 ஆண்டுகளுக்குப்பின் இது நிகழ்ந்தது. தேவாலயமானது பஸ்கா பண்டிகையின்போது, அது இடிக்கப்பட்டு 70 ஆண்டுகளுக்கு பின்னர் நிசான் மாதத்திலே பிரதிஷ்டை செய்யப்பட்டது, இதற்கு முன் கிமு 445ல் அர்தெஷெஸ்டா லாங்கிமெனஸால் தாக்கீது கட்டளையிட்ப்பட்டு எருசலேமின் மதில்கள் திரும்பக்கட்டி எழுப்பப்பட்டது.

கிமு 490ல் கிரேக்கர்கள் பெரிசியரை தோற்கடித்தனர். கிமு 486ல் அகாஸ்வேரு தரியுவின் தகப்பனை தொடர்ந்து கிமு 465ல் மன்னனான். தனது இராணுவத்தை மறுபடி குழுவாய் அமைக்க ஐந்து ஆண்டுகளானது அந்த இராணுவத்தால் அவன் கிரேக்கு மீது தாக்குதல் நடத்தினான். 200,000 மனிதர்களடங்கிய இராணுவமானது 100க்கும் அதிகமான போர்க்கப்பல்களுடன் சண்டையிட்டன. ஹெரோடாட்டஸ் அவர்களை தொகையிட்டபோது இரண்டு மில்லியனாய் கணக்கிட்டான், அவன் எப்பொழுதும் மிகைப்படுத்திக் கூறுகிறவனாய் காணப்பட்டான்.

அகாஸ்வேரு நான்காவது அரசனாய் தனக்கு முன்னாக இருந்த அனைவரிலும் மிகவும் ஐசுவரியவனாகி, தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாய் காணப்பட்டான், தானியேல் 11:2. தனது தந்தை மாரதானில் தோல்வியுற்றது குறித்து பழிவாங்கும் நம்பிக்கையுடன் இருந்தான். ஆரம்பத்தில் அவன் ஜெயம் பெற்று ஏதென்ஸில் உள்ள அக்ரோபோலிஸ் ஐ சுட்டெரித்தான். எப்படியிருப்பினும் கப்பற்படை மூலம் யுத்தம் செய்து தோல்வியுற்றான், இறுதியாக தரைமார்க்கமாய் யுத்தம் செய்தபோது கிமு 479ல் கிரேக்கரான மார்டோனியஸால் தோலிவியை தழுவி தனது படைகளை இழந்து போனான். இவன் ஒரு ப்ரோ ஸெமிட்டிக் ஆக யூதப்பெண்ணை விவாகம் செய்து இருந்தான். எஸ்தர் ஆமானை அகற்றிய பின்னர், மொர்தொகாய் ஒரு யூதன் இராஜ்ஜியத்தில் பிரதம மந்திரியாய் நியமிக்கப்பட்டான், இது தானியேலுக்கு 50 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது.

வசனம் 2 மற்றும் 3க்கு இடையே உள்ளகால அவகாசத்தை உள்ளடக்கியிருந்தது. அகாஸ்வேரு 1 லாங்கிமெனஸ் அவனது தந்தை அகாஸ்வேரு விற்கு பின் கிமு 465ல் இராஜாவானான் இவன் கிமு 425 வரை ஆளுகை செய்தான். இவன் இறுதியான பெரிசிய அரசனாய் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவனது ஆதிக்கம் கிரேக்கில் நலிவடைந்து கிமு 449ல் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டான்.

வேதாகம கண்ணோட்டத்திலிருந்து இவனது மகாப் பெரிய செயல் என்னவெனில் அகாஸ்வேரு லாங்கிமெனஸ் ஒரு தாக்கீதை வெளியிட்டு எருசலேமின் மதில்களை திரும்ப எடுத்துக்கட்ட அனுமதி அளித்தான். நெகேமியாவின் வழிநடத்துதலின் பேரில் எருசலேமின் அலங்கம் கட்டப்பட்டது, வடக்கு ஸட்ராப்ஸ் எதிர்ப்புடன் சன்பல்லாத்து, தொபியா மற்றும் கெஷாம் என்பவர்கள் எதிர்ப்பு செய்ய இவ்வேலையானது நிறைவேறியது. நெகேமியா 1-13. எருசலேமின் மதில்கள் கட்டப்பட்டு பிர்திஷ்டை செய்யப்பட்டது நியாயப்பிரமானது வாசிக்கப்பட்டது.

முக்கியமான தாக்கீது தானியேல் 70 வாரம் தீர்க்கதரிசனத்தின் ஆரம்ப அடையாள அறிகுறியாய் இருந்தது- தானியேல் 9:24-27.

இந்த காலக்கட்டம் மூன்று பகுதிகளாய் பிரிக்கப்படுகிறது. .

[அ] 49 ஆண்டுகாலம் எருசலேம் பட்டணம் பெரிய பட்டணமாகத் திரும்ப கட்டியெழுப்பப்படல்.

[ஆ] 434 ஆண்டு காலம் இயேசுக் கிறிஸ்து எருசலேமுக்குள் பவனி சென்று அந்த நாளை நிறைவேற்றும் வரை.

[இ] எதிர்காலத்தில் 7 ஆண்டு காலம், உபத்திரவ காலம், இக்காலம் இயேசுக் கிறிஸ்து திரும்ப எருசலேமிற்குள் கடந்து வருவதோடு நிறைவு பெறும்.

[கூடுதல் விபரங்களுக்கு தயவு செய்து 9ம் அதிகாரத்தைக் காண்க]

வச 3 ஆனாலும் பராக்கிரமமுள்ள ஒரு இராஜா எழும்பி, பிரபலமாய் ஆண்டு தனக்கு இஷ்டமானபடி செய்வான்.

வசனம் 3ல் மகா அலெக்ஸாண்டர் அறிமுகமாகிறான். "பராக்கிரமமுள்ள ஒரு இராஜா" என்பது மகா அலெக்ஸாண்டர் ஆகும். இவன் மாஸிடோனிய மன்னன் பிலிப்புவிற்கு கிமு 356ல் பிறந்தான். இளம்பிள்ளையாய் இருந்த போது இவனது உபாத்தியாய அரிஸ்டாட்டில் இருந்தான். 20 வயது நிரம்பிய போது தனது தந்தை மரிக்கவே அரியணை ஏறினான் அலெக்ஸாண்டர். குறுகிய காலத்திலேயே இவன் மாஸ்டர் கிரீஸாக விளங்கினான், இவனது அடுத்த குறிக்கோள் சரிவடைந்து கொண்டிருந்த பெரிசிய சாம்ராஜ்ஜியத்தைக் கைப்பற்றுவதாய் இருந்தது.

இவன் சந்தித்த ஒரு பெரிய பிரச்சனை அந்த சமயத்தில் பலதரப்பட்ட கிரோக்க மொழியானது கிரேக்கில் பேசப்பட்டு வந்ததுதான். இந்த பிரச்சனையை மேற்கொள்ள ஒரு புதிய மொழியை கண்டுபிடித்து அறிமுகம் செய்தான் அது கொய்னே கிரேக்கு அல்லது பொதுவான் கிரேக்க மொழி என அறியப்படுகிறது. இது மிகத்துள்ளியமான மொழியாக கருதப்பட்டது இந்த மொழியில் பின்னர் LXX அல்லது செப்துவஜிந்த் பழைய ஏற்பாடானது மொழி பெயர்க்கப்பட்டது, பின்னர் புதிய ஏற்பாடு மொழிபெயர்க்கப்பட்டது.

அவன் ஆசியாவை ஊடுருவும் போது 40 யுத்தங்களில் வெற்றி கண்டிருந்தான். அவன் எப்பொழுதும் முன் செல்கிறவனாய் இருந்தான். முப்பது முறைகள் அவன் காயம்பட்டிருந்தும் அவன் மர்மமான சூழ்நிலையில் பாபிலோனில் கொடிய ஜிரத்தினால் அதிகமாய் குடித்து வெறித்து மரிக்கிறவனாய் இருந்தான். அவன் கிமு 323ல் மரித்தான். அவன் குடித்த மதுபானத்தில் விஷம் கந்திருந்தது, அவனது சொந்த தளபதிகள் அவனை கொலை செய்தனர். அவன் கொலை செய்யப்பட்டான் (வசனம் 4 "உடைந்து போம்")

வச 4 அவன் எழும்பினபின்பு அவனுடைய இராஜ்ஜியம் உடைந்து போம். வானத்தின் நாலு திசைகளிலும் பகுக்கப்படும்; ஆனாலும் அது அவனுடைய சந்ததியாருக்கு அல்ல. அவன் செய்த ஆளுகையின்படியும் அல்ல; அவனுடைய இராஜ்ஜியம் பிடுங்கப்பட்ட்டு அவனுடையவர்களல்லாத வேறேபேர்களிடமாய்த் தாண்டிப்போம்.

இந்த வசனம் பரலோகின் நான்கு காற்றுக்களை குறித்து கூறுகிறது - இது அலெக்ஸாண்டரின் நான்கு தளபதிகளைக் காட்டுகிறது. "அவன் எழும்பின பின்பு" இது அலெக்ஸாண்டர் மிகுந்த வல்லமையுடன் காணப்பட்ட போதுள்ள சமயத்தை குறிக்கிறது. இவன் பாபிலோனை அடைந்த போது குறைந்த பட்சம் 13 ஆண்டுகளில் முழு உலகையும் வென்றவனாய் காணப்பட்டான். அவனது வல்லமையின் உன்னத கட்டத்தில் அவன் மரித்துப் போனான், அவன்து இராஜ்ஜியம் சில ஆண்டுகள் சண்டைக்குப் பின் நான்கு பகுதிகளாய் பிரிக்கப்பட்டது.

அலெக்ஸாண்டரின் மரணத்தின் போது பதினொரு தளபதிகளும் இராஜ்ஜியத்தில் தங்களில் முதன்மையாவன் யார் என போட்டியிட்டனர். அவர்களில் நான்குபேர் மட்டுமே வெற்றிகண்டர் இவர்கள் ப்ரலோகின் நான்கு காற்றுக்களாக கருதப்படுகின்றனர். காலப்போக்கில் இரண்டே சாம்ராஜ்ஜியங்கள் அமைய ப்பெற்று செழிப்புடன் காணப்பட்டது, அவைகள் வேதாகமத்தில் வடக்கு தெற்கு இராஜாக்களால் அறியப்படுகின்றன. அவர்கள் அந்தியோக்கை அடிப்படையாய் கொண்ட செலூக்கஸும், எகிப்தை அடிப்படையாகக் கொண்ட டாலமியும் ஆகும்.

தோற்றுப்போன ஏழு தளபதிகள் பின்வருமாறு:

[அ] பெரிடிகாஸ் இவன் ஒரு மாஸிடோனிய இராஜ வம்சத்தை சார்ந்தவன். இவன் அலெக்ஸாண்டரின் குமாரனுடன் ஆளுநராய் பதவி வகித்தான் ஆரம்பத்தில் டாலமியுடன் கூட்டுறவு கொண்டவனாய் இருந்தான். பெரிடிகால் சாம்ராஜ்ஜியத்தை பாதுகாக்க விரும்பி, கூட்டுறவில்

விரிசலை ஏற்படுத்தினான். இவன் இறுதியாய் ப்ரிதான் மற்றும் செலூக்கஸால் கொலை செய்யப்பட்டான்.

[அ] லியோனடாஸ் இவன் மாஸிடோனியா இராஜரீகி வீட்டோடு சம்பந்தப்பட்டவன். இவன் மிகவும் அழ்குள்ளவன் மற்றும் இறுமாப்புள்ளவனாய் காணப்பட்டான். இவன் உதவியாளனாய் இருந்து அரசனாக விரும்பினான்.

[இ] பெய்தான் இவன் அலெக்ஸாண்டரின் பிரதான மெய்காவலனாய் இருந்தான். இவன் திறமை மிக்கவன், வாஞ்சையுள்ளவன், மற்றும் வீராப்புடன் இருந்தவன், இவன் கிமு 313ல் காஜா யுத்தத்தில் கொலை செய்யப்பட்டான்.

[ஈ] இமெனஸ் இவன் அலெக்ஸாண்டரின் பிரதாண செயலாலராய் இருந்தான், இவன் பொறுமையுடன் காத்திருந்து நிகழ்வுகள் எவ்வாறு வளருகின்றது எனக் காண வாஞ்சையுடன் இருந்தான். ஆனால் அவன் காணத்தவறிவிட்டான்.

[உ] அண்டிபத்தர் இவன் மிகவும் வயது சென்றவனாய் இருந்தான், இவன் அலெக்ஸாண்டர் தந்தை பிலிப்புவிடத்தில் இறுதி தளபதியாய் பணியாற்றினவன்.

[ஊ] ஆண்டிஜினோஸ் இவன் ஒற்றைக் கண்ணனாய் இருந்தான், திறமைசாலியாய் இருந்தான், வயது சென்றவனாய் இருந்தான், அலெக்ஸாண்டரின் அனைத்து தளபதிகளிலும் மிகவும் திறமைசாலியாய் காணப்பட்டான்.

[எ] டெமெட்ரியஸ் இவன் ஆண்டிஜினஸின் குமாரனாய் இருந்தான், இவன் தனது தந்தையுடன் பயிற்சி பெற்றவனாய் இருந்தான், இவன் ஏறத்தாள உலகமனைத்தையும் வென்றவனாய் காணப்பட்டான் இறுதியாய் இவன் கிமு 301ல் இப்ஸஸ் யுத்தத்தில் தோல்வியை தழுவினான், இது தளபதிகளுக்குள் சண்டையின் முடிவாகக் கருதப்பட்டது.

பரலோகின் நான்கு காற்றுக்களில் இருவர் முடிவாக இழந்து போனவர்களாய் கருதப்படுகின்றனர், அவர்கள்:-

[அ] காஸண்டர் இவன் மாஸிடோனியாவை எடுத்துக்கொண்டவன். இங்கு அலெக்ஸாண்டரின் தாயார் ஒலிமியாவை இவன் கண்டுகொண்டான். கிமு 297ல் இருதய் நோய்வாய்கண்டு இவன் மரித்துப்போனான்.

[ஆ] லிஸிமாக்கஸ் இவன் இப்ஸஸ் யுத்தத்திற்கு பின் சிரிய ஆசியாவை வெகுமதியாய் பெற்றான், இறுதியாக கிமு 281 ல் யுத்தத்தில் மரித்துப்போனான்.

மத்திய கிழக்கு நாடுகளில் சாம்ராஜ்ஜியத்தை ஆரம்பித்த இரு முக்கியமான தளபதிகள் டாலமி மற்றும் செலூக்கஸ் என்பவர்களாவார்கள்.

டாலமி 1 தெற்கு இராஜ்ஜியத்தின் ஸோடர் அரசன் [கிமு 312 - 281] இவன் எருசலேமை கிமு 320ல் கைப்பற்றி கிமு 314 வரை எகிப்திற்கு கீழாய் வைத்திருந்தான். இவன் அலெக்ஸாண்டரின் பதினொரு தளபதிகளில் இயற்கை மரணம் எய்தினவனாய் கருதப்படுகிறான்.

செலூக்கஸ் 1 வட இராஜ்ஜியத்தின் இராஜா [கிமு 312 - 281] இவன் எல்லாவற்றை சுதந்தரிக்கும் வகையில் வலிமை பெற்றவனாய் இருந்தான் கிமு 302ல் சிரியா முதல் மேற்கு பஞ்சாப் வரை இவனது ஆதிக்கத்திலிருந்தது. இவன் இறுதியாய் டாலமி 2 ன் சகோதரனால், மாஸிடோனியா கேம்பில் வைத்து கொலை செய்யப்பட்டு, மரித்துப்போனான்.

வட தென் தேச இராஜாக்கள் 11:5-11:34.

அலெக்ஸாண்டரின் மரணத்திற்குப் பின்னான கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் சரித்திரமானது வேதாகம தீர்க்கதரிசனத்தில் மிகத்துள்ளியமாய் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. அதை இந்த அதிகாரத்தில் தெளிவுடன் காண்கிறோம். வட இராஜ்ஜியமானது சிரியாவின் செலூக்கஸை அடிப்படையாய் கொண்டும், தெற்கு இராஜ்ஜியம் எகிப்தின் டாலமியை அடிப்படையாய் கொண்டும் செயல்பட்டது.

இந்த சாம்ராஜ்ஜியங்களின் சரித்திரத்தை கி மு மூன்றாம் நூற்றாண்டு முதல் முதல் நூற்றாண்டு வரையுள்ள சரித்திர வாயிலாக அறிந்து கொள் வோமாக.

வச 5 தென்றிசை இராஜா பலவானாயிருப்பான். ஆனாலும் அவனுடைய பிரபுக்களில் ஒருவன் அவனைப் பார்க்கிலும் பலவானாகி ஆளுவான்.

டாலமி 1 எகிப்தை அடிப்படையாய் கொண்டு அரசாண்ட தென்திசை இராஜா வல்லமை மிக்க இராஜாவாய் அரசாண்டான், அதேபோல

சிரியாவை அடிப்படையாய்க் கொண்ட வட இராஜ்ஜிய இராஜாவாகிய செலூக்கஸும் வலிமை மிக்கவனாய் அரசாண்டான். கிமி 302 வரை செலூக்கஸ் எல்லாவற்றையும் ஜெயித்து சிரியா முதல் இந்தியாவில் பஞ்சாப் வரை அரசாண்டான்.

வச 6 அவர்கள் சில வருஷங்களுக்குப் பின்பு, ஒருவரோடொருவர் சம்பந்தம் பண்ணும்படிக்குத் தென்றிசை இராஜாவின் குமாரத்தி வடதிசை இராஜாவினிடத்தில் வருவாள். ஆனாலும் அவளுக்குப் புயபலம் இராமற்போம். அவனும் அவனுடைய புயமும் நிலைநிற்பதில்லை. அவளும் அவளைஅழைத்துவந்தவர்களும், அவளைப் பெற்றவனும், அவளை அக்காலங்களில் பலப்படுத்தினவனும் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

டாலமி மட்டுமே அலெக்ஸாண்டரின் மரணமட்டும் தளபதியாய் இருந்தவன் இவன் இயற்கை மரணம் எய்தினான். இவன் தனது 84ம் வயதில் மரணமடைந்தான் இவனைத் தொடர்ந்து டாலமி 2 பதவிக்கு வந்தான். டாலமி 2ன் சகோதரன் செலூக்கஸ் என்கிற தனது மாமனுடன் மாஸிடோனியாவில் ஒரு முகாமுக்குச் சென்று, அவனைக் கொன்று போட்டு அந்தியோகஸ் 1 ஐ அரியனை ஏறும்படி செய்தான். டாலமி 2ம் அந்தியோகஸ் 1ம் பாலஸ்தீன மீது அநேக ஆண்டுகள் யுத்தம் செய்து வந்தனர். இது இரு சாம்ராஜ்ஜியங்களுக்கு இடையே இடைப்பட்ட நாடாக உருவாகியது.

அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் டாலமியின் குமாரத்தி பெர்னிஸ் அந்தியோகஸ் 2 ஐ திருமணம் செய்துகொண்டாள், இவர்களுக்கு ஒரு குமாரன் பிறந்தான். அந்தியோகஸ் இதற்குமுன்னரே லவுடிஸ் என்ற பெண்ணை திருமணம் செய்து இருந்தான் அவள் பெர்னிஸை கொலை செய்ய முனைந்தாள். அந்தியோகஸ் 2 ம் அவர்களது குமாரன் செலூக்கஸ் 2ம் 246 கிமு வரை பதவி வகித்தனர். டாலமி 2 நிகழ்ந்தது குறித்து கடுங்கோபமடைந்து வடக்கு இராஜ்ஜியம் மீது படையெடுத்தான் ஆனால் கிமு 245ல் மரணமடைந்தான்.

வச 7 ஆனாலும் அவளுடைய வேர்களின் கிளையாகிய ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்பி, இராணுவத்தோடே வந்து வடதிசை இராஜாவின் அரணிப்புக்குள் பிரவேசித்து அவர்களை விரோதித்து.

டாலமி 3 வேர்களின் கிளையாய் இருந்தான், இவன் பெர்னிஸின் சகோதரனாய் இருந்தான். இவன் எகிப்தின் அரியணையில் பின்தொடர்ந்த அரசனாய் இருந்தான் இவன் வடக்கு இராஜ்ஜியம் மீது படை எடுத்துச் சென்று அதை வெற்றிகண்டான்.

டாலமி 3 தெற்கு இராஜ்ஜியத்தின் ஜெனித்தின் வல்லமையை பிரதிபலிக்கிறவனாய் விளங்கினான். இவன் தலைமைபட்டணமாகிய அந்தியோகியாவுக்குள் நுழைந்தான், ஆப்பிரிக்க யானைகளை பயன்படுத்தி வடக்கு இராஜ்ஜியத்திற்கு மதில்களை அமைத்தான்.

வச. 8 அவர்களுடைய அதிபதிகளையும், அவர்களுடைய விலையேறப்பெற்ற வெள்ளியும் பொன்னுமாகிய பாத்திரங்களையும் அவர்களுடைய தெய்வங்களையும்கூட எகிப்துக்குக் கொண்டுபோய் சில வருஷங்கள் மட்டும் வடதிசை இராஜாவைப்பார்க்கிலும் நிலையாய் நிற்பான்.

டாலமி 3 அநேக தேசங்களை வென்றான். இவன் அநேக சிறைக்கைதிகளுடன் எகிப்திற்கு திரும்பினான் மற்றும் 2400 பொன் வெளியினால் செய்யப்பட்ட விக்கிரகங்கள் சில 300 ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டவைகளும், மற்றும் வெகு திராளான ஐசுவரியத்துடனும் திரும்பினான். டாலமி 3 வட இராஜ்ஜியத்திற்கு ராஜாவாய் இல்லாது ஐந்து ஆண்டுகாலங்கள் ஜீவித்தான்.

வச. 9 தென்றிசை இராஜா இராஜ்ஜியத்துக்கு விரோதமாக வந்து, தன் தேசத்துக்குத் திரும்பிப்போவான்.

டாலமி 3 எகிப்திற்கு வெற்றிவாகை சூடினவனாகத் திரும்பினான். முடிவாக, செலூக்கஸ் 2 அவனது இராஜ்ஜியத்தின் அநேகம் பகுதிகளை மீட்டுக்கொண்டான், ஆனால் இராஜ்ஜியத்தின் கிழக்கப் பகுதி கிமு 220ல் துவங்கப்பெற்ற பார்த்தியன்ஸ் களால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வச 10 ஆனாலும் அவனுடைய குமாரரர் யுத்தஞ்செய்ய எத்தனித்து, திரளான சேனைகளைக் கூட்டுவார்கள். இவர்களில் ஒருவன் நிச்சயமாய் வந்து வெள்ளம்போலக் கடந்து திரும்பவும் தன்னுடைய அரண்மனைமட்டும் யுத்தங்கலந்து சேருவான்.

அவனது குமாரரர்கள் செலூக்கஸ் 2ன் குமாரரர்களாய் இருக்கிறார்கள், அவர்கள் செலூக்கஸ் 3 மற்றும் அந்தியோகஸ் 3 ஆக இருக்கிறார்கள். செலுக்கஸ் 3 வட இராஜ்ஜியத்தை திரும்ப அடைய முயன்றான். ஆனால் பெர்கமத்தின் இராஜா அவனைத் தடுத்தபடியினால் அந்தியோகியாவுக்கு திரும்பி விட்டான். செலூக்கஸ் 3 பிரிகியாவில் வைத்து கொலை செய்யப்பட்டான்.

அந்தியொகஸ் 3 இதன் பின அரசனான், இவன் கிமு 223 முதல் 187 வரை அரசாண்டான். இவன் மகா அந்தியோகஸ் என அறியப்பட்டான். இவன்

தனது இராணுவத்திற்கு வலிமை மிக்க இராணுவப்பயிற்சி, ஒழுங்கு முறை இவைகளை அளித்து வட இராஜ்ஜியத்தின் இராணுவத்தை வலிமைப்படுத்தினான். தெற்கு இராஜ்ஜியத்தின் மீது தாக்குதல் நடத்தி திரும்ப ஜெயம் பெற்று எஞ்சிய வல்லமையையும் பெற்றுக்கொண்டான்.

11 அப்பொழுது தென்றிசை இராஜா கடுங்கோபங்கொண்டு வடதிசை இராஜாவோடே யுத்தம்பண்ணுவான். இவன் பெரிய சேனையை ஏகமாய் நிறுத்துவான் ஆனாலும் இந்த சேனை அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படும்

கிமு 217ல் ரஃபியா யுத்தத்தை சம்பந்தப்படுத்தி காட்டுகிறது இது அந்தியோகஸ் 3க்கும் டாலமி 4ற்கும் இடையே நடைபெற்ற யுத்தமாகும். தெற்கு இராஜ்ஜியமானது மிகவும் நலிவடைந்து அந்தியோகஸின் இராணுவம் வலுவான நிலைக்கு உயர்த்தப்பட்டது. டாலமி 4 தனது யுத்த வீரர்களை பயிற்சிவிக்கும் படி ஒரு வருடம் அளிக்கப்பட்டது. அவன் தனது குடிவெறித்தனத்தை விட்டுவிட்டு தனது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக்கொண்டு இராணுவத்தை வழிநடத்தும்படி செய்யப்பட்டது.

கிரேக்க சாம்ராஜ்ஜியத்தில் எகிப்தியர்களை யுத்தத்தில் முதன் முறையாய் பயன்படுத்தியதால், டாலமி 4 ரஃபியா யுத்தத்தில் ஜெயம் பெற்றான். வடக்கு இராஜ்ஜியத்தின் இராஜாவுடன் யுத்தம் செய்தான். .தனது சகோதரியை மணம் புரிந்து கொண்டான் அவர்களது பிள்ளை டாலமி 5 ஆக மாறினான்.

வச 12 அவன் இந்தச் சேனையை நீக்கின பின்பு, அவனுடைய இருதயம் கர்வங்கொள்ளும் அவன் அநேமாயிரம்பேரை மடிவிப்பான். ஆனாலும் பலங்கொள்ளமாட்டான்.

டாலமி 4 எகிப்திற்கு திரும்பினான், அத்தருணத்தில் தேசத்தை ஒன்றாக்கும்படியான வாய்ப்பு அவனுக்கு இருந்தது அவனது இராணுவத்தை எகிப்திய இராணுவத்துடன் ஒருங்கிணக்கும்படியான் வாய்ப்பு இருந்தது, ஆனால் அவன் மிதமிஞ்சிய குடிபோதைக்கு திரும்பினபடியால் நில மானிய அமைப்பை ஏற்படுத்தினான். இதனிமித்தம் பல உயிர்களை பலிகொள்ளும் பல கலகங்கள் வெடித்து சிதறியது. டாலமி 4 கிமு 203ல் மரணம் எய்தினான்.

வச 13 சில வருடங்கள் சென்ற பின்பு வடதிசை இராஜா திரும்ப முந்தின சேனையிலும் பெரிதான சேனையோடும் வெகு சம்பத்தோடும் நிச்சயமாய் வருவான்.

அந்தியோகஸ் 3 தனது தோல்வியே இறுதியானது என எடுத்துக்கொள்ளாதிருந்தான். "சில வருடங்கள் சென்றபின்பு" என்கிற சொற்றொடரின் அர்த்தம், தென்திசை இராஜாவோடு மறுபடியும் யுத்தம் செய்ய 14 ஆண்டுகாலம் எடுத்துக்கொண்டது. இவன் தனது இராணுவத்திற்கு பயிற்சி அளித்து கிழக்கு தேசத்திலே இவன் மிகவும் ஐசுவரியவனான்.

வச 14 அக்காலங்களில் தென்றிசை இராஜாவுக்கு விரோதமாக அநேகர் எழும்புவார்கள். அப்பொழுது உன் ஜனத்திலுள்ள துண்டரிக்காரரின் புத்திரர் தரிசனத்தை நிறைவேற்றத் தங்களை உயர்த்துவார்கள்.

அந்தியோகஸ் 3 இப்பொழுது ஏழு வயது குழந்தை டாலமி 5ற்கு விரோதமாய் தாக்குதல் நடத்தினான். அவன் ஜனங்களில் திருடர்கள் உதவியினால் அவர்கள் யூதர்களாய் இருந்தனர் இவர்கள் ஒத்தாசையுடன் அந்தியோகஸ் கிமு 199ல் பாலஸ்தீனத்தை கைப்பற்றினான்.

அந்தியோகஸ் ஸ்கோப்பஸுக்கு கீழ் இருந்த எகிப்திய இராணுவத்தைத் தோற்கடித்தான் மட்டுமின்றி அவனுக்கு விரோதமாய் அனுப்பப்பட்ட மற்ற மூன்று இராணுவங்களையும் தோற்கடித்தான். இந்த யுத்தத்தைக் குறித்து யூதர்களின் தரிசனம் அவர்களை விடுவித்தது. உண்மை என்னவெனில் அந்தியோகஸ் 4க்கு பயங்கரத்தைக் கொண்டுவருகிறதாய் இருந்தது.

வச 15 வடதிசை இராஜா வந்து, கொத்தளம் போட்டு அரணான நகரங்களைப் பிடிப்பான். தென்றிசை இராஜாவின் புயபலங்களும் அவன் தெரிந்து கொண்ட ஜனமும் நில்லாமற்போம். எதிர்க்கிறதற்குப் பெலன் இராது. 16 ஆகையால் அவனுக்கு விரோதமாக வருகிறவன் தன் இஷ்டப்படிச் செய்வான். அவனுக்கு முன்பாக நிலைநிற்பவன் ஒருவனும் இல்லை. அவன் சிங்காரமான தேசத்தில் தங்குவான். எல்லாம் அவன் கைவசமாகும்.

எகிப்திய இராணுவத்தை தோற்கடித்ததுடன் அந்தியோகஸ் எகிப்தின் மீது எவ்வித எதிர்ப்புமின்றி படையெடுத்து, பாலஸ்தீனத்தை தன் கைவசப்படுத்திக்கொண்டான்.

வச 17 தன் இராஜ்ஜியத்தின் வல்லமையோடெல்லாம் தானும் தன்னோடேகூடச் செம்மைமார்த்தத்தாரும் வர, இவன் தன் முகத்தைத் திருப்புவான். இப்படிச் செய்து கெடுதியுண்டாகும்படி

அவனுக்கு ஒரு கன்னிப்பெண்ணைக் கொடுப்பான். ஆனாலும் அவளாலே ஸ்திரம் பெறான் அவள் அவன் பட்சத்தில் நில்லாள்.

டாலமி 5 ஐ தோற்கடித்து அந்தியோகஸ் 3 எகிப்திய இராஜ்ஜியத்தின் மீது ஆதிக்கம் செலுத்த எண்ணினான். இதை அவனது குமாரத்தி கிளியோபாட்டாவை ஒன்பது வயது நிரம்பிய அரசனுக்கு மணம்புரிந்து கொடுப்பதன் மூலம் செய்ய எத்தணித்தான். அவனது திட்டம் பின்வாங்கியது கிளியோபார்ட்டாவைக் கொண்டு வந்த குடும்பப்பெண் அவளது இளம் புருஷன் மீது காதல் கொண்டு, அவனைக் காட்டிக்கொடுக்க மறுதலித்தாள்.

வச 18 பின்பு இவன் தன் முகத்தைத் தீவுகளுக்கு நேராகத் திருப்பி, அநேக தீவுகளைப் பிடிப்பான். ஆனாலும் ஒரு சேனாதிபதி இவன் செய்த நிந்தையினிமித்தம் இவனுக்குச் சரிக்குச் சரிக்கட்டுவான்.

ஆசிய மைனரில் டாலமி 5ன் பகுதி களை தன் வசப்படுத்திக்கொண்ட பின்னர் டாலமி 5 திரேஸின் மீது ஆதிக்கம் செலுத்தி அந்தியோகஸ் 3ன் மீது படையெடுத்தான். இது அந்தியோகஸை கிரீஸுடன் சேர்ந்து கொள்ளும்படி அனுமதித்தது.

பரந்து விரிந்த ரோம சாம்ராஜ்ஜியம் மக்னீஸியம் மற்றும் தெர்மோபைலே யுத்தத்தில் மோதிக்கொண்டன இந்த யுத்தத்தில் அவன் தோற்கடிக்கப்பட்டான். அதின் பிரபு ஸ்கிப்பியோ ஆசியாடிகஸ் ஆக இருந்தான், இவன் புத்திசாலியான ரோமத்தளபதியாய் இருந்தான்.

வச 19 ஆகையால் தன் முகத்தை தன் தேசத்தின் அரண்களுக்கு நேராகத் திருப்புவான். அங்கே இடறிவிழுந்து காணப்படாமற்போவான்.

மக்னீஸியம் யுத்தத்திற்குப் பின்னர் அந்தியோகஸ் அந்தியோகியாவுக்கு திரும்பினான். ரோமருக்கு இழப்பீடு செய்தல் மிகவும் பெரிய அளவில் இருந்தது, வடக்கு இராஜ்ஜியம் திவாலாகக்கூடிய நிலையில் இருந்தது. அந்தியோகஸ் பாக்டிரியாவில் உள்ள ஆலயங்கள் ஐசுவரியம் மிக்கது என நினைவுகூர்ந்து, தனது கருவூலத்தை நிரப்பும்படி கிழக்கு நோக்கி சென்றான். ஒரு ஆலயத்தை அவன் தாக்குதல் செய்யும் போது அவன் படுகொலை செய்யப்பட்டான்.

வச 20 செழிப்பான இராஜ்ஜியத்தில் தண்டல் காரனைத் திரியப்பண்ணுகிற ஒருவன் தன் ஸ்தானத்தில் எழும்புவான். ஆகிலும் சில நாளைக்குள் கோபமில்லாமலும் யுத்தமில்லாமலும் நாசமடைவான்.

அந்தியோகஸ் 3ன் மரணத்தின் விளைவு, செலூக்கஸ் 4 அரசனாய் பதவி ஏற்றான். அவன் தனது கருவூலத்தை அதிகமான வரிப்பணத்தால் நிரப்பும்படி எத்தணித்தான். இவனது ஆளுகையானது குறுகிய தன்மை வாய்ந்ததாய் இருந்தது. அது தனது முதன் மந்திரி ஹெலியோடொரஸால் முடிவுக்கு வந்தது, இவன் செலூக்கஸ் 4 ஐ கொலை செய்தான் தன்னை குறுகியகாலத்திற்கு தலைவனாய் அறிமுகம் செய்துகொண்டான் கருவூலத்தை திருட்டுத்தனமாய் நிரப்பினான். இவ்வாறு அவன் கோபமில்லாமலும், யுத்தமில்லாமலும் நாசடைந்தான்.

கைக்கொள்ளுதல்:

தேவன் சரித்திரத்தை அது நிகழும் முன்னரே நன்கு அறிந்துள்ளார் மற்றும் அவர் தீர்க்கதரிசனத்தில் பிழை ஏற்படுத்துவது இல்லை.

இதினிமித்தம் வேதவசனங்களை சந்தேகத்திற்கு இடமின்றி நம்பலாம் அது எதிர்காலத்தை கூறுவதோடு மட்டுமின்றி அனுதின வாழ்வில் அவருடன் நடக்கும் போது உள்ள தேவைகளை சந்திப்பதாயும் உள்ளது.

தேவன் ஒவ்வொரு விசுவாசியிலும் ஒரு நோக்கத்தேடிருக்கிறார். ஒவ்வொரு விசுவாசியும் சரித்திரத்தின் ஒருபகுதியாய் இப்பொழுது இருக்கிறார்கள்.

ப்ரோ செமிட்டிஸம் தேவனின் சிந்தனையும் மற்றும் கொள்கையுமாய் இருக்கிறது. தேவைக் கேற்ப யூதர்களை தேவன் சிட்சிக்கிறவராய் இருக்கிறார், மனிதர்கள் குறுக்கிடும்போது அவர்கள் தேவனால் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள்.

DOCTRINE உபதேசம்

NATIONS AND RACES தேசங்களும் மற்றும் இனங்களும்.

பகுதி 47 - அந்தியோகஸ் எப்பிப்பேனஸ் இனங்கண்டு கொள்ளப்படுதல். தானியேல் 11:21-35.

21 அவன் ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான்.
இவனுக்கு ராஜ்ஜியபாரத்தின் மேன்மையைக் கொடாதிருப்பார்கள்.
ஆனாலும் இவன் சமாதானமாய் நுழைந்து இச்சகம்பேசி,
இராஜ்ஜியத்தைக் கட்டிக்கொள்வான். 22 பிரவாகமாய் வருகிற
சேனைகள் இவனாலே பிரவாகமாய் முறிக்கப்படும். உடன்படிக்கையின்
தலைவனும் முறிக்கப்படுவான். 23 ஏனென்றால் அவனோடே
சம்பந்தம்பண்ணின நாட்கள் முதல் அவன் சூதாய் நடந்து, கொஞ்சம்
ஜனங்களோடே புறப்பட்டு வந்து பெலங்கொள்ளுவான். 24 தேசம்
சுகவாழ்வோடும் சம்பூரணத்தோடும் இருக்கையில், அவன்
உட்பிரவேசித்து, தன் பிதாக்களும் தன்பிதாக்களின் பிதாக்களும்
செய்யாததைச் செய்வான். கொள்ளையிட்டுச் சூறையாடி பொருளை
அவர்களுக்கு இறைத்துப் பங்கிட்டு அரண்களுக்கு விரோதமாகத்
தனக்குள் உபாயங்களை யோசிப்பான். சிலகாலம் மட்டும்
இப்படியிருக்கும். 25 பின்னும் தென்றிசை இராஜாவுக்கு விரோதமாகப்
பெரிய சேனையோடே போர்செய்யத் தன் வல்லமையையும் தன்
ஸ்திரத்தையும் எழுப்புவான். அப்பொழுது தென்றிசை இராஜா மிகவும்
பலத்த பெரிய ராணுவத்தோடே போய் யுத்தங்கலப்பான். ஆனாலும்
அவர்கள் அவனுக்கு விரோதமாகத் துராலோசனை
பண்ணியிருந்தபடியால், அவன் நிற்கமாட்டான். 26 அவனுடைய
போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவனை நாசப்படுத்துவார்கள்.
ஆகையால் அவனுடைய இராணுவம் பிரவாகமாய் வரும். அநேகர்
கொலையுண்டு விழுவார்கள். 27 இந்த இரண்டு இராஜாக்களின்
இருதயமும் தீமை செய்ய நினைக்கும், ஒரே பந்தியிலிருந்து பொய்
பேசுவார்கள். ஆனாலும் அது வாய்ப்பதில்லை குறித்த காலத்துக்கு
முடிவு இன்னும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். 28 அவன் மகா
சம்பத்தோடே தன் தேசத்துக்குத் திரும்பி, தன் இருதயத்தைப் பரிசுத்த
உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து அதற்கானதைச் செய்து, தன்
தேசத்துக்குத் திரும்பிப் போவான். 29 குறித்தகாலத்திலே திரும்பவும்
தென்தேசத்திற்கு வருவான். ஆனாலும் அவனுடைய பின் நடபடி
முன்நடபடியைப் போல் இராது. 30 அவனுக்கு விரோதமாகத் கித்தீமின்
கப்பல்கள் வரும். அதினாலே அவன் மனநோவடைந்து திரும்பிப்போய்,
பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு
அதற்கானதைச் செய்து பரிசுத்த உடன்படிக்கையைத் தள்ளினவர்களை
அநுசரிப்பான். 31 ஆனாலும் அவனிடத்திலிருந்து புறப்பட்ட சேனைகள்
எழும்பி, அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி,
அன்றாடபலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்.
32 உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை
இச்சகப்பேச்சுகளினாலும் கள்ள மார்க்கத்தாராக்குவான். தங்கள்
தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு அதற்கேற்றபடி
செய்வார்கள். 33 ஜனங்களில் அறிவாளிகள் அநேகருக்கு அறிவை

உணர்த்துவார்கள். அநேக நாள்மட்டும் பட்டயத்தினாலும் அக்கினியினாலும் சிறையிருப்பினாலும் கொள்ளையினாலும் விழுவார்கள். 34 இப்படி அவர்கள் விழுகையில் கொஞ்சம் ஒத்தாசையால் சகாயமடைவார்கள்.அப்பொழுது அநேகர் இச்சகவார்த்தைகளோடே அவர்களை ஒட்டிக் கொள்வார்கள்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

வச 21 அவன் ஸ்தானத்தில் அவமதிக்கப்பட்டவன் ஒருவன் எழும்புவான். இவனுக்கு ராஜ்ஜியபாரத்தின் மேன்மையைக் கொடாதிருப்பார்கள். ஆனாலும் இவன் சமாதானமாய் நுழைந்து இச்சகம்பேசி, இராஜ்ஜியத்தைக் கட்டிக்கொள்வான்.

இந்த வசனம் வடக்கு இராஜ்ஜியத்தின் இராஜாவாகிய அந்தியோகஸ் IV எப்பிப்பேனஸை அறிமுகப்படுத்துகிறது [கிமு 175-163] இதற்கு முன் 8ம் அதிகாரத்தில் இவன் சின்ன கொம்பாக இனங்கண்டு கொள்ளப்பட்டான்.

இவன் கிரேக்க சாம்ராஜ்ஜியம் சரிவடைகிற காலத்தில் ஆளுகை செய்கிறவனாய் இருந்தான், இக்காலகட்டத்தில் ரோம சாம்ராஜ்ஜியம் எழுகிறதாய் இருந்தது. எப்படியிருப்பினும் இந்த புதிரான ஆளுநர் இந்த அதிகாரத்தில் பிரதம ஸ்தானத்தை வகிக்கிறவனாய் விளங்குகிறான் காரணம் இவனது உறவு யூதர்களுடன் எதிர்கலாத்தில் தோன்ற இருக்கும் அந்திக்கிறிஸ்துவுக்கு ஒப்பணையானதாய் இருந்தது. இவன் மெய்யாகவே சாத்தானின் மனிதனாய் இருந்து அநேக காரியங்களில் பிசாசு பிடித்தவனாய் ஆளுகை செய்து சாத்தானின் வழிமுறைகளை செயல்படுத்துகிறவனாய் இருந்தான்.

எப்பிப்பேனஸின் அர்த்தம் மகிமை அடைந்த என்பதாகும் இப்பெயர் அந்தியோகஸுக்கு அளிக்கப்பட்டது, இவன் தேவனாய் மதிக்கப்பட்டு ஆராதிக்கப்பட்டான். யூதர்கள் இவனது தலைப்பை அந்தியோகஸ் எபிமென்னஸ் என அழைத்தனர், அந்தியோகஸ் பைத்தியம் கொண்டவன் என அழைத்தனர்.

தேவன் இவனை இவ்வசனத்தில் கொடிய நபராக வகைப்படுத்துகிறார், இவன் இராஜ்ஜியத்தை முறையாக பெறாமல் வேறுவழியில் பெற்றுக்கொள்கிறவனாய் இருக்கிறான். செலூக்கஸ் 4 ஐ தொடர்ந்து ஆளுகை செய்த அநேகர் உண்டு இவர்களில் இவனது சகோதரன் டெமெட்ரியஸும் அடங்குவான். இவன் ரோமபுரியில் ஒரு பிணைக்கைதியாய் இருந்தான். இவனுக்கு அந்தியோகஸ் என்னும்

இளைய குமாரனும் இருந்தான் அவன் இன்னும் குழந்தையாகவே இருந்தான்.

செலூக்கஸ் 4 கொலை செய்யப்படும்போது நாம் அந்தியோகஸ் 4னைக் கண்டுகொள்கிறவர்களாய் இருக்கிறோம், இவன் ரோமில் பயிற்சி பெற்று ஏதென்ஸில் கிரேக்க தளபதியாய் இருந்தான். இங்கு அவன் ஹெலியோடரஸ் கையால் கொலை செய்யப்பட்ட அரசனைக் குறித்து கேள்விப்பட்டான். அந்தியோகஸ் என்கிற குழந்தைக்கு பாதுகாவலனாய் இருந்து அவன் சிரியாவை பெற்று, தனது சிங்காசனத்தை பெலப்படுத்துகிறவனானான். இளம் வயதான அந்தியோகஸை கொலை செய்ததன் மூலம் சிங்காசனத்தை பாதுகாப்பிற்குள்ளாக்கினான்.

வடக்கு இராஜ்ஜியத்தை கைப்பற்றிய ஆரம்பத்தில் அதை போட்டி மனப்பான்மையுடன் ஆளுகை செய்து, தன்னை ஒரு சிறப்பான அரசனாய்க் காட்டினான்.

வச 22 பிரவாகமாய் வருகிற சேனைகள் இவனாலே பிரவாகமாய் முறிக்கப்படும். உடன்படிக்கையின் தலைவனும் முறிக்கப்படுவான்.

இந்த வசனம் எகிப்தின்மீது படையெடுத்த இராணுவ செயல்பாடுகள் குறித்து பேசுகிறது, இவன் அஞ்சத்தக்க இராணுவத்தை அமைத்துக் கொண்டான். அவன் ஹெலியோடொரஸின் இராணுவத்தை தோற்கடித்தான் மற்றும் எகிப்து தன்னை தாக்க முற்படுகிறது எனக்கேள்விப்பட்டான். அவன் தெற்கு அண்டை நாடுகளில் தாக்குதல் நடத்தினான். எகிப்தியரை ராஸ் பாரன் யுத்தத்தில் தோற்கடித்தான்.

"உடன்படிக்கையின் தலைவன்" பிரதாண ஆசாரியனாகிய ஒனியஸைக் குறிக்கிறது, இவன் அந்தியோகஸ் கட்டளையால் கிமு 172ல் கொலை செய்யப்பட்டான். ஒனியஸ் கடவுளைச் சார்ந்து அரசியலுக்கு தலைமை வகித்தபடியால், "உடன்படிக்கையின் தலைவன்" என்ற தலைப்பைப் பெற்றான். வசனம் 28 மற்றும் 32ல் "உடன்படிக்கையின் கீழ்" யூத தேசத்தை பயன்படுத்தினான்.

வச 23 ஏனென்றால் அவனோடே சம்பந்தம்பண்ணின நாட்கள் முதல் அவன் சூதாய் நடந்து, கொஞ்சம் ஜனங்களோடே புறப்பட்டு வந்து பெலங்கொள்ளுவான்.

அந்தியோகஸ் அமைவதற்கு எகிப்து உடபட பலதரப்பட்ட தேசங்கள் ஆயத்தங்கள் செய்தன. இவைகள் எல்லாவற்றிலும் மறைவான சூழ்ச்சியுடன் ஏமாற்று எத்தணங்களும் உட்பட்டு இருந்தன. இக்காலக்கட்டத்தில் எகிப்தில் இரு டாலமி ஆளுநர்கள் எகிப்தில்

ஆண்டுவந்தனர் அவர்கள் டாலமி ப்ஃலோமீட்டர் மற்றும் டாலமி எயூர்ஜெடஸ் ஆகும். அந்தியோகஸ் முதலாமவனுக்கு ஆதரவு அளித்தான் அதன் விளைவாக அவன் மிகவும் பெலப்பட்டு அந்தப்பிராந்தியங்களில் மிகவும் வலுவடைந்தான்.

வச 24 தேசம் சுகவாழ்வோடும் சம்பூரணத்தோடும் இருக்கையில், அவன் உட்பிரவேசித்து, தன் பிதாக்களும் தன்பிதாக்களின் பிதாக்களும் செய்யாததைச் செய்வான். கொள்ளையிட்டுச் சூறையாடி பொருளை அவர்களுக்கு இறைத்துப் பங்கிட்டு அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள் உபாயங்களை யோசிப்பான். சிலகாலம் மட்டும் இப்படியிருக்கும்.

மறுபடியும் மறைவான சூழ்ச்சி செய்ததினிமித்தம், சமாதானத்துடன் உள்ள தேசங்களுடன் தாக்குதல் நடத்தினான். தாங்கள் மீது தாக்குதல்களை எதிர்பார்க்காவண்ணம் இருந்த தேசங்களில் இருந்து மிகுந்த ஐசுவரியத்தை பெற்றுக்கொள்கிறவனான். அப்பணக்குவியலை தனக்காக எடுத்துக்கொள்ளாமல் அவனை பின்பற்றியவர்கள் அவைகளை எடுத்துக்கொண்டு மற்றவர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கு அவற்றைப் பயன்படுத்தினர். இதன் பொருள் மற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கச் செய்தனர். அவன் தனது வல்லமையை வஞ்சகத்தின் மூலம் கட்டியெழுப்பினான். அந்திக்கிறிஸ்துவை ப் போன்று ஊழல்கள் மற்றும் மறைவான சூழ்ச்சிகள் மூலம் செயல்பட்டான். இவன் எதிர்காலத்தில் தோன்ற இருக்கும் அந்திக்கிறிஸ்துவைப்போல செயல்படுகிறவனாய் இருந்தான்.

வச 25 - 26 25 பின்னும் தென்றிசை இராஜாவுக்கு விரோதமாகப் பெரிய சேனையோடே போர்செய்யத் தன் வல்லமையையும் தன் ஸ்திரத்தையும் எழுப்புவான். அப்பொழுது தென்றிசை இராஜா மிகவும் பலத்த பெரிய ராணுவத்தோடே போய் யுத்தங்கலப்பான். ஆனாலும் அவர்கள் அவனுக்கு விரோதமாகத் துராலோசனை பண்ணியிருந்தபடியால், அவன் நிற்கமாட்டான். 26 அவனுடைய போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவனை நாசப்படுத்துவார்கள். ஆகையால் அவனுடைய இராணுவம் பிரவாகமாய் வரும். அநேகர் கொலையுண்டு விழுவார்கள்.

அந்தியோகஸ் அதிகமான நேரத்தை தெற்குமுகமாய் எகிப்திற்கு விரோதமாய் யுத்தம் செய்வதில் செலவு செய்தான், இது குறித்து இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. டாலமி பெரிய இராணுவத்துடன் எதிர்த்தும் வட தேசத்து இராஜாவால் தோற்கடிக்கப்பட்டான். மறுபடியும் அந்தியோகஸ் வஞ்சகத்தைப்பயன்படுத்தி தெற்கு இராஜ்ஜியத்தில்

காட்டிக்கொடுக்கிற அநேகரை ஏற்படுத்தினான். இதன் விளைவாக இராணுவத்தில் பெரிய இழப்புகளும் மரணங்களும் சம்பவித்தன, மற்றும் அந்தியோகஸ் எகிப்தின் மீது ஜெயமடைந்தான். சாத்தான் தனது மிகவும் தீமை செய்கிற சேவகரை பயன்படுத்தி மற்றவர்களை அழிக்கிறவனாய் இருக்கிறான்.

வச 27-28. இந்த இரண்டு இராஜாக்களின் இருதயமும் தீமை செய்ய நினைக்கும், ஒரே பந்தியிலிருந்து பொய் பேசுவார்கள். ஆனாலும் அது வாய்ப்பதில்லை குறித்த காலத்துக்கு முடிவு இன்னும் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும். 28 அவன் மகா சம்பத்தோடே தன் தேசத்துக்குத் திரும்பி, தன் இருதயத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து அதற்கானதைச் செய்து, தன் தேசத்துக்குத் திரும்பிப் போவான்

v 27 -28 “And both of these kings' hearts shall be to do mischief, and they shall speak lies at one table; but it shall not prosper: for yet the end shall be at the time appointed. 28 Then shall he return into his land with great riches; and his heart shall be against the holy covenant; and he shall do exploits, and return to his own land.”

இரு தலைவர்களும் வஞ்சிக்கிறவர்களும் மற்றும் கைகாரியம் செய்பவர்களுமாய் இருந்தனர். ஒரு முகாமில் இருவரும் சந்தித்துக்கொண்டனர். அவர்கள் ஒருவருக்கொருவர் பொய் பேசிக்கொண்டனர். இப்படிப்பட்ட பேச்சுவார்த்தையின் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இச்சூழல்களில் தேவனது திட்டம் மாத்திரம் நிறைவேறுகிறதாய் இருந்து உறுதிப்படுத்தப்படுகிறதாய் இருந்தது. கர்த்தர் இறுதியில் நிகழப்போவதை நன்கறிவார். தீர்க்கதரிசன நிறைவேறுதல் நிச்சயமாக நிறைவேறுவதாய் இருக்கிறது.

வசனம் 28ல் அந்தியோகஸ் வீட்டிற்கு திரும்புகையில் மிகுந்த கொள்ளையுடன் திரும்பினான். அவன் எகிப்தை வென்று திரும்புகையில் மிகத்திரளான ஐசுவரியத்துடன் திரும்பினான். அவன் யூதர்களிடத்தில் தனது வெறுப்பைக் காட்டத்துவங்கினான், அவர்களது ஐசுவரிய்த்தின் மீது இச்சைக்குள்ளானான்.

வச 29-31, குறித்தகாலத்திலே திரும்பவும் தென்தேசத்திற்கு வருவான். ஆனாலும் அவனுடைய பின் நடபடி முன்நடபடியைப் போல் இராது. 30 அவனுக்கு விரோதமாகத் கித்தீமின் கப்பல்கள் வரும். அதினாலே அவன் மனநோவடைந்து திரும்பிப்போய், பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாகக் குரோதங்கொண்டு அதற்கானதைச் செய்து பரிசுத்த உடன்படிக்கையைத்

தள்ளினவர்களை அநுசரிப்பான். 31 ஆனாலும் அவனிடத்திலிருந்து புறப்பட்ட சேனைகள் எழும்பி, அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அன்றாடபலியை நீக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைப்பார்கள்.

தேவனுடைய சித்தத்தின் படி குறித்த காலத்தில் அந்தியோகஸ் தென்தேசத்திற்கு திரும்ப வருவான். ஆனால் இந்த சமயத்தில் வேறொரு நபர் காட்சியில் இடம்பெறுகிறவனாய் இருப்பான். அது சிரியாவும் எகிப்துமாய் இராது. இப்பொழுது ரோமர்கள் தோன்றுகிறவர்களாய் இருப்பர்.

கி மு 168ல் அந்தியோகஸ் அலெக்ஸாண்டிரியாவிற்கு நுழையும் போது ஒரு ரோம அலுவலரால் தடுத்து நிறுத்தப்பட்டான். ரோமானது "சித்தீமின் கப்பல்கள்" என்ற சொற்றொடரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது, சித்தீம் என்பது சீப்ருவின் பழைய பெயராகும், இது வடமேற்கு பகுதியில் இருந்தது. கப்பற்படையானது எகிப்திற்குள் சென்ற பின்னர் ரோமர்கள் மாஸிடன்னின் பெர்ஸியஸ் மீது வெற்றி கண்டனர் இது தெசலோனிகாவுக்கு தெற்கே அமைந்து இருந்தது கிமு 168 ஜூன் மாதத்தில் வெற்றி கண்டனர். இதுவே அந்தியோகஸ் முதன்முறையாய் ரோமரால் பயப்படுத்தின சந்தர்ப்பமாய் விளங்குகிறது.

கிமு 168 இளவேனிற்காலத்தில் கப்பற்படையின் அலுவலராய் இருந்த ரோம அதிகாரி ரோமில் இராணுவப் பயிற்சி பெற்ற காயஸ் பாப்பிலியஸ் லீனஸ் என்பவராகும். இந்த ரோம தளபதி தன்னைச் சுற்றி மணலில் ஒரு வட்டம் வரைந்து அந்தியோகஸ் எவ்வித தீர்மானம் எடுக்குமுன்னர் இந்தக்கோட்டை தாண்டக்கூடாது எனக்கூறினான். அந்தியோகஸ் மிகவும் அதைரியப்பட்டவனாய் எகிப்தைவிட்டு வெளியேறி ரோம வல்லமைக்கு விலகிச் சென்றான்.

அவன் மிகுந்த ஐசுவரியத்துடன் சென்றான், மெம்பிஸில் இருந்து அவனுக்கு போதிய பராமரிப்பு அளிக்கப்பட்டது, இப்படிப்பட்ட உணவு பதார்த்தங்கள் தடை செய்யப்படுமேயானால் அவனது இராணுவம் எகிப்திலிருந்து பசியும் பட்டினியுமாய் திரும்ப நேரிட்டிருக்கும்.

இவன் மறுபடியும் யூதருக்கு எதிர்மறையாய் செயல்பட்டான். இவன் அவர்களது ஆளுகையை பிரித்துவிட விரும்பினான் இதினிமித்தம் அவர்களது ஐசுவரியத்தை பெற்றுக்கொள்ள எண்ணினான். தெற்கே உள்ள இராஜ்ஜியங்கள் ஹெலனிஸ்டிக் தேசங்களாக அவன் விரும்பினான், ஆகையால் அவர்களை அவன் கொள்ளையிட்டு வெறுமையாக்கினான். இவன் சாத்தானின் மனிதனாய் செயல்பட்டு படுகொலை புரிந்தான்.

யூதர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இஸ்ரேல் வழியாக சிரியா திரும்பும் போது மிகவும் அதைரியப்பட்ட நபராக, அன்றாட பலியை நிறுத்தி, தேவாலயத்தை பன்றியின் இரத்தத்தால் தீட்டுப்படுத்தினான். அன்றாட பலியை நிறுத்திவிட கிமு 167ம் வருடம் கிஸ்லே மாதம் 25ம் தேதியன்று கட்டளை பிறப்பித்தான், கிரேக்கர்கள் தேவாலயத்தில் ஜீயஸ் ஒலிம்பஸின் சிலையை அந்தியோகஸ் 4 ன் சிலைக்கு ஒப்பாக நிறுத்தினார்கள்.

மத்தேயு 24:15ல் அந்திக்கிறிஸ்துவைக் குறித்து கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து விவரிக்கையில், உபத்திரவ காலத்தை சம்பந்தப்படுத்தி அந்தியோகஸ் செய்ததைப் போன்று அந்திக்கிறிஸ்துவும் செய்வதாய் குறிப்பிடுகிறார். அவன் சாத்தானின் "மறு அவதாரமாய்" விளங்கினான், அந்திக்கிறிஸ்து மிகவும் மோசமானவனாய் விளங்குவான்.

வச 32-35 உடன்படிக்கைக்குத் துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப்பேச்சுகளினாலும் கள்ள மார்க்கத்தாராக்குவான். தங்கள் தேவனை அறிந்திருக்கிற ஜனங்கள் திடங்கொண்டு அதற்கேற்றபடி செய்வார்கள். 33 ஜனங்களில் அறிவாளிகள் அநேகருக்கு அறிவை உணர்த்துவார்கள். அநேக நாள்மட்டும் பட்டயத்தினாலும் அக்கினியினாலும் சிறையிருப்பினாலும் கொள்ளையினாலும் விழுவார்கள். 34 இப்படி அவர்கள் விழுகையில் கொஞ்சம் ஒத்தாசையால் சகாயமடைவார்கள்.அப்பொழுது அநேகர் இச்சகவார்த்தைகளோடே அவர்களை ஒட்டிக் கொள்வார்கள். 35 அறிவாளிகளைப் புடமிடுகிறதற்கும், சுத்திகரிக்கிறதற்கும், வெண்மையாக்குகிறதற்கும் அவர்களில் சிலர் விழுவார்கள். முடிவுகாலபரியந்தம் இப்படியிருக்கும் குறித்த காலம் வர இன்னும் நாள் செல்லும்.

யூதர்களுக்கு விரோதமான உபத்திரவம் மிகவும் கடுமையானதாய் இருந்தது, கிரேக்க சாம்ராஜ்ஜியத்திற்கு எதிராக விசுவாசக்குழுவினர் கலகம் செய்து குளறுபடிகளை நடப்பித்தனர். இதை மக்கபீஸ் என்ற குடும்பக்குழுவினர் செய்தனர். இது மாடன் என்கிற கிராமத்தில் எருசலேமிற்கு வடக்கே 17மைல் தொலைவில் அமைந்திருந்த இக்கிராமத்தில் துவங்கியது. இந்த யுத்தம் அக்கிராமத்தில் உள்ள சிரிய நபர்களை தூக்கிலிட்டு கொலை செய்வதன் மூலம்துவங்கியது, இதற்கு மாறுத்தரமாய் பெரிய அளவில் படுகொலைகள் நிகழ்ந்தன, ஆயிரக்கணக்கான யூதர்கள் பற்பல இடங்களில் கொடூரமாய் படு கொலை செய்யப்பட்டனர்.

கிமு 166ல் மத்தத்தியாஸ் மக்கபேயஸ் கடுமையாய் எதிர்த்தபடியினால் வடதேச இராஜா அவனைக் கொன்றுபோட்டான். இந்த போராட்டம் கிமு 164 வரை நீடித்தது, யூதாஸ் மக்கபேயஸ் ஆயுதம் தாங்கிய இராணுவத்துடன் யூதர்களின் விடுதலைக்காக வட தேசத்து இராஜாவுடன் யுத்தம் செய்து வெற்றிகண்டான்.

இந்த யுத்தத்தில் அநேகர் படுகொலை செய்யப்பட்டு இறந்தனர், முடிவாக தேவாலயம் மீட்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு அன்றாடபலியான கிஸ்லே மாதம் 25ம் தேதியில் (14 டிசம்பர் 164 கிமு) திரும்ப செலுத்தப்பட்டது. இந்த தேவாலய சுத்திகரிப்பு இன்றைய அளவில் ஹனுக்கா விழாவாய் கொண்டாடப்படுகிறது. யூதர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டது நீண்ட காலமாய் காணப்பட்டது, தானியேல் கூறும்போது கடைசிக் காலம் வரை உபத்திரம் நீடிக்கும் என்று கூறுகிறார். ஆண்டி - செமிட்டிஸம் இயேசுக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை நீடிக்கும் இரண்டாம் வருகையின் போது கிறிஸ்து இதற்கு முடிவு உண்டாக்குவார்.

கைக்கொள்ளுதல்:

அடிக்கடி வேதாகமத்தில் இறுதியாக நிறைவேறும் தீர்க்கதரிசனங்கள் மூல முன்மாதிரியாக நிறைவேறியுள்ளது. அந்தியோகஸ் 4 தேவாலயத்தை பரிசுத்த குலைச்சலாக்கி தன்னைப்போன்ற ஒரு சிலையை தேவலாயத்தில் நிறுத்தி அதைப் பணிந்து கொள்ளச்செய்தது, கடைசிக்காலத்தில் அந்திக்கிறிஸ்துவின் செயல்பாடுகளுக்கு இணையாக இருப்பது குறிப்பிடத்தக்கது. வெளிப்படுத்தல் 13.

மற்றொரு உதாரணம் பெந்தெகொஸ்தே பண்டிகையின் போது யூத விசுவாசிகள் 120 பேர் மீது ஊற்றப்பட்ட பரிசுத்த ஆவியானவர், இது ஆயிரவருட ஆளுகையின் ஆரம்பத்தில் உலலாவில் மாம்சமான யாவர் மீதும் ஊற்றப்படப்போகும் மூல முன்மாதிரியாக இருக்கிறது.

இங்கு காணப்படும் முறண்பாடு என்னவெனில், பெந்தெகொஸ்தே நாளில் ஒரு தனிப்பட்ட குழுவின் மீது வந்து இறங்கியதாகும், ஆயிரவருட அரசாட்சியின் ஆரம்பத்தில் பூமியின் மேல் உள்ள அனைத்து ஜனத்தொகையின் மீது ஆவியானவர் ஊற்றப்படுவார். (செம்மறி ஆடுகள், வெள்ளாடு இவைகள் வேறுபிரிக்கப்பட்ட பின்னர் இது நிகழும்) இது விசுவாசிகளுக்கு மட்டும்.

கர்த்தர் காலா காலங்களில் அவிசுவாசிகளை தமது திட்டத்தில் பயன்படுத்தி வருகிறார். அவர் ஒவ்வொருவரும் என்ன செய்வார்கள் என்பதைக்குறித்த அறிவுடையவராய் இருக்கிறார், அவர்கள் தனிப்பட்ட

நிலையிலும், குழுவாகவம் எதிர்கால சரித்திரத்தில் எவ்வாறு கிரியை செய்வர் என்பதையும் அறிந்துள்ளார்.

அரசாங்கத்தின் போலி புகழ்ச்சியை எதிர்த்து நிற்க ஒரு தனிபருக்கு வேத வசனங்களைக்குறித்த தெளிவான அறிவு இருத்தல் அவசியம்.

அரசியல் ஒப்பந்தம் பேசுதல் அடிக்கடி ஒத்துப்போகச் செய்கிறதாய் இருக்கும், மற்றும் பொய் சொல்லுதல் ஒருவருக்கொருவர் சகஜமாய்க்காணப்படும். விசுவாசிகள் பகுத்தறிவு உள்ளவர்களாய் அவைகளை நிதானித்தல் வேண்டும், இல்லையேல் அவர்கள் தவறாய் வழிநடத்தப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, தீமை செய்கிற மனிதரால் அழிக்கப்பட்டு போவார்கள்.

DOCTRINE உபதேசம்:

REVIVAL எழுப்புதல்

பகுதி 48 - பாவ மனிதனின் செயல்பாடுகள் தானியேல் 11:36-39.

36 இராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்தத் தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதிதேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான். கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும். நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும். 37 அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும் எந்த தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி, 38 அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம்பண்ணி, தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைப் பொன்னினாலும் வெள்ளியினாலும் இரத்திரனங்களினாலும் உச்சிதமான வஸ்துக்களினாலும் கனம்பண்ணுவான். 39 அவன் அரணிப்பான கோட்டைகளுக்காகவும், அந்நியதேவனுக்காகவும் செய்வது என்னவென்றால், அவைகளை மதிக்கிறவர்களுக்கு மகா கனமுண்டாக்கி, அவர்கள் அநேகரை ஆளும்படிச் செய்து, அவர்களுக்குத் தேசத்தைக் கிரயத்துக்காகப் பங்கிடுவான்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

இந்த அதிகாரத்தில் முதல் 35 வசனங்களில் உள்ள் தீர்க்கதரிசன விளக்கங்கள் சுமார் 130 தீர்க்கத்ரிசன கருத்துக்கள் அடங்கியுள்ளன. அவை அனைத்தும் சரித்திரத்தில் நிறைவேறி உள்ளன, எப்படியிருப்பினும் வசனம் 36லிருந்து ஒருவரும் தீர்க்கதரிசனமோ மற்றும் சரித்திர நிகழ்வுகளையோ கூற இயலவில்லை. காரணம் வசனம் 35ல் "முடிவுகால பரியந்தம்" என்னும் கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது இது முழுவ்துமான நிறுத்தத்தை இத்தொடரில் ஏற்படுத்தியுள்ளது.

கடந்தகால பெரிய நபர்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கிறவர்களாய் இருக்கின்றனர், ரோமன் கத்தோலிக்க சபை சம்பந்தப்பட்ட நிலையில் கால்வின் மற்றும் லூத்தர், ஜெரோம் போன்றோர் தங்களது சத்துருக்களாகிய அந்திக்கிறிஸ்துவை இனங்கண்டு கொண்டுள்ளனர்.

ஜெரோம் தனது தானியேலின் விளக்கவுரையில் கூறுகையில் இது அந்திக்கிறிஸ்துவைக் குறித்த கருத்து என்பதைமட்டும் விசுவாசியாமல், இந்த நாளில் உள்ள யூதர்களைக் குறித்ததும் எனவும் தீர்மானித்துள்ளார். இதற்கு முன்னதாய் இவர் அந்தியோகஸைச் சுட்டிக்காட்டி இவன் பின்தோன்றும் அந்திக்கிறிஸ்துவுக்கு முன் நிழலாய் இருக்கிறான் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வச 36 இராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்தத் தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதிதேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான். கோபம் தீருமட்டும் அவனுக்குக் கைகூடிவரும். நிர்ணயிக்கப்பட்டது நடந்தேறும்.

இந்த இராஜா தனக்கு இஷ்டமானபடி செய்கிறவனாயும், தன்னை தேவனைப் போன்று உயர்த்துகிறவனாயும் இருக்கிறான். இக்கருத்தானது வெளிப்படுத்தல் 13:14-15ல் இணைக்கருத்தாக கூறப்பட்டுள்ளது. *"மிருகத்தின் முன்பாக அந்த அற்புதங்களைச் செய்யும்படி தனக்குக் கொடுக்கப்பட்ட சத்துவத்தினாலே பூமியின் குடிகளை மோசம்போக்கி, பட்டயத்தினாலே காயப்பட்டு ப் பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொருபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் செல்லிற்று. 15மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொருபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும் மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக்கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது."*

37-39 அவன் தன் பிதாக்களின் தேவர்களை மதியாமலும், ஸ்திரீகளின் சிநேகத்தையும் எந்த தேவனையும் மதியாமலும், எல்லாவற்றிற்கும் தன்னைப் பெரியவனாக்கி, 38 அரண்களின் தேவனைத் தன் ஸ்தானத்திலே கனம்பண்ணி, தன் பிதாக்கள் அறியாத ஒரு தேவனைப் பொன்னினாலும் வெள்ளியினாலும் இரத்திரனங்களினாலும் உச்சிதமான வஸ்துக்களினாலும் கனம்பண்ணுவான். 39 அவன் அரணிப்பான கோட்டைகளுக்காகவும், அந்நியதேவனுக்காகவும் செய்வது என்னவென்றால், அவைகளை மதிக்கிறவர்களுக்கு மகா கனமுண்டாக்கி, அவர்கள் அநேகரை ஆளும்படிச் செய்து, அவர்களுக்குத் தேசத்தைக் கிரயத்துக்காகப் பங்கிடுவான்.

இங்கு தேவன் என்பதற்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை Elohim என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, இந்த வார்த்தையானது போலி மற்றும் உண்மையான கடவுள் என்கிற வார்த்தைக்குபதிலாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தை யெஹோவா என்றிருந்திருக்குமேயானால் இந்த நபர் யூதன் என்று இனம் கண்டு கொண்டிருக்கக் கூடும். "பிதாக்களின் தேவர்கள்' என்று சட்டரீதியாய் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

ஸ்திரிகளின் சிநேகம் என்பது கிமு 5ம் நூற்றாண்டில் யூதர்களின் சூழ்நிலை பொருத்தத்தின்படி புரிந்துகொள்ளப்படுகிறது, ஸ்திரீகளின் ஸ்நேகம் மேசியாவை கொண்டுவரச் செய்கிறதாய் இருக்கிறது. எபிரெய பெயர்ச் சொல்லானது சிநேகம் என்னும் வார்த்தை தன்மை வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது அது படர்க்கை வார்த்தையாக அல்ல, அது இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருத்தல் வேண்டும் "ஸ்திரீகளால் சிநேகிக்கப்பட்ட அல்லது மேசியா என மொழிபெயர்க்கப்பட்டு இருக்க வேண்டும்.

சூழ்நிலை பொருத்தத்தின் படி இதன் அர்த்தம் அந்திக்கிறிஸ்து தன்னை கடவுள் என்று கருதி, தனது பாரம்பரிய கடவுள்கள், இஸ்ரவேலின் மேசியா, கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து அல்லது மற்றெந்த கடவுள்களையும் வெறுத்து தான் மட்டுமே எல்லா வல்லமைகளுக்கும் மேலானவன் எனக் கருதினான். அந்தியோகஸ் 4 மிகவும் பெருமைக்குள்ளாகி தன்னை தேவர்களுக்கு மேலாக வல்லமை பொருந்தினவனாகக் காட்டினான் -- தன்னை தேவர்களில் ஒருவராக விசுவாசித்தான். அலெக்ஸாண்டரைப் போல் மற்றும் காயஸைப் போன்று எண்ணினான்,

வசனம் 38 மற்றும் 39ல் "அரண்களின் தேவன்" என்று விநோதமான ஒரு தேவனைக் காண்கிறோம். சாத்தானுடன் நேரடித்தொடர்புள்ளவன் அந்திக்கிறிஸ்து என்பது தெளிவாய் இருக்கிறது. 2 தெசலோனிக்கேயர் 2ம் அதிகாரத்தில் சாத்தானின் வல்லமையை இவன் பயன்படுத்துவதைக் காண்கிறோம். இவனுக்குள் சாத்தானின் வல்லமை தாபரித்து செயல்படுவதைக் காண்கிறோம், இவ்வாறு அந்திக்கிறிஸ்துவை வணங்குவதன் மூலம், உபத்திரவகாலத்தில் சாத்தானை வணங்க இருக்கிறார்கள்.

அந்தியோகஸ் சரித்திர ரீதியாக தேசத்தை கிரயத்துக்கு பங்கிட்டது குறித்து எவ்வித ஆதாரமும் இல்லை, இது எதிர்காலத்தில் அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் நிகழவிருக்கும் செயலாய் இருக்கிறது.

கைக்கொள்ளுதல்:

வேத வசனங்களை ஏற்றுக்கொள்பவர்கள் தெய்வீகத் தூண்டுதலின்படி இதை தீர்க்கதரிசனமாய்க் கண்டு இது இன்னும் நிறைவேற வேண்டியவைகள் என நிதானிக்கின்றனர்.

இது சாத்தான் வாசம் செய்யும் எதிர்கால அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கிறது என முடிவுசெய்யப்படுகிறது. அவ்ன் ஒரு நபராக இருக்கிறான் இவனுக்கு சாத்தானோடுள்ள தொடர்பு மட்டுமின்றி பிறதேவர்களை மதியாதவனுமாய் இருக்கிறான். இது சுய முறண்பாட்டுடன், மனநிலை பாதிக்கப்பட்டதை காட்டுகிறதாய் இருக்கிறது, அந்த இறுதி நாளில் ஒரே தேவனை வணங்குகிறவர்களாகிய யூதர்கள் மற்றும் அரேபியரை வெறுப்பான், இரு குழுவினரும் இவனுக்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவிப்பர்.

இவன் பொருளாதாரவாதியாய் தோன்றுவான் (பணப்பைத்தியம்) அரசியல்வாதிகளையும் மற்றும் மதவாதிகளையும் உலகை ஆதிக்கம் செலுத்த ஏறு படிகளாக பயன்படுத்திக்கொள்வான் மற்றும் எல்லாமதங்களை அழித்து ஒன்றுமில்லாது பொகச்செய்வான். அதிகாரத்தை மட்டும் நிலைநாட்டுவான் அவன் தன்னைத்தானே வஞ்சித்து தேவனை மேற்கொண்டதாய்ச் சொல்லுவான், இவன் ஹிடல்ர் போன்று சர்வ அதிகாரியாக தோன்றுவான் இதுவே இவன் எல்லாவற்றையும் இழப்பதற்கும் மரணத்திற்கும் வழி நடத்துவதாய் இருக்கும்.

DOCTRINE உபதேசம்

PROPHECY: FULFILLED PROPHECY PROOF OF INSPIRATION
தீர்க்கதரிசனம்: நிறைவேறிய தீர்க்கதரிசனமும் ஏவப்பட்டு எழுதப்பட்டதற்கான ஆதாரமும்.

பகுதி 49 - சுயசித்தமுள்ள இராஜாவின் தற்காலிக வெற்றி. தானியேல் 11:40-45.

40 முடிவு காலத்திலோவென்றால், தென்றிசை இராஜா அவனோடே முட்டுக்கு நிற்பான். வடதிசை இராஜாவும் இரதங்களோடும் குதிரைவீரர்களோடும் அநேகம் கப்பல்களோடும் சூறைக்காற்றுபோல் அவனுக்கு விரோதமாய் வருவான், அவன் தேசங்களுக்குள் பிரவேசித்து அவைகளைப் பிரவாகித்துக் கடந்து போவான். 41 அவன் சிங்காரமான தேசத்திலும் வருவான். அப்பொழுது அநேக தேசங்கள் கவிழ்க்கப்படும். ஆனாலும் ஏதோமும், மோவாபும், அம்மோன் புத்திரரில் பிரதானமானவர்களும் அவன் கைக்குத் தப்பிப் போவார்கள். 42 அவன் தேசங்களின்மேல் தன் கையை நீட்டுவான். எகிப்து தேசம் தப்புவதில்லை. 43 எகிப்தினுடைய பொன்னும் வெள்ளியுமான ஐசுவரியங்களையும் உச்சிதமான எல்லா வஸ்துக்களையும் ஆண்டுகொள்ளுவான். லீபியரும், எத்தியோப்பியரும் அவனுக்குப் பின்செல்லுவார்கள். 44 ஆனாலும் கிழக்கிலும் வடக்கிலும் இருந்துவரும் செய்திகள் அவனைக் கலங்கப்பண்ணும். அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் சங்காரம்பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுப்போய், 45 சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப்போடுவான். ஆனாலும் அவனுக்கு ஒத்தாசை பண்ணுவாரில்லாமல் அவன் முடிவடைவான்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

வசனம் 40ல் "முடிவு காலத்தில்" என்கிற சொற்றொடர் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது இது மறுபடியும் 11 ம் அதிகாரத்தின் ஆரம்பமாக குறிப்பிடப்பட்டுள்ளது, இது மனுக்குலத்தில் இறுதி கட்டத்தில் நிகழவிருக்கும் மிகக்கொடிய இராணுவ கொந்தளிப்பைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

மறுபடியும் வடக்கு தெற்கு இராஜ்ஜியங்களின் இராஜாக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. கிமு இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில் சிரியா வடக்கு இராஜ்ஜியமாகவும் (செலூக்கஸ்) மற்றும் எகிப்து (டாலமி வம்சத்தினர்) தெற்கு இராஜ்ஜியமாகவும் செயல்பட்டது.

அநேகர் எசேக்கியேல் 38, 39ல் கொடுக்கப்பட்டுள்ள வடக்கு இராஜ்ஜியம் இஸ்ரவேல் மீது படையெடுத்தது குறித்து ஒப்பிடுகிறவர்களாய் இருக்கின்றனர். எப்படிருப்பினும் இந்த வேதபகுதியில் தெற்கு இராஜ்ஜியம் உட்படவில்லை என்பது தெளிவாய் இருக்கிறது.

எசேக்கியேல் வேதபகுதிக்கு அநேக சமயங்கள் சாத்தியமாய் இருந்த போதிலும், உபத்திரவ காலத்தில் இது சம்பவிக்கும் என்பது தீர்மானிக்கப்படவில்லை. எசேக்கியேல் 38-39 மகா உபத்திரவகாலத்திற்கு முன் சம்பவிக்க வேண்டியதாய் இருக்கிறது. இது சமாதான உடன்படிக்கை செய்து தேவாலயம் கட்டப்படும்போது நிறைவுக்கு வரும். தற்போதுள்ள வேதபகுதி இது சம்பவிப்பது மகா உபத்திரவகாலத்தில் என தெளிவுபடுத்துகிறது.

இன்னொரு கேள்வி வசனம் 40ல் "அவன்" எனக்குறிப்பிடுவது யாரை? வசனம் 36ன்படி இது அந்திக்கிறிஸ்துவைக் குறிக்கிறதாய் இருக்கிறது. இங்கு அந்திக்கிறிஸ்து வடக்கு தெற்கு இராஜ்ஜியங்களைத் தவிர்த்து அதன் மீது ஆதிக்கம் செலுத்தவதைக் காண்கிறோம்.

அவன் எகிப்திற்குள்ளும் மற்றும் வடக்கு ஆப்ரிக்காவிற்கு நுழைந்து மற்றும் வாக்குத்தத்த தேசத்திற்குள்ளும் நுழைகிறவனாய் இருக்கிறான் ஆனால் தெற்கு யோர்தானை எடுத்துக்கொள்ளவில்லை. இப்பகுதிகள் ஏதோம், மோவாப், அம்மோன் தேசங்கள் என விசுவாசிக்கப்படுகிறது, யூதர்கள் அந்திக்கிறிஸ்துவின் சிலையானது உபத்திரவகாலத்தின் மத்திய பகுதியில் தேவாலயத்தில் நிறுவப்படும்போது ஓடிப்போகும் தேசங்கள் என விசுவாசிக்கப்படுகிறது.

இதை மத்தேயு 24:15,16லும் காண்கிறோம். இந்த கொடிய நாளில் இயேசு விசுவாசிகளுக்கு கட்டளையிடுவது என்னவெனில், *"மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே, விசுவாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, 16 யூதேயாவில் இருக்கிறவன் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள். "*

இதோடு கூட மீந்திருக்கிறவர்கள் தெற்கு யோர்தான் மலைகளுக்கு வலுசர்ப்பத்திற்கு அல்லது சாத்தானுக்கு விலகி ஓடிப்போகக்கடவர்கள். வெளிப்படுத்தல் 12.

இது குறித்து இன்னும் அறிந்துகொள்ள கிபி 70ல் எருசலேம் முற்றுகையிடப்பட்டு அழிக்கப்பட்டபோது, முற்றுகையிடப்பட்ட சில காலத்தில் விசுவாசிக்கும் யூதர்கள் யோர்தானுக்கு அக்கரையிலுள்ள மலைகளுக்கு நேராக சென்றுவிட்டனர். கிழக்கு கரை யோர்தானானது பாதுகாக்கப்படும் இடமாய் இருந்தது. எருசலேமிற்கு தெற்கு பகுதியில் வாழ்ந்தவர்களுக்கு இது பாதுகாப்பான இடமாய் அமைந்தது, இது போன்றே கடைசி நாட்களிலும் சம்பவிக்கும்.

ஜோர்டனிய அரசாங்கம் சமீப காலத்தில் ஒரு முக்கிய சாலையை அமைத்து நிறைவு செய்துள்ளது இந்த சாலை எருசலேமிலிருந்து இம்மலைகளுக்கு செல்லுவதாய் அமைந்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளை வென்று முடிக்கும் தருணத்தில் அந்திக்கிறிஸ்துவுக்கு ஐசுவரியம் வெகுவாய் பெருகுவதாய் இருக்கும், விசுவாசிகளின் எதிர்ப்பானது இவன் தன்னை வணங்கும்படி செய்யும் போது அதிகமாய் காணப்படும்,

வச 44-45. ஆனாலும் கிழக்கிலும் வடக்கிலும் இருந்துவரும் செய்திகள் அவனைக் கலங்கப்பண்ணும். அப்பொழுது அவன் அநேகரை அழிக்கவும் சங்காரம்பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுப்போய், 45 சமுத்திரங்களுக்கு இடையிலுள்ள சிங்காரமான பரிசுத்த பர்வதத்தண்டையிலே தன் அரமனையாகிய கூடாரங்களைப்போடுவான். ஆனாலும் அவனுக்கு ஒத்தாசை பண்ணுவாரில்லாமல் அவன் முடிவடைவான்.

இங்கு நாம் அர்மெகதோன் யுத்த முகாமின் இராணுவ முறண்பாட்டின் உச்சக்கட்டத்தை பார்க்கிறோம், இது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து தமது இரண்டாம் வருகையில் திரும்ப வராதபடி செய்கிறதாய் இருக்கும்.

அந்திக்கிறிஸ்து மத்திய கிழக்கு நாடுகளுடன் யுத்தத்தில் மும்முரமாய் இருக்கும்போது இவன் சூரிய உதய திசையின் இராஜாக்களும் மற்றும் வட இராஜ்ஜியமும் யுத்தத்துக்கு ஆயத்தமாய் இருப்பதை கேள்விபடுவான். அவன் அவர்களுடன் மூர்க்க வெறியுடன் செயல்படுவான். படுகொலை செய்வது இவன் வழியாய் இருக்கும். அவன் மிகவும் பலசாலியாய் இருந்து, அவனது பெலத்தை தனது சத்துருக்கள் மீது வெறித்தனமாய் செயல்படுத்துவான், மீந்திருக்கும் யூதர்கள் மற்றும்

அரேபியரை அழிக்க இயலாது காணப்படுவான் இருப்பினும் இவர்களோடு எப்பொழுதும் எதிர்ப்பவனாய் இருப்பான்.

அந்திக்கிறிஸ்துவின் பொதுவான தலைமையகம் மத்தியத்தரைகடலுக்கும் சவக்கடலுக்கும் இடையே அமைந்து இருக்கும். அது எருசலேமிற்கு வெளியே இருக்கும். எருசலேமானது தாக்குதலுக்கு உட்பட்டு ஒருபகுதி எடுத்துக்கொள்ளப்படும் இருப்பினும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து குறுக்கீடு செய்து தமது ஜனங்களை விடுவிக்கிறவராய் இருப்பார். சகரியா 12-14.

வெளிப்படுத்தல் 19ல் அந்திக்கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் எறியப்படுவதைக் காண்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து புறஜாதிய இராணுவத்தை வென்று நிறைவு செய்வார். புறஜாதியாரின் காலம் நிறைவுக்கு கடந்து வந்து, யூதர்களின் இராஜா தமது இராஜ்ஜியத்தை பூமி எங்கும் ஸ்தாபிப்பார். பாவ மனுஷனாகிய சாத்தானின் மனிதன் அடைய முடியாததை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவரது இரண்டாம் வருகையில் ஒரு நொடியில் அடைந்து கொள்வார்.

கைக்கொள்ளுதல்:

மனிதன் உண்டாக்கும் தீர்வுகள் தீர்வுகளாய் இருப்பதில்லை. மனிதன் உலகமுழுவதையும் அதாயப்படுத்தி தனது ஆத்துமாவை இழந்து போகிறவனாய் இருக்கிறான்.

ஒரு நபரோ அல்லது குழுவோ மிகவும் வல்லமையுடையவர்களாய்த் தோன்றலாம் ஆனால் தேவனே உயர்த்துகிறவரும் தாழ்த்துகிறவருமாயிருக்கிறார். அவர் ஒருவரே இராஜ்ஜியங்கள் எழவும் வீழ்ந்து போகவும் செய்கிறவராய் இருக்கிறார்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் புறஜாதியரின் காலம் நிறைவுக்கு வரும்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யூதர்களை பூமியின் நான்கு மூலைகளிலுமிருந்து அழைத்து இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பார், இது ஆபிரகாமின் குமாரருக்கு தேவனால் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம்.

DOCTRINES உபதேசங்கள்

TRIBULATION: SIGNS உபத்திரவகாலம்: அடையாளங்கள்

TRIBULATION IN MATTHEW 24 மத்தேயு 24ல் உபத்திரவ காலம்.

NOTES

தானியேல் அதிகாரம் 12.

12 ம் அதிகாரத்தின் பிரிவுகள்

தானியேல் 12ம் அதிகாரத்தை ஐந்து பகுதிகளாய் பிரிக்கலாம்.

மகா உபத்திரவ காலம். வசனம் 1

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் வசனங்கள் 2-3.

முடிவு காலம் வரைக்கும் தீர்க்கதரிசனம் முத்திரிக்கப்படுதல் வசனங்கள் 4-9

பாழாக்கும் அருவருப்பு வசனங்கள் 10-11.

முடிவுரை வசனங்கள் 12-13

முன்னுரை:

இங்கு மறுபடியும் எதிர்பாரா வண்ணம் அதிகாரமானது துண்டிக்கப்பட்டுள்ளது, எல்லா விளக்கமளிப்பவர்களும் 12ம் அதிகாரத்தின் முதல் மூன்றுவசனங்களும் எதிர்கால நிகழ்வுகளைக் குறித்துள்ளது எனத்தெளிவாய் காணப்படுகிறது.
தானியேல் 12:1 *"உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத*

ஆபத்துக்காலம் வரும். அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். 2 பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். 3 ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."

இங்கு நாம் இஸ்ரவேல் மக்களது இறுதியான விடுதலையைக் காண்கிறோம். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து நீதிமான்களுக்கு பிர்திபலன் அளிக்கப்படுகிறது. தாரளவாதிகளுக்கு இங்கு ஓர் பிரச்சனையைச் சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர், இது எதிர்கால நிகழ்வு என தெளிவாக இருந்த போதும். இந்த அதிகாரம் முழுவதும் அந்தியோகஸ் 4ன் காலத்திற்குட்பட்டவை என்கின்றனர்,

இந்த புஸ்தகத்தை தாராலளவாதிகள்/அவிசுவாசிகள் முழுவதும் சரித்திர புத்தகமாய் காண்கிறதில் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பகுதி 50 - மகா உபத்திரகாலம் 12:1.

1 "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும். அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். "

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

இந்த அதிகாரத்தின் ஆரம்ப சொற்றொடர் "அக்காலத்திலே" இது முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சி என்பதை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. இது முடிவுகாலத்தைக் குறித்து சொல்லுகிறது. தானியேல் 11:40 இது காலக்கிரமப்படி பின்தொடருகிறதாய் இருக்கிறது.

இங்கு மறு கண்ணோட்டம் செய்யப்படுவது என்னவெனில், மகா உபத்திரவ காலம் ஆகும். இதுவே பழைய மற்றும் புதிய ஏற்பாட்டின் தலைப்பாக விளங்குகிறது. உபாகமம் 4:30ல் முன்னுரைக்கப்பட்டபடி இஸ்ரவேல் கடைசி நாட்களில் மிகுந்த உபத்திரவத்துக்குள்ளாவார்கள்,

எரேமியா இதை யாக்கோபின் இக்கட்டு காலம் என அழைக்கிறான். எரேமியா 30:7.

மட்டுமின்றி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உபத்திரவ காலத்தைக் குறித்து போதிக்கிறவராய் இருக்கிறார். (மத்தேயு 24) இதை தானியேல் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பாழாக்கும் அருவருப்பு என்பதை சம்பந்தப்படுத்தி காட்டுகிறார். மட்டுமின்றி அந்த நாட்களில் எருசலேமிலும் இஸ்ரவேலிலும் வாழும் விசுவாசிகள் யோர்தான் மலைகளுக்கும் சௌதி அரேபியாவுக்கு ஓடிவிடும்படி பணிக்கிறார், இந்த நாட்கள் சாத்தானால் அளிக்கப்படும் கொடிய கலகங்கள் உபத்திரவங்கள் நிறைந்ததாய் இருக்கும், இந்த நாட்கள் குறைக்கப்படாது போகுமானால், பூமியில் ஒரு உயிரும் மீந்திராது என்கிறார்.

இந்த காலம் வெளிப்படுத்தல் 6 முதல் 19 வரை விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது, இது வேதாகமத்தில் நீண்ட வேதபகுதியாய் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சமயத்தைக்குறித்த வேதாகம குறிப்புகள் இது பிரத்தியேகமான காலம் எனக்கூறுகிறதாய் இருக்கிறது. இந்த வசனம் அந்தியோகஸ் 4 ற்கு பொருந்துபடியாக ஒருவரும் கூற இயல வில்லை. இந்த வசனம் சரித்திரத்தை நிறைவு செய்வதாய் இல்லை -- இது எதிர் கால சரித்தரமாய் இருக்க வேண்டும்.

சகரியா 13:8ff இணையான வேதபகுதியாய் தோன்றுகிறது, மற்றும் இந்த இடத்தில் இஸ்ரவேல் மக்களுக்கான கொடிய சோதனைக் காலமாய் விவரிக்கப்படுவதைக் காணலாம், எருசலேமின் இக்கட்டிலிருந்து இரண்டாம் வருகையின் போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே இஸ்ரவேலை விடுவிக்கிறவராய் இருக்கிறார்

இஸ்ரவேலை பாதுகாக்கும் பொறுப்பை தலமைத்துவம் வகிக்கும் மிகாவேலுக்கு அளிக்கப்படுகிறது. தெய்வீக பாதுகாப்பு விஷேசமாக யூதருக்கு அவசியமாய் இருக்கிறது காரணம் எல்லா யூதர்களையும் ஒளித்து கட்ட சாத்தான் எத்தணிக்கிறவனாய் இருக்கிறான். . அந்திக்கிறிஸ்துவின் பகைமை எண்ணம் இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் கடுமையாய் காணப்பட்டது, அவனது கர்வம் மற்றும் அத்துமீறிய தன்னம்பிக்கை ஹிட்லரை 1942-45ல் அழித்தது போல இவனையும் அழிப்பதாய் இருக்கும்.

இந்த ஜனங்கள் அனைவரும் "புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்களாய்" குறிப்பிடப்ப்டுவது ஜீவபுத்தகத்தில் பேரெழுதப்பட்ட விசுவாசிகளைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. வெளிப்படுத்தல் 3:5, 13:8, 17:8, 20:10-15, 21:27.

கைக்கொள்ளுதல்:

சாத்தான் எல்லா யூதர்களையும் ஒளித்துக்கட்ட விரும்பினாலும் அது அவனால் இயலாது போகும், அவர்கள் தேவனால் பாதுகாக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். அவனது பகைமை எண்ணம் அவனுக்கு விரோதமாய் செயல்படுவதாய் இருக்கிறது. அந்திக்கிறிஸ்து சிதறடிக்கப்பட்டவனாய் , யூதர்களை அழித்துக்கட்ட இயலாது தவிக்கிறவனாய் காணப்படுவான். வெளிப்படுத்தல் 6-19 வரை விவரிக்கப்படும் எல்லா நியாயத்தீர்ப்புகளும் அவனது இயலாமையைக் காட்டுகிறதாய் இருக்கிறது, அவனது பகைமை எண்ணம் அவனை ஆண்டு கொள்ளுகிறதாய் இருந்து, அவனது இலக்கை அடைந்து கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நாமும் இப்பொழுது தேவனால் காக்கப்பட்டு வருகிறோம். 1 யோவான் 4:4. நமது கடமை இப்பூமியில் நிறைவேறும் வரை அவர் நம்மை காக்கிறவராய் இருக்கிறார். அவ்வளவு விரைவாக தேவனது திட்டத்தின் படி ஒருவரும் மரித்துப் போவது இல்லை. சங்கீதம் 68:20, 116:15.

DOCTRINE உபதேசம்

BOOKS IN THE BIBLE வேதாகமத்தில் உள்ள புத்தகங்கள்.

பகுதி 51 - பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதல் தானியேல் 12:2-3.

2 பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். 3 ஞானவான்கள் ஆகாய மண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்."

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

இந்த வசனங்கள் உயிர்த்தெழுதலின் உண்மையை அறிமுகப்படுத்துகின்றன. உயிர்த்தெழுதலின் உண்மையானது ஆரம்பத்தில் ஆபிரகாம் ஈசாக்கை பலிகொடுக்க முன்வந்ததிலிருந்து விளங்குகிறதாய் இருக்கிறது மற்றும் யோபு தனது மாமிசத்தில் இருந்து தேவனைக் காண்பதாய்க் கூறுகிறார். யோபு 19:25-26.

ஏசாயாவும் இந்த அடைப்படைக் கருத்தை தெரிவிக்கிறார். ஏசாயா 26:19. ஆகையால் தானியேல் ஏதோ புதுமையான காரியத்தை வெளிப்படுத்த வில்லை. அவர் உயிர்த்தெழுதலை கிறிஸ்துவாகிய மேசியாவின் இரண்டாம் வருகையுடன் சம்பந்தப்படுத்திக் காட்டுகிறவராய் இருக்கிறார்.

இந்த வேதபகுதியில் நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் சபையைக் குறித்த மறைபொருளான உபதேசம் பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்படவில்லை. உண்மை என்னவெனில் சபையைக் குறித்த குறிப்பு எதிர்கால முறையில் சுவிஷேசத்தில் அறிவிக்கப்படுகிறதாய் இருக்கிறது. "இந்தக்கல்லின் மீது என் சபையைக் கட்டுவேன்". சபை யுகத்தைக்குறித்த போதனை சுவிஷேசங்களில் யோவான் 14-17 அதிகாரங்களைத் தவிர்த்து சத்தியமாய் அறிவிக்கப்படுகிறதாய் இருக்கிறது. மற்ற சுவிஷேசங்களில் யூதர்களின் யுகம் குறித்து தானியேல் கண்டுகொண்ட பிரகாரம் சம்பந்தப்படுத்திக் காட்டுகிறதாய் இருக்கிறது. தானியேல் மனிதரின் எல்லா யுகங்களையும் காண்கிறவராய் இருக்கிறார், அவர் புறஜாதியார் யூதர்களை அடக்கியாளுவதைக் காண்கிறார், யூதர்களின் துவக்கம் முதல் முடிவு வரை காண்கிறவராய் இருக்கிறார், மேசியா ஆளுகைக்கு வந்து அராசாளும் வரைக் காண்கிறவராய் இருக்கிறார்.

கீழ்க்காணும் உபதேசத்தில் உயிர்த்தெழுதல் நான்கு கால கட்டங்களி இடம்பெறுகிறது, இதில் முதற்பலனானவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, சபை எடுத்துக்கொள்ளப்படும்போது சபையுக விசுவாசிகள், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் பழைய ஏற்பாட்டு பரிசுத்த வான்கள் இந்த வேதபகுதியில் குறிப்பிடப்படுகிற உயிர்த்தெழுதல், இறுதியாக ஆயிரவருட பரிசுத்தவான்கள் இறுதி காலத்தில் நிகழவிருக்கும் உயிர்த்தெழுதல்.

நீதிமான்களுக்கு அவர்கள் கர்த்தருக்கு செய்த கிரியைகளுக்குத் தக்கதாய் பிரதிபலன் அளிக்கப்படும். அவர்களது நித்திய பிரதிபலன் கிருபையாய் இருக்கும். மற்ற விசுவாசிகளுக்கு உதவிய விசுவாசிகள் உயர்ந்தவர்களாய் கருதப்படுவர். மத்தேயு 25:31-46.

கைக்கொள்ளுதல்:

மரணத்திற்கு ஒரு வாழ்வுண்டு அது நித்திய ஆசீர்வாதத்திற்க்கும் அல்லது சாபத்திற்கென குறிக்கப்பட்டுள்ளது.

நமது சபையுகத்தில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நடப்பித்த கிரியைகளுக்கு பிரதிபலன் அளிக்கப்படும். 1 கொரி. 3:12-15.

DOCTRINES உபதேசங்கள்:

RESURRECTION உயிர்த்தெழுதல்

DESTINY OF BELIEVERS விசுவாசிகளின் இறுதி நிலை.

UNBELIEVER அவிசுவாசிகள்

JUDGMENT: GREAT WHITE THRONE நியாயத்தீர்ப்பு: வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

JUDGMENT SEAT OF CHRIST கிறிஸ்துவின் நியாயாசனம்.

REWARDS AND CROWNS பிரதிபலன்களும் மற்றும் கிரீடங்களும்

பகுதி 52 - முடிவு காலம் வரை தீர்க்கதரிசனம் முத்திரையிடப்படுதல். தானியேல் 12:4-9.

4 தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்த புத்தகத்தை முத்திரைபோடு. அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம் என்றான். 5 அப்பொழுது தானியேலாகிய நான் ஆற்றுக்கு இக்கரையில் ஒருவனும் ஆற்றுக்கு அக்கரையில் ஒருவனுமாகிய வேறே இரண்டுபேர் நிற்கக்கண்டேன். 6 சணல்வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷனை ஒருவன் நோக்கி: இந்த ஆச்சரியானவைகளின் முடிவு வர எவ்வளவுகாலம் செல்லும் என்று

கேட்டான். 7 அப்பொழுது சணல்வஸ்திரம் தரித்தவரும் ஆற்றின் தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷன் தம்முடைய வலதுகரத்தையும் தம்முடைய இடது கரத்தையும் வானத்துக்கு நேராக ஏறெடுத்து, ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லும் என்றும், பரிசுத்த ஜனங்களின் வல்லமையைச் சிதறடித்தல் முடிவு பெறும்போதே இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்று என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர்பேரில் ஆணையிடக்கேட்டேன். 8 நான் அதைக் கேட்டும் அதின் பொருளை அறியவில்லை. ஆகையால்: என் ஆண்டவனே இவைகளின் முடிவு என்னமாயிருக்கும் என்று கேட்டேன். 9 அதற்கு அவன்: தானியேலே, போகலாம். இந்த வார்த்தைகள் முடிவு காலமட்டும் புதைபொருளாக வைக்கப்படட்டும் முத்தரிக்கப்பட்டும் இருக்கும்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

பயணம் - கடைசி உலக யுத்தம் முதல் சாதாரண மனிதனுக்கு காலங்கள் பயண யுகமாய் கருதப்பட்டு வருகிறது. இக்காலத்தில் பயணம் செய்வதற்கு பணக்காரர் மட்டுமே கட்டணம் செலுத்த இயலுவதாய் இருக்கிறது அவர்களுக்கு மட்டுமே அதற்காண சமயம்கிடைப்பதாய் இருக்கிறது. 1961ல் எஞ்சினியரிங் கலையில் பட்டம் பெற்ற டாக்டர் மோசஸ் அவர்கள் 70 நாடுகளுக்கு மேல் பயணம் மேற்கொண்டார். அவரது தந்தை சொப்பனங்களில் இப்படிப்பட்ட செலவினங்களுடன் ஆராய்சி மேற்கொள்ள வேண்டாம் என எச்சரித்தார். 1939 களில் இப்படிப்பட்ட பிரயாணம் புகழைத் தேடிதருவதாய் இருந்தது. அநேக புத்தகங்கள் எழுதப்பட்டன, ஆனால் இன்றைய அளவில் அநேக பிரயாணங்கள் இந்த அளவில் இருப்பதில்லை.

அறிவு: - கடந்த இருபது முதல் முப்பது ஆண்டுகளில் பெரிய அளவில் அறிவானது மலர்ந்தது என்பதில் சந்தேகமில்லை. விஞ்ஞான பகுதிகளில் ஒவ்வொரு பத்து ஆண்டுகாலங்களில் அறிவானது இருமடங்காக வளர்ந்து வருகிறது. 2,000 த்திலிருந்து 2014ல் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளில் அறிவானது இருமடங்காக அதிகரித்து வருகின்றன. 99% விஞ்ஞானிகள் இப்படிப்பட்ட காலத்தில் வாழ்ந்து வருகின்றனர். பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பிரபல விஞ்ஞானி அவர் அறிந்த விஞ்ஞானத்தை குறித்து பெருமையாக எண்ணலாம். இன்றைய அளவில் மக்கள் விஞ்ஞானத்தின் ஒரு சிறிய பகுதியில் மட்டும் விஷேச ஞானம் உடையவர்களாய் காணப்படுகின்றனர்.

அறிவானது பலதரப்பட்ட புத்தகங்களால் மதிப்பீடு செய்யப்படுகிறது, பிரசுரிக்கப்படும் புத்தகங்கள் அரிதானவைகளாய் இருக்கும் படி மனதில்

கொண்டு பிரசுரிக்கப்படுகிறது, தானியேலின் காலத்தில் இது மிகவும் அரிதான ஒரு காரியமாய் இருந்தது. 2000 த்தில் ரஷ்யா 90,000 புத்தகங்களை பிரசுரித்தது, அமெரிக்க ஐக்கிய தேசம்85,000 புத்தகங்களையும், மேற்கு ஜெர்மனி 45,000 புத்தகங்களையும் கிரேட் பிரிட்டன் 35,000 புத்தகங்களையும் பிரசுரித்துள்ளன. இந்த வரிசையில் இணைய தளம் மூலம் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை இரண்டுமடங்காக அதிகரித்துள்ளது. “U-Tube” போதனை துணுக்குகள் மில்லியன் கணக்கில் பிரசுரிக்கப்படுகிறது. எதிர்பாராவண்ணம் "அறிவு" பெருகிற இக்காலக்கட்டத்தில் மேற்கத்திய நாடுகளில் வேதவசனங்கள் குறித்து பிரசுரம் நலிவடைந்து வருகிறது, மக்களில் அநேகர் தவறான போதனைகளால் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர், சத்தியமானது புதைக்கப்பட்டு வருகிறது.

பயணம் மற்றும் அறிவு குறித்த அடுத்த அம்சம், மக்கள் வெறித்தனமாய் பிரயாணம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் வெறித்தனமாய் அறிவை தேடுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் வெறித்தனமாய் மனமகிழ்ச்சியை தேடுகிறவர்களாயும் இருக்கின்றனர், அவர்கள் சிற்றின்பப்பிரியர்களாய் சிற்றின்பங்களை நாடி அலைகிறவர்களாய் இருக்கின்றனர். தானியேல் கூறும்போது இது போன்ற செயல்கள் முடிவு காலம் வரை இடம்பெறும் என்கிறார்.
.
தானியேல் தேவதூதனிடம் ஆற்றங்கரையில் இந்த அற்புதங்கள் நடைபெற எவ்வளவு காலம் செல்லும் என வினவினார். அதற்கான பதில் விக்கிரகமானது தேவாலயத்தில் நிறுவப்பட்டு இறுதியான சிதறடிப்பு நிகழ்வதிலிருந்து மூன்றரை வருட காலம் செல்லும் என்றான்.

தானியேல் மறுபடியும் ஒரு கேள்வியைக் கேட்கிறவராய் காணப்படுகிறார், முடிவுகாலம் வரைக்கும் புத்தகமானது முத்தரிக்கப்பட்டு அதில் உள்ளவைகளை முழுதுமாய் ஒருவராலும் புரிந்துகொள்ளாவண்ணம் இருந்தது குறித்து வினவினார். இது சாத்தான் காரியங்களை அறிந்து கொள்ளச் செய்யாமல் இருக்க வகை செய்யப்பட்டது, காலம் நிறைவேறும் போது பரிசுத்த ஆவியானவர் "அறிந்து கொள்ள வேண்டியர்கள்" முழுமையாய் அறிந்துகொள்ள வழிநடத்துகிறவராய் இருக்கிறார்.

கைக்கொள்ளுதல்

தீர்க்கதரிசனமானது எப்பொழுதும் நெருக்கத்தின் கீழ் உள்ள மக்களை உற்சாகப்படுத்துகிறதாய் இருக்கிறது. அது மிகவும்

உற்சாகப்படுத்துகிறதாய் இருந்து, தேவனது திட்டமானது நிறைவேறுவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நாம் எதற்கும் பயப்பட அவசியமில்லை -- பாழாய் போகிற உலகிற்கு அவர் திரும்ப வருகிறவராய் இருக்கிறார், அது பழுதுபடாத ஒன்றாய் இருக்கும்.

தேவனது வார்த்தையானது எழுத்தின்படி எடுத்துக்கொள்ளப்பட்டு முழுதுமாய் சார்ந்து இருக்கக்கூடியதாய் இருக்கிறது. மூடிமறைக்கும் கட்ட நிகழ்வுகள் எதுவும் இருக்காது, அந்திக்கிறிஸ்துவால் படுகொலை நிகழ்வுகள் நிகழும். அப்படியிருப்பினும் "விசுவாசத்தால் நீதிமான் பிழைக்கிறவனாய் இருப்பான்" மனுக்குலத்தின் இருண்ட காலக்கட்டத்தில் கர்த்தருடன் நடப்பவர்களுக்கு மகிமை உண்டாகிறதாய் இருக்கும்.

கடைசிக்கால சம்பவங்கள் குறித்து ஒரு நபர் புரிந்து கொள்ள முயலும்போது தானியேல் புத்தகம் கவனத்தை ஈர்க்கக்கூடிய புத்தகமாய் விளங்குகிறது, சகரியா, யோவேல், ஒலிவ மலை சம்பாஷனை, தெசலோக்கேயர், வெளிப்படுதல் போன்ற புத்தகங்களைப்போன்று இப்புத்தகமும் விளங்குகிறது. தானியேல் தீர்க்கதரிசன அமைப்பைப்பெற்று மற்ற எல்லாவற்றையும் புரிந்து கொள்ள வகைசெய்கிறதாய் இருக்கிறது.

விக்கிரகமானது தேவாலயத்தில் நிறுத்தப்பட்டு யூதமக்கள் சிதறடிக்கப்படுவது உபத்திரவ காலத்தின் மத்தியில் நிகழுவதாய் இருக்கிறது. முடிவு காலம் எனக்குறிப்பிடுவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறதாய் இருக்கிறது. இது இறுதி கட்ட ஏழு ஆண்டுகாலத்தில் கடைசி மூன்றரை காலத்தின் இறுதிக்கட்டமாய் இருக்கிறது.

மனிதனுக்கு தேவ அளித்த வெளிப்பாடுகள் வரையறைக்கு உட்பட்டதாய் இருக்கிறது, அவைகள் மனிதருக்கு முன் நிகழ்வுகளை அறிவிக்கிறதாய் இருக்கிறது. அது காலகாலங்களில் வளர்ந்து முன்னாக நிகழ்ந்து பதிவு செய்யப்பட்டவைகளுடன் சேர்க்கப்பட்டவைகளாய் திகழ்கின்றன. இறுதிகட்ட கருத்தைக் குறித்த தரிசனத்தை யோவேல் துவங்குகிறவராய் இருக்கிறார், தானியேல் புத்தகமானது சகரியா புத்தகத்திற்கு முன்னாக வாசிக்கப்படல் வேண்டும், தானியேல் புத்தகத்துடன் தகவல்கள் சேர்க்கும்படி பெற்றுக்கொள்கிறவராய் இருக்கிறார், பின்னர் நாம் சுவிஷேசம் மற்றும் பவுலின் கடிதங்கள், இறுதியாக யோவானின் வெளிப்படுத்தல் புத்தகத்தை வாசித்தல் வேண்டும்.

DOCTRINE உபதேசம்:

பகுதி 53 - பாழாக்கும் அருவருப்பு மற்றும் முடிவுரை தானியேல் 12:10-13.

10 அநேகர் சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டு புடமிடப்பட்டவர்களாய் விளங்குவார்கள். துன்மார்க்கரோ துன்மார்க்கமாய் நடப்பார்கள். துன்மார்க்கரில் ஒருவனும் உணரான். ஞானவான்களோ உணர்ந்து கொள்வார்கள். 11 அன்றாட பலி நீக்கப்பட்டு, பாழாக்கும் அருவருப்பு ஸ்தாபிக்க படுங்காலமுதல் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூறுநாள் செல்லும். 12 ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான். 13 நீயோவென்றால் முடிவுவரும் மட்டும் போயிரு. நீ இளைப்பாறிக்கொண்டிருந்து, நாட்களின் முடிவிலே உன் சுதந்திர வீதத்துக்கு எழுந்திருப்பாய் என்றான்.

பின்னணியமும் மற்றும் பகுப்பாய்வுகளும்:

இப்பொழுது மனுக்குலத்தில் இரு குழுவினருக்கு இடையே உள்ள முறண்பாடுகள் கொடுக்கப்படுகிறது. முடிவுகாலத்தில் இருவகையான விளைவுகளைக் காண்கிறோம். அவைகள் பரிசுத்தவான்கள் சுத்திகரிக்கப்படுவதும்/ விடுவிக்கப்படுதல் விளைவாக காட்டப்படுகிறது, அதே சமயம் துன்மார்க்கரின் தீமை செய்யும் இருதயங்களைஉடையோரும் காண்பிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

ஞானவான் நிகழ்வதைப் புரிந்து கொள்கிறவர்களாய் இருப்பர், துன்மார்க்கரோ புரிந்து கொள்ளார்கள். விசுவாசிகள் தீர்க்கதரிசனத்தை புரிந்துகொள்கிறவர்களாய் இருப்பார்கள். அவிசுவாசிகளோ புரிந்து கொள்ளாது இருப்பார்கள். இது கடைசி நாட்களில் விசுவாசிக்களுக்காக முன்னறிவிக்கப்பட்டதாய் இருக்கிறது.

தானியேலில் 1290 நாட்கள் மூன்று வருடமும் ஏழு மாதங்களும் சந்திரகாலக்கணக்கில் அளிக்கப்பட்டு இந்நாட்களில் பாழாக்கும் அருவருப்பு நிர்மாணிக்கப்பட்டு கர்த்தரின் மகிமையின் நாளில் முழுமையாக அகற்றப்படுவது குறித்து கூறப்படுகிறது.

வேதாகமத்தில் இரண்டாவது மூன்றரை ஆண்டு உபத்திரவகாலம் 1260 நாட்கள் அல்லது 42 மாதங்கள் இவ்வசனங்களில் தெளிவு படுத்தப்பட்டுள்ளன. தானியேல் 7:25, 12:7, வெளிப்படுத்தல் 11:2, 12:6, 12:14, 13:5. இருப்பினும் வசனம் 12ல் மொத்த நாட்கள் 1335 நாட்களாய் கொடுக்கப்பட்டுள்ள. அதிக பட்சமான மாதங்கள் எதற்கு கொடுக்கப்பட்டுள்ளன? இரண்டரை மாதங்கள் அதிகமாய் கொடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன? இது திகைப்பை உண்டாகுவதும் தீர்க்கப்படாத கருத்துமாய் இருக்கிறது, பின்னர் இதன் கருத்தை பரிசுத்த ஆவியானவர் பின்னர் அறிந்து கொள்ள வேண்டியோருக்கு தெளிவு படுத்துவார்.

தானியேல் இப்படிப்பட்ட காலத்தைக் குறித்து விவரம் தெரிவிக்கவில்லை இருந்தபோதிலும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து மறுபடியும் திரும்பிய பின்னர் மத்தேயு 25:31-46ல் கொடுக்கப்பட்ட செம்மறி ஆடுகளையும் வெள்ளாடுகளை பிரிப்பதுமான சம்பவம் நிகழும். மற்றும் இஸ்ரவேலை திரும்பகூட்டிச்சேர்பதும் நியாயந்தீர்ப்பதும் இடம் பெறும். எசேக்கியேல் 20:34-38. இக்கால கட்டத்தில் இது நிகழும் என அர்த்தம் செய்து கொள்ளப்படுகிறது. இது ஒரு பிழையாக அல்ல -- இக்கால கட்டத்தில் நிறைவேறும் இர்கசியமாய் இருக்கிறது.

இப்புத்தகத்தில் உள்ள கடைசி வசனம் தானியேலுக்கு உயிர்த்தெழுதல் உண்டென்றும் இராஜ்ஜியத்தில் சுதந்திரம் உண்டென்பதையும் உறுதி செய்கிறதாய் இருக்கிறது.

கைக்கொள்ளுதல்:

உபத்திரவகாலம் பெரிய அளவில் முறண்பாடுள்ளதாய் விளங்கும். அது முழுவதும் முறண்பாடுகளுள்ள சமுதாயமாய் இருக்கும். இக்காலத்தில் அக்கிரமம் அதிகரிக்கும் கர்த்தர் இறுதி வெற்றியைப் பெற்றுக்கொள்வார், இதன் மத்தியில் இருக்கும் விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் பாதுகாப்பாய் இருப்பார்கள்.

விசுவாசிகளுக்கு தீர்க்கதரிசனமானது மிகப்பெரிய ஆறுதலைக்கொண்டுவரும், விஷேசமாய் பகைமையும் மரணமும் உள்ள காலத்தில் இது நேரிடுவதாய் இருக்கும். 1 தெசலோக்கேயர் 4 ம் அதிகாரத்தில் விசுவாசிகளாகிய நமக்கு, மரித்த பரிசுத்தவான்களுக்காக புலம்ப வேண்டாம் எனக்கூறப்பட்டுள்ளது, "நம்பிக்கை இல்லாதோரைப் போன்றுபுலம்புதல் வேண்டாம் எனக்கூறுகிறது". கிறிஸ்துவுக்குள்ளாய் நமக்கு முற்றிலும் நம்பிக்கை உள்ளது.

திரும்பவும் தேவனுக்காக நம்மை கிரயம் கொடுத்த வாங்கின இயேசு கிறிஸ்துவின் மூலம் உயிர்த்தெழுதலின் நிச்சயமும் நித்திய ஜீவனும் உண்டு.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து திரும்ப வருகிறவராய் இருக்கிறார். நாம் வெளிப்படுத்தலின் இறுதி சொற்றொடரை எதிரொலிப்பவர்களாய் இருப்போமாக -- "கர்த்தாவாகிய இயேசுவே சீக்கிரம் வரவேண்டுமே"

உபதேசங்கள்

LAST DAYS: CHARACTERISTICS OF THE LAST DAYS கடைசி நாட்கள்: கடைசி நாட்களின் குணாதிசயங்கள்

ETERNAL SECURITY நித்திய பாதுகாப்பு

ETERNITY PAST AND ETERNITY FUTURE கடந்த கால நித்தியமும் மற்றும் எதிர்கால நித்தியமும்.

WHERE OBAMA'S CRAZY NUCLEAR "DEAL" WITH IRAN WILL LEAD THE WORLD ஈரானுடன் ஒபாமா செய்துகொண்ட பைத்தியக்காரத்தனமான அணுஆயுத ஒப்பந்தம் உலகை வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

எசேக்கியேல் தீர்க்கதரிசி எதிர்கால ஈரான் -- இஸ்ரவேல் முறண்பாடுகள் குறித்து அறிவிக்கிறவராய் இருக்கிறார். ஈரானின் மதத்தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்த அறிக்கையானது எதிர்பாராத வண்ணம் செய்த ஒன்றல்ல அது அமெரிக்கரின் சமாதியாக, இஸ்ரவேலரின் சமாதியாக கருதப்படுகிறது.U-Tube ல் உலகமே காணும் வண்ணம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மக்கள் மிகவும் திமிர் பிடித்தவர்களாய் இருக்கின்றனர் -- இவர்களது தீமையான செயல்பாடுகள் சாத்தானின் கொடூர செயல்பாடுகள் மூலம் விளங்கி வருகிறது.

நவீனகால USA and UK குழுவினர்களுக்குள் சுவரொட்டிகள் மூலம் தங்களது அபிப்பிராயங்களை அறிவிக்கிறவர்களாய் இருக்கின்றனர், "சுதந்திரமே நரகத்திற்கு செல்" இதன் மூலம் இவர்கள் மத சுதந்திரம் வேண்டாம் என விருப்பத்தைத் தெரிவிக்கிறவர்களாய் இருக்கின்றனர். ஈரோப்பை ஆண்டுவருபவர்கள் இப்படிப்பட்டவைகளை அந்திக்கிறிஸ்து

தோன்றுமுன்னே முடிவுக்கு கொண்டுவருபவர்களாய் இருக்கின்றனர். மேற்கத்திய நாடுகளில் மத்திய கிழக்கு நாடுகளில் அல்ல ஆளுபவர்கள் தேவனுக்கு விரோதமாய் மனித ஆளுகையை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர்.

எதிர்காலம் சமாதானமாய் இருக்கப் போவதில்லை, அது யுத்தம் மரணம் நிறைந்ததாய் காணப்படுகிறது. வருந்த தக்கது என்னவெனில் ஈரான் மக்களுக்கும் நவீன உலகில் இருப்போருக்கும் மரணம் வாக்களிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இஸ்ரவேலரும் அரேபியர்களும் பெரிய அளவில் உபத்திரவத்திற்குள்ளாவார்கள் அடுத்த கட்டமாய் மத்திய கிழக்கு நாடுகளில் "ஸ்கைத்தியன் - பார்த்தியன்" படையெடுப்பு உண்டாயிருக்கும், இதன் விளைவாக அரேபியர் மற்றும் யூதர்கள் மீது அணுஆயுதங்களை பயன்படுத்தும் பயங்கள் உருவாகும்.

இன்றைய அளவில் "ஸ்கைத்தியன் -- பார்த்தியன்" உடன்பாடு ரஷ்யா - உக்ரைன் உடன்பாடாகவும் மற்றும் ஈரான் -- ஸ்டேன்ஸ் உடன்பாடாகவும் கருதப்படுகிறது.

அமெரிக்காவின் பைத்தியக்காரத்தனமானது ஈரானின் நிச்சயத்தை "மரண ஒலமாகச்" செய்கிறதாய் இருக்கிறது. இந்த ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்பதில் உங்களுக்கு சந்தேகம் வருமேயானால், இணைய தளத்தில் பிரசுரமாகி இருப்பதை அச்சுப்பதிவு செய்து வாசித்துப்பாருங்கள். அது நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதாய் இருக்கும். இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனத்தை குறித்து நாம் வருந்து கிறவ்ர்களாய் இருப்போம், இதற்கு ஒப்பான Neville Chamberlain’s நமது வேதாகமத்தை திறக்கும் வரையில் இவ்வகையான முட்டாள்தானமான காரியம் நம்மை பயமுறுத்துகிறதாய் இருக்கும். 2016ன் முடிவிற்குள்ளாக UN ல் ஹாமா ஒரு தேசமாக உருவாகும். ஹாமா ஒரு தேசமாய் உருவாகும் போது UNல் இது இன்னொரு தேசமாய் உருவாகும். -- இஸ்ரவேல், ஈரான் இது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

அடுத்த சிலமாதங்களுக்குள் பைத்தியக்காரத்தனமானவற்றை காணவிருக்கிறோம். -- எசேக்கியேல் இவைகள் எவ்வாறு நிகழப்போகிறது என்பதை எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார். -- அவரது தரிசனங்கள் மூலம் இது எவ்வாறு சாத்தியம் எனக்கூறுகிறவராய் இருக்கிறார். ஆகையால் விசுவாசிகளே, தயவு செய்து U-Tube தீர்க்கதரிசனங்களைப் பார்த்துக்கொண்டு இராதீர்கள், தேவனது வசனத்தை கேளுங்கள் மற்றும் இயேசுவின் கரத்தில் சார்ந்து இளப்பாறுங்கள் -- அவரே இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தருமாய் இருக்கிறார். கர்த்தருடைய வசனத்தை கேட்டு அவருக்கு முன்

முழங்காலில் நில்லுங்கள் உங்கள் வாழ்க்கைப் பாதையில் தேவனது சித்தம் செய்ய முயலுங்கள் பொருளாதார, இயல்பான, இராணுவ படுகொலை நிகழும் இக்கால கட்டங்களில் பாதுகாப்புடன் நடந்து கொள்ளப்பாருங்கள்.

Dr John C McEwan
Dean
EBCWA

11 January 2016

<u>எசேக்கியேல் 38 ம் அதிகாரம்</u>

வசனங்கள் 1 – 13.

"1 கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: 2
மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம்
உரைத்து, 3 சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருவேன். 4 நான்
உன்னைத் திருப்பி, உன் வாயில் துறடுகளைப் போட்டு, உன்னையும் உன்னுடைய எல்லாச் சேனையையும் குதிரைகளியும் சர்வாயுதந்தரித்த குதிரை வீரர்களையும் பரிசையும் கேடகமுடைய திராளன கூட்டத்தையும் புறப்படப்பண்ணுவேன். அவர்கள் எல்லாரும் பட்டயங்களைப் பிடித்திருப்பார்கள். 5 அவர்களோடேகூடப்
பெரிசியரும் எத்தியோப்பியரும், லீபியரும் இருப்பார்கள். அவர்களெல்லாரும் கேடகம் பிடிது, தலைச்சீராவும் தரித்திருப்பவர்கள். 6 கோமேரும் அவனுடைய எல்லா
இராணுவங்களும், வடதிசையிலுள்ள தோகர்மா வம்சத்தாரும் அவர்களுடைய எல்லா இராணுவங்களுமாகிய திரளான ஜனங்கள் உன்னுடனேகூட இருப்பார்கள். 7 நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின
உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து, நீ அவர்களுக்குக் காலவலாளனாயிரு. 8 அநேக நாட்களுக்குப் பிற்பாடு நீ
விசாரிக்கப்படுவாய், பட்டயத்துக்கு நீங்கலாகி, பற்பல ஜனங்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தவர்களின் தேசத்தில் கடைசி வருஷங்களிலே வருவாய், நெடுநாள் பாழாய்க்கிடந்து, பிற்பாடு ஜாதிகளிலிருந்து

கொண்டுவரப்பட்டவர்கள் எல்லாரும் சுகத்தோடே குடியிருக்கும் இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமாய் வருவாய், அவர்கள் எல்லாரும் அஞ்சாமல் குடியிருக்கும்போது, 9 பெருங்காற்றைப்போல் எழும்பிவருவாய், நீயும் உன்னுடைய எல்லா இராணுவங்களும் உன்னோடேகூட இருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம் போல் தேசத்தை மூடுவீர்கள்.10 கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அந்நாளிலே பாழாய்க்கிடந்து திரும்பக் குடியேற்றப்பட்ட ஸ்தலங்களுக்கு விரோதமாகவும் ஜாதிகளிடத்திலிருந்து சேர்க்கப்பட்டதும், ஆடுகளையும் மாடுகளையும் ஆஸ்திகளையும் சம்பாதித்து தேசத்தின் நடுவில் குடியிருக்கிறதுமான ஜனத்துக்கு விரோதமாகவும் நீ உன் கையைத் திருப்பும்படிக்கு, 11 உன் இருதயத்தில் யோசனைகள் எழும்ப, நீ பொல்லாத நினைவுகளை நினைத்து, 12 நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப்போவேன். நிர்விசாரமாய்ச் சுகத்தோடே குடியிருக்கிறார்களின்மேல் வருவேன், அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை. கதவுகளும் இல்லை என்போம். 13 சேபா தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தர்ஷீசின் வர்த்தகரும் அதினுடைய பாலசிங்கங்களான அனைவரும் உன்னை நோக்கி: நீகொள்ளையிட அல்லவோ வருகிறாயென்றும் நீ சூறையாடி வெள்ளியையும் பொன்னையும் ஆஸ்தியையும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும் ஆடுகளையும் மாடுகளையும் பிடிக்கிறதற்கும், மிகவும் கொள்ளையிடுகிறதற்கும் அல்லவோ உன்னுடைய கூட்டத்தைக் கூட்டினாயென்றும் சொல்லுவார்கள்.

பிரதிபலிப்பு

"1 கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: 2 மனுபுத்திரனே, மேசேக் தூபால் ஜாதிகளின் தலைமையான அதிபதியாகிய மாகோகு தேசத்தானான கோகுக்கு எதிராக நீ உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்து, 3 சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ, நான் உனக்கு விரோதமாக வருவேன்.

இது தீர்க்கதரிசன வரிசையில் திடீர் உயர்வாகக் காணப்படுகிறது, இஸ்ரவேலின் எதிர்கால முடிவில் விநோதமான மக்கள் இஸ்ரவேல் மீது தாக்குதல் நடத்துவதை திடீரென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய அதிகாரத்திலிருந்து நேரடித் தொடர்புடன் காணப்படுகிறது. அவர்கள்

கூட்டிச்சேர்க்கப் பட்ட பின்னர், இரட்சிப்படையாத தேசம் இறுதிகட்ட தாக்குதல் நடத்துவதைக் காண்கிறோம், இது கர்த்தரின் இரண்டாம் வருகைக்கும் முன்னதாக நிகழுவதாய் இருக்கிறது. சிலர் வாதிடுவது இது ஆயிரவருட ஆளுகையின் இறுதிகட்டத்தில் நடைபெறும் என்கின்றனர், சிலர் இது மகா உபத்திர காலத்திற்கு முன்னாக நிகழும் எனக்கூறுகின்றனர் இது அந்த சமயத்தில் வழியை ஆயத்தப்படுத்துவதாய் இருக்கும். நாம் இங்கு தேவனுடைய திட்டம் மற்றும் தேவனுடைய ஜனங்கள் மீது ஒரு பெரிய தாக்குதலைக் காண்கிறோம், இது மிகமோசமான தாக்குதல் என்பதற்கில்லை, ஆனால் மோசமானதற்கு முன்னடையாளமாய் இருப்பது என விசுவாசிக்கிறோம்.

முதிர்ந்த பிரதிபலிப்பின் மேல், வேதாகமத்தின் எல்லா புத்தகங்களின் விளக்கவுரையின் இறுதியாக;, எனது அறுபது வயது நிரம்பிய நிலையில், கடந்த 40 ஆண்டுகாலமாய் பண்டைய சரித்திரம் குறித்து கற்றறிந்து வருகிறேன். நான் விசுவாசிக்கிற படி, இந்த அதிகார நிகழ்வுகள் மகா உபத்திரவகாலத்திற்கு முன்னாக நிகழுவதாய் இருக்கிறது, ஒரு தேசக் குழுவினர் அவிசுவாசிக்கும் இஸ்ரவேலரின் நவீன தேசத்தை அழிப்பார்கள். இது இத்தகைய தாக்குதலின் பின்விளவாக இருக்கிறது, இது எசேக்கியேலால் விவரிக்கப்படுகிறது, நான் விசுவாசிக்கிறபடி இது மகா உபத்திரகாலத்துக்கு முன்னாக இடம் பெற வேண்டும், தேவாலயத்தின் உபத்திரவத்திற்கு வழி வகுக்கப்பட்டு, அது சன்னி மசூதியுடன் கட்டப்பட்டு நிறைவு பெறும். நான் விசுவாசிக்கிற படி இந்த இரு அதிகாரங்களில் கூறப்படும் நிகழ்வுகள் அந்திக்கிறிஸ்துவின் இறுதி விளையாட்டாக இருக்கும்.

இரண்டாங்கட்ட இறுதியாக தேசங்கள் தேவனுடைய திட்டத்திற்கு எதிராக செய்யும் மகா பெரிய கலகமாய் இருக்கிறது. இது சரித்திரத்தில் இஸ்ரவேலரை இதற்கு முன் நிகழாத வண்ணம் கொலை செய்து துன்புறுத்தும் செயலாய் இருக்கிறது. விவரிக்கிற இக்காரியமானது சரித்திரத்தில் 2016 வரை இன்னும் இடம் பெறாததாய் இருக்கிறது. மட்டுமின்றி எசேக்கியேலின் காலம் கிமு 520ல், இப்படிப்பட்ட தேசங்களில் சில, இஸ்ரவேல் நெபுகாத்நேச்சாரின் இராணுவத்தில் உட்படுவதைக் கேள்விபட்டனர், ஆனால் அதில் அவர்கள் பெரும்பகுதியை வகிக்கிறவர்களாய் இருந்தனர். இங்கு மற்றவர்களைக்குறிப்பிடும்போது "வெகு தொலைவில்" இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த வேதபகுதி இன்னும் நிறைவேறவில்ல, கி மு 605, 597, 586 படையெடுப்புகளில் சரித்திரத்தில் இடம்பெறாததாக இருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில் ஒரு பெரிய முகாம் நடைபெற உள்ளது அது இஸ்ரவேலருக்கு எதிராக சாத்தானின் மக்களால் இஸ்ரவேல் தேசத்தின்

மீது செய்யப்படும் கொலை எத்தனமாய் இருக்கும். இது எசேக்கியேலின்தீக்கதரிசன தரிசமாய் இருக்கிறது. நெபுகாத்நேச்சார் ஒரு சீகமத்தியனாய் இருந்தான், அவன் இந்த ஜபடிக் (ஸ்கைத்தியர்) ஐ பயன்படுத்தி தனது இராணுவத்துடன் எருசலேமை அழிக்க பயன்படுத்தினான். இந்த படையெடுப்பு எசேக்கியலால் விவரிக்கப்படும்போது அவர்கள் முழுவது ஜாபெடிக்காக இருந்தனர், அவர்கள் சேமின் குமாரருடன் யுத்தம் செய்து அவர்கள் எருசலேமை அடைந்த போது அழிக்கப்பட்டார்கள்.

இஸ்ரவேல் மக்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்யக் கூடி தேசங்களை/மக்கள் கூட்டத்தைக் குறித்து பார்ப்போம், அவர்கள் தேவனது திட்டத்தின் பேரில் யுத்தம் செய்கிறவர்களாய் இருந்தனர், அவர்கள் இராஜாதி இராஜாவுக்கும் மெய்யான கர்த்தாதி கர்த்தாவுக்கும் எதிராக யுத்தத்தை அறிவிக்கிறவர்களாய் இருந்தனர். முதலாவது குறிப்பிடப்படும் தோற்றத்தின் படியுள்ள தலைவர்கள் "கலகக்காரர்கள்" என அறியப்பட்டனர் இவர்கள் தென்தேசத்தைச் சார்ந்தவர்கள் பழைய சோவியத் சாம்ராஜ்ஜியத்தைச் சார்ந்தவர்கள். அலுவலக ரீதியான இதன் தலைவர் "கோகு" இவன மாகோகு தேசத்திலிருந்துண்டானவன். ஆதியாகமம் 10:2. இது ரஷ்யாவாய் இருக்கலாம் அல்லது உக்ரேனிய தலைவராய் இருக்கலாம் இவன் அனைத்து ஸ்கைத்தியர்கள் மற்றும் பார்த்தினியர்களை ஒன்று சேர்த்து மத்திய கிழக்கு நாடுகளின் மீது வெறுக்கத்தக்கதாய் படையெடுத்துச் செல்வான். கீழேயுள்ள வேதபகுதி வெறுப்பினாலும் மற்றும் பொருட்கள்மேல் உள்ள இச்சையினாலும் உந்தப்பட்டவர்களாய் யுத்தத்தில் தலைப்பட்டனர் என்று கூறுகிறது.

இங்கு ஜனங்கள் மற்றும் இடம்போன்றவற்றை குறிப்பிட்ட விதத்தில் இனம் கண்டு கொள்ள நம்மை திசைதிருப்புவதாய் இருந்தபோதிலும், பெயர்கள் ஸ்கைத்திய பெயர்களாய் இருந்து இனங்கண்டுகொள்ள வகை செய்கிறதாய் இருக்கிறது. இவர்கள் யாப்பேத்தின் வம்சாவழியினராய் இருக்கின்றனர் (இந்தோ - ஐரோப்பிய மக்கள் குழு)இவர்கள் ஸ்கைத்தியர்கள் என அறியப்படுகின்றனர். இவர்கள் சேமின் வழிவந்த அரேபிர்களோ யூதர்களோ அல்லர். இறுதி கால தாக்குதல்கள் சேம் வம்சத்தினர் இருக்கும், யாப்பேத் வமசத்தின் கொடிய மனிதர்கள் தேவனது திட்டப்படி இத்தாக்குதல்களை நடப்பிப்பர், இவர்கள் தேவனால் அழிவைப் பெறுவர். ஜலப்பிரளயத்துக்கு முன்னிருந்தே, தேவனது திட்டமானது இவனில் நிறைவேறி வருகிறதாய் இருக்கிறது. சேமின் கூடாரத்திலிருந்தே யாப்பேத்துக்கு ஆசீர்வாதங்களும், வல்லமையும் கடந்து செல்கிறதாய் இருக்கிறது. ஆதியாகமம். 9:27. இண்டோ ஐரோப்பிய மக்களுக்கு சேமுடைய குமாரருக்கு அளிக்கப்பட்ட

வேதவசனங்கள் மூலமே வல்லமையானது அவர்களது ஆராதனைக்கு கடந்து செல்கிறதாய் இருக்கிறது.

இந்தப் பெயர்கள் ஸ்கைத்திய மக்களின் பின்சந்ததியினரைக் குறிப்பிடுகிறதாய் தோன்றுகிறது இவர்கள் மேற்கிலுள்ள கார்பத்தியன் மலைகளில் வாசம் செய்தனர். இது தாழ்வான ரஷ்யாவின் ஹிந்து குஷ் - தியன் ஷான் மலைப்பகுதியில் ஈராக்கின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ளது. அடுத்த குழுவினர் ரோஷ் இனத்தைச் சார்ந்தவர் மேஷேக் மற்றும் தூபால் என்பவர்கள். இந்த பிராந்தியங்களில் கலப்பின சன்னி-ஷைட் இஸ்லாமியர்கள் இன்றைய அளவில் வாழ்ந்து வருகின்றனர், இவர்களையே எசேக்கியேல் இஸ்ரவேலரை வெறுத்து அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்பவர்களாய் காண்கிறவராய் இருக்கிறார்.

இணைய தளத்தில் இப்பெயர்களைத் தேடும்பொழுது விக்கிபீடியா தகவல்கள் இவர்களை கிறிஸ்துவ விரோதிகளாய் காட்டுகின்றன. இவர்கள் பழைய ஸ்கைத்தியர்களின் பகுதியில் வாழும் இஸ்லாமியர்களாவர், இவர்கள் "ஹாடித்" என்றும் மாகோக் மற்றும் கோக் எனவும் அறியப்படுகின்றனர். இது முடிவுகாலத்தில் பேசப்படுகிற இருபெயர்களாய் இருந்து வடபகுதியில் வாசம் செய்யபவகளாய் இஸ்லாமின் தீர்க்கதரிசன குரலாய் விளங்குகின்றனர், இவர்களை இயேசு மிருகம்/ மேற்கிலிருந்து தோன்றும் தீமை செய்யும் நபர் எனக்குறிப்பிடுகிறார், இவர்கள் காபாவில் ஹாஜி/ ஆராதனை செய்பவர்கள்.

இவர்களில் அநேகர் ஹாடித் ஷைட் மற்றும் சன்னி இஸ்லாமியராய் இருக்கின்றனர் இதன் விபரம் நம்மைகுழப்புகிறதாய் இருக்கிறது, ஆனால் எசேக்கியேலின் வார்த்தைக்கு இனங்க இதையே நாம் புரிந்து கொள்கிறவர்களாய் இருக்கிறோம், சிலர் இவர்களை the ISIS குழுவினர் என்கின்றனர், அவர்கள் விசுவாசிக்கிறபடி சன்னி இஸ்லாமிய நாடுகளை அழிப்பர் என்கின்றனர், தங்களை எதிர்க்கும் சன்னி/ஷைட் இஸ்லாமியர்கள், எல்லா யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களை கொலை செய்ய எத்தனிப்பர், ஆனால் இயேசுவால் இவர்கள் விடுவிக்கப்படுவர். இங்கு எசேக்கியேலின் தீர்க்கதரிசன வார்த்தைகள் முக்கியம் வாய்ந்ததும் சத்தியம் கலந்ததுமாய் இருக்கிறது. ஹாடித் குறித்து புரிந்து கொள்ள அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம்! இது எசேக்கியேல் குறிப்பிடும் முக்கியம் வாய்ந்த பெயர்களாய் இருக்கிறது.

இந்த இரு அதிகாரங்களிலும் நாம் வாசிப்பது, இஸ்ரவேலரின் நிலையை "உலர்ந்த எலும்புகளாய்" காண்கிறோம். (எசேக்கியேல் 37) இது அவர்களது அவிசுவாசத்தையும், பரிசுத்த ஆவியானவரின் சுவாசம் அவர்களை

மறுபடியும் ஆவிக்குரிய வாழ்வுக்கு கொண்டுவருவதைக் காண்கிறோம். சகரியா 12:10ff, 13:1ff. எசேக்கியேலின் இத்தகைய தீர்க்கதரிசன தரிசனம் பெரிய அளவில் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, இது the ISIS மக்களின் ஏறுமான போக்காய் முக்கியம் பெறுகிறதாய் இருக்கிறது. தாராளவாத/ அவிசுவாசமுள்ள விரிவுரையாளர்கள் பிற்சேர்க்கை குறித்து வாதிடுகிறவர்களாய் இருக்கின்றனர், இவர்கள் இதன் அடிப்படையை மறுதளிக்கிறவர்களாய் இருக்கின்றனர். இதன் தீர்க்கதரிசனக் கருத்து முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, தவறான ஹிடைட்கள் கோகு மாகோகு சம்பந்தப்பட்டவர்களாய், சிரியா மற்றும் தெற்கு அரேபியா பகுதிகளில் அழிவைக்கொண்டுவருகிறவர்களாய் காணப்படுகின்றனர். இவர்கள் ஏமன் மத்திய தரைகடல் பகுதியிலிருந்து யுத்தம் மேற்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர், இதன் உச்சக்கட்டம் இஸ்ரவேலின் எல்லாமலைகளிலும் மற்றும் எருசலேம் மலையிலும் கோகு மாகோகு யுத்தத்தையும் அழிவையும் எதிரொலிக்கிறதாய் இருக்கிறது.

எசேக்கியேலில் கர்த்தர் இதை தெளிவுபடுத்துகிறவராய் இருக்கிறார், அவர்தாமே இந்த மக்களுகு தனிப்பட்டவிதத்தில் எதிராக யுத்தம் செய்கிறவராய் காணப்படுகிறார், இது அவர் சித்தத்திற்கும், உலகம் புறக்கணிப்புக்கும் ஏதுவாய் இருக்கும். கர்த்தருக்கு எதிராக நிற்போர், அதாவது ஆபிரகாமின் குமாரருக்கு விரோதமாய் இருப்போர், அவர்களுக்கு எதிராய் நிற்க இயலாது. இந்த தீர்க்கதரிசனம் முக்கியம் வாய்ந்ததாயும், யுத்தத்தை சந்திக்கிற மக்கள் மகா உபத்திரவ காலத்தை வழிநடத்துகிறவர்களாய் விளங்குவர். எசேக்கியேல் தீர்க்கதரிசன வார்த்தைகள் நாம் அணுஆயுத யுத்தத்தை காணும்படி செய்கிறதாய் இருக்கிறது, மத்திய கிழக்கு நாடுகளில் மில்லியன் கணக்கானோர் கொன்று குவிக்கப்படுவர், இது தீமை செய்யும் ஈரான் மற்றும் மதிகேடான ரஷ்யர்களின் விளைவாய் இருக்கும். இன்றைய அளவில் தவறானவைகளை போதிப்பவர்கள் வஞ்சகத்தை போதிக்கிறவர்களாயிருக்கிறார்கள், ஆனால் வாசிக்கிறவர்கள் எசேக்கியேல், சகரியா, மற்றும் இதர தீர்க்கதரிசிகள் சொன்னவைகளை விசுவாசிக்கிறவர்களாயிருந்து தேவனது திட்டத்தையும் கொடிய மனிதரின் படுகொலைகள் மற்றும் அவர்களது தீமைகளை உணர்ந்து கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள்

இது வேதாகம ஆதாரத்தின் துள்ளியமான தீர்க்கதரிசன நிறைவேறுதலாய் இருக்கிறது. இது கர்த்தர்தாமே மனிதர்களிடையே குறுக்கிட்டுச் செயல்படுவதைக் காட்டுகிறது. வேதாகமம் மட்டுமே உலகின் முடிவையும் வேதாகம சத்தியத்தின் அறிவு முடிவு கால யுத்தங்களையும் அறிவிக்கிறதாய் இருக்கிறது. இது இஸ்ரவேல் மீதான கொடிய தாக்குதலின் போது என்ன சம்பவிக்கும் என்பதை வேதாகம

போதனையும் தீர்க்கதரிசன ஆகமங்கள் மூலம் அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறதாய் இருக்கிறது.

4 நான் உன்னைத் திருப்பி, உன் வாயில் துறடுகளைப் போட்டு, உன்னையும் உன்னுடைய எல்லாச் சேனையையும் குதிரைகளியும் சர்வாயுதந்தரித்த குதிரை வீரர்களையும் பரிசையும் கேடகமுடைய திராளன கூட்டத்தையும் புறப்படப்பண்ணுவேன். அவர்கள் எல்லாரும் பட்டயங்களைப் பிடித்திருப்பார்கள்.

இந்த ஜனங்கள் "முன்னோக்கி இழுக்கப்படுபவர்கள்" எனக்கருதப்படுகின்றனர். இவர்கள் தங்களது தீமைகளுடன் கர்த்தரால் இழுக்கப்படுகிறவர்களாய் விளங்கு கின்றனர். இந்த ஜனங்கள் இன்னும் விடுதலை பெற்றவகளாயிருக்க கர்த்தர் அவர்களை வீணரென்று தீர்க்கிறதென்ன? இதற்கான பதில், "அவர்கள் இருதயம் கடினப்பட்டது" என்கிற கருத்தை தழுவியதாய் இருக்கிறது. பார்வோனின் இருதயம் தேவனால் "கடினப்படுத்தப்பட்டது" யாத்திராகம மக்களை வழிநடத்தும்போது இது சம்பவித்தது. அதினிமித்தம் இஸ்ரவேல் ஜனங்கள் போகாதிருக்க தடை செய்யப்பட்டனர். பார்வோனின் இருதயம் "கடிப்பட்டதினால்" அவன் தனது முழுமையான கொலைவெறியை அவனது நியாயத்தீர்ப்பினால் காண்பிக்கிறவனாய் இருந்தான்.

இதன் விளைவாக, பார்வோன் முழுமையான நியாயத்தீர்ப்பை எகிப்து தேசத்தில் வரவழைப்பதற்கான கதவை திறக்கிறவனாய் காணப்பட்டான். எகிப்தின் அனைத்து தேவர்களும் வாதைகளால் நியாயந்தீர்க்கப்பட்டனர். இந்த சொற்றொடரின் அர்த்தம் என்ன? விடுதலையாய் இருக்கும் மனிதர் எவ்வாறு "இருதயத்தை கடினப்படுத்தக்கூடும்?" இங்கு பயன்படுத்தப்படும் வார்த்தைகளால் இதன் அர்த்தத்தை நாம் கண்டுகொள்கிறவர்களாய் இருக்கிறோம். BTB போதனை குறிப்புகளில் -- தேவன் -- தெய்வீக நிறுவனங்கள் -- சுயசித்தம் -- மற்றும் இருதயம் போன்ற தலைப்புகளில் உள்ள வேதபாடங்களைக் காணவும்.

ஒரு ஈரம்படிந்த துண்டை கடினப்படுத்தி இறுக்கி பிளியும்போது, அதில் உள்ளத் தண்ணீர் அனைத்தும் வெளியேறும். இந்தப்படி மிருதுவான துண்டில் இருக்கும் தண்ணீர் அனைத்தும் அதைக் கடினப்படுத்தும் போது வெளியேறுகிறதாய் இருக்கிறது. இதுவே "இருதயத்தை கடினப்படுத்துவது" என்கிற கருத்தை தெரியப்படுத்துகிறதாய் இருக்கிறது, தேவன் ஒரு நபரில் போதிய அளவு அழுத்தத்தை கொடுக்கும்போது அவர்களுக்குள் இருப்பவை பிளியப்பட்டு

வெளியேறுகிறதாய் இருக்கிறது. இதுவே இதன் உண்மைச் சிந்தனையாய் அமைகிறதாய் இருக்கிறது.

பார்வோன் தேவனையும் இஸ்ரவேலரையும் வெறுக்கிறவனாய் காணப்பட்டான். ஆகையால் அவன் மோசே ஆரோன் இவகளது வார்த்தைகளைக் கேட்டபோது, அவனது உண்மை சுபாவத்தை வெளிக்கொண்டுவருகிறவனாய் காணப்பட்டான். அவன் கர்த்தருக்கு விரோதமாய் மாய்மாலம் பண்ணி அவனது மனோ பாவனைகளை வெளிப்படுத்துகிறவனாய் காணப்பட்டான். இது இஸ்ரவேலரைப் பின்தொடர்ந்து அவர்கள் அனைவரையும் கொலை செய்வதற்கு அவனை வழிநடத்துகிறதாய் இருந்தது. யாத்திராகமம் 14. BTB வேதபாடத்தில் ஒப்பிடுக: பார்வோன் -- தேவனது வல்லமை.

நாம் இங்கு காணும் வெறுப்பைக் கொப்பளிக்கும் மக்களுக்கும் இதேபோன்று நிகழுவதாய் இருக்கிறது. அவர்கள் மத சம்பந்தமானவைகளைப் பொறுக்க மனதற்றவர்களாய் அவர்களது உண்மையான உணர்களையும், கொலை எத்தனங்களையும் வெளிப்படையாய் அறிவிக்கிறவர்களாய் காணப்படுகின்றனர். அவர்கள் "இழுக்கப்பட்டு" தேவனுடைய வார்த்தைக்கும் அவரது திட்டங்களுக்கும் விரோதமாய் அவர்களது இருதய விருப்பங்களை நிறைவேற்றுகிறவர்களாய் காணப்படுகின்றனர்.

அவர்கள் விடுதலையுடன் செயல்படுகிற பிரதிநிதிகளாய் இருந்து, அவர்களது தீமையான கொலைவெறித்தனச் செயல்களில் ஈடுபடுகிறவர்களாய் இருக்கின்றனர். மகா உபத்திரகாலத்திற்கு நாட்கள் நெருங்குகிறபடியால், மனுக்குலமானது இஸ்ரவேலருக்கு விரோதமாய் மனக்கடினம் கொள்கிறவர்களாய் பரிசுத்த வேதவாக்கியங்களின் சத்தியத்திற்கிணங்க உண்மையான இயேசுவை இனங்கண்டுகொள்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

5 அவர்களோடேகூடப் பெரிசியரும் எத்தியோப்பியரும், லீபியரும் இருப்பார்கள். அவர்களெல்லாரும் கேடகம் பிடிது, தலைச்சீராவும் தரித்திருப்பவர்கள். 6 கோமேரும் அவனுடைய எல்லா இராணுவங்களும், வடதிசையிலுள்ள தோகர்மா வம்சத்தாரும் அவர்களுடைய எல்லா இராணுவங்களுமாகிய திரளான ஜனங்கள் உன்னுடனேகூட இருப்பார்கள். 7 நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து, நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு.

இஸ்ரவேல் மீது தாக்குதல் நடத்த ஒரேசமயத்தில் அதிகமான தேசங்கள் கூடிக்கொள்வார்கள், இப்படிப்பட்ட தாக்குதலுக்கு பெரிய திட்டங்களும்,

நீண்டகால ஆய்வு திட்டங்களும் அவசியமாய் இருக்கிறது. இது கர்த்தரை மனப்பூர்வமாய் எதிர்ப்பதற்கும், அவரது ஜனங்களை எதிர்த்து கலகம் செய்வதற்கும் குறிக்கப்பட்ட காலத்தில் செயல் பட எழும்பியதை அறிவிக்கிறதாய் இருக்கிறது. இங்கு இவ்வித கலகத்தில் ஈடுபட பலதரப்பட்ட குழுவினர் கூடிக்கொண்டனர். வட கிழக்கிலிருந்து பெரிசியர்களும், மேற்கிலிருந்து லிபியர்களும், (இவர்கள் தென் கிழக்கில் உள்ள எமனியர்கள் என அறியப்படுகின்றனர்) தெற்கிலிருந்து எத்தியோப்பியர்கள்/சோமலியர்கள். இவர்கள் அனைவரும் அசுத்தமான மக்கள் குழுவினர்களாய் இஸ்ரவேலுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களாய்க் காணப்படுகின்றனர், இவர்கள் இஸ்ரவேலரை வெறுக்கிறவர்களாய் அவர்களது உடமைகளின் மீது இச்சையுள்ளவர்களாய் அவர்களை கொள்ளையிட கண்ணோக்கமுடையவர்களாய் இருப்பர்.

கோமேர் சிம்மேரியர் மக்களாய் இருக்கிறார்கள், தொகர்மா வீட்டினர், அர்மீனியாவை சுற்றிலுமுள்ள ஜனங்கள் போன்றோரின் ஜனக் குழுவினர் வட தேசத்தில் வாழ்கிறவர்களாயிருக்கிறார்கள். மேலே குறிப்படுவர்களில் துருக்கியர்களும் அடங்குவர். கர்த்தர் அவர்களை எச்சரித்து, அவ்வெச்சரிப்பானது ஆழமான கெடு நோக்குடன், அவர்களது ஆயத்த தேவைகளை பாதுகாப்பின்றி செய இழக்கச் செய்கிறதாய் இருக்கும். அவர்கள் இணைக்கப்படாது இருந்து, சாத்தானின் வழியில் உந்தப்பட்டவர்களாய், எப்பொழுதும் சுயத்தை மையமாய் கொண்டு செயல்படுகிறவர்களாய் இருப்பர். ஆகையால் அவர்கள் நல்ல குழுவினராய் இணைந்து செயல்படாது, ஒவ்வொரு யுத்தத்தையும் சுயம் மேற்கொள்ளுமாறு செய்து, சுய அழிவை தேடிக்கொள்கிறவர்களாய் இருப்பர்.

அவர்கள் தேவனுக்கு முன்பாக எவ்வித தயவு தாட்சண்யமின்றி இருப்பர், கர்த்தர் அவர்களை எச்சரித்து, அவர்களது எல்லா நோக்கமும் உள்ளான நிலையில் வெடித்து சிதறச் செய்வார். அவர்களது தீமையில் அவர்கள் அனைவரும் மரித்துப்போவார்கள். இப்படிப்பட்ட கொடிய எச்சரிப்பானது அவர்களது செவிட்டு காதுகளில் விழுந்து, அவர்கள் தீர்மானித்து, ஜெயம் பெறுவதற்கு எவ்வித நம்பிக்கையுமின்றி, தேவனுக்கு விரோதமாய் யுத்தம் செய்வதில் தலைப்படுவார்கள் மற்றும் இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம் செய்வதிலும் தலைப்படுவார்கள். சன்னி அரேபிய தேசங்கள் குறித்து தீர்க்கதரிசனமான தெளிவாய் கூறப்பட்டுள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள் மிகத்துள்ளியமாய் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. இங்கு கூறப்படுகிற யுத்தம் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் உரைக்கப்பட்டதாய் இருக்கிறது, எல்லோரும் வேதவசனத்திற்கு திறந்த மனதுடன், ஆபிரகாம்,

ஈசாக்கு, யாக்கோபின் தேவனை கடந்து வந்த இயேசு/ ஈசா/ யெஷுவா வை நோக்கி இரட்சகராகவும், இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் கருதி முழங்கால்படியிட்டு ஜெபிப்போமாக!

8 அநேக நாட்களுக்குப் பிற்பாடு நீ விசாரிக்கப்படுவாய், பட்டயத்துக்கு நீங்கலாகி, பற்பல ஜனங்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தவர்களின் தேசத்தில் கடைசி வருஷங்களிலே வருவாய், நெடுநாள் பாழாய்க்கிடந்து, பிற்பாடு ஜாதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் எல்லாரும் சுகத்தோடே குடியிருக்கும் இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமாய் வருவாய், அவர்கள் எல்லாரும் அஞ்சாமல் குடியிருக்கும்போது, 9 பெருங்காற்றைப்போல் எழும்பிவருவாய், நீயும் உன்னுடைய எல்லா இராணுவங்களும் உன்னோடேகூட இருக்கும் திரளான ஜனங்களும் கார்மேகம் போல் தேசத்தை மூடுவீர்கள்.

வசனம் எட்டு நமக்கு நினைப்பூட்டுவது என்னவெனில், கோகுவின் வெறுப்பு, வெகு காலத்துக்கு முன்னானதாய் காணப்படுகிறது. அவர்களுக்கு தகுந்த தருணம் நேரிட்டு, அவர்களது தீமைக்கு திரும்ப மற்றொரு தருணம் அவர்களுக்கு கிடைக்கிறதாய் இருக்கிறது. அவர்கள் கர்த்தரை தெய்வமாய் தொழுது கொள்ள அவர்களுக்கு ஒரு தணம் கிடைத்தும், அதைச் செய்ய தவறிவிட்டவர்களாய் காணப்படுகின்றனர். குறிப்பிடத்தக்க காரியம் என்னவெனில், இந்த தெற்கத்திய "ஸ்டான்ஸ்" பழைய old USSR சுவிஷேச கிறிஸ்தவர்களால் பெரிதளவில் சுவிஷேசத்தைப் பெற்றுக்கொண்டவர்களாயிருந்தும் 1990 ல் பழைய USSR சீர்குலைந்து போய்விட்டது. அவர்கள் இந்த சரித்திரத்தின் கடைசி வருடங்களில் இஸ்ரவேலின் மலைகளுக்கு விரோதமான தாக்குதலில்களில் ஈடுபடுகிறவர்களாய் இருப்பர். அவர்கள் தங்களுக்கு முன்னாக செய்ததை எல்லாம் செய்ய முயலுகிறவர்களாய் இருப்பர், இந்தமலைகள் எப்போதும் "வீணாய்ப் போன தேசமாய்" கற்பாறைகள் நிறைந்த ஸ்தலமாய் மிக எளிதாய் மேற்கொள்ளக்கூடியதாய் இருக்கும். இது ஒரு எளிதான முகாமாய் இராது, இஸ்ரவேலர் 100% ஆயத்தமில்லாதவர்களாயிருந்து அவர்களை கொலை செய்ய எத்தனிப்பவர்களை எண்ணிக்கைக்கு உட்படுத்தாது காணப்படுவர். மற்றும் தங்களைச் சுற்றியுள்ள ஐசுவரிய மிக்க அரேபிய தேசங்களை சார்ந்து கொள்ளாதும் இருப்பர்.

இந்த சந்தர்ப்பத்தில் யூத மக்கள் சமானத்தோடே வாழ்கிறவர்களாய் இருப்பர், அநேக வருடங்கள் யுத்தமின்றி தேசத்தில் அமைதியுடன் காணப்படுவர், கோகு இத்தகைய சமாதானத்தை கலைக்க முற்படுவர். அது தேவ சமாதானமாய் இருக்கும், கோகு இத்தருணத்தில் ஒரு

அதிர்ச்சியாய் அமைவர். (அவர்கள் இந்த வார்த்தைகளை படித்து இருந்தபோதிலும், மிகவும் ஆரவாரித்து, அவர்கள் பொய்யை நம்பி பாதுகாப்புடனும் சுய ஏமாற்று எத்தணங்களில் ஈடுபடுவர், அது அனைவரும் தேவனுக்கு விரோதமாக கலகத்தில் ஈடுபடுவர் மற்றும் தேசத்தின் மீது போர்தொடுப்பர்) அவர்கள் புயலைப்போன்று கடந்து வருவர், அவர்கள் தேசத்தில் மிகவும் வேகமாய் வீசும் புயலைப்போன்று வருவார்கள். எ:ண்ணிக்கையில் பெரிய அளவிலான இவர்கள் தாங்கள் வெற்றிபெறுவதாய் நம்பித் தங்களைத் தாங்களே ஏமாற்றிகொள்பவர்களாய் இருப்பர்.

10 கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: அந்நாளிலே பாழாய்க்கிடந்து திரும்பக் குடியேற்றப்பட்ட ஸ்தலங்களுக்கு விரோதமாகவும் ஜாதிகளிடத்திலிருந்து சேர்க்கப்பட்டதும், ஆடுகளையும் மாடுகளையும் ஆஸ்திகளையும் சம்பாதித்து தேசத்தின் நடுவில் குடியிருக்கிறதுமான ஜனத்துக்கு விரோதமாகவும் நீ உன் கையைத் திருப்பும்படிக்கு, 11 உன் இருதயத்தில் யோசனைகள் எழும்ப, நீ பொல்லாத நினைவுகளை நினைத்து,

குறைந்தபட்சம் இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே, கர்த்தர் இப்படிப்பட்ட தீமையான இராணுவத்தைக் குறித்து கூறியிருக்கிறார். அவர்கள் தீமையான ஆலோசனை உள்ளவர்கள் என்றும் சமாதானத்துடன் பாதுகாப்புடனும் வாழும் மக்களனைவரையும் கொன்று போடுவார்கள் இஸ்ரவேலின் கிராமங்களை அழித்து போடுவர் என்றும் முன்னறிவித்துள்ளார். பல ஆண்டு காலங்கள் பாதுகாப்புடனும், மற்றும் பாதுகாப்பில் வாசம் செய்த ஜனங்கள் கொடிய வன்முறைக்கு உள்ளானார்கள், இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ள வார்த்தைகள் இஸ்ரவேல் தேசத்தின் இராணுவத்தைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. அதிக பட்ச ஜனங்கள் சமாதானத்துடன் வாழ்ந்து கொண்டிருக்க, இந்த தீமை இழைக்கும் மக்கள் இத்தகைய வன்முறைகளை கொண்டுவருவர் எனஒருவரும் சிந்திக்கவில்லை.

தீமைசெய்யும் மனிதர்கள் அவர்களது ஐசுவரியத்தின் மீது இச்சையுள்ளவர்களாகி, இஸ்ரவேல் மீது இன பகைமை எண்ணம் கொண்டனர். அவர்களது வெறுப்பு தவறாய் செலுத்தப்பட்டது, அவர்களது எண்ணங்கள் முன்கூட்டியே அறிந்து கொள்ளப்பட்டது, கர்த்தர் ஏற்கனவே அவர்களது திட்டங்களை தடைசெய்து போட்டார். பகைமை எண்ணத்துடன் உள்ள இந்த தாக்குதல் குறித்து அநேகர் ஆச்சரியத்துக்குள்ளாவாகள், இஸ்ரவேல் இராணுவத்தினர் இரகசியமாய்

செயல்பட்டு அவர்களை மேற்கொள்கிறவர்களாய் இருந்தனர். எதிராளிகள் இஸ்ரவேலர் ஆயத்தமாய் இருக்கிறார்கள் என்பதை அறியாமல் இருந்தனர், இரகசியமாய் செயல்பட்ட இஸ்ரவேல் இராணுவத்தினர் மிகவும் வலிமையுள்ளவர்களாய் இருந்தனர், அவர்களது அணுஆயுத திட்டங்கள் தந்திரங்களை அறிந்து யூதமக்கள் மற்றும் சூழ உள்ள அரேபியர்கள் அவைகளுக்கு விலகி இருக்க நேர்ந்தது.

12 நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல் கிடக்கிற கிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப்போவேன். நிர்விசாரமாய்ச் சுகத்தோடே குடியிருக்கிறார்களின்மேல் வருவேன், அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை. கதவுகளும் இல்லை என்போம். 13 சேபா தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தர்ஷீசின் வர்த்தகரும் அதினுடைய பாலசிங்கங்களான அனைவரும் உன்னை நோக்கி: நீகொள்ளையிட அல்லவோ வருகிறாயென்றும் நீ சூறையாடி வெள்ளியையும் பொன்னையும் ஆஸ்தியையும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும் ஆடுகளையும் மாடுகளையும் பிடிக்கிறதற்கும், மிகவும் கொள்ளையிடுகிறதற்கும் அல்லவோ உன்னுடைய கூட்டத்தைக் கூட்டினாயென்றும் சொல்லுவார்கள்.

இச்சைகள் நிரம்பிய சேனையானது அரேபியர் மற்றும் இஸ்ரவேலர் மீது படையெடுத்து அவர்களது உடமைகளை கொள்ளையிடுவதும், அவர்களை சிறைப்பிடித்துகொண்டு போக அவர்களது எத்தனங்கள் எத்தகைய மதியீனமும் மற்றும் எத்தகைய தீமையுமாயிருக்கிறது. மனிதரின் சுயத்தை மையமாய் கொண்ட தீமைகளும் தேவனது திட்டத்திற்கு விரோதமாய் கலகம் செய்வதும் கொடுந்தீமையாய் இருக்கிறது. இது சாத்தானின் மித மிஞ்சிய போக்காகவும் அவனது தீமையான திட்டங்கள் ஆரம்பத்திலிருந்து மிகவும் மோசமானதாய் இருக்கிறது. செழிப்பு ப்ரிசுத்தத்திற்கு காரணமாய் அமைவ்தில்லை. மற்றும் சமாதானமும் பாதுகாப்பும் நன்மையானதாய் இருப்பதும் இல்லை. இன்றைய அளவில் உலகமானது பொருளாதார ரீதியில் சிறப்பாய் இருக்குமேயானால் அது சமாதானத்திற்கு ஏற்ற இடம் என வாதிடுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தொடர்ந்து வாதிடுவது சமாதானமும் செழிப்பும் இருந்தால் குற்றங்களும் தீமையும் இல்லாது போகும் என்கின்றனர்.

இன்றைய உலகில் இத்தகைய கருத்தானது மிகப்பயங்கரமான பொய்யாய் இருக்கிறது. எனது சொந்த தேசத்தில் ஒரு வாரத்தில் செய்தி தாளில் மில்லியனர்கள் திருட்டு காரியங்கள் அல்லது ஒழுக்கக்கேடான செயல்பாடுகள், கொடுமையான குற்றச்சாட்டுகளின்றி இருந்தது

இல்லை. குற்றவாளிகளில் அநேகர் ஏழையான ஜனங்கள் அல்லர். ஐசுவரியவந்தர்களாய் இருக்கின்றனர், அவர்களது சாத்தானின் சுயத்தை மையமாய் கொண்ட பகைமை எண்ணங்கள் அதிகரித்து கொண்டே செல்கிறதாய் இருக்கிறது. ஐசுவரியவந்தர்கள் ஏழைகளை உபத்திரவப்படுத்துகிறார்கள், தங்களது தொழிலில் கூட்டாளிகளிடமிருந்து திருடுகிறவர்களாய் இருக்கின்றனர், அவர்களது சொந்த குடும்பத்திற்காய் அரசாங்கத்திடம் மோசடி செய்து திருடுகிறவர்களாய் இருக்கின்றனர். நீதிமொழிகள் 6:16-22, யாக்கோபு 2:1-7, 4:1-4, 5:1-6.

எசேக்கியலால் பட்டியலிடப்பட்ட தேசங்கள் அனைத்தும் வருந்தத் தக்கதாய் இருக்கிற்து, இங்குள்ள தேசங்கள் மத ரீதியாகம், கறைபட்ட அமைப்பையுடைய அரசியல் கொண்ட ரீதியிலும் மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கின்றன. இன்றை உலகோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது இத்தேசங்கள் மிகவும் பழங்கால தேச அமைப்பில் வாழ்ந்து வந்தனர். அவர்களது சாத்தானின் தன்மைபொருந்திய "பெயரளிக்கப்பட்டுள்ளது" இதன்பொருள் இவர்கள் மற்ற தேசங்கள் மீது படையெடுத்துச் செல்லும்போது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவர்கள் மூதாதையர் போன்று செயல்பட்டனர். தாக்கப்படுகிறவர்கள் அனைவரும் பின்னோக்கி பார்க்கிறவர்களாய் இருந்தனர், ஷைட் மற்றும் சன்னி இஸ்லாமிய மக்கள் குழுவினர் இவர்களுடன் நவீன கால இஸ்லாமியர்கள் தீமையான படையெடுப்பில் சேர்ந்து கொள்ளாது இருந்தனர், கீழே குறிப்பிட்டுள்ளபடி அந்த நாட்களில் இவர்கள் இஸ்ரவேலருக்கு ஆதரவளித்து அவர்களுடன் சண்டையிடுகிறவர்களாய் இருப்பர்.

மனிதரின் பழைய பாவ சுபாவத்தில் ஒன்றும் மாற்றமில்லாது இருந்தது, எல்லா ஐசுவரியமும் மற்றும் செழிப்பும் அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய எதுவும் இவர்களில் எவ்வித மாற்றத்தையும் கொண்டு வர இயலவில்லை. மாஜி அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் அவரது சிப்பந்தி ஒருவரிடம் தகாத உறவு கொண்டது குறித்து அவரிடம் கேட்டபொழுது, ஆரம்பத்தில் அவர் பொய் சொன்னார், இறுதியாக அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார், ஐசுவரியமும் மிகுந்த வல்லமையும் பெற்ற நபர் மதீயீனமான தீமையான காரியத்தை எவ்வாறு செய்ய இயன்றது, அவர் சொன்னபோது "என்னால் செய்ய இயன்றது செய்தேன்" என்றாராம். இதைப்போன்றே இன்றைய அளவிலும் மனிதர்கள் செய்து வருகின்றனர். தீமை "நான்" என்று விவரிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இது சுய நலத்துடன் சுயத்தை மையமாய் கொண்டுள்ளதாய் இருக்கிறது. ஏசாயா14:12-15, எசேக்கியேல் 28:2-19.

இதுவே நம் அனைவரின் வாழ்வின் மையமாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவரின் நிறைவு மட்டுமே இத்தகைய சுயத்தை மையமாய் கொண்ட தீமைகளுக்கும் மற்றும் பாவத்திற்கு விலக்கி பாதுகாக்கிறதாய் இருக்கிறது. நமக்கு பலதரப்பட்ட சோதனைகள் இருக்கின்றன, அவைகள் ஒரு போதும் உயர்ந்தவைகளாய் இருப்பதில்லை, தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையுடனும், அமைதியுடனும் நடந்துகொள்ளுதல் வேண்டும். 1 கொரி. 10:12, 1 தீமோத்தேயு 3:6-7, யாக்கோபு 5:12. இத்தகைய தீமையான நாட்களில், தீமைசெய்யும் மனிதர்கள், தேவனது திட்டத்திற்கு விரோதமாய் கலகம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் தீமை செய்வதில் பிடிவாதமாய் இருக்கின்றனர், யாப்பேத்தின் வம்சாவழியில் வந்தவர்கள் எழுந்து நின்று எதிர்ப்பு செய்கிறவர்களாய் இருக்கின்றனர்.

மேற்கத்திய தேசங்களில் உள்ள வேதாகமத்தை விசுவாசிக்கும் இஸ்ரவேலருடன் தொழில் செய்யும் வியாபாரிகள், மற்றும் தூரதேசத்தில் உள்ளவர்கள் அனைவரும் அவர்களுக்கு ஓர் சவாலாய் அமைவார்கள், அவர்களிடம் ஏன் இவ்வாறு தீமை செய்கிறீர்கள் என்று வினவ, இதைப்போன்றவைகளுக்கு விலகி இருந்து விசுவாசிக்க என்பார்கள். இது முன்கூட்டியே சிலர் ஆச்சரியத்துடன் பிடித்து கொள்ளக்கூடிய திட்டமாய் இருக்கிறது, ஒருவரும் "நவீன காலத்தில்" இதைப்போன்ற காரியங்களை விசுவாசியாதபடி இருப்பர். ஆதிக்கம் செலுத்தும் ஷைட் குழுவினர் படையடுத்துவரும்போது முக்கியமாய் மத்திய கிழக்கு நாடுகளில் சன்னி குழுவினர் மதியீனமாகவும், திமிர் பிடித்த நிலையில் தங்களைச் சுற்றியுள்ள சுழல் காற்றை அறியாதவர்களாய் தங்களது இராணுவத்தை இழந்து போவர். நான் ஆரம்பத்தில் இவர்கள் ஷைட் மற்றும் சன்னி இஸ்லாமியர் என்று எண்ணினேன், ஆனால் மத்திய கிழக்கு நாட்டிலிருந்து எழும்பும் கலப்பின மக்கள் குழுவினராய் இச்சையுள்ளவர்களும் வெறுக்கிறவர்களுமாய் தாக்குதல் நடத்த எழும்புகிறவர்களாய் இருப்பர்.

படையெடுத்து வரும் தேசங்களுடன் சேர்ந்து கொள்ளாத தேசங்கள் குறிப்பிடத்தக்கவை, அவர்களுடன் வாதிட்டு பின்னர் அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்கின்றன. ஷீபா, தேதான், மற்றும் "தர்ஷீஸின் வியாபாரிகள்" இவர்கள் படையெடுப்பை எதிர்ப்பவர்கள், மற்றும் இவர்களது "இளம் சிங்கங்கள்" (சிப்பாய்கள்) வன்முறையாய் எதிர்க்கிறவர்கள். "வியாபாரிகளான" நேட்டோ/ஐரோப்பிய ஐக்கியத்தில் இருக்கும் வியாபார கும்பல் போன்றோர் வன்முறையாய் எதிப்பு தெரிவிக்கிறவர்களாய் இருப்பர். படையெடுத்து வருபவர்களுடன் வியாபாரத் தொடபை துண்டித்து கொண்டு செயல்படுபவராய் இருப்பர். அவர்கள் வியாபாரத்தைத் துண்டித்து கொள்வதுடன், இராணுவத்தை அனுப்பிகொடுப்பவர்களுமாய் இருப்பர்.

ஷீபா மற்றும் தேதான் போன்றபெயர்கள் வடக்கு அரேபிய பெனின்சூலா தேசங்களுடன்/கோத்திரங்களுடன் ஒன்று பட்ட கூட்டுக்குழுவாய் சேர்ந்து கொள்ளும். இது மறைவாக சதி செய்து, இஸ்ரவேலுடன் ஷைட் இஸ்லாமிய தேசங்களுக்கு விரோதமாய் எழும்பும். இந்த தேசங்கள் சௌதி அரேபியா, ஐக்கியமாக்கப்பட்ட அரேபிய எமிரேட்ஸ் மற்றும் வளைகுடா நாடுகள், ஜோர்டன், சிரியா போன்ற தேசங்கள் ஒன்று சேர்ந்து கொள்ளும், எமன் தேசங்கள் மற்றும் ஏடன் சோமாலியருடன் சேர்க்கப்பட்டு எதிராளிகளின் ஒரு பகுதியாய் விளங்குவர். இந்த யுத்தம் ஷைட் மற்றும் சன்னி/இஸ்ரேலி முஸ்லிம்களுக்கு விரோதமாய் நிகழும், இத்தகைய யுத்தம் இஸ்லாமிய உலகில் எளிய ஒரு காரியமன்று.

போதகக் கைக்கொள்ளுதல்கள்:

1 பொருளாதார வறுமை அல்லது செழிப்பு பூரணமான குணாதிசயத்தை உருவாக்காது: மக்கள் தங்களது பொருளாதாரத்தினால் அல்லது சூழ்நிலைமைகளால் நல்லவர்களோ அல்லது கெட்டவர்களாக மாறுவதில்லை, அவர்கள் தேவனாகிய கர்த்தருடன் உள்ள நீதிக்கேற்ற உறவினால் மட்டுமட்டுமே அவ்வாறு மாறுகிறவர்களாய் இருக்கிறார்கள், மற்றும் பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படிவதன் மூலம் அவர்கள் நல்லவர்களாகிறார்கள். அவர்கள் வாழ்வின் "கனி" உள்ளான வல்லமையின் ஆதாரத்தை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது. கலாத்தியர் 5:13-26. கர்த்தருடைய சேவகர் அனைவருக்கும் கீழ்ப்படிதல் என்பது அவருடைய கட்டளையாய் இருக்கிறது, கர்த்தருடைய நீதியான எதிர்பார்ப்பை மறுப்போமானால், நமது மதியீனத்திற்குரிய கிரயத்தை செலுத்தியே ஆக வேண்டும்.

2. நேரத்தின் சோதனையானது விருப்ப துணிவாற்றலாய் இருக்கிறது; தனது சிருஷ்டிகர் மற்றும் தனது இரட்சகருடன் மனிதன் என்ன செய்யக்கூடும்? கர்த்தர் தனது குணாதிசயம் மற்றும் கிரியை குறித்து நமது பிரதி விளைவுகள் என்ன என கர்த்தர் தேடுகிறவராய் இருக்கிறார். மற்றும் இறுதி சமயம் வ்ரை சரியாய் இருக்க எதிர்பார்க்கிறார்ம் பாவத்தை அவர் முன்கொண்டுவர நம்மைக் கேட்டுக்கொள்கிறார், பரிசுத்த அலங்காரத்துடன் அவரை சேவிக்க எதிர்பார்க்கிறார். நமது தெரிந்துகொள்ளுதல்கள் நமது வாழ்வின் காரியங்களை இந்த வாழ்விலும் அடுத்த வாழ்விலும் தீர்மானிக்கிறதாய் இருக்கிறது, சோதனைகளானது முடிவு வரையும் எதிர்கொள்ளப்படுகிறதாய் இருக்கிறது.

3. தற்கால இஸ்லாமிய உலகம் இரு யுத்த முகாம்களாய் பிரியும், அரேபியர்கள் ஆபிரகாமில் தங்கள் சகோதரருக்கு ஆதரவு அளிப்பர், இந்த

ஆதரவு இஸ்ரவேலருக்கு இறுதியில் காணப்படும்: ஆபிரகாமின் குமாரர்களாகிய அரேபியருக்கு விரோதமாய் தேவ வார்த்தைகளை பிரசங்கிக்கும் போதகராய் பிடிபடாதபடி இருங்கள், இப்படிப்பட்ட பெரிய அளவிலான சோதனை காலத்திலும், படுகொலை சந்தர்ப்பத்திலும் அவர்கள் இஸ்ரவேலருடன் நிற்பர். இவர்களும் தங்கள் தகப்பனாகிய ஆபிரகாமில் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர், அவர்கள் அனைவரும் வாக்குத்தங்களை ஆதியாகமம் 12-14ல் பெற்றுள்ளனர். ஆபிரகாமின் குமாரர்கள் அனைவரும் "அவரது அரையில்" தோன்றினவர்கள். அரேபிய உலகிற்கு தேவ வார்த்தையின் சத்தியத்தைப் போதியுங்கள், நாம் இதைக் குறித்து தேவ வார்த்தையை உடையவர்களாய் இருக்கிறோம், அரேபிய தேசங்கள் இஸ்ரவேலுக்கு ஆதரவளிக்கும் மற்றும் விசுவாசத்திற்குள் கடந்து வரும். தேவனுடைய வார்த்தை இன்றைய அளவில் உள்ள செய்தித்தாள்களைவிட அதிக உண்மையுள்ளதாய் இருக்கிறது என நினைவு கூறுங்கள், இன்றைய அளவில் காணக்கூடிய ஆதாரங்களுக்கு எதிராக விசுவாசிக்கும்படி வரப்போகிற காரியங்கள் குறித்து எசேக்கியேல் கணநேர தோற்றத்தை அளித்துள்ளார். ஆகையால் வசனத்தைப் போதிப்பவர்கள், இந்த சத்தியத்தில் களிகூறுவோமாக, எல்லாவற்றிற்கும் கர்த்தரும் இயேசுக் கிறிஸ்துவின் ஜெயத்திற்கு வழிநடத்தும் சரித்திரத்தின் வழியில் ஒரு பகுதியாய் விளங்குவோமாக.

எசேக்கியேல் 38:14 – 23.

14 ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, கோகை நோக்கிச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், என் ஜனமாகிய இஸ்ரவேல் சுகமாய்க் குடியிருக்கிற அக்காலத்திலே நீ அதை அறிவாய் அல்லவோ? 15
அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள். அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து, எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள். 16 நீ தேசத்தைக்
கார்மேகம் போல்மூட, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பிவருவாய், கடைசி நாட்களிலே இது சம்பவிக்கும். கோகே, ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உன்மூலமாய் நான் பரிசுத்தர் என்று விளங்கப்படுகிறதினால் அவர்கள் என்னை அறியும்படிக்கு உன்னை என் தேசத்துக்கு விரோதமாக வரப்பண்ணுவேன். 17
உன்னை அவர்களுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன் என்று பூர்வநாட்களிலே அநேக வருஷகாலமாய்த் தீர்க்கதரிசிகளான என் ஊழியக்காரரைக்கொண்டு அந்நாட்களிலே நான்

குறித்துச்சொன்னவன் நீ அல்லவோ என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். 18 இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாகக் கோகு வரும்காலத்தில் என் உக்கிரம் என் நாசியில் ஏறுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். 19 அந்நாளிலே இஸ்ரவேல் தேசத்திலே பெரிய அதிர்ச்சி உண்டாகி, 20 என் பிரசன்னத்தினால் சமுத்திரத்து மச்சங்களும், ஆகாயத்துப்பறவைகளும், வெளியின் மிருகங்களும், தரையில் ஊருகிற சகல பிராணிகளும், தேசமெங்குமுள்ள சகல நரஜீவன்களும் அதிரும். பர்வதங்கள் இடியவும் செங்குத்தானவைகள் விழும். எல்லா மதில்களும் தரையிலே விழுந்துபோம் என்று என் எரிச்சலினாலும் என் சினத்தின் அக்கினியினாலும் நிச்சயமாய்ச்சொல்லுகிறேன். 21 என் எல்லா மலைகளிலும் பட்டயத்தை அவனுக்கு விரோதமாக வரவழைப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் அவனவன் பட்டயம் அவனவன் சகோதரனுக்கு விரோதமாயிருக்கும். 22 கொள்ளை நோயினாலும் இரத்தம் சிந்துதலினாலும் நான் அவனோடே வழக்காடி அவன் மேலும் அவன் இராணுவங்களின்மேலும் அவனோடிருக்கும் திரளான ஜனங்களின்மேலும் வெள்ளமாய் அடிக்கும் மழையையும் பெருங்கல் மழையையும், அக்கினியையும், கந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணுவேன். 23 இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள்.

பிரதிபலிப்பு:

14 ஆகையால் மனுபுத்திரனே, நீ தீர்க்கதரிசனம் உரைத்து, கோகை நோக்கிச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், என் ஜனமாகிய இஸ்ரவேல் சுகமாய்க் குடியிருக்கிற அக்காலத்திலே நீ அதை அறிவாய் அல்லவோ? 15 அப்பொழுது நீயும் உன்னுடனேகூடத் திரளான ஜனங்களும் வடதிசையிலுள்ள உன் ஸ்தானத்திலிருந்து வருவீர்கள். அவர்கள் பெரிய கூட்டமும் திரளான சேனையுமாயிருந்து, எல்லாரும் குதிரைகளின்மேல் ஏறுகிறவர்களாயிருப்பார்கள்.

கோகுவின் படையெடுப்பால் முழுமையான அளவிலான தீமைகளைக் கண்டு கொண்டு இருக்கும்போது, தீர்க்கதரிசி ஒரு செய்தியை அவர்களுக்கு அளிக்கிறவராய் இருக்கிறார். இப்பொழுது கனப்பொழுது இடைவெளிக்குப் பின்னர் இது பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது சில ஆண்டுகள் கடந்த பின்னர் இவைகளை மறுபடியும் 2013 - 2016 திருப்ப வேண்டியிருக்கும், இது மகா உபத்திரகாலத்திற்கும் மற்றும் ஆயிரவருட

அரசாட்சிக்கும் முன்னதாய் நடைபெற வேண்டியதாய் இருக்கிறது. இருப்பினும் எசேக்கியேல், குறைந்த பட்சம் 2600 ஆண்டுகளுக்கு முன்னர் தாக்குதல் நடத்துபவர்களுக்கு இச்செய்தியானது அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. தேவனுடைய கிருபையானது இதில் காணப்படுகிறதாய் இருக்கிறது, அவரது திட்டம் ஜெயப்பிரதமாய் காணப்படுகிறது. தேவனுடைய கிருபையானது இந்த மக்கள் இரட்சிப்படைய தேடுகிறதாய் இருக்கிறது, இருப்பினும் அவர்களது தீமையில் அநேகர் மரித்து போகிறவர்களாய் இருக்கின்றனர்.

சுவிஷேசமானது இந்த பின்தங்கிய கலப்பின சன்னி மற்றும் ஷைட் பிராந்தியங்களில் சமீப வருடங்களில் விரிவாக்கப்பட்டுள்ளது, இந்த தீமையான படையெடுப்பு அநேகரை இரட்சிப்புக்கு ஏதுவாக வழிநடத்துகிறதாய் இருக்கிறது "கர்த்தருடைய வார்த்தை அவரிடத்திற்கு வெறுமையாய் திரும்புகிறதில்லை" ஏசாயா 55:11. இந்த படையெடுப்பில் இணைந்து கொள்ள அழைப்பு கொடுக்கப்படுகிறது இந்த அழைப்பானது அந்த பிராந்தியங்களில் உள்ள மக்களுக்கு அதன தலைவர்களால் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது, சிலர் இணைந்து கொள்ள, மற்றவர்கள் தேவனது வார்த்தைக்கு செவிகொடுத்து அதற்கு உட்படுவதிலிருந்து விலகிக்கொள்கிறவர்களாய் காணப்படுகின்றனர். இணைந்த அனைவரும் மரிக்க, விலகிக்கொண்டவர்கள் ஜீவிக்கிறவர்களானார்கள்.

இது கர்த்தர் தமது நித்திய திட்டமாய் சரியான ஒன்றாய் நினைவு படுத்துகிறவராய் இருக்கிறார். அவர் ஒருவரே ஜெயம் கொள்வோரையும் தோல்வி அடைவோரையும் தீர்மானிக்கிறவராய் இருக்கிறார், மற்றும் தேவனோடு உள்ள தன்னார்வ உறவுகளையும் ஏற்படுத்துகிறவராய் இருக்கிறார். இந்த ஜனங்கள் எண்ணிக்கொள்வது தாங்கள் அநேகர் மற்றும் வல்லமை பொருந்தியவர்கள் என்று, இருப்பினும் 2600 ஆண்டுகளுக்கு முன்னான தீர்க்கதரிசி அவர்களுக்கு குற்றத் தீர்ப்பளிக்கிறவராய் இருக்கிறார். இந்த வல்லமையை காண்கிறவர்களாய் இருக்கிறீர்களா? இது தேவனுடைய குணாதிசயம் மற்றும் அவரது திட்டம் குறித்த பிரதிபலிப்பாய் இருக்கிறது. அவரது ஏகாதிபதித்துவம், மற்றும் அவரது இரக்கம் அன்பு இவைகளை விளங்கப்பண்ணுகிறவராய் இருக்கிறார், இந்த ஜனங்களை நீண்ட காலமாய் எச்சரிப்பதை இது சுட்டிக்காட்டி, அன்பு சத்தியம் போன்றவை முறிக்கப்பட்டு தேவனது வார்த்தை புறக்கணிக்கப்பட்டு அவரது திட்டம் முறியடிக்கப்படுகிறதாய் இருக்கிறது. அவர்கள் அனைவரும் தேவனது சிங்காசனத்திற்கு முன் மன்னிப்பின்றி நிற்கிறவர்களாய் இருக்கின்றனர். வெளிப்படுத்தல் 20:11-15.

16 நீ தேசத்தைக் கார்மேகம் போல்மூட, என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பிவருவாய், கடைசி நாட்களிலே இது சம்பவிக்கும். கோகே, ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உன்மூலமாய் நான் பரிசுத்தர் என்று விளங்கப்படுகிறதினால் அவர்கள் என்னை அறியும்படிக்கு உன்னை என் தேசத்துக்கு விரோதமாக வரப்பண்ணுவேன்.

அவர்கள் உண்மையில் இஸ்ரவேல் மக்கள் மீதும் மற்றும் தேவனாகிய கர்த்தரின் தேசத்தின் மீதும் தாக்குதல் நடத்துகிறவர்களாய் காணப்படுகின்றனர், அவர்கள் தாக்குதல் நடத்தும் காலம் "கடைசி நாட்கள்" எனக்குறிப்பிடப்படுகிறது, இது மகா உபத்திரவ காலத்திற்கு முன் இதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் என அர்த்தம் செய்யப்படுகிறது. அவ்ர்கள் மகா திரளான கூட்டமாய் அரேபிய தேசத்திற்கும் மற்றும் இஸ்ரவேலுக்கும் விரோதமாய் வருவார்கள், அவர்கள் முன்னேறும்போது எதிர்க்கிறவர்கள் அனைவரையும் இவர்கள் கொலை செய்வார்கள். இந்த ஜனங்கள் இஸ்ரவேலரை வெறுக்கிறவர்களாய் இருப்பார்கள் மற்றும் அவர்கள் ஐசுவரியமுள்ள, ஜெயசாலிகளாய் இருக்கும் நவீன கால அரேபியரையும் வெறுப்பார்கள். இது சாத்தான் தீங்கிழைக்கும்படி அவர்களை உந்தி தள்ளுவதாய் இருந்தது. அவர்களது சாத்தானின் தீங்கிழைக்கும் காரியமானது ஆபிரகாமின் குமாரர்களை ஒன்று சேர்க்கிறதாய் இருந்தது, அவர்களுக்குள் அந்த நாட்களில் ஒற்றுமையைக் கொண்டு வந்தது.

அரேபிய மக்கள் ஆபிரகாமின் குமாரர்களாய் இருந்து எருசலேமிற்கு செல்லும் வழியை குறிவைக்கிறவர்களாய் இருந்தனர், அவர்கள் ஆபிரகாமின்மூலம் தேவனது பராமரிப்புக்கு உட்பட்டனர், இவ்வாறு அரேபிய தேசங்கள் இஸ்ரவேலருக்கு ஆதரவாய் இருந்து, கர்த்தரது பாதுகாப்பில் பிரவேசிக்கிறவர்களாய் காணப்பட்டனர். ஆபிரகாமிற்கு பாதுகாப்புகருதி அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் அரேபியர்களுக்கும் மற்றும் யூதர்களுக்கும் பொருந்தக்கூடியதாய் இருந்தது, இது ஆபிரகாமின் அனைத்து சந்ததியினருக்கும் பொருந்தக்கூடியதாய் இருந்தது. (இஸ்மவேல், ஈசாக்கு, மற்றும் கேத்தூராளின் குமாரர் அனைவருக்கும்) இவர்கள் அனைவரும் ஆபிரகாமின் அரையிலிருந்து தோன்றினவர்கள், இவர்களுக்கும் வாக்குத்தத்தம் பொருந்தக் கூடியதாய் இருந்தது. ஆதியாகமம் 12:2-3, 12:7-9, 13:14-17, 15:1-7.

கர்த்தர் தாக்குதல் செய்பவர்களுக்கு எவ்வித தெரிவு செய்தலையும் அளிக்காமல், அவர்கள் அவரது ஜனங்கள் மீதான வெறுப்பை வெளிப்படுத்தி யுத்தம் செய்கிறவர்களாய் காணப்பட்டனர். அவர்கள் மாய்மாலத்தை பயன்படுத்துவதை மறுதலித்தனர், அவர்கள் ஒரு போதும் இருவிதமாய் பேசவில்லை, அவர்கள் தங்களது தாக்குதல்களில்

ஈடுபட்டனர், மனந்திருந்துவதற்குப் பதில், இஸ்ரவேல் தேசத்தின் புரதான எல்லைகளில் உள்ளவர்களை துடைத்துப்போடுகிறவர்களாய் காணப்பட்டனர்.

அவர்கள் யூதமக்களை அழித்துவிட முயன்றனர், அவர்கள் ஐசுவரியமிக்க நவீனகால அரேபியர் மீது கோபங்கொண்டு அவர்களையும் கூட வெறுத்தனர், ஆனால் கர்த்தர் அத்தகைய தீமையின் மூலம் அவர்களை பரிசுத்தமாக்குகிறவராய் இருப்பார். அவர்கள் கர்த்தரின் மகிமையைக் காண்பார்கள் மற்றும் முழு உலகிலும் யூதரல்லாதோர்/அரேபிய மக்கள் தேவனே கர்த்தர் எனக் காண்பார்கள், மற்றும் "புறஜாதிகள்" கலகமானது நிச்சயமாக அவர்கள் மீது தேவனது நியாயத்தீர்ப்பாக அறியப்படுகிறது. தீமையான மனிதர்கள் சுற்றிலும் பார்த்து மற்றும் அவர்கள் வல்லமையுள்ள இராணுவத்தைக் காண்பார்கள், அவர்கள் மற்றவர்களை அறிந்து கொண்டு, அவர்களை எதிர்க்கும்படி ஒன்று கூடுகிறவர்களாய் இருப்பர். ஆனால் அவர்கள் போதிய அளவு தயவு பெற்று சற்று நேரத்திற்கு முன் மேற்கத்திய படைகள் வந்து சேர்ந்தவுடன், அவர்கள் கெடுதல் செய்ய மற்றும் வெறுக்கிறவர்கள் மீது கொலை வெறியுடன் காணப்பட்டனர்.

தீமையான மனிதர் அவர்களது பரந்த ஜனக்கூட்டத்தைக் கண்டனர் மற்றும் தங்கள் பகைமை எண்ணத்தையும் மற்றும் வல்லமையையும் நம்பினர். ஆனால் அவர்கள் அண்டசராசரத்தின் சிருஷ்டிக் கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம் செய்வதை நினைவு கூறவில்லை, அவர் கடந்தகால நித்தியத்தின் திட்டத்தினை உடையவராய் இருந்தார். கர்த்த்ர் இந்த படையெடுப்பின் மூலம் தமது நாமத்தை மகிமைபடுத்துகிறவராய் இருந்தார். அவர் அல்பாவும் ஒமேகாவுமாய் இருக்கிறார். ஆரம்பமும் முடிவும், மற்றும் அவர் முடிவில் அவரது திட்டமும் மற்றும் சூழ்ச்சிகளும் நிறைவேறச் செய்கிறவராய் இருக்கிறார். எல்லாமனுக்குலமும் தேவனது வல்லமையைக் காண்கிறதாய் இருக்கும். இது தேவனது வல்லமையின் இறுதி நிருபணமாய் இருந்து அவரது திட்டம் அந்திக்கிறிஸ்துவுக்கு முன் வெளிப்பட்டு அவனை வஞ்சிப்பதாய் இருக்கும்.

17 உன்னை அவர்களுக்கு விரோதமாக வரப்பண்ணுவேன் என்று பூர்வநாட்களிலே அநேக வருஷகாலமாய்த் தீர்க்கதரிசிகளான என் ஊழியக்காரரைக்கொண்டு அந்நாட்களிலே நான் குறித்துச்சொன்னவன் நீ அல்லவோ என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். 18 இஸ்ரவேல் தேசத்துக்கு விரோதமாகக் கோகு வரும்காலத்தில் என் உக்கிரம் என் நாசியில் ஏறுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

அந்த சந்தர்ப்பத்தில் கர்த்தர் எசேக்கியேலின் நாட்களை கோகுவுக்கு நினைப்பூட்டி, அவனது சயனியங்கள் 2600 ஆண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசியை நோக்கி நகர்ந்து அவர்களது விதியை அறிவிக்கிறதாய் இருக்கும். எல்லா இஸ்லாமியரும் எசேக்கியேலைக் கனப்படுத்தி அந்த தேசத்தை முற்றுகையிடும், இந்த படையெடுப்பில் தீர்க்கதரிசியையும் மற்றும் இந்த செய்தியை அளித்த தேவனையும் உதாசீனப்படுத்துவார்கள். அவர் அவர்களுக்கு நிச்சயப்படுத்தி அவர்களது விதியானது அவர்களது படையெடுப்பில் முத்திரிக்கப்பட்டுள்ளது என்பதை விளங்கப்பண்ணுவார், அந்த விதியானது கர்த்தரின் சித்தத்திற்கு விரோதமாய் கலகம் செய்கிறதாய் இருந்து, அவர்து ஜனங்களுக்கு எதிராய் முற்றுகையிடுகிறதாய் இருக்கும்.

அரேபிய உலகம் சொல்லுகிறது போல, "இது எழுதப்பட்டிருக்கிறது" -- இப்படிப்பட்ட தீமை செய்யும் மனிதருக்கு நம்பிக்கை இல்லாது, தேவனது திட்டம் எசேக்கியேல் மூலம் வெளிப்பட்டு அவர்கள் தோல்வி அடைவார்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து மறைந்து கொள்ளவோ, தப்பித்துக்கொள்ளவோ இயலாது. அவர் அண்டசராசரத்தை உருவாக்கி படைத்தவராய் இருக்கிறார். எல்லா தீர்க்கதரிசிகளும் கர்த்தரின் நியாயத்தீர்ப்பை பதிவு செய்துள்ளார்கள். ஆனால் இந்தபடையெடுப்பானது தாக்குதல் செய்வோருக்கு பயங்கரமான நியாயத்தீர்ப்பை அறுவடை செய்கிறதாய் இருக்கும், ஆனால் மனிதத் தீமை இறுதி செயல்பாட்டின் அனைத்துத் துண்டுகளையும் ஒன்றாய் இணைக்கிறதாய் இருக்கும், அது மகா உபத்திரவ காலத்தின் செயல்பாடாய் இருக்கும். கோகு வரவிருக்கும் அந்திக்கிறிஸ்துவின் மற்றொரு பிரதிபலிப்பாய் இருந்து, இருவரும் தேவனால் பிளியப்படுகிறவர்களாய் இருப்பர்.

19 அந்நாளிலே இஸ்ரவேல் தேசத்திலே பெரிய அதிர்ச்சி உண்டாகி, 20 என் பிரசன்னத்தினால் சமுத்திரத்து மச்சங்களும், ஆகாயத்துப்பறவைகளும், வெளியின் மிருகங்களும், தரையில் ஊருகிற சகல பிராணிகளும், தேசமெங்குமுள்ள சகல நரஜீவன்களும் அதிரும். பர்வதங்கள் இடியவும் செங்குத்தானவைகள் விழும். எல்லா மதில்களும் தரையிலே விழுந்துபோம் என்று என் எரிச்சலினாலும் என் சினத்தின் அக்கினியினாலும் நிச்சயமாய்ச்சொல்லுகிறேன்.

கோகு இராணுவத்தின்மீதான நியாயத்தீர்ப்பின் ஆரம்பம், இஸ்ரவேல் தேசத்தின் ஒவ்வொரு மதிலும் தேவனால் அசைக்கப்படும். மிகவும் சக்தி வாய்ந்த (9+) பூமி அதிர்ச்சி உண்டாகும். இதனால் பெரியமசூதி மற்றும் 16ம் நூற்றாண்டின் எருசலேமின் சுவர்கள் இடிந்து விழும். தேச முழுமையும் கட்டிடங்களும், சுவர்களும் தரைமட்டம் ஆகும், இச்சம்பவம்

எதிராளியின் இராணுவம் நுழைவதற்கு முன்னதாய் நிகழும். பூமிஅதிர்ச்சியானது இஸ்ரவேலில் மையங்கொண்டிருக்கும், ஆனால் சூழ உள்ள மத்திய கிழக்கு நாடுகள் விழுந்து போம், இது இன்னும் விரிவாய் செல்லலாம் -- இந்த நிகழ்வு இங்கு தோன்றும் போது, மகா உபத்திர காலத்தின் முன்நிகழ்வுகள் தோன்றும். -- தேவனின்றி இருக்கும் மனிதருக்கு "வருத்தங்கள் ஆரம்பமாகும்" தேசத்தின் ஒவ்வொரு பகுதியிலும், கட்டிடங்களின் அஸ்திபாரங்கள் அசைக்கப்பட்டு, அநேகம் விழுந்து போம். பின்னர் எசேக்கியேல் கூறும்போது "சமுத்திரத்தின்தீவுகள்" கூட நியாயந்தீர்க்கப்படும், அது பூமிஅதிர்ச்சியினால் உண்டான சுனாமியாய் இருக்கும்.

இரட்சிக்கப்பட்ட மக்கள் இதில் பாதுகாப்புடன் இருப்பர், ஆனால் தற்கால பிரபஞ்சத்தின் இறுதிகட்ட மனித சரித்திரத்திற்குள் நுழைகிறவர்களாய் இருப்பர். இந்த பூமிஅதிர்ச்சியானது இஸ்ரவேலில் இரட்சிப்படையாத யூதமக்களுக்கு ஒரு அடையாளமாய் இருக்கும். பூமியில் இரட்சிப்படைந்தோருக்கு இது ஒரு நினைவுகூறுதலாய் இருக்கும், இந்த பூமியானது இறுதியாய் தகர்ச்சி அடைந்து, புதிய ஒன்று சிருஷ்டிக்கப்படும், இரட்சிக்கப்பட்ட அனைவரும் புதிய ஒன்றில் பிரவேசிப்பவர்களாயிருப்பர். 2பேதுரு 3:9-18. பூமியதிர்ச்சியானது பாதுகாப்பை எளிதாக்குகிறதாய் இருக்கும், பூமி அதிர்ச்சி நல்ல பாதுகாப்பை ஏற்படுத்தும். இது தாக்குதல் நடத்துவோருக்கு அவர்களது பணியை கடினமானதாக்கும், பாதுகாப்போரின் பணியானது எளிதாய் அமையும். பூமியதிர்ச்சியானது எதிராளிகள் முன்னேறுவதை தீவிரமாய் தடைசெய்யும், சாலைகள் தகர்ந்து காணப்படும், மலைகள் பூமி அதிர்வால் நிலைகுலைந்து காணப்படும். வாங்குகிற நேரத்தில் மேற்கத்திய வல்லமைகள் வந்து சேரும்.

21 என் எல்லா மலைகளிலும் பட்டயத்தை அவனுக்கு விரோதமாக வரவழைப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் அவனவன் பட்டயம் அவனவன் சகோதரனுக்கு விரோதமாயிருக்கும்.
22 கொள்ளை நோயினாலும் இரத்தம் சிந்துதலினாலும் நான் அவனோடே வழக்காடி அவன் மேலும் அவன் இராணுவங்களின்மேலும் அவனோடிருக்கும் திரளான ஜனங்களின்மேலும் வெள்ளமாய் அடிக்கும் மழையையும் பெருங்கல் மழையையும், அக்கினியையும், கந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணுவேன். 23 இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள்.

தாக்குதல் நடத்துபவரின் மீது யுத்தம் அறிவிக்கப்பட்டிருந்தது, முழு ஜனத்தொகையும் தாக்கப்பட்ட தேசத்தில் கைதுசெய்யப்பட்டருந்தனர் அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை எதிர்த்து அவருக்கு விரோதமானவர்களாய் இருந்தனர். மற்றும் தங்களது சொந்த குடும்பத்தினரையும்/ அயலகத்தாரையும் காட்டிக்கொடுக்கிறவர்களாயும் இருந்தனர். கர்த்தர்தாமே லாவா போன்ற அக்கினி கற்களை மழையாய் பொழியச்செய்கிறவராய் இருந்தார் (அநேகம் பீரங்கி படையினருக்கு அணுஆயுதங்கள் அளிக்கப்பட்டு அந்நாட்களில் அது பயன்படுத்தப்பட்டது என நான் சந்தேகிக்கிறவனாய் இருக்கிறேன்) எதிராளியின் சக்திகள், முழு இராணுவமும் சாத்தானால் ஆண்டுகொள்ளப்பட்டு படையெடுத்து சென்றவர்களாய் இருக்கிறார்கள். (அடுத்த அதிகாரம்)

மனிதரின் கால இறுதியில் கர்த்தரின் வருகைக்கு முன்னர் இப்பூமியில் இரத்தத்தில் தோய்க்கப்பட்ட நிலை காணப்படும் காரணம் இரட்சிப்படையாத மனிதரின் கலகத்தினால். இந்த "முன்குறிக்கு வகையானது" யுத்தம் இரத்தம் சிந்துதலாய் அமையும், படையெடுத்துச் சென்ற இராணுவம் அனைத்தும் கிட்டத்தட்ட எல்லோரும் அழிக்கப்பட்டு போவர். "வ்ருத்தங்களின் ஆரம்பம்" அதாவது இது நியாயத்தீர்ப்பின் ஆரம்பமாய் இருக்கும், அவர்கள் தங்கள் வாழ்வின் இறுதியில் காணப்போகும் மகா உபத்திரவமாய் இருக்கும். மத்தேயு 24:4-8. இதன் ஆரம்பம் இரு உலக மகாயுத்தத்தின் போதுள்ள படுகொலைகள் போன்றிருக்கும், 100 மில்லியன் ஜனங்களை மரணத்திற்கு வழிநடத்துவது, யுத்த கலத்தில் நிகழ்வதாய் இருக்கும். இந்த மகா மத்திய கிழக்கு நாடுகளின் யுத்தமானது மூன்றாவது உலக மகா யுத்தமாய் அமையும்.

இந்த யுத்தத்தினால் உண்டான பேரழிவு பூமியில் உள்ள அநேக மக்கள் வேதாகமத்திற்கு நேராய் திரும்ப வழிநடத்துகிறதாய் இருக்கும், நிறைவேறித்தீர்ந்த எசேக்கியேலின் வார்த்தைகளை வாசிப்பர், மற்றும் வெளிப்படுத்தின விஷேசத்தை வாசித்து நடுங்குவர். நாம் அவர்கள் பயந்து நடுங்குவதற்கு மேலாக கர்த்தரை தொழுது கொள்கிறவர்களாக நம்பிக்கையும் ஜெபிப்பவர்களாய் இருப்போம். யாக்கோபு 2:19, அப்போஸ்தலர் 4:8-12, யோவான் 3:16. இந்த மகா யுத்தம் மகாப்பெரிய ஊக்கப்படுத்துதலாய் மனுக்குலத்திற்கு அமையும், அவர்கள் வேதாகமத்தை வாசித்து உலகலாவிய நிலையில் மனுஷரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு காணப்படுவார்கள். நியாயத்தீர்ப்பில் மத்தியில் பெரிதான கிருபையானது மனிதருக்கு ஊக்கப்படுத்துதலாய் அமையும் இதனால் தேவனது திட்டத்தை அவர்கள் காண்கிறவர்களாய் இருப்பர், மற்றும் அதின் வெளிப்பாடுகள் கடந்த கால யுகங்களில் நிகழ்ந்துள்ளது.

கர்த்தரே எல்லாருக்கும் மெய்யான தேவன் என்று எல்லோரும் அறிந்து கொள்கிறவர்களாய் இருப்பர், இந்த பூமியின் மீது மனிதரின் தீமையான சரித்திர செயல்கள் ஏதோ ஒரு வகையில் செயல்படுகிறதாய் இருக்கிறது, நமக்கு வெளிப்படுத்தப்படவில்லை, அல்லது அந்த சந்தர்ப்பத்தில் தீர்க்கதரிசியினால் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது, இந்த படையெடுப்பு யுத்தத்திற்கு ஆயத்தமாகிறதாய் இருக்கிறது, மகா உபத்திர காலத்தில் தீவிரமான சுவிஷேசம் அறிவிக்கிறதாய் இருக்கும் மற்றும் அந்திக்கிறிஸ்துவாகிய ஒரு உலக ஆளுநரை ஏற்றுக்கொள்வதாய் இருக்கும். மனுக்குலத்தின் தேவைக்கேற்ப கடவுளைக் குறித்து இருவகையில் பிரிக்கப்படுவதாய் இருக்கும். முதற்படியாக பிந்தின இரட்சிப்புக்கு வழிநடத்துகிறதாய் இருக்கும், 144,000 யூத சுவிஷேசர்கள் மகா உபத்திரவ காலத்தின் போது சாட்சி பகருவர். வெளிப்படுத்தல் 7:1-3. இந்நிகழ்வு இஸ்ரவேலருக்குள் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்துகிறதாய் இருக்கும், கறைபடிந்த தலைமைத்துவம் ஒப்பந்தத்தின் அவசியத்தை விசுவாசிப்பர், இது அந்திக்கிறிஸ்து அவர்களுடன் செய்யும் ஒப்பந்தமாய் இருக்கும்.

இந்த நிகழ்வுகள் தேவாலயத்தை திரும்ப கட்ட வழிநடத்துகிறதாய் இருக்கும் மற்றும் சமாதான உடன்படிக்கை செய்து விஷேசமாய் சன்னி அரேபியர் மற்றும் யூதர்கள் இடையே சமாதான உடன்படிக்கை செய்யப்படும். இந்த தரிசனத்தில் இன்னும் வெளிக்கு வராத அநேக நிகழ்வுகளைக் காண்கிறோம், ஆனால் இது வெளிக்கு வராத காலத்தில், கர்த்தரது தெய்வீக தீர்க்கதரிசிகள் மற்றும் பிரசங்கிகள் காண்கிறவர்களாயிருந்து மற்றும் பிரசங்கம் செய்து, பின்னர் அவர்கள் கண்கள் திறக்கும்படி செய்வர். எபேசியர் 2:4-13. தேவன் அழிவிலிருந்து மகிமையை கொண்டு வருவார். ரோமர் 8:28.

போதக கைக்கொள்ளுதல்:

1. தேவனின் முன்னறிவானது இந்த தீர்க்கதரிசனத்தில் காணப்படுகிறது: குறைந்த பட்சம் 2600 ஆண்டுகளுக்கு முன்னர் இது நிகழ்ந்தது, கோகு மற்றும் மாகோகு மற்றும் அவர்களுடன் கூட்டுச்சேர்ந்த நாடுகள் குறித்து முழுமையாய் முன்னறிவிக்கப்பட்டு இருக்கிறது. தேவனுடைய கிருபையானது அவர்களது இராணுவத்திலும் மற்றும் அரேபியர் மற்றும் யூதர்கள் இராணுவத்திலும் அவரது திட்டத்திற்கு எதிராய் எவ்வித கலகத்திலும் ஈடுபடவில்லை. தேவ மக்களாகிய இஸ்ரவேலருக்கு எதிராக முற்றுகையிட்ட அனைவரும் நியாயந்தீர்க்கப்பட்டனர். தேவனுக்கு எதிரான இந்த கலகமானது தெளிவான திட்டமும் மற்றும் முழுமையான

நோக்கமும் மற்றும் இறுதி எச்சரிப்புமாய் இருந்தது. இது இரட்சிப்படையாதோர் மகா உபத்திர்வகாலத்தில் காணக்கூடிய ஆதாரமாய் இருக்கும். இஸ்ரவேல் மீது தாக்குதல் நடத்துவது முறைகேடான காரியமாய் இருக்கும். இது ஆதாரங்களுக்கு ஒரு சிறு துணிக்கையாய் இருந்து, அநேகர் இரட்சிப்படைவதற்கு மகா உபத்திரவகாலத்தின் மிகக் கொடிகாலத்தில் வழிநடத்துகிறதாய் இருக்கும். தேவன் இந்த சமயத்தில் அச்சம் நிறைந்த சூழலை மாற்றி மகிமைக்கேதுவாய் மாறப்பண்ணுவார், சாபம் ஆசீர்வாதமாய் மாறும் கர்த்தரை ஏற்றுக்கொண்டோருக்கு இது சாத்தியமாகும்.

2. மனிதரின் கால இறுதியில் பூமியின் மீது கர்த்தரின் வருகையானது கலகம் நிறைந்த மற்றும் அழிவு நிறைந்த காலமாய் இருக்கும், ஆனால் சுவிஷேசத்திற்கான தருணமாயும் இருக்கும்: இந்த பூமியானது நித்தியம் அல்ல, மற்றும் இரட்சிப்படையாதோர், தீமை செய்யும் கலகக்காரருக்குரியதும் அல்ல, அவர்கள் அனைவரும் இப்புமியின் இறுதிகாலத்தில் அழிந்து போவர். சாத்தானும் அவனை பின்பற்றியோர் அனைவரும் தற்கால உலகுடன் கட்டப்படுவர், அவர்களது வல்லமை மற்றும் அவர்களது ஆதிக்கம் முடிவுக்கு வரும், காலம் இடம் போன்றவையும் முடிவுக்கு வரும். புதிய உலகில் நீதி மட்டும் வாசம் செய்யும். தேவனை வெறுத்தவர்கள் நித்திய நியாத்தீர்ப்படைந்து "அக்கினிக் கடலில்" பங்கடைவர், அவரது மக்கள் புதிய சிருஷ்டிப்பில் பங்கு பெறுவர். வெளிப்படுத்தல் 21:4, 8, 27.

இந்த பூமியில் தற்கால மனிதனின் இறுதி காலத்தில், கர்த்தரின் வருகைக்கு முன்னர் மகா கொடிய கொலைபாதகங்களும் வருத்தங்களும் உண்டாகும், இரட்சிக்கப்பட்ட மனுக்குலம் அனைத்தும் பழைய பாவம் நிறைந்த பூமிக்கு இறுதி வணக்கம் சொல்ல ஆயத்தமாய் இருக்கும். நாம் இன்னும் இப்பூமியில் அன்பு கூறுகிறவர்களாய் இருக்கிறோம், மகா உபத்திர காலத்தின் நிகழ்வுகளுக்கு வழிநடத்தப்படும் போது, அந்தியகாலத்தில் இரட்சிக்கப்பட்ட மனுக்குலம் அனைத்தையும் அகற்றிவிடும். ஆயிரவருட அரசாட்சியின் இறுதியில் இவ்வுலகமானது அழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய மகா சிருஷ்டிப்பானது உருவாகும். 2 பேதுரு 3:10-18, வெளிப்படுத்தல் 21-22.

TOPICS தலைப்புகள்:

GOD – DIVINE INSTITUTIONS - FREEWILL தேவன் -- தெய்வீக நிறுவனங்கள் - சுயசித்தம்.

HEART இருதயம் PHARAOH – GOD'S POWER பார்வோன் -- தேவனின் வல்லமை.

NOTES குறிப்புகள்

<u>எசேக்கியேல் அதிகாரம் 39</u>

எசேக்கியேல் 39:1- 10.

**1 இப்போதும் மனுபுத்திரனே, நீ கோகுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ நான் உனக்கு விரோதமாக வருகிறேன்.
2 நான் உன்னைத் திருப்பி உன்னை ஆறு துறடுகளால் இழுத்து, உன்னை வடபுறங்களிலிருந்து எழுப்பவும் இஸ்ரவேல் மலைகளில் வரவும் பண்ணி,
3 உன் வில்லை உன் இடதுகையிலிருந்து தட்டிவிட்டு, உன் அம்புகளை உன் வலதுகையிலிருந்து விழப்பண்ணுவேன்.
4 நீயும் உன் எல்லா இராணுவங்களும் உன்னோடிருக்கிற ஜனங்களும் இஸ்ரவேல் மலைகளில் விழுவீர்கள். உராய்ஞ்சுகிற சகலவித பட்சிகளுக்கும் வெளியின் மிருகங்களுக்கும் உன்னை இரையாகக் கொடுப்பேன்.
5 விசாலமான வெளியில் விழுவாய், நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.
6 நான் மாகோகிடத்திலும், தீவுகளில் நிர்விசாரமாய்க் குடியிருக்கிறவர்களிடத்திலும் அக்கினியை அனுப்புவேன். அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள்.
7 இவ்விதமாய் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே என் பரிசுத்தநாமத்தைத் தெரிவிப்பேன். என் பரிசுத்த நாமத்தை இனி பரிசுத்தக்குலைச்சலாக்கவொட்டேன். அதினால் நான் இஸ்ரவேலில் பரிசுத்தராகிய கர்த்தர் என்று பறஜாதிகள் அறிந்து கொள்வார்கள்.
8 இதோ, அது வந்தது, அது சம்பவித்தது என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். நான் சொன்ன நாள் இதுவே.
9 இஸ்ரவேல் பட்டணங்களின் குடிகள் வெளியே போய், கேடகங்களும், பரிசைகளும், வில்லுகளும், அம்புகளும், வளைதடிகளும், ஈட்டிகளுமாகிய ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள், ஏழு வருடம் அவைகளை எடுத்து எரிப்பார்கள்.
10 அவர்கள் வெளியிலிருந்து விறகு கொண்டுவராமலும் காடுகளில் வேட்டாமலும், ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள். அவர்கள்**

தங்களைக் கொள்ளையிட்டவர்களைக் கொள்ளையிட்டு, தங்களை சூறையாடினவர்களைச் சூறையாடுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

பிரதிபலிப்பு:

1 இப்போதும் மனுபுத்திரனே, நீ கோகுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் உரைத்துச் சொல்லவேண்டியது என்னவென்றால்: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார், மேசேக் தூபால் ஜாதிகளின் அதிபதியாகிய கோகே, இதோ நான் உனக்கு விரோதமாக வருகிறேன். 2 நான் உன்னைத் திருப்பி உன்னை ஆறு துறடுகளால் இழுத்து, உன்னை வடபுறங்களிலிருந்து எழுப்பவும் இஸ்ரவேல் மலைகளில் வரவும் பண்ணி,

வசனங்கள் 1-20ல் கோகின் மீதான நியாயத்தீர்ப்பு குறித்து அடங்கியுள்ளது. தீர்க்கதரிசியானவர் திரும்பக்கூறுவதன் மூலம் ஏன் தனது "பவுடரை விரயம்" செய்துள்ளார்? நிச்சயமாய் இந்த அதிகாரத்தை படிக்கும்போது, அவர் ஒரு முறை சொன்னதை ஒருமுறை மட்டுமே சொல்லியிருக்க வேண்டுமல்லவா? நம்மனைவருக்கும் இது ஒரு சவாலாக அமைந்து முக்கியமான செய்தியை திரும்ப சில மாற்றங்களுடன் கூறுவது இருக்கிறது அது சத்தியத்தை அழுத்தம் திருத்தமாய் கூறுவதாய் இருக்கிறது. வலுகட்டாயமாய் திரும்பக்கூறுவது, மக்களை நிந்திப்பதற்காக அல்ல, அவர்களை கனப்படுத்தவே அவ்வாறு கூறுகிறோம், அவர்களது வாக்குறுதியை கவனமாய் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு பலமுறை தருணங்களை அளிக்கிறவர்களாய் இருக்கிறோம் அதன் மூலம் அவர்கள் சத்தியத்திற்கு கடந்து வரவும் அவர்கள் விடுவிக்கப்படவும் செய்கிறவர்களாய் இருக்கிறோம். தேவன் கிருபையுள்ளவராய் இருந்து, அவரது வார்த்தையின் மூலம் எப்பொழுதும் இரட்சிப்புக்கு வழிநடத்தி மரணபரியந்தம் அவ்வாறு செய்கிறவராய் இருக்கிறார். இந்த தீர்க்கதரிசன வார்த்தையின் மிக முக்கியமான காரியங்களை திரும்ப கூறுவதன் மூலம் கோடிட்டு காட்டப்படுகிறது.

இங்கு தீமையான இராணுவத்திற்கு தப்பினவர்களின் சரியான எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது..கர்த்தர் எதிரியின் இராணுவத்தை இஸ்ரவேல் மலைகள் வழியாக கொண்டு வருவார். அங்கு அவர்கள் தோற்கடிக்கப்படுவர், படையெடுத்து வந்த இராணுவத்தில்1/6th மட்டுமே மீந்து இருப்பர். இப்பொழுது இந்த வேதபகுதியில் 1/6th பகுதியினர் மீந்திருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது, இது ஒரு கேள்வி நிறைந்த வேதபகுதியாய் இருக்கிறது, தீமையான இராணுவத்தினரும், கொலையாளிகளும், கொள்ளையிட்டவர்களில் ஒருவரும்

மீந்திருக்கவில்லை. மீந்திருப்பவர்கள் என்போர் யார்? அவர்களுக்குள் மீந்திருந்த இவர்கள் விசுவாசிகளா, இராணுவத்துடன் செல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டவர்கள், அவர்கள் பாரம் சுமக்க பயிற்சி பெற்ற வேலைக்காரர்கள் மட்டுமே அல்லது அவர்கள் மனந்திருந்தியவர்கள் மற்றும் பின்னடைந்தவர்களா?

நாம் அறியோம், ஆனால் தேவ நீதியின்படி இவர்கள் மீந்திருப்பவர்கள் பல தரப்பட்டவர்களில் ஒருவராய் இருப்பர் என்பது திண்ணம். இரண்டாம் சங்கீதத்தில் இக்காலத்து மக்கள் இஸ்ரவேல் ஜனங்கள் எனக்குறிப்பிடப்படுகின்றனர் சங்கீதம் 40:14-17, 68:1-4. ஏசாயா 37:27-29. ஐ ஒப்பிட்டு பார்க்க. வல்லமை பொருந்திய வழியில் இந்த நிகழ்வுகள் இஸ்ரவேலருக்கு சுவிஷேசம் அறிவிக்கப்படுவதைக்காட்டுகிறது, மகா உபத்திரவகாலத்தின் போது சுவிஷேசம் அறிவிக்கப்படும் மக்களைக் காட்டுகிறதாய் இருக்கிறது. சகரியா 12:10ff. மற்றொரு காரியம் இதன் பிரதிபலிப்பாய் விளங்குவது, இதை இனங்கண்டுகொள்ளும் வகையில் "இஸ்ரவேலின் மலைகள்" என்னும் வாக்கியமாகும். உங்களது வேதாகம தேச வரைபடத்தைப் பாருங்கள், நவீன கால வரைபடத்தை அல்ல. தாவீது மற்றும் சாலமோன் இராஜ்ஜியங்கள் காலத்தில் "இஸ்ரவேலின் மலைகள்" என்பது யோர்தான், லெபனோன், மற்றும் சிரியா போன்ற பகுதிகளை குறிக்கிறதாய் இருக்கும். இதைத் தொடர்ந்துள்ள எசேக்கியேல் அதிகாரங்களில் தீர்க்கதரிசன கிரியைகள் இஸ்ரவேலின் மீது பெரிய அளவில் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது.

3 உன் வில்லை உன் இடதுகையிலிருந்து தட்டிவிட்டு, உன் அம்புகளை உன் வலதுகையிலிருந்து விழ்ப்பண்ணுவேன். 4 நீயும் உன் எல்லா இராணுவங்களும் உன்னோடிருக்கிற ஜனங்களும் இஸ்ரவேல் மலைகளில் விழுவீர்கள். உராய்ஞ்சுகிற சகலவித பட்சிகளுக்கும் வெளியின் மிருகங்களுக்கும் உன்னை இரையாகக் கொடுப்பேன்.

அவர்களது ஆயுதங்கள் அவர்களது கையிலிருந்து தட்டிவிடப்படும், அவர்கள் பழுத்த பழங்களைப் போல தரையில் விழுவார்கள். அவர்களது சரீரங்கள் மலைகளின் மீது விழுந்து போகும், தேவனது நியாயத்தீர்ப்பின் படி ஆப்ரிக்காவின் மற்றும் அரேபியாவின் பறவைகள் ஒன்று கூடி அவர்களைப் பீறிப்போடும். யூத மக்கள் மற்றும் அவர்களது அரேபிய ஆதரவாளர்கள் இந்த சமயத்தில் கொடூரமான படையெடுப்பையும் மற்றும் அவர்களது படுகொலைகளையும் காண்பார்கள். கர்த்தர் பெரும்பாலான மக்களை இக்கொடிய வழியில் அகற்றிப்போடுவார், மலைகளில் உள்ளவர்கள் அகற்றப்பட்டு படையெடுத்து வந்தவர்களின் மரணவயல்களாகும். சங்கீதம் 46:6-11, 76:1-12, ஏசாயா 34:1-8.

இந்த நியாயத்தீர்ப்பு "கர்த்தருடைய நாள்" எனப்படும். கோகின் மக்கள் நியாயந்தீர்க்கப்படுவர், ஆனால் அங்கே நின்றுவிடாமல், ஆபிரகாமின் குமாரர்களை தீய நிலையில் வெறுத்தவர்களும் நியாயந்தீர்க்கப்படுவர். கர்த்தர்தாமே இவர்களை நியாந்தீர்க்கிறவராய் இருப்பார். இறுதி சந்ததியினருக்கு தமது வல்லமை மற்றும் மாட்சிமையை விளங்கப்பண்ணுகிறவராய் இருப்பார். இது இறுதி நியாயத்தீர்ப்பாய் இருக்கும். இது மகா உபத்திரகாலத்தின் இறுதி கட்டத்தில் நிகழுவதாய் இருக்கும். எசேக்கியேலில் இந்த இரு அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் மகா நியாயத்தீர்ப்பிற்கு வழிநடத்துகிறதாயும், கர்த்தரின் வருகைக்கு முன்னால் நிகழுவதாயும் இருக்கிறது, இதில் உள்ள செய்தியானது தெளிவாய் இருக்கிறது, தீமையான கிரியைகளை செய்வோர் தப்பிக்கொள்ள இயலாது.

மகா உபத்திரவ காலமானது அநேக வழிகளில் ஆயத்தப்படுத்தப்பட்டு இந்த பெரிய படையெடுப்பால் மனுக்குலத்தில் அனைத்து இராஜ்ஜியங்களும் ஒரு முகப்பட்டு இஸ்ரவேலருக்கு விரோதமாக தேவனின் திட்டப்படி எழும்புகிறவர்களாய் இருப்பர். BTB வேதபாடத்தில் மூன்று பெரிய நியாயத்தீர்ப்புகள் குறித்து ஒற்றுமை வேற்றுமைகளை கண்டறிக. உடன்படிக்கைகள் -- நோவா காலத்து நியாயத்தீர்ப்பு -- அக்கினி ஞானஸ்நானம், கோபாக்கினையின் நாள், மற்றும் நியாயத்தீர்ப்பு. மகா வெள்ளை சிங்காசன்மும் கிறிஸ்துவும்: நமது கர்த்தரின் மறு வருகை.

5 விசாலமான வெளியில் விழுவாய், நான் இதைச் சொன்னேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். 6 நான் மாகோகிடத்திலும், தீவுகளில் நிர்விசாரமாய்க் குடியிருக்கிறவர்களிடத்திலும் அக்கினியை அனுப்புவேன். அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள். 7 இவ்விதமாய் நான் என் ஜனமாகிய இஸ்ரவேலின் நடுவிலே என் பரிசுத்தநாமத்தைத் தெரிவிப்பேன். என் பரிசுத்த நாமத்தை இனி பரிசுத்தக்குலைச்சலாக்கவொட்டேன். அதினால் நான் இஸ்ரவேலில் பரிசுத்தராகிய கர்த்தர் என்று பறஜாதிகள் அறிந்து கொள்வார்கள்.

தேவன் நியாயத்தீர்ப்பைக் குறித்து பேசியுள்ளார், அது கண்டிப்பாய் நிகழும் காரணம் கர்த்தருடைய வார்த்தை சத்தியத்தையும் நிச்சயத்தையும் வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. நியாயத்தீர்ப்பானது கோகு தேசத்தின் மீது விழும். மற்றும் மாகோகு தேசத்தின் மீதும் அதன் பட்டணங்கள் மீது விழும். இந்த தேசங்கள் மீது சொரியப்படும் கோபாக்கினையால் கொடுமையாய் பாழாக்கப்படும். இது அணுஆயுத பரிமாற்றத்தினாலா அல்லது பயங்கரமான

பூமியதிர்ச்சியாலா மற்றும் பூமியின் மேல்தட்டில் உண்டாகும் பேரழிவினாலா? இது வன்முறை செயலாய் இருக்கும் என்பது தெளிவு மற்றும் திடீரென்று நிகழுவதாய் இருந்து மகா உபத்திர காலத்தில் ஓருலக தலைவரை உருவாக்குகிறதாய் இருக்கும். இதன் விளைவாக மில்லியன்கணக்கில் மரித்துப் போவர்.

நியாயத்தீர்ப்பானது "சமுத்திரத்தின் தீவுகள்" மீதும் விழுகிறதாய் இருக்கும். இந்த தொலைவில் உள்ள தீவுகளில், மக்கள் ஒழுக்கம் குறித்தும் மற்றும் பரிசுத்தம் குறித்து கவலையற்று இருப்பர். ஏசாயா, எசேக்கியேல் காலத்து ஜனங்கள் பாவம் செய்தது போலவே இவர்களும் பாவம் செய்தவர்களாய் காணப்படுவர். இவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களாயும் ஒழுக்கக்கேடானவர்களாகும் மாறுவர். சத்தியத்தைப் பின்தொடர்வதில் நிர்விசாரிகளாய் இருப்பர், இதினிமித்த பாவத்தின் வழியில் சென்று, பாவத்தையும் மரணத்தையும் சுதந்தரித்துக்கொள்வர்.

ஏதோ ஒரு வழியில் "தீவுகள்" கர்த்தரால் நேரடி சிட்சைக்குள்ளாய் கடந்து சென்றதாய் இருக்கும், பூமியதிர்ச்சி/சுனாமியினால் இது சாத்தியமாய் இருந்திருக்கும். பூமிய்திர்ச்சியானது இஸ்ரவேலில் அநேகம் சுவர்களை தரைமட்டம் ஆக்கியது, இந்த சமயத்தில் இப்படிப்பட்ட பூமியதிர்ச்சியானது 2001, 2005, 2009 and 2011 ஆகிய வருடங்களில் கண்ட சுனாமிகளைப்போன்று சுனாமிகளை எழும்பப்பண்ணுகிறதாய் இருக்கும். இஸ்ரவேலில் நிகழும் பெரிய பூமியதிர்ச்சியானது மத்தியத் தரைக்கடலில் சுனாமியை உருவாக்கி சீப்ரு மற்றும் கிரேத்தா தீவுகளை பாதிக்கிறதாய் இருக்கும். மற்றும் தொலைவில் உள்ள தீவுகளாகிய தெற்கு பசிபிக்கில் உள்ள நியூஜிலாந்து போன்ற தீவுகளையும் பாதிப்பதாய் இருக்கும், இத்தீவுகளில் உள்ளவர்கள் தேவனுடைய பிரமாணங்களை மீறி, கருக்கலைப்பை அங்கீகாரம் செய்து, ஓரின சேர்க்கை திருமணங்களை ஆதரித்து, துன்பமின்றி சாவதை ஆதரித்து, நியூஜிலாந்து இஸ்ரவேலுக்கு விரோதமாய் the UN!ல் ஹாமாஸ்க்கு ஓட்டளித்துள்ளது. இவ்வாறு பெரிய தீமைகளைச் செய்து நியாத்தீர்ப்புக்கு ஏதுவாய் காணப்பட்டது.

உலகலாவிய இஸ்ரவேலரும் இந்த வழியில் நியாயந்தீர்க்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். பூமியின் மீதெங்கும் யூத ஜனங்கள் நியாயந்தீர்க்கப்படுகிறவர்களாய் இருப்பர். தங்களது பொல்லாத வழிகளினிமித்தம் எல்லோரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். கர்த்தர் தமது நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்க ஒருவரையும் அனுமதிப்பது இல்லை. இந்த படையெடுப்பு மற்றும் பூமியதிர்ச்சி போன்றவை முன்னெச்சரிப்பாய் அமைந்து தள்ளாடும் தேசங்களின்

ஜனங்கள், கர்த்தருடன் நல்மனம் பொருந்தும்படி அல்லது பின்னர் உலகின் அதிபதியாகிய அந்திக்கிறிஸ்துவுக்கு இடமளிப்பதாய் அமையும்.

எசேக்கியேல் 38-39 ன் நிகழ்வுகள் பூமியிலுள்ள ஜனங்கள் ஆவிக்குரிய வேலிக்குள் இனி ஒருபோதும் அமரமுடியாது. அவர்கள் கர்த்தருக்கும் அல்லது எதிராளிகளுக்கு தப்பிக்கொள்ள இயலாது என்பதைக் காட்டுகிறது. இவ்வாறு மகா உபத்திரகாலத்திற்கான அமைப்பு உருவாகிறதாய் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் நமது சொந்த வாழ்வைக்குறித்து மிகவும் கவனமாய் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது, இப்படிப்பட்ட தீர்க்கதரிசன வேதபாடம் நமது வாழ்வை ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாக்கக் கடவது. தீர்க்கதரிசன வேதபாடத்தின் கனியானது கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்க இடமளியாது இருப்போமாக, நமது வாயின் வார்த்தைகளாலோ அல்லது நமது பாவச்செயல்களாலோ அவ்வாறு ஆகாது இருப்பதாக. ஏசாயா 43:1-7, 55:1-9. இயேசுவோடு நடப்பதன் கனியானது நிச்சயத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடாமல், அன்பும், பலமும், தெளிந்த புத்தியுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார்." 2 தீமோத்தேயு 1:7.

8 இதோ, அது வந்தது, அது சம்பவித்தது என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். நான் சொன்ன நாள் இதுவே. 9 இஸ்ரவேல் பட்டணங்களின் குடிகள் வெளியே போய், கேடகங்களும், பரிசைகளும், வில்லுகளும், அம்புகளும், வளைதடிகளும், ஈட்டிகளுமாகிய ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள், ஏழு வருடம் அவைகளை எடுத்து எரிப்பார்கள்.

தீர்க்கதரிசியானவர் இப்பொழுது இப்படிப்பட்ட தீமையான மக்கள் மீதான தேவனின் நிறைவு பெற்ற கிரியைகளைக் குறித்த கண்ணோட்டத்தில் பேசுகிறவராய் இருக்கிறார். ஒரு தரிசனத்தில் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நிறைவு பெற்றதைக் காண்கிறவராய் இருக்கிறார். இவைகள் எல்லாவற்றையும் தீர்க்கதரிசியானவர் காண்கிறவராய் இருந்தார் என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும். மற்றும் அதிர்ச்சிதரக்கூடிய, ஆயிரம் பதினாயிரம் பயங்கரமான மரணங்கள் அவருடன் தங்கியிருந்ததையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். இதினிமித்தம் அவர் துரிதப்பட்டு 2600+ ஆண்டுகளுக்கு முன்னதாகவே இந்நிகழ்வுகளை அவர் அறிவிக்கிறவரானார், ஒவ்வொரு விபரங்களையும் பதிவு செய்துள்ளார் அது இந்த மக்களுக்கு உதவுவதாய் இருக்கும் மற்றும் அழிவு நாட்களின் சோதனைகளை எதிர்த்து இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாய் கலகம் செய்யாது இருக்க வகை செய்கிறதாய் இருக்கும்.

அநேக பெரிசியர்களும் மற்றும் பழைய ஸ்கைத்திய மக்களும் இணந்து இந்த தீமையான படையெழுச்சியில் ஈடுபடுவர், மற்றும் தீர்க்கதரிசி காண்கிற பிரகாரம் அவர்கள் அனைவரையும் எச்சரிக்கும் வாஞ்சையுடன் இதைக் கூறுகிறவராய் இருக்கிறார். மற்றும் இத்தகைய இராணுவத்தில் சேராது இருக்க இது வகை செய்கிறதாய் இருக்கும். ஈரானில் உள்ளவர்கள் அநேகர் தீர்க்கதரிசியின் எச்சரிப்பை கேட்டு அதன் விளைவாக இரட்சிக்கப்படுகிறவர்களாய் இருப்பர். 2600 ஆண்டுகள் மரித்திருக்க தீர்க்கதரிசி எசேக்கியேல் இன்னும் இரட்சிப்புக்கேதுவான தமது வார்த்தைகளை பேசுகிறவராய் இருக்கிறார், இது இந்தப் பகுதியில் தேவனில் அன்பு கூர்ந்து அவரை சேவிப்பவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. எசேக்கியேல் இந்தப் பிராந்தியங்களில் இராணுவங்கள் துடைத்து எரிவதாய் தமது தரிசனத்தில் காண்கிறவராய் இருந்தார், இது மிகவும் அச்சம் தருகிற படுகொலைகளாய் இருக்கும். இந்தப்பகுதிகளில் இன்றைய அளவில் வாழும் அநேக விசுவாசிகளுக்கு இந்து இரு அதிகாரங்களும் தேவனின் எச்சரிப்பாய் விளங்கி வருகிறது. -- மத்திய கிழக்கு நாடுகளின் அழிவுக்கேதுவான படையெடுப்பில் சேர்ந்து கொள்ளாதிருங்கள்.

இந்த சந்தர்ப்பத்திற்கு பின் சில நிகழ்வுகள் உண்டாகும், அது ஜனங்கள் மிக விரைவாக நீதிக்கு திரும்புகிறதாய் இருக்கும், காரணம் சாத்தானின் மிகப்பெரிய தாக்குதல் இஸ்ரவேல் மீது நடைபெறுவதை எதிர் கொள்ள ஆயத்தமாக நேரிடும், இது இறுதியானது அல்ல மகா உபத்திர காலமே இறுதியானது. பெரிதான எழுப்புதல் பெரிதான விசுவாச துரோகத்தை பின்தொடர்வதாய் இருக்கும், யோசியாவின் நாட்களில் நடந்தது போலவும் சிதேக்கியா நாட்களில் விரைவாய் பின்தொடர்ந்தது போலவும் இருக்கும். இங்கு விவரிக்கப்படுகிற நிகழ்வுகள் குறுகிய காலத்திற்குட்பட்டவைகள், இங்கு நிகழும் எழுப்புதல் தற்காலிகமானவை, யோசியாவின் காலத்து எழுப்புதல் போன்று நீண்டகாலத்துக் குரியதாய் இராது, இது அந்திக்கிறிஸ்துவுக்கு முன் நிகழ்வதாய் இருக்கும்.

ஆயுதங்களின் எண்ணிக்கை மிகுதியாய் காணப்படும், யுத்தத்திற்குப் பின்னர் ஏழு ஆண்டுகளுக்கான "எரிபொருளாக" ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் இவைகள் யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டு இஸ்ரவேலரால் யுத்தத்திற்கு பின் சேகரிக்கப்பட்டதாய் இருக்கும்.

கோகு - மாகோகு கலகம்/படையெடுப்பு ஆயிரவருட அரசாட்சியின் இறுதியில் நிகழுமானால், இதற்கு முன் கண்டவை முதலாவது பதிப்பு கமெண்டரி பொருந்தக்கூடியதாய் இருக்கும். இந்த வியாக்கியானத்திலிருந்து இது தோன்றுமானால் யுத்தமானது ஆயிரவருட

அரசாட்சியின் இறுதியில் இடம் பெறுவதாய் இருக்கும், இருப்பினும் மகா வெள்ளை சிங்காசன நியாத்தீர்ப்பானது சரித்திர காலத்தின் எல்லா அவிசுவாசிகளுக்கும் நிகழ வேண்டியதாய் இருக்கிறது. மகாவெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வெளிப்படுத்தல் 20:11ல் விவரிக்கப்படுகிறதாய் இருக்கிறது, அது ஏழு ஆண்டுகாலத்தை உட்படுத்தியுள்ளது அல்லது சரித்திரத்தில் உள்ள ஒவ்வொரு அவிசுவாசிக்கும் கர்த்தர் தனிப்பட்டவிதத்தில் ஈடுபடுகிறதாய் இருக்கும்.

இது சட்ட ரீதியாய் இருந்த போதிலும், நான் இதை விசுவாசிக்கப்போகிறதில்லை, இந்த அதிகாரத்தின் "வெளிப்படையான" காரியம் என்னவெனில் பெரிய படையெடுப்பானது பெரிய நிகழ்வாய் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது, இந்த நிகழ்வு வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பைத் தொடர்ந்தல்ல, மகா உபத்திர காலத்தைத் தொடர்ந்து நிகழ்வதாய் இருக்கிறது. எசேக்கியேலால் தனது புத்தகத்தில் தனது அதிகாரத்தில் கர்த்தரின் ஆளுகையானது பூமியின் மீது முன்னதாய் நிகழுவதை விவரிக்கிறதாய் இருக்கிறது. ஆகையால் இந்த நிகழ்வு மகா உபத்திரகாலத்திற்கு முன் நிகழுவதாய் குறிப்பிடுகிறோம். இது கர்த்தரின் வருகையின் போது ஆயிர வருட ஆளுகையை தேவாலயத்திலிருந்து ஆளுகிறதாய் இருக்கும். (எசேக்கியேல் 40-48). நாம் பார்த்த பிரகாரம், இங்குள்ள நிகழ்வுகள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை மெய்யாய் இனங்கண்டுகொள்ளச்செய்கிறதாய் இருக்கிறது, வெளிப்படுத்தலில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு இவைகள் முன்னோடிகளாய் திகழ்கின்றன. நாம் எப்பொழுதும் குறிப்பிடபடி, இந்த விஷயங்களில் ஒப்புக்கொள்ள மறுக்கிறவர்களுடன் "நாம் போராடுவதில்லை".

10 அவர்கள் வெளியிலிருந்து விறகு கொண்டுவராமலும் காடுகளில் வேட்டாமலும், ஆயுதங்களை எடுத்து எரிப்பார்கள். அவர்கள் தங்களைக் கொள்ளையிட்டவர்களைக் கொள்ளையிட்டு, தங்களை சூறையாடினவர்களைச் சூறையாடுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

சேகரிக்கப்பட்ட ஆயுதங்கள் எரிபொருளாக பயன்பட்டன, உணவும் பணமும் இராணுவம் சுமந்துவந்து கர்த்தரின்ஜனங்களுக்கு அளித்தன. அவைகள் ஏழு ஆண்டுகளுக்கு போதுமானவைகளாய் இருந்தன. தேசத்தை நாசம்பண்ணவந்தவர்கள் அவர்கள்தாமே நாசமானார்கள் மற்றும் அழிவைக் கண்டுகொண்டனர். அவர்கள் இராணுவத்தின் ஐசுவரியம் இஸ்ரவேலில் தேசத்தை திரும்பகட்டியெழுப்புவதற்கு பயன்பட்டது, அதினிமித்தம் அவர்கள் மகா உபத்திரவ காலத்தின் நிகழ்வுகளுக்கு ஆயத்தமானார்கள். வேதாகமத்தை வாசித்தவர்கள் இந்த

படையெடுப்பை தொடர்ந்து என்ன வரக்கூடும் என்பதை அறிகிறவர்களாய் இருக்கின்றனர், தேசம் திரும்ப கட்டப்படுவதை உறுதி செய்து கொள்கிறோம், மற்றும் மகா உபத்திரவ கால இறுதியில் இறுதி படையெடுப்பானது பெரிதான பாதுகாப்பை அளிப்பதாய் இருக்கிறது.

போதக கைக்கொள்ளுதல்:

1. கர்த்தரின் திட்டம் பூரணமானதாயும் இறுதி நியாயத்தீர்ப்போடு நிறைவடைகிறதுமாய் இருக்கிறது. கர்த்தரின் சித்தம் செய்யாதவர் அனைவரும் அவரை சந்திப்பர், சிறியோர் முதல் பெரியவர்கள் வரை அவரை சந்திக்கிறவர்களாய் இருப்பர். வெளிப்படுத்தல் 20:11-15. இந்த நாட்களில் பெரிய எழுப்புதல் இஸ்ரவேலில் படையெடுப்புக்கு பின்னர் நிகழுவதாயிருக்கும், ஆனால் மனந்திருந்தி அவர்களது வேதாகமத்தை வாசித்தோர் இன்னும் அதிகமான சம்பங்கள் நிகழப்போவது குறித்து ஆயத்தமான நிலையில் இருப்பர். தேவனுடைய வார்த்தைகள் பாதுகாப்பாய் அமைந்து, அதை வாசித்து அறியும் போது அது அவ்வாறு அமையும். அதை விசுவாசித்து, ஒவ்வொரு நாளில் வாழ்வுக்கு கைக்கொள்ளுதல் வேண்டும். மகா உபத்திர காலத்தின் போது மூன்றில் ஒரு பங்கு இஸ்ரவேல் தேசம் இரட்சிக்கப்படுகிறதாய் இருக்கும். சகரியா 12:10ff

எசேக்கியேல் 39:11- 20

11 அந்நாளில் இஸ்ரவேல் தேசத்திலே சமுத்திரத்துக்குக் கிழக்கே பிரயாணக்காரரின் பள்ளத்தாக்கைப் புதைக்கிற ஸ்தானமாகக் கோகுக்குக் கொடுப்பேன். அது வழிப்போக்கர் மூக்கைப் பொத்திகொண்டு போகப்பண்ணும். அங்கே கோகையும் அவனுடைய எல்லாச் சேனையையும் புதைத்து, அதை ஆமோன் கோகின் பள்ளத்தாக்கு என்பார்கள். 12 இஸ்ரவேல் வம்சத்தார் தேசத்தைச் சுத்தம்பண்ணும்படிக்கு அவர்களை புதைத்துத்தீர ஏழுமாதம் செல்லும். 13 தேசத்தின் ஜனங்களெல்லாரும் புதைத்துகொண்டிருப்பார்கள். நான் மகிமைப்படும் அந்நாளிலே அது அவர்களுக்குக் கீர்த்தியாக இருக்கும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். 14 தேசத்தைச் சுத்தம்பண்ணுவதற்காக அதில் கிடக்கும் மற்ற பிரேதங்களை புதைக்கும்படிக்கு நித்தமும் தேசத்தில் சுற்றித்திரியும் மனுஷரையும், சுற்றித்திரிகிறவர்களோடே கூடப் புதைக்கிறவர்களையும் தெரிந்து நியமிப்பார்கள்.

ஏழுமாதங்கள் முடிந்தபின்பும் இவர்கள் தேடிக்கொண்டிருப்பார்கள். 15 தேசத்தில் சுற்றித்திரிகிறவர்கள் திரிந்து கொண்டிருப்பார்கள் யாராவது ஒருவன் மனுஷனின் எலும்பைக் காணும்போது புதைக்கிறவர்கள் அதை ஆமோன்கோகுடைய பள்ளத்தாக்கிலே புதைக்கும் மட்டும் அதினன்டையிலே ஒரு அடையாளத்தை நாட்டுவான். 16 அந்த நகரத்துக்கு ஆமோனா என்று பெயரிடப்படும். இவ்விதமாய் தேசத்தைச் சுத்தம்பண்ணுவார்கள். 17 மனுபுத்திரனே கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ சகலவித பட்சிகளையு வெளியில் இருக்கிற சகல மிருகங்களையும் நோக்கி: நீங்கள் ஏகமாய் கூடிக்கொண்டு, இஸ்ரவேலின் மலைகளில் நான் உங்களுக்காகச் செய்யும் யாகமாகிய மகா யாகத்துக்குச் சுற்றிலிமிருந்து வந்து சேர்ந்து, மாம்சம் தின்று இரத்தங்குடியுங்கள். 18 நீங்கள் பராக்கிரமசாலிகளின் மாம்சத்தைத் தின்று பூமியினுடைய பிரபுக்களின் இரத்தத்தைக் குடிப்பீர்கள். அவர்கள் எல்லோரும் பாசானிலே கொழுத்துப்போன ஆட்டுக்கடாக்களுக்கும் ஆட்டுகுட்டிகளுக்கும் வெள்ளாட்டுகுட்டிகளுக்கும் காளைகளுக்கும் சமானமானவர்கள். 19 நான் உங்களுக்குக்காகச் செய்யும் யாகத்திலே நீங்கள் திருப்தியாகுமளவும் கொழுப்பைத் தின்று வெறியாகுமளவும் இரத்தத்தைக் குடிப்பீர்கள். 20 இவ்விதமாய் என் பந்தியிலே குதிரைகளையும் இரத வீரர்களையும் பராக்கிரமசாலிகளையும், சகல யுத்தவீரர்களையும் தின்று திருப்தியாவீர்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு.

பிரதிபலிப்பு:

11 அந்நாளில் இஸ்ரவேல் தேசத்திலே சமுத்திரத்துக்குக் கிழக்கே பிரயாணக்காரரின் பள்ளத்தாக்கைப் புதைக்கிற ஸ்தானமாகக் கோகுக்குக் கொடுப்பேன். அது வழிப்போக்கர் மூக்கைப் பொத்திகொண்டு போகப்பண்ணும். அங்கே கோகையும் அவனுடைய எல்லாச் சேனையையும் புதைத்து, அதை ஆமோன் கோகின் பள்ளத்தாக்கு என்பார்கள். 12 இஸ்ரவேல் வம்சத்தார் தேசத்தைச் சுத்தம்பண்ணும்படிக்கு அவர்களை புதைத்துத்தீர ஏழுமாதம் செல்லும்.

அநேக மாதங்கள் தேசத்தில் நாற்றம் எழும்பிக் கொண்டிருக்கும், விழுந்து போனவர்களின் மீந்திருக்கும் சரீரங்கள் இஸ்ரவேல் தேசத்திலே புதைக்கப்படும். மீந்திருப்பவர்கள் அங்கு மிகுந்த மரியாதையுடன் புதைக்கப்படுவர், தேசத்தில் அவர்கள் அதை அழிக்கும்படி வந்தவர்கள் சமாதியில் கிடத்தப்பட்டவர்களாய் இருப்பர், அங்கு அவர்கள் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு அழைக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்பட்டு

அக்கினியும் கந்தகமும் அரிகிற கடலுக்கு அனுப்பப்படுவர். அந்த தேசத்தின் வழியாய் பயணம் செய்வோர் அனைவரும், கடைசி வருடங்களில் பண்டிகை ஆசரிக்க வருபவர்கள் மகா உபத்திரவ காலத்திற்கு முன்பு, தங்களது மூக்கைப் பொத்திக்கொண்டுக் காணப்படுவர், காரணம் மரித்தவர்களின் நாற்றம் காற்றில் மிகுதியாய் காணப்படும்.

மரித்தவர்கள் அவர்களது சரீர அங்கங்களை புதைப்பதற்கு ஏழுமாதங்கள் எடுக்கும், அவர்கள் மிகவும் அநேகராய் இருப்பர், இப்படிப்பட்ட பயங்கரமான வேலை செய்து முடிக்கப்படுகிறதாய் இருக்கும். தேசமானது இரத்தத்தால் கழுவப்பட்டதாய் இருக்கும், மற்றும் கறைபட்டதாய் இருக்கும். போர்த்திறன் கொண்ட அணுஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமேயானால், அது வேதபகுதியில் தோன்றியிருக்கும், மற்றும் காலசந்தர்ப்பங்களும் புறிந்து கொள்ளப்பட்டு இருக்கும், அவர்களது சரீர பாகங்கள் முழுமையான தேடுதல் அவசியமாய் இருந்திருக்கும் மற்றும் சில வெளிப்பட்டு தோன்றுவதற்கு வருடங்கள் ஆகும். விசுவாசிக்கும் யூத மக்களின் பரிசுத்த செயல்பாடுகள், அவர்கள் மரித்தோரை அடக்கம் பண்ணும்போது, ஏழு மாதங்கள் அவசியப்பட்டது, அந்த தேசத்தில் சிந்தப்பட்ட இரத்தத்திலிருந்து அவர்கள் சுத்திகரிக்கப்பட ஏழு நாட்கள் அவசியப்படுகிறதாய் இருந்தது. எண்ணாகமம் 19:16-22, உபாகமம் 21. இஸ்ரவேல் தேசத்தின் மதம் சார்ந்த வாழ்வில் இந்த அடையாளம் ஒரு திருப்புமுணையாக இருந்தது, மற்றும் ஆசாரியத்துவம் முழுமையாக மோசேயின் பிரமாணங்கள் படி இந்த நிகழ்வுகளின் விளைவாக விளங்கியது.

எனது சந்தேகப்படி இந்த படையெடுப்பினால் உண்டான தன்மை மற்றும் படுகொலைகள், இந்த இரு அதிகாரத்தின் தெளிவான நிறைவேறுதலாய் இருந்து இஸ்ரவேல் ஜனங்களை முழுமையாய் மோசேயின் பிரமாணங்களுக்கு திரும்பும்படி செய்துள்ளது, அதன் பாரம்பரிய சடங்குகளை அனுசரிக்கவும், தேவாலய மலையில் தேவாலாயத்தை திரும்பக் கட்டும்படி செய்தது. அரேபிய தேசங்களின் ஆதரவு இப்படையெடுப்பில் குறிப்பிடத்தக்கவகையில் சிறப்பாய் அமைந்தது. சௌதி மக்களின் ஆதரவால் இஸ்லாமின் புணித ஸ்தலங்கள் பாதுகாக்கப்பட்டது மற்றும் எதிர்பார்த்திருந்த தேவாலயம் மசூதிக்கு அருகில் கட்டும்படியான அனுமதியும் கிடைத்தது. யூதர்கள் மற்றும் அரேபியர் இடையே சமாதானம் உண்டாயிற்று, மற்றும் இந்த் படையெடுப்பால் இது அவர்களிடையே சாத்தியமாயிற்று. சன்னி இஸ்லாமிய அரேபியர்கள் யுத்தங்களில் பங்கெடுத்து, இஸ்ரவேலுடன் இந்த படையெடுப்பிலும்/பூமியதிர்ச்சியிலும் சேர்ந்து செயல்பட்டனர்.

உலகை மாற்றக்கூடிய காரியங்கள் இந்த வசனங்களின் பின்பு இருப்பது தெளிவாகிறதாய் இருக்கிறது. பெரிய பூமியதிர்ச்சியானது யுத்தத்தை துவங்குகிறதும், மசூதி தரைமட்டம் ஆகிறதற்கு துணையுமாய் இருந்தது, இதனால் இரு மதம் சார்ந்த கட்டிடங்கள் எழும்ப காரணமாயின இதற்கு பின் இங்கு தேவாலயம் கட்டியெழுப்பப்பட்டது.

13 தேசத்தின் ஜனங்களெல்லாரும் புதைத்துகொண்டிருப்பார்கள். நான் மகிமைப்படும் அந்நாளிலே அது அவர்களுக்குக் கீர்த்தியாக இருக்கும் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். 14 தேசத்தைச் சுத்தம்பண்ணுவதற்காக அதில் கிடக்கும் மற்ற பிரேதங்களை புதைக்கும்படிக்கு நித்தமும் தேசத்தில் சுற்றித்திரியும் மனுஷரையும், சுற்றித்திரிகிறவர்களோடே கூடப் புதைக்கிறவர்களையும் தெரிந்து நியமிப்பார்கள். ஏழுமாதங்கள் முடிந்தபின்பும் இவர்கள் தேடிக்கொண்டிருப்பார்கள்.

தேசத்தின் அனைத்து மக்களும் இப்பணியில் உட்ப்டுவர்களாய் இருப்பர், அவர்கள் அரசியல் தங்கள் மதம் சார்ந்த தலைவர்களின் கீழ் இவ்வாறு செயல்படுவர். இதுஅருவ்ருப்பான காரியமாய் இருந்த போதிலும் இதில் அனைவரும் பங்கு பெற இது அத்தியாவசியமான ஒன்றாய் விளங்கியது, இது தீமையானதும் மற்றும் பாவத்தின் அருவருக்கப்படத்தக்கதாகவும் காணப்பட்டது. ஒவ்வொரு நபரும் தங்களது வயிறு புறட்டப்பட இப்பணியில் ஈடுபட்டனர் இது தீட்டகற்றப்படும் விஷேசித்த பணியாய் இருந்தது இது மரித்தோரை அடக்கம் செய்வதாய் இருந்தது. மரித்து போனவர்கள் அணுஆயுதங்களால் மரித்து போயிருப்பார்கள் எனில் இதற்கு விஷேசித்த பயிற்சியும் முறைகளும் அவசியமாய் இருந்தது. தேசத்தில் சாதாரணமாய் பணிசெய்து அகற்றுவதற்கு ஏழு ஆண்டு காலங்கள் பிடித்தது, மரங்கள் மறுபடியும் நடப்பட்டது, தீட்டான அனைத்தும் அகற்றப்பட்டன.

தேசத்தில் மீந்திருந்தவர்கள் சுத்திகரிக்க தொடங்கிய காலத்தின் போது, தேவனுடைய பரிசுத்தத்தையும் இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்புக்கான காரணத்தையும் முழுமையாய் புரிந்து கொள்கிறவர்களாய் காணப்பட்டனர், அவ்ர்கள் தங்கள் சொந்த பாவத்தின் பின்விளைவுகளையும் கண்டவர்களாய் இருந்தனர். விஷேசித்த குழுவினர் சரீரங்களை புதைக்கிறவர்களாய் செயல்பட்டனர் அவர்கள் தேசம் முழுமையும் பயண்ம் செய்து ஏழு மாத காலங்களில் எலும்புக்கூடுகள் எஞ்சியிருக்கின்றனவா என்று தேடினர், ஆரம்ப ஏழு மாத காலத்தில் எல்லாம் புதைக்கப்பட்டு தீர்ந்தன என்ற நிச்சயத்திற்குள்ளாக கடந்து வந்தனர். அவர்கள் தேசத்தை சுத்திகரித்து விழுந்து போன சரீரங்கள் அனைத்தையும் புதைத்து தீர்த்து, பொருளாதார செழிப்பை இக்கடைசி ஆண்டுகாலங்களில் மீண்டும்

அடைகிறவர்களாய் காணப்பட்டனர். கர்த்தரின் கிருபை இரக்கம் மற்றும் பராமரிப்பு போன்றவற்றைக் கண்டதோடு எல்லா காரியங்களிலும் சமாதானத்தை திரும்பப்பெறுகிறவர்களாய் காணப்பட்டனர்.

15 தேசத்தில் சுற்றித்திரிகிறவர்கள் திரிந்து கொண்டிருப்பார்கள் யாராவது ஒருவன் மனுஷனின் எலும்பைக் காணும்போது புதைக்கிறவர்கள் அதை ஆமோன்கோகுடைய பள்ளத்தாக்கிலே புதைக்கும் மட்டும் அதினன்டையிலே ஒரு அடையாளத்தை நாட்டுவான். 16 அந்த நகரத்துக்கு ஆமோனா என்று பெயரிடப்படும். இவ்விதமாய் தேசத்தைச் சுத்தம்பண்ணுவார்கள்.

விஷேசித்த புதைக்கும் குழுவினரால் மரித்தவர்களின் எலும்புகள் இனங்கண்டு கொள்ளப்பட்டு புதைத்து தீர்க்கப்பட்டன. சமாதானம் பூமியில் மகா உபத்திரவ காலம் துவங்கு முன் சிறிது காலத்துக்கு நிலவிய போதும், தேசத்தை சுத்திகரிப்பது கையாளப்பட்டது. இந்த சிறிய காரியங்கள் மூலம் கர்த்தரின் பராமரிப்பையும் நமது சொந்த வாழ்வைக் குறித்து அவரது வாஞ்சையையும் காண்கிறவர்களாய் இருக்கிறோம், தீமையான சிந்தனைகள் வேரறுக்கப்பட அவருக்கு முன் நம்மை சுத்தமாய் காத்துக்கொள்ள வகை செய்கிறதாய் அமைந்தது. இது தேவாலயத்தை சுத்திகரிப்பதாய் அமைந்து அவரது ஊழியத்திற்கு முன்னர் தேவாலயத்தின் செய்தியானது உறுதி செய்யப்பட்டு தேவாலயத்தின் பலிமுறைகள் செயல்படுத்தப்பட்டது. இக்காலத்தில் தேசத்தை சுத்திகரிப்பது சீக்கிரமாய் இஸ்ரவேலர் மீது வர இருக்கும் உபத்திரவ காலத்தின் ஆயத்தமாய் விளங்கிற்று.

தேசத்தின் வழியாய் பயணம் செய்யும் அனைத்து பயணிகளிடம் அவர்கள் செய்ய வேண்டியது சுருக்கமாய் கூறப்பட்டது, மற்றும் எலும்புத் துண்டுகலைக் காண்பார்களானால் அதை புதைக்கும் குழுவினர் அடையாளம் கண்டு அவைகளை உடனடியாய் புதைத்து விடுவர். ஸ்மார்ட் போன்கள் மற்றும் GPS மூலம் இப்பொழுது இது இலகுவாய் மாறும். அவர்கள் தேசத்தைச் சுத்திகரித்து, வசனம் 16ல் பெயரிடப்பட்ட பட்டணத்தில் வசிப்பார்கள் ஆமோனா (ஜனத்திரளின் ஸ்தலம்) புதைக்கும் பள்ளத்தாக்கில், அவர்கள் பணி நிறைவேற்றி தீர்க்கப்படும். இந்த ஜனங்கள் அசுத்தமான தீட்டுப்படுத்தும் பணியை மேற்கொள்பவர்களாய் இருப்பர், இவைகளை கர்த்தருக்காய் செய்கிறவர்களாய் இருப்பர் மற்றும் அவர்கள் கீழ்ப்படிதலினால் இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் திகழ்வர். ஆமோனா பட்டணம் ஒரு நினைவு கூறக்கூடிய பட்டணமாய் மாறும், புதைக்கும் பள்ளத்தாக்காய் இருந்து, தேவனுக்கு விரோதமாய் யுத்தம் செய்ததன் கோர விளைவை நினைவு படுத்துகிறதாய் இருக்கும்.

இது மக்கள் மகா உபத்திரவகாலத்திற்குள் பிரவேசிக்க ஒரு முக்கிய ஆதாரமாய் விளங்குகிறது, காரணம் அவர்கள் கர்த்தரின் நியாயந்தீர்க்கும் வல்லமையை சரீரப்பிரகாரமான சாட்சியாக கண்டிருந்தனர். யாராகிலும் கர்த்தரைத் தேடுவார்களானால் இதை நினைவு கூறுகிறவர்களாயிருப்பர். அவர்கள் கர்த்தர் ஜெயம்பெற்றவராய் அறிகிறவர்களாய் இருப்பர். அவர் கோகுக்கும், மாகோகுக்கும் எதிராய் செயல்படுகிறவராய் இருக்கிறார். அவர்கள் அந்திக்கிறிஸ்து பொய்யன் என்பதை நிச்சயப்படுக்கொள்கிறவ்ர்களாய் இருப்பர் மற்றும் கோகு தனது தீங்கில் விழுந்து போனது போன்று விழுந்து போகிற்வர்களாய் இருப்பர். எப்படியிருப்பினும் மூன்றில் ஒருபங்கு இஸ்ரவேலர் மட்டுமே இந்த சந்தர்ப்பத்தில் இரட்சிக்கப்படுகிறவர்களாய் இருப்பர்! சகரியா 12:10-14:9.

ஒரு விளக்கவுரை கூறும்பொழுது நல்ல திடகாத்திரமான மனிதர் ஒரு மில்லியன் பேர் தேசத்தில் இருப்பார்களெனில், அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு இறந்த சரீரத்தை ஒரு நாளில் புதைப்பார்களெனில், சாபத்தினம் வெலை செய்யாது ஏழு மாதங்கள் அப்பணி செய்வார்களெனில், அவர்கள் 180,000,000 மாசு படுத்தப்பட்ட சடலங்களை புதைக்கிறவர்களாய் இருப்பர். இங்கு விவரிக்கப்படுகிற பள்ளத்தாக்கு கலகக்கார தேசத்தின் சடலங்களால் நிரப்பப்படுகிறதாய் இருக்கும். இந்த படுகொலையின் ச்ம்பவம் பரந்ததாய் காணப்படும் மற்றும் அதன் தீங்கான பின்விளைவு தடுமாற்றமுள்ளதாயும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டதாயும் இருக்கும், இந்த விளக்கவுரையாளர் கொடுக்கு எண்ணிக்கை பரந்த நிலையில் எண்ணிக்கைக்கு அதிகமாய் அணுஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதால் உண்டான விளைவாய் இருக்கும், இதனால் அவர்களது சரீர அவயவங்கள் கண்டுகொள்ளப்பட்டு புதைக்கப்படுகிறதாய் இருக்கும் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை அளவிட முடியாதாய் இருக்கும்.

17 மனுபுத்திரனே கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: நீ சகலவித பட்சிகளையு வெளியில் இருக்கிற சகல மிருகங்களையும் நோக்கி: நீங்கள் ஏகமாய் கூடிக்கொண்டு, இஸ்ரவேலின் மலைகளில் நான் உங்களுக்காகச் செய்யும் யாகமாகிய மகா யாகத்துக்குச் சுற்றிலிமிருந்து வந்து சேர்ந்து, மாம்சம் தின்று இரத்தங்குடியுங்கள். 18 நீங்கள் பராக்கிரமசாலிகளின் மாம்சத்தைத் தின்று பூமியினுடைய பிரபுக்களின் இரத்தத்தைக் குடிப்பீர்கள். அவர்கள் எல்லோரும் பாசானிலே கொழுத்துப்போன ஆட்டுக்கடாக்களுக்கும் ஆட்டுகுட்டிகளுக்கும் வெள்ளாட்டுகுட்டிகளுக்கும் காளைகளுக்கும் சமானமானவர்கள்.

இஸ்ரவேல் தேசத்தின் அருகான தேசத்து பறவைகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு விழுந்து போனோரின் மாம்சத்தை திண்ணும்படி ஏழு மாத

காலங்கள் அவர்களைப் புதைக்கும் காலத்தில் கூடி வந்தன. கர்த்தர் இந்த் பலி விருந்தை அவைகளுக்கு வெகுமதிகளாக அளித்தார், இந்த கடைசி யுகத்தின் இறுதி ஆண்டுகளில் கலகம் செய்த மனிதர் பூமியின் மீது சீர்கேடடைந்து காணப்பட்டனர். அவைகள் மனிதரின் மாம்சத்தை மட்டும் புசிக்கவில்லை, தேசத்தின் எல்லா மிருகங்களையும் கூட புசித்தன. யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட நெருப்பு கலந்த (அணுஆயுதங்கள்) ஆயுதங்களால் அனைத்து உயிர் வாழ் ஜெந்துக்களும் கொலை செய்யப்பட்டன, இது கர்த்தரால் மறைத்து வைக்கப்படாது இருந்தது. எல்லா ஜீவ ராசிகளும் துடைத்தெறியப்பட்டபோது, இஸ்ரவேலின் மலைகளில் நூற்றுக்கண்க்கான, ஆயிரக்கணக்கான மனிதரும் மற்றும் மிருகங்களும் ஒரே நாளில் கொல்லப்பட்டன, அவைகள் புதைக்கப்பட ஏழு மாதங்களுக்கு மேலாயின.

19 நான் உங்களுக்குக்காகச் செய்யும் யாகத்திலே நீங்கள் திருப்தியாகுமளவும் கொழுப்பைத் தின்று வெறியாகுமளவும் இரத்தத்தைக் குடிப்பீர்கள். 20 இவ்விதமாய் என் பந்தியிலே குதிரைகளையும் இரத வீரர்களையும் பராக்கிரமசாலிகளையும், சகல யுத்தவீரர்களையும் தின்று திருப்தியாவீர்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்லு.

பறவைகளுக்கான விருந்து விழுந்து போன சடலங்களின் எடை புலம்புதலுக்கு ஏதுவாய் இருந்தது. இங்கு எல்லா படையெடுப்பின் முழுமையான முடிவு காணப்படுகிறதாய் இருக்கிறது, நாம் ஏற்கனவே பார்த்த பிரகாரம் ஆறில் ஒரு பங்கு மனிதர் மட்டும் தேவனது தேசத்துக்கு விரோதமாய் வந்தவர்களில் முடிவாய் மீந்தனர். அத்தகைய தீமையான படையெடுத்து வந்தவர்கள் அனைவரும் உபயொகித்த ஆயுதங்களால் கொலை செய்யப்பட்டு இருக்க வேண்டும், பின்னணியில் இருந்த ஆதரவாளர்கள் மட்டும் தப்பிக்கொள்கிறவர்களாய் இருந்தனர். அவர்கள் ஆறில் ஒரு பகுதியினராய் காணப்பட்டனர், வேதாகம சத்தியத்தின் ஆதாரங்கள் உண்மையென இது புலப்படுத்துகிறதாய் இருக்கிறது, வெளிப்படுதல் புத்தகமானது எழுத்தின் படி நிறைவேறுகிற்தாய் இருந்தது, இதுவும் எசேக்கியேல் போன்று நிறைவேறிற்று.

போதக கைக்கொள்ளுதல்:

1. தேவனுடய சித்தத்தை விரோதமாய் செயல்படுவது மதியீனமும் மற்றும் அழிவு தரக்கூடிய காரியமுமாய் இருக்கிறது. தேவனுடைய திட்டத்திற்கு விரோதமாய் கலகம் செய்கிறவர்கள் அனைவரும் விழுந்து போகிறவர்களாய் இருப்பர், தேவனை வெறுக்கிற அனைவரும் அவரை உண்டாக்கினவரை சந்தித்தே ஆக வேண்டும் மற்றும் அவர்கள் வெறுப்பது தீமையான காரியம் என்பது குறித்து உணர்ந்து கொள்ளல்

வேண்டும், அவைகள் சரியானபடி நியாயந்தீர்க்கப்படுகிறதாய் இருக்கிறது. இந்த படையேடுப்பின் இறுதியில் மனுக்குலத்திற்கு கடைசி எக்காள தீர்க்கதரிசன அழைப்பானது சபை எடுத்துக்கொள்ளப்படுமுன்/மகா உபத்திரகாலத்துக்கு முன் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

2. சில பணிகள் அசுத்தமானதாயும் மற்றும் கடினமானதாயும் இருக்கும் ஆனால் அவைகள் செய்து முடிக்கப்பட வேண்டும்: புதைக்கும் பணியில் அவர்கள் ஈடுப்பட்டபோது, உணவு உட்கொள்ள, உறங்க, ஆராதிக்க தடையாய் அமைந்தன, ஆனால் அப்பணியானது செய்து முடிக்கப்பட வேண்டியதாய் இருந்தது, "அதை அவர்கள் கர்த்தருக்கென செய்ய வேண்டியதாய் இருந்தது." இந்த மக்கள் அதை உற்சாகமாய் செய்தனர், அதைக் கர்த்தருக்கு முன்பாக செய்தனர், அவர் செல்லும் போது கர்த்தருக்கு நேராக ஜெபத்தை ஏறெடுத்தனர். அசுத்தமான பணிகளை நிறைவேற்ற கர்த்தர் நம்மை அழைக்கலாம், அப்படி அழைத்தால் சந்தோஷத்துடனும் சமாதானத்துடனும் விடுதலையோடு பணிபுரிவோமாக.

எசேக்கியேல் 39:21 - 29.

21 இவ்விதமாய் என் மகிமையை நான் புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்ப:ண்ணுவேன். நான் செய்த என் நியாயத்தையும் அவர்கள் மேல் நான் வைத்த என் கையையும் எல்லா ஜாதிகளும் காண்பார்கள். 22 அன்றுமுதல் என்றும் நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்து கொள்வார்கள். 23 இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் ஆக்கிரமத்தினிமித்தமே சிறைப்பட்டுப் போனார்கள் என்று அப்பொழுது புறஜாதிகள் அறிந்து கொள்வார்கள். அவர்கள் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினபடியால் என் முகத்தை நான் அவர்களுக்கு மறைத்து அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன். அவர்கள் அனைவரும் பட்டயத்தால் விழுந்தார்கள். 24 அவர்களுடைய அசுத்தத்துக்குத்தக்கதாகவும் அவர்களுடைய மீறுதல்களுக்குத்தக்கதாகவும் நான் அவர்களுக்கு செய்து, என் முகத்தை அவர்களுக்கு மறைத்தேன். 25 ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: 26 அவர்கள் தங்கள் அவமானத்தையும் பயப்படுத்துவார் இல்லாமல், தாங்கள் சுகமாய் தங்கள் தேசத்தில் குடியிருக்கும்போது எனக்கு விரோதமாய்த் தாங்கள் செய்த எல்லாத் துரோகத்தையும் சுமந்து தீர்த்தபின்பு, நான் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பி,

இஸ்ரவேல் வம்சமனைத்துக்கும் இரங்கி, என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன். 27 நான் அவர்களை ஜனசதளங்களிலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து, திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும் போது, 28 தங்களைப் புறஜாதிகளிடத்தில் சிறைப்பட்டுப்போகப்பண்ணின நான் தங்களில் ஒருவரையும் அங்கே அப்புறம் வைக்காமல், தங்களைத் தங்கள் சுய தேசத்திலே திரும்பக்கூட்டிக்கொண்டுவந்தேன் என்பதினால், நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள். 29 நான் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்.

பிரதிபலிப்பு

21 இவ்விதமாய் என் மகிமையை நான் புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்ப:ண்ணுவேன். நான் செய்த என் நியாயத்தையும் அவர்கள் மேல் நான் வைத்த என் கையையும் எல்லா ஜாதிகளும் காண்பார்கள். 22 அன்றுமுதல் என்றும் நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று இஸ்ரவேல் வம்சத்தார் அறிந்து கொள்வார்கள்.

யார் தேவன் யார் ஆளுகை செய்வது என்பது குறித்து அனைவரும் சத்தியத்தை அறிந்து நிச்சயப்படுத்திக்கொள்ளும்படி கர்த்தர் செயல்படுகிறவராய் இருக்கிறார். விழுந்து போனோர் அவர்களது மரணத்தினால் அவரது வல்லமையை அறிவிக்கிறவர்களாய் இருக்கின்றனர் மற்றும் ஜீவிப்போர் தங்களது ஜீவனுக்காய், விடுதலைக்காய்/படுகொலையிலிருந்து தப்பியதற்காய் அவரைத் துதிக்கிறவர்களாய் இருக்கின்றனர். சங்கீதம் 76:1-12, ஆகாய் 2:21-22. அந்த தேசங்களும் மற்றும் மீந்திருக்கும் மக்களும் "புறஜாதியர்" முன்னதாகவே தங்களது நியாயத்தீர்ப்பை அறிந்து கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள், அவர்கள் தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டு, அவர்கள் அறியாமல் இருந்து அவ்ர்களது நியாயத்தீர்ப்பு நீதியாய் இருக்கிறது, இஸ்ரவேலில் இரட்சிக்கப்பட்டோர் கர்த்தரை துதிக்கிறவர்களாய் இருப்பார்கள் மற்றும் சர்வ வல்லமையுள்ள தேவனின் செயல்பாடுகளையும், குணாதிசயத்தையும், சத்தியத்தை குறித்து உறுதி செய்து கொள்வர். மனிதனின் சுயசித்தம் குறித்த மகத்துவம் மக்கள் சத்தியத்தை அறிந்து உணர்ந்தவர்களாய் இருந்த போதும், இன்னும் அதை வெறுக்கிறவர்களாய் காணப்படுவர் மற்றும் அதை

ஏற்றுக்கொள்ள மறுத்து அதன் மீது செயல்படுகிறவர்களாயிருப்பர். யாக்கோபு 2:19.

எழுத்தாளர் இங்கு இக்காரியங்களை பதிவு செய்துள்ளார், தேவ ஜனங்கள் கூட சத்தியத்தை மறந்து போனவர்களாய் இருக்கின்றனர். 2000 ஆண்டுகளுக்கு பின்னரும் பூமியில் இஸ்ரவேலுக்காக அலைந்து திரிகிறவர்களாய் இருப்பர், இது தேவனது குணாதிசயத்தை மறந்து திரிகிறதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, தினமும் அரைக்கப்படும் வாழ்க்கையானது பரிசுத்தத்தை சிதறடிக்கிறதாய் இருக்கிறது, ஜனங்கள் பாரம்பரிய மதசம்பந்தமான காரியங்களில் விழுந்து போவார்கள் அவர்கள் விசுவாசத்தின்படி நடக்க தவறிப்போவார்கள். பெரிய படையெடுப்பானது இஸ்ரவேலை எழும்பச் செய்யும் அழைப்பாய் அமையும், அவர்களை ஆயத்தமாக்கி இறுதி சவால்களை எதிர்கொள்ளச் செய்யும் இது அவர்கள் மேசியாவை வரவேற்பதற்கு நிகழ்வதாய் இருக்கும். சகரியா 12:10ff.

1942-1945 ல் பயங்கரமான பேரழிவானது இஸ்ரவேல் ஒரு தேசமாக மறுபடியும் ஸ்தாபிக்கப்பட்டதைக் கண்டது. சமயம் சாராத தேசமாய் உருவாகியது, எசேக்கியேல் 37ன்படி "உலர்ந்த எலும்புகளாய்" அவிசுவாச குழுவாய் எழும்பியது. எசேக்கியேல் 38-39ல் விவரிக்கப்படும் நிகழ்வுகள் மகா உபத்திரவ காலத்தில் ஏற்படும் எழுப்புதல் நோக்கி தேசம் செல்வதை காட்டுகிறதாய் இருக்கிறது. சகரியா 12:10ff. அவர்களை ஆயத்தப்படுத்தி, மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு திரும்பும்படி செய்கிறதாய் இருக்கும். மோசே உபாகமம் 5:22-33, 18:15-22.ல் பேசிச் சொன்ன காரியங்களுக்கு திரும்புகிறதாய் இருக்கும்.

இன்றைய அளவில் இஸ்ரவேல் மற்ற தேசங்களைப் போலவே சமயஞ்சாராத தேசமாகவும் மற்றும் சுயநல விரும்பிகளாகவும் வாழ்க்கை முறை செய்கிறவர்களாகவும் மதம் சார்ந்த வாழ்வு செய்கிறவர்களாய் இருக்கின்றனர். நற்காரியங்கள் குறித்து சுயநல பிரச்சனை உள்ளவர்களாய் இருக்கின்றனர். வேதாகமத்தில் இத்தகைய குணாதிசயம் "பெருமைக்கும்" மற்றும் இறுமாப்புக்கும் ஒப்பிடப்படுகிறது. இது பிசாசுகள் அளிக்கும் பிரச்சனைகளின் வேராய் இருக்கிறது, ஆசீர்வாதங்கள் அழிப்பவர்களாய் விளங்குகின்றன. மற்றும் நியாயத்தீர்ப்பை கொண்டு வருகிறதாய் இருக்கின்றன. சுயத்தை மையமாய் கொண்டவர்கள் முடிவு இதுவே. கோகு - மாகோகு வின் பெரிதான படையெடுப்பானது இஸ்ரவேலில் அநேகருக்கு சுயநல விருப்பத்திற்கு ஒரு முடிவை கொண்டுவருகிறதாய் அமையும். ஆவிக்குரிய காரியங்களில் எழுப்புதல் ஆரம்பமாகும் மற்றும் இஸ்ரவேல் தேசத்தில் மகா உபத்திரகாலத்தின் போது இரட்சிப்புக்கு ஏதுவாய்

வழிநடத்துகிறதாய் இருக்கும். சகரியா 12:10ff. இது சபை கடந்து போகுமுன் பெரிய சுவிஷேச பிரபல்யத்துக்கு வழி நடத்துகிறதாய் இருக்கும்.

சுயத்தை மையமாய் கொண்டோருக்கு கிறிஸ்துவை மையமாய் கொண்டு வாழ்வதே பரிகாரமாய் அமையும். கர்த்தர் நமது வாழ்வின் மையமாய் இருப்பாரானால், நாம் மெய்யான நிலைத்தன்மையை உடையவர்களாய் விளங்குவோம், நமது மதிப்பும் மரியாதையும் உலகில் உயர்வதாய் இருக்கும். சுயநலத்தோடு வாழும் வாழ்க்கைப் பிரச்சனை பெரிய சவாலாய் நிலைத்திருந்து எல்லா மனுக்குலத்திற்கும் சரித்திரத்தின் எல்லா யுகங்களிலும் பெரும் பிரச்சனையாய் அமையும். சுயம் மேற்கொள்ளாது அநுதின வாழ்க்கை செய்ய சவால் விடப்படுகிறோம், கர்த்த்ராகிய இயேசுக் கிறிஸ்துவை சார்ந்து வாழ அவரது ஆளத்துவம் மற்றும் அவரது வல்லமையைச் சார்ந்து வாழ கேட்டுக்கொள்ளப்படுகிறோம். சங்கீதம் 9:9-10, 15-20, 32:1-11, எரேமியா 31:34-35, யோவான் 17:1-5, 1 யோவான் 5:20. பெரிய படையெடுப்பு, பெரிய பூமியதிர்ச்சி, படுகொலை சம்பவங்கள், அணுஆயுத யுத்தம், இந்த சந்தர்ப்பத்தில் நிகழ்ந்து இறுதி காலத்தில் அந்திக்கிறிஸ்து தனது ஆதிக்கத்தை செலுத்த வழிவகை செய்கிறதாய் இருக்கும்.

23 இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் ஆக்கிரமத்தினிமித்தமே சிறைப்பட்டுப் போனார்கள் என்று அப்பொழுது புறஜாதிகள் அறிந்து கொள்வார்கள். அவர்கள் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினபடியால் என் முகத்தை நான் அவர்களுக்கு மறைத்து அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்தேன். அவர்கள் அனைவரும் பட்டயத்தால் விழுந்தார்கள். 24 அவர்களுடைய அசுத்தத்துக்குத்தக்கதாகவும் அவர்களுடைய மீறுதல்களுக்குத்தக்கதாகவும் நான் அவர்களுக்கு செய்து, என் முகத்தை அவர்களுக்கு மறைத்தேன்.

2600+ ஆண்டுகளுக்கு அப்பால் நடக்கப்போகும் காரியங்களை பேசிய தீர்க்கதரிசி தற்போது தனது சொந்த நாட்களை சிறையிருப்பில் கழிக்கிறவராய் இருந்தார். இந்த நிகழ்வுகளை அங்கு ஒருவரும் அறியாமல் இருந்தனர், அப்போஸ்தலனாகிய யோவான் எழுதின ஆதாரங்களை கொண்டு இதன் குறிப்புகளை அறிகிறவர்களாய் இருக்கிறோம், தீர்க்கதரிசனங்களை அவர்கள் நேரடியாய் தங்களுக்கென பொருந்துமாறு எடுத்துக்கொள்ளக்கூடும். இது அனைத்தும் செய்வதற்கு சரியாய் இருக்கிறது. எல்லா தீர்க்கதரிசன உண்மைகளும் நேரடியாக பொருந்துமாறு இன்றைய அளவில் எடுத்துக்கொள்ள இயலும், அதன் பாடங்கள் வல்லமை பொருந்தினதும் மற்றும்

ஊக்கமளிக்கக்கூடியதுமாய் இருந்து அனுதின வாழ்வில் தேவ மக்கள் கைக்கொள்ளக்கூடியதுமாய் இருக்கிறது. எல்லா வேதவசனங்களும் நமக்குரியதாய் இருக்கிறது.

சிறையிருப்பில் இருந்த ஜனங்கள் தங்கள் அடிமைத்தன வாழ்வு மூலம் தேவனுக்கு மகிமை கொண்டுவர வேண்டியிருந்தது. தோற்றத்தில் காணப்படும் சாபம் கர்த்தருக்கு ஆசீர்வாதமாய் விளங்கியது. தேவனுடைய திட்டத்தில் கர்த்தர் தோற்றத்தில் தீமையாய் தோன்றுபவனற்றிலிருந்து நன்மையைக் கொண்டுவருகிறவராய் இருக்கிறார். அவரது ஜனங்கள் அவர்களது வாழ்வில் திரும்பும் போது, திசை திரும்பும்போது, அவர்கள் துன்பப்படுகிறவர்களாகிறார்கள் கர்த்தர் மோசே மூலம் சொன்னபடி நிகழுகிறதாய் இருக்கிறது, அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் எவ்வித குற்றச்சாட்டு இன்றி காணப்பட்டனர், அவர்கள் அவரால் முற்றிலும் எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருந்தனர். லேவியராகமம் 26, உபாகமம் 31:17-18, 32:19-30. பின்னான படையெடுப்பைக் குறித்து எசேக்கியேல் விவரிக்கிற போது அது பரிசுத்த ஆவியானவரின் ஊழியமாய் அமைந்து இஸ்ரவேல் மீது குற்றத்தீர்ப்பாய் அமைந்தது மற்றும் தேசமானது மகா உபத்திரவகாலத்தின் போது திரளான மக்களுக்கு இரட்சிப்பாய் அமைந்தது. மோசேயின் வார்த்தையின் படி சிறையிருப்பைத் திரும்பிப் பார்க்கும் போது எதிர்கால மக்கள் எசேக்கியலோடு பின்னாக திரும்பிப்பார்த்து கர்த்தருக்கு முன்னாய் பணிந்து அவரே தேவன் என்று உணர வேண்டியதாய் இருந்தது.

எசேக்கியேல் நாட்களில் உள்ள அவிசுவாச தேசங்கள் இஸ்ரவேலர் தங்களது பாவத்தினால் சிறையிருப்புக்கு ஊடாய் சென்றனர் என்று கண்டனர், இந்த உண்மையிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்கிறவர்களானார்கள். இக்கேள்வி எஞ்சியிருக்கிறதாய் இருக்கிறது, இதிலிருந்து இஸ்ரவேல் இப்பயங்கரமான நிகழ்வுகள் வந்தது என கற்றுக்கொள்கிறதாய் இருக்குமா? அவர்கள் தேவனைப் புறக்கணித்தனர், அவர் சித்தத்திற்கு எதிராய் நடந்து கொண்டனர், அவரது கட்டளைகளுக்கு கீழ்ப்படிய மறுத்தனர், ஆகையால் அவர்கள் சத்துருக்களின் கரத்தால் அழிவைக் கண்டனர். அவர்கள் தண்டனைக்குள்ளாகி அவர்கள் நேரடி உறவினால் உண்டான தீமையை அனுபவித்தனர். பாவமானது ஆசீர்வாதங்களிலிருந்து நம்மை வேறுபிரிக்கிறதாய் இருக்கிறது. சங்கீதம் 66:18, ஏசாயா 1:15, எரேமியா 2:9-19, 5:25, ஆபகூக் 1:13. பரிசுத்த ஆவியானவரது கிரியையின் துவக்கத்தால் இஸ்ரவேலுக்கு நம்பிக்கை இருந்தது, இப்பெரிய படையெடுப்பால் நேரடி விளைவைக் கண்டனர். மகா உபத்திரவத்தின்

இறுதியிலும் மற்றும் நடுவிலும் முழுமையான கனி கொடுப்பதை அறிந்தனர். சகரியா .12:10ff.

ஆசீர்வாதங்களை திரும்பப்பெறும் வழியானது திறக்கப்பட்டது, அதேகாரியம் சரித்திரம் முழுவது நிலைத்திருக்கிறதாய் விளங்கியது. இது மனந்திரும்பும் மார்க்கமாகவும் மன்னிப்பாகவும் விளங்கியது. ஏசாயா 1:16-20, 3:10-11, 59:16-19. எசேக்கியேல் நாட்களில் ஏசாயாவின் இந்த வார்த்தைகளைப் பெற்றவர்களாய் இருந்தனர், அவர்கள் திரும்பி எந்த சமயத்திலும் அவர்களது கண்ணொட்டத்திலிருந்து மாறுகிறவர்களாய் இருந்தனர். கி மு 586ல் எருசலேம் பட்டணம் விழுந்து போன செய்திக்கு பின்னர் கர்த்தரிடமாய் திரும்புகிறவர்களாய் காணப்பட்டனர், எரேமியா, எசேக்கியேல், தானியேல் வார்த்தையினால் தேவனிடத்தில் திரும்புகிறவர்களானார்கள் ஆசீர்வாதம் மறுபடியும் புரண்டோடுகிறதாய் காணப்பட்டது மற்றும் அவர்களது பேரக்குழந்தைகள் கிமு 536ல் தங்கள் தேசத்திற்கு திரும்புகிறவர்களானார்கள். எசேக்கியேல் வழிநடத்திய எழுப்புதல் கோகு மாகோகு படையெடுப்பால் நேரிட்ட மகா எழுப்புதலுக்கு முன் ருசியாய் விளங்கியது.

25 ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறது என்னவென்றால்: 26 அவர்கள் தங்கள் அவமானத்தையும் பயப்படுத்துவார் இல்லாமல், தாங்கள் சுகமாய் தங்கள் தேசத்தில் குடியிருக்கும்போது எனக்கு விரோதமாய்த் தாங்கள் செய்த எல்லாத் துரோகத்தையும் சுமந்து தீர்த்தபின்பு, நான் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பி, இஸ்ரவேல் வம்சமனைத்துக்கும் இரங்கி, என் பரிசுத்த நாமத்துக்காக வைராக்கியமாயிருப்பேன்.

திரும்ப வருவது குறித்த வாக்குத்தம் மறுபடியும் அளிக்கப்படுகிறது. எரேமியாவும், எசேக்கியேலும் நாம் கண்ட பிரகாரம் அநேக சமயங்களில், ஜனங்களுக்குள் அவர்கள் முழுவதும் அகற்றப்படுவதில்லை என நினைப்பூட்டுகிறவர்களாய் இருந்தனர், அவர்கள் கர்த்தரிடமாய் திரும்புவார்கள். கர்த்த்ர்தாமே அவர்களை அவர்கள் தேசத்தில் திரும்ப கொண்டுவருவார் மற்றும் மீந்திருப்பவர்களால் தேசத்தைத் திரும்ப கட்டுவார், அவர் "தமது பரிசுத்த நாமத்திற்காக வைராக்கிய முடையவராயிருப்பார்." சரித்திர முழுவதிலும் தேவனின் அந்தஸ்து மாறுவத்தில்லை, அவர் மாறாதவராய் இருப்பார், எல்லா மனிதரும் மற்றும் ஸ்திரீகளும் தேவனிடத்தில் சத்தியத்தை கைக்கொள்ளுகிறவர்களாய் கடந்து வருவார்கள், அவர்களுக்கு இது எளிதாய் மாறுவதற்கு தேவன் மாற வேண்டும் என எதிர்பாராது இருப்பர். இது பெருமையாய் இருக்கும், தேவன் மாற வேண்டும் என மனிதன்

சிந்திக்கும் பொழுது அது அவனுக்கு அழிவுக்கேதுவாய் வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

அந்த கண்ணோட்டமானது ஜனங்களை சாத்தானின் வஞ்சனையிலும் மற்றும் அவனது திட்டத்திலும் சேரும்படி வழிநடத்துகிறதாய் இருக்கிறது. மற்றும் இறுதியில் அவனுடன் எரிகிற அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடையச் செய்கிறதாய் இருக்கிறது. அது அவனுடைய பாவமாய் இருக்கிறது. ஏசாயா 14, எசேக்கியேல் 28. சாத்தான் தேவன் மாற வேண்டும் என எதிர்பார்க்கிறவனாய் இருக்கிறான், அவன் உயர்த்தப்படுவதற்கும், அவனது மகிமை அவருடன் பகிர்ந்து கொள்ள எதிர்பார்க்கிறான், ஆனால் தேவன் தமது மகிமையை வேறுஒருவரிடமும் பகிர்ந்து கொள்வது இல்லை. வேதாகமத்தில் பெரிய நற்செய்தி என்னவெனில் தேவன் தமது மகிமையை நமக்கு அளிக்கிறவராய் இருக்கிறார், இதை கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் உள்ள உறவினால் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். கிருபையினால் கிறிஸ்துவில் ம்கிமையை. பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். மற்றும் சத்தியத்தாலும் தாழ்மையாலும் அவரது மகிமையை பெற்றுக்கொள்கிறவர்களாயிருக்கிறோம். சத்தியம் என்னவெனில் நாம் அவரின் சிருஷ்டிப்பில் நிலைத்து இருக்கிறவர்களாய் இருக்கிறோம் மற்றும் நாம் நம்மை உயர்த்துதல் கூடாது, நமது ஸ்தானம் சிருஷ்டிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. அவரே நம்மை உயர்த்துகிறவர், நாம் நம்மை உயர்த்துதல் கூடாது. 1 பேதுரு 5:6-7.

எசேக்கியேல் பேசுகிற மக்கள் பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பிய போது ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருந்தனர், மற்றும் அவர்கள் மறுபடியும் கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது திரும்புதலும் ஆசீர்வாதமாய் இருக்கும்.. மற்றும் அவர்கள் தங்கள் மலைகளுக்கு கோகு மாகோகு இராணுவத்தை முறியடித்த பின்னர் திரும்புவதும் ஆசீர்வாதமாய் இருக்கும். மூன்று முறை அவர்கள் இஸ்ரவேலின் மலைக்குத் திரும்புகிறவர்களாய் இருக்கின்றனர், அம்மூன்று முறையும் அவர்கள் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருக்கின்றனர் மற்றும் பாது காப்பில் வாசம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். ஒவ்வொரு முறையும் பெரிதான அழுத்தங்கள் அவர்களுக்கு உண்டாகிறதாய் இருக்கிறது, மற்றும் அவர்கள் தங்களது பாவங்களை எதிர்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர் மற்றும் அவர்களை உண்டாக்கினவர் அவர்கள் இரட்சகர் உறவிலிருந்து அனைவரும் வேறுபிரிக்கப்படுகிறவர்களாகின்றனர். சங்கீதம் 39:1-10, எரேமியா 3:22-24. மோசே கர்த்தருடைய வார்த்தையை திரும்ப சேர்க்கப்படுதல் குறித்து பதிவு செய்து இருப்பது போன்றே நிகழ்வதாய் இருக்கிறது, அவர் மனந்திரும்புதலுக்கு பின்னர் அவர்கள் திரும்பச்

சேர்க்கப்படுகிறவர்களாய் இருந்தனர். லேவியராகமம் 26:3-6, 40-45, உபாகமம் 30:1-10. இது கிமு 536ல் நிகழ்ந்தது, மறுபடியும் மகா உபத்திரகால இறுதியில் நிகழுவதாய் இருக்கும் இது கர்த்தர் மறுபடியும் திரும்ப வரும்பொழுது நிகழுவதாய் இருக்கும். சகரியா 12:14.

.27 நான் அவர்களை ஜனசதளங்களிலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்து, திரளான ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களுக்குள் நான் பரிசுத்தர் என்று விளங்கும் போது, 28 தங்களைப் புறஜாதிகளிடத்தில் சிறைப்பட்டுப்போகப்பண்ணின நான் தங்களில் ஒருவரையும் அங்கே அப்புறம் வைக்காமல், தங்களைத் தங்கள் சுய தேசத்திலே திரும்பக்கூட்டிக்கொண்டுவந்தேன் என்பதினால், நான் தங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறிந்து கொள்வார்கள். 29 நான் இஸ்ரவேல் வம்சத்தார்மேல் என் ஆவியை ஊற்றினபடியினால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்கமாட்டேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார் என்றார்.

தேசத்தின் திரும்பச் சேர்க்கப்படுதல் முடிவில் முழுமையானதும் மற்றும் இறுதியானதுமாய் இருக்கும், இஸ்ரவேலர் ஒருவர் கூட கர்த்தரின் வ்ருகைக்கு அப்புறம் மறு தேசத்தில் விட்டுவைக்கப்படுவதில்லை. இந்த வேதபகுதியிலிருந்து கோகின் படையெடுப்பின் போது அநேக இஸ்ரவேலர்களை சிறையிருப்புக்கு நேராய் வழிநடத்தியிருக்கலாம், அப்படியிருக்குமானால், அவர்கள் அனைவரும் திரும்ப சேர்க்கப்படுவதற்கான வாக்குத்தம் செய்யப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் படையெடுத்து வந்த காலத்தில் இஸ்ரவேலர் சிதறடிக்கப்பட்டவர்களாய் இருந்தனர், மற்றும் கர்த்தரின் வாக்குத்தத்தம் அவர்கள் அனைவரையும் கூட்டிச்சேர்ப்பதாய் இருந்தது.

கிமு 6,ம் நூற்றாண்டில் கிமு 535ல் திரும்பிய போது, யூதரில் அதிகாமானோர் பாபிலோனிலே இருந்து விட்டனர், மத்திய காலத்தில் யூதர்களின் காலனி பலமாய் தங்கி நிலைத்து விட்டது. அதிகமான யூதர்கள் எகிப்தில் அலெக்ஸாண்ட்ரியா பட்டணத்தில் எருசலேமில் தங்கியிருப்பதைவிட அதிகமாகவே தங்கிவிட்டனர் இது கிபி 67ல் பெரிய கலகம் இறுதியாக எருசலேமில் நடந்த போது நிகழ்ந்ததாய் இருக்கிறது, 2015 வரை யூதர்கள் தங்கள் தாயகத்திலிருந்து வெளியேறி வேறு தேசங்களில் குடியேறிஇருப்பது எண்ணிக்கையில் அதிகமாய் இருக்கிறது. யூதர்களின் உலகமானது இன்றைய அளவில் பரந்து விரிந்துள்ளது, இதன் எண்ணிக்கையானது குறைந்தபட்சம் சகயூதர்கள் 2015ல் முதன் முறையாக இஸ்ரவேல் தேசத்தில் இருப்பதற்கு சமமாகவே இருக்கிறதாய் இருக்கிறது.

கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது திரும்புவது முழுமையாகவும், இறுதியானதாயும், பூர்த்தியானதாயும் இருக்கும். அவர்கள் ஆயிரம் இறுதி ஆண்டு ஆசீர்வாதங்களை பெறுகிறவர்களாய் இருப்பர், முன்னதாக இப்பழைய உலகமானது களைத்துப்போனதாயும், காயம்பட்டதாயும் இருக்கிறது. 2 பேதுரு 3:10-18. இறுதி யுகத்தில் இந்த தற்கால பூமியின் மீது வாசம் செய்யும் அனைத்து விசுவாசிகள் மீதும் பரிசுத்த ஆவியானவர் முழுமையாகவும் இறுதியாகவும் ஊற்றப்பட இருக்கிறார். விழுந்து போன மனித யுகமானது உபத்திரவ காலத்தில் இரத்தம் சிந்துதலில் நிறைவு பெறும், ஆனால் இது ஆவியானவரின் அக்கினியால் இறுதி நாளுக்கு முன்னதாய் தற்போதுள்ள சிருஷ்டிப்பு அனைத்தும் முடிவுக்கு வருகிறதாய் இருக்கும், அதற்கு பின் நித்தியமான மற்றொன்று அதன் இடத்தில் வகிக்கிறதாய் இருக்கும்.

போதக கைக்கொள்ளுதல்

1 தீமையானது இறுதியாக நித்தியத்தில் ஆராதனையால் ஈடுசெய்யப்படும். விழுந்து போன மனுக்குலத்தின் இறுதி கட்ட சரித்திரமனது தேவனது நியாய்த்தீர்ப்பாய் இருக்கிறது. கர்த்தர்தாமே எல்லாக் கண்ணீரையும் துடைத்துப் போடுவார். இறுதியாக உலகமானது தனது வாழ்வை பூர்த்தி செய்து சிருஷ்டிகரின் ஆசீர்வாதத்துடன் மீந்து இருக்கும் மக்கள் மீது பொழிகிறதாய் இருக்கும், மற்றும் அவர்களுக்கு புதிய உலகை அவர் கொண்டுவருவார், இடம் காலம் இவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில், சாத்தான் அவனது தூதர்கள் மனித அடிமைகள் ஒருபோதும் நினைவுகூறப்படாது இருக்கும்.

2 சுயத்திற்குள்ளாக மறைந்து ஜீவித்த மனிதன் தேவனோடு ஐக்கியம் கோள்கிறவனாயிருப்பான். எல்லா மக்களிடம் சுயத்துக்குள்ளாய் ஜீவிக்கும் அவர்கள் சுயத்தை மையமாய் கொண்டு ஜீவியாதபடி வெளியே காலடி எடுத்து வைத்து ஜீவிக்க சவால் கொடுக்க வேண்டும் மற்றும் அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து ஆவியோடும் உண்மையோடும் அவரை தொழுது கொள்கிறவர்களாக வேண்டும். பிசாசு எப்பொழுதும் மக்கள் தங்களை மறந்து சொந்த காரியங்களில் ஈடுபடச் செய்கிறவனாய் இருக்கிறான், நமது எல்லா முயற்சிகளும் இந்த சவாலை நோக்கி திசை திருப்பப்படுகிறதாய் இருக்கிறது, கண்களை ஏறெடுத்து, தேவன் யாராய் இருக்கிறார் என்பதைக் கண்டுகொள்ளுதல் வேண்டும்.

3. தேவனது திட்டம் நிச்சயமானதாய் இருக்கிறது. கடந்த காலத்தில் 2600+ ஆண்டுகளிலிருந்து, எசேக்கியேலின் வார்த்தைகள் மக்களின்

இருதயத்திலும் மனதிலும் கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருக்கிறது, இது உலகத்தின் நாட்கள் கடைசி காலத்தில், கர்த்தரின் இரண்டாம் வருகையின் போது நிகழ்வதாய் இருக்கிறது, அனைவரும் இது மெய்யாய் தேவனது செயலாய் இருக்கிறது என அறிந்து கொள்வார்கள். சாத்தானின் வஞ்சகங்களுக்கு எதிராக தேவ செயலுக்கான ஆதாரங்கள் ஏராளமாய் விளங்கி வருகின்றன.

TOPICS தலைப்புகள்

COVENANT: NOAHIC (EVERLASTING) COVENANT உடன்படிக்கை: நோவாவின் (அநாதி) உடன்படிக்கை.

JUDGMENT – BAPTISM OF FIRE நியாயத்தீர்ப்பு -- அக்கினி ஞானஸ்நானம்.

DAY OF WRATH கோபாக்கினையின் நாள்.

NOTES குறிப்புகள்